உலகம் போற்றும் இதிகாசம்

இராமாயணம்



https://telegram.me/aedahamlibrary

தமிழ் மாந்தன்

இராமாயணம்

{ RAMAYANA }

BY :-

TAMIL MAANTHAN

வணக்கம் வாசகர்களே

இந்த இராமாயண காவியத்தை தரவிறக்கம் செய்தமைக்கு நான் உம்மை தலைவணங்குகிறேன்.தயவு செய்து இந்த புத்தகம் தொடர்பான உங்களுடைய அனுபவத்தை **RATING** செய்வதோடு உங்களுடைய கருத்துக்களை **COMMENT** செய்யவும். மேலும் எங்களுடைய புத்தகங்களை பெற்றுக்கொள்ள **AMAZON SEARCH** இல் **TAMIL MAANTHAN** என்று **SEARCH** செய்யவும்

நன்றி

ஜெய் ஸ்ரீராம்................

https://telegram.me/aedahamlibrary

உள்ளடக்கம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary


https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பால காண்டம்

https://telegram.me/aedahamlibrary



இராமாயணம் பிறந்த கதை

உலகம் போற்றும் உன்னத இதிகாசமான இராமாயணம் பற்றி தெரிந்துகொள்வதற்குமுன், வடமொழியில் இராமாயணத்தை முதலில் இயற்றிய வால்மீகி முனிவர் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வோம் !!

வால்மீகி அல்லது வால்மீகி முனிவர் என்பவர் இந்தியாவின் பழம்பெரும்

இரண்டு இதிகாசங்களில் ஒன்றான, இராமாயணம் எனும் இதிகாசத்தை இயற்றியவர். இவர் ஒரு வடஇந்தியர் ஆவார். இவர் இராமாயணத்தை வட மொழியில் எழுதினார். இவர் இயற்றிய இராமாயணம் இந்தியாவின் அனைத்து மக்களிடமும் பரவி, உலகில் பல்வேறு மொழிகளிலும் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

இராமாயண நூல் இதிகாசமே என்றாலும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் புவியியல் அமைவுகள், விவரிக்கப்பட்டிருக்கும் ஆட்சி முறைமைகள், அரசுகள் போன்றவற்றை ஆய்வுநோக்கில் பார்க்கும் போது, வெறுமனே கற்பனையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இவ்வாறான ஒரு இதிகாசத்தைப் படைத்திருக்க முடியாது. இது கி.மு **4**ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டுள்ளதால், அந்தகாலத் தன்மைகளுக்கு அமைவாக, மந்திரம், மாயை உடன் இதிகாசச் சாயலுடன் எழுதப்பட்ட ஒரு வரலாறாகவும் இருக்கலாம் என கருதுவோரும் உளர். மேலும் இராமாயணம் இதிகாச நூலை இயற்றியவரான வால்மீகி ஒரு வடஇந்திய ஆரிய மரபினர். வால்மீகி முனிவரின் ஆசிரமம் தமசா நதிக்கரையில் அமைந்து இருந்தது.

வால்மீகி ஆசிரமத்திற்கு ஒருநாள் நாரதர் அங்கு வந்தார். அவருக்கு உபசாரங்கள் செய்து வரவேற்ற பிறகு, வால்மீகி முனிவர் அவரை நோக்கி, ‘நாரதரே, இந்த யுகத்தில் முப்பத்திரண்டு கல்யாண குணங்களும் பொருந்திய நேர்மையான, சத்தியம் தவறாத, வீர தீர பராக்கிரமசாலியான புருஷன் யாராவது இருக்கிறானா?’ என்று கேட்டார். அதற்கு நாரதர் ராமபிரானுடைய வரலாற்றை முழுவதுமாக வால்மீகிக்கு எடுத்துரைத்தார். நாரதர் இறுதியில் விடைபெற்று சென்றபின், வால்மீகி தனது சீடர் பரத்வாஜருடன் தமசா நதிக்கரைக்குச் சென்றார்.

நதிக்கரையில் உல்லாசமாக அமர்ந்திருந்த ஒரு ஜோடி நாரைகளைப் பார்த்தார். அவற்றின் அந்தரங்க அன்புப் பிணைப்பினைக் கண்டு ரசித்தவாறே அவர் நீராடுகையில், எங்கிருந்தோ வந்த ஓர் அம்பு ஆண் நாரையின் மீது பாய்ந்து அதன் உயிரைக் குடித்தது. அதைக் கண்ட பெண் நாரை துக்கம் தாளாமல் ஓலமிட்டது.

இதைக் கண்டு மனம் பதறிய வால்மீகி, அம்பை எய்த வேடனை மிகுந்த சீற்றத்துடன் நோக்கி, ‘இதயமற்ற அரக்கனே! என்ன காரியம் செய்து விட்டாய் நீ? வாழ்நாள் முழுதும் நீ அமைதியின்றி தவிப்பாய்!’ என்று உணர்ச்சி வசப்பட, அவருடைய வாயிலிருந்து வந்த சொற்கள் அவரையறியாமலே ஒரு கவிதை வடிவில் வெளிவந்தன. ஆசிரமத்திற்குத் திரும்பி வந்த பிறகும் அவருடைய படபடப்பு அடங்கவில்லை. சற்று நேரத்தில், பிரம்மா வால்மீகியைக் காணவந்தார்.

பிரம்மாவை விழுந்து வணங்கி வால்மீகி நின்ற போது, பிரம்மா, ‘வால்மீகி, என்னுடைய அருளினால் உனக்கு கவிதை பாடும் திறமை உண்டாகி விட்டது. ராமபிரானது வரலாற்றை இதற்கு முன் நீ கேட்டு இருக்கிறாய். அதை நீ காவியமாக இயற்று. இந்த உலகம் இருக்கும் வரை அவை காவியமாக நிலைத்திருக்கும்!’ என்று வாழ்த்தி விட்டுச் சென்றார். பிரம்மாவின் அருளினால் வால்மீகி இராமாயணத்தை இயற்றினார்.

https://telegram.me/aedahamlibrary

வால்மீகி ஒரு வழிப்பறி கொள்ளையனாக இருந்தவர். அந்த கொள்ளைக் கூட்டத்துக்கு தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பெரிய குடும்பி. அவன் கொள்ளையடிப்பதில் மிக சமர்த்தியமிக்கவன் என்பதால் பலர் அவனை அண்டி வாழ்ந்தனர். ஒரு தடவை அவன் தனியே கொள்ளையடிக்க சென்றபோது அவனிடம் ஒரு முனிவர் மாட்டிக்கொண்டார். கையில் ஒரு தம்புரா வைத்துக்கொண்டும் நாராயணா, நாராயண என்று பாடிக்கொண்டும் அந்த முனிவர் வந்து கொண்டிருந்தார்.

இவன் அவர் எதிரில் போய் எமன் போல் நின்றதும் அவர் நடுநடுங்கி இவனைப் பார்த்து யாரப்பா நீ! உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அவன், நான் யாராய் இருந்தால் உமக்கு என்ன? உம்மிடம் இருக்கும் எல்லாவற்றையும் எடுத்து வையும் என்றான்.

முனிவர், நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொன்ன பிறகு என்னிடம் இருப்பதை எல்லாம் நீ கொள்ளைக்கொண்டு போகலாம் என்றார். சீக்கிரம் கேட்டு தொலையும் நீ யாருக்காக இந்த கொள்ளையும் கொலையும் செய்கிறாய்? வேறு யாருக்காக. என் மனைவி மக்கள் இவர்களுக்காக தான். என் மீது அவர்களுக்கு இருக்கும் அன்பு கொஞ்சம் நஞ்சம் இல்லை.

உன் பாவங்களில் அவர்கள் பங்கு கொள்வார்களா? அதனை முதலில் கேட்டுப்பார். ஆகா முனிவரே! தப்பித்து போக முயல்கிறீரா? இதெல்லாம் என்னிடம் முடியாது. இல்லையப்பா! நீ வேண்டுமானால் என்னைக் கட்டிப் போட்டுவிட்டுப் போ. அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்வதாய் கூறிவிட்டால் என்னிடம் உள்ளதை எல்லாம் எடுத்துக்கொள். அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டால் நான் சொல்வதை நீ செய்ய வேண்டும்.

கொள்ளையர் தலைவன் யோசித்துப் பார்த்தான். அந்த முனிவர் சொல்வதும் சரியாக தான் இருக்கிறது. நாம் கேட்டுத்தான் பார்ப்போமே! என்று நினைத்து அந்த முனிவரை அங்கிருந்த ஒரு மரத்தில் கட்டிப் போட்டு விட்டு சென்றான். திரும்பி வரும்போது முற்றிலும் மாறியிருந்தான் அவன். ஓடி வந்தவன் முனிவரின் காலில் விழுந்து சுவாமி, நீங்கள் சொன்னது சரிதான் என்று கண்கலங்கியபடியே முனிவரின் கட்டுகளை அவிழ்த்துவிட்டான். என்னப்பா நடந்தது. சுவாமி!

நீங்கள் சொன்னபடி, நான் போய் என் மனைவியர், குழந்தைகள், நண்பர்கள், உற்றார் உறவினர் எல்லோரிடமும் என் பாவத்தில் பங்கு கொள்வீர்களா? என்று கேட்டேன். எல்லோரும் ஒரே விதமாய் நீ பாவ வழிகளில் சம்பாதித்தால் அந்த பாவங்களை நீதான் அனுபவிக்க வேண்டும். அதில் எங்களுக்கு எந்த பங்கும் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

நீங்கள் தான் நான் செய்த எல்லா பாவங்களில் இருந்தும் விடுபட ஒரு நல்ல வழி காண்பிக்க வேண்டும். நீ செய்த பாவங்களுக்கு எல்லாம் தகுந்த பிராய்ச்சித்தம் ராம நாமத்தை சொல்லிக் கொண்டு இருப்பது தான். சுவாமி! என்ன நாமம் அது? என் வாயில் நுழையவில்லையே சுவாமி! கவலைப்படாதே! இதோ இங்கிருக்கும் மரத்தின் பெயர் என்ன? இது மரா மரம். நீ இந்த மரத்தின் பெயரை சொல்லிக்கொண்டிரு. அது போதும் என்றார்.

அவர் போனபின் அந்த கொள்ளையர் தலைவன் அங்கேயே அமர்ந்து தன்னை மறந்து மரா மரா மரா என்று ஜபிக்க ஆரம்பித்தான். அது ராம ராம ராம என்று ஒலித்தது. அந்த ராம நாம ஜபத்தால் அவன் பாவமெல்லாம் அழிந்து ஞானம் பெற்றான். அவர் தவம் முடிந்த பின் புற்றிலிருந்து வெளியே வந்தார். புற்றிலிருந்து வந்ததால் வால்மீகி என்று அழைக்கப்பட்டார். பின்னர் இராமாயணம் எழுதி அழியா புகழ் பெற்றார். கொள்ளையர் தலைவனாய் இருந்து நாரதரின் கருணையால் நல்வழியில் திருப்பி விடப்பட்டவர் தான் வால்மீகி முனிவர்.

கோசல நாடு கங்கை நதிபாயும் நீர் வளமும், நிலவளமும், குடிவளமும் கொண்ட வளமை மிகுந்த நாடாகும். கோசல நாட்டின் தலைநகரம் அயோத்தி ஆகும். இந்நகரத்தில் வாழும் மக்கள் அனைவரும் தருமகுணசீலர்கள். அயோத்தி என்ற சொல்லுக்கு புத்தம் இல்லாத ஊர் என்று பொருள். அயோத்தி நகரம் போரும் சினமும் இன்றிச் சாந்தமாக திகழ்ந்தது.

அயோத்தி மாநகரை ஆதித்தன் குலத்தில் அஜமகா ராஜனுக்கும் இந்துமதிக்கும் மகனாக பிறந்த தசரத சக்ரவர்த்தி மக்களுக்கு நல்லாட்சி புரிந்து வந்தார். இவருடைய ஆட்சியில் தருமம் தழைத்து நின்றது. மக்கள் துன்பம் இன்றி இன்பமாக வாழ்ந்தார்கள். தசரத மன்னருக்கு கௌசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தார்கள். இவருக்கு மக்கட்பெறு இல்லாததால் இவர் வேறு வேறு மாதர்களை திருமணம் செய்து கொண்டார். அவ்வாறு செய்துகொண்ட பெண்கள் மொத்தம் **360** பேராகும். இவர் அறுபதினாயிரம் ஆண்டுகள் நல்லற நாயகனாக அரசு புரிந்தார்.

தசரதர் மன்னர் தமக்குப் பின் தருமநெறி தவறாமல் தரணியை அரசு புரிய ஒரு மகன் பிறக்கவில்லையே என்று பெரிதும் வருந்தினார். அரசவையில் தசரத சக்ரவர்த்தி, தமது குலகுருவாகிய வசிஷ்ட முனிவரை வணங்கி, குருநாதா! அடியேன் தங்கள் ஆசியினால் இந்த உலகத்தில் பத்து திசைகளிலுமிருந்து வந்த பத்து ரதங்களை வென்று, தசரதன் என்று பேர் பெற்றேன். சம்பரனை வென்று இந்திரனுக்கு உதவி புரிந்தேன். ஆனால் தங்கள் அடியெனுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. யாழ் என்ற இன்னிசைக் கருவிகளின் நாதங்களைக் கேட்கும் என் செவியில் அப்பா! என்று அழைக்கும் மழலை சொல் கேட்கும் பாக்கியம் பெற்றெனில்லை என கூறி மிகவும் வருந்தினார். தாங்கள் பிரம புத்திரர். அடியெனுக்கு மகப்பேறு உண்டாக அருள்புரிய வேண்டும் என்று கூறி முறையிட்டார்.

வசிஷ்ட முனிவர் ஊனக்கண்களை மூடினார். அப்பொழுது அவருக்கு ஞானக்கண் திறக்கப்பெற்றது. அதில் முனிவர் கண்ட காட்சி,

திருமால் திருப்பாற்கடலில் அரவணையில் அறிதுயில் புரிகின்றார். இராவணாதி அரக்கர்களால் பலகாலமாக துன்பப்படுகின்ற பிரமாதி தேவர்கள் நாராயணரிடம் தஞ்சம் புகுந்து கருணைக்கடலே! கமலக்கண்ணா! நாங்கள் இராவணன் முதலிய அரக்கர்களால் பஞ்சுபடாத பாடுபடுகின்றோம். தாங்கள் அசுர குலத்தை அழித்து, நாங்கள் செழித்து வாழ அருள் புரியவேண்டும் என்று சரண் அடைந்தார்கள்.

திருமால் தேவர்களை நோக்கி அமரர்களே! நான் பூவுலகில் இராமனாக அவதரித்து இராவணாதி அரக்கர்களை அழித்து தங்களது துயர் நீக்கி அருள் புரிவேன். ஆகவே, நான் மனிதனாக வந்து அவதரிப்பேன். தேவர்களாகிய நீங்கள் முன்னதாகவே வாநரங்களாகப் பிறந்து இருங்கள் என்று கட்டளையிட்டார். திருமாலின் கட்டளையின்படி,

வானவர்கள் வாநரங்களாகப் பிறந்தார்கள். இந்திரன் வாலியாகப் பிறந்தான். சூரியன் சுக்கிரீவனாகப் பிறந்தான். அக்கினித்தேவன் நீலனாகப் பிறந்தான் (நீலன் சேனை தலைவன்). விசுவபிரம்மா நளனாகப் பிறந்தான், வாயுதேவன் அனுமனாகப் பிறந்தான். ருத்ராம்சமும் அதில் கலந்து நின்றது. உபேந்திரன் அங்கதனாகப் பிறந்தான். பிரமதேவர், நான் ஏற்கெனவே கரடிக் குழுத் தலைவன் ஜாம்பவந்தனாகப் பிறந்திருக்கிறேன் என்றும் கூறினார்.

திருமாலின் கட்டளை

தர்மாங்கதர் என்ற ஓர் அந்தண முனிவர், கங்கைக்கரையில் 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாமூர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு தவம் செய்து கொண்டிருந்தார்.

அக்கிரகாரத்தில் ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் சாந்த குணமுடையவர். இவருடைய மனைவியின் பெயர் கலகை. இவர் அந்தணருக்கு எதிர்மறையாக இருந்தார்;. இவள் கணவர் வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்வாள். இதனால் வெறுப்படைந்த அந்தணர் வீட்டை விட்டு வெளியில் கிளம்பிச் சென்றார். அவ்வாறு செல்லும்போது வழியில் அந்தணரை பார்த்து ஐயா, எங்கே போகிறீர்? ஒருவர் என்று கேட்டார். மனைவியின் துன்பம் என்னால் தாங்க முடியவில்லை. அதனால் வீட்டைவிட்டு வெளியேறி போகின்றேன் என்றார். வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்கிறாள். வேண்டும் என்பதை வேண்டாம் என்று செய்கிறாள். அன்பரே! நான் சொல்லும்படி கடைப்பிடியுங்கள். உங்களுக்கு வேண்டாம் என்பதை வேண்டும் என்று சொல்லுங்கள், என்றார்.

அந்தணர் வீட்டுக்குச் சென்றார். கலகை! இன்று நான் சாப்பிடமாட்டேன் என்றார். சாப்பிடு என்று உணவை கோபத்துடன் கொடுத்தாள். இவ்வாறு அந்தணர் கலகையிடம் வேண்டும் என்பதை வேண்டாம் என்று கூறியும் வேண்டாம் என்பதை வேண்டும் என்று கூறியும் சுகமாக வாழ்ந்து வாழ்ந்தார். ஒருநாள் அந்தணர் மனைவியிடம், கலகை! நாளை என் தந்தையாருடைய சிரார்த்தம். வீடு வாசல் மெழுகாதே. நீராடாதே. சமைக்காதே என்ற கூறினார். அவள் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து வைத்தாள். பிண்டப்பிரசாதத்தை ஜலதாரையில் கொட்டுமாற சொல்லியருக்க வேண்டும். அவர் சற்றுக் கவனக்குறைவாக, பிதுர் பிரசாதத்தைச் சுத்தமான நீரில் கொட்டுமாறு கூறிவிட்டார். அவள் அதைக் கொண்டு போய் அசுத்தமான தண்ணீரில் கொட்டிவிட்டாள். அந்தணர் கோபத்தில், எனக்கு ஆயிரமாயிரம் குற்றங்கள் செய்தும் அத்தனையும் பொறுத்துக்கொண்டேன். பிதுர்களின் தூய பிரசாதத்தை ஜலதாரை தண்ணீரில் கொட்டினாயே ! இது எவ்வளவு பெரிய பாவம், கலகை! நீ அலகையாகப் போகக் கடவது என்று சாபமிட்டார். அந்த சாபத்தால் அவள் பெண் பேயாக மாறினாள். அங்கும் இங்குமாக அலைந்து திரிந்து வேதனைப்பட்டாள்.

கங்கைக்கரையில் ஜபம் செய்து கொண்டிருந்த தர்மாங்கதரை இந்த பெண் பேய் பிடிக்கச் சென்றது. அப்போது முனிவர் கமண்டலத் தண்ணீரை, 'ஓம் நமோ நாராயணாய' என்று தெளித்தார். அந்த மந்திர நீரால் அவளது பாவமும் சாபமும் விலகிவிட்டன. அவள் அவருடைய அடிமலர் மீது வீழ்ந்து தொழுது, தர்மாங்கதரே! நான் கலகை என்ற பெயருள்ள பெண். கணவனுக்கு குற்றங்கள் செய்த பாவத்தால், அவருடைய சாபத்தால் பேயாக அலைந்து நொந்தேன். தர்மாங்கத முனிவர், அம்மா! அழாதே. நான் அறிவு தோன்றிய நாள் தோட்டு இன்றுவரை செய்த தவத்தில் பாதி உனக்கு தந்தேன் என்றார். வைகுண்டத்திலிருந்து வந்த பொன்மணி விமானம் இருவரையும் வைகுண்டத்துக்கு அழைத்து சென்றது. அவர்கள் பரவாசுதேவனைச் சேவித்தப் பேரின்பத்தை எய்தினார்கள்.

ஸ்ரீமன் நாராயணர் தர்மாங்கதரைப் பார்த்து, தர்மாங்கதரே! நீ பூவுலகில் ஆதித்தர் குலத்தில் பிறந்து தசரதன் என்ற பெயர் பெற்று அறுபதினாயிரம் ஆண்டு தவம் செய்வாயாக. உனக்கு நான் மகனாகப் பிறந்து ராமன் என்ற பெயருடன் விளங்கி இராவணனை வதம் செய்து நாட்டுக்கு நலம் செய்வேன். அம்மா! கலகை! நீ கேகய நாட்டில் அசுவபதி என்ற மன்னனுக்கு மகளாகப் பிறந்து கைகேயி என்ற பெயருடன் வளர்வாய். தர்மாங்கதருடைய தவத்தில் பாதி பெற்றதனால் கௌசலை வயிற்றில் நான் பிறந்தாலும் என்னை நீ அன்பு மகனாக வளர்ப்பாயாக. சமயம் வரும்பொழுது என்னைக் கானகம் போகச் சொல்லிக் கலகம் செய்வாய் என்றார்.

திருமாலுடைய சக்கரம் பரதராகவும், சங்கு சத்துருக்கனாகவும், ஆதிசேஷன் இலக்குமணனாகவும் பிறக்குமாறு திருமால் கட்டளையிட்டருளினார். இவற்றையெல்லாம் வசிஷ்டர் ஞானக் கண்ணால் கண்டார்.

இராம அவதாரம் அயோத்தி நகர மகிழ்ச்சி

வசிஷ்ட முனிவர், தசரதரே! உனக்கு சிறந்த மகப்பேறு கிடைக்கும். எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கும். அங்க நாட்டில் ரோமபாதன் என்னும் மன்னன் ஆட்சி புரிகிறான். அந்த நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகளாக மழையில்லாமல் பஞ்சம் நேர்ந்தது. கலைக்கோட்டு முனிவரை அங்கு அழைத்து வந்ததால் மழை பொழிந்து வளம் பெருகியது. கலைக்கோட்டு முனிவர் அளவற்ற தவம் செய்தவர். அவரை அழைத்துக் கொண்டு வந்து புத்திர காமேஷ்டி யாகம் செய்தால் உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் என்று கூறினார்.

வசிஷ்ட முனிவரின் அறிவுரைபடி, தசரதச் சக்கரவர்த்தி அங்க நாட்டை அடைந்தார். அங்க நாட்டு மன்னரிடம் கலைக்கோட்டு முனிவரை அயோத்திக்கு அனுப்புமாறு வேண்டிக் கொண்டார், தசரதச் சக்கரவர்த்தி. தசரதச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க கலைக்கோட்டு முனிவர் என்கின்ற ரிஷ்யசிருங்கர் தன் மனைவி சாந்தையுடன் அயோத்தி மாநகருக்கு எழுந்தருளினார். ஓராண்டு காலம் தசரதர் கலைக்கோட்டு முனிவருக்கு வந்தனை வழிபாடு செய்தார். தசரதர், ஒருநாள் ரிஷ்யசிருங்கரை வணங்கி முனிவரே! அடியேன்! அறுபதினாயிரம் ஆண்டு இவ்வுலகை ஆண்டேன். எனக்குப் பின் இந்த உலகத்தை அறநெறியில் ஆட்சி புரிய புத்திரன் உண்டாக அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால் உனக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கும் என்று கலைக்கோட்டு முனிவர் கூறினார். பின்னர் பெரிய யாகசாலை அமைத்து யாகத்துக்குரிய திரவியங்களைக் குவித்து வசிஷ்ட முனிவர் முதலிய தவசீலர்கள் துணைபுரிய வேதமந்திரங்களைக் கூறி சிறந்த வேள்வியைச் செய்தார், கலைக்கோட்டு முனிவர். பூர்ணாகுதி கொடுத்தவுடன் ஒரு தெய்வபூதம் யாகத்தில் தோன்றி யாக பாயசத்தை வழங்கி மறைந்தது.

கலைக்கோட்டு முனிவரின் கட்டளைப்படி யாக பாயசத்தை ஒரு பாதி கௌசலைக்கும், மற்றொரு பாதியை கைகெயிக்கும் மன்னர் வழங்கினார். கௌசலையும், கைகெயியும் மன்னர் வழங்கிய பாயாசத்தில் பாதி, பாதி சுமித்திரைக்கு வழங்கினார்கள். மூன்று தாய்மார்களும் கருவுற்றார்கள். மூவரும் பன்னிரெண்டு மாதங்கள் கரு இருந்தார்கள்.

ஆன்மாக்கள் வானத்திலிருந்து மழை வழியாக மண்ணுலகத்தை அடைகின்றன. அவ்வாறு வந்த உயிர்கள் காய்கனி தானியங்களில் கலந்து தந்தையார் வயிற்றில் **2** மாதங்கள் கரு இருந்த பின், தாய் வயிற்றில் பத்துமாதம் கரு இருந்து மகவாகப் பிறக்கின்றன. ஆகவே, உயிர்கள் கருவில் பன்னிரெண்டு மாதங்கள் இருக்கின்றன. முதலில் நம்மை, கருச்சுமந்தவர் தந்தையார். அதனால் தான் நம்முடைய பெயருக்கு முன்னால் தந்தையார் எழுத்தைப் பேறுகின்றோம். இராமருடைய கரு மன்னவன் பாலின்றி பாயாச வழியாக தாய்வயிற்றை அடைந்ததால் இவர்கள் **12** மாதம் கருச்சுமந்தார்கள்.

சித்திரை மாதம் நவமி திதி புனர்பூச நட்சத்திரம் கடக லக்கினத்தில் இராமபிரான் அவதாரம் செய்தார். மறுநாள் பூச நட்சத்திரத்தில் பரதரும், அதற்கு மறுநாள் ஆயில்ய நட்சத்திரத்தில் இலட்சுமணரும், சத்ருக்னரும் அவதாரம் செய்தார்கள். தசரதச் சக்கரவர்த்தி மகப்பேறு உண்டானதால் தான தருமங்கள் செய்தார். அயோத்தி மாநகரம் இன்பவெள;ளத்தில் மூழ்கியது.

வசிஷ்ட முனிவர் இராமன், பரதன், இலட்சுமணன், சத்ருக்னன் என்று பெயர் சூட்டினார்.



விசுவாமித்திர முனிவரின் கோபம்

நான்கு குமாரர்களும் வளர்ந்தார்கள். ஐந்து வயதுக்கு மேல் நான்கு குமாரர்கள் வசிஷ்டருடைய ஆசிரமத்தில் வளர்ந்து கலைகளை பயின்றார்கள். எல்லா கலைகளிலும் வல்லவராக விளங்கினார்கள். தசரத சக்ரவர்த்தி அரசவையில் சுந்தர வடிவுடன் வீற்றிருந்தார். வசிஷ்டர், சுமந்திரர், யாபாலி முதலிய அறிஞர்கள் அவரை சூழ்ந்து அமர்ந்து இருந்தார்கள்.

விசுவாமித்திர முனிவர் அங்கு எழுந்தருளினார். கடைக்காவலன் ஓடிவந்து மன்னரை வணங்கி, விசுவாமித்திர முனிவர் வருகின்றார்

என்னும் செய்தியை கூறினான். தசரத சக்ரவர்த்தி விசுவாமித்திர முனிவரை சந்தனங்களாலும், மலர்களாலும் பாதபூஜை செய்தார். தசரதா! வசிஷ்ட முனிவருடைய கருணை உனக்கு இருப்பதால் எல்லா காரியங்களும் சித்தியாகும். உன்னை போன்ற உத்தம அரசனை எங்கும் காண இயலாது. அரசர் பெருமானே! என்னைப்போன்ற முனிவர்களும், தேவர்களும் இடையூறு வந்தால் தெய்வங்களிடம் முறையிடுவோம். நிறைவேறாத குறைகளை அயோத்தி மாநகரம் வந்து உன்னிடம் முறையிடுவோம். எங்களுக்கு உன்னைத்தவிர புகலிடம் ஏது, என்று விசுவாமித்திர முனிவர் கூறினார்.

தசரதர் அகமும், முகமும் மலர்ந்தது. குருநாதா! நான் தங்களுடைய அடிமை. நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும், கட்டளையிடுங்கள், என்றார். மன்னர் பெருமானே! உலக நலன் கருதி நான் தருக்கள் நிறைந்த குளிர்ந்த கானகத்தில் யாகம் செய்தேன். அதனை அரக்கர்கள் தடுத்து இடையூறு செய்கின்றார்கள். அந்த வேள்வியைக் காவல் புரிய ஒருவனை அனுப்ப வேண்டும் என்று கூறினார்.

மன்னவனே! சாமான்யமான போர் வீரனால் வேள்வியை காவல் புரிய முடியாது. ஐயனே! தங்கள் அடியேன் வருகின்றேன். வேந்தனே! உன்னாலும் முடியாது, என்றார். உன்னை விட பல மடங்கு சிறந்தவன் ஒருவன் இருக்கின்றான் அவனை அனுப்புக. குருநாதா! அயோத்தியில் என்னைப் பார்க்கிலும் சிறந்தவன் இருக்கின்றானா? குருநாதா! சுமந்திர், மதிநுட்பம் உடையவர் கூறியதைக் கேட்டீரா, என்னைவிட சிறந்தவன் இல்லாததை இருப்பதாக எண்ணி கூறுகின்றீர்.

தசரதா! உன்னைப் பார்க்கிலும் ஓராயிரம் கோடி மடங்கு உயர்ந்தவன், அயோத்தியில் இருக்கிறான். அவனை அனுப்பு. நான் ஒருபோதும் இல்லாத ஒன்றை இருப்பதாக கூறமாட்டேன். என் வாக்கு சத்தியம். விசுவாமித்திரர் கூறியதை கேட்டு தசரதர் சிறிது சிந்தித்தார். என்னைப் பார்க்கிலும் சிறந்தவர் வசிஷ்ட முனிவர் தான். தாங்கள் அவரை அழைத்துப் போங்கள், என்றார் சக்கரவர்த்தி. விசுவாமித்திரர் புன்னகைத்தார்! நான் கூறியவர் வசிஷ்டர் முனிவர் அன்று. மன்னவனே, நீ பெற்ற நான்கு செல்வர்களும் அரிய ஆற்றல் படைத்தவர்கள். அதில் இராமனை அனுப்புக என்றார். இராமனை அனுப்பு என்ற சொல் மன்னவனை வாட்டி வதைத்தது. கவலையில் ஆழ்ந்தார். சக்கரவர்த்தி விசுவாமித்திரருடைய திருவடியில் வீழ்ந்தார். குருநாதா! இராமனோ இளம் பாலகன், போர் முகம் அறியாதவன். அடியேன்! பல போர்களில்

வெற்றி பெற்றவன். அரக்கர்களை கொன்று வேள்வியை முடித்துக் கொடுப்பேன் என்றார், தசரத சக்கரவர்த்தி. விசுவாமித்திர முனிவர் வெகுண்டு எழுந்தார். அவருடைய கோபக்கனல் உலகங்களை வெதுப்பியது. நிலம் நடுங்கியது, சராசரங்களெல்லாம் அசைந்தன.

விசுவாமித்திர முனிவரின் சீற்றத்துக்கு அஞ்சிய வசிஷ்ட முனிவர் தசரதரை பார்த்து மன்னவனே! விசுவாமித்திரருடன் இராமனை அனுப்பி வையுங்கள். இதனால் இராமனுக்கு நன்மை உண்டாகும். என் வார்த்தையைத் தட்ட வேண்டாம் என்று கூறினார், வசிஷ்ட முனிவர். தசரதர் இராமனையும், இலட்சுமணனையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சுமந்தரர், அரண்மனைக்கு சென்று கௌசலையிடம் கூறி இராமனை அழைத்து வந்தார்.

https://telegram.me/aedahamlibrary

சுமந்திரர் இராமனையும், இலட்சுமணனையும் அழைத்துக்கொண்டு வந்தார். வசிஷ்டர், விசுவாமித்திரர் மற்றும் தந்தையாரின் திருவடியில் இராமர் வீழ்ந்து வணங்கினார். தசரதர் இராம இலட்சமணரின் கரங்களைப் பற்றி விசுவாமித்திரருடைய கரத்தில் வைத்து, குருநாதா! இவர்களுக்கு தாய், தந்தை, குரு எல்லாம் நீங்கள் தான். அறுபதினாயிரம் ஆண்டுகள் இவர்களைப் பெறுவதற்கு நான் தவம் செய்தேன். என்னுடைய உயிரை நான் தங்களிடம் ஒப்படைத்து இருக்கிறேன். தாங்கள் திரும்பவும் கொண்டு வந்து சேர்க்கவும் என்று தாழ்ந்த குரலில் விசுவாமித்திரரிடம் கூறினார். அயோத்தியில் இருந்து விசுவாமித்திர முனிவர் விடைபெற்றுப் புறப்பட்டார். தேர் முதலிய ஊர்திகளில் சென்றால் எறும்பு, புழு முதலிய சிற்றுயிர்கள் பாதிக்கப்படும் என்று முனிவர்கள் நடந்தே பிரயாணம் செய்வார்கள். அதனால், விசுவாமித்திரர் நடந்து போக நேரிட்டதால், இராம, இலட்சுமணரும் விசுவாமித்திரரை பின் தொடர்ந்து போக வேண்டியதாயிற்று. அவர்கள் போகும் வழியில் மிக புனிதமான சரயு நதியைக் கண்டார்கள். அதில் அவர்கள் நீராடினார்கள். பிறகு அவர்கள் ஒரு மலர் சோலையை அடைந்தார்கள். அங்கு காயத்ரி மந்திரத்தை ஜெபித்து சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்தார்கள்.

அர்க்கியம் என்பது தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் தீர்த்தத்தாற் செய்யும் ஒருவகை உபசாரம் ஆகும்.

சூரியன் உதிப்பதற்கு முன்பே சூரியனுக்கு அர்க்கியம் கொடுப்பது, காணாமல் கொடுப்பதாகும். சூரியன் உச்சியில் இருக்கும் பொழுது அர்க்கியம் கொடுப்பது கோணாமல் கொடுப்பதாகும். சூரியன் மறைவதற்கு முன், மாலை வேளையில் அர்க்கியம் கொடுப்பது கண்டு கொடுப்பது ஆகும். இதை தான் காணாமல் கொடு, கோணாமல் கொடு, கண்டு கொடு என்பார்கள்.

விசுவாமித்திர முனிவர் அசோகக்கொழுந்து, மாங்கொழுந்து முதலிய கொழுந்துகளை விரித்து ராஜ குமாரர்களைப் படுக்க வைத்தார். இராமருடைய கால்மாட்டில் இலட்சுமணர் படுத்து உறங்கினார். விசுவாமித்திர முனிவர் இராமருடைய தலைமாட்டில் அமர்ந்து இராமரையே உற்று நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார். இராமருடைய திருமுகத்தில் கருணை வழிந்துகொண்டிருந்தது. விசுவாமித்திர முனிவர் தன் மனதில், இராமா! உன் தந்தை தசரதன் என் உரட்டலுக்குப் பயந்து

இந்த கானகத்தில் உன்னை எவ்வாறு தான் அனுப்பினானோ? ஆனால், நீ எனக்கு மகனாகப் பிறந்திருந்தால் ஆயிரம் விசுவாமித்திரர் வந்தாலும் உன்னைக் கானகத்துக்கு ஒருபோதும் அனுப்பியிருக்கமாட்டேன். இராமா! நீ இந்த உலகில் மனிதனாகப் பிறந்து ஒரு சுகமும் இல்லாத இந்த கானகத்தில் வெறுந்தரையில் உறங்குகின்றாயே! என்று நினைத்துக் கொண்டு கண்விழித்துக் கொண்டிருந்தார்.

மூவரும் விடியற்காலையில் எழுந்து நீராடிக் காயத்ரி மந்திரத்தை ஜெபம் செய்து புறப்பட்டு சென்றார்கள். போகும் வழியில் அவர்கள் ஓர் சிறந்த ஆசிரமத்தைக் கண்டார்கள். இராம இலட்சுமணரைப் பார்த்து விசுவாமித்திரர், ராஜ ரத்தினங்களே! யாவரும் போற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் யாகம் செய்த ஆசிரமம் ஆகும். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தவநிலையில் நின்றதால் இந்த ஆசிரமம் மிகவும் சிறப்பு மற்றும் சக்தி வாய்ந்தது. சிவபெருமானின் யாகத்தைக் கலைக்க மன்மதன் முயன்ற போது சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் அவன் அங்கம் அற்றவனாய் வீழ்ந்தான். அதனால் இது அங்கதேசம் என்று அழைக்கப்படுகிறது என்று கூறினார்.

அன்று அவர்கள் அங்கு சிவ பக்தியுடன் தங்கினார்கள். மறுநாள் இராமர், இலட்சுமணர், விசுவாமித்திரர் மூவரும் தங்கள் காலை கடன்களை முடித்துவிட்டு புறப்பட்டு சென்றார்கள். போகும் வழியில் அவர்களுக்கு ஒரு கொடிய பாலைவனம் தென்பட்டது. அக்கானகத்தில் தாங்கமுடியாத வெப்ப நிலையாலும், தாகத்தாலும் இராமரும், இலட்சுமணரும் வெகுவும் சிரமப்பட்டார்கள். விசுவாமித்திரர் இராம இலட்சுமணர்களுக்கு பலை, அதிபலை (விசுவாமித்திரர் இராமபிரானுக்கு உபதேசித்த ஒரு மந்திரம்) என்று இரண்டு விஞ்ஞைகளை உபதேசித்தார். அப்பொழுது பதினாயிரம் யானையின் பலம் அவர்களுக்கு கிடைத்தது. பசி, தாகங்கள் எல்லாம் மறைந்தன. இராமர் விசுவாமித்திர முனிவரை பார்த்து, குருவே! இக்கானகம் பாலைவனமாக இருக்க காரணம் என்னவென்று கேட்டார். அல்லது சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் இக்கானகம் எரிந்ததா? என வினாவினர். என் தந்தையின் ஆட்சிக்காலத்தில் இப்படி அழியக் கூடாதே! என்று வினாவினர்.

விசுவாமித்திர முனிவர், குமாரர்களே! இதுதான் தாடகை என்னும் அரக்கி வாழும் கானகம். இந்த வளமான கானகத்தை தாடகை தனியாக அழித்துப் பாலைவனமாக்கி விட்டாள். சகெது என்ற யட்சன் பிரமதேவரை வேண்டி தவம் புரிந்து ஆயிரம் யானை பலம் கொண்ட ஒரு பெண் மகளைப் பெற்றான். தான் பெற்ற மகளுக்கு தாடகை என்று பெயர் சூட்டினான். தாடகையோ சுந்தன் என்ற யட்சனை திருமணம் செய்து கொண்டாள். அவர்களுக்கு சுபாகு, மாரிசன் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள்.

ஒரு நாள் தாடகையின் கணவன் சுந்தன், அகஸ்தியரின் சிவபூஜைக்குரிய பூ மரங்களை ஒடித்துவிட்டான். அதனால் கோபத்தில் அகஸ்தியர் நெருப்பு எழ கண் விழித்தார். உடனே அவன் அவ்விடத்திலேயே சாம்பலாகினான். இதனை அறிந்த தாடகையும், அவளுடைய புதல்வர்களும் அகஸ்திரியிடம் தன் கணவர் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று கேட்கும் பண்பை விட்டு, அசுரர்களைப்போல் கல்லும் மண்ணும் வீசி ஆரவாரம் செய்தார்கள். இதனால் சினம் கொண்ட அகஸ்தியர், நீங்கள் அசுரர்களாகப் போக கடவது என்று சாபம் கொடுத்தார். யட்சர்களாகிய அவர்கள் அரக்கர்களாக மாறினர். அரக்கர்களாக மாறியபின் அவர்கள் முனிவர்களுக்கு எண்ணற்ற

கொடுமைகளை செய்து கொண்டு இருக்கின்றார்கள். தாடகையோ கையில் மலைப்பாம்புகளைக் வளையல்களாக அணிந்திருப்பாள். சூலத்தை கையில் ஏந்திக் கொண்டிருப்பாள். இராமா! உலக நலன் கருதி நான் செய்யும் வேள்விகளைத் தடுத்து அரக்கர்கள் கெடுத்து விடுகின்றார்கள். தாடகை இராவணனின் உதவியால் எண்ணற்ற கொடுமைகளை செய்து வருகின்றாள் என்றார்.

தாடகை மனிதர்கள் வரும் வாசனையை மோப்பத்தால் உணர்ந்து சீறி எழுந்தாள். இராமர் அவளைப் பெண் என்று நினைத்து போர் புரிய தயங்கி நின்றார். விசுவாமித்திரர் ராஜகுமாரா! இவள் பெண் அல்ல, அவள் தான் தாடகை. அளவற்ற கொடுமைகளை செய்பவள். முனிவர்களாகிய எங்களைக் கொன்று தின்னாமல் விட்டிருக்கின்றாள். ஏனென்றால் நாங்கள் தவத்தால் உடம்பை வாட்டிச் சதைப்பற்று இல்லாமல் இருப்பதனால் எங்களை விட்டு வைத்து இருக்கிறாள். ஆகையால், இவளைக் கொல்லுவது அறம் ஆகும் என்றார், விசுவாமித்திரர். தாடகை, இராமன் மீது சூலத்தை ஏவினாள். அதனை இராமர் பொடியாக்கினார். இராமர் தாடகைமீது சிறந்த அம்பினை ஏவினார். இராமர் ஏவிய அம்பினால் தாடகை மாண்டு விழுந்தாள். தேவர்கள் பூ மழை பொழிந்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary



யாகத்தை காத்த இராமர்

தேவர்கள் இராமபிரானுக்கு சிறந்த பாணங்களை தருமாறு பணித்தார்கள். சிவபெருமானிடம் இருந்து விசுவாமித்திரர் தவம் செய்து பெற்ற 500 வகையான அஷ்திரங்களையும், அதனை திருப்பியழைக்கின்ற உபசம்மாரங்களையும் இராமருக்கு முனிவர் உபதேசித்தருளினார்.

https://telegram.me/aedahamlibrary

இராமரால் விசுவாமித்திரர் அடைந்த பயனை காட்டிலும் விசுவாமித்திரரால் இராமர் அடைந்த பயன் 90 சதவீதமாகும். மூவரும் கோமதி என்ற நதி, சரயு நதியில் கலக்கும் சங்கமத்தில் ஓர் இரவு தங்கினார்கள். அந்த நதியின் பெருமைகளை முனிவர் இராமருக்கு கூறி அங்கிருந்து புறப்பட்டு சித்தாசிரமத்தை சேர்ந்தார்கள். அந்த ஆசிரமம் மங்கையரின் உள்ளம்போல் மிகவும் தூய்மையாக இருந்தது.

திருமால் அங்குப் பலகாலம் தவம் செய்தார். அப்பொழுது மகாபலி சக்ரவர்த்தி மிக்க வலிமையுடன் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கவர்ந்து கொண்டான். திருமால் அதிதி வயிற்றில் ஆயிரம் ஆண்டுகள் கருவிருந்து வாமன மூர்த்தியாக அவதரித்தார். மகாபலி நடத்திய யாகத்திற்கு சென்ற, வாமனர், அவரிடம் 3 அடி மண் கேட்டார். அதற்கு மகாபலியும் ஒப்புக் கொண்டார். ஒரு அடியால் பூமியையும், மற்றொரு அடியால் ஆகாயத்தையும் அளந்த வாமனப் பெருமாள், 3 - வது அடியை எங்கே வைக்க என்று கேட்டார். அதற்கு மகாபலி, 3 - வது அடியை தன் தலையில் வைக்கும்படி பணிந்து நின்றார். அவர் தலையில் கால் வைத்து பாதாளத்திற்குள் தள்ளினார் மகாவிஷ்ணு. ராஜகுமாரா! இத்தகைய பெருமைக்குரிய வாமன மூர்த்தி அவதரித்த இடம் இது. மிகவும் புனிதமானது என்றார், முனிவர்.

அந்த சித்தாசிரமத்தில் பாம்பும் கீரியும், மயிலும் பாம்பும் பகையின்றி ஒன்றுபட்டு இருந்தன. மாமுனிவர், இராமா! இனி நான் யாகத்தை தொடங்குவேன், தாடகையின் அரக்கர்களை வதைத்து யாகத்தை நிறைவேற்றுவாயாக! என்று கூறி யாகத்தை தொடங்கினார். முனிவர்கள் பலர் யாகத்துக்கு உரிய திரவியங்களை சேகரித்து தந்து உதவினார்கள். வேதமந்திரங்களுடன் வேள்வி தொடங்கியது. இராமர் யாகசாலையில் தெற்கு வாசலிலும், இலட்சுமணர் வடக்கு வாசலிலும் வில்லேந்தி நின்று காவல் புரிந்தார்கள். தாடகையின் மக்களாகிய சுபாகுவும், மாரீசனும் ஆயிரம் அரக்கர்களுடன் வந்தனர். அந்த அரக்கர்கள் மாமிசத்தையும், கல்லையும், மண்ணையும் எரிந்து ஆரவாரம் செய்தார்கள். இராமர் சரக்கூடம் கட்டி யாகத்தில் தீய பொருள்கள் விழாத வண்ணம் செய்தார். சுபாகுவை ஒரு சிறந்த அம்பினால் இராமர் கொன்றார். மாரீசன் மீது ஓர் அம்பை ஏவினார். ஆனால் அந்த அம்பு கடலில் எறிந்தது. அவன் பாதாள உலகம் போய் இராவணனுடைய உதவி பெற்று உயிர்பெற்றான். இராமரும் இலட்சுமணரும் அரக்கர்களை வதைத்து மாய்த்தனர். தேவர்களின் யாகம் ஐந்து நாள்கள் நடந்தது. யாகம் எவ்வித தடங்களும் இன்றி நிறைவேறியது. யாகம் முடிந்தபின் ஸ்நானம் செய்தார்கள்.

விசுவாமித்திரர் இராமரை பார்த்து, இராமா! எல்லா உலகங்களையும்

காத்தருளும் கடவுளாகிய நீ, இந்த வேள்வியை காத்தருளியதில் என்ன சிறப்பு! உன் புகழ் ஓங்குக ! என்று கூறினார்.

https://telegram.me/aedahamlibrary

சீதை பிறப்பு

பத்மாட்சன் பரத கண்டத்தை ஆட்சி புரிந்து வந்தான். அவன் மகப்பேறு வேண்டி தவம் புரிந்தான். பத்மாட்சன் தவத்தின் பலனாக திருமால் அவன் முன் தோன்றி, உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். இப்பூவுலகத்தின் நாராயணா! எனக்கு திருமகள் மகளாகப் பிறக்க வேண்டும் என்று வரம் கேட்டான். திருமால் ஒரு மாதுளங்கனியை பத்மாட்சனுக்கு கொடுத்தார். அவன் மாதுளங்கனியை பிளந்தபோது அதில் ஒரு பாதி செழும்பிதையும், மற்றொரு பாதியில் இலட்சுமியும் இருப்பதை கண்டு பத்மாட்சன் மகிழ்ந்தான்.

அம்மங்கைக்கு பத்மாட்சி என்று பெயர் சூட்டினான். சில வருடங்கள் கழிந்தது. பத்மாட்சிக்கு திருமண வயது எட்டியது. பத்மாட்சன் மகளுக்கு சுயம்வரம் வைத்தான். சுயம்வரத்துக்கு 56 சிற்றரசர்ககள் வந்தார்கள். பத்மாட்சன் சுயம்வர மண்டபத்தில் இருந்த மன்னர்களைப் பார்த்து, வேந்தர்களே! விண்ணில் உள்ள நீலநிறத்தை யார் தன் உடம்பில் பூசிக்கொள்கிறானோ! அவர் தான் என் மகளுக்கு மாலை போட வேண்டும் என்றார். இது என் மகளின் விருப்பமாகும் என்றான். இது முடியாத காரியம் என்பதால் அரசர்கள் பத்மாட்சன் மீது போர் தொடுத்தார்கள். போரில் அனைவரையும் பத்மாட்சன் வெற்றி பெற்றான். ஒரு சமயம், பத்மாட்சி தவம் செய்து கொண்டிருந்தாள். வானவீதியிலே சென்று கொண்டிருந்த இராவணன் பத்மாட்சியை பார்த்து காதல் கொண்டான். பத்மாட்சியை தனக்கு திருமணம் செய்து தருமாறு கேட்டான். பத்மாட்சன், வானத்தில் தெரிகின்ற நீல நிறத்தை உடம்பில் பூசிக்கொண்டால் என் மகள் உனக்கு மாலை போடுவாள் என்றான். இதனால் கோபமுற்ற இராவணன் பத்மாட்சனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றுவிட்டான். இராவணன் பத்மாட்சியைப் பற்றுவதற்கு முயன்றான். அவள் மறைந்துவிட்டாள். சினங்கொண்ட இராவணன் அந்த நகரத்துக்கு தீ வைத்தான். இந்த செயல் இலங்கை எரிவதற்குக் காரணமாயிற்று.

ஒரு நாள் இராவணன் வான்வழியே செல்லும்போது பத்மாட்சி தவம் செய்து கொண்டு இருப்பதை கண்டான். உடனே இராவணன் பத்மாட்சியைப் பற்ற முயன்றான். பத்மாட்சி எரிகிற தீயில் விழுந்துவிட்டாள். இராவணன் தண்ணீரை விட்டு தீயை அணைத்து பார்த்தான். அதில் ஒரு பெரிய மாணிக்கத்தை கண்டு எடுத்தான். அதனை மண்டோதரிக்கு தரலாம் என்று பெட்டியில் வைத்துக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary

மண்டோதரி! உனக்கு ஒரு மாணிக்க மணியை கொண்டு வந்துள்ளேன் என்று கூறி பெட்டியை திறந்தான். அப்பெட்டியில் ஒரு பெண் குழந்தை இருந்தது. இதனை கண்ட இராவணன் அதிர்ச்சி அடைந்தான். இவள் மாயக்கன்னி! பல வகையான வடிவம் எடுக்கிறாள் என்று கூறி, அவளை வெட்டுவதற்காக வாளை ஓங்கினான். மண்டோதரி கணவனின் கரத்தைப் பற்றி தடுத்தாள். இந்த குழந்தையை வெட்ட வேண்டாம். பல வடிவங்கள் எடுத்த இவள் பத்ரகாளியாகயும் மாறி தங்களை கொன்றுவிடுவாள். இக்குழந்தையை பெட்டியில் வைத்து மூடி எங்காவது புதைத்துவிடுங்கள் என்று கூறினாள். இராவணன் அந்தக் குழந்தையை சிவபெருமான் வீற்றிருக்கும் இமயத்திலேயே விட்டுவிடத் தீர்மானித்து கங்கையின் உற்பத்தி ஸ்தானத்தில் பனிபடர்ந்த ஒரு பகுதியில் பனிப்பாறைகளுக்கு நடுவில் வைத்துவிட்டால் அக்குழந்தை பனியில் உறைந்து இறந்துவிடும் என நினைத்தான். ஆனால் அதற்கு மாறாக பனி உருகி கங்கையின் பிரவாகத்தில் இழுத்துச் சொல்லப்பட்டது.

மிதிலாபுரியை அரசு புரிகின்றவர், சீரத்துவஜ ஜனகர். இவருடைய தம்பி குசத்துவஜர் என்பவர். சாங்காஸ்யம் என்ற நகரத்தை ஆட்சி புரிந்து வந்தார். ஜனகரிடம் கௌதமரின் புதல்வராகிய சதானந்தர் புரோகிதராக இருந்து வந்தார். ஜனகர் வேதாந்த வித்தகர். மகப்பேறு வேண்டிப் பொற்கொழுவால் வேதமந்திரம் சொல்லி உழுகின்றபொழுது இராவணனால் புதைக்கப்பட்ட பெட்டி கிடைத்தது. அப்பெட்டியில் மகாலட்சுமியே குழந்தையாக இருந்தாள். ஜனகர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து சீதை என்று பெயர் சூட்டினார்.

சீதையின் திருமணம்

சில மாதங்கள் கழித்து ஜனகருடைய மனைவி சுநைனா கருவுற்று ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அப்பெண்ணுக்கு ஊர்மிளை என்று பெயர் சூட்டினார்கள். ஜனகருடைய தம்பிக்கு இரண்டு பெண்கள் பிறந்தார்கள். அவர்களுக்கு மாண்டவி, சுருதகீர்த்தி என்று பெயர் சூட்டினார்கள்.

ஒருநாள் நான்கு பெண் குழந்தைகளும் அரண்மனையில் பந்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள். சீதை வீசிய பந்து, ஜனகர் பூஜை செய்யும் சிவன் வில்லின் அடியில் மாட்டிக் கொண்டது. ஊர்மிளை! பந்தை எடுத்துப் போடு என்றாள், சீதை. அக்கா! பந்து சிவ தனுசின் கீழ் அகப்பட்டுக் கொண்டது. இதை அறுபதினாயிரம் பேர் எடுக்கக் கூடியது என்றாள், ஊர்மிளை. என்னம்மா ஊர்மிளை! ஒர் பந்தை எடுக்க அறுபதினாயிரம் பேர் வேண்டுமா என்ன? என்று கூறி கொண்டு அன்னம்போல் நடந்து சென்று தன் இடது கையால் வில்லை எடுத்து மூலையில் வைத்துவிட்டுப் பந்தை எடுத்தாள். ஆனால் வில்லை பழையபடியே எடுத்து மேடையில் வைக்க மறந்துவிட்டாள், சீதை.

மறுநாள் ஜனகர் காலையில் பூஜை செய்ய வந்தபோது வில், மேடையில் இல்லாமல் மூலையில் வைத்து இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். உடனே சேவகனை அழைத்து வில்லை யார் எடுத்தது என்று கேட்டார். சேவகன் இங்கு ஒருவரும் வரவில்லை என்றும் சீதை தன் தங்கையுடன் பந்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள் என்று கூறினான். ஜனகர் சீதையை அழைத்து வில்லை யார் எடுத்தது என்று கேட்டார். சீதை, அப்பா! நான் தான் வில்லை எடுத்து வைத்தேன் என்றாள்.

என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா என்று கூறிவிட்டு, வில்லை இடது கையால் எடுத்து இருந்த இடத்தில் வைத்துவிட்டாள். இந்த நிகழ்வு ஜனகருக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது. அறுபதினாயிரம் பேர் எடுக்க வேண்டிய இந்த வில்லை ஐந்து வயது சிறுமியான சீதை எவ்வித இடர்பாடுகள் இன்றி தன் இடது கையால் எடுத்து வைத்து விட்டாளே! இந்தப் பெண்ணை நான் யாருக்கு திருமணம் செய்து கொடுப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தார். வில்லை வளைத்தவனுக்கே பெண்ணை திருமணம் செய்து தருவதாகப் பிரகடன் செய்தார். பலர் வந்து முயன்றும் வில்லை வளைக்க முடியாமல் தோல்வியுற்றார்கள். அப்போது சீதைக்கு 12 வயது. சீதையின் திருமணம் மங்களகரமாக நடைபெறும் பொருட்டு

https://telegram.me/aedahamlibrary

ஒரு சத்ரயாகம் தொடங்கினார், ஜனகர். அந்த யாகத்துக்கு மன்னர்களும், மறையவர்களும் கூடினார்கள். அந்த யாகத்துக்கு சித்தா ஆசிரமத்தில் இருந்த விசுவாமித்திரருக்கு அழைப்பு வந்தது. விசுவாமித்திரர் இராமரை நோக்கி, இராமா! உன்னால் ஒரு பெரிய செயல் நடைபெற இருக்கிறது. அதற்கிடையில் நாம் ஜனகருடைய யாகத்துக்குப் போக வேண்டும் என்று கூறி இராம இலட்சுமணருடன் விசுவாமித்திரர் மிதிலையை நோக்கி புறப்பட்டார்.

மூவரும் போகும் வழியில் சோனை நதியைக் கண்டார்கள். கங்கா நதியை தரிசனம் செய்தார்கள். சரவணப் பொய்கையைக் கண்டு முருகனை நினைத்து வணங்கி மகிழ்ந்தார்கள். மூவரும் மிதிலைக்கு அருகில் சேர்ந்தார்கள். அங்கு ஒரு பெரிய நதி ஒன்று இருந்தது. அந்த நதியை கடக்க பாலம் இல்லை. அந்நதியைக் கடக்க வழி ஏதேனும் உள்ளதா என்று சிந்தித்து கொண்டிருந்தபொழுது கரிய நிறத்துடன் ஒருவன் வந்து அவர்கள் முன் வணங்கி நின்றான். நீ யார்? உன் பெயர் என்ன? என்று கேட்டனர். அவன் நான் வீரப்பன் என்றான்.

ஓடக்காரனின் சாமர்த்தியம்!

விசுவாமித்திரர், நீ யார்? உன் பெயர் என்ன? என்று கேட்டார். அவன் நான் வீரப்பன் என்றான். நான் ஒரு ஓடக்காரன். நான் பரம்பரையாக ஓடம் செலுத்துபவன். நாங்கள் அக்கறைக்கு போக வேண்டும். ஓடம் கிடைக்குமா எனக் கேட்டார். இந்த ஓடத்தில் எத்தனை நபர் ஏறலாம். ஓடத்தில் அறுபது நபர் போக வேண்டும். நீங்கள் மூவர் தான் வந்து இருக்கின்றீர்கள். அப்படி என்றால், நாங்கள் மீதம் 57 நபர்கள் வரும் வரை காத்திருக்க வேண்டுமா? தாங்களோ இந்த உலகத்தை காக்கும் தெய்வங்கள். உங்களை நான் ஒருபோதும் காக்க வைக்கமாட்டேன்.

விசுவாமித்திரர் ஓடத்தில் ஏறினார். இராமர் ஏறும்பொழுது மீனவன், பச்சை! பச்சை! ஓடத்தில் ஏறாதே! இதனை கேட்ட இராமர் தூக்கிய காலை கீழே வைத்துவிட்டார். இலட்சுமணருக்கு பெரும் கோபம் உண்டாயிற்று. தம்பி இலட்சுமணா! அவன் பரம்பரையாக ஓடம் செலுத்துபவன் பச்சையாக இருக்கும் என்னைப் பச்சை என்று அழைத்தால் என்ன, அவனுக்கு சொந்தமான ஓடத்தில் கால் வைக்காதே என்று சொல்லுவதற்கு அவனுக்கு உரிமை உண்டு அல்லவா? இராமர், மீனவனே! நான் ஏன் ஓடத்தில் ஏறக்கூடாது என்றாய். ஐயா! தங்களை நான் ஏற்றிக்கொள்ள மாட்டேன். ஆனால் என் மேல் கோபத்தில் உள்ள சின்ன ஐயாவை ஏற்றிக்கொள்வேன். மீனவனே! நாங்கள் அயோத்தியை ஆளும் தசரத சக்ரவர்த்தியின் மக்கள்.

இதைக்கேட்டவுடன் அம்மீனவனின் உள்ளம் துடித்து, கண்ணீர் மல்க வணங்கி, என்னை மன்னித்து அருள வேண்டும் இராம மூர்த்திகளே! தாங்கள் பிறந்த அன்று எங்களுக்கு அன்னமும் ஆடையும் வழங்கினார்கள். தங்களுக்கு ஒரு கோடி வணக்கங்களை நான் செலுத்துகிறேன். ஆனால் தாங்கள் மட்டும் ஓடத்தில் கால் வைக்கவேண்டாம். இராமர் ஏனப்பா! நான் ஏறக்கூடாது. ஐயனே! நாங்கள் இளமையில் அதில் சருக்கும்பாறை விளையாடுவோம். அந்தக் கல்லில் தங்கள் கால் பட்டவுடனே அது பெண்ணாக மாறிவிட்டது. இந்த ஓடத்திலும் கல்லும், மரமும், இரும்பும் இருக்கின்றன. தாங்கள் கால் வைத்தவுடன் ஓடம் பெண்ணாக மாறிவிட்டால் நான் என்ன செய்வது.

அப்பா மீனவனே! நான் கால் வைத்தால் ஓடம் பெண்ணாகாது. அப்படி என்றால் தாங்கள் நதியில் இறங்கி சுத்தமாக காலைக் கழுவிவிட்டு ஏறுங்கள். இராமர் நதியில் இறங்கிக் கால் கழுவச் சென்றார். மீனவன்,

ஐயனே! கால் கழுவும் பணியை எனக்கு கொடும். நான் சுத்தமாய் தேய்த்துவிடுகிறேன் என்று கூறி, இராமருடைய பாதங்களை செம்பு தாம்பாளத்தில் வைத்து, ராம ராம என்று கண்ணீரும் பன்னீரும் விட்டு அபிஷேகம் செய்தான். காட்டு மலர்களை கொண்டு அர்ச்சனை செய்தான்.

பெருமானே உன் பாத பூஜைக்காக மகரிஷிகள் பல காலம் தவம் இருக்க, தவம் செய்யாத இந்த அடியேனுக்கு முதல் பாத பூஜை கிடைத்தது என்று துதி பாடி வழிபாடு செய்தான். இராமர், தம்பி இலட்சுமணா! நமது பாதபூசைக்காக தான் இவ்வாறு செய்தான். மீனவன், இராமா! நீங்கள் சுத்தம் செய்த இந்த நீரை கீழே விட்டால் கற்களெல்லாம் பெண்களாகிவிடும். அதனால் என் மனமாகிய கல் பெண்ணாகட்டும் என்று கூறி தலையில் ஊற்றிக்கொண்டான்.

பிறகு மூவரும் ஓடத்தில் ஏறினார்கள். அவன் பகவானுடைய கீதத்தைச் சொல்லியபடியே ஓடத்தை செலுத்தினான். மூவரும் ஓடத்தை விட்டு இறங்கிய பின் இராமர் தன் கையிலிருந்த நவரத்தின மோதிரத்தை பரிசாக தந்தார். மீனவன் அதை வாங்க மறுத்தவிட்டான். இராமச்சந்திர மூர்த்தி! நீயும் ஓடக்காரன், நானும் ஓடக்காரன். ஒரு தொழிலாளி மற்றொரு தொழிலாளியிடம் இனாம் வாங்க கூடாது. நான் இந்த நதிக்கு ஓடம் விடுபவன். தாங்கள் பிறவிப் பெருங்கடலுக்கு திருவடி ஆகிய ஓடத்தை விடுபவர் என்று கூறி, இராமர் மலரடிமீது வீழ்ந்து வணங்கினான். மீனவனின் அன்பைக் கண்டு இராமர் உள்ளம் உருகினார். பிறகு மூவரும் மிதிலையை நோக்கி புறப்பட்டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

இராமர் சீதை காதல்

மூவரும் மிதிலையை நோக்கி புறப்பட்டார்கள். மலர் சோலைகளும், கல்வி கூடங்களும், செல்வ மாடங்களும் நிறைந்து அழகுடன் காட்சி தரும் மிதிலை மாநகரத்திற்குள் நுழைந்து, அரச வீதியில் மூவரும் சென்றார்கள். விசுவாமித்திரன் முன்னே நடக்க, ராமனும் லட்சுமணனும் பின்னால் வருகிறார்கள். சிறிது நேரத்தில், அவர்கள் அரண்மனையை நெருங்குகிறார்கள். கன்னிமாடத்தில் தாதியர்கள் சூழ தங்க சிலை போல் சீதாதேவி நின்று கொண்டிருந்தாள். இராமர் அக்குல மகளை பார்த்தார். சீதாதேவியும் இராமனை பார்த்தாள். பார்த்த நொடியில் சீதா தேவியின் உள்ளத்தில் இராமரும், இராமர் உள்ளத்தில் சீதா தேவியும் குடி புகுந்தனர். இருவரின் உள்ளங்கள் ஒன்றிணைந்தது.

இராமர், என் மனதை பறித்த இப்பெண்மகள் யார்! என்ன பெயர்! முழுமதியை போன்ற அழகிய முகமும், கூர்மையான கண்களும், தாமரை இதழ் போன்ற உதடுகளும் என் உள்ளத்தை கொள்ளை கொண்டன. அவள் என் மனதை உருக்குகின்றாள். இது பூர்வ ஜென்ம பிறப்பின் தொடர்பினால் ஏற்பட்ட சந்திப்பா! என்று எண்ணினார். அத்தெரு வளைவில் மூவரும் மறைந்தனர்.

சீதாதேவி, இவர் மன்மதனோ! என் உள்ளத்தில் குடியிருந்த நாணம், மடம் முதலிய குணங்கள் போன வழி தெரியவில்லையே! இவர் என் கண்ணில் நுழைந்து மனதை களவு செய்துவிட்டார். அந்த முனிவர் சிறிது மெதுவாக சென்றிருந்தால் அந்த சுந்தரனை இன்னும் கொஞ்ச நேரம் பார்த்து இருப்பேன். ஆனால் இவர் எனக்கு கணவனாக வரவேண்டும் என்றால் அறுபதினாயிரம் பேர் தூக்கவேண்டிய சிவதனுசை தூக்க வேண்டுமே! கண்களுக்கு தெரியாமல் விண்ணில் இருக்கும் தேவர்களே! முனிவர்களே! இந்த வீதி வழியாக செல்லும் சுந்தரனின் கையால் சிவதசை பூமாலைப் போல் வளையுமாறு செய்தால் நான் உங்களுக்காக 14 ஆண்டு வனவாசம் செய்வேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டாள்.

பொழுது போன படியால் ஜனக மகாராஜாவின் கட்டளைப்படி மூவரையும் வரவேற்று விருந்தினர் மாளிகையில் தங்க வைத்து உபசரித்தனர். அயோத்தியிலிருந்து மிதிலாபுரிக்கு 450 மைல், 14 நாள் கடந்து வந்து சேர்ந்தார்கள். நெடுந்தூரம் பயணம் செய்ததால் விசுவாமித்திர முனிவர் அயர்ந்து தூங்கினார். இளைய பெருமாளும் நன்கு உறங்கிவிட்டார். ஆனால் இராமருக்கோ தூக்கம் வரவில்லை.

புரண்டு புரண்டு படுத்தும் இராமருக்கு தூக்கம் வரவில்லை சீதையே நினைத்து படுத்து கொண்டு இருந்தார். மனமே! இன்று மாலை மாடிமேல் நின்ற அழகிய பெண்மணியை கண்டு காதல் கொண்டேனே! இது சரிதானா? ஆனால் எனக்கு அவள் முகம் மட்டுமே தெரிந்தது. அவள் திருமண ஆனவளாக இருந்தால் இது பெரும் பாவம் ஆகிவிடுமே. மறுகணமே தன்னைதானே சமாதானம் செய்து கொண்டார். நான் எந்தப் பெண்களைப் பார்த்தாலும் என் தாயாகவே பார்ப்பேன். இதுவரை நல்வழியில் போகும் என் மனம் அல்வழியில் போனதில்லை. இன்று நான் இந்தப் பெண்ணைப் பார்த்துக் காதல்வயப்படுகிறேன் என்றால், அவள் எனக்கெனப் பிறந்தவளாகதான் இருக்கவேண்டும். குற்றம் செய்யாத என் மனம் அவளை விரும்பியதால் அவள் கன்னியாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்து உறங்கினார்.

மறுநாள் காலை சந்தியா வந்தனங்களைச் செய்துவிட்டு மூவரும் வேள்விச்சாலைக்கு சென்றார்கள். ஜனகர் அவர்களை வரவேற்று ஆசனங்களில் அமர வைத்து உபசரித்தார். ஜனகர் விசுவாமித்திர முனிவருடைய இருபுறங்களிலும் இளம் சூரியனைப்போல் பிரகாசித்து கொண்டு இருக்கும் இராமரையும், இலட்சுமணரையும் பார்த்து, குருநாதா! இக்குமாரர்கள் யார்? என்று வினாவினார். விசுவாமித்திரர் மன்னரே! இவர்கள் தசரதச் சக்ரவர்த்தியன் குமாரர்கள். இவன் இராமன் இலக்குமணன்.

நீ வைத்து இருக்கும் வில்லையும் வளைக்கும் பேராற்றல் படைத்தவர்கள். இராமர் தாடகையைக் கொன்று நான் செய்யும் வேள்வியை முடித்துக் கொடுத்தார். பெருநீதி உடைய போன்ற பரதனை கைகேயி பெற்று எடுத்தாள். சிறந்த வீரர்களாகிய இலட்சுமணனையும், சத்ருக்கனனையும் சுமித்திரை பெற்றெடுத்தாள்.

இராமர் வில்லை வளைத்தல்

அறுபதினாயிரம் பேர் வில்லைச் சுமந்துகொண்டு வந்து யாக சாலையில் வைத்தார்கள். அங்கு கூடியிருந்த மன்னர்கள் வில்லை பார்த்தவுடன் வளைக்கும் ஆற்றலின்றி மடங்கி இருந்தார்கள். ஒரு மன்னன் வில்லை பார்த்துவிட்டு வந்து ஆசனத்தில் அமர்ந்தான். அருகில் இருந்த மன்னன், எங்கு சென்றாய்? வில்லை தூக்க போனாயா? என கேட்டான். அவன், நான் வில்லை தூக்கப் போகவில்லை. வில்லை பார்க்க தான் போனேன் என்றான். இன்னொருவன் வில்லிடம் சென்று கைகளுக்கு அடங்குகிறதா? இல்லையா? என்பதை பார்க்க சென்றான். அவன் கைகளுக்கு அந்த வில் அடங்கவில்லை. மற்றொருவன் வில்லை தூக்க முயன்று, முடியாமல் அவமானத்துடன் வந்து தன் இருக்கையில் அமர்ந்தான். ஒருவன் எனக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் என்றான். இன்னொருவன் சீதை எனக்கு தங்கை போன்றவள் என்றான். இவ்வாறு ஒரு காரணம் காட்டி எவரும் வில்லை வளைப்பதற்கு முன் வரவில்லை.

இந்த அழகிய மகளை வில்லை வளைத்தால் தான் பெண் தருவேன் என்பது முட்டாள் தனமாகும். இந்த வில்லை யாராலும் வளைக்க முடியாது. இந்த வில்லை வளைக்கப் போகின்றவனும் இல்லை. அதேபோல் சீதைக்கும் திருமணமும் ஆகாது என்று அங்கு கூடியிருந்தவர்கள் பலவாறு பேசிக் கொண்டனர்.

ஜனகரின் புரோகிதரான சதானந்தர் இராம லக்ஷ்மணர்களிடம் சிவதனுசின் வரலாற்றை கூறுகிறார். ஒரு முறை தக்கன் பெரியதொரு யாகம் செய்தான். யாகத்திற்கு வருகை தருமாறு பிரம்மா, விஷ்ணு, இந்திரன், சந்திரன் உள்ளிட்ட தேவர்களுக்கு அழைப்பு விடுத்தான். ஆனால், சிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லை. சிவபெருமானை அவமதித்ததால் சிவபிரான் வீரபத்திரனிடம் வேள்வியை அழிக்குமாறு கூறுகிறார். அவர் தேவர்கள் மற்றும் வேள்வியையும் அழித்தார். பின்னர் கோபம் தணிந்த சிவபிரான் தேவர்களை மீண்டும் உயிர்கொடுத்தார். தேவர்கள் கோபம் தணிந்த பின்னும் சிவபிரான் கையில் வில் ஏந்தி இருப்பதை கண்டு அஞ்சினார்கள். சிவபெருமான் தன் வைத்திருந்த வில்லை ஜனகன் குலத்து முன்னோர் ஒருவனிடம் கொடுத்துவிட்டார். இவ்வில்லின் வரலாறு இதுதான் ராமா!

இராமா! சீதை பற்றி கூறுகிறேன், வேள்விச்சாலை அமைப்பதற்காக நிலத்தை ஏர் உழும்பொழுது இப்பெண்மகள் எங்களுக்கு சீதையாக கிடைத்தாள். மேன்மையான குணங்கள் கொண்ட சீதையை திருமணம்

செய்ய போட்டி போட்டுக் கொண்டு மன்னர்கள் வந்தனர். ஆனால் ஜனகர் சிவதனுசை வளைப்பவருக்கு தான் சீதை மணமுடிப்பதாக அறிவித்தார். போட்டி போட்டு கொண்டு வந்த மன்னர்கள் தனுசை வளைக்க முடியாததால் கோபம் கொண்டு ஜனகர் மீது போர் தொடங்கினர். ஜனகரின் படைகள் அவர்களை தோற்கடித்துவிட்டனர். இதனால் ஜனகர் சீதையின் திருமணம் தடைப்பட்டு விடுமோ என பயம் கொண்டு இருக்கிறார். தாங்கள் இந்த சிவதனுசை வளைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம் என்றார் சதானந்தர்.

முனிவர் இராமனைக் கடைக்கண்ணால் நோக்கி, இந்த சிவதனுசு பல ஆண்டுகளாக அபிஷேகம் செய்து இற்றுப் போனது. இந்த தனுசு இராவணன் சம்காரத்திற்கு உதவாது. உனக்கு பரசுராமர் கோதண்டத்தை தருவார். இந்த வில்லை வளைக்க வேண்டாம், ஒடித்துவிடு என்று கூறினார். முனிவருடைய கடைக்கண் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு இராமன் அந்த சிவதனுசை நோக்கினான். தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தான். தேவர்கள் ஆரவாரம் செய்தனர்.

இராமர் வீரத்துடன் நடந்து சென்று அந்த வில்லை எடுத்து நாணைப் பிடித்து இழுத்தார். ஒரு நொடியில் வில் படார் என்று ஒடிந்தது. வில் உடைந்த ஓசையினால் பூவுலகம் எல்லாம் அதிர்ந்தன. எட்டுத் திசைகளிலும் வில் உடைந்த ஓசை கேட்டது. இராமருக்கு தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். இதை பார்த்த ஜனகருக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. மிதிலாபுரியிலுள்ள அனைவரும் ஆடி, பாடி கொண்டாடினார்கள். என் உயிரினினும் மேலான என் மகள் சீதையை இராமருக்கு தருகிறேன் என்றார;, ஜனகர்.



தசரதன் மிதிலைக்கு வருதல்

வில் உடைந்த சத்தம் அண்டம் முழுவதும் கேட்ட போதிலும் சீதைக்கு கேட்கவில்லை. ஏனென்றால் சீதை இராமரை நினைத்து மனமுருகி கொண்டிருந்தாள். அப்பொழுது நீலமாலை என்னும் தோழி ஓடி வந்து சீதையிடம் இராமன் வில்லை முறித்த செய்தியைக் கூறுகிறாள். அன்று விசுவாமித்திர முனிவருடன் மிதிலைக்கு வந்த இராமன் தான் வில்லை முறித்தான் என்றாள். அப்படி என்றால் நான் அன்று கன்னி மாடத்தில் இருந்து பார்த்த அந்த கார்வண்ணன் தான் வில்லை முறித்தவன் என்ற செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைந்தாள், சீதை.

சபையில் ஒரு பெண்மணி சீதையைப் பார்க்க இராமருக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்றாள். இன்னொருவள் இராமரைப் பார்க்க சீதைக்கு

ஆயிரம் கண்கள் வேண்டும் என்றாள். விசுவாமித்திர முனிவர், தசரத சக்கரவர்த்தியை வரவழைத்து திருமணம் செய்வதே சிறந்த முறையாகும். ஆதலால் ஜனகர் தூதர்களிடம் ஓலையை கொடுத்து அயோத்திக்கு சென்று இங்கே நிகழ்ந்தவற்றை தசரத சக்கரவர்த்தியிடம் கூறி, அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஜனக மகாராஜாவின் தூதர்கள் மூன்று நாட்கள் பயணம் செய்து அயோத்தியை அடைந்தார்கள்.

தசதர மன்னரை பார்த்து, தசரத சக்ரவர்த்தி அவர்களே! ஜனக மகாராஜர் தங்களுக்கு ஓர் நற்செய்தியை அனுப்பியுள்ளார். விசுவாமித்திரருடன் மிதிலைக்கு வந்த இராமர் சீதையின் சுயம்வரத்தில் நாணை இழுத்து சிவதனுசை ஒடித்து விட்டார். ஜனக மகாராஜர் தங்கள் புத்திரனின் விவாஹ அனுமதியையும், தங்களின் வரவையும் எதிர்பார்த்து கொண்டு இருக்கிறார் எனக் கூறினார்கள். இராமனின் வீரச் செயல்களும், இராமனால் சிவதனுசு முறிபட்டதும் கேட்ட சக்ரவர்த்தி பெரும் மகிழ்ச்சி அடைந்தார். நாட்டு மக்களுக்கு தசரதன் இராமனின் திருமணத்தை முரசறைந்து செய்தி அறிவித்தான். நாட்டு மக்களும் மகிழ்ச்சி கடலில் மிதந்தனர்.

தசரதனின் ஆணைப்படி தேரும், யானையும், குடைகளும், கொடிகளோடும், சேனைகள் புறப்பட்டன. வீரர்களும் பெண்களும் மிதிலை நகர் நோக்கி பிரயாணம் புறப்பட்டனர். வழியெங்கும் ஆடல் பாடலுடன் தங்களுக்கே திருமணம் நடப்பது போல் உணர்ந்து மகிழ்ந்தனர். திருமணம் நடத்தி வைக்க அந்தணர்களும் சென்றனர். பெண்களின் சிலம்பொலி, குதிரைகள் கனைப்பொலி, மக்களின் சிரிப்பொலி என போகப்போக மக்கட்கூட்டம் நிறைந்து வழிந்தது.

தசரத மன்னருடம் பட்டத்தரசிகளும் இசையொலியின் இரைச்சலோடும், படைகளின் ஒலியோடும் வழிநடையாக சென்றனர். கோசலை, கைகேயி, சுமத்திரை மூவரும் தோழிகளுடன் புடைசூழ தேரில் சென்றனர். சீர் கொண்டு செல்லும் பெண்கள் மொத்தம் அறுபதினாயிரம் பேர். தசரதன் நவரத்தின தேரில் வசிஷ்ட முனிவரும், பரதரும், சத்ருக்குனரும், அரச அதிகாரிகளும் சென்றனர். அன்றைய பொழுதை அவர்கள் இந்து சைல அடிவாரத்தில் தங்கி கழித்தனர்.

மறுநாள் காலையில் அனைவரும் சந்திர சைலத்தை அடுத்துள்ள சோனையாற்றின் கரையை அடைந்தனர். அங்கு அனைவரும் நீராடி விட்டு புறப்பட்டனர். அந்தி மாலைப் பொழுதில் இளைஞர்களும், கன்னியர்களும் தங்களை அலங்கரித்து கொண்டு தங்களுக்கே திருமணம் என்பது போல் மகிழ்ச்சியோடு இருந்தனர். இவ்வாறு தசரதன் தன்

பரிவாரங்களுடன் பயணம் செய்து ஐந்தாம் நாளில் மிதிலையை அடைந்தார்.

அவர்களுக்காக காத்து கொண்டியிருந்த ஜனகர் அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றார். ஜனக மகாராஜர், தசரத சக்கரவர்த்தியை வரவேற்று அழைத்து சென்றான். இராம இலட்சுமணர் தாய் தந்தையரிடன் ஆசி பெற்றனர். மிதிலை நகரின் வீதிகளில் இராமர் பவனி வரும்போது அவனைக் பார்ப்பதற்காக கூடியிருந்த பெண்களின் கண்களில் அவன் உருவம் புகுந்து வந்ததால் இவனுக்கு கண்ணன் என்று பெயர் வந்தது.

இராமன் சீதை கல்யாணம்

�� அனைவரும் திருமண மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பல தேசத்திலிருந்தும் மக்கள் திருமண நிகழ்ச்சியை பார்க்க கூடி இருந்தனர். திருமண நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமண நிச்சயதார்த்த மண்டபத்துக்கு சீதையை அழைத்து வருமாறு வசிஷ்டர் கேட்டுக் கொண்டார். ஜனகர், வசிஷ்டரை தொழுத பின்னர் சீதையை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். சீதையை அழகாக அலங்கரித்து சீதையின் செவிலித்தாயர்கள் அழைத்து வந்தார்கள்.

�� சீதையின் அழகை கண்டு கூடியிருந்த அனைவரும் கண்களை இமைக்க மறந்து விட்டனர். இராமன் சீதையை கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். சீதை தன் இருக்கையில் அமர்ந்தபடியே தன் கண்களை சிறிது மேல் நோக்கி அன்று கன்னிமாடத்திலிருந்து பார்த்த அந்த அழகன் தான் தன்னை மணந்து கொள்ள போகும் மணாளன் என்பதை உறுதி செய்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தாள்.

�� தசரதன் வசிஷ்டரை பார்த்து திருமண நாள் என்று வைத்து கொள்ளலாம் எனக் கேட்டார். ஜனகர் விஸ்வாமித்திர முனிவரிடம் தன் மகளை, இராமருக்கும், தன் தம்பியின் மகளை இலட்சுமணனுக்கும், பரத, சத்ருக்குனருக்கும் கொடுக்க சம்மதித்து இரண்டாம் நாளான பங்குனி உத்திரம் நாளில் நால்வருக்கும் திருமணம் செய்வதாக நிச்சயம் செய்து கொண்டனர். இரண்டாம் நாள் நடைபெறவிருக்கும் திருமணத்திற்காக வேலைகள் விரைவாக நடைபெற தொடங்கின. நாளை திருமணம் என்பதால் சீதை இராமனை நினைத்து அவதிபடுகிறாள். இராமனும் சீதையை நினைத்து ஏங்குகிறான். மிதிலை மக்கள் திருமணத்தை பார்க்க தங்களை அலங்கரித்துக் கொண்டு வருகிறார்கள்.

�� திருமண நாள் வந்தது. மிதிலை நகரமே அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் போல் விளங்கியது. வாழையும், வண்ணமயமான தோரணங்களும் மிதிலை நகரை அலங்கரித்து கொண்டு இருந்தது. தசரதன் வெண்கொற்றக் குடையை விரித்து, மங்கல வாத்தியங்கள் முழங்க, சுற்றிலும் ஏனைய அரசர்கள் புடைசூழ சம்மந்தியாக திருமண மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். இராமர் மங்கல நீராடி, காதணிகள், வீரப்பட்டம், திலகம், முத்தாரம், பட்டாடை உடுத்தி மேலும் பல ஆபரணங்களை அணிந்து அலங்காரமாய் தேரில் ஏறி திருமண மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்.

�� மண்டபத்தில் ஹோமம் தொடங்கி வசிஷ்டர் முன்னிலையில் சடங்குகள் தொடங்கின. முனிவர்கள் வேதமந்திரங்களை சொல்ல, ஜனகன் சீதையின் கையைப் பிடித்து இராமனின் கையில் கொடுத்து கன்னிகாதானம் செய்து வைத்தான். அந்தணர்களும், தேவர்களும் ஆசி வழங்கினர். மன்னர்கள் வாழ்த்து சொல்ல, மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரமும் செய்தனர். இராமரும் சீதையும் அக்னியை வலம் வந்து வணங்கினர். திருமண சம்பிரதாயாப்படி அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, இராமன் சீதையின் கழுத்தில் மங்கல நாண் கட்டினார். அதே மண்டபத்தில் இலட்சுமணன் ஊர்மிளைக்கும், பரதன் மாண்டவிக்கும், சத்ருக்குனன் ஸ்ருதகீர்த்திக்கும் திருமணம் நடைபெற்றது.

�� திருமணம் முடிந்த பின் தசரதன் மிதிலையில் சில நாட்கள் தங்கினார். விஸ்வாமித்திர முனிவர் இராமனுக்கு வேதங்களில் சில ராஜ நீதிகளை கற்று கொடுத்தார். பிறகு விசுவாமித்திர முனிவர் தவம் செய்வதற்காக இமய மலைக்குச் சென்று விடுகிறார்.

�� ஜனகர் இராமனிடம், உன் மனைவியான என் மகள் சீதை, நீ செல்லும் தரும நெறியில் உன்னுடன் துணையாக இருப்பாள். உன் நிழல் போலவே எப்போதும் உன்னுடன் இருப்பாள் என்று கூறி சீதையை இராமனிடன் ஒப்படைத்து விடுகிறார். பின்னர் தசரதர் தமது சுற்றமும் பரிவாரங்களும் சூழ, ஜனகரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். ஜனகர், **4** பெண்களுக்கும் சீதனந்தந்து, அறிவுரை கூறி வழியனுப்பினார். இராமர் சீதையுடன் தனித் தேரில் புறப்பட்டார்.

�� தசரதன் மற்றும் குமாரர்கள் போகும் வழியில் சில தீய சகுணங்கள் ஏற்பட்டன. மயில்கள் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகச் சென்றன. இது நல்ல சகுணம் ஆகும். காகங்கள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகச் சென்றன. இது தீய சகுனம் ஆகும். இந்த சகுனத்தால் தசரதன் தயங்கி நின்றான். தசரதன் ஜோதிடரை அழைத்து இந்த நிமித்தங்களின் பலன்கள் என்னவென்று கேட்டான். ஜோதிடர் ஆராய்ந்து, முதலில் இடையூறு வரும், பின்பு அந்த இடையூறு நீங்கி நன்மைகள் உண்டாகும் என்று கூறினான். அவர்கள் சிறிது தூரம் சென்றதும், எதிரே பூமி அதிரும்படியாக கையில் கோடாரி ஏந்திய ஒருவன் அவர்கள் முன் தோன்றினான். அவன் பெயர் பரசுராமன். இவனது வரலாறு வருமாறு.

�� ஜமதக்னி, ரேணுகாதேவி இருவருக்கும் பிறந்த புத்திரர்களுள் ஒருவர் தான் பரசுராமன். பரசுராமன் மகாவிஷ்ணுவின் அவதாரம் ஆவார். பரசுராமர் மிக பலம் மிக்கவர். சூரிய வம்சத்தில் பிறந்த கேகய நாட்டு மன்னன் திருதவீரியனின் மகன் கார்த்தவீரியார்ச்சுனன். இவனுக்குப் பிறவியிலேயே கால்கள் இல்லை. இவன் தன் பன்னிரண்டு வயதுக்குமேல், ஞான உபதேசம் பெற்று பலசாலியாக நாட்டை ஆண்டு வந்தார்.

�� ஒரு நாள் கார்த்தவீரியார்ச்சுனன் காட்டுக்கு வேட்டையாட சென்றபோது, அவனும் அவனது படையினரும் கடும் பசியால் அவதியுற்றனர். அப்போது, ஜமதக்னி முனிவர், தன்னிடமிருந்த காமதேனு என்னும் தேவ பசுவின் உதவியால் அவர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவளித்தார். மன்னர் கார்த்தவீரியார்ச்சுனன், முனிவரிடம் காட்டில் வாழும் உமக்கு காமதேனு தேவையில்லை. ஆகவே, அதை எனக்கு கொடுங்கள் என்று கேட்டான். முனிவர் தர மறுத்து விட்டார். ஆனால் மன்னர் அந்த தேவ பசுவைப் வலுகட்டாயமாக தன் நாட்டுக்குப் பிடித்து சென்றார். அதையறிந்து கோபம் கொண்ட ஜமதக்னியின் மகன் பரசுராமன், அந்நாட்டுக்கு சென்று மன்னனின் தலையை வெட்டி வீழ்த்திவிட்டு காமதேனுவை மீட்டு கொண்டு வந்தார்.

�� இதையறிந்த ஜமதக்னி முனிவர், அரசனைக் கொன்றது ஒரு பிராமணனைக் கொன்றதைவிட பெரும்பாவச் செயலாகும். அப்பாவம் தீர நீ யாத்திரை செய்து வருவாயாக என்று கூறி யாத்திரைக்கு அனுப்பி

வைத்தார். பரசுராமரும் யாத்திரை சென்று வந்தார். ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகா தேவி ஒருமுறை ஹோம காலத்துக்குள் தண்ணீர் கொண்டுவர தாமதமாகி விட்டதால், கோபம் கொண்ட முனிவர், அவளைக் கொன்று விட்டு வா என்று மகனிடம் ஆணையிட்டதால், பரசுராமன் கோடாரியால் தாயை வெட்டி வீழ்த்தினான். ஜமதக்னி முனிவர், பரசுராமரிடம், மகனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், என்று கேட்டார். பரசுராமர் என் தாயாரும், சகோதரர்களும் பிழைத்து எழ வேண்டும் என்று கேட்டு கொண்டார். முனிவரும் அவ்வாறே அருள் செய்தார். தாயும், சகோதரர்களும் உயிர் பெற்று எழுந்தார்கள்.

�� பரசுராமர் தனக்கும் தன் தந்தை போன்ற சக்தி கிடைக்க தவம் செய்யக் காட்டுக்கு சென்றார். அச்சமயத்தில் கார்த்தவீரியார்ச்சுனனின் புதல்வர்கள் பரசுராமனைப் பழிவாங்க நினைத்து, பரசுராமனின் தந்தை தனியாக இருந்த நேரம் பார்த்து தலையை வெட்டி விட்டனர். அதைப் பார்த்த ரேணுகாதேவி கத்தினாள். தன் தாயின் அழுகையொலி கேட்ட பரசுராமன், வீட்டிற்கு திரும்பிச் சென்றார். அங்கே தன் தந்தையின் தலை வெட்டப்பட்டிருப்பதை பார்த்த பரசுராமர் கடும் கோபம் கொண்டு, கோடாரியை ஏந்திக்கொண்டு, கார்த்தவீரியார்ச்சுனனின் புதல்வர்களை வெட்டி வீழ்த்தினான். அதோடு தன் கோபம் தீராமல், இருபத்தொரு தலைமுறைகள் சத்ரியர் வம்சம் தழைக்காமல் இருக்க அவர்களை நாசம் செய்வேன் என்று சபதம் ஏற்று கொண்டார்.

�� பிறகு தந்தையின் தலை மற்றும் உடலையும் ஒன்று சேர்த்து கடைசி கடமைகளை செய்து முடித்தான். ஜமதக்னி முனிவர் சப்தரிஷி மண்டலத்தில் நட்சத்திரமாகப் பிரகாசித்தார். பரசுராமன் தான் செய்து கொண்ட சபதத்தின்படி, இருபத்தொரு முறை உலகை வலம் வந்து சத்ரியர்களை வதம் செய்து வந்தார்.

இராமரிடம் பரசுராமர் தோல்வியடைதல்

�� பரசுராமரை எதிரே பார்த்ததும் தசரதன் கலங்கிப் போனான். சத்திரியர்களை வேரோடு அழிக்கும் இந்த பரசுராமன், தனது குமாரன் இராமனை ஏதாவது செய்துவிடுவானோ என்ற பயம் தசரதனுக்கு வந்தது. எதிரே வரும் பரசுராமரை யாரோ என்று எண்ணி இராமனும், பரசுராமனைப் பணிந்து வணங்கினார். பரசுராமனோ கோபம் தணியாமல், 'இராமா! பழுதுபோன சிவதனுசை ஒடுத்ததால், நீ வீரனாகிவிட முடியாது. நீ வீரன் என்றால் வந்து என்னுடன் போரிடு' என்றான். அதற்கு தசரதன், பரசுராமா! உனக்கு சாதாரண மானுடர்களாகிய நாங்கள் சமமா?. உன் வீரத்தை பற்றி அனைவருக்கும் தெரியும் தானே. இராமனோ இளம் பாலகன். இராமன் அறிந்தும் அறியாமையாலும் ஏதாவது பிழை செய்திருந்தால் கோபத்தை தணித்து பொருத்தருளுவாய் என்றான். இவ்வாறு தசரதன் பலவாறாக கெஞ்சி அழுது முயற்சித்தான்.

�� அதற்கு அசட்டை செய்யாமல் பரசுராமன், இராமன் முறித்த சிவதனுசு பழுதுபட்டது என்றும், இராமனால் முடிந்தால் என் கையிலிருக்கும் விஷ்ணு தனுசை முறித்து இராமன் வீரன் என்று நிரூபித்துக் காட்டட்டும் என்றான். இராமர், பரசுராமர் கையிலிருந்த விஷ்ணுதனுசை வாங்கி அதை வளைத்து, நாண் பூட்டினார். அம்பை குறிபார்த்து, 'பரசுராமரே! நீர் ஜமதக்னியின் புதல்வன். தவம் மேற்கொண்டவன். உம்மைக் கொல்லல் தகாது. ஆனால் நான் இந்த அம்பை வில்லில் பூட்டி விட்டால் அதற்கு ஓர் இலக்கு வேண்டும் அல்லவா? இப்போதே சொல் என் அம்புக்கு எது இலக்கு?' என்றான் இராமன். பரசுராமர் திகைத்தார். இராமா! நீ யார் என்பதை நான் புரிந்து கொண்டேன். இராம பாணத்திற்கு இலக்காவது யார்? இராமா! உன் அம்புக்கு என் தவத்தின் வலிமையை தருகிறேன் என்று சொல்லி வில்லை தளர்த்தினான். பின்னர் பரசுராமன் இராமனை வாழ்த்தி வணங்கி விடைபெற்றுச் சென்றான். பரசுராமரை மீண்டும் தவம் செய்ய செல்லுமாறு இராமர் கூறினார். இராமருக்கு சக்தி வாய்ந்த கோதண்டம் கிடைத்தது. இராமரை தொழுது விடை பெற்று சென்றார், பரசுராமர்.

�� மயங்கி வீழ்ந்த தசரதனை இராமர் தேற்றி எழுப்பினான். பரசுராமனால் இராமனுக்கு எந்த துன்பமும் ஏற்படவில்லை என்பதை அறிந்தும், பரசுராமன் இராமனால் தோல்வியடைந்ததை அறிந்து தசரதன் மகிழ்ச்சி அடைந்தார். பின்னர் அனைவரும் அயோத்தி நகர் சென்றடைந்தனர். அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

�� கைகேயின் சகோதரர் யுதாசித்து வந்து, தம் தகப்பனார், தன் பேரன்களை பார்க்க விரும்பியதால் அவர்களை அழைத்துவர சொன்னதாக கூறினான். கைகேயி சகோதரரின் அழைப்பின் பேரில் பரதனையும் சத்ருக்னனையும் கேகய நாட்டுக்கு அனுப்பி வைத்தார், தசரதன். தசரத சக்ரவர்த்தி நாட்டை அமைதி பூங்காவாகவும், அறநெறியுடன் ஆட்சி புரிந்து வந்தார். மக்களும் எவ்வித பிரச்சனை இன்றி, மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். இராமர் அதிகாலையில் எழுந்து நீராடி தன் நித்திய வழிபாடுகளை முடித்து தாய் தந்தையர் மற்றும் தன் குருவாகிய வசிஷ்டரை வணங்குவார். சீதைக்கும் வேதங்களை உபதேசிப்பார். ஏழை எளிய மக்களுக்கு உதவி புரிந்து வந்தார். மக்கள் மனதில் இராமர் நீங்காத இடத்தை பிடித்தார். இராமரும் அயோத்தியில் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.

�� ஒருநாள் காலை தசரதர் நீராடிவிட்டு கண்ணாடி முன் நின்று தலைமயிரை ஒழுங்கு படுத்தி கொண்டிருந்தபோது காதில் அருகில் நரைமுடியைக் கண்டார். அதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த தசரதர், உனக்கு முதுமை வருகின்றது. முதுமை வந்தால் மரணம் வரும். மரணம் வருமுன் இறைவனுடைய சரணத்தை அடையவேண்டும். இத்தனைக் காலம் மக்களுக்கு உழைத்தாய். இனி, உன் உயிருக்கு உழைப்பாய் என்று நரைமுடி எச்சரிக்கை போல் இருந்தது. மரணத்திற்கு முன் கானகம், முக்தியை அடைய வேண்டும் என்று விரும்பினார். இராமருக்கு விரைவில் முடிசூட்டி விட்டு சீக்கிரம் துறவறம் மேற்கொள்ள விரும்பினார்.

அயோத்திய காண்டம்



https://telegram.me/aedahamlibrary

பட்டாபிஷேக ஏற்பாடுகள்

�� அயோத்தியை ஆளும் பொறுப்பை தம் மைந்தனிடம் ஒப்படைத்துவிட்டு தான் கானகம் சென்று முக்தி பெற பெரிதும் விரும்பினார், தசரதர். இதனால் இராமனின் முடிசூட்டும் விழாவை ஆடம்பரமாக கொண்டாட தசரதர் விரும்பவில்லை. இராமனுடைய பட்டாபிஷேக விழாவுக்கு சீதையின் தந்தை ஜனகர் வர வேண்டும், கேகய நாட்டுக்கு சென்றிருக்கும் பரதன், சத்ருக்கன் வர வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றவில்லை. சீக்கிரம் இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவர் மனதில் இருந்தது. உடனே வசிஷ்ட முனிவரை அழைத்து இராமனின் பட்டாபிஷேகத்துக்காக ஆலோசனை செய்தார். பிறகு சபையோர் அனைவரிடமும், எனக்கு வயது முதிர்ந்து விட்டதால் நான் நாட்டை ஆளும் பொறுப்பில் இருந்து விலகி இராமனுக்கு முடிசூட்ட இருப்பதாக, தம் கருத்தை கூறினார். வசிஷ்டர் தசதர மன்னரிடம், இராமனோ தங்களினும் மேல் சிறந்தவன். இராமனுக்கு முடி சூட்டுவதால் நாடும், நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள் என்று கூறினார். சபையில் உள்ள அனைவரும் தசரத சக்ரவர்த்தியின் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

�� தசரதரின் கட்டளைப்படி சுமந்திரர் இராமனின் மாளிக்கைக்குச் சென்று இராமனை அரசவைக்கு அழைத்துக் கொண்டு வந்தார். இராமர் வசிஷ்ட முனிவரையும், தன் தந்தையையும் வணங்கினார். வணங்கிய தன் மகன் இராமனை தசரதர் கட்டி தழுவி மகிழ்ந்தார். தசரதர், என் தவச் செல்வமே! அயோத்தியை ஆளும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். மரபின் படி மூத்த மகன் தான் முடிசூட்டிக் கொள்ள வேண்டும். ஆதலால் நாளை உனக்கு முடிசூட்டு விழா. அதன் பிறகு நான் கானகம் செல்ல இருக்கிறேன் என்று கூறினார். ஆதலால் இன்று நீ அரச தரும நெறிகளை உன் குருவாகிய வசிஷ்டரிடன் கற்றுக் கொள் என்றார். தசதரர் சுமிந்தரிடன், நாளை பட்டாபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகள் எந்த குறையும் இன்றி செய்ய வேண்டும் என்றார். மன்ன பெருமான்களே! நீங்கள் அனைவரும் இருந்து இராமனுக்கு முடிசூட்டி விழாவை நடத்தி வைக்க வேண்டும் என்றார் தசரதர். அத்துடன் அரசவை கலைந்தது.

�� தசரதர் கௌசலையின் மாளிகைக்குச் சென்று கௌசலையிடன், நாளை இராமனுடைய பட்டாபிஷேகம் இனிதே நடைபெற உள்ளது என்று கூறினார். இதை கேட்ட கௌசலையும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் கௌசலையோ நாளை முடிசூட்டு விழா பின் மன்னர் கானகம் செல்வதை எண்ணி வருந்தினாள். இருந்தாலும் அவள் நம் கையில் என்ன

உள்ளது. எல்லாமே கடவுளின் கையில் தான் உள்ளது என்று நினைத்து கொண்டு பட்டாபிஷேகம் இனிதே நடைபெற கடவுளிடம் பிரார்த்தனை செய்ய சென்றாள். தசரதரின் கட்டளைப்படி, இராமனின் முடிசூட்டி விழா நாட்டு மக்களுக்கு முரசறைந்து அறிவிக்கப்பட்டது. இதை அறிந்த மக்கள் அனைவரும் இன்பக்கடலில் மூழ்கினர். அயோத்தி மாநகரமே விழாக்கோலம் போல் விளங்கியது.

�� இராமர் அரசு அறநெறிகளை கற்க வசிஷ்டரிடம் சென்று வணங்கினார். வசிஷ்டர் இராமருக்கு ஆசி கூறி, இராமா நாளை உனக்கு முடிசூட்டும் விழா. ஆதலால் நான் கூறும் அறிவுரைகளை கேட்டுக்கொள். மிக்க சிந்தனையுடைய அந்தணர்கள் மிகவும் சிறந்தவர்கள். அவர்களிடன் நீ ஆசியை பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் அமைச்சர்களின் அறிவுரையை மதித்து நடக்க வேண்டும். எல்லோரிடமும் அன்பாகவும், இனிமையாகவும் பழக வேண்டும். சிந்தித்து செயல்பட வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். மக்களின் துயரங்களை நீக்க வேண்டும். மக்களை நிழல் போல் காத்து ஆட்சி புரிய வேண்டும். நீதி நெறி தவறாமல் ஆட்சி புரிய வேண்டும் என்று உபதேசித்தார். தசரத சக்ரவர்த்தி தன் மைந்தனின் முடிசூட்டு விழாவிற்கு சகல ஏற்பாடுகளும் செய்தார்.

கூனியின் சூழ்ச்சி

�� மந்தரையின் வடிவில் விதி விளையாட தொடங்கியது. மந்தரை கேகய நாட்டு மன்னருடைய அரண்மனையில் பணிபுரிந்தவள். மந்தரை கைகேயியை வளர்த்தவள். கைகேயி மீது அதிக அன்பு கொண்டவள். கைகேயியுடன் திருமணம் முடிந்து அயோத்திக்கு வந்தாள். இவளுக்கு கூனி என்று மற்றொரு பெயரும் உண்டு. சிறு வயதில் இராமர் விளையாட்டாக கூனியின் முதுகில் உள்ள கூனை நிமிர்த்த மண் உருண்டைகளை எய்தினார். ஆனால் அவளோ கீழே விழுந்துவிட்டாள். அங்குள்ள பெண்கள் அவளை கைதட்டி சிரித்தார்கள். இதனால் கோபம் கொண்ட கூனி இராமர் மீது கோபம் கொண்டாள். இந்த சிறிய சம்பவத்தை நினைவில் கொண்டு என்றாவது இராமனுக்கு தீங்கு செய்ய வேண்டும் என்று நினைத்து கொண்டிருந்தாள்.

�� கைகேயியை தூங்குவதற்காக பஞ்சணையை தயார் செய்து அவளை தூங்க வைத்து விட்டு கீழே சென்றாள் கூனி. அங்கு இருந்த பெண்களிடம், நகரமே விழாக் கோலம் போல் அழகாய் அலங்கரிக்கப்பட்டுள்ளது, இன்று என்ன விழா? என்று கேட்டாள். நாளை இராமனுடைய பட்டாபிஷேக விழா என்று கூறினார்கள். இதைக்கேட்ட கூனிக்கு மிகுந்த கோபம் வந்தது. இராமனுக்கு பட்டாபிஷேகமா? இதனை ஒருபோதும் நான் நடக்க விட மாட்டேன். நான் இதை தடுத்து நிறுத்துவேன் என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

�� உடனே தூங்கி கொண்டிருக்கும் கைகேயிடம், கைகேயி உனக்கு தீங்கு வந்துவிட்டது. இந்த நேரத்தில் இப்படி அயர்ந்து தூங்குகிறாய் என்று கைகேயியை எழுப்பினாள். நாளை பட்டாபிஷேகம் நடைபெறும் இராமனால் உனக்கு தீங்கு வரவிருக்கிறது என்றாள். கூனி. இராமனால் ஒருபோதும் எனக்கு தீங்கு வராது. நீ ஏன் உளறுகின்றாய்? என்றாள் கைகேயி. கைகேயி நீ இன்னும் சிறு பெண்ணாகவே இருக்கிறாய். உன் மகன் பரதனை உன் தந்தை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு தன் கணவனுக்கு மந்திரம் ஓதி உன் மகன் இல்லாத நேரத்தில் இராமனுக்கு பட்டாபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். நீ ஒன்றும் தெரியாமல் உறங்கிக் கொண்டு இருக்கிறாய் என்றாள் கூனி.

�� இதை கேட்டதும் கைகேயி அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். அவளது முகம் பிரகாசமானது. அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவள் அடைந்த ஆனந்தத்தில் தன் கழுத்தில் போட்டு இருந்த

இரத்தின மணிமாலையை கூனியின் கழுத்தில் பரிசாக போட்டாள். கைகேயிக்கு இராமன் மீது அளவுக்கடந்த அன்பு இருந்தது. கோபத்தில் கூனி தன் கழுத்தில் போட்ட இரத்தின மாலையை தூக்கி எறிந்தாள். கைகேயி நீ உன் மதியை இழந்து விட்டாயா என்ன? என்று கேட்டாள், கூனி.

�� கைகேயி, மதிநுட்பத்தால் கௌசலை தன் மகன் இராமனுக்கு நாளை முடிசூட போகிறாள். சீதையும் இராமனும் சிம்மாசனத்தில் அமர போகின்றார்கள். ஆனால் உன் மகன் அவர்களுக்கு கை கட்டி வாய் மூடி பணிவிடை செய்ய வேண்டும். இந்நாட்டை ஆள போகும் இளவரசரின் அம்மாவாகிய கௌசலைக்கு நீ பணிவிடை செய்ய வேண்டும். இப்படி ஒரு நிலை உனக்கு வந்து விட்டதே கைகேயி. நீயோ இதை எல்லாம் அறியாமல் முட்டாள்த்தனமாக எனக்கு நவரத்தின மாலையை பரிசாக தருகின்றாய்.

�� கைகேயி, உன்னிடம் வறுமை என்று வருபவர்களுக்கு அள்ளி அள்ளி கொடுப்பாயே. இராமன் அரசனாக வந்தால் நீ எப்படி தான தர்மம் செய்வாய் மகளே!. தானம் கேட்டு வருபவர்களுக்கு இல்லை என்று எப்படி உன்னால் சொல்ல முடியும். இதையெல்லாம் நினைத்து பார்த்தாயா நீ. இதையெல்லாம் கேட்ட கைகேயி புன்னகைத்தாள். கூனி, நீ ஒன்றும் புரியாமல் பேசுகிறாய். இராமனோ என் அன்புக்கினிய புதல்வன் ஆவான். ஆதித்தன் குலத்தில் முடிசூடும் உரிமை மூத்த மகனுக்கே உண்டு. இதை அறியாமல் நீ பேசுகிறாய். இத்தகைய காலங்காலமாய் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபை அழிக்கலாமா?. இராமன் சீதை கல்யாணம் முடிந்து அயோத்திக்கு வரும் வழியில் சினம் கொண்டு எதிர்த்த பரசுராமனை யார் வென்றார். இராமன் தானே வென்றான். அது மட்டுமில்லாமல் கல்யாணமண்டபத்தில் சீதைக்கு மங்கல நாண் கட்டியவுடன் அச்சபையில் இராமன் எனக்கு தானே முதல் மரியாதை செய்தான்.

கைகேயின் இரண்டு வரங்கள்!

�� இராமன் ஆட்சிக்கு வந்தால் ஒரு போதும் எனக்கு துயரம் வராது. கூனி! இனிமேல் நீ இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம். இதற்குமேல் நீ பேசினால் உனக்கு தண்டனை தான் கிடைக்கும் என்றாள், கைகேயி. கைகேயி! நான் என்ன சொல்ல வருகிறேன் என்பது கூட உனக்கு புரியவில்லை. எத்தகைய மனிதனும் பதவியில் அமர்ந்தவுடன் மாறிவிடுவான். அதேபோல் இராமனும் மாறிவிடுவான். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக கூனி கைகேயி மனதை மாற்ற ஆரம்பித்தாள். இராமன் அரசன் ஆனால் ஏற்படும் தீமைகளை கூறி கைகேயி-ன் மனதை தன் பக்கம் இழுத்துக் கொண்டாள். பட்டாபிஷேகம் நிறுத்த, தான் என்ன செய்ய வேண்டும் என்று கூனியிடம் கேட்டாள், கைகேயி.

�� சம்பாசூரனுடன் ஏற்பட்ட யுத்தத்தின் போது தசரதர் உனக்கு இரண்டு வரங்களை அளித்தார். ஆனால் அன்று தசரதர் கொடுத்த வரங்களை நீ ஏற்று கொள்ளவில்லை. அந்த இரண்டு வரத்தை இன்று தசரதனிடம் கேட்கும் படி சொன்னாள், கூனி. முதல் வரத்தை, அயோத்திக்கு பரதன் மன்னனாக வேண்டும் என்றும் மற்றொரு வரத்தை, இராமன் பதினான்கு வருடம் வனவாசம் செல்ல வேண்டும் என்றும் கேட்க சொன்னாள். கைகேயியும் அதை ஏற்றுக் கொண்டாள்.

�� தசரதன் தன் மாளிகைக்கு வந்தால் அந்த வரத்தை கேட்பதற்காக கைகேயி காத்திருந்தாள். தசரதன் கௌசலை, சுமித்திரைக்கு இராமனின் பட்டாபிஷேக விழாவை சொல்லிவிட்டு கடைசியாக கைகேயின் மாளிகைக்கு சென்றான். தசரதருக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது என்பது தெரியாது. கைகேயி தன் அறையில் தலையை விரித்துக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டு இருந்தாள். உடனே, தசரதர் அருகில் சென்று அன்புடன் அவளது கண்ணீரை துடைத்து விட்டார். என் அன்புக்குரிய கைகேயி! நீ எதற்காக அழுகிறாய்? நீ அழுவதற்கான காரணம் என்ன? என்று கேட்டார்.

�� கைகேயி, தாங்கள் முன்பு சம்பாசூரனுடன் ஏற்பட்ட யுத்தத்தின் போது எனக்கு இரண்டு வரங்களை அளித்தீர்கள் அல்லவா? அதை நான் இப்போது கேட்கிறேன் என்றாள். தசரதர் இதற்காக தான் இந்த ஆர்ப்பாட்டமா? வறியவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்குகின்ற நான் என் உயிரினும் மேலான உனக்கு இல்லை என்று சொல்வேனா? நீ தாராளமாக அந்த வரத்தை கேட்கலாம் என்றார்.

https://telegram.me/aedahamlibrary

�� கைகேயி, தசரதரிடம் கேட்ட முதல் வரம், என் மகன் பரதன் அரியணையில் அமர்ந்து அயோத்தியை ஆள வேண்டும். இரண்டாவது வரம், இராமன் பதினான்கு ஆண்டு வனவாசம் செல்ல வேண்டும் என கேட்டாள். இவ்வரத்தை கேட்டவுடன் தசரதருக்கு தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. ஒரு நிமிடம் தான் காண்பது கனவு என்று நினைத்து விட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார். தசரதரின் கண்ணில் கண்ணீர் ஆறு போல் பெருகி வழிந்தது.

�� தசரதர், கைகேயிடன் மண்டியிட்டு, என்னை பார்த்து அனைவரும் பணிகின்றனர். நான் உன்னிடன் பணிந்து கேட்கிறேன். உன் மனதை மாற்றியவர்கள் யார்? நீ கேட்கும் வரத்தின் படி நான் பரதனை அரசனாக்கினாலும் பரதன் அதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டான். நாளை இராமனுக்கு நான் முடிசூட்டிவேன். பிறகு இராமன் வந்து என்னை வணங்குவான். அப்போது நான் இராமனிடம் உன் அரச பதவியை நீ பரதனுக்கு தர வேண்டும் என கேட்பேன். என் சொல்லை மீறாமல் இராமனும் பரதனுக்கு முடிசூட்டுவான். தயவு செய்து நீ பிடிவாதம் செய்யாதே, என்றார்.

கைகேயி இராமனிடம் சொல்லும் கட்டளை

�� கைகேயி, மன்னரே, தாங்கள் இந்த வரத்தை அருளவில்லையென்றால் நான் இப்பொழுதே உயிர் துறப்பேன் என்றாள். தசரதன் இதை கேட்டு மிகவும் வேதனைப்பட்டார். நான் செல்ல இருக்கும் கானகத்துக்கு இராமன் செல்வதா? இராமன் அயோத்தியில் இருந்தால் உனக்கும் பரதனுக்கும் தீங்கு செய்வான் என நீ நினைக்கின்றாயா ? பரதன் நாடாளும் வரத்தை தருகிறேன். அறுபதினாயிரம் ஆண்டு தவம் இருந்து பெற்ற மகனாகிய இராமனை கானகம் செல்ல சொல்வதா ? இதை நினைத்தால் என் இதய துடிப்பே நின்று விடும் போல் இருக்கிறதே! என்று புலம்பினார்.

�� கைகேயி, தாங்கள் இந்த வரத்தை மறுக்க கூடாது என்று பிடிவாதமாக கூறிவிட்டாள். தசரதர் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கைகேயி இரண்டு வரங்களை பெற பிடிவாதமாய் நின்றாள். அன்றைய இரவு கழித்து பொழுது விடிந்தது. அயோத்தி மக்கள் மகிழ்ச்சியுடன் இராமனின் பட்டாபிஷேகத்தை பார்க்க மண்டபத்தில் கூடினார்கள். வசிஷ்டரும் முனிவர்களும் புடைசூழ மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சுமந்திரரே! பட்டாபிஷேகத்துக்கு நேரம் ஆகி கொண்டு இருக்கிறது நீங்கள் போய் சக்ரவர்த்தியை அழைத்து வரும்படி கூறினார், வசிஷ்டர். சுமந்திரர், மன்னர் கைகேயின் மாளிகையில் தான் இருப்பார் என்று நினைத்துக் கொண்டு சுமந்திரர் கைகேயின் மாளிகைக்கு சென்றார்.

�� அங்கு சென்றதும் கைகேயி சுமந்திரரிடம், அமைச்சரே தாங்கள் சென்று இங்கு இராமனை அழைத்து வருமாறு கூறினாள். சுமந்திரர், மகுடம் சூட்டி கொள்ள இருக்கும் இராமனை வாழ்த்தி வழியனுப்ப அழைத்து வரச் செல்கிறார் என்று நினைத்து கொண்டு இராமரிடம் தங்களை கைகேயி தாயார் அழைக்கிறார் என்று கூறினார். உடனே இராமர், சீதையிடம் , மகுடம் சூட்டி கொள்ள நேரம் ஆகி விட்டது. என்னை என் அன்னை அழைக்கிறார். நான் சென்றுவிட்டு வருகிறேன். நீ ஆயத்தமாக இரு என்று சொல்லி விட்டு தேரில் ஏறிச் செல்கிறார். இராமனை பெற்றது வேண்டுமானால் கௌசலை தான், ஆனால் இராமனை வளர்த்தது கைகேயி தான். இராமன் தேரில் கைகேயி மாளிகைக்கு சென்றதை பார்த்த அயோத்தி மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

�� தன் பாசம் மிகுந்த மகனான இராமனை வாழ்த்தி அனுப்ப தான் கைகேயி அழைத்து இருக்கிறாள் என்று கூடியிருந்த மக்கள் பேசிக்

கொண்டனர். இராமர் கைகேயின் மாளிகைக்கு போய்ச் சேர்ந்தார். கைகேயி முன் மண்டபத்தில் அமர்ந்து இருந்தாள். இராமர் கைகேயிடன் சென்று வணங்கி ஆசி பெற்றார். இராமா! உன் தந்தை தற்போது ஒரு புதிய கட்டளையிட்டிருக்கிறார். அக்கட்டளையை நான் உனக்கு சொல்லாமா? எனக் கேட்டாள், கைகேயி. இராமர், அம்மா! தந்தையின் கட்டளை தாய் மூலம் அமைந்தால் அதைவிட மகிழ்ச்சி வேறு ஒன்றுமில்லை. கட்டளை இடுங்கள் அன்னையே! உங்கள் கட்டளைப்படி நான் நடப்பேன் என்றார்.

�� கைகேயி, இராமா! அயோத்தியை உன் தம்பியான பரதன் ஆட்சி செய்ய வேண்டும். நீ பதினான்கு ஆண்டு வனவாசம் செல்ல வேண்டும். இது மன்னருடைய ஆணை என்றாள். இதனைக் கேட்ட இராமர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். இராமனின் முகம் பூக்களை போல் மலர்ந்தது.

இராமர் வனவாசம் செல்ல விடைபெறுதல்



�� அம்மா! தங்கள் கட்டளையே நான் மறுப்பேனா? என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வம் அல்லவா? தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை. தங்களால் எனக்கு இந்த அரிய வாய்ப்பு கிடைத்து உள்ளது. ஆதலால் நான் இன்றே வனவாசம் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து விடைப்பெற்று சென்றார்.

�� இராமன் தன்னை பெற்ற கௌசலையின் மாளிக்கைக்கு சென்றார். அங்கு தன் தாயின் காலடியில் பணிந்து விழுந்து வணங்கினார். கௌசலை, மகனே! 'நீடுடி வாழ்க' என்று வாழ்த்தினாள். இராமா உனக்கு பட்டாபிஷேகம் செய்ய நேரம் ஆகிவிட்டது அல்லவா? ஏன் இன்னும் தாமதிக்கிறார்கள். பரதன் வர வேண்டும், ஜனகர் வர வேண்டும் என்று தாமதிக்கிறார்களா? என்று கேட்டாள். இராமர், அம்மா! இந்த நாட்டை பரதன் ஆட்சி புரிய வேண்டும் என்று தந்தை கட்டளையிட்டுருக்கின்றார் என்றார். இதை கேட்ட கௌசலை மகிழ்ச்சி அடைந்தாள். ராஜ குலத்தில் மூத்தவனுக்கு தானே முடிசூட்ட வேண்டும். மூத்தவன் நீ இருக்க இளையவனுக்கு முடி சூட்டுவது முறையற்றது. இருந்தாலும் பரதன் உன்னை விட சிறந்தவன். பரதன் ஆட்சி புரிந்தால் நாட்டுக்கு நலம் தான். நீ

நாட்டின் நலனுக்காக பாடுபடலாம் என்றாள். அம்மா! தந்தையின் கட்டளை இன்னொன்றும் உள்ளது. தங்கள் மகனாகிய நான் பதினான்கு ஆண்டு வனவாசம் செல்ல வேண்டும். இது தந்தையின் கட்டளை ஆகும். ஆதலால் நான் வனவாசம் செல்கிறேன் என்றார்.

�� இதைக் கேட்ட கௌசலை, மகனே! என்று நிலை தடுமாறி கீழே விழுந்தாள். அவள் வேதனையால் துடிதுடித்து போனாள். தான் போக இருந்த கானகத்திருக்கு உன்னை செல்லச் சொல்லி உன் தந்தை கட்டளையிட்டாரா? நீ செல்கின்ற கானகத்துக்கு உன்னுடன் நானும் வருவேன் என்று கூறி புலம்பி அழுதாள். அம்மா! தந்தையின் சொல் எனக்கு வேத மந்திரம் ஆகும். நான் கானகம் செல்லவில்லை என்றால் தந்தையின் வாய்மை பொய் ஆகிவிடும். தாங்கள் தந்தைக்கு உதவியாக இங்கேயே இருக்க வேண்டும் என்றார். தாயே நான் கானகம் செல்ல தாங்கள் மனமார ஆசி கூறி விடை கொடுங்கள் என்றார். என் ஆருயிர் மகனே! ஒரு தாய் மகனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய முடியவில்லை என்று நான் துன்பப்படுகிறேன். உனக்கு நான் தருமம் என்னும் அமுதை தருகிறேன். மகனே! நீ அறநெறியில் வழுவாமல் இருக்க வேண்டும் இராமா. அங்கு உனக்கு விலங்களும், பறவைகளும் உதவி செய்யும். நீ செல்ல இருக்கும் கானகத்தில் மரங்களும், பழுத்த பழங்களும் உனக்கு உதவும். நீ செல்லுகின்ற கானகம் வெப்பம் தணிந்து குளிர்ந்து உனக்கு நலம் புரிய வேண்டும் என்று ஆசி கூறினாள்.

�� இராமர் சுமித்திரையின் மாளிகைக்கு சென்றார். இராமன் கானகம் போகாவண்ணம் தடுத்து நிறுத்த தசரதரிடன் அனுமதி கேட்கலாம் என்று எண்ணி கைகேயின் மாளிகைக்குச் சென்றாள். அங்கு மன்னர் இருக்கும் நிலையை கண்டு நீங்கா துயரில் மூழ்கினாள். மன்னவரின் பாதங்களை பற்றி வாய்விட்டு புலம்பி அழுதாள். அக்குரலை கேட்ட வசிஷ்டர் கைகேயின் மாளிக்கைக்கு சென்றார். அங்கு மன்னரின் நிலையை கண்டு இங்கு என்ன நடந்தது என்று கைகேயிடம் கேட்டார்.

�� வசிஷ்டரிடம் கைகேயி மன்னர் தனக்கு இரண்டு வரங்கள் அளித்ததையும், அவ்விரண்டு வரங்களையும் மன்னர் நிறைவேற்றியதை பற்றியும் கூறினாள். அவ்விரண்டு வரங்கள் என்னென்ன என்பதை பற்றியும் கூறினாள். வரத்தை கொடுத்துவிட்டு இப்போது துன்பப்படுகிறார். அம்மா! தசரத சக்கரவர்த்தி வரம் கொடுத்தது கொடுத்தது தான். ஆனால் தங்களின் குலகுருவாகிய நான் தங்களிடன் ஒரு வரத்தை கேட்கிறேன். பரதன் முடி சூட்டி கொண்டு ஆட்சிபுரிய

வேண்டும். இராமன் வனவாசம் போகாமல் அயோத்தியில் ஒரு தவச்சாலையில் இருக்க வேண்டும். இந்த வரத்தை தாங்கள் எனக்கு அருள வேண்டும் என்றார்.

இலட்சுமணின் கோபம்

�� கைகேயி சிறிதும் மனம் தளராமல், இராமன் வனவாசம் செல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் நான் இப்போதே என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்றாள். இதனை கேட்ட வசிஷ்டருக்கு மிகுந்த கோபம் உண்டானது. கைகேயி! மூத்தவனுக்கு தான் முடி சூட்ட வேண்டும் என்பது நாம் காலங்காலமாய் பின்பற்றி வரும் மரபாகும். அந்த மரபு இன்று உன்னால் அழிகிறது என்பது பற்றி உனக்கு கவலை இல்லையா? உன்னால் இன்று மன்னர் மரணத்திலும் மிகுந்த வேதனைப்படுகிறார். அதை பற்றியும் உனக்கு கவலை இல்லையா? என்று வசிஷ்டர் உரத்த குரலில் கைகேயியை கடிந்தார்.

�� தசரதர், கௌசலையின் நிலையைக் கண்டு துடிதுடித்தார். கௌசலை நீ அழாதே! இராமன் வனவாசம் செல்ல வேண்டும் என்பது விதி செய்யும் செயல். விதியை வென்றவர் இவ்வுலகில் யார் தான் உண்டு என்று கௌசலைக்கு ஆறுதல் கூறினார் தசரதர். கைகேயி! இவ்வுலகில் கணவரை வாட்டி வதைக்கும் பெண்களும் சிலர் உண்டு. ஆனால் உன்னை போல் கணவனை அடியுடன் வதைத்த பெண்கள் இல்லை. இராமன் மிகுந்த நற்பண்புகளை கொண்டவன். அவன் அயோத்தியில் இருந்தால் உனக்கும், பரதனுக்கும் தீங்கு செய்வான் என்று நீ நினைக்கின்றாயா? குருநாதா! ஆலகால விஷமே எனக்கு மனைவியாக வந்துள்ளது. இனி இவள் எனக்கு மனைவியும் இல்லை. பரதன் எனக்கு மகனும் இல்லை. அவன் என் கடைசி ஈமச்சடங்கை கூட செய்யக் கூடாது என்று சொல்லி விட்டு மயங்கி விழுந்தார்.

�� வசிஷ்டர் பட்டாபிஷேக மண்டபத்திற்கு சென்று அங்கு கூடியிருந்தவர்களிடம் நடந்தவற்றை எல்லாம் கூறினார். இதனை கேட்ட மக்கள் அனைவரும் புலம்பி அழுதார்கள். பட்டாபிஷேக மண்டபத்திற்கு வந்த இலட்சுமணன், கைகேயி பெற்ற வரத்தையும், அவ்வரத்தால் பரதன் நாட்டை ஆளவும், இராமன் வனவாசம் செல்ல வேண்டும் என்பதை கேட்டு மிகுந்த கோபம் கொண்டார். கோபத்தால் வில்லை வளைத்து நாண் ஓசையை உண்டாக்கினார். ஓசையால் அண்டங்கள் அனைத்தும் அதிர்ந்தன. சுமித்திரையின் மாளிகைக்கு சென்று கொண்டு இருந்த இராமன் இலட்சுமணனின் வில்லின் ஓசையை கேட்டார். இலட்சுமணன் கோபம் கொண்டால் உலகம் அழிந்து விடுமே என்று எண்ணி மண்டபத்துக்கு திரும்பி சென்றார். இராமரை கண்ட இலட்சுமணர், அண்ணா! தங்களின் பட்டாபிஷேகத்துக்கு தடை ஏற்பட்டுவிட்டது. தடை செய்தவர்களை என் கோபத்திற்கு ஆளாக்குவேன். அது மட்டுமில்லாமல்

பதினான்கு உலகங்களையும் தங்களுக்கு உரிதாக்கி முடி சூட்டுவேன் என்றார்.

�� தம்பி இலட்சுமணா! அமைதி பூங்காவாக விளங்கும் அயோத்தி மண்ணுக்கே கோபம் வராத போது உனக்கு எப்படி கோபம் வந்தது? அண்ணா! இன்று தங்களுடைய பட்டாபிஷேகம் தடைப்பட்டதை அறிந்து நான் கோபம் கொள்ளாமல் இருப்பேனா? தம்பி! தானத்தில் சிறந்தது நிதானம் தான். இந்த நிகழ்ச்சி தடைப்பட காரணம் மன்னரும் அன்று, நம்மை வளர்த்த தாயின் பிழையும் இல்லை, இது விதியின் செயலாகும். ஆதலால் நீ அமைதி கொள்வாயாக. அண்ணா! விதி என்று சொல்லிக் கொண்டு என்னுடைய மதியை இழப்பவன் நான் இல்லை. விதிக்கே விதியை காண்பிப்பவன் நான். இன்று தங்கள் என்னுடைய வில்லின் திறமையை காண்பீராக. தம்பி இலட்சுமணா! வேதங்கள் ஓதிய உன் நாவினால் விதியை பற்றி இவ்வாறு கூறலாமா? என்னை கானகம் செல்ல கட்டளையிட்டவர்கள் தாய் தந்தையராகும். அவர்களின் கட்டளையை நான் மீறலாமா?

�� அண்ணா! எனக்கு அதைப் பற்றி கவலை இல்லை. எனக்கு தாய், தந்தை, தெய்வம் எல்லாம் தாங்கள் தான். தம்பி! உன் உரிமையை நான் ஒருபோதும் மறுக்க மாட்டேன். எனக்கு நல்வழியை காட்டி வளர்த்தவர் தந்தை தசரதர். தந்தையின் கட்டளையை என்றும் நான் மீறமாட்டேன். அதேபோல் உனக்கு தந்தை நான் தானே. அப்படி என்றால் நீ என் கட்டளையை மீறக் கூடாது. அமைதி கொள்வாயாக என்றார்.

இராமர் சீதை வனவாசம் செல்லுதல்

�� இராமனின் கட்டளைக்கு இணங்க இலட்சுமணர் சாந்தமானார். பிறகு இருவரும் சுமித்திரையின் மாளிகைக்கு சென்றார்கள். கைகேயி இராமருக்கு மரப்பட்டையால் செய்த ஆடையை கொடுத்தாள். இராமரும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். தான் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களை அகற்றி விட்டு கைகேயி கொடுத்த ஆடையை அணிந்துக் கொண்டார். மரப்பட்டையால் செய்த ஆடையை சுமித்திரை தன் அன்பு மிகுந்த மகனான இலட்சுமணருக்கு கொடுத்தாள்.

�� அவள் கொடுக்கும் போது கண்ணீர் ததும்ப, மகனே! நீ உன் அண்ணனான இராமனுக்கு துணையாக கானகம் சென்று வருவாயாக. 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்ற பழமொழிக்கு ஏற்ப அண்ணனுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். உனக்கு தந்தை இராமன், தாய் சீதை ஆவாள். இராமன் இருக்கும் இடமே உனக்கு இருப்பிடமாகும். இராமன் கானகம் சென்றால் நீயும் கானகம் செல்ல வேண்டும். உன் அண்ணன் இராமனுக்கு செயலறிந்து தொண்டு செய்ய வேண்டும். விதியின் மதியால் இராமனுக்கு ஏதாவது நேருமாயின் அவ்விதியை நீ வெல்ல வேண்டும். பதினான்கு ஆண்டுகள் முடிந்து இராமன் அயோத்தி வந்தால் நீயும் அவர்களோடு வர வேண்டும். இன்று முதல் நீ இராமனுக்கு தம்பி அல்ல, அவர்களுக்கு பணிவிடை செய்யும் பணியாளன் என்று கண்ணீர் மல்க கூறி அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

�� இராம இலட்சுமணர் இருவரும் வசிஷ்டர், கௌசலை, சுமித்திரை, கைகேயி ஆகியோரிடம் வணங்கி ஆசிபெற்று விடை பெற்றனர். பிறகு அவர்கள் சீதையின் மாளிகைக்கு சென்றார்கள். இராமரும், இலட்சுமணரும் முனிவர்கள் உடுத்தும் ஆடையை அணிந்து வருவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தாள், சீதை. அவள் இது பட்டாபிஷேகத்தில் நடைபெறும் ஒரு சடங்காக இருக்கும் என்று எண்ணினாள். சீதை இராமனின் திருவடியில் விழுந்து வணங்கினாள். பெருமானே! இப்பொழுது தாங்கள் மகுடம் சூட்டி கொள்ளும் நேரம் ஆயிற்றே, தாங்கள் முனிவர்களை போல் துறவு கோலத்தில் இருப்பது ஏன்? என்று கேட்டாள். இராமர், சீதா! என் தந்தை இந்த நாட்டை ஆட்சி செய்யும் பொறுப்பை என் தம்பி பரதனுக்கு அளிக்கின்றார். இதை கேட்டு சீதா மகிழ்ச்சி அடைந்தாள். தம்பி பரதன் மகுடம் சூட்டி கொண்டால் தாங்கள் அதிக நேரம் என்னுடன் இருப்பீர்கள் என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

�� சீதா! என் தந்தை என்னை பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லுமாறு கட்டளையிட்டு இருக்கின்றார் என்றார். இதை கேட்டு சீதை மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். பெருமானே வனத்தில் மயில், குயில், வண்டு எல்லாம் ஆடிபாடும். இயற்கையை அழகாக்கும் செடி கொடிகள் பூத்து குலுங்கும். அது மட்டுமில்லாமல் வனம் எனக்கு மிகவும் பிடிக்கும் என்றாள். இராமர், சீதா! நீ அயோத்தியில் இரு. நான் வனம் செல்கிறேன் என்றார். இதை கேட்ட சீதை மயக்க நிலையை அடைந்தாள். இராமர் சீதையின் மயக்கத்தை தெளிய வைத்து, வனவாசம் செல்வது என்பது மிகவும் கடினமானது. அங்கு வெப்பக் காற்றில் இருக்க வேண்டும். பாறையின் மேல் தான் படுக்க வேண்டும். காய் கனிகளை தான் உணவாக உண்ண வேண்டும். உடம்பை வருந்தி கொள்ள வேண்டும். ஆதலால் நீ அரண்மனையில் இரு என்றார்.

�� சீதை, சுவாமி! தங்களை பிரிவதை காட்டிலும் பெரிய கொடுமை வேறொன்றும் இல்லை. தாங்கள் படுக்கும் பாறை எனக்கு பஞ்சணை ஆகும், தாங்கள் உண்ணும் உணவு எனக்கு அமிர்தம் ஆகும். உன்னை என்றும் பிரிய மாட்டேன் என்று மந்திரத்தை கூறி என்னை கரம் பிடித்தீர்கள், அதை தாங்கள் மறக்கலாமா? தங்களை ஒருபோதும் நான் பிரிய மாட்டேன். தங்களுடன் வனம் வந்து தங்களுக்கு தொண்டு செய்வேன் என்றாள்.

�� இராமர், சீதா! கானகத்தில் உன்னை காப்பது என்பது கடினமாகும். சுவாமி! ஒரு பெண்ணை காக்க முடியாத தாங்கள் உலகத்தை எவ்வாறு காத்தருள்வீர். பெருமானே! அன்னையிடம் வனம் செல்ல உத்தரவு பெற்று விட்டீர்களா? சீதா! என் அன்னை என்னுடன் வருவதாக தான் கூறினார்கள். நான் தான் பெண்கள் ஒரு போதும் தங்கள் கணவரை விட்டு பிரியக்கூடாது. தாங்கள் தந்தைக்கு துணையாக இங்கேயே இருங்கள் என்று கூறினேன்.

தசரதரின் மறைவு

�� சுவாமி! தாங்கள் அன்னையிடம் கணவரை பிரியக்கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் நான் தங்களை விட்டு பிரிந்து இருக்கலாமா? தாய்க்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயமா? என்னை வரவேண்டாம் என்று சொன்னால் நான் உயிரற்ற ஒரு பொருள் ஆகிவிடுவேன் என்று சொல்லி தான் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களை அகற்றி கானகம் செல்லக்கூடிய ஆடையை அணிந்து தன் கணவனான இராமனின் திருவடியில் விழுந்து வணங்கினாள். இராமர், சீதை, இலட்சுமணர் மூவரும் வனம் செல்ல புறப்பட்டனர். இராமர் வசிஷ்டர் மற்றும் தன் தாய்மார்களை தொழுது வணங்கி விடைப்பெற்றார். சுமந்திரருடைய வேண்டுகோளின்படி அவர்கள் மூவரும் தேரில் ஏறி சென்றனர். அயோத்தி மக்கள் அனைவரும் இராமரை தொழுது, தேரை பின் தொடர்ந்து சென்றனர். இராமர் தன்னிடம் உள்ள பொன், பொருள் எல்லாவற்றையும் ஏழைகளுக்கு வழங்கினார்.

�� தேர் வெகு தூரம் சென்றது. மாலை மங்கி இருள் சூழ்ந்தது. மக்கள் அனைவரும் துன்பத்தில் ஆழ்ந்தனர். இராமர் சுமந்திரரை நோக்கி, தாங்கள் தேருடன் ஊர் திரும்புவீராக. அப்போது தான் மக்கள் அனைவரும் ஊர் திரும்புவார்கள். என் தாய் தந்தையருக்கு என் வணக்கத்தை சொல்வீராக என்றார். சீதை, தன் தங்கைகளுக்கு ஆசி கூறி தான் வளர்க்கும் கிளிக்கு வேளை தவறாமல் உணவு தர சொல்லி கூறி அனுப்பினாள்.

�� தசரதர் மயக்கம் தெளிந்து கௌசலையை பார்த்து தனக்கு நேர்ந்த சாபம் பலித்து விட்டது எனக்கூறி அழுதார். பல வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேட்டையாட சென்ற போது, ஒரு முனிவரின் மகன் குளத்தில் சுரைக்காய் போன்ற ஒரு குப்பியில் தண்ணீர் பிடித்துக் கொண்டு இருந்தான். நான் ஒரு மறைவிடத்தில் நின்று கொண்டு யானை தான் தண்ணீர் குடித்து கொண்டிருக்கிறது என நினைத்து அந்த திசையை பார்த்து அம்பு எய்தினேன். பிறகு அந்த திசையில் இருந்து வந்த மனிதனின் சத்தத்தை கேட்டு அங்கு சென்று பார்த்தேன். அப்போது தான் எனக்கு தெரிந்தது. நான் எய்திய அம்பு யானை மீது அல்ல ஒரு பாலகன் மீது என்று. மேலும் அங்கே அந்த பாலகன் இறக்கும் தருவாயில் இருப்பதையும் கண்டேன். நான் செய்த தவறால் ஒரு பாலகன் இறந்ததை எண்ணி, அப்பாலகனின் பெற்றோரிடம் மன்னிப்பு கேட்க நினைத்தேன்.

�� உடனே அப்பாலகனின் பெற்றோரிடம் சென்று மன்னிப்பு

கேட்டேன். அவர்கள் நான் புத்திர சோகத்தை உணர வேண்டும் என்றும், புத்திர சோகத்தால் மடிய வேண்டும் என்றும் சாபமிட்டார்கள். அப்போது எனக்கு குழந்தை பிறக்கவில்லை. ஆனால் அவர்கள் கொடுத்த அந்த சாபம் இப்போது பலித்துவிட்டது என்று எண்ணி புலம்பினார். வசிஷ்டரிடம் தசரதர், கைகேயி எனக்கும் மனைவியும் இல்லை. பரதன் எனக்கு மகனும் இல்லை எனக் கூறினார். அவன் தனக்கு கடைசி ஈமச்சடங்கை கூட செய்யக்கூடாது என கூறினார்.

�� சுமந்திரர் தேரை செலுத்தி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். அரண்மனைக்கு சென்று தசரத சக்ரவர்த்தியை சந்தித்தார். தசரதர் சுமந்திரரை பார்த்து எனது மகன்? எங்கே என்று கேட்டார். சுமந்திரர் மௌனத்தை வைத்து இராமர் கானகம் சென்றதை உணர்ந்தார். தசரதர் இராமரை நினைத்து, இராம இராம இராம என சொல்லி கொண்டு அவரின் உயிர், ஆன்ம ஒளியாக உடலில் இருந்து பிரிந்தது. தேவர்கள் வரவேற்க அவர் விண்ணுலகத்தை சேர்ந்தார். தசரதரின் மறைவை அறிந்து மக்கள் அனைவரும் கதறி அழுதார்கள்.

குகன் இராமரை காண செல்லுதல்

�� பரதனுக்கும் சத்ருகனுக்கும் செய்தி சொல்லி அழைத்து வரும்படி தூதுவரை அனுப்பினார், வசிஷ்டர். பரதனும், சத்ருகனும் அயோத்திக்கு திரும்பினார்கள். அவர்கள் தந்தை தசரதர் இறந்து விட்டார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். அதன் காரணமும் அவர்களுக்கு தெரிய வந்தது. தாய் கைகேயி பெற்ற இரண்டு வரத்தால் தன் தந்தைக்கு மரணமும், அண்ணன் ராமனும் வனவாசம் செல்ல காரணமாயிற்று. அதனால் தாய் கைகேயி மீது மிகுந்த கோபம் கொண்டனர். அண்ணன் ராமன் வனவாசம் செல்ல தான் காரணம் என்பதை அறிந்து மிகவும் வேதனைப்பட்டான், பரதன். தாய் கௌசலையிடம் சென்று மனமுருக மன்னிப்பு கேட்டான்.

�� தசரதர் தன் மரண தருவாயில் கைகேயி எனக்கு மனைவியும் இல்லை, பரதன் எனக்கு மகனும் இல்லை எனக் கூறி தன் கடைசி ஈமச்சடங்குகளை பரதன் செய்யக் கூடாது என்று சொன்னதை அறிந்து மிகவும் வருந்தினான், பரதன். சத்ருகன், தசரதனின் இறுதி ஈமச்சடங்குகளை செய்தான். அதன் மூலம் தான் தாய்க்கு தலைப்பிள்ளை, தந்தைக்கு கடைப்பிள்ளை என்னும் சம்பிரதாயம் உருவானது.

�� வசிஷ்டர் பரதனிடம் முடி சூட்டி கொள்ள கூறினார். ஆனால் பரதன் நான் முடி சூட்டி கொள்ள மாட்டேன். அண்ணன் ராமன் தான் முடி சூட்டி கொள்ள வேண்டும். அவர் தான் அயோத்தியை ஆள வேண்டும். நான் கானகம் சென்று அண்ணனை அழைத்து வருகிறேன். அண்ணன் வரவில்லை என்றால் நான் அயோத்திக்கு திரும்ப மாட்டேன். அண்ணன் ராமனை அழைத்து வர பரதன் உறுதியாக இருந்தான்.

�� ராமர், சீதை, லட்சுமணர் இருள் சூழ்ந்த கானகத்தில் தங்களின் வனவாச பயணத்தை தொடங்கினார்கள். அவர்கள் புண்ணிய நதியான கங்கையை அடைந்தார்கள். ராமர், சீதை, லட்சுமணர் மூவரும் கங்கையில் மூழ்கி மகிழ்ந்தார்கள். கங்காதேவி! ராம பெருமானே! உலகில் உள்ள மனிதர்கள் என்னில் மூழ்கி அவர்களது பாவங்களை நீக்குகின்றனர். ஆனால் நீ இன்று என்னில் மூழ்கியதால் என்னிடம் இருந்த பாவங்கள் நீங்கின என்று கூறி ராமரை தொழுது வணங்கினாள். முனிவர்கள் அவர்களுக்கு காய், கனிகளை தந்தார்கள். அவர்கள் அதனை உண்டு மகிழ்ந்தார்கள். கங்கை கரையில் சிருங்கி பேரம் என்ற நகரில் வாழ்பவன் குகன். இவன் வேடர் குலத்தின் தலைவன். கருமையான மேனியும்,

திரண்ட தோள்களும், அகன்ற மார்பும் உடைய தோற்றத்தை உடையவன்.

�� குகன் இராமனை காண வேண்டும் என்று எண்ணினான். அதனால் மீன்களை நெய்யில் பொரித்து மிளகு தூள் தூவி இராமருக்காக எடுத்து சென்றான். குகன், இராமர் தங்கி இருக்கும் தவப்பள்ளியை அடைந்தான். அந்த ஆசிரமத்தில் முன் நின்று காவல் புரிந்து கொண்டு இருக்கும் இலட்சுமணர் குகனை பார்த்து, நீ யார்? எதற்காக இங்கு வந்துள்ளாய் எனக் கேள்வி கேட்டார். ஐயா! நான் ஒரு வேட குலத்தின் தலைவன். என் பெயர் குகன். நான் இங்கு இருக்கும் இராம மூர்த்தியை காண வந்துள்ளேன் என்றான்.

�� இலட்சுமணர், இங்கேயே நில் என்று கூறிவிட்டு உள்ளே சென்று இராமரை, அண்ணா! தங்களை குகன் என்ற வேட குலத்தின் தலைவன் காண வந்து இருக்கின்றான். அவனை உள்ளே விடலாமா? எனக் கேட்டார். இராமர் அவனை என்னிடம் அனுப்பு என்று கூறினார். பிறகு இலட்சுமணர் குகனுக்கு இராமனை காண அனுமதி அளித்தார். குகன் உள்ளே சென்று பரம்பொருளான இராமரை வணங்கினான். ஐயனே! தங்களுக்காக மீனை பொரித்து கொண்டு வந்துள்ளேன். அதை தாங்கள் ஏற்று கொள்ள வேண்டும் என வேண்டினான். குகனே! மிக்க மகிழ்ச்சி. நீ கொண்டு வந்த உணவை நான் ஏற்று கொண்டேன் என்றார். உனக்கு என் மேல் உள்ள அன்பு, ஆழத்தை காண முடியாத கடல் போல் இருக்கிறது. நீ என்னுடன் இங்கேயே இரு என்றார், இராமர்.

�� குகன் இராமரை பலமுறை பார்த்தும், போதும் என்ற எண்ணம் அவனுக்கு வரவில்லை. இராமரின் அனுமதி பெற்று குகன் அங்கு தங்கினான். குகன் இலட்சுமணரிடம், இராமர் தவக்கோலம் பூண்டு கானகம் வரக் காரணம் என்ன என்று வினவினான்.

குகனின் வேண்டுகோள்!

�� தாய் கைகேயின் வரத்தின்படி இராமர் வனவாசம் செல்லவும், பரதர் அயோத்தியை ஆளவும் கட்டளை அருளினார். அதன்படி இராமர் இக்கானகத்தில் வாழ்கிறார் என்றார், இலட்சுமணர். இதனைக் கேட்ட குகன் வெந்த புண்ணில் வேலை பாய்ந்தது போல் மிகவும் வருந்தினார். அன்றிரவு ஆசிரமத்தில் குகன் காவல் புரிந்தான். அவன் இலட்சுமணர் ஒரு மாற்றாந்தாயாகிய மகன் தானே? அவனை எப்படி நம்புவது என்று எண்ணி குகன் இலட்சுமணனுக்கும் சேர்த்து காவல் புரிந்தான்.

�� இலட்சுமணரும் கண் இமைக்காமல் காவல் புரிந்தார். பொழுது விடிந்தது. இராமர், சீதை, இலட்சுமணர் நீராடி தங்களின் காலை கடன்களை முடித்தனர். இராமர் குகனைப் பார்த்து, ஓடம் கொண்டு வா! நாங்கள் கங்கையை கடந்து வனவாசம் செல்ல வேண்டும் என்றார். இதைக் கேட்ட குகன் அதிர்ச்சி அடைந்தான். தங்களுக்கு தொண்டு செய்ய நானும் மற்றும் வேடர்களும் உள்ளோம். கங்கை மிகவும் புனிதமான இடமாகும். இங்கு நறுமண மலர்களும், காய் கனிகள் என அனைத்தும் இருக்கின்றன. தங்களுக்காக நான் எதையும் செய்வேன். தங்களுக்காக தொண்டு செய்ய காத்து கொண்டு இருக்கிறேன். தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும் என மனமுருக வேண்டிக் கொண்டான்.

�� இராமர் குகனை கட்டி தழுவிக் கொண்டார். குகனே! நீ இனிமேல் எனக்கு தம்பி. இன்று முதல் தசரதருக்கு ஐந்து புதல்வர்கள். இலட்சுமணர், பரதன், சத்ருக்கன் உனக்கு தம்பிமார்கள். பரதனிடம் அயோத்தியை ஆளும் அரசியல் பொறுப்பை ஒப்படைத்து வந்துள்ளேன். நீ அயோத்தி சென்று பரதனுக்கு துணையாக இரு. 14 ஆண்டுகள் 14 நாட்கள் போல் சென்று விடும். பிறகு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்வோம். என் சொல்லை மீற வேண்டாம். இப்பொழுது எங்களுக்காக ஓடம் கொண்டு வா என்றார். குகன் கண்ணீர் தழும்ப ஓடத்தை கொண்டு வந்தான். இராமர், சீதை, இலட்சுமணர் மூவரும் ஓடத்தில் ஏறினார்கள். குகன் இராம நாமத்தை பாடிக் கொண்டு ஓடத்தை செலுத்தினான். அவர்கள் அக்கரையை சேர்ந்தார்கள். இராமன் குகனை பார்த்து, நீ கவலைப்படாமல் செல். மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாய் இருப்போம் என்று கூறி குகனை திருப்பி அனுப்பினார்.

�� இராமர் அங்கிருந்து புறப்பட்டு சித்ரகூடத்தில் உள்ள பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தை அடைந்தார். அங்கு பரத்வாஜ முனிவரை கண்டு

வணங்கி, அவரின் சொற்படி சித்ர கூடத்திற்கு அருகில் உள்ள மந்தாகினி நதிக்கரையில் ஓர் ஆசிரமத்தை அமைத்து தங்கினார்கள். சிறிது நாட்கள் அங்கு தங்கினார்கள். பிறகு அவர்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். அவர்கள் பயணத்தின் போது வழியில் யமுனை நதியை கண்டார்கள். அவர்கள் யமுனை நதியில் நீராடி, காய்கனிகளை உண்டு பசியாறினார்கள். இலட்சுமணர் மூங்கில்களை வெட்டி தெப்பம் அமைத்து, மூவரும் தெப்பத்தில் ஏறி அக்கரையை அடைந்தார்கள். அங்கு பர்ணசாலை ஒன்றை அமைத்தார், இலட்சுமணர். இலட்சுமணரின் பர்ணசாலை அமைக்கும் திறனை கண்டு வியந்து இராமர் இலட்சுமணரை வாழ்த்தினார்.

https://telegram.me/aedahamlibrary

பரதன் குகனை சந்தித்தல்!

�� பரதனும், சத்ருகனும் தவக்கோலம் பூண்டு, பரிவாரங்கள் புடைசூழ இராமரை காண கானகம் சென்றனர். அவர்கள் பரிவாரங்களுடன் கங்கைககரையை அடைந்தார்கள். பரதன் பரிவாரங்களுடன் வருவதை கண்ட குகன், இராமரை தாக்க தான் வருகிறார்கள் என்று எண்ணினான். இவன் அரசாட்சியை கவர்ந்து கொண்டதோடு மட்டுமில்லாமல் இராமரை இடர் செய்வதற்காக கானகம் வந்துள்ளான் என எண்ணினான், குகன். பரம ஏழையாகிய என்னை இராமர் தம்பி என்று சொன்னாரே. அந்த ஒரு சொல்லுகாக நான் உயிரையும் இராமருக்காக தருவேன். வேடர்களே, எதிர் பரிவாரங்களுடன் வரும் பரதனை போர்புரிய ஆயத்தமாக இருங்கள். குகன் போர் பறையறைந்தான். போர் பறையறந்ததை கேட்ட பரதர், அண்ணாவை தேடி மனம் நொந்து வரும் நம்மீது போர் புரிகின்றவர் யார் என சுமந்திரரிடன் கேட்டார். பெருமானே! கங்கை கரைக்கு அதிபரான குகன் என்னும் வேடன் உள்ளான். அவன் தாங்கள் இராமரை இடர் செய்ய வருவதாக எண்ணி போருக்கு ஆயத்தம் புரிகின்றான், என்றார்.

�� வேடனுக்கு கூட என் மீது கோபமா? நான் என்ன பாவம் செய்தேன் என்று கூறி சேனைகளை அங்கேயே நிறுத்துவிட்டு பரதர் குகனை பார்க்க சென்றார். அவரை பின் தொடர்ந்து சத்ருக்கனும் சென்றார். பரதர் தொலைவில் வருவதை கண்டார் குகன். வருபவர் இராமர் அண்ணாவை போல் இருக்கின்றாரே, அவருக்கு பின்னே வருபவர் இலட்சுமணர் போல் இருக்கின்றாரே எனக்கூறி இராமர் சென்ற திசை நோக்கி தொழுது வணங்கினான், குகன். அழுத கண்களும் உருகிய உள்ளமுடனும் தவக்கோலத்துடன் வரும் பரதரை கண்டார். இராமர் அண்ணாவிடம் ஒரு நாள் பழகிய எனக்கே நற்குணங்கள் இருக்குமானால், இராமர் அண்ணாவின் உடன் பிறந்த பரதருக்கு தீய குணம் ஒருபோதும் இருக்காது. நான் ஒரு அவசரக்காரன். நல்லவரை தீயவர் என எண்ணிவிட்டேன். பரதர் வந்தவுடன் அவருடைய திருவடியில் விழுந்து வணங்கினான், குகன். பரதர் குகனை கட்டி தழுவி கொண்டார்.

�� குகன் பரதரை பார்த்து, தாங்கள் ஏன் தவக்கோலத்துடன் வனத்துக்கு வந்துள்ளீர் என வினவினான். பரதர், அரசக்குலத்தில் மூத்தவன் தான் ஆட்சி புரிய வேண்டும். அண்ணன் இராமர் இருக்க நான் ஆட்சி புரியலாமா? ஆதலால் தான் அண்ணனை அழைத்து செல்ல வந்துள்ளேன் என்றார். இதை கேட்ட குகன் மகிழ்ச்சியால் துள்ளி குதித்தான். பரதா! தாய் வரம் கேட்க, தந்தை தந்த மகத்தான அரச பதவியை உதறி தள்ளிவிட்டு

கானகம் செல்ல தவக்கோலத்துடன் வந்த உனக்கு ஆயிரம் இராமர்கள் ஒன்று சேர்ந்தாலும் ஈடாகுமா? உன்னை போன்ற உத்தம குணங்கள் நிறைந்தவர் இவ்வுலகில் இல்லை எனக் கூறினான் குகன்.

�� பரதர், குக பெருமானே! அண்ணன் இராமர் எங்கே தங்கி இருந்தார் எனக் கேட்டார். குகன் இராமர் தங்கி இருந்த ஆசிரமத்தை காட்டினான். பரதர் ஆசிரமத்தை பார்த்து வருந்தினார். குக பெருமானே! இலட்சுமணர் எங்கே படுத்து உறங்கினார். குகன், இலட்சுமணர் படுத்து உறங்கினாரா? அவர் இராமரும், சீதையும் உறங்க விடியும் வரை வில்லூன்றி கண் இமைக்காமல் நின்று காவல் புரிந்தார் என்றான் குகன்.

�� பிறகு அனைவரும் அக்கரையை கடக்க படகுகளில் ஏறினார்கள். தசரத குடும்பத்தினர் தனி படகில் சென்றனர். குகன், மிக துயரமாய் அமர்ந்திருக்கும் கௌசலையை பார்த்து இவர் யார் எனக் கேட்டார். குகன் அண்ணா, பன்னிரண்டு மாதம் சுமந்து பெற்ற இராமனின் தாய் கௌசலை என்றார், பரதர். குகன் கௌசலையின் மலரடியில் வீழ்ந்து பணிந்து வணங்கினான். கௌசலை, பரதா குழந்தை போல் அழும் இந்த மகன் யார்? என்று கேட்டாள். பரதர், அம்மா இவர் இராம் அண்ணாவுக்கு தம்பி, எனக்கும், இலட்சுமணருக்கும், சத்ருகனக்கும் தமையன் என கூறினார். கௌசலை, ஐவரும் பல்லாண்டு அரசு புரிந்து ஒற்றுமையாக வாழுங்கள் என்று ஆசி கூறினாள். பரதர் மற்ற தாய்மார்களையும் அறிமுகம் செய்தார்.

பரதன் நாடு திரும்புதல்!

�� இலட்சுமணர், பரதருடைய படைகள் வருவதை கண்டு கோபம் கொண்டு எழுந்தார். பரதர் இராமரின் திருவடியில் வீழ்ந்து அழுதார். இராமர், அப்பா நலமாக இருக்கிறாரா? எனக் கேட்டார். பரதர் தந்தை சத்தியத்தை நிலை நாட்டிவிட்டு விண்ணுலகை சேர்ந்தார் என்ற செய்தியை கூறினார். இச்செய்தியை கேட்ட இராமர் அதிர்ச்சி அடைந்தார். தந்தையரை நினைத்து புலம்பி அழுதார், இராமர். வசிஷ்டர் இராமரை தேற்றினார். பரதர், அண்ணா! தாங்கள் அயோத்திக்கு வந்து ராஜ்யத்தை ஏற்று ஆட்சி புரிய வேண்டும் என்றார். இராமர், தம்பி நான் பதினான்கு ஆண்டு வனவாசம் செல்ல வேண்டும் என்பது தந்தையின் கட்டளை. ஆகவே, இதை நான் கைவிடக்கூடாது. நான் பதினான்கு ஆண்டுகள் கழித்து வந்து அரசு புரிவேன். என் சொல்லை தட்ட வேண்டாம். நீ அயோத்திக்கு சென்று கடமையை செய் என்றார்.

�� இராமபிரானிடம் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் அவர் நாடு திரும்பி ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். வேறு வழியின்றி இராமனுடைய பாதுகைகளை பெற்று கொண்டு இராமரை பலமுறை தொழுதுவிட்டு புறப்பட்டார், பரதர். பாதுகைகளை தன் தலைமேல் வைத்துக் கொண்டு அவரை நமஸ்கரித்துவிட்டு சென்றார். அயோத்தியில் அருகில் இருக்கும் நந்தி கிராமத்தில் மணி மண்டபத்தை அமைத்து இராமருடைய பாதுகைகளை வைத்து வழிப்பட்டனர். தினந்தோறும் ஆயிரம் மந்திரங்களால் இராமரின் பாதுகைகளுக்கு அர்ச்சனை செய்து இடையுறாது இராம பக்தியுடன் தவநெறி தவறாமல் ஆட்சி புரிந்தார், பரதர்.

�� இராமர், தம்பி இலட்சுமணரோடும், சீதையோடும் தெற்கு நோக்கிப் பயணித்தார்கள். அவர்கள் நெடுந்தூரம் நடந்து அத்திரி மகரிஷி வாழும் ஆசிரமத்தை அடைந்தனர். அத்திரி முனிவர் சப்த ரிஷிகளில் ஒருவர். இவருடைய மனைவி அனுசூயை. அனுசூயை என்றால் பொறாமையற்றவள் என்று பொருள். இவள் கலங்கமில்லாத கற்புகரசி ஆவாள். இராமர், இலட்சுமணர், சீதை மூவரும் அத்திரி முனிவரை வணங்கினார்கள். தமது ஆசிரமத்திற்கு வந்திருக்கும் இவர்கள் யார் என்பதை கேட்டறிந்த முனிவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவர்களுக்கு காய் கனிகள் கொடுத்து பசியாற செய்தார்.

�� முனிவரின் மனைவி சீதையை அன்புடன் தழுவி, ஜனக மகாராஜரின்

https://telegram.me/aedahamlibrary

குமாரியாகிய நீ மரவுரியுடன் (மரவுரி - முனிவர்கள் உடுத்தும் ஆடை) கணவனை பிரிய முடியாமல் கானகத்துக்கு வந்துள்ளாய்? நீ கற்புகரசி. அணிகலன்கள் இல்லாமல் வெறுமையுடன் இருக்கின்றாயே? நீ சுமங்கலி பெண். அணிகலன்கள் இல்லாமல் இருக்கக் கூடாது. இவை என்னுடைய அணிகலன்கள். நீ என் மருமகள். இந்த அணிகலன்களை அணிந்துகொள் என அன்புடன் கூறி அணிகலன்களை நிரம்ப சீதைக்கு அணிவித்தாள். மகளே! ஒரு சமயம் நீ உன் கணவனை பிரிந்திருக்க கூடும்.

உனக்கு பசி எடுக்காத வரத்தை அருள்கிறேன். உன் புகழ் வாழ்க எனக் கூறி அருள் புரிந்தாள் அனுசூயை. இராமர், இலட்சுமணர், சீதை மூவரும் அத்திரி முனிவரின் ஆசிரமத்தில் ஓர் இரவு தங்கினார்கள். மறுநாள் காலை அவர்கள் முனிவரை வணங்கி விட்டு தண்டகவனத்தை நோக்கி புறப்பட்டனர்.

�� தண்டகவனம் வரலாறு : இட்சுவாகு மன்னனின் மகன்களில் ஒருவன் தான் தண்டன். தண்டன் தீய குணங்கள் நிறைந்தவன். எனவே மன்னன் தண்டனை, நாட்டைவிட்டு வெளியேற்றிவிட்டார். பிறகு அவன் தென்னாடு சென்று அங்கே ஓர் பகுதியைப் பிடித்துக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். அங்கு அசுரகுருவான சுக்கராச்சாரியாரின் மகளை தகாத வழியில் காதலித்தான். அதனை அறிந்த முனிவர் தண்டன் அழியவும், நாடு பாழாகவும் சபித்தார். அதனால் அந்த தேசம் காடாக மாறி தண்டகவனம் எனப் பெயர் பெற்றது என்பது புராணக்கதை.

இராமனும் விராதனும்!

�� விராதன் என்ற கொடிய அரக்கன் ஒருவன் இராமர், இலட்சுமணர், சீதை முன்பு வந்து நின்றான். அவன் இராம, இலட்சுமணரை கொன்று தின்னும் நோக்கத்தில் அங்கு வந்து நின்றான். சீதையை கண்டவுடன் அவனுக்கு சீதை மீது காதல் வந்தது. இவள் என்ன அழகு! இதுவரை நான் இவ்வளவு அழகை கண்டதில்லை. தங்கச்சிலை போல் உள்ளாள் என கூறி சீதையை கவர்ந்து விண்ணில் பறந்து சென்றான். திடீரென்று வந்த ஓர் அரக்கன் சீதையை தூக்கிச் சென்றதும், இராமனும் இலட்சுமணரும் திகைத்தனர். அவர்களின் கோபம் தலைத்தோங்க தங்கள் வில்லை எடுத்து நாணைப் பூட்டி, விராதனைக் கூவி அழைத்து அடே! அற்பனே! இப்படியொரு வஞ்சகம் செய்துவிட்டு எங்கே போகிறாய்? திரும்பு என்றார்கள்.

�� விராதன், மனிதர்களே! பிரம்மதேவன் அளித்துள்ள வரத்தினால் எனக்கு மரணம் இல்லை. உலகத்தில் உள்ளோர் அனைவரையும் ஆயுதம் இல்லாமலே அழிக்கும் ஆற்றல் படைத்தவன் நான். இந்த அழகியை எனக்கு அளித்த நன்றிக்கடனுக்காக உங்கள் உயிரை விட்டுவிட்டேன். போனால் போகிறது, உங்களுக்கு உயிர் பிச்சை அளிக்கிறேன். இந்த பெண்ணை என்னிடம் விட்டுவிட்டு உயிர் பிழைத்து ஓடிவிடுங்கள் என்றான்.

�� இராமர் தன் வில்லின் நாணை இழுத்து ஒரு பேரொலியை எழுப்பினான். அவ்வொலி ஏழு உலகங்களும் அஞ்சும் வண்ணம் ஒலித்தது. சீதை அவ்வரக்கன் பிடியில் கதறிக் கொண்டிருந்தாள். சீதையை கீழே விட்டுவிட்டு, அவ்வரக்கன் மிகுந்த கோபத்துடன் தன் கையிலிருந்த கொடிய சூலத்தை இராமர் மீது வீசினான். அவன் வீசிய அந்த சூலாயுதத்தால் அனைத்துலகங்களும் அஞ்சி நடுங்கியது. அந்த சூலாயுதம் மின்னலை போல் இராமரின் மார்பை நோக்கி வந்து கொண்டு இருந்தது. இராமன் தன் கோதண்டத்தில் இருந்து ஓர் அம்பை பூட்டி அந்த அரக்கன் வீசிய சூலத்தின் மேல் எய்தினார். அந்த சூலம் இரண்டாக உடைந்து பூமியின் எல்லையில் போய் விழுந்தது. இதனால் அரக்கனின் கோபம் மேலும் அதிகமானது. அவ்வரக்கன் மலைகளையெல்லாம் வேரோடு பிடுங்கி இராமர் மீது எறிந்தான். இராமர், ஒன்றன்பின் ஒன்றாக வரும் மலைகளை தன் வாளியால் அடித்து, அவை மீண்டும் அவ்வரக்கன் மீதே விழும்படி செய்தார்.

�� காயங்களால் புண்பட்ட உடலோடு விராதன் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி இராமன் மீது வீசினான். இராமர் பன்னிரெண்டு அம்புகளை ஏவி, அந்த மரத்தை துண்டு துண்டாக்கி கீழே தள்ளிவிட்டு, பன்னிரெண்டு அம்புகளை அவ்வரக்கனின் உடலின் பாகங்களிலும் உட்புகுமாறு செலுத்தினார். அவன் கோபத்துடன் காட்டு பன்றிபோல் தன் உடலை உதறினான். அவன் உடலில் அம்பு துளைத்த இடங்களில் இரத்தம் ஆறு போல் பெருக்கெடுத்து ஓடியது. இவன் சாகா வரம் பெற்றவன் என்பதால் ஆயுதத்திற்கும் இவன் சாகவில்லை. அதனால் இவனின் கரங்களை வெட்டிவிடுவோம் என்று இராமனும் இலட்சுமணரும் முடிவு செய்து, தங்கள் உடைவாளை எடுத்து அவன் தோளை பார்த்து வீசினார்கள். மிகவும் கோபமடைந்த அவ்வரக்கன், அவர்களை அப்படியே அழுத்திப் பிடித்துக் கொண்டு வானத்தில் பறந்து சென்றான். இராம இலட்சுமணரும் வானத்தில் பறப்பதை பார்த்து தரையிலிருந்த சீதையின் மனம் துடிதுடித்தது. 'அரக்கனே! அவர்களை விட்டுவிடு. என்னை வேண்டுமானால் உண்டு கொள்' எனக் கூறி கதறி அழுதாள். இதனைக் கண்ட இலட்சுமணர் இராமரிடம், அன்னை மிகவும் மனம் வருந்துகிறாள், தாங்கள் இவனிடம் இப்படி விளையாடலாமா?' என்று கேட்டான்.

�� இலட்சுமணா! இவனை கொல்வது எனக்கு ஒரு பொருட்டே அல்ல என்று சொல்லிக்கொண்டே தன் காலால் அந்த அரக்கனை எட்டி உதைத்தார். அவ்வரக்கன் உடனே கீழே விழுந்தான். வாளால் அவன் தோள்கள் இரண்டையும் வெட்டி வீழ்த்தினர். அவ்வரக்கன் கோபத்தால் தாக்குவதற்கு ஓடிவர, இராமர், இலட்சுமணா! இவனை பூமிக்கடியில் புதைத்துவிடுவோம் என்று சொல்லி காலால் உந்தி தள்ளினார். அவன் ஓர் ஆற்றங்கரையிலிருந்த பெரும்பள்ளத்தில் வீழ்ந்து புதைந்துபோனான்.

விராதன் சாப விமோச்சனம்!

�� விராதன் ஒரு கந்தர்வனாக இருந்தவன். குபேரர் இட்ட சாபத்தினால் கொடிய அரக்கனாக மாறி பிறவி எடுத்தான். இராமர் காலால் உதைபட்டதும் அவனுக்கு இருந்த சாபம் நீங்கி அவனுடைய பழைய கந்தர்வ உடல் அவனுக்கு கிடைக்கப்பெற்றது. அந்த கந்தர்வன் இராமபிரான் திருவடியில் வீழ்ந்து பணிந்து வணங்கினான். 'இராமா! உனது திருவடி என்மீது பட்டதால், என் வினைகளெல்லாம் தீர்ந்து பிறவிக் கடல் கடந்தேன்' என்றான். நீ எப்படி அரக்கனாக உருவெடுத்தாய்? என்று இராமர் கேட்டார். அதற்கு விராதன், இராமா! நான் விண்ணுலகில் குபேரனது ஆட்சிக்கு உட்பட்டவன். தும்புரு எனும் கந்தர்வனாக விண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

�� தேவலோகத்தில் அரம்பை என்னும் பெண்ணின் மீது காதல் கொண்டு அவளோடு கூடினேன். இதைக் கண்ட குபேரர் என்னை அரக்கனாகப் பிறக்கும்படி சாபமிட்டார். நான் செய்த தவறுக்காக வருந்தி, எனக்கு சாப விமோச்சனம் தர வேண்டினேன். குபேரர் 'நீ இராமனின் காலடிபட்டு சாப விமோச்சனம் பெறுவாய்' என்றார். அன்று முதல் இன்று வரை நான் தீய வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தேன். தங்களின் பொற்பாதம் என்மேல் பட்டதும் சாபம் நீங்கப் பெற்றேன் என்றான் விராதன். இராம பெருமானே! நான் இதுவரை செய்த தவறுகளை எல்லாம் மன்னித்து பொறுத்தருள்வாயாக! என்று சொல்லி கந்தர்வன் விண்ணுலகிற்குச் சென்றான்.

�� பிறகு மூவரும் அங்கிருந்து புறப்பட்டு தண்டகவனத்தை அடைந்தனர். தண்டகவனத்தில் அரக்கர்களின் தொல்லைகளால் அவதியுற்று வரும் முனிவர்களுக்கு இராமனின் வரவு மகிழ்ச்சியை அளித்தது. அனைவரும் ஒன்று சேர்ந்து இராமனிடம் சென்றனர். இராமரின் தோற்றத்தைக் கண்டு மெய்மறந்து நின்றனர். முனிவர்கள் மூவரையும் அழகிய ஓர் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றனர். முனிவர்கள் இராமனிடம், இராமா! இனி நீங்கள் இங்கேயே தங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

�� அன்று இரவு முனிவர்கள் அவரவர் இடம் சென்று தங்கினர். மறுநாள் முனிவர்கள் அனைவரும் கூட்டமாக வந்து இராமனை தரிசித்தனர். முனிவர்களே! உங்களின் குறை என்ன? என்று இராமர் கேட்டார்.

முனிவர்கள் இராமா! இரக்க உணர்வு சிறிதும் இல்லாத அரக்கர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற அநியாயங்கள் காரணமாக அறநெறி துறந்தோம் தவச்செயல் நீத்தோம், புலி வாழும் காட்டில் வாழ்கின்ற மான்களைப் போல ஆனோம். எங்களுக்கு நற்கதி கிடைக்குமா?

�� அரக்கர்கள் செய்யும் கொடுமையை இந்திரனிடம் சென்று முறையிடலாம் என்றால், அவனோ அரக்கர்களுக்குப் பணிவிடை செய்பவனாக இருக்கிறான். பிறகு நாங்கள் யாரிடம் சென்று முறையிடுவது? நாங்கள் செய்த தவத்தின் பயனாக தான் இப்போது நீ இங்கே வந்திருக்கிறாய். இராமா! சூரியனை போல நீ வந்திருக்கிறாய். எங்கள் வாழ்வில் சூழ்ந்திருக்கும் இருளை நீக்கி வெளிச்சத்தை கொண்டு வர வேண்டும். எங்கள் துயரங்கள் நீங்கவேண்டும். இராமர் முனிவர்களை தேற்றி கவலையை விடுங்கள். உங்களுக்கு இடர் புரிபவர் யாராயினும் அவர்கள் வேறு அண்டத்திற்கு சென்று ஒளிந்து கொண்டாலும் அவர்களை நான் விடமாட்டேன். அவர்கள் என் அம்புக்கு இரையாவது நிச்சயம். பயப்பட வேண்டாம் என்றார்.

�� முனிவர்களே! என் தந்தை இறந்ததும், என் தாய்மார்கள் துன்பம் அடைந்ததும், என் தம்பி என்னுடன் கஷ்டப்படுவதும், என் நகரத்து மக்கள் துன்பமடைந்ததும், நான் வனம் செல்ல நேர்ந்ததும், நான் செய்த புண்ணியத்தின் பலன் என்று நினைக்கிறேன். இராமர் சொன்னதும் முனிவர்கள் இராமா! அப்படி என்றால் உன் வனவாசம் முடியும் வரை நீ இங்கேயே தங்கி எங்கள் துன்பங்களை நீக்கி வாழவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அகத்திய முனிவரை காண செல்லுதல்!

�� முனிவர்களின் வேண்டுகோளின்படி நாங்கள் இங்கு தங்குவதாக கூறி, இராமர் முனிவர்களின் பாதங்களை தொட்டு வணங்கினார். அவர்கள் தண்டகவனத்தில் பத்து ஆண்டுகள் தங்கினர். இராமர், நம் வனவாசம் மிகவும் பயனுள்ளதாக ஆயிற்று என்று இலட்சுமணர் மற்றும் சீதையிடம் கூறினார். யார் தன் உயிரை தியாகம் செய்கிறார்களோ அவர்கள் மும்மூர்த்திகளையும் வணங்கத்தக்கவர்கள் ஆகின்றனர். நாம் இந்த தவசீலர்களுக்கு உதவும் பொருட்டு நமக்கு பெரும் பாக்கியம் கிடைத்தது. இது பெரும் புண்ணியம் ஆகும் என்றார். இராமரை பல முனிவர்கள் வந்து வணங்கி சென்றனர். ஆனால் இராமர் அகத்திய முனிவரை கண்டு வணங்க விரும்பினார்.

�� பிறகு அவர்கள் அகத்திய முனிவரை தரிசிக்க வேண்டும் என்பதற்காக அவ்விடத்தை விட்டு புறப்பட்டு சென்றனர். அகத்திய முனிவரை தரிசிப்பதற்காக சென்று கொண்டிருந்த இராமரை அகத்தியரே எதிர்கொண்டு வரவேற்றார்.

<u>அகத்திய முனிவரை பற்றி.,</u>

�� தேவர்களின் பகைவனான விருத்திராசுரன் மற்றும் பல அரக்கர்கள் கடலில் புகுந்து ஒளிந்து கொண்டார்கள். இந்திரன், முதலிய தேவர்கள் அகத்திய முனிவரிடம் சென்று வேண்டினர். அவர் ஏழு கடல் நீரையும் ஒரே முறை ஆசமனம் (மந்திரபூர்வமாக நீரை மும்முறை உட்கொள்ளுதல்) செய்து நீர் முழுவதையும் உண்டு விட்டார். தண்ணீர் வற்றியதும், அங்கே அடியில் ஒளிந்துகொண்டிருந்த அரக்கர்கள் அகப்பட்டனர். தேவர்கள் அவ்வரக்கர்களை கொன்று ஒழித்தனர். பிறகு தேவர்கள் முனிவரிடம் வேண்டிக்கொள்ள, முனிவர் மீண்டும் உண்ட நீரை உமிழ்ந்து கடலை நீர் நிறையச் செய்தார் என்பது புராணம்.

�� அந்த அளவுக்கு சிறப்பு வாய்ந்த அகத்திய முனிவர், தன்னை தேடி வருவது கண்டு மகிழ்ச்சி அடைந்தார், இராமர். அவர்களை தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். இந்த பூவுலகம் செழித்து வாழ்வதற்காகத் தன் கையிலிருந்த கமண்டலத்தில் பிரம்ம லோகத்திலிருந்து காவேரி எனும் புனித நீரைக் கொண்டு வந்த அகத்திய முனிவர், இராமனைக் கண்டு கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க வரவேற்றார். அனைவரும் அகத்தியரின் தவச்சாலை சென்று


https://telegram.me/aedahamlibrary

அடைந்தனர். தவச்சாலையில் முனிவர், இராமரை நன்கு உபசரித்தார். அகத்திய முனிவர் இராமரை இங்கேயே தங்கும்படி வேண்டிக் கொண்டார்.

�� அதற்கு இராமர் 'முனிவர் பெருமானே! இந்தக் காட்டில் தீங்கு செய்து வாழுகின்ற அரக்கர்களை அழிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இதற்கு தாங்கள் என்னை ஆசி கூறி அனுப்ப வேண்டும்' என்றார். அகத்திய முனிவர் இராமா! நீ நல்ல காரியம் செய்யத் துணிந்துள்ளாய். உனக்கு வெற்றி உண்டாகட்டும்' என்று ஆசி கூறி சிறந்த வில்லையும், கணைகளையும் இராமரிடம் கொடுத்தார். பிறகு அகத்திய முனிவர் பஞ்சவடி என்னும் இடத்தின் பெருமைகளை கூறி, அங்கு சென்று வாழுமாறு என்று சொல்லி அவர்களை வழியனுப்பி வைத்தார். பிறகு மூவரும் பஞ்சவடி நோக்கி பயணம் செய்ய தொடங்கினர். போகும் வழியில் அவர்கள் பல நதிகளை பல மலைகளை கடந்து சென்றனர்.

�� காசிப முனிவருக்கு அருண பகவானும், கருட பகவானும் பிறந்தார்கள். இவர்கள் தெய்வப் பறவைகள். பேசும் திறன் கொண்டவர்கள். அருண பகவான் பேராற்றல் படைத்தவர். ஆதித்த பகவானுக்கு ரத சாரதியாக இருந்து தொண்டு புரிபவர். இவருக்கு சம்பாதி, ஜடாயு என இரு புதல்வர்கள். பல ஆண்டுகள் சடை போல் பின்னி கொண்டு நீண்ட காலம் வாழ்ந்ததால் ஜடாயு எனப் பெயர் பெற்றான்.

ஆரண்ய காண்டம்



ஜடாயு சந்திப்பு!

�� ஜடாயு ஓர் உயர்ந்த மலையின் மேல் கம்பீரமாக வீற்றிருந்தார். இராமர் அவரை பார்த்து ஓர் அரக்கன் பறவை உருவத்தில் நமக்கு இடர் செய்ய வந்து இருக்கிறான் என நினைத்துக் கொண்டார். இராமர், இலட்சுமணர் வருவதை கவனித்து கொண்டிருந்தார், ஜடாயு. இவர்கள் தவ

வேடத்தில் இருந்தாலும் தவசிகள் இல்லை. இவர்கள் கையில் வில்லேந்தி இருப்பதால் தேவர்களாக இருக்கக்கூடும் என எண்ணிக் கொண்டு இருந்தார். இவர்கள் உடன் வரும் தேவியை பார்த்தால் திருமகள் போல் தோன்றுகிறாள். இவர்களை பார்க்கும் போது எனக்கு என் நண்பன் தசரத சக்ரவர்த்தி ஞாபகம் வருகிறது. இவர்கள் யாராக இருக்கக்கூடும் என எண்ணிக் கொண்டு இருந்தார்.

�� இராம இலட்சுமணர் அருகில் வந்தவுடன் குழந்தைகளே! நீங்கள் யார்? என அன்புடன் கேட்டார், ஜடாயு. இராமர், ஐயா! நாங்கள் தசரத சக்ரவர்த்தியின் குமாரர்கள் என்று கூறினார். இதைக் கேட்ட ஜடாயுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டானது. தசரதர் என் உடன்பிறவா சகோதரன். அவன் நலமாக இருக்கிறானா? எனக் கேட்டார். இராமர், சத்தியத்தை நிலைநாட்ட என் தந்தை முக்திநிலையை அடைந்து விட்டார் எனக் கூறினார். இதை கேட்ட ஜடாயு அதிர்ச்சியில் மயங்கி விழுந்தார். உடனே இராம இலட்சுமணர் ஜடாயுவை மயக்க நிலையில் இருந்து தெளிய வைத்தனர். ஜடாயு கண்ணீர் மல்க தசரதரை நினைத்து அழுதார். தசரதா! உன் கொடை தானத்திற்கு தோல்வி வந்து விட்டதே. உன் உயிர் பிரிந்த செய்தியை ஒருபோதும் என் மனது ஏற்று கொள்ளவில்லையே. நீயும் நானும் இரு உடல் ஓர் உயிர் போலவே பழகினோம். நீ இல்லா இவ்வுலகில் ஒருபோதும் நானும் இருக்க மாட்டேன்.

�� இப்பொழுதே நான் தீயில் பாய்ந்து உயிரை விடுகிறேன். நீங்கள் உங்கள் தந்தைக்கு செய்த ஈமச்சடங்குகளை எனக்கும் செய்வீர்களாக! என்று கேட்டார். இராமர் இலட்சுமணர் இதனை கேட்டு மிகவும் வருந்தினார்கள். எங்கள் தந்தையின் உயிர் தோழனாகிய தாங்களே உயிரை மாய்த்து கொள்வேன் என்றால் எங்களுக்கு வேறு யார் ஆதரவு தர முடியும். இராமர் ஜடாயுவை வணங்கி, பெரியப்பா! நாங்கள் வாழும் பொருட்டு ஒருபோதும் தாங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். தந்தை, தாய்க்கு செய்து கொடுத்த வரத்தின்படி வனவாசம் வந்துவிட்ட எங்களை தாங்களும் பிரிந்துவிட்டால் நாங்கள் என்ன தான் செய்வோம். சரி குழந்தைகளே! நான் நீங்கள் அயோத்திக்கு திரும்பும் வரை சாக மாட்டேன் என்றார், ஜடாயு. நீங்கள் இக்கொடிய கானகத்திற்கு வரக் காரணம் என்னவென்று கேட்டார் ஜடாயு. இலட்சுமணர் நடந்த எல்லாவற்றையும் ஜடாயுவிடம் கூறினார். இதைக் கேட்ட ஜடாயு மிகவும் நெகிழ்ந்து போனார். தந்தைக்கு கொடுத்த சத்தியத்தை காப்பதற்காக உன் தம்பி பரதனுக்கு நாட்டை கொடுத்து விட்டு கானகம் வந்த வள்ளலே உன் வாய்மையை நான் பாராட்டுகிறேன் என்றார். சரி அது இருக்கட்டும் தங்களுடன் வந்திருக்கும் இப்பெண்மகள் யார்? எனக் கேட்டார். ஜனக மகாராஜாவின் மகள்

அண்ணாவின் மனைவி என்று கூறினார் இலட்சுமணர்.

�� ஜடாயு சீதையை பார்த்து, உன் புகழ் ஓங்குக. கணவனே கண்கண்ட தெய்வம் என்று கணவன் வந்திருக்கும் கானகத்துக்கு நீயும் வந்துள்ளாய். கற்புக்கரசியே! உன் புகழ் வாழ்க என வாழ்த்தினார். பிறகு அவர்கள் மூவரும் நடந்து செல்ல ஜடாயு குடையை போல தன் சிறகை விரித்து வழிகாட்டி கொண்டு மேலே பறந்து வந்தார். அவர்கள் பஞ்சவடி வனத்தை அடைந்தனர். புண்ணிய நதியான கோதாவரியில் மூழ்கி மகிழ்ந்தார்கள். இலட்சுமணர் அங்கு ஓர் அழகான குடிலை அமைத்தார். இராமரும், சீதையும் அக்குடிலில் வாழ்ந்தனர்.

சூர்ப்பனகை இராமரை கண்டு காதல் கொள்ளுதல்

�� சூர்ப்பனகை அரக்கர் குலத்தைச் சேர்ந்த இலங்கை அரசன் இராவணனின் தங்கை. விசுவரசு என்பவனுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி சளி என்பவளுக்கு குபேரனும், இரண்டாவது மனைவி கேகயி என்பவளுக்கு இராவணனன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை பிள்ளைகளாக பிறந்தனர். சூர்ப்பனகையின் கணவன் வித்யுத்ஜிஹ்வா என்னும் அரக்கன். வித்யுத்ஜிஹ்வா அதிகம் அறிவு உடையவன் என்பதால் தமக்கு அவனால் பெருமை கிடைக்காது. ஆதலால் அவனை கொன்று விட வேண்டும் என நினைத்தான் இராவணன். ஒரு சமயம் போரின் போது தங்கை கணவன் என்பதை கூட பார்க்காமல் அவனை கொன்று விட்டான் இராவணன்.

�� சூர்ப்பனகை அடிக்கடி கோதாவரி ஆற்றில் இறங்கி வெகுநேரம் நின்று கொண்டிருப்பாள். அன்றும் பஞ்சவடிக்குத்தான் வந்து கொண்டிருந்தாள். தூரத்தில் வரும்போதே கோதாவரிக் கரையில் புதிதாக ஓர் பர்ண சாலை இருப்பதை பார்த்து விட்டாள் சூர்ப்பனகை. இது முனிவனின் வேலையாக தான் இருக்கும். இந்த வனத்துக்கு நான் அரசி என்னைக் கேட்காமல் இப்படியொரு காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறான். இந்த முனிவன்கள் மேல் இரக்கமே காட்டக் கூடாது என்று நினைத்துக் கொண்டு வேகமாக சென்றாள். அவள் செல்லும் வேகத்தில் பூமியே அதிர்ந்தது. பர்ணசாலை பிய்த்து எறிந்துவிடும் நோக்கத்தில் ஆவேசம் பொங்க சென்றாள். அவள் சென்ற வேகத்தில் சட்டென்று நின்று விட்டாள். இராமர் ஓர் மரத்தின் கீழ் அமர்ந்து இறைவனை நினைத்து தியானம் செய்து கொண்டிருந்தார். இராமரை கண்டவுடன் அவளுக்கு இராமரின் மேல் காதல் வந்துவிட்டது. ஆகா! இவர் என்ன அழகு! ஆயிரம் ஆண்கள் சேர்ந்தாலும் இவரின் அழகுக்கு ஈடாக முடியாது. இவரை கடவுள் எனக்காக தான் படைத்து இருக்கிறான். ஆனால் நானோ ஒரு அரக்கி. என் உருவில் சென்றால் அவன் என்னை விரும்ப மாட்டான். ஆதலால் நான் அழகிய ஒரு பெண் உருவில் செல்கிறேன் என்று பெண் உருவம் எடுத்தாள். அன்னம் போல் நடந்து இராமன் முன் நின்றாள். இராமர் அவளை பார்த்து, யாரம்மா நீ ? இங்கு என்ன செய்து கொண்டு இருக்கிறாய்? உன் பெயர் என்ன? உன் தாய் தந்தையர் எங்கே? என வினவினார். ஆனால் இராமருக்கு இவள் தீயவள் என்று அடிமனதில் தோன்றியது.

�� சூர்ப்பனகை, பெருமானே! தங்களுக்கு வணக்கம்! என் பெயர்

காமவல்லி. நான் பிரம்ம தேவரின் பேரன் விஸ்ரவசுவின் மகள் ஆவேன். என் அண்ணன் குபேரன் மற்றும் இராவணனுடைய தங்கை நான். நான் கன்னி பெண். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றாள். இராமர், அப்படியா? நீ இராவணின் தங்கையா? இராவணனோ ஒரு அரக்கன். அப்படியென்றால் நீ ஒரு அரக்கியாக தான் இருக்க வேண்டும். நீ எப்படி அழகிய பெண் உருவில் இருக்கிறாய்? என்றார். அதற்கு சூர்ப்பனகை, ஆம் நாம் ஒரு அரக்கி தான். எனக்கு அரக்கியாக இருப்பதில் விருப்பம் இல்லை. ஆதலால் தவம் இருந்து தேவர்களிடம் வரம் பெற்று பெண் உருவம் பெற்றேன் என்று சிறிதும் கவலைப்படாமல் பொய் கூறினாள்.

�� பெண்மணியே! இக்கொடிய கானகத்தில் தனியாக என்ன செய்து கொண்டு இருக்கிறாய் என வினவினார். பெருமானே! எனக்கு அரக்கர்களுடன் வாழ பிடிக்கவில்லை. ஆதலால் இங்கு வந்து தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அன்புடன் பணிவிடை செய்து கொண்டு இருக்கிறேன் என்றும் மறுபடியும் பொய் உரைத்தாள். இராமர், பெண்மணியே! நீ என்னை காண வந்த நோக்கம் என்ன? என்று சொல்லவில்லையே என வினவினார். சூர்ப்பனகை தன் தந்திரத்தை ஆரம்பித்தாள். பெருமானே நான் தங்களை பார்த்தவுடன் என்னை அறியாமல் என் மனம் தங்களிடம் வந்துவிட்டது. நான் உங்களை விரும்புகிறேன். தாங்கள் என்னை திருமணம் செய்து மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அழகிய குரலில் கொணஞ்சும் விதமாக கேட்டாள்.

சூர்ப்பனகையின் கோபம்!

�� பெண்மணியே! நீயோ விஸ்ரவசுவின் மகள். அவர் ஒரு அந்தணர். நானோ தசரதரின் ராஜகுமாரன். அந்தணரின் மகளை இராஜகுமாரர்கள் மணந்து கொள்ளக் கூடாது. அது மட்டுமின்றி உன் தாய், தந்தை, இராவணன் முதலிய உன் சகோதரர்களின் அனுமதியின்றி உன்னை மணந்து கொள்வது தவறான செயல் ஆகும். நான் திருமணம் ஆனவன். நீ என்னை விரும்புவது முறையற்ற செயல் ஆகும் என்றார், இராமர். இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது சீதை வந்து கொண்டு இருந்தாள். சீதையின் அழகை பார்த்து சூர்ப்பனகையே ஒரு நிமிடம் மயங்கி போனாள். சீதை ராமனை நோக்கி வருவதை சூர்ப்பனகை கவனித்தாள்.

�� சூர்ப்பனகை இராமனிடம், பெருமானே! தங்களை நோக்கி வருபவள் ஒரு அரக்கி. நீங்கள் அவளை நம்ப வேண்டாம். இவள் மாய வேலை செய்வதில் மிகவும் வல்லவள் என்றாள். இராமர், சூர்ப்பனகை நல்லவள் அல்ல தீயவள் என்பதை உறுதி செய்து கொண்டார். அவளிடம் விளையாட ஆரம்பித்தார். இராமர் சூர்ப்பனகையிடம், நானோ திருமணம் ஆனவன். என்னை நோக்கி வருபவள் என் மனைவி சீதை. திருமணம் ஆன ஒரு ஆண்மகனை மறுபடியும் திருமணம் செய்ய சொல்வது உனக்கு தீமையை உண்டாக்கும். உனக்கு நான் ஒரு வழியை காட்டுகிறேன். இதோ என் தம்பி இலட்சுமணர் இருக்கிறான். அழகிலும், வீரத்திலும் சிறந்தவன். நீ வேண்டுமானால் அவனை திருமணம் செய்து கொள் என்றார்.

�� சூர்ப்பனகையும் இராமனின் சொல்படி அவனை விட்டுவிட்டு இலட்சுமணனிடம் பேச ஆரம்பித்தாள். வீரனே! உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. வா! நாம் இருவரும் திருமணம் செய்து மகிழ்ச்சியாக இருப்போம் என்றாள். இலட்சுமணரும் அண்ணனுடன் சேர்ந்து கொண்டு, நீ என்ன பைத்தியமா? நானோ அண்ணனுக்கு அடிமையாக இருக்கிறேன். நீ என்னை திருமணம் செய்து கொண்டால் அடிமைக்கு அடிமையாகத்தான் இருக்க வேண்டும். நீ நன்றாக சிந்தித்துப்பார். இதற்கு பதில் என் அண்ணன் இராமனை இரண்டாவது தாரமாக திருமணம் செய்து கொள்ளலாம் என்றார். சீதைக்காக நீ பயப்பட தேவையில்லை. என் அண்ணனையே திருமணம் செய்து கொள் என்றார். சூர்ப்பனைகையும் இலட்சுமணனின் பேச்சை சரி என நினைத்து மறுபடியும் இராமனிடம் சென்று சீதையை பார்த்தாள். இவளால் தான் நீங்கள் என்னை திருமணம் செய்ய மறுக்கிறீர்கள். இவளை நான் ஒழித்து விடுகிறேன். பிறகு தாங்கள்

என்னை தாராளமாக திருமணம் செய்து கொள்ளலாம் எனக் கூறி கொண்டு சீதையின் மீது பாய்ந்தாள்.

�� சீதை பயந்து இராமனின் பின் ஒளிந்து கொண்டாள். இதற்கு மேல் விளையாடினால் ஆபத்தாகிவிடும் என நினைத்து இலட்சுமணனிடம், இலட்சுமணா! இவளுக்கு நீ நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்றார், இராமர். இராமர் சீதையை பர்ணசாலைக்கு அழைத்துச் சென்றார். இலட்சுமணர், அரக்கியிடன் சண்டையிட்டு அவளின் காதையும், மூக்கையும் அறுத்து துரத்தி அனுப்பினார். இரத்தம் வழிந்தோடியது. அவள் வலியால் அலறினாள். பிறகு சூர்ப்பனகை அங்கிருந்து மாயமாக மறைந்து சென்றாள்.

�� சூர்ப்பனகை நேராக, அரக்கர்கள் சூழ அமர்ந்திருக்கும் ராட்சஷ தலைவனான கரன் முன் நின்றாள். கரன், சூர்ப்பனகையின் நிலையை பார்த்து என்ன ஆயிற்று? என விசாரித்தான். என் நிலைமைக்கு தவக்கோலத்தில் வனத்திற்கு வந்திருக்கும் இராமனும், இலட்சுமணனும் தான் காரணம் என்றாள். கரன், எனக்கு ஒன்றும் புரியவில்லை சற்று தெளிவாக சொல் என்றான். சூர்ப்பனகை, தசரதரின் இரண்டு குமாரர்கள் தவக்கோலம் பூண்டு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களுடன் ஒரு பெண்ணும் இருக்கிறாள். அப்பெண்ணின் காரணமாக அவர்கள் என்னை இக்கதிக்கு ஆளாக்கி விட்டார்கள். நீ உடனே சென்று அவர்களை வதம் செய்துவிட்டு வா என்றாள்.

இராமர் அரக்கர்களிடம் யுத்தம் புரிதல்

�� கரன் தன் பதினான்கு சேனாதிபதிகளுக்கும், உடனே சென்று அந்த இருவரையும் அவர்களுடன் இருக்கும் அப்பெண்ணையும் அழைத்து வாருங்கள் என கட்டளையிட்டான். கரனின் சேனாதிபதிகளை அழைத்துக் கொண்டு சூர்ப்பனகை இராமருடைய பர்ணசாலைக்கு வந்தாள். அவர்கள் தான் என்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்கள். அவர்களை உடனே கொன்று விடுங்கள் என்றாள். இராமர், சூர்ப்பனகை மற்றும் அவளின் சேனாதிபதிகளை பார்த்த உடன் அவளின் நோக்கத்தை அறிந்து கொண்டார். உடனே, இலட்சுமணரிடம், இலட்சுமணா! சீதையை சிறிது நேரம் பத்திரமாக பார்த்துக் கொள். இவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். இராமர் தன்னுடைய வில்லை ஏந்தி சேனாதிபதிகளை பார்த்து, முனிவர்களின் வேண்டுகோளின்படி அரக்கர்களை அழிக்கவே இந்த வனத்தில் நாங்கள் குடியுள்ளோம். உங்கள் உயிர் மீது ஆசை இருந்தால் உடனே தப்பி ஓடுங்கள். இல்லையேல் உங்கள் யாவரையும் விடமாட்டேன் என எச்சரித்தார்.

�� சேனாதிபதிகளும் தங்கள் பலத்தை பற்றி பலவாறாக பேசினார்கள். யுத்தம் ஆரம்பமானது. சிறிது நேரத்தில் இராமருடைய பாணங்களுக்கு அரக்கர்கள் இரையாகி மாண்டு போனார்கள். மறுபடியும் சூர்ப்பனகை மிகுந்த கோபத்துடன் கரனிடம் சென்று அழுது புரண்டாள். கரனுக்கு ஒன்றும் புரியவில்லை. நீ ஏன் அழுகிறாய். நான் தான் பதினான்கு சேனாதிபதிகளையும் அனுப்பியுள்ளேன். அவர்கள் இந்நேரம் காரியத்தை முடித்திருப்பார்கள். நீ அழாதே! எனக் கூறினான். அவள் உடனே எழுந்து கண்களை துடைத்து கொண்டு, நீ அனுப்பிய பதினான்கு சேனாதிபதிகளும் அங்கு பிணமாக கிடக்கிறார்கள். இராமனுடைய வீரத்தால் சேனாதிபதிகள் அனைவரும் மாண்டார்கள். இராமனின் வீரத்தை உனக்கு எப்படி சொல்வது என்று தெரியவில்லை? உன் ராட்ஷச குலத்தை காப்பாற்ற வேண்டுமென்றால் உடனே சென்று இராமனிடம் யுத்தம் செய்.

�� நீ பலசாலி என்று அனைவரிடமும் சொல்வதால் ஒரு பயனும் இல்லை. உடனே இராமனிடம் சென்று போரிட்டு உன் வீரத்தையும், தீரத்தையும் காண்பி. இல்லையேல் அவன் உன் குலத்தை நிச்சயம் அழிப்பான் என்றாள். தன் சபையில் சூர்ப்பனகை இப்படி தன்னை இழிவுபடுத்தி பேசுவதை கரனால் பொறுத்து கொள்ள முடியவில்லை. சூர்ப்பனகை! நீ இந்த அற்பனை கண்டு இவ்வளவு அஞ்சி பேசலாமா?

https://telegram.me/aedahamlibrary

அவனைக் கொல்ல எனக்கு ஒரு நிமிடம் போதும். அவனை அழித்து அவனின் இரத்தத்தை உனக்கு தருகிறேன். கரன் அங்கிருந்து செல்ல முற்பட்டான். உடனே சூர்ப்பனகை! நீ தனியாக போகாதே உன்னுடன் சேனையை அழைத்துக் கொண்டு செல் என்றாள்.

�� கரனும் அப்படியே கட்டளையிட்டான். தூஷணன் தலைமையில் ஆயுதங்களுடன் பெரிய சேனை சென்றது. அவர்களுக்கு பின்னால் கரனும் தேரில் சென்றான். இவர்கள் போகும் வழியில் பல அபசகுணங்களை கண்டார்கள். அதற்கு கரன், இந்த அபசகுனங்களை கண்டு யாரும் அஞ்ச வேண்டாம். நாம் சீக்கிரம் அவர்களை கொன்று விட்டு திரும்புவோம். நான் இதுவரையில் எந்த யுத்தத்திலும் தோல்வி அடைந்ததில்லை என்று கூறினான். கரனின் இவ்வார்த்தைகளை கேட்டவுடன் சேனைகள் கம்பீரமாக சென்றன. பர்ணசாலையில் இராமருக்கும், இலட்சுமணக்கும் சேனை வரும் ஓசை கேட்டது. யுத்தத்திற்காக சேனை வந்துக் கொண்டு இருக்கிறது என்பதை அறிந்த இராமர் யுத்தத்திற்கு தயாரானார். உடனே இலட்சுமணரிடம், இலட்சுமணா! சேனையின் ஓசையை கேட்டாயா! இன்று யுத்தம் நடப்பது நிச்சயம். ராட்ஷச அரக்கர்களும் அழிந்து போவது நிச்சயம் எனக் கூறினார்.

�� இலட்சுமணா! நீ ஆயுதங்கள் ஏந்தி கவசம் அணிந்து சீதையை அழைத்து போய் மலை குகையில் பத்திரமாக பாதுகாப்பாய். நான் இங்கு இருந்து எதிர் வரும் ராட்ஷச சேனையை பார்த்துக் கொள்கிறேன். நீ தாமதிக்காமல் சீதையை அழைத்துச் செல் எனக் கூறினார். பிறகு இராமரும் கவசம் அணிந்து யுத்தத்திற்கு தயாரானார். இலட்சுமணரும் சீதையை அழைத்துக் கொண்டு மலை குகைக்கு சென்றார்.

இராமர் அரக்கர்களை அழித்தல்!

�� தேவர்களும், ரிஷிகளும் ஆகாயத்திலிருந்து யுத்தத்தை பார்க்க வந்தனர். ஆனால் அவர்கள் இராமர் தனியாக யுத்தத்தில் எப்படி பங்கு கொள்ள போகிறார் எனக் கவலை கொண்டார்கள்.

�� சேனைகள் பெரும் ஓசையை எழுப்பிக் கொண்டு பர்ணசாலையை வந்தடைந்தது. அரக்கர்கள் எழுப்பிய ஓசையினால் விலங்குகள் எல்லாம் பயந்து ஓடின. இராமர் வில்லை ஏந்தி கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாக நின்று கொண்டு இருந்தார். ராட்ஷச சேனைகள் இராமரை சூழ்ந்து கொண்டன. யுத்தம் மிக கோரமாக ஆரம்பித்தது. அரக்கர்களால் இராமரின் உடல் மிகவும் அடிபட்டும் அவர் தளராமல் எதிர்த்து யுத்தம் புரிந்தார். அச்சமயத்தில் இராமர் நாணை பூட்டுவதோ, நாணில் இருந்து அம்பு வெளிவருவதோ கண்ணுக்கு தெரியவில்லை. அந்த அளவுக்கு வேகமாக யுத்தம் புரிந்தார். இராமரின் பாணங்களுக்கு ஆயிரக்கணக்கான அரக்கர்கள், யானைகள், குதிரைகள் இரையாயின. அரக்கர்களின் சேனைகள் நிர்முலமாகின.

�� இதைக்கண்ட தூஷணன் ஒரு பெரும் படையை கூட்டி கொண்டு இராமனின் மீது பாய்ந்தான். சிறிது நேரம்தான் தூஷணம் அட்டகாசங்கள் நடந்தது. பிறகு இராமரின் பாணங்களுக்கு தூஷணனின் படைகள், தேர்கள், குதிரைகள், யானைகள் என அனைத்தும் இரையாயின. பெரும் கோபங்கொண்டு தூஷணன் தன் தண்டாயுதத்தை கொண்டு இராமன் மீது பாய்ந்தான். இராமனின் ஒரே பாணத்திலேயே அவன் தரையில் விழுந்து இறந்தான். தூஷணன் இறந்ததை பார்த்த மற்ற அரக்கர்கள் இராமர் மீது பாய்ந்தனர். இராமர் எல்லா அரக்கர்களையும் தன் பாணங்களை கொண்டு கொன்றார். இவ்வாறு கரனுடன் வந்த எல்லா சேனைகளும் இராமரின் கோதண்டத்துக்கு இரையாயின. அரக்கர்களில் மீதம் இருந்தவர்கள் கரன் மற்றும் திரிசரஸ் தான். கோபங்கொண்ட கரன் இராமருடன் சண்டையிட முன் சென்றார். அப்போது திரிசரஸ் கரனை தடுத்து நிறுத்தி, இராமனை கொன்று நான் வெற்றி பெறுவேன், இல்லையென்றால் நான் இறந்த பின் நீ ராமனை எதிர்த்து நின்று சண்டையிடு என கூறி திரிசரஸ் முன் சென்றான். அவன் இராமனை தாக்க எவ்வளவோ முயற்சித்தான். முடிவில் இராமர் அவன் மேல் ஒரு பாணத்தை எய்தினார். அவன் அவ்விடத்திலேயே இறந்தான்.

�� இதனைப் பார்த்த கரன், கோபங்கொண்டு தேரில் ஏறி இராமரை

நோக்கி பாணத்தை எய்தினான். அப்பாணத்தால் இராமரின் கவசம் அறுந்து கீழே விழுந்தது. பிறகு இராமர் வில்லை எடுத்து, கரனுடைய வில், தேர் என அனைத்தையும் அழித்தார். கரன் தன் தேர், வில் என அனைத்தும் இழந்து நின்றான். கடைசியில் அவன் தன் கதாயுதத்தை கையில் எடுத்தான். இராமர் கரனை பார்த்து, அரக்கனே! வனத்தில் தவம் இருக்கும் முனிவர்களை பல தீய செயல்கள் செய்து இம்சித்து வந்தாய்.

உலகில் எவன் ஒருவன் தீய செயல்கள் செய்து பலரின் வெறுப்பை பெறுகிறானோ அவன் ஒரு நாள் அழிவது உறுதி. அதேபோல் இன்று நீ அழிவது நிச்சயம். உன் பசிக்காக பல முனிவர்களை கொன்று தின்றாய்? ஆனால் இன்று என் பாணத்தால் உனக்கு அழிவு நிச்சயம் என்றார்.

�� கரன் உடனே, அற்ப மனிதனே! யாரும் தன்னைதானே புகழ்ந்து கொண்டு பேச மாட்டார்கள். நீ பேசும் பேச்செல்லாம் அற்பத்தனமான பேச்சு. முடிந்தால் நீ என்னை வென்று காட்டு. இன்று உனக்கு எமனாக நான் இருக்கிறேன். உன்னை கொல்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன் என்று கூறி அவன் தன் கையில் வைத்து இருந்த கதாயுதத்தை சுழற்றி இராமர் மீது வீசினான். இராமரும் கதாயுதத்தை பார்த்து பாணத்தை எய்தினார். கதாயுதம் துண்டு துண்டாக நொறுங்கி தரையில் விழுந்தது. பிறகு கரன் பக்கத்தில் இருந்த மரத்தை பிடுங்கி, இராமர் மீது வீசினான். இராமர் தன் வில்லை கொண்டு தன்னை நோக்கி வந்த மரத்தை தடுத்தார். உடனே இராமர் தன் கையில் வைத்திருந்த திவ்விய பாணத்தை கரன் மீது எய்தினார். கரன் அவ்விடத்திலே தன் உயிரை மாய்த்தான். இந்த யுத்தத்தை பார்த்து கொண்டு இருந்த தேவர்களும். ரிஷிகளும் மலர்மாரி பொழிந்தார்கள்.

சூர்ப்பனகை இராவணனிடம் சென்று முறையிடுதல்!

�� இராமர், அரக்கர் கூட்டத்தை அழித்துவிட்டு ஆசிரமம் திரும்பினார். சீதையும், இலட்சுமணனும் மலைக்குகையில் இருந்து திரும்பி ஆசிரமத்திற்கு வந்தனர். வெற்றியோடு திரும்பி வந்த இராமனை சீதையும், இலட்சுமணனும் கண்ணீர் மல்க வரவேற்றனர்.

�� சூர்ப்பனகை, நான் இராமன் மீது வைத்த காதலால் என் மூக்கு, காதுகளை மட்டும் இழக்கவில்லை என் சகோதரர்களாகிய உங்களையும் நான் இழந்துள்ளேன் என்று புலம்பி அழுதாள். எனக்கு நேர்ந்த இந்த அநியாயத்தை நான் இராவணனிடம் சென்று முறையிடுவேன் என்று கூறி இலங்கைக்கு விரைந்து சென்றாள். இலங்கையில் இராவணன் ஓர் மணிமண்டபத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான். அரம்பையர்கள் ஆடிக் கொண்டு இருந்தார்கள். அந்த மண்டபத்தில் கூடியிருந்த அரசர்கள் எப்போது இராவணன் தங்கள் பக்கம் திரும்புவானோ என்று எதிர்பார்த்து கரங்களைக் கூப்பிக்கொண்டு பணிவாக நின்று கொண்டிருந்தார்கள்.

�� தேவர்கள் எல்லாம் இராவணனின் சபையில் பணிவிடை செய்து கொண்டு இருந்தார்கள். இவ்வளவு கம்பீரமாய் அமர்ந்திருந்த இராவணனின் காலடியில் சூர்ப்பனகை வந்து வீழ்ந்தாள். இராவணன் தன் தங்கை சூர்ப்பனகையின் நிலைமையை கண்டு பெரும் கோபம் கொண்டான். தங்கையே! உன்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்கள் யார்? உன் மூக்கையும், காதையும் அறுத்தவர்கள் யார்? எவ்வளவு துணிவு இருந்தால் அவர்கள் உன்னை இவ்வாறு செய்து இருப்பார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் நான் உயிருடன் விடமாட்டேன் என கோபம் பொங்க கூறினான். இராவணனின் கோபத்தை பார்த்து அங்கு கூடியிருந்தவர்கள் அஞ்சி நடுங்கினார்கள். சூர்ப்பனகை! சொல், உன்னை இக்கதிக்கு ஆளாக்கியவர்கள் யார்?

�� சூர்ப்பனகை, அண்ணா! தவக்கோலம் பூண்டு இருவர் வனத்திற்கு வந்துள்ளார்கள். அவர்கள் தசரதனின் குமாரர்கள். வீரத்தில் சிறந்தவர்கள். வில்வித்தையில் நன்கு தேறியவர்கள். எல்லா கலைகளையும் நன்கு கற்று தேர்ந்தவர்கள். தர்ம நெறியில் நடப்பவர்கள். அவர்கள் இருவருக்கும் ஈடு இணை யாரும் இல்லை. அவர்கள் பெயர் இராமன், இலட்சுமணன். அது மட்டுமில்லாமல் அவர்கள் அரக்கர் குலத்தை அழிப்போம் என்று சபதம் எடுத்துள்ளார்கள். என்னை இக்கதிக்கு ஆளாக்கியதும் அந்த மனிதர்கள் தான். உனக்கு இப்படியொரு தீங்கு செய்த அவர்கள் உயிரோடு

இருக்கலாமா? காட்டில் காவல் புரிந்து கொண்டு இருக்கும் கரனிடம் சென்று சொன்னாயா? என்றான் இராவணன். இதை கேட்ட சூர்ப்பனகை ஒப்பாரி வைத்து அழுதாள். பிறகு நான் முதலில் கரனிடம் தான் சென்று முறையிட்டேன். அவன் தூஷணன் மற்றும் திரிசரஸ் தலைமையில் பெரும் படைகளை அழைத்து கொண்டு இராமனிடம் யுத்தம் செய்ய சென்றான்.

�� இராமன் தனி ஒருவனாய் நின்று கரன், தூஷணன், திரிசரஸ் மூவரையும் படையோடு தன் பாணங்களால் கொன்றுவிட்டான். இதனைக்கேட்ட இராவணின் கண்கள் நெருப்பு குழம்பு போல் எரிந்தது. சூர்ப்பனகையிடம், உன் காதையும், மூக்கையும் அறுக்கும்படி நீ அவர்களை என்ன செய்தாய்? என்று கேட்டான் இராவணன். என்னுடைய இக்கதிக்கான காரணம் அவர்களுடன் இருக்கும் சீதை தான். அவள் மகாலட்சுமி போல் பேரழகு உடையவளாக இருக்கிறாள். அவளால் தான், நான் என் காதையும் மூக்கையும் இழந்தேன். அவள் இராமனுடைய மனைவி. அழகின் சொரூபமாய் தங்கச்சிலை போல் உள்ளாள். அவளை பார்த்ததும் நானே ஒரு நிமிடம் மயங்கிவிட்டேன். உலகில் அவளை காட்டிலும் அழகி வேறு யாரும் இல்லை என்று பலவாறாக சீதையின் அழகைப் பற்றி கூறினாள்.

�� சீதையின் அழகைப் பற்றி கேட்டதும் இராவணனுக்கு சீதையின் மேல் காதல் வந்தது. சூர்ப்பனகை இராவணனிடம், அண்ணா! நீ சீதையை திருமணம் செய்து இராமனை என்னிடம் ஒப்படைத்து விடு என்றாள்.

மாரீசனிடம் உதவி நாடல்!

�� இராவணன் அரசவையை கலைத்துவிட்டு தன் அரண்மனைக்கு சென்றான். சீதையை நினைத்து எண்ணிக் கொண்டிருந்தான். தன் தம்பியான கரன் இறந்ததையே மறந்தான். சீதையை தன் இதயச் சிறையில் வைத்தான். சீதையின் மேல் உள்ள காதல் அதிகரித்துக் கொண்டே போனது. சீதை இப்படி தான் இருப்பாள் என கற்பனை செய்து கொண்டான். அவன் பார்க்கும் இடமெல்லாம், சீதை அவன் முன் தெரிந்தாள். இதைப்போலவே சூர்ப்பனகையும் இராமனை நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டு இருந்தாள்.

�� மறுநாள் காலை இராவணன் சூர்ப்பனகையை வரச் சொன்னான். தன் கற்பனையில் தோற்றமளித்து கொண்டிருக்கும் இவள்தானா சீதை என்பதை கேட்க சூர்ப்பனகையை வரச் சொன்னான். சூர்ப்பனகையிடம் இவள்தானா சீதை? எனக் கேட்டான். சூர்ப்பனகை இராமனை எண்ணி கொண்டு இருந்ததால், இவன் தான் நீல நிறமாய் காட்சியளிக்கும் இராமன் என்றாள். இராவணன், என் கற்பனையில் காணும் சீதை உனக்கு எப்படி இராமனாக தோன்ற முடியும் எனக் கேட்டான். அதற்கு சூர்ப்பனகை இராமன் மீது உள்ள பயத்தினால் எனக்கு தோன்றுகிறது என்றாள்.

�� இராவணன் காலையில் எழுந்து, தான் செய்யும் காலை கடமைகளை கூட செய்யவில்லை. எப்படியாவது சீதையை கவர்ந்து கொண்டு வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருந்தான். அதற்கு தாடகையின் மகன், மாயத்தில் வல்லவனான மாரீசனின் உதவியை நாட எண்ணினான். உடனே இராவணன் தன் புஷ்பக விமானத்தில் ஏறி, ஓர் ஆலமரத்தின் கீழ் தவம் செய்து கொண்டு இருக்கும் மாரீசனிடம் சென்றான். மாரீசன் இராவணனை கண்டு திடுக்கிட்டான். இந்த காலை நேரத்தில் இவன் வந்துள்ளான்? எதற்காக வந்திருப்பான்? என அச்சம் கொண்டான். இராவணனை பார்த்து, மருமகனே! வருக! எல்லோரும் நலமாக உள்ளார்களா? எனக் கேட்டான். இராவணன், மாரீசனைப் பார்த்து மாமா! எல்லோரும் நலமாக உள்ளோம். உன் மருமகளாகிய சூர்ப்பனகை தசரத குமாரர்கள் இராம, இலட்சுமணனால் காதும் மூக்கும் அறுக்கப்பட்டாள். கரன், தூஷணன், திரிசரஸ் மூவரையும் இராமன் வதைத்து கொன்று விட்டான். இது நம் குலத்துக்கே பெரும் அவமானம், அவர்களை நாம் அழிக்க வேண்டும்.

�� மாமா! இராமனின் மனைவி சீதை மிகவும் அழகு உடையவள்.

அவளை நான் விரும்புகிறேன். நான் அவளை அடைய வேண்டும். அதற்கு நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும் என்றான். அதற்காக தான் நான் உங்களை நாடி வந்துள்ளேன் என்றான். மாரீசன் இராவணனிடம், இராவணா! நீ எப்படிப்பட்ட செயலை செய்ய துணிந்துள்ளாய் என்று தெரியுமா? உன் செய்கையால் அசுர குலமே அழிந்துவிடும். நான் ஒரு அசுரனாக இருந்தாலும் உனக்கொரு நல்ல அறிவுரை கூறுகிறேன் கேள் என்றான்.

பாவங்களுக்கு எல்லாம் பெரிய பாவம் மற்றவர் மனைவியை விரும்புவது தான். உனக்கே பல மனைவிமார்கள் இருக்க நீ மற்றவர் மனைவியை விரும்பலாமா? அடுத்தவர் மனைவியை நினைத்து அழிந்தவர் பலர் உண்டு.

�� இந்திரன் அகலிகையை விரும்பியதால் தன் பெருமையெல்லாம் இழந்து சாபத்திற்கு ஆளானான். இது போல அழிந்தவர்கள் எண்ணற்றவர். உனக்கு விருப்பமான மனைவியர் பலர் இருக்க நீ ஏன் சீதையை விரும்புகிறாய்? இதனால் உன் அரக்கர் குலமே அழிந்து போகும். இராவணா! நீ வகிக்கும் இந்தப் பதவியும், செல்வமும் உனக்கு சாதாரணமாக கிடைத்தது அல்ல. இரவும் பகலும் தவமிருந்து, உன் உடலை வருந்தி நீ பெற்றுள்ள இப்பதவியை பெண்ணாசை கொண்டு இழந்து விடாதே என அறிவுரை கூறினார்.

கவர்ந்த பொன் மான்!

�� என் தாய் தாடகையும் இராமனால் தான் மாண்டு போனார். தம்பி சுபாகுவும் இராமனால் தான் மாண்டு போனார். ஆனால் நான் மட்டும் உயிர் தப்பி பிழைத்து விட்டேன். அதை நினைத்தால் இன்றும் கூட என் உடல் நடுங்குகிறது. விராதன் பற்றி தெரியாதவர் யாரும் இல்லை. அத்தகைய விராதனையை இராமன் வீழ்த்தினான். இராமனை எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல. அது உன் உயிருக்கே எமனாக வரும். நான் சொல்வதை கேள் என்று அறிவுரை கூறினார் மாரீசன். அதற்கு இராவணன், அந்த அற்ப மனிதர்களை கண்டா நீங்கள் பயப்படுகிறீர். சீதையை நான் அடைந்தே தீர வேண்டும். உன் அறிவுரை ஒன்றும் தேவையில்லை. நான் சொல்வதை மட்டும் கேள். இல்லையேல் உன்னை கொன்று விடுவேன் என எச்சரித்தான்.

�� இராவணனுக்கு பயந்த மாரீசன், நீ சொல்வதை நான் கேட்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்று சொல் என்றான். மாமா! பெண்களுக்கு அழகான பொருட்கள் மீது தான் ஆசை. ஆதலால் நீ பொன் மானாக அவள் முன் செல்ல வேண்டும். சீதை இராமனிடம் அந்த மான் வேண்டும் என்று வேண்டுவாள். இராமனும், இலட்சுமணனும் மானை பிடிக்க செல்வார்கள். நான் அந்த சமயத்தில் சீதையை அங்கிருந்து கவர்ந்து செல்வேன் என்றான். இதைக்கேட்ட மாரீசனின் நெஞ்சம் துடிதுடித்தது. இராவணா! என் தாய் இறந்த அன்றே நான் இறந்திருக்க வேண்டியவன். நான் கடலில் விழுந்து தப்பித்து விட்டேன். இன்று என் உயிருக்கு எமனாக நீயே வந்துள்ளாய். அசுர குலம் அழிவது நிச்சயம். நீயும் அழிவது நிச்சயம் என்று கூறினான்.

�� பிறகு இருவரும் புஷ்ப ரதத்தில் பஞ்சவடியை அடைந்தார்கள். இராவணன் இராமனின் பர்ணசாலையை காண்பித்தான். பிறகு இராவணனின் ஆணைப்படி மாரீசன் அழகிய பொன் மான் வடிவம் எடுத்தான். அங்கிருந்து இராமர் தங்கியிருக்கும் பஞ்சவடிக்கு சென்றான். அங்கு சீதை பூக்களை பறித்து கொண்டு இருந்தாள். மாய மான் சீதையின் கண்களில் தெரியும்படி ஓடியது. மாய மானை பார்த்த சீதை அந்த மானின் அழகில் மயங்கினாள். கண்ணிமைக்காமல் அந்த மானை பார்த்து கொண்டு இருந்தாள். உடனே அவள், இராமனையும், இலட்சுமணனையும் அழைத்து பொன் மானை காண்பித்தாள். அந்த மானை பார்த்த இலட்சுமணருக்கு இது மாரீசனாக இருக்கக்கூடும் என சந்தேகம் எழுந்தது. மாரீசன் மாய வேலைகள் செய்து பலரை ஏமாற்றுபவன் என்பது இராம

இலட்சுமணருக்கு தெரியும்.

�� சீதை அந்த மான் எனக்கு வேண்டும் என கேட்டாள். சீதையின் ஆசையை நிறைவேற்ற இராமர் மானை பிடிக்க கிளம்பினார். அப்போது இலட்சுமணர், அண்ணா! வனம் வந்த நமக்கு காட்டு மான் எதற்கு? அது மட்டுமின்றி காட்டு மான்கள் பொன் வடிவத்தில் இருக்குமா? இந்த மான் ஏதாவது ஒரு மாயமாக கூட இருக்கலாம். நாம் ஒரு சமயம் தாடகையை வதம் செய்தபோது மாரீசன் என்னும் அரக்கன் தப்பி பிழைத்து விட்டான். ஒரு வேளை இந்த மாய வேலை அவனுடையதாக கூட இருக்கலாம் என்றார். இதற்கு இராமர், தம்பி! நமக்கு தெரியாமல் உலகில் எத்தனையோ விஷயங்கள் உண்டு. அதில் ஒன்று இந்த மானாக கூட இருக்கலாம். அது மட்டுமின்றி எனக்காக நாட்டையும், வீட்டையும் விட்டு என்னை நம்பி வந்த உன் அண்ணி சீதையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

�� சீதை, நீங்கள் இருவரும் இப்படி விவாதம் செய்து கொண்டு இருந்தாள் அந்த மான் ஓடி விடும். உடனே சென்று மானை பிடித்து வாருங்கள் என்றாள். இலட்சுமணர், அண்ணா! அரக்கர்கள் நம்மை சூழ்ந்து இடர் செய்து வருகிறார்கள். இந்த பொன் மான் அரக்கன் மாரீசனாக தான் இருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது என்றார். சீதை எனக்கு அந்த பொன் மான் வேண்டும் என்று அடம் பிடித்தாள். இராமர், இலட்சுமணா! இந்த பொன் மான் மாரீசனாக இருந்தால் அக்கணமே அவனை கொன்று விடுவேன். நீ சீதைக்கு பாதுகாப்பாக இங்கேயே இரு என்று சொல்லிவிட்டு தன் கோதண்டத்தை எடுத்துக் கொண்டு மானின் பின் சென்றார்.

மாரீசன் மாண்டு போதல்!

�� இராமர் மானை பின் தொடர்ந்து சென்றார். மாய மான் இராவணனுக்கு போதிய அவகாசம் தர எண்ணி கைக்கு சிக்குவது போல காட்டிக்கொண்டு மாயமானது. மாய மான் இராமனை வெகுதூரம் இழுத்து சென்றது. ஒரு சமயம் மெதுவாக போகும். பிறகு ஒரே பாய்ச்சலாக காட்டிற்குள் வேகமாக ஓடி மறைந்து விடும். திடீரென்று தோன்றி தன் அழகை பார்க்கும்படி ஓடும். பிடிக்கும் அளவிற்கு பக்கத்தில் இருக்கும். பக்கத்தில் போனால் தூரமாக ஓடிவிடும். இப்படியே தன் மாய வேலையை மாறி மாறி செய்தது. நெடுந்தூரம் சென்ற பிறகு இவன் அரக்கன் மாரீசன், மான் அல்ல என்பதை உணர்ந்தார். இவனை இனியும் உயிருடன் விடக்கூடாது என எண்ணிய இராமர் தன் பாணத்தை மாரீசன் மீது எய்தினார். அவன் மான் உருவில் இருந்து அரக்கனாக மாறி, துடிதுடித்து சீதா! இலட்சுமணா! என இராமனின் குரலில் அலறிக் கொண்டு மாண்டான்.

�� இராமர், தம்பி இலட்சுமணர் சொன்னது உண்மைதான். நான் தான் தவறாக எண்ணி விட்டேன். இவனின் கூக்குரலை கேட்டு சீதை தன்னை நினைத்து மிகவும் வருந்துவாளே என எண்ணினார். சீதையை பாதுகாக்க இலட்சுமணன் அருகில் உள்ளான் என்று தன்னைத்தானே சமதானப்படுத்திக் கொண்டார். சீதா! இலட்சுமணா! என மாரீசன் கதறியதைக் கேட்டு இராமர் தான் கதறுகிறார் என சீதை நினைத்துவிட்டாள். உடனே சீதை இலட்சுமணரிடம், இலட்சுமணா! விரைந்து செல். உன் அண்ணன் ஆபத்தில் உள்ளார். அவரின் குரல் உனக்கு கேட்டதா இல்லையா? காலத்தை தாமதிக்காமல் விரைந்து சென்று அண்ணனை காப்பாற்று என்றாள். சீதை தன் வயிற்றில் அடித்துக் கொண்டு, ஒரு மானுக்காக ஆசைப்பட்டு என் கணவனை இழக்கப் போகிறேனே எனப் புலம்பினாள்.


�� அரக்கர்களின் கூட்டத்தில் உன் அண்ணன் மாட்டிக் கொண்டு கதறுகிறார். நீ ஏன் இன்னும் இங்கு நின்று கொண்டு இருக்கிறாய்? சீக்கிரம் சென்று உன் அண்ணனை காப்பாற்று என்று கதறினாள். இல்லையென்றால் இப்பொழுதே என் உயிரை மாய்த்து கொள்வேன் என்றாள். இலட்சுமணர் சீதையிடம்! அன்னையே! தாங்கள் கவலை கொள்ள வேண்டாம். அந்த குரல் அண்ணனின் குரல் அல்ல. அந்த மாய அரக்கன் செய்த செயல். இவ்வுலகில் அண்ணனை மிஞ்சிய வீரன் எவரும் இல்லை. தாங்கள் அந்த குரல் அண்ணனுடையது என எண்ணி கவலை கொள்ள வேண்டாம்.

அண்ணன் தங்களை என்னிடம் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளார். ஆதலால் நான் எந்த சூழ்நிலையிலும் தங்களை தனியாக விட்டு செல்ல மாட்டேன். இது அண்ணனின் ஆணையும் கூட என்றார்.

�� இலட்சுமணா! நீ வஞ்சகம் செய்கிறாய். நீயோ மாற்றாந்தாய் மகன். கைகேயி நாட்டை பறித்துக் கொண்டாள். பரதன் அழுது புரண்டு காலில் முள் குத்தட்டும் என்று பதுகைகளை பெற்று கொண்டான். நீ உன் அண்ணனுக்கு தீங்கு செய்ய தான் வந்துள்ளாய் என்பதை உணர்ந்து கொண்டேன். இலட்சுமணா! இராமனின் குரலைக் காதால் கேட்டும் கவலைப்படாமல் என் எதிரில் நின்று கொண்டிருக்கிறாய். நீ உன் அண்ணனுக்கு உதவி செய்ய போகவில்லையென்றால் இப்பொழுதே தீ மூட்டி அதில் விழுந்து இறந்து போவேன் என்று கூறிக் கொண்டு தீயிடம் ஓடி சென்றாள். இலட்சுமணன் இதை கேட்டு மனம் நொந்து போனான்.

�� சீதையை தடுத்து நிறுத்தினான். தாங்கள் உயிரை மாய்த்து கொள்ள வேண்டாம். தங்களின் சொற்களினால் என்னை துளைத்து விட்டீர்கள். அன்னையே! நான் அண்ணனின் ஆணையை மீறி தங்களை தனியாக விட்டுச் செல்கிறேன். தங்களை விட்டு செல்வதற்கு பயமாக உள்ளது. தங்களை மறுபடியும் அண்ணனுடன் பார்ப்பேனா தெரியவில்லை என்று கூறிவிட்டு மிகுந்த துயரத்துடன் விடைப்பெற்று சென்றான்.

இராவணன் சீதையை தூக்கிச் செல்லுதல்!



�� இராவணன் தோற்றத்தில் உடல் நடுக்கம் கொண்ட ஒரு முனிவரைப் போல தோன்றினான். ஒரு முனிவர் தம் ஆசிரமத்திற்கு வந்திருப்பதை பார்த்த சீதை, உடனே கண்ணீரை துடைத்துக் கொண்டு இன்முகத்துடன் முனிவரை வரவேற்றாள். உள்ளே அழைத்து அமரச் செய்தாள். முனிவருக்கு சீதை உணவளித்தாள். இருந்தபோதிலும் சீதை வாயிலை

பார்த்து ஸ்ரீ இராமர் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தாள். முனிவன் சீதையிடம், நீ யார்? மிருகங்கள் வசிக்கும் இந்த வனத்தில் நீ தனியாக என்ன செய்து கொண்டு இருக்கிறாய்? என வினவினான். சீதை, முனிவரே! நான் தசரத புதல்வரின் மனைவி. ஜனக மன்னரின் புதல்வி, சீதை.

�� நான் தவசிகளை தெய்வமாக எண்ணுகிறேன். தாங்கள் யார்? தாங்கள் எங்கு இருந்து வந்துள்ளீர்கள்? எனக் கேட்டாள். முனிவன் தன்னை பற்றி மெல்ல மெல்ல பேச ஆரம்பித்தான். இராவணன் இலங்கையை ஆள்பவன். நற்குணமுடையவன். தேவர்கள் அனைவரும் அவனுக்கு கீழ் வேலை செய்கிறார்கள். அவன் வீரத்திற்கு நிகர் எவரும் இல்லை. அவன் உயர்ந்த பண்புகள் உடையவன். மிகவும் நல்லவன் எனக் கூறினான். இதைக் கேட்ட சீதை, முனிவரே! தாங்கள் தீயவனை நல்லவன் என்று கூறுகின்றீர்கள். என் கணவர் இராவணன் முதலிய அரக்கர்களை அழிக்க உறுதி கொண்டு உள்ளார். சீதை இராமனின் வீரத்தை புகழ்ந்து கூறினாள். இதைக் கேட்ட இராவணனுக்கு மிகுந்த கோபம் உண்டானது.

�� முனிவன், இராவணன் மிகுந்த சக்தியும் வலிமையும் படைத்தவன் என்று தன் வீரத்தை புகழ்ந்து பேசி இராமனை இகழ்ந்து பேசினான். இராவணன் உன்னை விரும்புகிறான். நீ அவனுக்கு மனைவியாக வேண்டும் என்று கூறி தன் மாய வடிவத்தை நீங்கி பத்து தலைகளுடன் அசுர வடிவுடன் நின்றான். சீதை அவனை பார்த்து அஞ்சி நடுங்கினாள். பெண்ணே! என்னை பார்த்து பயப்பட வேண்டாம். இதுவரை என் தலைகள் யாரையும் வணங்கியது இல்லை. என் பத்துத் தலைகளில் இருக்கும் கிரீடங்களைப் போல நான் உன்னை என் தலைமீது வைத்துப் போற்றுவேன். நீ என்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றான். இதைக் கேட்ட சீதை காதுகளை பொத்திக் கொண்டாள்.

�� அரக்கனே! உன் உயிரை காப்பாற்றிக் கொண்டு உடனே இங்கிருந்து செல். என் கணவன் வந்தால் உன்னை உயிருடன் விடமாட்டார் என அவன் மீது சீறினாள். இராவணனுக்கு பெருங்கோபம் உண்டானது. அவன் சீதையை வலுகட்டாயமாக இழுத்துக் கொண்டு தன் புஷ்பரக விமானத்தில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து பறந்து சென்றான்.

கிஷ்கிந்த காண்டம்

ஜடாயு இராவணனிடம் யுத்தம் செய்தல்!



�� சீதையை வலுகட்டாயமாக இழுத்து தன் புஷ்பரக விமானத்தில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து பறந்து சென்றான். சீதை, என் பெருமானே!

எங்கே உள்ளீர்கள்? இலட்சுமணா! உன்னை தவறாக எண்ணி விட்டேன். பிடிவாதமாய் உன்னை துரத்தினேனே! என்று கதறி அழுதாள். இராவணன் சீதையை பிடித்துக் கொண்டு தேரை வேகமாக செலுத்தினான். அரக்கனே! என் கணவருக்கு பயந்து மாய மானை அனுப்பி என்னை கவர்ந்த நீ, என் கணவரை பார்த்து பயப்படுகிறாய் என்பது தெரிகிறது. கீழே காட்டிலுள்ள செடிகொடி, மரங்கள் மற்றும் மலைகளிடம் இவ்வரக்கன் என்னை கவர்ந்து செல்வதை என் கணவர் இராமனிடம் சொல்லுங்கள் என்று கதறி அழுதாள். கடவுளை நினைத்து தொழுதாள்.

�� மரத்தின் மேல் அரை தூக்கமாக அமர்ந்திருந்த ஜடாயு, வானத்தில் வேகமாக சென்று கொண்டிருந்த ரதத்தை பார்த்தான். சீதையின் குரலைக் கேட்டு யார் என்பதை தெரிந்து கொண்டான். சீதையும் மரத்தின் மேல் அமர்ந்திருந்த ஜடாயுவை கண்டாள். சீதை ஜடாயுவிடம், இந்தக் கொடிய அரக்கன் என்னை கவர்ந்து கொண்டு செல்கிறான். தாங்கள் இவ்வரக்கனை எதிர்த்தால் தங்களையும் இவன் கொன்று விடுவான். தாங்கள் இந்த செய்தியை இராமனிடம் சொல்லுங்கள் என்று அழுதாள். ஜடாயு இராவணனை பார்த்து, தம்பி இராவணா! நான் கழுகுராஜன், ஜடாயு. நானும் உன்னை போல் நீண்ட நாட்களாக அரசு புரிந்தவன். நீ செய்யும் இச்செயல் பெரும் பாவமாகும். மக்களை காக்கும் அரசன் இத்தகைய செயலை செய்யலாமா? நீ இப்பாவச் செயலை செய்வதால் நீ அழிந்து போவது உறுதி.

�� ஜடாயு பேசியதைக் கேட்ட இராவணன் பெரும் கோபம் கொண்டான். நிறுத்து! இதற்கு மேல் ஒரு வார்த்தையும் பேசாதே. அந்த மனிதர்களை என் முன் வரச்சொல், அவர்களை கொன்றுவிடுகிறேன். உயிர்மேல் ஆசை இருந்தால் ஓடிப்போய் விடு என்றான். அரக்கனே! உடனே அவளை விட்டுவிட்டு இங்கிருந்து செல், இல்லையென்றால் நீ அழிந்து போவாய். இராமனின் தேவியை கவர்ந்து செல்வது உன் அழிவிற்கான பாதை ஆகும். இராமன் இல்லாத நேரத்தில் நீ சீதையை கவர்ந்து செல்வது உன் கோழைதனத்தை காட்டுகிறது. இராமனிடம் யுத்தம் செய்ய துணிவில்லாமல் இப்படி கோழைதனமாய் சீதையை கவர்ந்து செல்கிறாயா! நான் இருக்கும் வரையில் சீதையை இங்கிருந்து கவர்ந்து செல்லவிடமாட்டேன். நீ வீரன் என்றால் என்னுடன் வந்து போரிடு என்று சொல்லி ஜடாயு மேலே பறந்தான். ஜடாயு பறந்த வேகத்தில் மரங்களும், மலைகளும் ஒன்றொன்று மோதிக் கொண்டன.

�� இராவணன் பெரும் கோபங்கொண்டு ஜடாயுவைத் தாக்கினான். இராவணனை அங்கிருந்து செல்லாமல் தடுத்து நிறுத்தினான், ஜடாயு. தன் சிறகுகளாலும், மூக்காலும் போர் புரிந்தான் ஜடாயு. ஜடாயு தன் மூக்கால்

இராவணனை உடல் முழுவதும் கீறினான். இராவணனின் உடலில் இரத்தம்



சிந்தியது. வலி தாங்க முடியாமல் இராவணன் சீதையை தன் கையில் பிடித்துக் கொண்டு ஜடாயுவை விரட்டினான். இராவணன் ஒரு சூலாயுதத்தை எடுத்து ஜடாயு மீது வீசினான். அந்த சூலாயுதம் செயலற்றுப் போய் கீழே விழுந்தது. பிறகு இராவணன் தன் தண்டாயுதத்தை எடுத்து ஜடாயு மீது வீசினான். தண்டாயுதத்தால் ஜடாயு அடிபட்டுக் கீழே விழுந்தான். ஜடாயு கீழே விழுந்த நேரம் பார்த்து இராவணன் தேரை வானத்தில் வேகமாக செலுத்தினான். சீதை மிகுந்த துன்பத்தால் அழுதாள்.

�� இதைக் கண்ட ஜடாயு சீதைக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டே மேலெழுந்து இராவணனை தாக்கினான். இந்தக் கோர யுத்தம் நீண்ட நேரம் நடந்தது. மிகுந்த கோபம் கொண்ட இராவணன் தன்னிடம் இருந்த உடைவாளை உறுவி ஜடாயுவின் சிறகுகளையும், கால்களையும் வெட்டி வீழ்த்தினான். அந்த வாள் சிவபெருமான் இராவணனுக்குக் கொடுத்த வாள். தன் சிறகுகளையும் கால்களையும் இழந்த ஜடாயு இராமரை நினைத்து இராம் இராம் என சொல்லிக் கொண்டு தரையில் விழுந்து இறந்தான். இதனைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் பெரும் துயரம் அடைந்தனர்.

சீதையை தேடி செல்லுதல்!

�� சீதை ஜடாயுவின் மரணத்தை பார்த்து மிகவும் வேதனைப்பட்டாள். தன்னை காப்பாற்ற வந்த ஜடாயுவுக்கு நேர்ந்த இந்த நிலைமையை கண்டு சீதை மிகவும் வருந்தினாள். இராவணன் இலங்கையை அடைந்தான். அங்கு அசோக வனத்தில் சீதையை சிறை வைத்தான். கொடிய அரக்கர்களை கொண்டு சீதையை காவல் புரிய வைத்தான்.

�� சீதையை தனியே விட்டுட்டு மனம் வருந்தி இலட்சுமணர் இராமரை நோக்கிச் சென்றார். மாரீசனின் குரலைக் கேட்டு சீதை தன்னை நினைத்து மிகவும் துன்பப்படுவாள் என எண்ணி இராமர் வேகமாக திரும்பிக் கொண்டு இருந்தார். வரும் வழியில் தொலைவில் இலட்சுமணன் வருவதை கண்டார் இராமர். இலட்சுமணரை பார்த்ததும் இராமரின் மனம் பதைப்பதைத்தது. இலட்சுமணனை சீதைக்கு காவலாக அங்கே இரு என்று சொல்லியிருந்தும், இவன் இங்கு வருவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு இலட்சுமணரை நோக்கி வந்தார் இராமர். இலட்சுமணர் இராமரை கண்டதும் அருகில் வந்து வணங்கி, இராமரை தழுவி கொண்டார். பிறகு இராமர் நீ சீதையை தனியாக விட்டுவிட்டு இங்கே வருவதற்கான காரணம் என்ன என்று வினவினார்.

�� இலட்சுமணர் நடந்தவற்றை எல்லாம் விவரமாக கூறினான். அன்னை! அரக்கன் குரலை தங்கள் குரல் தான் என்று கூறி என்னை வலுகட்டாயமாக அனுப்பி வைத்தார். நான் தங்களின் குரல் இல்லை என எவ்வளவு சொல்லியும் அன்னை அதை கேட்கவில்லை. அன்னை சீதை, தன்னை கடிந்து பேசி அனுப்பியதை கூறினார். இதை கேட்ட இராமன் அனைத்துக்கும் தானே காரணம் என்று மனம் வருந்தினார். தம்பி! நீ மானை பிடிக்க வேண்டாம் என சொல்லியும், நான் மானை பிடிக்க வந்தது என் தவறு தான் எனக் கூறினார். பிறகு இருவரும் சீதை அங்கே தனியாக இருப்பாள் என விரைந்து பர்ணசாலைக்கு திரும்பினர். இருவரும் பர்ணசாலையை அடைந்தனர். பர்ணசாலை வெறுமையாக இருந்தது. அங்கே சீதை இல்லாததை கண்டு இராமர் திடுக்கிட்டார். பெரும் துயரம் அடைந்தார். இராமர் சீதையை நினைத்து துயரத்தில் மூழ்கினார்.

�� இலட்சுமணர், பர்ணசாலை வெளியில் தேர் சுவடு இருப்பதை கண்டார். அத்தேர் தெற்கு நோக்கி பயணித்துள்ளது என்பதை கண்டு இராமரிடம் கூறினார். அண்ணா! நாம் நேரத்தை வீணடிக்காமல் விரைந்து சென்று அன்னையை காப்பாற்றுவோம் என கூறினார் இலட்சுமணர்.

இராமர், நீ சொல்வதும் சரிதான். வா! உடனே பின் தொடர்ந்து செல்வோம் எனக் கூறி இருவரும் பின் தொடர்ந்தனர். தேரின் சுவடை நோக்கி இருவரும் சென்றனர். சிறிது தூரம் சென்றதும் தேரின் சுவடு மறைந்து விட்டது.

தேரின் சுவடு மறைந்ததை பார்த்து இராமர் திகைத்து நின்றார். இலட்சுமணர், அண்ணா! தேரின் சுவடு மறைந்தால் என்ன? தேர் தெற்கு நோக்கி சென்றுள்ளது என்பது உறுதியாக தெரிகிறது. நாம் தெற்கு நோக்கி செல்வோம் எனக் கூறினார். இருவரும் தெற்கு நோக்கி சென்றார்கள்.

�� அவர்கள் சிறிது தூரம் சென்றதும் வழியில் வீணைக்கொடி ஒன்று அறுந்து கிடப்பதை பார்த்தார்கள். இலட்சுமணர் வீணைக் கொடியைப் பார்த்து இது இராவணனுடையது என்றார். வீணைக் கொடி ஜடாயு-வின் மூக்கினால் அறுப்பட்டுள்ளதை பார்த்தனர். இராவணனிடம் போர் புரிந்து அவன் தேரை உடைத்து வீணைக்கொடியை அறுத்தவர் ஜடாயு பெரியப்பா என்பதை உணர்ந்தனர். பிறகு இருவரும் ஜடாயுவை தேடி சென்றனர். வழியில் பல தலைகள், பல கைகள் அறுப்பட்டு கிடந்தன. இதனைப் பார்த்த இராமர், சீதையை கவர்ந்து சென்றவர் பல அரக்கர்கள் போல் தெரிகிறது என்றார். இலட்சுமணர், அண்ணா! இராவணனுக்கு பல தலைகள், பல கைகள் உண்டு. இவன் பல தலைகள், பல கைகள் அறுக்கப்பட்டாலும் திரும்ப முளைக்கும் வரம் பெற்றவன். இங்கு பல தலைகள், பல கைகள் அறுக்கப்பட்டுள்ளது. ஆனால் கால்கள் அறுப்பட வில்லை. ஆதலால் இராவணன் தான் அன்னையை கவர்ந்து சென்றுள்ளான் என்றார்.

கவந்தனிடம் மாட்டிக் கொள்ளுதல்!

��இராமர் இலட்சுமணர், ஜடாயுவை தேடி விரைந்து சென்றனர். அவர்கள் போகும் வழியில் ஒரு கொடிய வில் முறிந்து கிடப்பதையும், கவசம் அறுந்து கிடப்பதையும் கண்டனர். இதனைக் கண்ட இராமர் இங்கு பெரும் போர் நடத்திருக்க கூடும் என்றார். சிறிது தூரம் சென்றதும் இரத்த வெள்ளத்தில் ஜடாயு வீழ்ந்து இருப்பதை பார்த்து மிகவும் துன்பப்பட்டனர். இராமர் ஜடாயுவை பார்த்து புலம்பி அழுதார். வீட்டில் என் தந்தையை இழந்தேன். இங்கு தந்தைக்கு நிகரான தங்களை இழந்து விட்டேன். இனி நான் என்ன செய்வேன் என புலம்பி அழுதார். சிறிது மயக்கம் தெளிந்த ஜடாயு இராம இலட்சுமணரை பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

�� உங்களை என் உயிர் போகும் தருணத்தில் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் சீதையை தனியே விட்டுவிட்டு எங்கே சென்றீர்கள். இராவணன் சீதையை கவர்ந்து செல்வதை கண்டு நான் அவனை தடுக்க முயற்சித்தும் தோற்றுவிட்டேன். இராவணன் சிவன் கொடுத்த வாளால் என் சிறகுகளையும் கால்களையும் அறுத்துவிட்டு, இங்கிருந்து தப்பித்து ஓடி விட்டான். இதைக்கேட்ட இராமர் பெரும் கோபம் கொண்டார். சீதையை அபகரித்து சென்றதையும், தங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கியவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த விண்ணுலகத்தவரை அழித்து விடுகிறேன் என்றார். ஜடாயு, இராமா! ஒரு பெண்ணை காட்டில் தனியாக விட்டுவிட்டு ஒரு மானின் பின் சென்றது உன் தவறு. நீ விண்ணுலகத்தவரை கோபித்துக் கொண்டு ஒரு பயனும் இல்லை. அவர்கள் நீ அரக்கர்களை அழிப்பாய் என உன் உதவியை நாடி இருக்கின்றனர்.

�� ஆதலால் நீ அரக்கர் குலத்தை அழித்து உன் மனைவியை காப்பாற்று என்று கூறினார். பிறகு ஜடாயுவின் உடலை விட்டு உயிர் பிரிந்தது. இராமரும் இலட்சுமணரும் ஜடாயுவின் பிரிவை தாங்கமுடியாமல் அழுதனர். பிறகு அவர்கள் ஜடாயுவுக்கு ஈமச் சடங்குகளை செய்தனர். இராம இலட்சுமணர் அன்றைய பொழுதை ஓர் இடத்தில் கழித்தனர். இரவெல்லாம் இராமர் தூங்கவில்லை. சீதையை நினைத்து மிகவும் வேதனையடைந்தார். பொழுது விடிந்தது. இராமரும் இலட்மணரும் சீதையை தேடி தெற்கு திசையை நோக்கி பயணித்தனர். இவர்கள் வெகுதூரம் சென்று கவந்தன் என்னும் அரக்கன் இருக்கும் வனத்தை அடைந்தனர். நண்பகல் வந்தது. கவந்தனை இந்திரன் வஜ்ஜாயுதத்தால்

அடித்ததால் அவனின் தலை உடம்புக்குள் புகுந்து முண்டமாக மாறினான். கவந்தன் வனத்தில் வாழும் விலங்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி தீங்கு செய்து வந்தான். கவந்தனின் கையில் யாராவது அகப்பட்டால் உடனே அவன் தின்றுவிடுவான். அவன் கையை நீட்டி அள்ளினால் வனத்தில் உள்ள விலங்குகள், முனிவர்கள் எல்லாம் கையில் அகப்படுவர். அந்த அளவுக்கு அவனின் கை நீளமானது. சீதையை தேடி சென்ற இராமனும் இலட்சுமணனும் கவந்தனின் கையில் அகப்பட்டுக் கொண்டனர்.

�� கவந்தன், உங்களைக் கடவுளே எனக்கு உணவாக அனுப்பியிருக்கிறார். உயிர் மேல் ஆசை வைக்க வேண்டாம் என மிரட்டினான். இராமர் சீதையின் நினைவால் மிகவும் மனம் வருந்தி இருந்தார். இராமர் இலட்சுமணனிடம், தம்பி! எனக்கு ஏற்பட்ட துயரங்கள் போதும். இனியும் நான் உயிர் வாழ விரும்பவில்லை. என்னை இவ்வரக்கனிடம் விட்டுவிட்டு நீ தப்பிச்செல் என்றார். இலட்சுமணன், அண்ணா! நாம் வனம் வரும் முன் அன்னை சுமித்திரை என்னிடம், இராமனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அவனுக்கு முன் நீ உயிர் துறந்துவிடு என்றார். ஆனால் இப்பொழுது நீங்கள் உயிர் துறந்தால், நான் எவ்வாறு நாடு திரும்ப முடியும். இறந்தால் இருவரும் இறப்போம் என்றார். அண்ணா! துன்பம் வரும்போது அதனை எதிர்க்க வேண்டும். அது தான் வீரம். இதனைக் கேட்ட இராமர் மனம் தேறினார்.

சுக்ரீவனை தேடி செல்லுதல்

�� இலட்சுமணர், அண்ணா! நாம் இவனைக் கொல்லாமல் இவனுடைய தோள்களை மட்டும் வெட்டிவிடுவோம் என்றார். கவந்தன் இராம இலட்சுமணரை விழுங்க முன் வந்தான். அவர்கள் கவந்தனுடைய தோள்களை வெட்டித் தள்ளினார்கள். கவந்தன் கீழே விழுந்தான். பிறகு அவன் சாப விமோச்சனம் பெற்று சூரிய ஒளி போல் விண்ணில் தோன்றினான். இராமர் கவந்தனை நோக்கி, நீ யார்? எனக் கேட்டார். நான் விசுவாவசு என்ற பெயர் கொண்ட கந்தர்வன். ஒரு முனிவரின் சாபத்தால் அரக்கனாக மாறினேன். தாங்கள் என் தோள்களை வெட்டியவுடன், நான் என் பழைய உருவினை பெற்றேன். தங்களுக்கு கோடி வணங்கள். நான் சீதையை கண்டுபிடிக்க வழியை கூறுகிறேன். நீங்கள் தனியாக சீதையை கண்டுபிடிக்க இயலாது. தங்களுக்கு சுக்ரீவன் உதவி புரிவார். ஆதலால் தாங்கள் சுக்ரீவனை நாடி செல்லுங்கள். சுக்ரீவனின் மனைவியை வாலி கவர்ந்து சென்றுள்ளான். நீங்கள் சுக்ரீவனின் மனைவியை மீட்டு சுக்ரீவனிடம் நட்பு கொள்ளுங்கள். சுக்ரீவன் மிகவும் நல்லவன். அவன் வானரங்களின் தலைவன் ஆவான். சீதையை தேடி கண்டுபிடிக்க சுக்ரீவன் உதவி புரிவான் எனக் கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தான் கந்தர்வன்.

�� பிறகு இராம இலட்சுமணர் பல காடுகளையும், மலைகளையும் தாண்டி சென்று மதங்க மகரிஷி வாழும் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு மகரிஷியின் சீடர்களுக்கு சபரி என்னும் மூதாட்டி பணிவிடை செய்து கொண்டு அங்கேயே தங்கியிருந்தாள். சபரி மூதாட்டி மகரிஷி யின் மாணவி ஆவார். அவள் இராமனின் வரவை எதிர்நோக்கி வழிபாடு செய்து கொண்டு இருந்தாள். சபரி மூதாட்டி இராம இலட்சுமணர் வருகையை எதிர்பார்த்து அவர்களுக்காக காய் கனிகளை சேகரித்து வைத்து இருந்தாள். இராம இலட்சுமணர் வருகையை பார்த்து இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தாள். சபரியின் அளவற்ற அன்பைக் கண்டு இராமர் நெகிழ்ந்து போனார். பிறகு சபரி இராமனின் துன்பங்களை கேட்டறிந்தார். அவள் சுக்ரீவனை துணையாகக் கொண்டு சீதையை கண்டுபிடிக்க கூறினாள். சுக்ரீவனை காண செல்லும் வழியையும் அவள் கூறினாள். பிறகு சபரி, இராம இலட்சுமணர் இருக்கும் போதே முக்தி நிலையை அடைந்தாள்.

�� இராமரும் இலட்சுமணரும் சுக்ரீவனை காண சபரி காண்பித்த வழியை நோக்கி பயணித்தனர். வழியில் மலைகள், காடுகளை கடந்து சென்றனர். பிறகு அவர்கள் பம்பை நதியை அடைந்தனர். பம்பையின்

அழகையும், நீர் வளத்தையும், நில வளத்தையும் பார்த்த உடன் இராமருக்கு சீதையின் நினைவு வந்தது. அவர்கள் பம்பையில் நீராடிவிட்டு இறைவனை வழிப்பட்டு, பிறகு சோலையில் ஓர் இடத்தில் தங்கினார்கள். இராமர் இலட்சுமணரிடம், தம்பி! சீதை இங்கு இருந்தால் பம்பை நதியின் அழகை மிகவும் இரசித்திருப்பாள். ஆனால் இன்று அவள் என்னை நினைத்து மிகவும் வருந்தி கொண்டு இருப்பாள் என்றார். இதற்கு இலட்சுமணர், அன்னை! தங்களை நினைக்க மாட்டார் என்றார். இதைக் கேட்ட இராமருக்கு அதிர்ச்சி உண்டானது. தம்பி! உன் பதில் வித்தியாசமாக உள்ளது. கற்புடைய பெண்கள் தங்கள் கணவரை எப்போதும் நினைத்துக் கொண்டு இருப்பார்கள். அதேபோல் சீதையும் என்னை நினைத்துக் கொண்டு இருப்பாள் தானே? என்றார்.

�� அதற்கு இலட்சுமணர், கற்புடைய பெண்கள் நிச்சயம் தங்கள் கணவரை பிரியும்போது, நினைத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் அன்னை தங்களை மறந்தால் தானே நினைப்பார்கள். அன்னை தங்களை ஒரு நொடி கூட மறக்க மாட்டார்கள். ஆதலால் தான் தங்களை நினைக்க மாட்டார்கள் என்றேன் என்றார். இலட்சுமணனின் பேச்சு திறமையைக் கண்டு இராமர் வியந்து போனார். இராமர் மறுபடியும் சீதையை நினைத்து புலம்பினார். சுக்ரீவன் எங்கு உள்ளானோ? அவனை நாம் எப்படி கண்டுபிடிப்பது? சீதை எத்தகைய துன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருப்பாளோ? சீதையை நான் எப்பொழுது காண்பேன்? ஒரு பெண்ணின் துயரத்தை போக்க முடியாத எனக்கு எதற்கு வில்? என்று உலக மக்கள் அனைவரும் என்னை தூற்றுவார்களே எனக் கூறி இராமர் புலம்பினார். இலட்சுமணர் இராமரை சமாதானம் செய்தார்.

https://telegram.me/aedahamlibrary

வாலியும்!... சுக்ரீவனும்!...

�� சூரியனின் அருளால், அருணி என்னும் குரங்கின அரசிக்கு பிறந்தவன் சுக்ரீவன். இவனது அண்ணன் வாலி இந்திரனின் அருளால் தோன்றியவன். இவர்களில் வாலி, வானரகுல அரசனாகவும், சுக்ரீவன் இளவரசனாகவும் கிஷ்கிந்தை நாட்டை ஒற்றுமையுடன் ஆட்சி செய்து வந்தனர். கிஷ்கிந்தா பகுதியில் மாயாவி என்னும் அரக்கன் எல்லோரையும் துன்புறுத்தி வந்தான். அவனிடம் யுத்தம் செய்ய முடிவு செய்த வாலியும், சுக்ரீவனும் அரக்கனை விரட்டி சென்றனர். அப்போது அந்த அரக்கன் ஒரு நீண்ட பொந்து கொண்ட குகைக்குள் புகுந்து கொண்டான். சுக்ரீவனை காட்டிலும் வாலி வீரத்திலும், வலிமையிலும் சிறந்தவன் என்பதால், வாலி தன் தம்பி சுக்ரீவனிடம், தம்பி! வேறு எந்த அரக்கனும் குகைக்குள் நுழையாதபடி நீ வெளியே வாசலில் நின்று பார்த்துக் கொள். நான் குகைக்குள் உள்ள பொந்தில் ஒளிந்து கொண்டு இருக்கும், அரக்கனை கொன்று விட்டு வருகிறேன் என்று சொல்லி வாலி குகைக்குள் சென்றான். அவர்களின் சண்டை நாள் கணக்கில் நடந்தது. அவர்கள் செய்யும் சண்டையில் இரத்தம் குகைக்கு வெளியில் வந்தது.

�� இதனைப் பார்த்த சுக்ரீவன் அரக்கன் அண்ணனை கொன்று விட்டான் என நினைத்துக் கொண்டான். வெளியில் வந்தால் தன்னையும் கொன்று விடுவான் என பயந்து குகையை மூடிவிட்டு அங்கிருந்து சென்று விட்டான். சில நாட்களில் வாலி அரக்கனை கொன்றுவிட்டு, வெளியில் செல்ல குகையின் வாயிலுக்கு வந்தான். ஆனால் அக்குகையின் வாயில் ஒரு பெரிய கல்லால் மூடப்பட்டிருந்தது. இதனைக் கண்டு வாலி மிகவும் அதிர்ச்சி அடைந்தான். பிறகு மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் கல்லை நகர்த்தி வெளியே வந்தான். ஒரு வழியாக கிஷ்கிந்தா வந்து சேர்ந்தான். அங்கு கிஷ்கிந்தாவில் சுக்ரீவன் அரசனாக முடிசூட்டிக் கொண்டு ஆட்சி செய்து வருவதை கண்டான். தன் தம்பி சுக்ரீவன் கிஷ்கிந்தாவின் அரசனாகவே, தன்னைக் கொல்வதற்காக குகையின் வெளியில் கல்லை வைத்து வாசலை அடைத்ததாக வாலி நினைத்தான். இதனால் சுக்ரீவன் மேல் வாலிக்கு மிகுந்த கோபம் உண்டானது. சுக்ரீவனை கொல்ல வேண்டும் என நினைத்தான்.

�� உடனே வாலி, சுக்ரீவனிடம் சென்று, நீ என்னை ஏமாற்றி அரச பதவியை பறித்து கொள்ளலாம் என நினைத்தாயா? எனக் கேட்டான். சுக்ரீவன் எவ்வளவோ சொல்ல முன் வந்தும் அதை சிறிதும் கேட்கவில்லை வாலி. பிறகு சுக்ரீவனிடம் இருந்து அரச பதவியை

பறித்துக் கொண்டு அவனை மிகவும் துன்புறுத்தி வந்தான். சுக்ரீவன் வாலியிடம் இருந்து தப்பிக்க காட்டுக்கும், மலைக்கும் என மாறி மாறி ஓடி ஒளிந்துக் கொண்டான். ஆனால் வாலியோ, சுக்ரீவன் எங்கு சென்றாலும் விடாமல் துரத்தி துன்புறுத்தி வந்தான். கடைசியில் சுக்ரீவன், வாலி மதங்க முனிவரால் சாபம் பெற்ற ருசியமுக மலைக்கு சென்று ஒளிந்துக் கொண்டான். அம்மலைக்கு வாலி சென்றால் அவனது தலை வெடித்து விடும் என்பது முனிவரின் சாபமாகும். அந்த சாபத்துக்கு அஞ்சிய வாலி அம்மலைக்கு வருவதில்லை. இதனால் கோபங்கொண்ட வாலி, சுக்ரீவனின் மனைவி ருமாவை கவர்ந்து சென்று அந்தப்புரத்தில் சிறை வைத்தான் .

அனுமனின் சொல் திறமை!...

�� இரவு சூழ்ந்து, சந்திரன் தோன்றினான். பிறகு இராமரும் இலட்சுமணரும் தூங்கச் சென்றனர். இராமர் மட்டும் தூங்காமல் மனதை வருந்திக் கொண்டு இருந்தார். பொழுது விடிந்தது. இராம இலட்சுமணர் பம்பையில் நீராடி காலை கடமைகளை முடித்தனர். பிறகு சுக்ரீவனை தேடிக் கொண்டு பயணத்தை தொடங்கினர்.

�� அவர்கள் சவரி காட்டிய வழியில் வெகுதூரம் நடந்து ருசியமுக மலைப்பகுதியை கண்டனர். அங்கு தான் சுக்ரீவன் இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு அம்மலையை நோக்கி இருவரும் நடந்து சென்றனர். இராம இலட்சுமணர் மலையை நோக்கி வருவதைக் கண்ட சுக்ரீவன் தன்னை கொல்ல வாலி அனுப்பிய ஆட்களாக இருக்கக்கூடும் என பயந்து நடுங்கினான். சுக்ரீவனின் உடன் இருந்த மற்ற வானரங்கள் எல்லாம் பயந்து ஒளிந்துக் கொண்டன. ஆனால் அங்கு சுக்ரீவனுக்கு துணையாக இருந்த அனுமன் இராம இலட்சுமணரைக் கண்டு பயப்படவில்லை. அனுமன் நன்கு கற்றுத் தேர்ந்தவன். அது மட்டுமின்றி அனுமனிடத்தில் ஒரு விஷேச குணமும் உண்டு. தன் உணர்வினால் எதிர்நோக்கி வருபவர் யார்? எத்தகையவர்? என்பதை அறியும் ஆற்றல் உடையவர். அதனால் அனுமன் சுக்ரீவனிடம், நீ பயப்படாமல் இங்கேயே ஒளிந்துக்கொள். நான் சென்று, வருபவர் யார் என்பதை அறிந்துக் கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு மரத்தின் பின் மறைந்துக் கொண்டு இராம இலட்சுமணரை உற்று நோக்கினான்.

�� இவர்களை பார்த்தால் தேவர்கள் போல் தெரிகிறார்கள். இவர்கள் யார் என்று எளிதாக கண்டுப்பிடிக்க முடியவில்லையே. இவர்களின் முகங்களை பார்த்தால் ஏதோ மிகப்பெரிய பொருளை தொலைத்தது

போல் தெரிகிறதே. தொலைத்த பொருளை தேடி வருபவர்கள் போல் தெரிகிறது. இவர்கள் தர்ம நெறியில் நடப்பவர்கள் போல் தெரிகிறது. இவர்களுடைய முகத்தை பார்த்தால் அன்பு, பாசம், கருணை, பண்பு, ஒழுக்கம், அழகு நிறைந்து விளங்குகிறது. இவர்கள் பாதம் பட்ட இடங்கள் எல்லாம் பொன் போல் இருக்கின்றன. இவர்கள் அஞ்சா நெஞ்சம் உடையவர்கள். இவர்கள் நல்வழியில் செல்பவர்கள். இவர்களை பார்த்து என் உள்ளம் உருகுகின்றதே என எண்ணிக் கொண்டு இருந்தான்.

�� இராமரும் இலட்சுமணரும் அனுமனின் அருகில் வந்தனர். இராமர் அனுமனை பார்த்து, நற்குணம் நிறைந்த தம்பி! நீ யார் என வினவினார். அதற்கு அனுமன், இராமரை வணங்கி, ஐயனே! நான் அஞ்சனா தேவியின் மகன் ஆவேன். என் பெயர் அனுமன். இம்மலையில் வாழும் சுக்ரீவனின் பணியாள் என்றான். இராமர் அனுமனிடம், ஐயனே! நாங்கள் இங்கு சுக்ரீவனை காண தான் வந்துள்ளோம். சுக்ரீவன் எங்கு உள்ளார் என்று சொல்லுங்கள். நாங்கள் சுக்ரீவனை உடனே காண வேண்டும் என்றார். இதைக் கேட்ட அனுமன் சிறிது சிந்தித்தான். இவர்கள் வாலி அனுப்பியவர்களாக இருந்தால், இவர்களின் முகத்தில் கோபத்தீ தான் தெரிய வேண்டும். ஒருவேளை நான் சுக்ரீவனை காட்டி, இவர்கள் சுக்ரீவனை கொன்று விட்டால் பெரும் தீங்கு ஏற்பட்டு விடுமே? இவர்கள் யார் என்பதும் தெரியவில்லை. இவர்களை எப்படி உள்ளே அனுமதிப்பது? இவர்களை இங்கேயே இருக்கச் சொல்வோம் என மனதில் நினைத்துக் கொண்டான்.

�� அனுமன் இராமரை பார்த்து! பெரியவர்கள் எப்போதும் சிறியவர்களை பார்க்க வரக்கூடாது. சிறியவர்கள் தான் பெரியவர்களை பார்க்க வர வேண்டும். ஆதலால் தாங்கள் இங்கேயே இருங்கள், நான் சென்று சுக்ரீவனை அழைத்து வருகிறேன். சுக்ரீவன் தன்னை யார் காண வந்துள்ளார்கள் எனக் கேட்டால் நான் அவரிடம் தங்களை யார் என்று கூறுவேன் எனக் கேட்டான். உடனே இராமர் இலட்சுமணனிடம், இலட்சுமணா! இந்த வானர வீரனின் சொல்லின் திறமையை பார்த்தாயா? இவன் எல்லா கலைகளையும் கற்றுத் தேர்ந்தவன். நம்மை யார் என்று தெரிந்து கொள்ள எவ்வாறு நுணுக்கமாக கேள்வியை எழுப்பியுள்ளான். இவனின் சொல்லின் திறமையை நான் பாராட்டுகிறேன் என்றார்.

சுக்ரீவன் இராம இலட்சுமணரை உபசரித்தல்!

�� இலட்சுமணர் அனுமனிடம், சகோதரனே! நாங்கள் ரகு குலத்தில் பிறந்தவர்கள். அயோத்தியின் சக்ரவர்த்திகள். தசரத சக்ரவர்த்தியின் புதல்வர்கள் இராமர், இலட்சுமணர். கைகெயி தாயின் கட்டளைப்படி, இராஜ்ஜியத்தை பரதனிடம் ஒப்படைத்துவிட்டு நாங்கள் வனவாசம் வந்துள்ளோம். பிறகு அனுமன், சுக்ரீவனை அழைத்து வரச் சென்றார். அனுமன் சுக்ரீவனிடம் சென்று, சுக்ரீவா! இனி நீ வாலியைக் கண்டு அஞ்சி நடுங்க வேண்டாம். இனி உனக்கு துன்பம் நீங்கி இன்பம் வர போகிறது. உன்னை காக்க இராமர் வந்துள்ளார். அவர் வாலியை கொன்று உன்னை காத்தருள்வார். இராமர் நீதிநெறி தவறாதவர். விசுவாமித்திர முனிவரிடம் சீடனாக இருந்தவர். அரக்கர்கள் தாடகையையும், சுபாகுவையும் வதம் செய்தவர். விராதனை கொன்றவர். கரன் முதலிய அரக்கர்களை தனியாக நின்று கொன்றவர். தன் தாய் கைகெயின் கட்டளையினால் இராஜ்ஜியத்தை துறந்து வனம் வந்து உள்ளார். இராமரால் உன் வாழ்வில் பிரச்சனைகள் தீரும். கவலைக் கொள்ளாதே எனக் கூறினான்.

�� சுக்ரீவன் அனுமனின் வார்த்தைகளை கேட்டு மிகவும் மகிழ்ந்து போனார். உடனே தொலைவில் நிற்கும் இராம இலட்சுமணரை கண்டு மகிழ்ச்சியடைந்தான். சிறிது நேரம் கண்ணிமைக்காமல் இராம இலட்சுமணரையே பார்த்துக் கொண்டு இருந்தான். பிறகு அவர்களின் பக்கம் சென்று தொழுது வணங்கினான். இராமரும் சுக்ரீவனை தழுவிக் கொண்டார். இராமரோ சூரிய வம்சத்தில் பிறந்தவர். சுக்ரீவன் சூரியனின் குமாரன். இவர்கள் இருவரும் ஒன்றுப்பட்டு இருந்தனர். சுக்ரீவன் இராமனை பார்த்து, பெருமானே! தங்களை கண்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் பெரும் தவம் செய்து இருக்கின்றேன். ஆதலால் தான் தங்களை இன்று நான் சந்தித்து உள்ளேன் என கூறினான். இராமர் சுக்ரீவனிடம், சுக்ரீவரே! மதங்க மகரிஷி ஆசிரமத்தில் சவரி மூதாட்டி உன்னுடைய நற்குணங்களை என்னிடம் கூறி உன்னை சந்திக்கமாறு கூறினார். ஆதலால் தான் நான் உன்னை நாடி வந்துள்ளேன் என்றார்.

�� சுக்ரீவன் பெருமானே! குற்றம் செய்யாத என்னை, என் அண்ணன் வாலி மிகவும் துன்புறுத்தி வந்தார். ஆதலால் நான் இம்மலைக்கு வந்து ஒளிந்து கொண்டேன். இம்மலைக்கு வந்தால் என் அண்ணன் வாலியின் தலை வெடித்து விடும். இது மதங்க முனிவரின் சாபம் ஆகும். ஆதலால் நான் இம்மலையில் துன்பம் இன்றி வாழ்ந்து வருகிறேன் என்றான். இதனைக் கேட்ட இராமர் சுக்ரீவனை கட்டி தழுவிக் கொண்டார். சுக்ரீவா! இன்று முதல் நீ என் தம்பி. உன்னுடைய நண்பர் எனக்கும் நண்பர்.

உன்னுடைய பகைவர் எனக்கும் பகைவர். இன்று முதல் தசரதருக்கு ஆறு புதல்வர்கள். உன்னுடைய இன்ப துன்பங்களில் எனக்கும் பங்கு உண்டு. இனி நீ கவலைக் கொள்ளாதே என ஆறுதல் கூறினார். இந்த கண்கொள்ளா காட்சியைக் கண்ட அனுமன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மற்ற வானர வீரர்களும் இதனைக் கண்டு மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். பிறகு எல்லோரும் சுக்ரீவனின் குகைக்குச் சென்றனர்.

�� சுக்ரீவன் தன் குகையில் இராம இலட்சுமணரை அமரச் செய்தார். பிறகு சுக்ரீவன் தன்னிடமிருந்த காய் கனிகளை கொடுத்து உபசரித்தான். இதனை பார்த்த இராமர் தன் மனதில், இவ்வுலகில் மனைவியுடன் இல்லறத்தில் வாழ்பவர்கள், தேடி வரும் விருந்தினருக்கு மனைவிமார்கள் தான் உபசரித்து உணவு படைப்பார்கள். அது தான் நியதி. மனைவி இருக்க கணவர் விருந்ததினை படைக்க மாட்டார்கள். இங்கு சுக்ரீவனின் மனைவி உணவு படைக்க வில்லையே! என நினைத்தார். சுக்ரீவனிடம்,தம்பி! நீ உன் மனைவியை பிரிந்து வாழ்கிறாயா? எனக் கேட்டார். இதனை கேட்ட சுக்ரீவன், மிகவும் வருந்தி கண் கலங்கி நின்றான். பிறகு அனுமன் நடந்தவற்றையெல்லாம் கூறினான். வாலியும், சுக்ரீவனும் அண்ணன் தம்பி. வாலியின் மனைவி தாரை, சுக்ரீவனின் மனைவி ருமாதேவி ஆவாள்.

இராமரின் வலிமையை சோதித்தல்!

�� வாலி மிகுந்த வலிமை உடையவன். தன்னை எதிர்த்து யார் போர் செய்தாலும் அவர்களிடம் உள்ள வலிமை வாலியிடம் வந்து சேரும். இது சிவபெருமான் வாலிக்கு கொடுத்த வரம் ஆகும். ஒரு சமயம் மாயாவி என்னும் அரக்கனை அழிக்க வாலியும், சுக்ரீவனும் சென்றனர். அவ்வரக்கன் மலைக்குகையில் உள்ள ஒரு பொந்தில் ஒளிந்துக் கொண்டான். வாலி, தான் உள்ளே சென்று போரிட்டு அரக்கனை அழித்துவிட்டு வருவதாக சொல்லி சுக்ரீவனை வெளியே இருந்து காவல் புரியும்படி கூறிவிட்டு சென்றான். அக்குகையில் இருந்து வந்த இரத்ததால் அண்ணன் வாலி இறந்து விட்டதாக எண்ணிய சுக்ரீவன், அரக்கன் வெளிவந்தால் அனைவரையும் அழித்து விடுவான் என குகையை ஒரு கல்லை கொண்டு மூடிவிட்டு சென்றான்.

�� பிறகு வாலி அரக்கனை வதம் செய்துவிட்டு வந்தபோது, குகை மூடி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தான். வாலி கல்லை நகர்த்திவிட்டு குகைக்குள் இருந்து வெளிவந்து கிஷ்கிந்தை அடைந்தான். அங்கு சுக்ரீவன் அரசாள்வதை கண்டு தன்னை கொன்று அரச பதவியை பறிக்க தான் சுக்ரீவன் இவ்வாறு செய்துள்ளான் என சுக்ரீவன் மீது கோபம் கொண்டான். சுக்ரீவனை கொல்ல வேண்டும் என நினைத்து அவன் போகும் இடமெல்லாம் சென்று அவனை துன்புறுத்தி வந்தான். அரக்கன் வெளிவந்தால் அனைவரையும் அழித்து விடுவான் என்பதால் தான் குகையை மூடிவிட்டு வந்தேன் என சொல்லியும் வாலி கேட்கவில்லை. இதனால் சுக்ரீவன் இம்மலையில் வந்து ஒளிந்து கொண்டான். இதனால் கோபம் கொண்ட சுக்ரீவனின் மனைவி ருமாதேவியை அவன் சிறை பிடித்து வைத்துள்ளான் எனக் கூறினான்.

�� இதைக் கேட்டு இராமர் கோபம் கொண்டு எழுந்தார். சுக்ரீவா! உடனே எனக்கு வாலியைக் காட்டு. அவனை வதம் செய்துவிட்டு உனக்கு முடிசூட்டுகிறேன் என்றார். ஆனால் சுக்ரீவனுக்கு வாலியை எதிர்க்கும் அளவிற்கு இராமனுக்கு வலிமை உள்ளதா? என சந்தேகம் எழுந்தது. இதைப் பார்த்த அனுமன் சுக்ரீவனை தனியே அழைத்துப் சென்று, வாலியை கொல்லும் அளவிற்கு இராமனரிடம் வலிமை உள்ளதா என நீ சந்தேகப்படுகிறாய். வானளவில் படர்ந்து வளர்ந்து நிற்கும் மரங்களை இராமரின் வில் துளைத்தால், வாலியின் உயிரையும் துளைக்கும். ஆதலால் நாம் இதனை சோதித்துப் பார்ப்போம் என்றான். பிறகு அவர்கள்

ஓர் இடத்தில் ஏழு மராமரங்கள் இருப்பதை கண்டனர்.

�� இவர்கள் இராமனிடம் சென்று தங்களால் இந்த மரங்களை துளைக்க முடியுமா? எனக் கேட்டனர். இராமர் தன்னுடைய வலிமையை இவர்கள் அறிய எண்ணுகிறார்கள் என எண்ணினார். உடனே தன் கோதண்டத்தை எடுத்து நாணை பூட்டி அம்பை மரங்களை நோக்கி எய்தினார். நாணின் ஒலியைக் கேட்டு வானரங்கள் எல்லாம் பயந்து ஓடி ஒளிந்தன. இராமரின் பாணம் ஏழு மராமரங்களையும் துளைத்தது. அந்த மரங்கள் எல்லாம் வேரோடு சாய்ந்து கீழே விழுந்தது. இதைப் பார்த்த சுக்ரீவன் ஆச்சர்யமடைந்து நின்றான். ஒரு மரத்தை துளைப்பதே மிகவும் அரிது. அதுவும் ஏழு மரங்களை துளைப்பது மிகவும் பாராட்டக்குரியது என இராமரை வணங்கி தொழுதான்.

�� பிறகு அவர்கள் அங்கிருந்து போகும் வழியில் துந்துபி என்ற எலும்பு, மலை வடிவில் கிடப்பதை கண்டனர். இராமர் சுக்ரீவனிடம், சுக்ரீவா! இது என்ன எலும்பு? மலை போல் இவ்வளவு பெரியதாக உள்ளது எனக் கேட்டார். சுக்ரீவன், பெருமானே! துந்துபி என்ற அரக்கன் மலைபோல் பெரிய வடிவத்தை உடையவன். ஒரு சமயம் இவ்வரக்கன் வாலியிடம் போருக்கு வந்தான். அப்போரில் வாலி அரக்கனை கொன்று விட்டான். அரக்கனுடைய இரத்தம் சிந்திய இடமே எலும்பாக மாறி உள்ளது என்றான். இராமர் இலட்சுமணரை பார்த்து, தம்பி! இந்த எலும்பை அகற்றிவிடு என்றார். இலட்சுமணர் தன் கால் பெருவிரலால் அதனை அகற்றினார். இதனைக் கண்ட சுக்ரீவன், இராமருக்கு நிகரான பேராற்றால் உடையவர் என இலட்சுமணரை போற்றி வணங்கினார்.

இராமர் சீதையின் அணிகலன்களை பார்த்தல்!...

�� இராமர், இலட்சுமணர், சுக்ரீவன், அனுமன் மற்றும் ஏனைய வானரங்களும் ஒரு சோலையில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தனர். அப்பொழுது சுக்ரீவன் இராமரை வணங்கி, பெருமானே! நாங்கள் ஒரு சமயம் மலையின் உச்சியில் இருந்தபோது வான வழியாக இராவணன் ஒரு பெண்மணியை கவர்ந்து செல்வதை கண்டோம். அந்தப் பெண் அழுது கொண்டு இருந்தாள். அப்பெண் தங்களின் தேவியாக தான் இருக்க வேண்டும் என்றான் சுக்ரீவன். இராவணன் அப்பெண்ணுடன் இம்மலையை கடக்கும் போது, அப்பெண் தான் அணிதிருந்த அணிகலன்களை கழற்றி ஓர் துணியில் சுற்றி எங்களை நோக்கி எறிந்தாள். அந்த அணிகலன்களை நாங்கள் பத்திரமாக எடுத்து வைத்துள்ளோம். தாங்கள் அந்த அணிகலன்களை பார்த்து அது தேவியின் அணிகலன் தானா என்று சொல்லுங்கள் என்றான் சுக்ரீவன்.

�� பிறகு சுக்ரீவன் அணிகலன்களை இராமரிடம் காண்பித்தான். இராமர், துணியால் சுற்றப்பட்டிருந்த அணிகலன்களை அவிழ்த்து பார்த்தார். அனைத்தும் சீதையுடைய அணிகலன்கள். இவை அத்திரி மகரிஷி யின் மனைவி அனுசூயை சீதைக்கு கொடுத்த அணிகலன்கள் என்று கூறி உணர்ச்சி வசப்பட்டு சீதையின் நினைவால் மிகவும் வருந்தினார். பிறகு இலட்சுமணரிடம், இந்த அணிகலன்களை காட்டி இது சீதையின் அணிகலன்கள் தானா என மறுபடியும் கேட்டார்.

�� தம்பி! இலட்சுமணா! தலையில் அணியும் இந்த நவரத்ன மாலை உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார். இலட்சுமணர்! அண்ணா! இது அன்னையின் அணிகலன் தானா என்று எனக்கு தெரியவில்லை என்றார்.

�� தம்பி! இலட்சுமணா! காதில் அணியும் இந்த காதணி உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார். இலட்சுமணர்! அண்ணா! இது அன்னையின் அணிகலன் தானா என்று எனக்கு தெரியவில்லை என்றார்.

�� தம்பி! இலட்சுமணா! இந்த கழுத்தணி உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார். இலட்சுமணர்! அண்ணா! இது அன்னையின் அணிகலன் தானா என்று எனக்கு தெரியவில்லை என்றார்.

�� தம்பி! இலட்சுமணா! இந்த வளையல்கள் உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார். இலட்சுமணர்! அண்ணா! இது அன்னையின் அணிகலன் தானா என்று எனக்கு தெரியவில்லை என்றார்.

�� தம்பி! இலட்சுமணா! இந்த ஒட்டியாணம் உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார். இலட்சுமணர்! அண்ணா! இது அன்னையின் அணிகலன் தானா என்று எனக்கு தெரியவில்லை என்றார்.

�� தம்பி! இலட்சுமணா! இந்த மெட்டி(காலாழி) உன் அன்னையின் அணிகலன் தானே எனக் கேட்டார்.

�� இலட்சுமணர்! அண்ணா! ஆம் அன்னையின் அணிகலன் தான் என்றார். உடனே இராமர் இலட்சுமணரிடம் இத்தனை அணிகலன்கள் காண்பித்தும் இவை உன் அன்னையின் அணிகலன்களா என்று உனக்கு தெரியவில்லை. இந்த மெட்டி(காலாழி) மட்டும் எப்படி அடையாளம் தெரிந்தது என்று கேட்டார். இலட்சுமணர் இராமரிடம், அண்ணா! இந்த பதினான்கு ஆண்டுகளில் என் அன்னை சீதைக்கு பாத பூஜை செய்யும் போது அவர்களின் பாதங்களை மட்டும் தான் நான் பார்த்துள்ளேனே தவிர அவர்களின் திருமேனியை நான் பார்த்ததில்லை என்றார். அதனால் தான் எனக்கு மெட்டி(காலாழி) மட்டும் தான் அடையாளம் தெரிந்தது. மற்ற அணிகலன்கள் அடையாளம் தெரியவில்லை என்றார்.

�� இந்த கேட்டுக் கொண்டிருந்த சுக்ரீவன், அனுமன் மற்றும் ஏனைய வானரங்கள், தம்பி என்றால் இவரை போல் அல்லவா இருக்க வேண்டும். நற்குணத்தின் நாயகன், ஒழுக்கத்தின் சிறந்தவன் என்று இலட்சுமணரை பாராட்டினார்கள்.

சுக்ரீவன் வாலியை சண்டைக்கு அழைத்தல்!...

�� இராமர், கற்புடைய பெண்கள் கணவர் இறந்தபின் தான் அணிகலன்களை கழற்றி எறிவார்கள். நான் உயிருடன் இருக்கும்போதே சீதை இந்த அணிகலன்களை கழற்றி எறிந்துவிட்டாள். இதனால் நான் இறந்ததிற்கு சமமாகிவிட்டேன் என்று புலம்பி வருந்தினார். சுக்ரீவா! நான் ராஜ குலத்தில் பிறந்தும் என் மனைவியை காப்பாற்ற முடியாமல் இவ்வளவு துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். மக்கள் அனைவரும் என்னை பழி தூற்றுவார்களே. நான் என்ன செய்வேன் என புலம்பி அழுதார். சுக்ரீவன், தங்களின் தேவி எங்கு இருந்தாலும் தங்களிடம் சேர்ப்பேன். தாங்கள் மனம் தளர வேண்டாம் என்றான்.

�� அனுமன் இராமரிடம், பெருமானே! தாங்கள் வருந்த வேண்டாம். நாம் வாலியை வென்று விட்டால் கிஷ்கிந்தையில் உள்ள மற்ற வானரங்களும் நம் வசம் ஆகிவிடுவர். பிறகு நாம் விரைவில் இராவணனை கொன்று சீதையை மீட்டு விடலாம் என்றான். சுக்ரீவன், அனுமனின் சொற்களை கேட்டு இராமர் சமாதானம் ஆனார். ஆதலால், வாலியிடம் சண்டையை நாம் நாளை வைத்துக் கொள்ளலாம் என்றான் அனுமன். இராமரும் அனுமனின் யோசனையை ஏற்றுக் கொண்டார். எல்லோரும் அச்சோலையில் ஓய்வெடுத்தனர். பிறகு அனைவரும் கிஷ்கிந்தை நோக்கி பயணம் செய்தனர். அங்கு அவர்கள் ஒரு சோலையில் தங்கினார்கள்.

�� இராமர் சுக்ரீவனை அழைத்து, சுக்ரீவா! நீ வாலியை சண்டைக்கு அழைக்கவும். பிறகு நான் வாலியை வதைப்பேன் என்றார். சுக்ரீவனுக்கு வாலியிடம் போர் செய்ய தைரியம் இல்லை என்றாலும் இராமனின் கட்டளையை ஏற்றுக் கொண்டான். பிறகு சுக்ரீவன், வாலி! எங்கே இருக்கிறாய். தைரியம் இருந்தால் என்னுடன் வந்து போரிடு. உன்னை இன்று நான் கொல்வேன் என்று கூக்குரலிட்டு அழைத்தான். அப்போது வாலி அரண்மனையில் பஞ்சணையில் படுத்து இருந்தான். சுக்ரீவனின் குரலைக் கேட்டு சிங்கம் போல் கர்ஜித்துக் கொண்டு எழுந்தான். பிறகு தான் தெரிந்தது அக்குரல் சுக்ரீவனின் குரல் என்று.

�� தனக்கு பயந்து ஒளிந்து கொண்டு இருந்த சுக்ரீவன், இன்று தன்னை சண்டைக்கு அழைப்பதை நினைத்து ஏளனமாக சிரித்தான் வாலி. பின் அவன் கோபத்தில் அரக்கன் போல் படுக்கையில் இருந்து எழுந்தான். அவன் படுக்கையில் இருந்து எழுந்த வேகத்தில் மரங்கள், மலைகள்

எல்லாம் ஆடின. பிறகு, வருகிறேன்! வருகிறேன்! எனக் கூறிக் கொண்டு வெளியே வந்தான். அப்போது வாலியின் மனைவி தாரை போக வேண்டாம் எனத் தடுத்து நிறுத்தினாள். வாலி மனைவியிடம், ஒரு செயலில் வெற்றி பெற போகும்போது மனைவி தடுத்தால் அச்செயல் நிறைவேறாது என்பது காலங்காலமாய் பின்பற்றி வரும் நம்பிக்கை என்பதை தெரிந்தும், எதற்காக என்னை தடுக்கிறாய் எனக் கேட்டான். என்னைத் தடுக்காதே! நான் உடனே சென்று சுக்ரீவனை கொன்று வருகிறேன் என்றான் வாலி.

�� தாரை வாலியிடம், மன்னரே! தங்களைப் பார்த்து ஓடி ஒளிந்த சுக்ரீவன், இன்று தங்களை எதிர்த்து நிற்கிறான் என்றால், அவனுக்கு புதுமையாக வந்த வலிமை அல்ல அவனுக்கு துணையாக யாரோ இருக்கிறார்கள் என்று அர்த்தம் என்றாள். வாலி, பெண்ணே! அனைத்து உலகங்களும் ஒன்று திரண்டு வந்தாலும், யாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. அது மட்டுமின்றி என்னை யார் எதிர்த்தாலும் அவர்களிடம் உள்ள பாதி வலிமையும், வரமும் என்னிடம் சேரும்படி வரத்தினை பெற்றுள்ளேன். ஆகையால் என்னை எதிர்க்க எவராலும் முடியாது. அதனால் நீ பயம் கொள்ள வேண்டாம் என்றான்.

https://telegram.me/aedahamlibrary

வாலி-சுக்ரீவன் சண்டை!...

�� மன்னா! சுக்ரீவனுக்கு துணையாக இராமன் என்பவர் வந்துள்ளதாக நம் அன்புக்கு உரியவர்கள் கூறினார்கள். அவரை வெல்ல எவராலும் முடியாது. ஆகையால் தாங்கள் செல்ல வேண்டாம் என்றாள் தாரை. நீ என்ன சொல்கிறாய். இராமர் சுக்ரீவன் உடன் உறவு கொண்டு உள்ளாரா? இராமர் அறவழியில் நடப்பவர். ஒருவேளை இராமர் சுக்ரீவன் உடன் இருந்தால் இராமருக்கு கிடைக்கபோகும் பலன் தான் என்ன? தன் தாயின் கட்டளையால் நாட்டை தம்பி பரதனுக்கு தந்துவிட்டு, இராமர் வனம் வந்துள்ளார். உலகையே எதிர்த்து நின்றாலும் வெற்றி பெறுபவர், இராமர். அவர் கையில் பெரிதும் துணையாக கோதண்டம் உள்ளது. அவருக்கு உறுதுணையாக அவரின் தம்பி இலட்சுமணர் உள்ளார். இதற்கு மேல் அவருக்கு வேறென்ன துணை வேண்டும்.

�� அவர் சூரிய குலத்தவர், நாம் வானரங்கள். அதுவும் சுக்ரீவனிடம் ஏன் அவர் நட்பு கொள்ள வேண்டும். தம் தம்பிகள் மீது மிகவும் அன்புக் கொண்ட, அத்தகைய இராமர் எங்களின் சண்டைக்கு இடையில் வருவாரா? நிச்சயம் வரமாட்டார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இராமரை தவறாக எண்ணி விடாதே. நான் சீக்கிரம் சென்று சுக்ரீவனின் உயிரை எடுத்துவிட்டு வருகிறேன் என்று மனைவி தாரையிடம் சொல்லிவிட்டு புறப்பட்டார். தாரை, இதற்குமேல் இவரிடம் பேசி ஒரு பயனும் இல்லை என நினைத்து அமைதியாக இருந்தாள். வாலி தன் தம்பி சுக்ரீவனை தேடிக் கொண்டு சோலைக்கு அருகில் உள்ள மலைக்கு வந்தான்.

�� அங்கு சுக்ரீவன் வாலிக்காக காத்து கொண்டு இருந்தான். பிறகு இருவரும் சண்டையிட தொடங்கினர். ஓர் இடத்தில் சண்டையிடாமல் சுழன்று சுழன்று சண்டையிட்டார்கள். இராமர் இலட்சுமணனிடம், தம்பி! பார்த்தாயா இருவரும் இரு சிங்கங்கள் போல கர்ஜித்து கொண்டு சண்டை போடுகிறார்கள் என்றார். ஆனால் இலட்சுமணர், அண்ணனை காத்து துணைபுரிவதே தம்பியின் கடமையாகும். ஆனால் இங்கு அண்ணன் தம்பி இருவரும் சண்டை போட்டு கொண்டு இருக்கிறார்கள் எனக் கூறி மனம் வருந்தினார். அதற்கு இராமர், தம்பி இலட்சுமணா! தம்பி பரதனை போல் உயர்ந்த பண்புடையவர் எவரெனும் உள்ளார்களா? ஆனால் இவர்கள் புரிதல், பொறுமை இன்றி சண்டை போட்டு கொண்டு இருக்கிறார்கள் என்றார்.

�� அவர்களின் சண்டை வெகுநேரம் நடந்தது. வாலியால் சுக்ரீவன் மிகுந்த அடிப்பட்டான். பிறகு சுக்ரீவன் இராமரிடம் வந்து, பெருமானே! நான் என்ன தவறு செய்தேன். அண்ணன் வாலி என்னை அடித்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் தாங்கள் ஒன்றும் செய்யாமல் அமைதியாகவே உள்ளீர்கள் என வலி தாங்க முடியாமல் கேட்டான். இதற்கு இராமர், தம்பி! சுக்ரீவா, எனக்கு உங்கள் இருவர்களில் யார் வாலி யார் சுக்ரீவன் என வேற்றுமை தெரியவில்லை. அதனால் தான் நான் பாணத்தை தொடுக்காமல் அமைதியாக இருந்தேன் என்றார். இந்த பூமாலையை நீ அணிந்து கொண்டு சண்டையிடு. இந்த பூமாலை உனக்கு வெற்றி மாலையாக அமையும். நான் எளிதாக வேற்றுமை அறிந்து வாலியை வதம் செய்வேன் என்றார்.

�� சுக்ரீவன் பூமாலையை வாங்கி கழுத்தில் போட்டுக் கொண்டு மறுபடியும் வாலியுடன் சண்டையிட சென்றான். மறுபடியும் தன்னிடம் சுக்ரீவன் சண்டையிட வருவதை கண்ட வாலி மிகவும் கோபம் அடைந்தான். அதனால் சுக்ரீவனை பலமாக அடித்தான். வாலியின் பலமான அடியால் சுக்ரீவன் உயிர்போகும் நிலைக்கு வந்தான். அப்போது இராமர் ஒரு மரத்தின் மறைவில் நின்றுக் கொண்டு வாலியை நோக்கி பாணத்தை பூட்டிக் கொண்டு இருந்தார். சுக்ரீவன் என்ன செய்வதென்று திகைத்து நின்றான். அப்போது வாலி சுக்ரீவனை பார்த்து இப்போதே உன்னை கொன்று விடுகிறேன் என்று சொல்லி சுக்ரீவனை தன் தலைக்கு மேலே தூக்கினான். அப்போது இராமர் வாலியை நோக்கி பாணத்தை எய்தினார். இராமனின் பாணம் வாலியின் மார்பில் பாய்ந்தது.

இராமர் வாலியின் மீது அம்பு எய்தல்!...

�� இராமனின் பாணம் வாலியின் மார்பில் துளைத்தது. வாலி மயங்கி கீழே விழுந்தான். பிறகு சிறிது மயக்கம் தெளிந்த வாலி தன் மார்பில் அம்பு துளைத்தை பார்த்து மிகவும் கோபமுற்றான். வாலி கோபத்தில், என் மீது அம்பு எய்தியவரை நான் உயிரோடு விடமாட்டேன். இவ்வுலகை அழிப்பேன் என உரைத்தான். பிறகு வாலி என் மீது அம்பை தொடுத்தவர் யாராக இருப்பார்கள். தேவர்களாக இருப்பார்களா? ஆனால் தேவர்களுக்கு இந்த அளவுக்கு வலிமை உள்ளதா என எண்ணினான். வாலி தன் மார்பில் பாய்ந்த அம்பை எடுக்க முயற்சித்தான். எவ்வளவு முயன்றும் அந்த அம்பை அவனால் வெளி கொண்டு வர முடியவில்லை. இதனால் அவன் மனம் வருந்தினான். அவன் கோபத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் சிரித்தான். அவன் மார்பில் இருந்து இரத்தம் ஆறு போல் பெருகியது.

�� இதனை பார்த்துக் கொண்டிருந்த சுக்ரீவன், அண்ணன் மீது கொண்ட பாசத்தில் அழுது கீழே விழுந்தான். பிறகு வாலி மார்பின் மீது பாய்ந்த அம்பில் உள்ள பெயரை பார்த்தான். அதில் ராம் என எழுதப்பட்டிருந்தது. இதனை பார்த்த வாலி மிகவும் அதிர்ச்சி அடைந்தான். தருமநெறியில் நடக்கும் இராமனா இச்செயலை செய்தது. தாரையிடம் இராமனை பற்றி பெருமையாக பேசி அவளை கடிந்துவிட்டு வந்தேனே என நினைத்து ஏளனமாக சிரித்தான். ரகு குலத்தில் பிறந்த இராமர் தவறே செய்யாத என்மீது அம்பு எய்தியது எதற்காக? தசரதரின் புதல்வர் இராமர் நீதிநெறி தவறலாமா? இராமனின் இச்செய்கையை பார்த்து ஏளனமாக சிரித்தான். பிறகு அம்பு வந்த திசையை உற்று பார்த்தான். இராமர் வாலியை நோக்கி வந்துக் கொண்டு இருந்தார்.

�� வாலி முன் இராமர் வந்து நின்றார். ஒளிவீசும் தோற்றத்தோடும், கையில் வில் ஏந்தி வந்த இராமரை பார்த்தான் வாலி. மிகவும் கோபம் கொண்ட வாலி இராமரிடம், என் மீது அம்பை எதற்காக துளைத்தாய்? நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? எல்லோருக்கும் தீமையை அகற்றி நன்மை செய்யும் நீ எனக்கு இத்தகைய தீங்கு விளைவிக்க காரணம் என்ன? இராமா! வாய்மையும், மரபையும் காக்கும் தசரதனின் புதல்வனா நீ? இராகவா! உத்தம குணமிக்க பரதனின் அண்ணனா நீ! வசிஷ்ட முனிவரிடம் கற்ற கல்வியை நீ மறந்து விட்டாயா? அரக்கர்களை அழித்து முனிவர்களை காத்தாய். என்னை அழித்து நீ யாரை காக்க போகிறாய்? அன்னம் போன்ற உன் மனைவி சீதா தேவியை பிரிந்த பிறகு உனக்கு

என்ன செய்வதென்று தெரியவில்லையா?

�� ஓர் அரக்கன் உன் மனைவியை கவர்ந்து சென்றதால் குரங்கினத்தின் அரசனாகிய என்னை வதம் செய்வதா? இராமா! உன்னிடத்தில் இருந்த அன்பும், பாசமும் எங்கே போனது? வேந்தனே! நாட்டை உன் தம்பி பரதனுக்கு கொடுத்துவிட்டு, இக்கானகத்துக்கு வந்த நீ, என்னை கொன்றுவிட்டு அரசை தம்பி சுக்ரீவனிடம் கொடுக்கத்தான் இவ்வாறு செய்தாயா? ஓர் உயிரை காக்கும் நீ, ஓர் உயிரை எடுப்பது அதர்மத்திற்கு சமமாகும். எந்த ஒரு வீரனும் பின் நின்று அம்பு எய்த மாட்டான். இதிலிருந்து தெரிகிறது நீ எத்தகைய வீரன் என்று. இன்று நீ அறநெறிப்படி நடக்கவில்லை.

�� சுக்ரீவன் அழைத்ததால் இங்கு வந்து சண்டையிட்டு கொண்டு இருந்த என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டாய். இது உனக்கு நியாயமாகப்படுகிறதா? நீ என்னை கொன்று என்ன சாதிக்க போகிறாய். நேருக்குநேர் என்னிடம் சண்டை போடாமல் பின் நின்று என் மீது அம்பு எய்திய உன்னை மக்கள் பாராட்டுவார்களா? இல்லை தூற்றுவார்களா? நீ வில்வித்தையில் சிறந்தவன் என்று கூறுகிறார்கள். நீ பின் நின்று அம்பு எய்துவது தான் உன் வில்வித்தையின் சிறப்பா? என்று கேட்டான் வாலி.

வாலியின் கோபம்!...

�� வாலி கூறியதையெல்லாம் அமைதியாக கேட்டுக் கொண்டு இருந்த இராமர் வாலியிடம், வாலி! தவறு செய்யாத உன் தம்பி சுக்ரீவனை நீ தண்டிப்பது நியாயமா? சுக்ரீவன் என்ன நடந்தது என்று சொல்ல வந்தும்கூட அதை நீ செவிக் கொடுத்து கேட்கவில்லை. அது மட்டுமின்றி சுக்ரீவன் எல்லோரின் நன்மைக்காக தான் குகையை மூடிவிட்டு வந்தானே தவிர உன்னை கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. அதை சுக்ரீவன் உன்னிடம் சொல்ல வந்தும் நீ கேட்கவில்லை. இது உன் தவறு தானே என்றார். உனக்கு துணையாக இருக்கும் உன் தம்பியை விரட்டி விரட்டி அடிப்பது அண்ணனின் செயலா? எனக் கேட்டார் இராமர். அது மட்டுமல்லாமல் பெண்களை தாயை போல நினைக்க வேண்டும். ஆனால் நீ தம்பியின் மனைவி என்று தெரிந்தும் அவரை கவர்ந்து சென்று சிறை வைத்துள்ளாய்.

�� வாலி, இராமா! நீ சொல்வதை சரி என்று ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் விலங்குகளும் மனிதர்களும் வேறுவேறு தானே. ஒரு விலங்காகிய என்னை துன்புறுத்துவது தவறு தானா? இதற்கு நீ என்ன சொல்ல போகிறாய் என்றார். வாலி! விலங்குகளுக்கு எது சரி, எது தவறு என்று தெரியாது. ஆனால் நீ இந்திரனின் அருளால் தோன்றியவன். எல்லா கலையும் நன்கு கற்றவன். தரும நெறிகளை நன்கு அறிந்தவன். மனிதன், விலங்கு என்ற பாகுபாடு உருவினால் அல்ல. அவர்களின் அறிவின் திறமையைக் கொண்டு உள்ளது. நீ உருவத்தில் வேண்டுமானால் விலங்காய் இருக்கலாம், உன் அறிவும், திறமையும் மனிதனுக்கு சமமாகும். ஆதலால் தான் உன்னை நான் தண்டித்தேன். பிறப்பால் நீ விலங்கு என்று உன் தவறுகளை நியாயப்படுத்துவது சரியல்ல. பிறகு நீ எல்லோருக்கும் தீங்கை விளைவிக்கும் இராவணனிடம் நட்பு கொண்டுள்ளது சரியானதா? எனக் கேட்டார்.

�� இதனைக் கேட்ட வாலி, சரி ராமா! நேருக்கு நேர் போர் புரிவது தான் ஒரு வீரனுக்கு அழகு. நீ வேடனை போல் மறைந்திருந்து என் மேல் அம்பு எய்தியது நியாயமா? எனக் கேட்டார். இதற்கு இலட்சுமணர், வாலி! நீ உன் தம்பி சுக்ரீவனை தண்டித்து கிஷ்கிந்தையை விட்டு விரட்டி விட்டாய். ஆனால் சுக்ரீவன் உன்னிடம் இருந்து தன்னை காப்பாற்று என்று அண்ணன் இராமரிடம் சரணடைந்து விட்டான். இராமரும் உன்னை காப்பாற்றி வாலியை கொல்வேன் என்று சுக்ரீவனிடம் வாக்களித்துவிட்டார். இராமர் நீதியையும், தர்மத்தையும் நிலைநாட்டுபவர்

என்பது உனக்கு தெரியும். தன்னிடம் அடைக்கலம் வேண்டி வருபவரை காப்பதே இராமரின் தலையாய கடமையாகும். இதை நீ புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமில்லாமல் இராம் அண்ணா உன்னிடம் நேருக்குநேர் போர் புரிந்தால் நீயும் அண்ணாவிடம் சரணடைந்துவிடுவாய். பிறகு அண்ணாவால் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் போய்விடும். அதனால் தான் உன் மீது மறைந்திருந்து அம்பு எய்தினார் என்றார்.

�� தான் கொடுத்த வாக்குறுதியை நிலைநாட்டவே இராமர் இவ்வாறு செய்தார் என்பதை புரிந்து கொண்ட வாலி, அமைதி அடைந்தான். இராமர் என்றும் அதர்மத்திற்கு துணை போகமாட்டார் என்பதை வாலி புரிந்து கொண்டான். தன் உயிர் போகும் நிலையிலும் இராமரை வணங்க முற்பட்டான். தான் செய்த தவறான செயல்களால் தான், இராமர் தன்னை தண்டித்தார் என்பதை புரிந்து கொண்டான் வாலி. பிறகு வாலி இராமரிடம், எம்பெருமானே! நான் தங்களை கடிந்து பேசிய சொற்களை மறந்து என்னை மன்னித்து அருள வேண்டும். உயிர் போகும் தருவாயில் பகைமையை அகற்றி எனக்கு நல்லறிவு அருளுனீர்கள். தாங்கள் எனக்கு ஒரு வரத்தை அருள வேண்டும். என் தம்பி சுக்ரீவன் ஏதாவது தவறு செய்தால் அவன் மீது கோபத்தை காட்டாமல் அவனை மன்னித்து அருள வேண்டும் என வேண்டிக் கொண்டான்.

வாலியின் வரம்!...

�� தாங்கள் எனக்கு மற்றொரு வரத்தையும் அருள வேண்டும். தங்களுடைய தம்பிகள் தங்கள்மீது மிகுந்த பாசமும், அன்பும் வைத்துள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் யாரேனும் சுக்ரீவன் தன் அண்ணனை கொன்றவன் என்று இகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இராமரும் வாலி கேட்ட இரண்டு வரங்களை அருளினார். பிறகு வாலி எம்பெருமானே! சுக்ரீவன் நன்றி மறவாதவன். சீதையை மீட்க தங்களுக்கு உதவி புரிவான். சுக்ரீவன் வாலியை பார்த்து அழுது கொண்டு இருந்தான். வாலி! சுக்ரீவனை பார்த்து, தம்பி! நீ வருந்தாதே! இராமர் என்றும் உனக்கு உறுதுணையாக இருப்பார் எனக் கூறினான். இராமரிடம், தங்களுக்கு துணையாக அனுமனும் இருக்கிறான். மிகவும் வலிமையுடையவன். தாங்கள் அனுமனை சாதரணமானவனாக எண்ண வேண்டாம். தாங்கள் கட்டளையிட்டால் போதும் ஒரு வேலையை நொடிக்குள் முடித்து விடும் திறமை அனுமனுக்கு உண்டு என்றான்.

�� தாங்கள் என் தம்பி சுக்ரீவனை இனி தங்கள் தம்பியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் சீதையை கண்டுபிடிக்க உறுதுணையாக இருப்பார்கள் என்றான் வாலி. பிறகு வாலி சுக்ரீவனை அழைத்து, கட்டி தழுவிக் கொண்டார். தம்பி சுக்ரீவா! நீ அழாதே. நீ இராமனுக்கு உதவி செய்யும் பெரும் பாக்கியத்தை பெற்றுள்ளாய். இராமர் உனக்கு கொடுக்கும் கட்டளையை செய்து முடி என்றார். இராமர் உனக்கு துணையாக இருப்பார் எனக் கூறி பல அறிவுரைகளை கூறினான். பிறகு வாலி, சுக்ரீவனை இராமனிடம் ஒப்படைத்து விட்டு இரு கரம் கூப்பி இராமனை வணங்கினான்.

�� பிறகு வாலி பணியாட்களை ஏவி தன் மகன் அங்கதனை அழைத்து வர அனுப்பினான். அங்கதனும் அந்த இடத்துக்கு வந்தான். தன் தந்தை வாலி இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைப் பார்த்த அவன், ஒன்றும் பேசாமல் வாலியின் மீது படுத்து அழுதான். பிறகு தன் தந்தையிடம்! தந்தையே! தங்களை இக்கதிக்கு ஆளாக்கியவர் யார்? தங்கள் உயிரை பறிப்பதற்கு அவனுக்கு என்ன தைரியம் என பலவாறு புலம்பி அழுதான். அழுது கொண்டு இருக்கும் தன் மகன் அங்கதனிடம், மகனே! நீ வருந்த வேண்டாம் என்று கட்டி தழுவிக் கொண்டான். மகனே! பிறப்பும், இறப்பும் எல்லோருக்கும் நிச்சயித்த ஒன்று. நான் முற்பிறவியில் செய்த

புண்ணியத்தினால் இன்று இராமனால் எனக்கு மோட்ச பதவி கிடைத்துள்ளது. மனித உருவில் வில் ஏந்தி இருக்கும் பரம்பொருளான இராமனை, உன் தந்தையை கொன்றவர் என்று தவறாக எண்ணி விடாதே.

�� இவ்வுலகை காத்தருளும் இராமனின் மலரடியில் விழுந்து தொழுது வாழ்வாயாக எனக் கூறி தன் மகனை தழுவிக் கொண்டான். பிறகு இராமனிடம், பெருமானே! என் மகன் அரக்கர்களை அழிக்கும் ஆற்றல் படைத்த வீரன். இவனை நான் தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்றான். இராமர், தன் திருவடியில் விழுந்த அங்கதனை தழுவி, தன்னிடம் இருந்த உடைவாளை அங்கதனுக்கு கொடுத்து அருள் புரிந்தார். பிறகு வாலி இராமரை பார்த்துக் கொண்டே முக்தி நிலையை அடைந்தான். வாலி தன் கையால் அம்பை இறுக பிடித்திருந்தான். அவன் உடல் உயிரை விட்டு பிரிந்ததும் அவனின் மார்பில் இருந்து அம்பு தளர்ந்தது. அம்பு, வாலியின் மார்பில் இருந்து வெளிவந்து கங்கையில் மூழ்கி இராமனின் அம்புப்புட்டிலை வந்தடைந்தது. வாலி வானுலகம் அடைந்தான்.

�� பிறகு இராமன் சுக்ரீவனோடும், அங்கதனோடும் அங்கிருந்து சென்றான். வாலி இறந்த செய்தியைக் கேட்ட தாரை ஓடிவந்து வாலியின்மீது விழுந்து அழுதாள். நான் தங்களை போக வேண்டாம் என தடுத்தேனே. அதையும் மீறி சென்ற தங்களுக்கு இக்கதி நேரும் என்று தெரியாமல் போய்விட்டதே. தாங்கள் தினந்தோறும் மூன்று வேளை சிவ பூஜை செய்வீர்களே. இன்று சிவ பூஜை வழிபாட்டுக்கு மலர்களும், பாலும், தேனும், இளநீரும், பஞ்சாமிர்தமும் ஆயத்தமாக இருக்கிறது. இனி யார் சிவ பூஜை செய்வார்கள் என புலம்பி அழுதாள்.

சுக்ரீவனின் பட்டாபிஷேகம்!...

�� தாரை, கணவன் உள்ளத்தில் மனைவி இருப்பாள். அதைபோலவே மனைவியின் உள்ளத்தில் கணவன் இருப்பார். நான் தங்கள் உள்ளத்தில் இருந்திருந்தால் என் மார்பின் மீதும் அன்பு பாய்ந்திருக்க வேண்டுமே. ஏன் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என கதறி அழுதாள். அனுமன் தாரைக்கு ஆறுதல் சொன்னான். பிறகு அங்கிருந்து தாரையை அழைத்துச் சென்றான். அங்கதன் தன் தந்தைக்கு செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து முடித்தான்.

�� பிறகு சில நாட்கள் கழித்து, ஒரு நல்ல நாளில் இராமன் இலட்சுமணனிடம், சுக்ரீவனுக்கு முடி சூட்டும் படி கட்டளையிட்டார். பிறகு இலட்சுமணன் அனுமனிடம் பட்டாபிஷேகத்திற்கு தேவையான பொருட்களை கொண்டுவரும்படி கூறினான். அனுமனும் புண்ணிய தீர்த்தங்கள், மாங்கல்ய பொருட்கள் என பட்டாபிஷேகத்திற்கு தேவையான அனைத்து பொருட்களையும் கொண்டு வந்து சேர்த்தான். முனிவர்கள் ஆசியுடன், தேவர்கள் மலர்தூவ இராமனின் முன்னிலையில் இலட்சுமணன், சுக்ரீவனுக்கு முடிசூட்டினான். அங்கதனுக்கு இளவரசர் பட்டம் சூட்டினார்கள். கிஷ்கிந்தையின் அரசனாக முடிசூட்டிக் கொண்ட சுக்ரீவன், இராமன் திருவடியில் விழுந்து வணங்கினான். இராமர் சுக்ரீவனை கட்டி தழுவிக் கொண்டார்.

�� சுக்ரீவா! உன் அரசு ஓங்குக. நீ உன் ஆட்சியில் தருமநெறிப் படி நடந்து, உன் அரசாட்சிக்கு பெருமை சேர்க்க வேண்டும். நீ வாலியின் மகன் அங்கதனுடன் சேர்ந்து நலமாக ஆட்சி புரிய வேண்டும் என்று வாழ்த்தினார். பிறகு இராமர், சுக்ரீவா! நீ மன்னன் என்னும் உன் மரியாதையை பாதுகாத்து கொள்ள வேண்டும். பகைமை, விரோதம், இகழ்ச்சி, வேற்றுமை இவற்றை மனதில் வைத்துக் கொள்ள கூடாது. நேர்மையாகவும், அறநெறியுடன் அரசு புரிய வேண்டும். சிறியவர், பெரியவர் என்று எவரையும் இகழ்ந்து பேசுதல் கூடாது. அழிவுக்கு காரணம் பாவங்களே. அதனால் பாவச்செயலை ஒருபோதும் செய்யக்கூடாது.

�� ஒரு பெண்ணாசையால் தான் வாலி மாண்டான். ஒரு பெண்ணால் தான் நான் இன்று பெரிதும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். ஆதலால் பெண்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரைக் கூறினார். மழைக்காலம் வரப் இருப்பதால், மழைக்காலம்

முடிந்து உன் சேனையை திரட்டிக் கொண்டு வா! நாம் சீதையை தேடிச் செல்வோம் என்றார். பிறகு அங்கதன் இராமனின் திருவடியில் விழுந்து வணங்கினான். இராமர் அங்கதனிடம், அங்கதா! நீ பண்புள்ளவனாக, ஒழுக்கமுள்ளவனாக நடந்து கொள்ள வேண்டும். இளவரசனுக்கு உரிய பெருமையை பாதுகாத்து கொள்ள வேண்டும். சுக்ரீவனை உன் சிறிய தந்தை என நினைக்காமல், உன் தந்தை போலவே பாவித்து மரியாதையுடன் மதித்து நடக்க வேண்டும் என அறிவுரைக் கூறினார்.

�� பிறகு சுக்ரீவன் இராமனிடம் தன்னுடன் வந்து அரண்மனையில் தங்கும்படி வேண்டினான். ஆனால் இராமர், நான் தவக்கோலம் பூண்டுள்ளதால் அரண்மனையில் வாழ்வது முறையாகாது. ஆதலால் என்னால் உன்னுடன் வர இயலாது எனக் கூறினார். இராமர் தவக்கோலம் பூண்டுள்ளதால் அவரை மறுத்து சுக்ரீவன் எதுவும் கூறவில்லை. சுக்ரீவன் இராமரின் பிரிவை எண்ணி மிகவும் வருந்தினான். பிறகு இராமரையும், இலட்சுமணரையும் பிரிய மனமின்றி கண்களில் கண்ணீர் ததும்ப விடை கொடுத்து கிஷ்கிந்தை நோக்கி புறப்பட்டான். சுக்ரீவனும், அங்கதனும் அரண்மனைக்கு சென்று, தாரையின் திருவடியில் விழுந்து வணங்கினார்கள்.

கார்காலம்

�� இராமர் அனுமனிடம், வீரனே! நீ சுக்ரீவனுக்கு துணையாக அவர்களுடன் சேர்ந்து இரு என்றார். அனுமன், பெருமானே! தங்கள் அடியேன், தங்களுடன் இருந்து சேவைபுரிய விரும்புகிறேன் என்றான். இராமன், அனுமனே! வாலி நாட்டை வலிமையுடனும், திறமையுடனும் ஆண்டு வந்தான். வாலியின் மறைவுக்கு பின் சுக்ரீவன் அரசனாக முடிசூட்டி உள்ளான். சுக்ரீவனின் ஆட்சியில் யாரெனும் நாட்டை கைப்பற்றக் கூடும். ஆதலால் நீ சுக்ரீவனுக்கு துணையாக அவனுடம் இரு என்று கூறினார். மழைக்காலம் முடிந்து எனக்கு சுக்ரீவனுடன் உதவி புரிய வருவாயாக எனக் கூறினார். இராமரின் ஆணையை மீற முடியாத அனுமன் இராமரை வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

�� சுக்ரீவன் தனது அமைச்சர்கள், அண்ணன் வாலியின் மனைவியான தாரையின் அறிவுரைகளின்படி நாட்டை நெறி தவறாமல் ஆட்சி புரிந்து வந்தான். இளவரசனாக முடிசூட்டிக் கொண்ட அங்கதன், தன் நகரத்தை கண்ணும் கருத்துமாக ஆண்டு வந்தான். அனுமனை நாட்டுக்கு அனுப்பிவிட்டு, இராமரும் இலட்மணரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் பிரஸ்ரவண மலை என்னும் மலைபகுதியை அடைந்தனர். அங்கு அவர்கள் ஒரு குகையில் வாழ்ந்தனர். மழைக்காலமும் வந்தது. சுக்ரீவன் தன் மனைவி ருமாதேவியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான். அனுமன் மக்களுக்கு நீதி நெறிகளை பரப்பிக் கொண்டு இருந்தான். அங்கதனும் நீதி தவறாமல் நகரத்தை ஆட்சி செய்தான்.

�� கார்மேகம் சூழ்ந்தது. இடியும், மின்னலுமாக மழை பெய்தது. மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இராமர் சீதையை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டு இருந்தார். இலட்சுமணர் இராமரை சமாதானம் செய்தார். காற்றும் மழையினால் வெளியில் எங்கும் போகாத நிலை இராமருக்கு. சீதை இப்பொழுது என்ன துன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறாளோ என வருந்தினார் இராமர். இராமருக்கு சீதையின் பிரிவும், தனிமையும் பெரும்துன்பத்தை ஏற்படுத்தியது. இலட்சுமணன் இராமனுக்கு ஆறுதல் சொல்வதால் இராமரின் மனம் சாந்தம் அடைந்தது. கார்காலம் ஒருவழியாக முடிந்தது. வெயில் படர தொடங்கியது. வானம் தெளிவடைந்து வெளிச்சத்தைக் கொண்டு வந்தது.

�� இராமரும் இலட்சுமணரும் குகையைவிட்டு வெளியே வந்தனர்.

கார்காலம் முடிந்து தன் படைகளுடன் வருவதாக சொன்ன சுக்ரீவன் வராததால் கோபமடைந்த இராமர் இலட்சுமணனிடம், தம்பி இலட்சுமணா! சுக்ரீவன் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டான். கார்காலம் முடிந்து வருவதாக சொன்ன சுக்ரீவன் இன்னும் திரும்பி வரவில்லை. அவன் நட்பையும், நன்றியையும் மறந்து அரச வாழ்வில் மூழ்கி விட்டான் போலும். நன்றியை மறந்தவனை கொல்வது கூட தவறில்லை. வாலியை கொல்ல என்னிடம் உதவியை நாடினான். நம்மை கொல்ல வேறு ஒருவரிடம் கூட உதவியை நாடலாம். அப்படி இருந்தால் இவ்வுலகில் வானரங்கள் இல்லாதவாறு நான் செய்து விடுவேன்.

�� நீ கிஷ்கிந்தைக்கு சென்று அவனின் மனநிலையை அறிந்து வா. உன் கோபத்தில் அவனை ஒன்றும் செய்து விடாதே. கிஷ்கிந்தையில் அவன் மனநிலை மாறிருந்தால் என்னிடம் வந்து சொல். நீ கிஷ்கிந்தை சென்று வருவாயாக என்று இலட்சுமணருக்கு விடைக் கொடுத்தார். இலட்சுமணரும் விடைப்பெற்று கிஷ்கிந்தை நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

இலட்சுமணன் கிஷ்கிந்தை நோக்கி வருதல்!

�� இராமரின் கட்டளைப்படி இலட்சுமணர் கிஷ்கிந்தை நோக்கி புறப்பட்டார். மிகுந்த கோபத்துடன், ஒரு சிங்கம் போல் இலட்சுமணர் வருவதைக் கண்ட வானரங்கள், உடனே சென்று அங்கதனிடம் இலட்சுமணர் மிகுந்த கோபத்துடன் வருவதைக் கூறினர். செய்தியை அறிந்த அங்கதன், சுக்ரீவனை காண மாளிகைக்கு சென்றான். அங்கு மாளிகையில் சுக்ரீவன், மதுக்கு மயங்கி, அவனை சுற்றி பெண்கள் புடைசூழ மயங்கி இருந்தான். அங்கதன், தந்தையே! தங்களை தேடி இலட்சுமணர் மிகுந்த கோபத்துடன் வந்துக் கொண்டு இருக்கிறார். தாங்கள் மயக்கத்தை கலைத்து எழுங்கள் எனக் சுக்ரீவனை பார்த்து கூறினான். அங்கதனின் வார்த்தைகள் சுக்ரீவனின் காதில் விழவில்லை. தன் நிலைமை மோசமாகி கொண்டு இருப்பதை கூட அறியாமல் சுக்ரீவன் மயங்கி இருந்தான்.

�� பிறகு அங்கதன், இனி சித்தப்பாவிடம் பேசி ஒரு பயனும் இல்லை. அனுமனிடம் சென்று கூறுவோம் என நினைத்து அனுமனிடம் சென்றான். அனுமனிடம், இலட்சுமணன் மிகுந்த கோபத்துடன் வந்துக் கொண்டு இருக்கிறார். சித்தப்பாவிடம் கூறலாம் என சென்றால் அங்கு அவர் மகளிரின் அழகிலும், மது போதையிலும் மயங்கி உள்ளார். நமக்கு அழிவு காலம் வந்துவிட்டது. இதிலிருந்து விடுபட ஏதேனும் வழி உள்ளதா என யோசனைக் கேட்டான். ஆனால் அனுமன், கோபத்தில் வந்து கொண்டிருக்கும் இலட்சுமணனை யாராலும் சமாதானப்படுத்த முடியாது என தன் மதி நுட்பத்தால் அறிந்துக் கொண்டான். அனுமன் அங்கதனிடம், அங்கதா! இதற்கு ஒரே வழி உன் தாய் தாரையிடம் சென்று உதவி கேட்பது தான் என்றான்.

�� பிறகு இருவரும் சென்று கூறி தாரையின் காலில் விழுந்து வணங்கினர். அங்கதன், அம்மா! இலட்சுமணர் பெரும் கோபமாக வந்துக் கொண்டு இருக்கிறார். சித்தப்பா மதுவில் மயங்கி உள்ளார். இந்நிலைமையில் தாங்கள் தான் உதவி செய்து அனைவரையும் காப்பாற்ற வேண்டும். தாங்கள் தான் இலட்சுமணனின் கோபத்தைக் குறைக்க வேண்டும் எனக் கூறினான். கிஷ்கிந்தையின் வாயிலை வானரங்கள்

எல்லாம் ஒன்று சேர்ந்து அடைந்து விட்டனர். வானரங்கள் தன்னை தடுப்பதற்காக வாயிலை அடைத்திருப்பத்தை கண்ட இலட்சுமணன் மிகுந்த கோபம் கொண்டு தன் செந்தாமரை போன்ற காலால் வாயிலை உதைத்தார். இலட்சுமணின் பாதம் பட்டவுடன், மதில்சுவரும், வாயிலுக்கு காவலாக இருந்த கதவும் உடைந்து விட்டன. இதனைப் பார்த்த வானரங்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள தலைதெறிக்க ஓடின.

�� பிறகு இலட்சுமணர் கிஷ்கிந்தைக்குள் நுழைந்து அரண்மனையை நோக்கி சென்றார். இலட்சுமணர் அரண்மனை நோக்கி வருவதை பார்த்து எல்லோரும் பயந்து நடுங்கினர். பிறகு தாரை அனைவரையும் அங்கிருந்து போக சொல்லிவிட்டாள். இலட்சுமணர் அரண்மனை வாயிலை அடைந்தான். தாரை பெண்கள் புடைசூழ இலட்சுமணனை எதிர்நோக்கி நின்றாள். இலட்சுமணர் தாரையை பார்த்தவுடன், தன் தலையை கீழே குனிந்து கொண்டார். தாரை இலட்சுமணனை பார்த்து, ஐயனே! நாங்கள் செய்த தவத்தின் பயனாக தாங்கள் இன்று இங்கு வந்துள்ளீர்கள். தங்கள் வரவு எங்களுக்கு புண்ணியமே என்று கூறினாள். பிறகு இலட்சுமணர் கோபம் குறைந்து தாரையை நிமிர்ந்து பார்த்தான். தாரையை பார்த்தவுடன் தன் தாயின் நினைவு வந்துவிட்டது. அவர்களும் தாரையை போல தான், மங்கல நாண் அணியாமல், அணிகலன்கள் அணியாமல், மணம் வீசும் மலர்களை சூடாமல், குங்குமம் இடாமல் மேலாடையால் உடலை மறைந்துக் கொண்டு இருப்பார்கள் என நினைத்து வருந்தினான்.

சுக்ரீவனின் சத்தியம்!

�� இலட்சுமணன் தாரையிடம், கார்காலம் முடிந்த பிறகு அன்னை சீதையை தேட படையோடு வருவதாக இராமரிடம் வாக்கு கொடுத்துவிட்டு சென்ற சுக்ரீவன், தான் கொடுத்த வாக்கை மறந்துவிட்டான். ஆதலால் அண்ணன் இராமன், சுக்ரீவன் என்ன செய்து கொண்டு இருக்கிறான். தான் செய்த வாக்கிற்கு என்ன பதில் என்பதை தெரிந்து கொண்டு வரும்படி கட்டளையிட்டுள்ளார். ஆதலால் தான் நான் இங்கு வந்துள்ளேன் எனக் கூறினான். தாரை, மைந்தனே! சிறியவர்கள் தவறு செய்து இருந்தால் அவர்களை தாங்கள் மன்னித்து அருள வேண்டும். தாங்கள் செய்த உதவியை சுக்ரீவன் ஒருபோதும் மறக்கவில்லை. அதேபோல் தங்களுக்கு செய்த கொடுத்த வாக்கையும் சுக்ரீவன் மறக்கவில்லை. பல இடங்களுக்கு தூதர்களை அனுப்பி படைகளை திரட்ட சற்று காலதாமதமாகிவிட்டது என்றாள்.

�� தாரை, தாங்கள் செய்த உதவியை ஒருபோதும் சுக்ரீவனால் மறக்க இயலாது. அவ்வாறு சுக்ரீவன் மறக்க நேர்ந்தால், அனைத்தையும் இழந்து மிகுந்த துன்பத்திற்கு உள்ளாவான் என்றாள். இதைக் கேட்ட இலட்சுமணன் நாம் தேவை இல்லாமல் கோபப்பட்டு விட்டோமா என நினைத்துக் கொண்டார். இவர்கள் பேசி கொண்டு இருக்கும் போதே அனுமன் அவ்விடத்திற்கு வந்தான். அனுமனை கண்டவுடன் இலட்சுமணனுக்கு கோபம் வந்தது. இருந்த போதிலும் அதனை இலட்சுமணர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பிறகு இலட்சுமணர் அனுமனை பார்த்து, மிக வலிமையும், அனைத்தையும் கற்றறிந்த நீயும் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டாயா? எனக் கேட்டார்.

�� அனுமன், பெருமானே! இவ்வுலகில் பாவம் செய்தவருக்கு கூட மன்னிப்பு உண்டு. ஆனால் செய்த உதவியை மறப்பவற்கு மன்னிப்பு உண்டா? தங்களுக்கும் அரசனுக்கும் நட்பு ஏற்பட நான் காரணமாக இருந்தேன். அவ்வாறு இருக்கையில் தங்களை துன்ப நிலையில் இருக்க செய்வேனா? கருணையின் வடிவாய் இருக்கும் தங்களின் எண்ணம் தான் என் மனதில் உள்ளது. தாங்கள் இல்லையேல் எங்களுக்கு வாழ்வு ஏது? அதேபோல் சுக்ரீவனும் தாங்கள் செய்த உதவியை மறக்கவில்லை. தூதுவர்களை ஏவி படைகளை சேர்க்க காலதாமதமாகிவிட்டது என்றான். அனுமனின் வார்த்தைகளை கேட்ட இலட்சுமணனின் கோபம் சற்று தணிந்தது. பிறகு இலட்சுமணர் அனுமனிடம், அண்ணன் இராமர் அன்னை

தேவியை பிரிந்ததால் மிகவும் மனம் வருந்தி சோர்ந்துள்ளார். நீங்கள் கொடுத்த வாக்கின்படி சரியான நேரத்திற்கு வராததால் இராமர் மிகவும் கோபம் கொண்டு உள்ளார். ஆதலால் அவரின் கட்டளைப்படி நான் இங்கு வந்துள்ளேன் எனக் கூறினார்.

�� அங்கதன் மறுமடியும் சுக்ரீவனின் மாளிகைக்குச் சென்று சுக்ரீவனின் மயக்க நிலையை தெளிய வைத்தான். சுக்ரீவனிடம், இலட்சுமணர் பெரும் கோபங்கொண்டு வந்துள்ளார் என்பதை தெரிவித்தான். மது மயக்கத்தில் இருந்து தெளிந்த சுக்ரீவன், கோபங்கொண்டு இச்செய்தியை ஏன் முன்கூட்டியே என்னிடம் தெரிவிக்கவில்லை எனக் கேட்டான். அதற்கு அங்கதன், தந்தையே! அப்போது தாங்கள் மகளிர் புடைசூழ, மதுவில் மயங்கி இருந்தீர்கள். அதனால் நான் அன்னையிடம் சென்று இலட்சுமணரின் வரவை தெரிவித்தேன். அவர்கள் இலட்சுமணரை சமாதானப்படுத்த சென்றுள்ளார்கள். ஆதலால் தாங்கள் சீக்கிரம் இலட்சுமணரை காண வர வேண்டும் என்றார்.

�� சுக்ரீவன், நான் மதுவில் மயங்கி கிடந்தேனா? மது அருந்தியவனுக்கு தாய், தந்தை, மகன், மகள் என எவரும் தெரியமாட்டார்கள். மது ஒருவனது வாழ்க்கையை கெடுத்து விடும் போலும். மது அருந்துபவனுக்கு நிச்சயம் நரகம் உண்டு. உலகின் மிகக் கொடுமையானது மது அருந்துவது தான். ஆதலால் மதுவை ஒருபோதும் நான் தொட மாட்டேன். இது இராமன் மேல் ஆணை என சத்தியம் செய்தான்.

படைகள் திரண்டு வருதல்!

�� அனுமன் இலட்சுமணரை, சுக்ரீவனை காண அழைத்துச் சென்றார். அங்கு சுக்ரீவன் தன் மனைவியுடன் இலட்சுமணனின் வரவை எதிர்நோக்கி காத்துக் கொண்டு இருந்தார். இலட்சுமணர் வந்தவுடன் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான் சுக்ரீவன். அரண்மனையில் அரியணையில் அமருமாறு இலட்சுமணை வேண்டிக் கொண்டான் சுக்ரீவன். அதற்கு இலட்சுமணர், சுக்ரீவனே! என் அண்ணன் இராமர் துன்பக்கடலில் மூழ்கி இருக்கும்போது நான் எவ்வாறு அரியணையில் அமர முடியும் என்றார். ஆதலால் நான் தரையில் அமருவது தான் சரி என்று சொல்லி தரையில் அமர்ந்தார் இலட்சுமணர். இதைப் பார்த்த சுக்ரீவன் மிகுந்த வேதனைப்பட்டான். பிறகு சுக்ரீவன் இலட்சுமணனிடம், தாங்கள் எங்களுடன் வந்து உணவு உண்ணுமாறு அன்புடன் அழைத்தார். இலட்சுமணர், அங்கு எம்பெருமான்! காய், கனிகளை மட்டும் உண்ணும்போது, நான் எவ்வாறு தங்களின் விருந்தை ஏற்க முடியும் என மறுத்து விட்டார்.

�� இதைக் கேட்ட சுக்ரீவன் மட்டுமல்லாது அங்கிருந்த அனைவரும் மிகுந்த வேதனையுடன், கண்ணீர் தழும்ப நின்றனர். மிகவும் வேதனைக் கொண்ட சுக்ரீவன், இராமரை விரைந்து காண வேண்டும் என நினைத்தார். அதனால் சுக்ரீவன் அனுமனிடம், அனுமனே! வானர சேனைகளை திரட்ட சென்று இருக்கும் தூதர்களையும், அவர்களோடு வரும் வானர சேனைகளையும் நீ அழைத்துக் கொண்டு வா என்று கட்டளையிட்டான். பிறகு இலட்சுமணரும், சுக்ரீவனும் இராமரைக் காண விரைந்து சென்றனர். போகும் வழியில் சுக்ரீவன் இராமரை நினைத்துக் கொண்டே சென்றான். அவர்களுடன் அங்கதனும் சென்றான். அவர்கள் இராமர் இருக்கும் இடத்தை அடைந்தனர். சுக்ரீவன் ஓடிச்சென்று இராமனின் திருவடியில் விழுந்து வணங்கினான். இராமர் சுக்ரீவனை அன்போடு தழுவி தன் பக்கத்தில் அமர வைத்தார். சுக்ரீவா! எல்லோரும் நலமாக உள்ளார்களா! உன் ஆட்சி அறநெறியுடன் உள்ளதா? எனக் கேட்டார். சுக்ரீவன், பெருமானே! தங்களின் ஆசியால் எல்லோரும் நலமாக உள்ளார்கள் என்றான்.

�� இராமர், அனுமன் எங்கே? எனக் கேட்டார். சுக்ரீவன், அனுமன், படைகளை திரட்ட சென்றுள்ளான். முழு படைகளையும் திரட்டி கொண்டு

வருவான் என்றான். அங்கு வானர படைகள் பல்வேறு திசைகளில் இருந்து வந்துக் கொண்டு இருந்தனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை வானரங்களாக தெரிந்தன. திரண்டு வந்த வானர படைகளை பற்றி காண்போம்.

�� சதவலி என்னும் வானர வீரன், தன் படைத்தளபதிகளோடு, பதினாயிரம் வானரப் படைகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். சுசேடணன் என்னும் வானர வீரன் மேரு மலையை தகர்த்து எடுக்கும் வலிமை படைத்தவன். அவன் தன் பத்து லட்சம் கோடி வானர படைகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். தாரன் என்னும் வானர வீரன் கண் சிமிட்டும் நேரத்துக்குள் தன் பெரிய படையான ஐம்பதாயிரம் படையுடன் வந்து சேர்ந்தான். சுவாட்சன் என்னும் வானர வீரன் இரண்டாயிரம் கோடி படையுடன் வந்து சேர்ந்தான். தாரன் என்னும் வானர வீரன் தன் இரண்டாயிரம் படைகளுடன் வந்து சேர்ந்தான்.

�� கரடி இனத் தலைவனான தூமிரன் இரண்டாயிரம் கோடி கரடிப்படையுடன் வந்து சேர்ந்தான். பனசன், பெரிய மலையைப் போன்ற உருவம் கொண்டவன் தன் பன்னிரெண்டாயிரம் கோடி படையுடன் அங்கு வந்து சேர்ந்தான். வானர வீரனான நீலன் தன் பதினைந்து கோடி நெடிய வானரப் படையுடன் வந்து சேர்ந்தான். கவயன் எனும் வீரன் முப்பதினாயிரம் கோடி சேனையுடன் அங்கு வந்து சேர்ந்தான். ஆறைந்து தன் முப்பது கோடி குரங்குச் சேனையுடன் அங்கு வந்தான். தரிமுகன் என்பவன் தன் பெரிய படையான ஆயிரத்து அறநூறு கோடி படையுடன் வந்து சேர்ந்தான்.

சுக்ரீவன் அனுமனுக்கு வழிகாட்டுதல்!...

�� சாம்பன் என்பவன் இரண்டு கோடி வெம்படையுடன் புடைசூழ அங்கு வந்தான். துன்முகன் என்பவன் எண்ணிலடங்கா கோடி நூறாயிரம் படையுடன் வந்தான். துமிந்தன் என்பவன் நூறு லட்சம் கோடி படைகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். கஜகோமுகன் எனும் வீரனும், ஒன்பது கோடி படை வீரர்களுடன் வந்து சேர்ந்தான். குமுதன் என்ற படைத் தலைவன், ஐந்தாயிரம் கோடி தன் சேனையுடன் அங்கு வந்தான். நளன் என்பவன் எண்ணற்ற படை வெள்ளத்தோடு அங்கு வந்தான். கும்பசங்கர் எனும் படைத்தளபதியும் தன் சேனைகளோடு வந்து சேர்ந்தான். அனுமன் தன் நூறாயிரம் கோடி சேனையுடன் தயாராக இருந்தான்.

�� இப்படி கோடிக் கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் எட்டுத் திசைகளில் இருந்து வானர வீரர்கள் வந்து குவிந்தனர். மறுநாள் அனுமன் அனைவரையும் கடல் போல் திரட்டி கொண்டு இராமனின் இருப்படத்திற்கு வந்து சேர்ந்தான். சுக்ரீவன், கடல் போல் திரண்டு வந்த படைகளை இராமரிடம் காண்பித்தான். இராமர் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல் போல் நின்ற வானர வீரர்களை கண்டு அதிசயத்து நின்றார். பிறகு சுக்ரீவனிடம், சுக்ரீவா! உன் படைகள் வெள்ளம் போல் திரண்டு வந்துள்ளது என வியந்துக் கூறினார். இராமர், இனியும் நாம் காலத்தை வீணடிக்காமல் விரைவில் சீதையை கண்டுபிடிக்க வேண்டும். ஆதலால் அதற்கான வேலைகளை பார்க்கலாம் என்றார்.

�� பிறகு சுக்ரீவன் தன் படைகளை எட்டு திசைகளுக்கும் அனுப்பினான். இடபன் என்னும் வானர வீரனை மேற்கு திசைக்கு சென்று சீதையை தேடும்படி கட்டளையிட்டான். அடுத்து சதவலி என்னும் வானர தளபதியை வடதிசை நோக்கி செல்லுமாறு அனுப்பினான். விந்தன் என்னும் வானர வீரனை தன் படைகளுடன் கீழ்திசை நோக்கி செல்லுமாறு கட்டளையிட்டான். பிறகு அனைவரையும் சீதையை தேடி ஒரு மாதத்திற்குள் வர வேண்டும் என கட்டளையிட்டான். பிறகு சுக்ரீவன் அனுமனை நோக்கி, வீரனே! உன் பலத்தையும், வலிமையையும் காட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது. இராவணன் சீதையை தென்திசை நோக்கி தான் கவர்ந்து சென்றான். ஆதலால் நீ தென்திசை நோக்கி செல். உன்னுடன் அங்கதனும், ஜாம்பவானும், வானர படை வீரர்களும் வருவார்கள்.

�� தென் திசை போக இருக்கும் அனுமன் முதலியானோருக்கு சுக்ரீவன் அதன் வழியை பற்றி கூறினான். நீங்கள் தென் திசை நோக்கி செல்லும் போது விந்திய மலை வரும். அங்கு சீதையை தேடுங்கள். அதன் பின் நீங்கள் நர்மதா நதியை அடைவீர்கள். பிறகு அங்கிருந்து சென்று ஏமகூட மலையை அடைவீர்கள். அங்கு சீதையை தேடிய பின் போகும் வழியில் தண்டகவனத்தை அடைவீர்கள். அதனை தாண்டிச் சென்றால் பாண்டு மலை வரும். அங்கு தேடிய பின் புனித நதியான கோதாவரி நதியை அடைவீர்கள். அங்கு சீதையை தேடிய பின் தெற்கு நோக்கி சென்றால் சோனை நதி வரும். அதை தாண்டி சென்றால் பல நாடுகளை கடந்து கொங்கணம், குலிந்தம் என இரு நாடுகள் வரும்.

�� அங்கு சீதையை தேடிய பின் அங்கிருந்து சென்றால் அருந்ததி என்ற பெருமலையை அடைவீர்கள். அருந்ததி மலையின் உச்சியை எவராலும் அடைய முடியாது. ஆதலால் அருந்ததி மலை உச்சி சென்று காலத்தை வீணடிக்க வேண்டாம். பிறகு அங்கிருந்து சென்றால் மரகத மலை வரும். அங்கு சென்று தேடுங்கள். அதன்பின் திருவேங்கட மலையை அடைவீர்கள். அம்மலையை அடைந்தால் உங்கள் பாவங்களெல்லாம் நீங்கி முக்தி பெறுவீர்கள். அம்மலையை தொலைவில் இருந்து தரிசித்துவிட்டு சீதையை தேடுங்கள். அதன்பின் தொடர்ந்து சென்றால் சான்றோர்கள் வாழும் தொண்டை நாடு வரும். அங்கு தேடிய பின் தொடர்ந்து சென்றால் சோழ நாடு வரும். அங்கு சீதையை தேடிய பின் நீங்கள் பாண்டிய நாட்டை அடைவீர்கள். பிறகு பாண்டிய நாட்டை கடந்து சென்றால் பொதிய மலை வரும். அங்கு அகத்திய முனிவரின் தமிழ் சங்கத்தை காண்பீர்கள். அத்தமிழ் மொழியின் இனிமை நம் மனதின் உள்ளத்தை உருக வைக்கும். தமிழ் மொழி இனிமையில் மனதை தளர விடாமல், அங்கு சீதையை தேடிய பின்பு மகேந்திர மலையை அடைவீர்கள்.

சுயம்பிரபை மோட்சம் பெறுதல்...

�� சுக்ரீவன், இப்படி எல்லா இடங்களிலும் சீதையை தேடி ஒரு மாதத்திற்குள் இங்கு வந்தடைய வேண்டும். ஆதலால் எல்லோரும் காலத்தை தாமதிக்காமல் உடனே புறப்படுங்கள் என்றான். பிறகு இராமன் அனுமனை தனியாக அழைத்துச் சென்று, வீரத்தில் சிறந்தவனே! நிச்சயம் நீ சீதையை கண்டுபிடித்து வருவாய் என நம்புகிறேன். சீதையை பற்றி நான் உன்னிடம் கூறுகிறேன். சீதை அழகில் சிறந்தவள். தாமரைப்பூ போன்றவள். மிகவும் நளினம் உடையவள் என சீதையைப் பற்றிக் கூறினார். பிறகு இராமர், சீதையிடம் இக்கணையாழியை என் அடையாளமாக காண்பித்து என்னுடைய நலத்தை கூறுவாயாக என வாழ்த்தி அனுமனுக்கு விடை கொடுத்தார்.

�� பிறகு அனுமன், அங்கதன், ஜாம்பவன் மற்றும் தன் பெரிய படைகளுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் விந்திய மலையை அடைந்தார்கள். அங்கு சீதையை தேடி அலைந்த பின்னர் நர்மதா ஆற்றை கண்டார்கள். அங்கும் சீதையை வெகுண்டு தேடினார்கள். அதன்பின் நர்மதை ஆற்றை கடந்து அங்கிருந்து சீதையை தேடி ஏமகூட மலையை அடைந்தனர். அங்கு சீதையை தேடும் போது ஒரு பாலைவனத்தை அடைந்தனர். அவர்கள் பாலைவனத்தின் வெப்பத்தை தாங்க முடியாமல் மிகவும் அவதிப்பட்டனர். அங்கு அவர்களுக்கு ஒரு பாதாளம் தென்பட்டது. வெப்பத்தை தாங்க முடியாத அவர்கள் பாதாளத்துக்குள் நுழைந்தனர்.

�� அப்பாதாளத்துக்குள் மனிதர்கள் நடமாட்டமே இல்லாத ஒரு நகரத்தை கண்டனர். அங்கு சேலைகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு, உணவுகளும், உடைகளும் இருந்தது. சிலர் இது தான் இராவணன் சீதையை சிறை வைத்துள்ள இடம் என்று நினைத்தனர். அங்கு ஓர் அழகிய மண்டபத்தில் ஓர் பெண் தவம் செய்து கொண்டு இருந்தாள். அவள் பெயர் சுயம்பிரபை. அப்பெண் நகரக்குள் யாரோ வந்துள்ளார்கள் என்பதை அறிந்து கண் விழித்து பார்த்தாள். அனுமனை பார்த்து, தாங்கள் யார்? என வினவினாள். அனுமன், நாங்கள் இராமருடைய அடியேன்கள். என் பெயர் அனுமன் என்றார். பிறகு அனுமன் சுயம்பிரபையை பார்த்து, தாங்கள் யார்? தாங்கள் தனியாக இங்கு என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள் என வினவினான்.

�� சுயம்பிரபை, முன்னொரு காலத்தில் தேவலோகத்தை சேர்ந்த மயன் என்பவன் இந்த பகுதியில் அழகிய ஊரை அமைத்தான். அவன் ஆயிரம் ஆண்டுகள் கடும் தவம் புரிந்து பிரம்மாவிடம் வரம் பெற்றான். அத்துடன் தெய்வப்பெண்ணான ஹேமையுடன் தான் அமைத்த அழகிய நகரில் கூடா ஒழுக்கத்துடன் வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு நான் துணை புரிந்தேன். மயன் ஹேமையுடன் இருப்பதாக நாரத முனிவர் இந்திரனிடம் கூறினார். இதனால் கோபமடைந்த இந்திரன் மயனைக் கொன்று விட்டு ஹேமையை தேவலோகத்திற்கு அனுப்பிவிட்டார். என்னை இங்கேயே தனியாக இருக்கும்படி கூறினார். உனக்கு இராமரின் தூதுவனான அனுமன் விமோட்சனம் தருவார் என கூறிவிட்டு சென்றார்.

�� நான் தங்களுக்காக தான் இத்தனை நாள் தவம் செய்து கொண்டு இருந்தேன். தாங்கள் எனக்கு இதிலிருந்து மோட்ச பதவியை அளிக்க வேண்டும் என்றாள். பிறகு அனுமன் தன் விஸ்வரூபத்தை எடுத்து, அந்த பாதாளத்தை வேருடன் பிடுங்கி மேலே நிலமட்டம் வரும்போது மற்ற வானர வீரர்களை அங்கிருந்து இறங்கச் செய்தார். அப்பாதாளத்தை கடலில் வீசி விட்டார். சுயம்பிரபைக்கு மோட்சத்தை அளித்தார். சுயம்பிரபை தேவலோகத்தை சேர்ந்தாள். பிறகு வானர வீரர்கள் பொய்கையை அடைந்தனர். அங்கு அவர்கள் காய், கனிகளை உண்டு இளைப்பாறினார்கள். பொய்கை கரையில் அன்றிரவை கழித்தனர்.

வானர வீரர்களின் கவலை!!

�� பொய்கை கரையில் அனுமன், அங்கதன், ஜாம்பவான் மற்ற வானர வீரர்கள் அன்றிரவை கழித்தனர். துமிரன் என்ற அரக்கன் கருநிறமுடன், பெரிய உடலும், நீண்ட கைகளுடன் நடுஇரவில் அங்கு வந்தான். என் ஆட்சிப் பகுதியான பொய்கை கரையில் இவர்கள் எவ்வளவு துணிவுடன் உறங்கி கொண்டு இருப்பார்கள் எனக் கூறி அங்கதனின் மார்பில் ஓங்கி குத்தினான். யார் தன் மார்பில் குத்தியது என்பதை அறிய அங்கதன் எழுந்து பார்த்தான். அங்கு அரக்கன் அவன் முன் பெருங்கோபத்தில் நின்று கொண்டு இருந்தான். பிறகு இருவரும் போர் புரிய தொடங்கினர். நெடுந்நேரம் இவர்களின் யுத்தம் தொடர்ந்தது. ஒரு வழியாக அங்கதன் அரக்கனை கொன்று விட்டான். மற்ற வானரங்கள் இவர்களின் போரின் போது ஏற்பட்ட சத்தங்களை கேட்டு எழுந்து பார்த்தனர். அப்போது அரக்கன் மாண்டு கிடந்தான். உடனே அனுமன் அங்கதனை பார்த்து இவன் யார்? எனக் கேட்டான்.

�� அதற்கு அங்கதன், இவன் யாரென்று எனக்கு தெரியவில்லை என்றான். அப்போது ஜாம்பவான், இவனை எனக்கு தெரியும். இவன் துமிரன் என பெயர் கொண்ட அரக்கன். இவன் பொய்கையை தன்னுடையது என எண்ணிக் கொண்டு இருந்தான். இவனை அங்கதனை தவிர வேறு எவராலும் கொல்ல முடியாது என்றான். பிறகு வானர வீரர்கள் அங்கிருந்து சீதையை தேட புறப்பட்டனர். அவர்கள் விதர்ப்ப நாடு, பாண்டு மலை, தண்டகவனம், கோதாவரி நதி போன்ற இடங்களில் சீதையை மிகுந்த சிரத்தையுடன் தேடினர். இங்கு சீதையை கண்டுபிடிக்க முடியாததால் மிகவும் கவலையுற்று சோனை நதியை அடைந்தனர். அங்கும் சீதையை கண்டுபிடிக்க முடியாததால் அங்கிருந்து அருந்ததி மலையை அடைந்தனர். அங்கு தேடிய பின் திருவேங்கட மலையை அடைந்தனர். அங்கு திருவேங்கட மலையை வணங்கிவிட்டு சீதையை தேடினர்.

�� பிறகு அவர்கள் அங்கிருந்து அந்தணர் வேடமணிந்து தொண்டை நாட்டை அடைந்தனர். அங்கு சீதையை தேடிய பிறகு வளமிக்க சோழ நாட்டை அடைந்தனர். அங்கும் சீதையை கண்டுபிடிக்க முடியாததால் பாண்டிய நாட்டுக்குச் சென்றனர். அங்கு தேடியும் சீதை கிடைக்காததால் மிகவும் கவலையுற்றனர். பிறகு அவர்கள் கடைசியாக சுக்ரீவன் குறிப்பிட்ட மகேந்திர மலையை அடைந்தனர். அங்கு அவர்கள் பரந்து

விரிந்து இருந்த கடல்பகுதியைக் கண்டனர். வானர வீரர்கள் எவ்வளவு முயன்றும் சீதையை தேடி கண்டுபிடிக்க முடியாததால் மிகவும் கவலையுடன் சோர்வடைந்தனர். அது மட்டுமின்றி சுக்ரீவன் கொடுத்த ஒரு மாதக்காலம் முடிவடைந்ததால் மிகவும் கவலையுற்றனர். நம்மை ஒரு மாதக்காலம் சீதையை கண்டிபிடித்து வரச்சொன்ன சுக்ரீவனும், இராமரும் நம் வரவை எதிர்நோக்கி காத்துக் கொண்டு இருப்பார்கள்.

�� நாம் இன்னும் சீதையை கண்டுபிடிக்கவில்லை என்ற செய்தி இராமருக்கு தெரிந்தால் அவர் மிகவும் வேதனைப்படுவாரே? நாம் சீதையை கண்டுபிடிக்காமல் எவ்வாறு நாடு திரும்ப முடியும் என பலவாறு புலம்பி கவலையுற்றனர். அப்போது அங்கதன் அவர்களிடம், நாம் இராமரிடம் சீதையை நிச்சயமாக கண்டுபிடித்துவிட்டு வருவோம் என அவரிடம் ஆணையிட்டு வந்தோம். ஆனால் நம்மால் அக்காரியத்தை செய்து முடிக்க முடியவில்லை. நமக்கு சுக்ரீவன் கொடுத்த கால அவகாசமும் முடிந்து விட்டது. இதற்கு மேலேயும் நம்மால் சீதையை கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை. சுக்ரீவன் நமக்கு கொடுத்த கட்டளையை செய்து முடிக்கவில்லை என்று நம்மை தண்டிப்பான். நாம் சீதையை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்ற செய்தி இராமர் அறிந்து மிகவும் வருந்துவார். இதையெல்லாம் நாம் கண்ணால் பார்ப்பதற்கு பதில் நம் உயிரை இங்கேயே மாய்த்துக் கொள்ளலாம். இதற்கு உங்களின் கருத்து என்ன? என்று கேட்டான்.

சம்பாதியின் சோகம்!...

�� அங்கதன் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்த ஜாம்பவான், வானர இளவரசனே! வீரனே! உன் கருத்துக்கள் சிறப்பானது. நீ உன் உயிரை மாய்த்துக் கொண்ட பின் நாங்கள் மட்டும் உயிரோடு இருப்போமா என்ன? இல்லை, கிஷ்கிந்தைக்கு சென்று நடந்த விஷயங்களை எல்லாம் சொல்லி இராமனின் திருவடியிலும், சுக்ரீவனின் திருவடியிலும் வீழ்ந்து உயிர் வாழ்வோம் என நினைத்தாயா? நாங்கள் மட்டும் உயிர் வாழ்ந்து என்ன பயன்? ஆதலால் நாங்களும் எங்கள் உயிரை மாய்த்து கொள்வோம். ஆனால் நீ எங்களுக்கு ஓர் சத்தியம் செய்ய வேண்டும். நாங்கள் இறந்த பின் நீ உயிர் வாழ வேண்டும். இது எங்களின் விருப்பம் ஆகும் என்றான்.

�� அதற்கு அங்கதன், நீங்கள் எல்லோரும் மாண்டு போன பின் நான் உயிருடன் நாடு திரும்புவது நன்றல்ல. அதனால் நாம் அனைவரும் உயிரை துறப்போம் என்றான். இதைக்கேட்ட ஜாம்பவான், அங்கதனே! நீ அரச பதவிக்கு உரியவன். ஆதலால் தான் உன்னை உயிருடன் நாடு திரும்ப சொன்னேன் என்று கூறினான். இவர்களின் உரையாடல்களை கேட்டுக் கொண்டிருந்த அனுமன், நாம் அனைத்து உலங்களிலும் இன்னும் சீதையை தேடி முடிக்கவில்லை. சீதையை தேடி கண்டுபிடித்து இராமரிடம் ஒப்படைப்பதுதான் நம் கடமையும், வீரமும் ஆகும். நாம் சுக்ரீவன் குறித்த காலத்திற்குள் சீதையை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. குறித்த காலத்திற்குள் வராததால் நாம் இன்னும் சீதையை தேடி கண்டுபிடிக்கவில்லை என்பதை சுக்ரீவன் புரிந்து கொண்டிருப்பான். ஆதலால் நாம் சீதையை தேடிச் செல்வது தான் சிறந்தது.

�� சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது, ஜடாயு இராவணனிடம் போரிட்டு உயிர் துறந்தார். அதுபோல நாம் சீதையை தேடும்போது உயிர் துறக்க நேரிட்டால் அது தான் சிறப்பு. அதை விட்டுவிட்டு சீதையை கண்டுபிடிக்கவில்லை என்று உயிரை மாய்த்து கொள்வது தான் ஓர் வீரனின் சிறப்பா? என்றான். இப்படி அனுமன் பேசிக் கொண்டிருக்கும் போது, சற்று தொலைவில் ஓர் மலையில் அமர்ந்திருந்த சம்பாதி என்ற கழுகின் அரசன், தம் தம்பி ஜடாயு இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். ஜடாயுவை நினைத்து புலம்பி அழுதான்.

�� சம்பாதியும் ஜடாயுவும், சிறு வயதில் தாம் பெற்ற அபார சக்தியை

அனுபவித்துக் கொண்டு இருந்தனர். அப்படி ஒரு நாள் இருவரும் ஆகாயத்தில் போட்டி போட்டுக் கொண்டு உயரப் பறந்து சென்று கொண்டு இருந்தனர். சூரியனை நெருங்க நெருங்க வெப்பம் அதிகரித்து கொண்டு இருந்தது. ஜடாயுவை வெப்பம் கொளுத்தி விடும் போல் இருந்தது. அப்போது சம்பாதி தன் சிறகுகளை விரித்து ஜடாயுவைக் காப்பற்றினான். ஆனால் சம்பாதியின் சிறகு எரிந்து போனது. சம்பாதி பறக்க முடியாமல் கீழே மலை மேல் விழுந்தான். அன்றிலிருந்து சம்பாதி பறக்க முடியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான்.

�� பிறகு சம்பாதி, வானர வீரர்களை நோக்கி வந்தான். அவர்களிடம் சம்பாதி கண்ணீர் மல்க, என் தம்பி ஜடாயு இறந்து விட்டானா? எப்படி இறந்தான்? என்று கேட்டான். அப்போது அங்கு இருந்த வானர வீரர்கள், சம்பாதியை பார்த்து பயந்து ஓடினர். ஆனால் அனுமன் சம்பாதியை எதிர்கொண்டு, நீ யார்? வஞ்சகம் செய்யும் அரக்கனா? உயிர் மேல் ஆசை இருந்தால் இங்கிருந்து தப்பித்து ஓடி விடு என்றான். ஆனால் சம்பாதி, அனுமனின் சொற்களை கேட்டு கோபப்படாமல் ஜடாயு இறந்த சோகத்தால் அழுது கொண்டிருந்தான். மறுபடியும் சம்பாதி, ஜடாயு எப்படி இறந்தான்? ஜடாயுவை கொன்றவர் யார் எனக் கேட்டான். அதற்கு அனுமன், முதலில் நீ யார் என்பதை சொன்னால் தான் நான் ஜடாயுவைக் கொன்றவர் யார் எனச் சொல்வேன் என்றான். சம்பாதி, ஜடாயு என் உடன் பிறந்த சகோதரன். அவனது பிரிவால் நான் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறேன் என்றான்.

சம்பாதி சீதையின் இருப்பிடத்தை கூறுதல்!

�� அனுமன் சம்பாதியிடம், இராவணன் சீதையை கவர்ந்து சென்ற போது ஜடாயு இராவணனிடம் போரிட்டார். போரின் போது இராவணன், சிவன் கொடுத்த வாளால் ஜடாயுவின் சிறகுகளையும், கால்களையும் வெட்டி வீழ்த்தியதால் ஜடாயு இறந்து விட்டார் எனக் கூறினார். இதைக்கேட்ட சம்பாதி மயங்கி கீழே விழுந்தார். மயக்கம் தெளிந்த சம்பாதி, எம்பெருமான்! இராமரின் மனைவியை காக்கும் பொருட்டு ஜடாயு உயிர் துறந்து புகழை அடைந்துள்ளான். பிறகு சம்பாதி, அனுமனையும், மற்ற வானர வீரர்களையும் பாராட்டினான். சம்பாதி, வானர வீரர்கள் அனைவரிடமும் இராம நாமத்தை சொல்லச் சொன்னான். அனைவரும் இராம நாமத்தை சொல்லும்போது சம்பாதியின் சிறகுகள் முளைக்க ஆரம்பித்தது. திரும்பவும் தன் சிறகுகளை பெற்ற சம்பாதி மிகவும் வலிமையுடையவனாக மாறினான்.

�� பிறகு சம்பாதி, நானும் என் தம்பி ஜடாயுவும் ஆகாயத்தில் போட்டிப் போட்டுக் கொண்டு பறந்தோம். தம்பி ஜடாயு சூரியனை நெருங்க நெருங்க அவன் வெப்பத்தை தாங்க முடியாமல் துன்பப்பட்டான். அப்போது நான் என் சிறகுகளை விரித்து ஜடாயுவை காப்பற்றினேன். வெப்பத்தினால் என் சிறகுகள் கருகி நான் மலையின் மேல் விழுந்து உயிர் தப்பினேன். அப்பொழுது சூரியன் என்னிடம், சம்பாதி நீ வருந்த வேண்டாம். ஜனக மகாராஜரின் குமாரியும், இராமபிரானின் மனைவியுமான சீதையை தேடி வானர வீரர்கள் வருவார்கள். அவர்களிடம் இராமரின் நாமத்தை உச்சரிக்க சொல்லி உன் சிறகுகளை நீ திரும்ப பெற்றுக் கொள் என்று அருளினார். உங்களால் நான் என் சிறகுகளை பெற்று வலிமையுடையவனாக மாறினேன் என்றான்.

�� சம்பாதி சொன்னதை கேட்ட அனைவரும், இராமரைப் போற்றி கொண்டாடினர். பிறகு அனுமன், இராவணன் சீதையை தென் திசை நோக்கி கவர்ந்து சென்றதால் இவ்வழியாகத் தேடி வந்துள்ளோம் என்றான். சம்பாதி, வீரர்களே! வருந்த வேண்டாம். நான் அரக்கன் இராவணன் சீதையை கவர்ந்து சென்றதை பார்த்தேன். அவன் அன்னை சீதையை கவர்ந்து கொண்டு இலங்கை நோக்கிச் சென்றான். மிகுந்த துன்பத்தில் இருந்த அன்னையை அங்கே இராவணன் சிறை வைத்து உள்ளான். நீங்கள் அங்கே சென்று சீதையை காண்பீராக என்றான். பிறகு சம்பாதி, நீங்கள் அனைவரும் அங்கே செல்வது எளிதான விஷயம்

அல்ல. உங்களில் மிக்க வலிமையும், தைரியமும் மிக்கவர் அங்கு சென்று, இராமர் கூறியதை சீதையிடம் கூறி அவரின் துயரங்களை நீக்கிவிட்டு வருவீராக என்றான். அப்படி உங்களால் இலங்கை செல்ல முடியாவிட்டால் இராமரிடம் சென்று சீதை இருக்கும் இடத்தை சொல்லுங்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு பறந்து சென்றான்.

�� சம்பாதி சென்ற பிறகு, அங்கிருந்த வானர வீரர்கள், கழுகரசன் பொய் சொல்ல மாட்டான். ஆதலால் நாம் சீதையை தேடி கண்டுபிடித்தால் தான் நம்மால் உயிர் வாழ முடியும் என்றனர். பிறகு அனைவரும் யார் கடலை கடந்து இலங்கை செல்வது என்று ஆலோசித்துக் கொண்டு இருந்தனர். அங்கிருந்த பல வீரர்கள் தங்களால் கடலை கடந்து செல்ல இயலாது எனக் கூறினர். அங்கதன், என்னால் கடலை கடந்து செல்ல முடியும். ஆனால் அங்கிருந்து என்னால் திரும்பி வர இயலாது எனக் கூறினான். கரடி வீரனான ஜாம்பவான், தன்னாலும் கடலை தாண்டிச் செல்ல முடியாது என வருந்திக் கூறினான். பிறகு ஜாம்பவான் அங்கதனிடம், அரச குமாரரே! நம்மில் கடலை கடந்து செல்லவும், மிக்க வலிமை உடையவனும், எல்லா விதங்களிலும் ஏற்ற தகுதி உடையவன் அனுமன் தான் என்றான்.

அனுமன் இலங்கையை நோக்கி செல்லுதல்!

�� ஜாம்பவான் அனுமனை பார்த்து, மாருதி என்ற பெயர் கொண்ட அனுமனே! பல சாஸ்திரங்கள் கற்றவனே, மிக்க வலிமையுடையவனே, கடமை தவறாத மாவீரனே, பணிவுமிக்கவனே, செயலை ஆராய்ந்து செய்யும் ஆற்றல் உடையவனே, நீதி நெறியில் நிலைத்து இருப்பவனே, வாய்மை தவறாதவனே, பெண்ணாசை இல்லாத பிரம்மச்சாரியே, தன்னை எதிர்ப்பவரை வீழ்த்தும் ஆற்றல் உடையவனே, தக்க சமயத்தில் உருவத்தை மாற்றும் ஆற்றல் உடையவனே, இராமர் மீது மிக்க அன்பு உடையவனே, கடலை தாண்டி சீதையை கண்டுபிடிக்கும் ஆற்றல் உன்னிடத்தில் உண்டு என்று கூறினான். இப்படி ஜாம்பவான் அனுமனின் பெருமையை கூறும்போது, அனுமன் தன் தலையை குனிந்து புன்னகைத்தான். பிறகு அனுமன், இராமரின் அருளும், தங்களின் ஆசியும் இருந்தால் ஓர் பறவை போல் கடலை கடந்து செல்வேன் என்றான். நான் இலங்கை சென்று சீதையை கண்டு மீண்டும் திரும்பி வரும்வரை இங்கேயே தங்கி இருங்கள் என்றான்.

�� அனுமன் அனைவரிடமும் விடைபெற்று மகேந்திர மலை உச்சிக்கு சென்றான். அங்கு அனுமன் தன் விஸ்வரூபத்தை எடுத்தான். பிறகு அனுமன் இலங்கை எங்கு உள்ளது என்று அங்கிருந்து கண்டுபிடித்து கொண்டான். அனுமன் தன் இரண்டு கால்களை மலையில் ஊன்றி இராமா என்று உச்சரித்தப்படி வானில் பறந்தான். அனுமன் மலையில் ஊன்றி பறந்த போது அம்மலை பூமிக்கு அடியில் போகும் படியான அதிர்வு ஏற்பட்டது. அனுமனுக்கு தேவர்களும், முனிவர்களும் பூக்களை தூவி, வீரத்தில் வலிமை உடையவனே! சென்று, வென்று வா! என வாழ்த்தி அனுப்பினர். அனுமன் வானத்தில் மிக வேகமாக பறந்தான். அனுமன் கடலை தாண்டி பறக்கும் போது சமுத்திரராஜன் அனுமனை பார்த்து, இவன் ராஜ குலத்தில் பிறந்த இராமனிற்காக வேகமாக பறந்து சென்று கொண்டு இருப்பதை அறிந்த சமுத்திரராஜன், அனுமனை உபசரித்து அனுப்புவது தான் எனது கடமை என நினைத்தான்.

�� அதனால் அவன் தன்னுள் அடங்கி இருந்த மைந்நாகம் என்னும் மலையை எழும்பி அனுமனை தடுத்து தன்னில் தங்கி விட்டு போகும்படி சொல்லி அனுப்பினான். பிறகு மைந்நாகம் வானளவிற்கு எழும்பி அனுமனை தடுத்தது. இந்த மலை தன் வழியில் குறுக்கே வருவதை அறிந்த அனுமன் அம்மலையினும் மேலே பறந்தான். உடனே மைந்நாகம்

அனுமனிடம், தன் இடத்தில் சற்று தங்கிவிட்டு செல்லுமாறு வேண்டியது. இதை சமுத்திர ராஜாவின் வேண்டுகோளின் படி கேட்பதாகவும் கூறியது. அதற்கு அனுமன் தங்களின் வேண்டுகோள் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் நான் இராமனின் காரியத்திற்கு விரைந்து செல்ல வேண்டும். தங்கள் அன்புக்கு மிக்க நன்றி என்று கூறிவிட்டு அங்கிருந்து வேகமாக பறந்து சென்றான். பிறகு தேவர்களும், முனிவர்களும் பாம்புகளுக்கு தாயாகிய சுரசையை பார்த்து, நாம் அனுமனின் பலத்தை அறிய வேண்டும்.

�� ஆதலால் நீ அனுமனுக்கு தடையாக சென்று இடையூறு செய். அவன் உன்னை எப்படி வெல்ல போகிறான் என்பதை பார்ப்போம் என்றனர். சுரசை தேவர்களின் வேண்டுகோளின்படி அரக்கி உருவம் எடுத்து அனுமன் முன் தோன்றினாள். சுரசை அனுமனை பார்த்து, வானரமே, இன்று என் பசிக்கு நீ உணவாகப் போகிறாய் என்றாள். அனுமன் அவளை வணங்கி, அம்மா! நான் இராமனின் காரியத்திற்காக விரைந்து செல்ல வேண்டும். இப்பொழுது தாங்கள் தடை செய்யலாமா? பெண்ணாகிய நீங்கள் பசியில் வேதனைபடுவதை கண்டால் என் மனம் துன்பப்படுகிறது. நான் இராமனின் காரியத்தை முடித்துவிட்டு வருகிறேன். அப்பொழுது தாங்கள் என்னை தாராளமாக உண்டு கொள்ளலாம் என்றான்.



https://telegram.me/aedahamlibrary

அனுமன் இலங்கை அடைதல்!

�� சுரசை, என்னை ஒருவரும் கடந்து செல்ல முடியாது என்றாள். அவளின் வாய் மெதுவாக திறந்து கொண்டிருப்பதை கண்ட அனுமன் சிறிய வடிவம் எடுத்து சுரசையின் வாயில் புகுந்து வெளியே வந்தான். அனுமன் நொடியில் உள் புகுந்து வெளி வந்ததால் அவளால் அனுமனை உட்கொள்ள முடியவில்லை. அனுமனின் வலிமையை அறிந்த சுரசை தன் பழைய வடிவம் எடுத்து, அனுமனிடம் இனி உனக்கு வெற்றி உண்டாகட்டும் என வாழ்த்தி அனுப்பினாள். அனுமன் இன்னும் வேகமாக வானில் பறந்து சென்றான். அவனின் வேகத்தை கண்ட தேவர்கள், கருடன் தான் வேகமாக செல்கிறான் என நினைத்தனர்.

�� அனுமன் வானில் வேகமாக பறந்து கொண்டு இருந்தபோது, அனுமனின் நிழலை யாரோ பிடித்து இழுத்ததால் அனுமனின் வேகம் தடைப்பட்டது. பிறகு அனுமன் தன் வேகத்திற்கு தடையாக வருபவர் யார் என பார்த்தார். அப்போது சிம்மிகை என்னும் அரக்கி தன் வாயை குகை போல திறந்து அனுமனை விழுங்க முன் வந்தாள். உடனே அனுமன் சிறிய உருவம் எடுத்து அரக்கியின் வாயில் புகுந்து வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியே வந்தான். இதனால் அவள் மாண்டு போனாள். பிறகு அனுமன் எவ்வித தடையும் இன்றி, சமுத்திரராஜாவும், வாயு பகவானும் துணைபுரிய கடலின் அக்கரையை அடைந்தான். அங்கு பவளமலை என்னும் இடத்தில் இறங்கினான். அனுமன் இறங்கிய வேகத்தில் பவளமலை நடுநடுங்கியது.

�� பின்பு அங்கிருந்து இலங்கை நகரை சுற்றி பார்த்தான். இலங்கை நகரின் அழகை கண்டு அனுமன் வியந்தான். இலங்கை மாநகரின் மாட மாளிகைகள், கோபுரங்கள், குளங்கள், நந்தவனங்கள் நவரத்தினங்கள் போல் ஜொலித்தது. பிறகு அனுமன், இவ்வளவு அழகு வாய்ந்த இலங்கையை காக்க எத்தனை அரக்கர்கள் வேண்டும்? இப்பொழுது நான் இங்கு வந்தது போல் வானர வீரர்களான அங்கதனும், தளபதியான நளனும், அரசனான சுக்ரீவனும் மட்டுமே வர முடியும். மற்ற வானர வீரர்கள் எவ்வாறு இங்கு வர முடியும்? சீதையை எப்படி மீட்பது? சீதை எங்கே இருப்பாள்? நான் சீதையை எவ்வாறு காண்பேன்? நான் சீதையை அரக்கர்களுக்கு தெரியாமல் தான் பார்க்க வேண்டும். ஆனால் இப்பொழுது பகலாக இருக்கிறது.

�� நான் செய்யும் வேலையை தடங்கல் இல்லாமல் ஆராய்ந்து தான் செய்ய வேண்டும். இரவில் சீதையை தேடிச் செல்லலாம் என மனதில் நினைத்துக் கொண்டான். அனுமன் இருள் சூழும் வரை காத்திருந்தான். அனுமன் தன் சிறிய உருவத்தினை எடுத்தான். இருளும் மெல்ல மெல்ல சூழ்ந்தது. அரக்கர்களான இராவணனின் ஏவலர்கள் இந்திரலோகத்திற்கு சென்றனர். தேவர்களும், நாகர்களும், வேந்தர்களும் தங்களது பணியை முடித்துக் கொண்டு வானவழியில் சென்றனர். இரவும் முழுவதும் சூழ்ந்தது. சந்திரன் தோன்றினான். இராம தூதனான அனுமன் வந்ததை பார்த்து சந்திரன் மிக்க மகிழ்ச்சியுடன் பிரகாசமான ஒளியை தந்தது.

�� அனுமனுக்கு இலங்கை நகரம் புதிதான நகரம். ஆதலால் அனுமனுக்கு எவ்வழியில் செல்வது என்று தெரியவில்லை. அவனின் உணர்வு வழிகாட்ட, நகரத்திற்குள் சென்றான். இலங்கை மதில்சுவரை அடைந்தான். மதில்சுவரின் உயரத்தை கண்டு வியந்து நின்றான் அனுமன். மதில் சுவரை அரக்கர்கள் காவல் புரிந்து கொண்டு இருந்தனர். இதனை கண்ட அனுமன், அரக்கர்களிடம் போரிட்டால் நம் காரியம் தடைபடும் அதுமட்டுமில்லாமல் நேரமும் வீணாகும். ஆதலால் மரங்கள் மீதும், மதில் மீதும் ஏறி உள் நுழைய தீர்மானித்தான். அனுமன் மதில் மீது ஏறி தாவ முயன்றார். அப்போது இலங்கையை காவல் புரியும் இலங்கா தேவி அவன் முன் தோன்றினாள்.

இலங்கா தேவி - அனுமன் சண்டை

�� இலங்கா தேவி, இலங்கையை விழிப்புடன் பாதுகாத்து வரும் நகர தேவதை ஆவாள். நான்கு முகங்களும், எட்டு கரங்களும், கொடிய உருவமும் கொண்டவள். அவள் தோற்றமே அச்சம் தருவது போல் இருந்தது. அவள் வேல், வாள், சூலம், கதை, பாசம், சங்கு, வில், அம்பு ஆகிய ஆயுதங்களைத் தன் எட்டு கரங்களிலும் ஏந்திக் கொண்டு இருந்தாள். அனுமன் மதில் சுவரை ஏறுவதைக் கண்டு இலங்காதேவி, நில்! நில்! என சொல்லிக் கொண்டு ஓடி வந்தாள். அனுமனிடம், யார் நீ? ஒரு குரங்கு, உனக்கு எவ்வளவு தைரியம்? என் அனுமதியின்றி யாரும் உள் செல்லக் கூடாது. எவரும் உள் செல்ல அஞ்சும் இக்காரியத்தை செய்ய உனக்கு எவ்வளவு தைரியம்? இத்தனை அரக்கர்கள் காவல் புரிவதை பார்த்து உனக்கு பயம் இல்லையா? இங்கிருந்து ஓடிப்போ, என்றாள்.


�� இவளது பேச்சைக்கேட்டு அனுமனுக்கு கோபம் வந்தது. ஆனால் அனுமன் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை. அனுமன், எனக்கு இந்நகரை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதனால் தான் நான் இங்கு வந்தேன் என்று புத்திசாலிதனமாக கூறினான். நான் உன்னை இங்கிருந்து, ஓடிப்போ என்று சொன்ன பிறகும் நீ என்னிடம் வாதம் செய்து கொண்டிருக்கிறாய். உனக்கு எவ்வளவு துணிவு வந்திருந்தால் இங்கே வந்திருப்பாய்? உன்னைப் போன்றோர் இங்கே வரக் கூடாது. பதில் பேசாமல் இங்கிருந்து ஓடிப் போ என ஏளனமாக கூறினாள். அரக்கி இப்படி பேசுவதை கேட்டு அனுமன் மனதில் சிரித்துக் கொண்டான். மறுபடியும் அரக்கி அனுமனிடம், நீ யார்? யார் சொல்லி நீ இங்கே வந்துள்ளாய்?

�� நான் இவ்வளவு சொல்லியும் நீ இங்கிருந்து போவது போல் தெரியவில்லையே! உன்னை கொன்றால் தான் இங்கிருந்து போவாய் என நினைக்கிறேன் என்றாள். அனுமன், நீ என்ன தான் செய்தாலும், இந்த ஊருக்குள் போகாமல் திரும்பி போகமாட்டேன் என்றான். அனுமன் பேசியதைக் கேட்ட இலங்காதேவி, அனைவரும் என்னைப் பார்த்து அஞ்சி நடுங்குவார்கள். ஆனால் இவன் என்னைப் பார்த்து பயப்படுவது போல் தெரியவில்லை. இவன் சாதாரணமான குரங்கு இல்லை. இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது. இவனை கொல்வது தான் சரி. இல்லையென்றால் இலங்காபுரிக்கு தீங்கு ஏற்படும் என்று மனதில் நினைத்தாள். உடனே இவள் அனுமனை பார்த்து, முடிந்தால் உன் உயிரை காப்பாற்றிக் கொள் என கூறிக் கொண்டு வேலை அனுமனை நோக்கி

எறிந்தாள்.

�� தன்னை நோக்கி வந்த வேலை அனுமன் தன் கைகளால் ஒடித்து தூக்கி எறிந்தான். தன் வேலை ஒடித்த அனுமன் மீது மிகுந்த கோபம் கொண்டு பல ஆயுதங்களை ஏவினாள். அனுமனோ தன்னை நோக்கி வந்த ஆயுதங்களை எல்லாம் ஒடித்து வானில் வீசினான். தன் ஆயுதங்கள் அனைத்தும் வானில் தூக்கி எறியப்பட்டதை பார்த்து மிகவும் கோபங்கொண்டு குன்றுகளை அனுமன் மேல் ஒவ்வொன்றாக தூக்கி எறிந்தாள், இலங்கா தேவி. பிறகு இலங்கா தேவி அனுமனை தன் கரங்களால் அடிக்க ஓடி வந்தாள். அனுமன் அவளது கரங்களை ஒன்றாக பிடித்து அவளை ஓங்கி அடித்தான். அவள் வலி தாங்க முடியாமல் சுருண்டு கீழே விழுந்தாள்.

�� பிறகு இலங்கா தேவி அனுமனிடம், வானரமே! எவராலும் வீழ்த்த முடியாத என்னை நீ வீழ்த்திவிட்டாய். அப்படியென்றால் அரக்கர்களுக்கு அழிவுக்காலம் ஆரம்பித்துவிட்டது. ஐயனே! நான் பிரம்மதேவரின் கட்டளையினால் இலங்கையை காவல் புரிகிறேன். பிரம்மன் என்னிடம், எப்போது வானரத்தால் நீ வீழ்கிறாயோ, அப்பொழுது அரக்கர் குலம் அழிய போகிறது என்று அர்த்தம் என்றார். உன்னால் இன்று என் காவல் நிறைவுப்பெற்றது. பிரம்மன் சொன்னது போல் நடந்துவிட்டது. இனி நீ செய்யும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும் எனக்கூறி அனுமனுக்கு வழிவிட்டு வானுலகம் சென்றாள்.



https://telegram.me/aedahamlibrary

��அனுமன் மதில் மீது ஏறி நகருக்குள் சென்றான். அந்நகரின் சிறப்புகளை கண்டு அனுமன் வியந்து போனான். அந்நகரின் ஓரமாக சீதையை தேடி ஆராய்ந்துக் கொண்டு சென்றான். அனுமன் போகும் வழியில் சோலைகள், இரத்தின மாளிகைகள், மாட்டுக் கொட்டில்கள், குதிரை லாயங்கள், அரக்கர்கள், தேவ மாதர்கள் போன்றவர்களை கடந்து சீதையை தேடிக் கொண்டு சென்றான். இவ்வாறு அனுமன் சீதையை தேடிக் கொண்டு போகும் போது கும்பகர்ணனின் மாளிகையை அடைந்தான். அங்கு கும்பகர்ணன் தூங்கிக் கொண்டு இருந்தான். கும்பகர்ணனை பார்த்தவுடன் அவன் இராவணன் என நினைத்து அவன் மீது மிகுந்த கோபம் கொண்டான், அனுமன். கும்பகர்ணன் பக்கத்தில் நெருங்கிச் சென்றான். இவனுக்கு பத்து தலைகளும், இருபது தோள்களும், இருபது கைகளும் இல்லையே. ஆதலால் இவன் இராவணன் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டான். அனுமனின் கோபம் சிறிது தணிந்தது.

�� இவன் இராவணன் இல்லை என்பதை அறிந்து, இவன் யாராக இருந்தால் நமக்கு என்ன? இவன் இப்படியே சில காலம் நன்றாக தூங்கட்டும் என்று நினைத்துக் கொண்டு சீதையை தேட தொடங்கினான். அனுமன் சீதையை பல இடங்களில் தேடினான். மாடங்கள், மாளிகைகள், அந்தபுரம், மண்டபங்கள், ஆலயங்கள் என அனைத்து இடங்களிலும் சீதையை தேடி அலைந்தான். எங்கு தேடியும் சீதையை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறு அனுமன் சீதையை தேடி போகும்போது விபீஷணனின் மாளிகையை அடைந்தான். அங்கு மற்ற மாளிகைகளில் கண்டது போல் மதுகுடங்களை காணவில்லை. அதற்கு பதிலாக தேன், பால், பஞ்சாமிர்தம் போன்ற பூஜைக்குரிய பொருட்களை கண்டான். பிறகு தூங்கி கொண்டிருக்கும் விபீஷணனின் அருகில் சென்று அவனது முகத்தைப் பார்த்தார். விபீஷணனின் முகத்தில் கருணை வலிந்தது.

�� இவன் குற்றம் செய்யாத உயர்ந்த குணமுடையவன் என்பதை அறிந்துக் கொண்டான். பிறகு அங்கிருந்து சென்று பல மாளிகையில் தேடினான். அங்கு பல பெண்கள் ஆடுவது பாடுவதுமாக இருந்தனர். பலர் உறங்கி கொண்டு இருந்தார்கள். இவர்களை எல்லாம் கடந்து சீதை தேடி, நுழைய முடியாத இடங்களிலும் சென்று தேடினான். அனுமன் சீதையை தேடிக் கொண்டு போகும்போது இந்திரஜித்தின் மாளிகைக்கு சென்றான்.

இந்திரஜித், ஆறுமுக கடவுள் முருக பெருமான் உறங்குவது போல் உறங்கி கொண்டு இருந்தார். இவன் அரக்கனா? முருக பெருமானா? இல்லை இவர் வேறு யாராக இருக்கக்கூடும்? என மனதில் நினைத்துக் கொண்டான். இவன் மிகுந்த பலம் மற்றும் வலிமை உடையவன் என்பதை உணர்ந்தான். இவனுடன் இராமரும், இலட்சுமணரும் பல நாட்கள் போரிட நேரிடும் என கருதினான்.

�� பிறகு அனுமன் இங்கேயே நின்றிருந்தால் தாமதமாகிவிடும் என நினைத்து அங்கிருந்து அக்ஷய குமாரன், அதிகாயன் போன்ற பல வீரர்களின் மாளிகையில் சென்று சீதையை தேடினான். இலங்கை நகரின் இடையில் ஓர் அகழியும், இராவணனின் மாளிகையைச் சுற்றி ஓர் அகழியும் இருந்தது. அனுமன் இவ்விடத்தை அடைந்தான். இலங்கை நகரமே உறங்கி கொண்டிருந்த நேரத்தில் அனுமன் மட்டும் சீதையை தேடி அலைந்து கொண்டு இருந்தான். அனுமன் எல்லா இடங்களிலும் தேடிய பிறகு இராவணனின் மாளிகையை அடைந்தான். அங்கு அனுமன் மண்டோதரியின் மாளிகையை கண்டான். அனுமன், இம்மாளிகையை கூர்ந்து கவனித்தான். இம்மாளிகை மற்ற மாளிகையை காட்டிலும் சந்திரனை போல் ஒளி வீசிக் கொண்டிருந்தது. இந்த மாளிகை தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. ஆதலால் இம்மாளிகையில் தான் இராவணன் நிச்சயம் சீதையை வைத்திருக்க வேண்டும் என நினைத்தான்.

அனுமனின் கவலை!

��அனுமன், நிச்சயம் இராவணன் சீதையை இங்கே தான் வைத்திருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு மண்டோதரியின் மாளிகையை எட்டி பார்த்தான். அங்கு பெண்கள் மலரடி வருட, பெண்கள் மெல்லிய காற்று வீச, இன்னிசை ஒலிய, அழகிய பெண் தூங்கி கொண்டிருந்தாள். இப்படி சகல வசதிகளுடன் உறங்குவது யார்? என நினைத்தான், அனுமன். இவள் தான் சீதையோ என நினைத்து அப்பெண்ணை உற்று நோக்கினான். இவளை பார்த்தால் மானுட பெண்ணாக தெரியவில்லை. இவளின் முகத்தில் இராமரை பிரிந்த சோகம் தெரியவில்லை. அப்படியென்றால் நிச்சயம் இவள் சீதையாக இருக்க முடியாது என உறுதி செய்து கொண்டான்.

�� பிறகு அங்கிருந்து சீதையை தேடிச் சென்றான். அனுமன், இராவணனுடைய மாளிகையை அடைந்தான். அனுமன் இராவணனின் மாளிகையில் அடியெடுத்து வைத்ததும் இலங்கை நகரமே நடுங்கியது. அனுமன் இராவணனுடைய அறைக்குள் புகுந்து அவனை உற்று நோக்கினான். அவனுக்கு பத்து தலைகள், இருபது தோள்கள், இருபது கைகளும் இருப்பதை பார்த்து இவன் தான் இராவணன் என்பதை உறுதி செய்து கொண்டான். கும்பகர்ணனை இராவணன் என்று நினைத்து, அவன் மீது கோபங்கொண்ட அனுமன், இராவணனை பார்த்தவுடன், இவனால் இந்நகரம் அழிய போகிறது என்பதை நினைத்து வருந்தினான்.

�� பிறகு அனுமன் இவனை இப்படியே கொன்றுவிட்டால் என்ன? என நினைத்தான். இவனை நான் கொன்றுவிட்டால், நான் இராமனின் அடியேன் என்ற பெருமை அழிந்துவிடும். பிறகு அனுமன், நான் இங்கு சீதையை தேடி வந்துள்ளேன். சீதையை கண்டுபிடிக்காமல் இவனை கொல்வது நியாயமல்ல என தன் மனதை சமாதானப்படுத்திக் கொண்டான். கோபம் தணிந்த அனுமன், இவனுடன் பெண்கள் எவரும் இல்லை. இவன் தனிமையில் உள்ளான். அப்படியென்றால் இவன் சீதையை எங்கே வைத்து இருப்பான். இவன் தனிமையில் இருக்கிறான் என்றால் சீதை நல்ல நிலையில் இருக்கிறாள் என்பது தெரிகிறது என நினைத்துக் கொண்டான்.

�� பிறகு அனுமன், சீதையை அங்கு இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு இராவணனின் மாளிகையை விட்டு வெளியே வந்தான். நான் அனைத்து இடத்திலும் சீதையை தேடிவிட்டேன். இன்னும் என்னால் சீதையை கண்டுபிடிக்க முடியவில்லை என வருந்தினான். சீதையை நான் இனி எங்கு சென்று தேடுவேன். ஒருவேளை இராவணன் சீதையை, கொன்றுவிட்டானோ இல்லை வேறு எங்கயாவது சிறை வைத்திருப்பானோ என எண்ணினான். நான் நிச்சயம் சீதையை கண்டுபிடித்துவிட்டு வருவேன் என இராமரும், சுக்ரீவனும், அங்கதனும், ஜாம்பவானும், நளனும் மற்றும் மற்ற வானர வீரர்களும் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

�� சுக்ரீவன் கொடுத்த ஒரு மாத காலமும் முடிந்துவிட்டது. நான் இன்னும் சீதையை கண்டுபிடிக்கவில்லை. நான் எவ்வாறு இராமரின் முகத்தில் விழிப்பேன். சீதையை தேடி கண்டுபிடிக்க முடியாமல் மகேந்திர மலையில் உயிரை மாய்த்துக் கொள்ள இருந்த வானர வீரர்களை, அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு சீதையை தேடி வந்தேனே. நான் தேடி வந்த காரியம் முடியவில்லையே என வருந்தினான். இனிமேல் நான் உயிருடன் இருந்து என்ன பயன்? நான் இராவணனையும் மற்ற அரக்கர்களையும் கொன்றுவிட்டு நானும் இங்கேயே என் உயிரை மாய்த்து கொள்கிறேன் என வருந்தினான்.

அசோக வனமும் சீதையின் துன்பமும்!

�� அனுமன், இனி நான் தேவியை எவ்வாறு காண்பேன். சம்பாதி, சீதை இலங்கையில் இருக்கிறாள் என கூறினாரே. அவருடைய சொல்லும் பொய்யாகி விட்டதே. இனி என் உடலில் உயிர் இருந்து என்ன பயன்? நான் இந்த இலங்கையை கடலில் போட்டு அழுத்தி, நானும் உயிரை மாய்த்துக் கொள்வது தான் சரி என்று உறுதி கொண்டான். இவ்வாறு அனுமன் நினைத்துக் கொண்டு இருக்கையில், அருகில் வனம் ஒன்று இருப்பதை கண்டான். அவ்வனத்தின் பெயர் அசோக வனம். பிறகு அனுமன் அவ்வனத்துக்கு அருகில் சென்று பார்த்தான். என்ன இடம் இது? நான் இந்த இடத்தில் சீதையை தேடவில்லையே! அனுமன், இவ்வனத்தில் சென்று சீதையை தேடலாம் என அவ்வனத்திற்குள் சென்றான். அனுமன் யார் கண்ணிலும் படாமல் இருக்க தன் உருவத்தை மிகச் சிறிய உருவமாக மாற்றிக் கொண்டான்.


�� அனுமன் மரத்திற்கு மரம் தாவிக்கொண்டு சீதையை தேடிக் கொண்டு இருந்தான். அங்கு ஓர் குளத்தைக் கண்டான். அனுமன் அங்கு சென்று குளக்கரையில் ஓர் மரத்தின் மேல் ஏறி சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கு தூரத்தில் தங்கத்திலான மண்டபத்தைக் கண்டான்.

சீதையின் நிலை :

�� அசோக வனத்தில் சீதை அரக்கியர் சூழ ஓர் மரத்தினடியில் மிகுந்த சோகத்துடன் அமர்ந்திருந்தாள். சீதையின் கண்கள் அழுதழுது மிகவும் வாடி போயிருந்தது. அவள் மிகவும் உடல் இளைத்து, தூக்கமின்றி புலியிடம் மாட்டிக்கொண்ட மான் போல அகப்பட்டு மிகவும் வருந்திக் கொண்டிருந்தாள். இராமரின் நினைவால் மிகவும் வருந்தி, சோர்வுற்று, இராமரின் வரவை எதிர்பார்த்து மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். இராமரின் நினைவு சீதையை வாட்டிக் கொண்டு இருந்தது. இராமர் தன்னை காக்காவிட்டாலும், தன் குலப்பெருமையைக் காக்கும் பொருட்டு நிச்சயம் வருவான் என நாலாபுறமும் இராமரின் வரவை எதிர்நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

�� இராவணன் தன்னை கவர்ந்து வந்த செய்தியை இராமரும், இலட்சுமணரும் அறியவில்லை போலும் என பலவாறு நினைத்து மிகுந்த துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். இராவணன் என்னை கவர்ந்து வந்த போது வழியில் அவனை தடுத்து போரிட்ட ஜடாயுவும் இறந்து விட்டான். ஆதலால் இராமரிடம் என் நிலைமையை எடுத்துரைக்க ஆள் இல்லாமல் போய் விட்டது போலும். ஆதலால் இப்பிறவியில் இராமனையும், இலட்சுமணனையும் காண்பது என்பது நடக்காத காரியம் என நினைத்து மிகவும் வருந்தினாள். தான் அமர்ந்த இடத்தை விட்டு சற்றும் நகராத சீதை, இனி இராமருக்கு யார் உணவளிப்பார்கள். முனிவர்கள் எவரேனும் வந்தால் அவர்களுக்கு இராமர் எவ்வாறு உணவளிப்பார் என நினைத்து வருந்தினாள்.

�� ஒரு வேளை என்னை கவர்ந்து வந்த அரக்கர்கள், இவ்வளவு நாட்கள் ஆகியும் என்னை உயிருடன் விட்டுவிட மாட்டார்கள். இவர்கள் என்னை தின்று இருப்பார்கள் என நினைத்து இருப்பாரோ என்று நினைத்து மிகவும் துன்பப்பட்டாள். ஒருவேளை பெற்ற தாய்மார்களும், தம்பி பரதனும் காட்டிற்கு வந்து இராமரையும் இலட்சுமணரையும் அழைத்துக் கொண்டு சென்று விட்டார்களோ? என்னவோ? இராமர் தாயின் கட்டளைப்படி பதினான்கு ஆண்டு வனவாசம் முடியாமல் நிச்சயம் நாடு திரும்ப மாட்டார்கள். அவ்விருவருக்கும் ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டதா என நினைத்து மிகவும் வருந்தினாள்.



திரிசடையின் கனவுகள்!!

�� அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை சுற்றி பல அரக்கர்கள் நின்று கொண்டிருந்தனர். அங்கு திரிசடை என்னும் அரக்கி மட்டும் சீதையிடம் அன்பாக பேசுவாள். அங்கு திரிசடையை தவிர்த்து மற்ற அரக்கர்கள் மயக்க நிலையில் வீற்றிருந்தனர். அங்கு மற்ற அரக்கர்கள் தூங்கிவிட்டதால் சீதை திரிசடையிடம் பேச ஆரம்பித்தாள். திரிசடை நீ என்னிடம் அன்பாக இருப்பதால் நான் உன்னிடம் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன் என்றாள். பிறகு சீதை, அன்புமிக்க திரிசடையே! என் இடக்கண் துடித்துக் கொண்டு இருக்கிறது. இதனால் ஏற்படும் விளைவு தான் என்ன? என் துன்பங்கள் நீங்கி நன்மை உண்டாக போகிறதா? இல்லை, துன்பத்திற்கும் மேல் துன்பம் வர போகிறதா? எனக் கேட்டாள்.

�� அதுமட்டுமில்லை, இராமர் விசுவாமித்திர முனிவரிடம் மிதிலைக்கு வரும்போது எனது இடக்கண் துடித்தது. இன்றும் அதேபோல் என் இடக்கண் துடிக்கிறது. இராமர் நாட்டை விட்டு வனம் செல்லும்போது என்

வலக்கண் துடித்தது. பிறகு இராவணன் என்னை கவர்ந்து வரும்போதும் என் வலக்கண் துடித்தது. ஆனால் இன்று என் இடக்கண் துடிக்கிறது. இதனால் ஏற்படும் விளைவு என என்னிடம் சொல் எனக் கூறினாள். சீதை சொன்னதை கேட்டுக் கொண்டிருந்த திரிசடை, சுபம் உண்டாகும். உன் இடக்கண் துடிப்பதால், நீ நிச்சயம் உன் கணவரை அடைவாய் என்றாள்.

�� பிறகு திரிசடை, சீதையே! நான் என் கனவில் ஒளி மிகுந்த ஒரு பொன் வண்டு ஒன்று உன் காதருகே பாடிச் சென்றதை கண்டேன். இவ்வாறு ஒரு பொன் வண்டு காதருகே வந்து பாடினால், நிச்சயம் உன் கணவனால் அனுப்பப்பட்ட தூதன் உன்னை வந்து சந்திப்பான். குலமகளே! உனக்கு தூக்கம் என்பதே இல்லாததால் உனக்கு கனவு வரவில்லை. மேலும் நான் கண்ட கனவுகளை கூறுகிறேன், கேள் என்றாள். இராவணன் தன் வீட்டில் அக்னி ஹோத்ரம் செய்வதற்காக அக்னியை பாதுகாத்து கொண்டு வருகிறான். அந்த அக்னி அணையாமல் பாதுகாக்க வேண்டும். ஆனால் என் கனவில் அந்த அக்னி அணைந்துவிட்டது. மேலும் அந்த அக்னி இருந்த இடத்தில் செந்நிறத்தில் கரையான்கள் தோன்றின.

�� அதே போன்று, மாளிகையில் நெடுங்காலமாக மணி விளக்குகள் ஒளி வீசி கொண்டு இருந்தன. திடீரென்று வானத்தில் வீசிய பேரிடியால் அவ்விளக்குகள் எல்லாம் அணைந்து போயின. தோரணங்கள், கம்பங்கள் என அனைத்தும் முறிந்து விழுந்தன. பொழுது விடியும் முன்பே கதிரவன் தோன்றியது. அரக்க பெண்களின் கழுத்திலிருந்த மங்கல நாண்கள் தானாக அறுந்து விழுந்தது. அதுமட்டுமின்றி இராவணனின் மனைவி மண்டோதரி தலைவிரி கோலமாக தோன்றினாள். இவை அனைத்தும் அரக்கர் குலம் அழிவதற்கான தீய சகுனங்கள்.

�� நான் கடைசியாக கண்ட கனவு, இரண்டு ஆண் சிங்கங்கள், தங்கள் புலிக் கூட்டத்தை அழைத்துக் கொண்டு யானைகள் மிகுந்த காட்டிற்கு சென்று யானைகளை எதிர்த்து போரிட்டனர். அங்கு கணக்கற்ற யானைகளை கொன்று வீழ்த்திவிட்டு, இறுதியில் அவர்களுடன் ஓர் மயிலை அழைத்துக் கொண்டு சென்றனர். அதுமட்டுமின்றி இராவணனின் மாளிகையில் இருந்து ஓர் அழகிய பெண், ஆயிரம் திரிகளை கொண்ட ஓர் விளக்கை தன் கையில் ஏந்திக் கொண்டு விபீஷணனின் மாளிகைக்கு சென்றாள். விபீஷணனின் பொன் மாளிகையில் அப்பெண் நுழைந்த நேரத்தில் விபீஷணன் உறக்கத்தில் இருந்து எழுந்தான். அதற்குள் தாங்கள் என்னை எழுப்பி விட்டீர்கள் என்றாள் திரிசடை.

அனுமன் சீதையை பார்த்தல்



�� திரிசடை தன் கனவை பற்றி கூறியதை கேட்ட சீதை, திரிசடை தாயே! உன் கனவின் மிஞ்சிய பகுதியையும் கண்டுவிட்டு, எனக்கு கூறு. இப்பொழுது நீ உறக்கத்திற்கு செல் என்றாள். தூரத்தில் தங்கத்திலான மண்டபத்தைக் கண்ட அனுமன் அங்கு வந்து சேர்ந்தான். அப்போது அங்கு தூங்கி கொண்டிருந்த அரக்கியர்கள் தூக்கத்தை கலைத்து சீதையை காவல் புரிய தொடங்கினர். இதை பார்த்த அனுமன் உடனே ஓடி சென்று தன்னை யாரும் பார்க்காத வண்ணம் மரத்தில் ஏறி கொண்டான். அப்போது அரக்கிகள் சீதையிடம், நீ எதற்கு அழுது கொண்டிருக்கிறாய்? உன்னை யார் என்ன செய்தார்கள்? எங்கள் அரசன் இராவணனுக்கு அறிவே கிடையாது. அவர் எங்கள் யாரையாவது விரும்பி இருந்தால் நாங்கள் மகிழ்ச்சியாக அவரின் மனைவியாக இருப்போம். எங்கள் அரசரை நீ ஏற்றுக் கொண்டால் இங்கு நீ மகிழ்ச்சியாக இருக்கலாம். எங்கள் அரசர் இங்கு வந்தால் அவரை வரவேற்று வணக்கம் சொல் என்று அச்சுறுத்தினார்கள்.

�� இவர்களின் இச்சொற்களை கேட்டு சீதை மிகவும் துன்பப்பட்டாள். அனுமன் சீதையின் நிலைமையை பார்த்து, யார் இந்த பெண்? இவளின் முகம் ஒளியிழந்து காணப்படுகிறதே. இவள் ஏன் அழுக்கு ஆடையை அணிந்து இருக்கிறாள்? இப்பெண்ணின் முகத்தில் தெய்வ ஒளி வீசுகிறதே.

அரக்கியர் கூட்டம் சூழ இவள் யாரையோ நினைத்து அழுது கொண்டிருக்கிறாள். இராமர், சீதை பற்றி கூறிய அம்சங்கள் எல்லாம் இவளிடம் உள்ளது. அப்படியென்றால் இவள் நிச்சயம் சீதை தான் என்று தீர்மானித்துக் கொண்டான். நான் பட்டபாடு வீணாகவில்லை. நான் சீதையை கண்டுவிட்டேன். இனி நான் சாகமாட்டேன். அனுமன் மகிழ்ச்சியால் அங்கும் இங்கும் துள்ளி குதித்தான். இப்பெருஞ்செல்வியை தர்மம் காத்ததா? இல்லை ஜனக மகாராஜரின் புண்ணியம் தான் காத்ததா? கற்பு என்ற ஒன்று இவரை காத்தது என்றாள் அது மிகையாகாது என்று சீதையை பற்றி பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தான்.

�� தூங்கி கொண்டிருந்த இராவணன் சீதை தன் ஆசைக்கு இணங்கவில்லை என்ற கோபத்தில் தூக்கத்தை கலைந்தான். இராவணன் ஒளி வீசுகின்ற மணிகளை அணிந்து சீதையை நோக்கி வந்தான். ஊர்வசி உடைவாளை ஏந்திக் கொண்டு அவனுடன் வந்தாள். மேனகை வெற்றிலை பாக்கை மடித்து கொடுத்துக் கொண்டு உடன் வந்தாள். திலோத்தமை அவனுடைய காலணிகளை தூக்கிக் கொண்டு உடன் வந்தாள். மற்றும் ஏனைய தேவ மாதர்கள் சூழ ஆடம்பரமாக இராவணன் நடந்து வந்தான். இராவணன் அசோக வனத்திற்கு வந்தவுடன் அங்கு இருந்த அரக்கிகள் இராவணனுக்கு வழிவிட்டு நின்றனர். இராவணன் வருவதை கண்ட அனுமன் மரத்தில் ஒளிந்து கொண்டான். இராவணன் சீதையின் முன் நின்றான். அவனை கண்டதும் சீதையின் உடல் கூசியது. இராவணன் சீதையிடம், நீ என் மேல் இரக்கம் காட்ட மாட்டாயா? இதுநாள் வரை உனக்காக காத்திருந்து நாட்கள் வீணாகிவிட்டது.

�� நீ என்னை அடைந்தால் மூவுலகமும் உன்னை வந்தடையும். இராமனிடம் இருந்து பிரிந்து வந்த பிறகு அவனை நினைத்து அழுவதில் ஒரு பயனும் இல்லை. உன் அழகுக்கு ஏற்றவன் நான் மட்டும் தான். என்னை வேண்டாம் என்று சொல்லாதே. என்னை போல் பலம் கொண்டவன் இவ்வுலகில் எவரும் இல்லை. உனக்கு நல்வாழ்வு காத்துக் கொண்டிருக்கிறது. அதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். நீ என்னுடன் வந்தால் என் செல்வங்கள் மேலும் பெருகும். நீ இராமனையே நினைத்து கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை. இராமன் இங்கு வந்து உன்னை மீட்டு செல்ல போவதில்லை. தேவர்கள் முதலானோர் என் அடிமைகளாக இருக்கின்றனர். நான் உன் அடிமையாக இருக்கிறேன். உன் அடிமையாகிய என்னை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என தன் இரு கரங்களையும் கூப்பி மண்டியிட்டு கேட்டான்.

சீதையின் கோபம்!

�� இராவணன் பேசியதை கேட்ட சீதை, அற்பனே! நீ உண்மையான வீரனாக இருந்தால் போர் புரிந்து என்னை கவர்ந்திருக்க வேண்டும். என் கணவரும், அவரின் தம்பி இலட்சுமணரும் இல்லாத நேரத்தில் ஓர் சந்நியாசியாக வந்து என்னை கவர்ந்து சென்ற நீ ஒரு வீரனா? உனக்கு அழிவு காலம் வந்துக் கொண்டிருக்கிறது. அதை மறந்து விடாதே. என் கணவரின் அம்பு வானத்தையும் கிழிக்கச் செய்யும் வல்லமை உடையது. ஜடாயுவிடம் போரிட்டு தரையில் வீழ்ந்து தோற்றவன் தானே. அதனால் ஜடாயுவை சிவன் கொடுத்த வாளால் வெட்டி வீழ்த்தி விட்டாய். அந்த வாள் உன்னிடம் இல்லையென்றால் அன்றே நீ மாண்டு இருப்பாய்.

�� காட்டில் உயர்ந்து நின்ற கார்த்தவீரியார்சுனனை, பரசுராமன் வென்று ஒடுக்கினான். அந்த பரசுராமனை கணப் பொழுதில் வென்றவர் இராமர் என்பதையும் தெரிந்து கொள். தாடகை, விராதன், கரன், தூஷணன், திரிசிரன் முதலிய அரக்கர்களை அழித்தவர் இராமர் என்பது உனக்கு தெரியாதா? நீ என்னை விரும்புவது உனக்கு அழிவை தேடித் தரும். உன் சக்தியோ அல்லது செல்வமோ என்னை பணிய வைக்க முடியாது. நான் ஒரு போதும் உன்னை மனதால் நினைக்க மாட்டேன் என்பதை தெரிந்து கொள். ஒப்பற்ற உனது செல்வங்களை மட்டுமல்ல, உனது உயிரையும் நீ என் கணவரால் இழக்கப் போகிறாய்.

�� இராம இலட்சுமணர் இருவர் மட்டும் என்று அலட்சியமாய் எண்ணாதே. அவர்கள் இருவரும் இரு புலிகள். அந்த இரு புலிகளையும் எதிர்க்கும் சக்தியும், வலிமையும் உன்னிடம் உள்ளதா? இராம இலட்சுமணரின் சக்தியும், வலிமையும் நீ போர் புரியும் போது புரிந்து கொள்வாய் என்று கோபமாக அவன் மீது சீறினாள் சீதை. சீதை பேசியதை கேட்ட இராவணன், பெருங்கோபம் கொண்டான். நான் உன்னிடம் அமைதியாக பேசுகிறேன் என்று நீ என்னை அவமதிக்கின்றாய். என்னால் முடியாது என்பது எதுவும் இல்லை. நான் இராமனை கொன்று உன்னை கவர்ந்து வந்திருந்தால் நீயும் உயிரை மாய்த்துக் கொள்வாய்.

�� ஆதலால் தான் உன்னை வஞ்சனை செய்து கவர்ந்து வந்தேனே தவிர போருக்கு பயந்து அல்ல. நான் நினைத்தால் இராம இலட்சுமணன் இருவரையும் என் வாளினால் வெட்டி வீழ்த்துவேன். ஆனால் அவர்கள் இத்தகைய அழகு படைத்த உன்னை எனக்கு கொடுத்ததால் அவர்களை கொல்லாமல் இருக்கின்றேன். நான் உன் மீது கொண்ட அன்பின் காரணமாக உன்னை கொல்லாமல் விடுகிறேன். நான் உனக்கு பன்னிரெண்டு மாதம் அவகாசம் கொடுத்தேன். ஆனால் நீ எனக்கு இன்னும் எந்த பதிலும் அளிக்கவில்லை. பன்னிரெண்டு மாதங்கள் முடிய இன்னும் இரண்டே மாதங்கள் உள்ளது. அதற்குள் நீ என்னுடையவளாக மாறிவிட வேண்டும்.

☆ அப்படி இல்லையேல் உன்னை கொன்று இங்குள்ள அரக்கர்களுக்கு இரையாக்கி விடுவேன் என கோபத்துடன் கூறினான். பிறகு இராவணன் அங்கிருந்த அரக்கியர்களை பார்த்து, இவள் என் வசம் ஆகும்படி செய்யுங்கள். அவளிடம் நல்ல வார்த்தை கூறி பேசி பாருங்கள். அப்படி அவள் இணங்க வில்லை என்றால் கடுமையாக பேசி எப்படியேனும் இணங்கச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு அரண்மனை நோக்கிச் சென்றான். இதையெல்லாம் மரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அனுமன், இராவணனை கொன்று இப்பொழுதே சீதையை மீட்டு செல்வேன் என மனதில் எண்ணினான்.

அனுமன் சீதை முன் தோன்றுதல்!

�� இராவணன் திரும்பி சென்ற பிறகு அரக்கிகள் சீதையை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் சீதையிடம், அரசன் இராவணன் உன் மீது உண்மையான ஆசை வைத்து இருக்கிறார். அவரை நீ ஏற்றுக் கொள். இல்லையேல் உன்னை நாங்களே கொன்று தின்று விடுவோம் என்றனர். நீ இராவணனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் உன்னால் உயிர் வாழ முடியாது. இனியும் இராமன் வந்து உன்னை காப்பாற்றுவான் என எண்ணிக் கொண்டு இருக்காதே. இராவணன் இம்மூவுலகுக்கும் அதிபதி ஆவான். அவனை நீ ஏற்று கொள்வதை விட உனக்கு வேறு வழி இல்லை என பலவாறு சீதையை துன்புறுத்திக் கூறினர். இவர்களின் துன்புறுத்தல்களை கேட்ட திரிசடை தூக்கத்தில் இருந்து எழுந்தாள். உடனே அவள் மற்ற அரக்கிகளிடம், இனியும் நீங்கள் சீதையை துன்புறுத்துவதை நிறுத்திக் கொள்ளுங்கள். சீதையின் கணவன் இராமன் சீதையை மீட்டுச் செல்ல போகிறார். இது நான் கண்ட கனவு ஆகும்.

�� பொதுவாக விடியற்காலையில் காணும் கனவு பலிக்கும் என்று சொல்வார்கள் என்றாள். இதைக் கேட்ட மற்ற அரக்கிகள் உன் கனவை விரிவாக கூறு என்றனர். நான் வெள்ளைக்குதிரை கொண்ட தங்கத்திலான புஷ்பரக தேரில் இராமனும் இலட்சுமணனும் வந்து சீதையை மீட்டுச் சென்றனர். இராவணன் அத்தேரில் இருந்து தள்ளப்பட்டு கழுதை மீது ஏறி தென் திசை நோக்கிச் சென்றான். அவனுடன் கும்பகர்ணனும் சென்றான். விபீஷணன் மட்டும் யானை மீது அமர்ந்திருந்தான். இலங்கை நகரம் தீப்பிடித்து எரிவது போலவும் கண்டேன் என்றாள். இதைக் கேட்ட சீதை மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். திரிசடை தாயே! நீ கண்ட கனவு பலித்தால் நிச்சயம் நான் உனக்கு உதவி செய்வேன் என்றாள். இருந்தாலும் சீதை இராவணனின் தொல்லைகளையும், மற்ற அரக்கிகளின் அச்சுறுத்தல்களையும் நினைத்து மிகவும் வேதனையடைந்தாள்.

�� இதையெல்லாம் மரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அனுமன் இது தான் சரியான தருணம் நான் அன்னை சீதையிடம் பேசுவதற்கு என நினைத்தான். அதனால் அனுமன் ஒரு மந்திரத்தைச் சொல்லி அரக்கிகள் அனைவரையும் ஆழ்ந்த தூக்கத்திற்கு போகும்படி செய்தான். அரக்கிகள் என்றும் ஒன்றாக தூங்குவதை காணாத சீதை இன்று ஒன்றாக தூங்குவதைக் கண்டாள்.

சீதை தனக்கு ஏற்பட்ட துன்பங்களை நினைத்து மிகவும் வருந்தினாள். என் இராமன் எப்போது வந்து என்னை மீட்க போகிறான். மாய மானின் பின்னால் என் இராமனையும் இலட்சுமணனையும் அனுப்பினேனே. அதற்கு பதிலாக தான் இன்று இந்த கொடுமையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன் என நினைத்து வேதனைப்பட்டாள்.

�� அப்பொழுது இராமனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு அனுமன் சீதை முன் தோன்றி சீதையை தொழுது வணங்கினான். அனுமன் திடீரென்று தோன்றியதால் சீதை அனுமனை பார்த்து பயந்தாள். அன்னையே! தாங்கள் பயப்பட வேண்டாம். நான் இராமனின் அடியேன் ஆவேன். இராமனின் கட்டளையினால் தங்களை தேடி இங்கு வந்தேன். தங்களை இலங்கை முழுவதும் தேடி கண்டுபிடிக்க முடியாமல் கடைசியில் இங்கு கண்டுவிட்டேன். நான் தங்களை பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் என்றான். அனுமன் பேசியதைக் கேட்ட சீதை நிச்சயம் இவன் அரக்கனாக இருக்க முடியாது என நினைத்தாள். பிறகு சீதை அனுமனை உற்று நோக்கினாள். இவன் என் கணவன் இராமன் பெயரை கூறுவதால் நிச்சயம் இவன் நல்லவனாக தான் இருக்கக்கூடும் என நினைத்தாள். சீதை அனுமனை பார்த்து நீ யார்? என வினவினாள்.

அனுமன் இராமரை பற்றிக் கூறுதல்!

�� அனுமன் சீதையை வணங்கிவிட்டு, இராமர் தங்களை விட்டு பிரிந்த பிறகு அவருக்கு சூரிய குமாரான சுக்ரீவனின் நட்புக் கிடைத்தது. சுக்ரீவன் குரங்கினத் தலைவன் ஆவான். சுக்ரீவனுடைய அண்ணன் வாலி. வாலி சுக்ரீவனுக்கு தீங்கு இழைத்ததால் இராமர் அவனை தன் பாணத்தால் வீழ்த்தினார். நான் சுக்ரீவனுடைய அமைச்சன் அனுமன். இராவணன் தங்களை கவர்ந்து சென்ற போது, தங்களுடைய ஆபரணங்களை ஓர் துணியில் கட்டி நாங்கள் இருந்த ருசியமுக பர்வதத்தில் தூக்கி எறிந்தீர்கள். அதை நாங்கள் பத்திரபடுத்தி வைத்திருந்தோம். பிறகு நாங்கள் அந்த அணிகலன்களை இராமரிடம் காண்பித்தோம். இராமர் அணிகலன்களை பார்த்து அது தங்களுடைய அணிகலன்கள் தான் என்பதை உறுதி செய்தார். ஆனால் இராமர் தங்களுடைய அணிகலன்களை பார்த்து மிகவும் துன்பப்பட்டார்.

�� இராமரும் இலட்சுமணரும் நான் கவர்ந்து சென்ற செய்தியை எவ்வாறு அறிந்தனர் எனக் கேட்டாள் சீதை. அதற்கு அனுமன், இராவணன் தூண்டுதலால் மாய மான் போல் வந்த மாரீசனை இராமன் கொன்று விட்டார். ஆனால் அவனோ இறக்கும் தருவாயில் சீதா! தம்பி இலட்சுமணா! என கூறிக் கொண்டு இறந்தவிட்டான். தாங்களோ அது இராமர் என நினைத்து இலட்சுமணரை கடிந்து பேசி இராமரை காண அனுப்பிவிட்டீர்கள். பர்ணசாலை நோக்கி வரும் வழியில் தம்பி இலட்சுமணன் வருவதை கண்ட இராமர், சீதையின் தூண்டுதலால் தான் இலட்சுமணன் இங்கே வந்துள்ளான் என்பதை இராமர் புரிந்துக் கொண்டார். பிறகு தங்களை தனியே விட்டு வந்ததால் அங்கு தங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ என நினைத்து விரைந்து இருவரும் பர்ணசாலை வந்தடைந்தனர். அங்கு தங்களை காணாமல் இராமர் மிகவும் துன்பப்பட்டார்.

�� பிறகு அவர்கள் இருவரும் தேரின் சுவடை வைத்து தெற்கு நோக்கி வந்தனர். அவர்கள் வரும் வழியில் ஜடாயு உயிர் துறக்கும் நிலையில் இருப்பதை கண்டனர். ஜடாயு அவர்களிடம் இராவணன் தங்களை கவர்ந்து சென்ற செய்தியை கூறினார். பிறகு இராமரும், இலட்சுமணரும் தங்களை தேடி எங்களை வந்தடைந்தனர் என்றான். இதைக் கேட்ட சீதை, இராமனுக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைத்து மிகவும் வருந்தினாள். சீதை அனுமனிடம், மாருதியே! இவ்வளவு சிறிய உருவம் கொண்ட நீ எவ்வாறு

இக்கடலை கடந்து வந்தாய் எனக் கேட்டார். சீதை இவ்வாறு கேட்டதால் அனுமன் தன் முழு உருவத்தையும் காட்ட நினைத்தான். பிறகு அனுமன் வானை முட்டும் அளவிற்கு தன் உருவத்தை வளர்த்து நின்றான். அனுமனின் உருவத்தைக் கண்ட சீதை, மாருதி! போதும் உன் உருவத்தை ஒடுக்கிக் கொள் என்றாள். அனுமன், தங்கள் வார்த்தையே எனக்கு கட்டளையாகும் எனக் கூறிக் கொண்டு தன் உருவத்தை சிறிதாக்கி நின்றான்.

�� பிறகு அனுமன் இராமரின் கட்டளைப்படி, சுக்ரீவன் தங்களை தேடச் சொல்லி பெரும் சேனையை எட்டுத் திசைகளுக்கும் செல்லுமாறு அனுப்பினார். தெற்கு திசையில் தங்களை தேடி வந்த வானர சேனைகளின் தலைவன் அங்கதன் ஆவான். அவன் தங்களை தேடும் பொருட்டு என்னை இலங்கைக்கு அனுப்பியவன். நான் தங்களை கண்டுபிடித்து விட்டு வருவேன் என்று எனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றான். சீதை அனுமன் சொன்னத்தை கேட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் வடித்தாள். சீதை அனுமனிடம் இராமர் நலமாக உள்ளாரா? என வினவினாள். இராமர் நலமாக உள்ளார். ஆனால் தங்களை நினைத்து மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். இலட்சுமணரும் நலமாக இருக்கிறார். ஆனால் அவர் தங்களை கஷ்டத்தில் இருந்து காப்பாற்ற முடியவில்லை என்ற வருத்தத்தில் உள்ளார் என்றான்.

அனுமன் கணையாழியை கொடுத்தல்!

�� இராமர், அவரின் அடையாளமாக என்னிடம் இந்த கணையாழியை தங்களிடம் காண்பிக்குமாறு கூறினார். அனுமன் தன் மடியில் வைத்திருந்த கணையாழியை சீதையிடம் கொடுத்தான். கணையாழியை பார்த்த சீதை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கணையாழியை பார்த்த சீதை, இராமரின் நினைவால் மிகவும் வருந்தினாள். அனுமன் சீதையிடம், அன்னையே! தாங்கள் என் தோள்மீது ஏறிக் கொள்ளுங்கள். நான் தங்களை இராமரிடம் ஒப்படைத்து விடுகிறேன். போகும் வழியில் அரக்கர்கள் யாரேனும் தடுத்தால் அவர்களை கொன்று விடுகிறேன். நான் தங்களை பார்த்த பிறகு, எப்படி தங்களை இத்துயரத்தில் விட்டுச்செல்வேன். அதுமட்டுமில்லை நான் இராமரிடம் சென்று தாங்கள் படும் துயரத்தை எவ்வாறு கூறுவேன் என்றான்.

�� அனுமன் சொன்னதை கேட்ட சீதை, ஆற்றல் மிகுந்த மாருதியே! உன் ஆற்றலுக்கு இச்செயல் ஏற்றது. ஆனால் ஒரு பெண்ணாகிய நான் இச்செயலை செய்யக்கூடாது என எண்ணுகிறேன். நீ என்னை தோளில் சுமந்து போகும் வழியில் அரக்கர்கள் யாரெனும் தடுக்கும்போது நான் கீழே விழவும் வாய்ப்பு உள்ளது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நான் உன்னுடன் வந்தால் இராமனின் வில்லுக்கும், வீரத்திற்கும் வீண் பழி உண்டாகும். இராவணன் என்னை பிறர் அறியா வண்ணம் கவர்ந்து வந்தது போல் நீயும் என்னை பிறர் அறியா வண்ணம் அழைத்து செல்கிறேன் என்கிறாய். இதை மற்றவர்கள் நியாயம் என்று சொல்வார்களா? நான் என் இராமனை தவிர வேறு எந்த ஆண்மகனையும் தீண்ட மாட்டேன். இராமன் இங்கே வந்து அரக்கர்களை அழித்து இராவணனை வென்று என்னை அழைத்துச் செல்வது தான் சிறப்பு என்றாள்.

�� இராவணனாலும் என்னை தீண்ட முடியாது. ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாமல் அவன் தீண்டினால் அவனுடைய பத்து தலைகளும் வெடித்து விடும். இது பிரம்மன் அவனுக்கு கொடுத்த சாபமாகும். இராவணன் பெற்ற சாபத்தால் தான் நான் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றாள். பிறகு சீதை, மாருதியே! இராவணன் எனக்கு கொடுத்த கால அவகாசம் ஒரு வருடம். அதில் இன்னும் ஒரு மாதம் காலம் தான் உள்ளது.

அதற்குள் இராமர் வந்து என்னை மீட்டு செல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் என் உயிரை நான் மாய்த்துக் கொள்வேன். இதை நீ மனதில் வைத்துக் கொள் என்றாள். சீதை இப்படி பேசியதைக் கேட்ட அனுமன், தாங்கள் இறந்தால் இராமர் மட்டும் எவ்வாறு உயிர் வாழ்வார் எனக் கூறி சீதைக்கு ஆறுதல் கூறினான்.

�� சீதை, தன் ஒளிமிக்க சூடாமணியை கையில் எடுத்து அனுமனிடம் கொடுத்தாள். அனுமன், இது என்ன? எனக் கேட்டான். நான் கொடுத்த அடையாளமாக இராமரிடன் இந்த சூடாமணியை கொடு. இந்த ஆபரணத்தை பார்த்தால் இராமருக்கு என் நினைவு மட்டுமின்றி, என் தாய் மற்றும் இராமரின் தந்தை தசரதனின் ஞாபகமும் வரும் என்றாள் சீதை. அனுமன், சீதையை வணங்கி சூடாமணியை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டான். பிறகு அனுமன் தாங்கள் நிச்சயம் இத்துன்பத்தில் இருந்து மீள்வீர்கள். இராமர் தங்களை காப்பாற்ற பெரும்படையுடன் வருவார் என ஆறுதல் கூறினான். பிறகு அனுமன் சீதையிடம் ஆசியை பெற்றுக் கொண்டு அங்கிருந்து விடைப்பெற்றுச் சென்றான்.

அனுமன் ஜம்புமாலி சண்டை!

�� அனுமன் சீதையிடம் இருந்து விடைப்பெற்றுச் சென்றான். அனுமன் போகும் போது நான் சீதையைத் தேடி கண்டுபிடித்துவிட்டேன். இப்பொழுது இராவணன் பற்றியும் அவனின் பலத்தை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் இராமர் போர் புரிய எவ்வளவு பலம் வேண்டும் என்பது தெரியும். அதற்கு நான் ஏதாவது செய்ய வேண்டும். அரக்கர்களை தொல்லை செய்யலாம் என எண்ணினான். பிறகு வேண்டாம் என நினைத்து விட்டு இவ்வளவு அழகு மிகுந்த இந்த அசோக வனத்தை அழித்தால் இராவணன் நிச்சயம் வர வாய்ப்புள்ளது என நினைத்தான். உடனே அனுமன் அசோக வனத்தை முற்றிலும் நாசம் செய்தான். இவ்வாறு அனுமன் அசோக வனத்தை நாசம் செய்து கொண்டிருக்கும்போது தூங்கி கொண்டிருந்த அரக்கிகள் விழித்துக் கொண்டனர். அப்போது மேரு மலையை போல் இருந்த அனுமனை கண்டு அரக்கிகள் பயந்தனர்.

�� உடனே அவர்கள் சீதையிடம் சென்று, ஏ பெண்ணே! இவன் யார் என்று உனக்கு தெரியுமா? இவன் எப்படி இங்கே வந்தான் எனக் கேட்டனர். இதற்கு சீதை, மாய உருவம் எடுக்கும் அரக்கர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். யார் வந்தார்கள்? என்ன செய்தார்கள் என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது எனக் கூறி விட்டாள். உடனே அரக்கிகள் இராவணனிடம் ஓடிச்சென்று, மன்னரே! ஓர் வானரம் அசோகவனத்தில் சீதையின் இருப்பிடத்தை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லா இடங்களையும் நாசம் செய்து விட்டது எனக் கூறினார்கள். இதைக்கேட்ட இராவணன் எவரும் செல்ல முடியாத அசோக வனத்தை ஓர் வானரம் நாசம் செய்து விட்டது என என்னிடம் வந்து மூடத்தனமாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்றான். அப்போது அனுமன் உலகம் அதிரும்படியான ஒரு கூக்குரலை எழுப்பினான். இக்குரல் இராவணனின் காதிலும் விழுந்தது.

�� உடனே இராவணன் கிங்கரர் என்னும் ஒரு வகை அரக்கர்களை அழைத்து, அக்குரங்கை தப்பிக்க விடாமல் என்னிடம் கொண்டு வந்து ஒப்படையுங்கள் என்று ஆணையிட்டான். உடனே கிங்கர அரக்கர்கள் அனுமனை தேடி விரைந்துச் சென்றனர். அவர்கள் அனுமனை சூழ்ந்துக் கொண்டனர். உடனே அனுமன் தன் பக்கத்தில் இருந்த மரத்தை பிடுங்கி கிங்கர அரக்கர்கள் அனைவரையும் அழித்தான். அனுமனை பிடிக்கச் சென்ற கிங்கர அரக்கர்கள் அனைவரும் இறந்த செய்தி இராவணனுக்கு

தெரிவிக்கப்பட்டது. இதனைக் கேட்ட இராவணனின் முகம் கோபத்தால் சிவந்தது.

உடனே இராவணன், ஜம்புமாலி என்னும் அரக்கனை அழைத்து, நீ குதிரைப்படையுடன் சென்று அக்குரங்கை கயிற்றால் கட்டி இங்கு அழைத்து வா! அப்போது தான் என்னுடைய கோபம் தணியும் என்றான். ஜம்புமாலி தன் படையை அழைத்துக் கொண்டு அனுமன் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

�� அனுமன் தன் பக்கத்தில் இருந்த இரும்புத் தடியை கையில் எடுத்துக் கொண்டான். தன்னிடம் போர் புரிய வந்த அரக்கர்கள் எல்லோரையும் இரும்புத் தடியால் அடித்துக் கொன்றான். கடைசியில் ஜம்புமாலி மட்டும் இருந்தான். அனுமன் அவனிடம், உயிர் மேல் ஆசை இருந்தால் இங்கிருந்து தப்பி ஓடிச்செல் என்றான். ஆனால் ஜம்புமாலி அங்கிருந்து கோழை போல் ஓடாமல் அனுமன் மீது அம்புகளை ஏவினான். தன்னை நோக்கி வந்த அம்புகளை அனுமன் தன் இரும்புத் தடியால் தடுத்தான். ஜம்புமாலி தன் அம்பால் அனுமனிடம் இருந்த இரும்புத்தடியையும் ஒடித்து விட்டான். இதனால் சற்று சளைத்து நின்ற அனுமன், ஓடிச்சென்று ஜம்புமாலியின் தேரில் ஏறி அவனின் வில்லை பிடுங்கி அவன் கழுத்தில் மாட்டி தேரிலிருந்து கீழே தள்ளிவிட்டான். ஜம்புமாலி கீழே விழுந்து இறந்தான்.

அட்சய குமாரன் போருக்கு செல்லுதல்!

�� ஜம்புமாலி இறந்த செய்தியை அரக்கர்கள் ஓடிச் சென்று இராவணனிடம் தெரிவித்தனர். ஒரு குரங்கு தன் அரக்கர்களையும் மற்றும் ஜம்புமாலியையும் கொன்றதை அறிந்து இராவணன் மிகவும் கோபங்கொண்டான். உடனே இராவணன் தானே சென்று அந்த குரங்கைப் பிடித்து வருவதாக கூறினான். இதைக் கேட்ட விரூபாட்சன், யூபாசன், துர்த்தரன், பிரகசன், பாசகர்ணன் என்னும் ஐந்து சேனைத் தலைவர்களும், அரசே! தாங்கள் போய் ஒரு குரங்கிடம் போர் புரிவதா! தாங்கள் இங்கேயே இருங்கள் நாங்கள் சென்று அந்த குரங்கைப் பிடித்து வருகிறோம் எனக் கேட்டுக் கொண்டனர். சேனைத் தலைவர்கள் கேட்டுக் கொண்டத்துக்கிணங்க இராவணன் அவர்கள் போருக்கு செல்வதற்கு சம்மதித்தான். பிறகு ஐந்து சேனைத் தலைவர்கள் தன் அரக்க படைகளைத் திரட்டிக் கொண்டு அனுமன் இருக்கும் இடத்திற்கு வந்தடைந்தனர்.

�� அனுமன் ஒரு பெரும் அரக்க படை வருவதை கண்டு அவர்கள் அனைவரையும் நான் அழிப்பேன் என மனதில் நினைத்துக் கொண்டான். அரக்கர் படை அனுமனை எதிர்க் கொண்டது. இச்சிறிய குரங்கா அரக்கர்களை அழித்தது என ஆச்சர்யப்பட்டனர். அனுமன் தன் உருவத்தை மிகப்பெரிய உருவமாக மாற்றிக் கொண்டான். இதைப் பார்த்த அரக்கர்கள் மிகவும் கோபங்கொண்டு அனுமன் மீது அம்புகளையும், ஏராளமான ஆயுதங்களையும் எய்தினர். ஆனால் அந்த அம்புகளும், ஆயுதங்களும் வலிமைமிக்க அனுமனை ஒன்றும் செய்யவில்லை. அனுமனை தாக்க அரக்கர்கள் அலை போல் வந்தனர். உடனே தன் பக்கத்தில் இருந்த தூணை கையில் எடுத்துக் கொண்டு அரக்கர்களை வீழ்த்தினான். இப்படி அரக்கர்கள் அனைவரும் கொல்லப்பட்ட பிறகு, சேனைத் தலைவர்கள் அனுமனை சூழ்ந்து அவன்மீது அம்புகளை எய்தினர்.

�� அனுமன் தன்னை நோக்கி வந்த அம்புகளை தன் கையால் தடுத்தான். இவர்களுக்குள் கடுமையான போர் நடந்தது. அனுமன் ஐந்து சேனைத் தலைவர்களை ஒவ்வொருவராக கொன்று வீழ்த்தினான். தாங்கள் குரங்கை பிடித்து வருவதாக சென்ற ஐந்து சேனைத் தலைவர்களும் மாண்ட செய்தியை அறிந்த இராவணன் மிகவும் கோபம் கொண்டான். உடனே இராவணன் தான் சென்று அந்த அனுமனை தூக்கிக் கொண்டு வருவதாக கூறினான்.

அப்போது இராவணனின் கடைசி மகனான அட்சய குமாரன் எழுந்து, தந்தையே! இந்த வாய்ப்பை எனக்கு கொடுங்கள். அக்குரங்கை அழித்து பேரும், புகழும் பெறுவேன். எனக்கு கட்டளையிடுங்கள் என்றான். இதனை கேட்ட இராவணன் தன் மகனை கட்டித் தழுவி விடை கொடுத்தான்.

�� அட்சய குமாரன் தேரில் ஏறும்போது அவனுடன் இளைஞர்களும், சேனைத் தலைவர்களின் மைந்தர்களும், நான்கு இலட்சம் வீரர்களும் உடன் சென்றனர். அனுமன் தன்னை நோக்கி வரும் பெரும்படையைக் கண்டு வருவது இராவணன் அல்லது இந்திரஜித் ஆக இருக்கக் கூடும் என நினைத்தான். இவர்களிடம் போர் புரிவதை நினைத்து அனுமன் மகிழ்ந்தான். அவர்கள் சிறிது பக்கத்தில் வந்தவுடன் தான் தெரிந்தது அது இராவணனும் இல்லை, இந்திரஜித்தும் இல்லை என்று. அனுமன் வருபவன் யார் என உற்று நோக்கினான். அனுமனை பார்த்த அட்சய குமாரன், இச்சிறிய குரங்கு தான் அரக்கர்களை கொன்றதா என ஏளனமாக கேட்டான். உடனே அனுமன் அவனிடம், ஐயனே! தங்கள் அரசன் இராவணனை வென்ற வாலியும் குரங்கு தான் என்பதை உனக்கு சொல்ல வேண்டியதில்லை என நினைக்கிறேன். ஆதலால் இதை மனதில் வைத்து போர் புரியுங்கள் என்றான்.

இந்திரஜித்தின் கோபம்!

�� அட்சய குமாரன் அனுமனிடம், இலங்கை நகரை நீ அழித்ததன் காரணமாக உன் இனத்தவர் இவ்வுலகில் எங்கு இருந்தாலும் அவர்களை நான் அழிப்பேன் என்றான். பிறகு அரக்கர் கூட்டம் அனுமனை சூழ்ந்துக் கொண்டது. பின் அவர்கள் அனுமன் மீது ஆயுதங்களையும், அம்புகளையும் எய்தினர். அனுமன் அவ்வரக்கர் படையுடன் தனியாக போர் புரிந்தான். அரக்கர்கள் அனைவரையும் அழித்தான். பின் அட்சய குமாரன் அனுமன் எதிரில் நின்றான். இருவரும் போர் புரிய தொடங்கினர். அட்சய குமாரன் தன் வாளை எடுத்து அனுமனை குத்த முற்பட்டான். அப்போது அனுமன் அந்த வாளை அட்சய குமாரனிடம் இருந்து பிடுங்கி உடைத்து எறிந்தான். பிறகு தன் இருக்கரங்களாலும் அவனை அடித்து உதைத்தான். வலி தாங்க முடியாத அட்சய குமாரன் அவ்விடத்திலேயே மாண்டு போனான். அரக்கர்கள் அலறிக் கொண்டு அரண்மனையை நோக்கி ஓடினர்.

�� அட்சய குமாரன் மாண்ட செய்தி மண்டோதரிக்கும், இராவணனுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதை அறிந்த மண்டோதரி செய்வதறியாது இராவணனின் காலில் விழுந்து அழுதாள். அப்பொழுது இந்திரஜித் தன் மனைவிமார்களுடன் மகிழ்ச்சியாக இருந்தான். அவன் காதில் அரக்கர்கள் அழும் குரல் கேட்டது. உடனே அவன் தன் பக்கத்தில் இருந்த ஏவலர்களை பார்த்து இவ்வழுகை ஒலி எங்கிருந்து வருகிறது எனக் கேட்டான். அதற்கு ஏவலர்கள், ஒரு வானரம் அசோக வனத்தையும் அழித்து, கிங்கரர், ஜம்புமாலி, ஐந்து சேனைத் தலைவர்களையும் அழித்து விட்டது. கடைசியாக சென்ற இளவரசர் அட்சய குமாரனையும் கொன்று விட்டது. இதனால் அரக்கர்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றனர். தன் தம்பி அனுமனால் கொல்லப்பட்ட செய்தி அறிந்த இந்திரஜித் மிகவும் கோபங்கொண்டான்.

�� தன் தம்பியை நினைத்து இந்திரஜித் மிகவும் வருந்தினான். இந்திரஜித் தன் வில்லை பார்த்து, ஒரு வானரம் என் தம்பியை கொன்றதா? இல்லை இராவணனின் புகழை அல்லவா கொன்று உள்ளது என்றான். உடனே இந்திரஜித் இராவணனின் மாளிகைக்கு சென்று இராவணனின் திருவடியில் விழுந்து வணங்கினான். இராவணன் இந்திரஜித்தை கட்டி தழுவிக் கொண்டான். அரசே! அந்த குரங்கின் வலிமையை அறிந்த பின்பும் தாங்கள் அரக்கர்களை அக்குரங்கிடம் அனுப்பி எமலோகத்திற்கு

அனுப்புகிறீர்கள். அப்படி தான் கிங்கர அரக்கர்கள், ஐந்து சேனைத்தலைவர்கள், என் தம்பி அட்சய குமாரன் என ஒருவர் பின் ஒருவராக இறந்து போயினர்.

இவ்வளவு பேரையும் கொன்ற பிறகு அக்குரங்கை சும்மா விடுவது சரியல்ல. நான் சென்று அக்குரங்கை கணப்பொழுதில் பிடித்து வருகிறேன். தாங்கள் வருந்த வேண்டாம் என்றான் இந்திரஜித்.

�� இதைக்கேட்ட இராவணன், இந்திரஜித்துக்கு தன் ஆசியை கூறி விடை கொடுத்தான். பிறகு இந்திரஜித் அனுமனை நோக்கி வந்தான். போகும்போது இந்திரஜித் அனுமனின் ஆற்றலை எண்ணி பார்த்தான். பிறகு இந்திரஜித் தன் தம்பி இறந்த இடத்திற்கு சென்று பார்த்தான். அந்த இடத்தை பார்த்த இந்திரஜித்திக்கு அனுமனின் மேல் பெருங்கோபம் வந்தது. அனுமன், தொலைவில் மிகவும் கோபமுடனும், தன் தம்பியை இழந்த சோகத்துடன் வருவது இந்திரஜித் என்பதை கண்டுகொண்டான். பிறகு அனுமன், இதற்கு முன் என்னிடம் வந்து போரிட்ட அனைத்து அரக்கர்களையும் கொன்றுவிட்டேன். இப்போது வரும் இந்திரஜித் மிகவும் பலம் பொருந்தியவன். நான் அவனை கொன்றால் இராவணனை கொன்றதற்கு சமமாகும். அது மட்டுமில்லாமல் தேவர்களும் துன்பத்திலிருந்து மீள்வார்கள் என நினைத்தான்.

அனுமன் இராவணனின் அவைக்கு அழைத்து வருதல்!

�� இந்திரஜித்தின் அரக்கர் படைகள் அனுமனை சூழ்ந்துக் கொண்டன. அனுமன் தன் விஸ்வரூபத்தை எடுத்தான். அனுமன் தன் பக்கத்தில் இருந்த ஆச்சா மரத்தை பிடுங்கி அரக்கர்களிடம் போரிட்டான். அரக்கர் படைகள் அனைத்தையும் கொன்றான். பிறகு அனுமன் தன் தோள்களைத் தட்டி என்னிடம் போருக்கு வாருங்கள் என முழக்கமிட்டான். அரக்கர்களுக்கு அழிவு வந்துவிட்டது என்றான். இதைக்கேட்ட இந்திரஜித், உன் எண்ணத்திற்கு நான் முடிவு கட்டுகிறேன் எனக் கூறி அனுமன் மீது அம்புகளை ஏவினான். அனுமன் மீது பாய்ந்த அம்புகளால் இரத்தம் வலிந்தது. அனுமன் உடலை மிகவும் பெரிதாக்கிக் கொண்டே சென்றான். இந்திரஜித்தால் அனுமனை பாதிக்குமேல் காண முடியவில்லை. பிறகு அனுமன், இந்திரஜித்தின் தேரில் ஏறி அவனுடைய வில்லை பிடுங்கி ஒடித்து எறிந்தான்.

�� அனுமன் ஒரு மரத்தை வேரோடு பிடுங்கி இந்திரஜித் மீது எறிந்தான். இதனால் இந்திரஜித்தின் மணிமுடிகள் உடைந்து கீழே விழுந்தன. இதனால் கோபங்கொண்ட இந்திரஜித் அனுமன் மீது ஆயிரம் பாணங்களை ஏவினான். அனுமன், இந்திரஜித்தை அவன் நின்றிருந்த தேரோடு தூக்கி எறிந்தான். தரையில் விழுந்த இந்திரஜித் எழுந்து வானில் சென்றான். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இந்திரஜித், அனுமன் மீது பிரம்மாஸ்திரத்தை ஏவ நினைத்தான். அதனால் இந்திரஜித் பிரம்மாஸ்திரத்திற்கு அர்ச்சனைகளும், பூஜைகளும், வழிபாடுகளும், செய்து சகல தெய்வங்களை வணங்கி அந்த பிரம்மாஸ்திரத்தை தன் கையில் எடுத்துக் கொண்டான். பிறகு இந்திரஜித், ஒரு பெரிய வில்லை பிரம்மாஸ்திரத்தில் பொருத்தி அனுமன் மீது எய்தினான். பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட அனுமன் கீழே விழுந்தான்.

�� பிறகு அனுமன் தன்னை கீழே சாய்த்தது பிரம்மாஸ்த்திரம் என்பதை உணர்ந்து கொண்டான். பிரம்மாஸ்திரத்திற்கு மதித்து கட்டுப்படுவது தான் சிறந்தது என நினைத்து கட்டுப்பட்டான். இதைப் பார்த்த இந்திரஜித், அனுமனின் அருகில் வந்து இவனுடைய வலிமையை ஒடிக்கி விட்டேன் என்றான். அதுவரையிலும் அனுமனை பார்த்து பயந்த அரக்கர்கள், ஓடி வந்து அனுமனை சூழ்ந்துக் கொண்டனர். அனுமன் கட்டுண்டதை பார்த்து அரக்கர்கள் மகிழ்ந்தார்கள். பிறகு அரக்கர்கள் அனுமனை கயிற்றோடு

கட்டி அரண்மனைக்கு இழுத்துச் சென்றனர்.

அனுமன் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட செய்தியை அறிந்து சீதை மிகவும் வருந்தினாள். போகும் வழியில் சில அரக்கர்கள் அனுமனை பார்க்க பயந்தனர். சிலர் நீ கொன்ற என் மகனை திரும்பக் கொடு என்றனர். இன்னும் சிலர் நீ கொன்ற என் கணவரை திரும்ப கொடு என்றனர். இன்னும் சில அரக்கர்கள் அனுமனிடம் பணிந்து எங்களை மன்னித்து விடு என்றனர்.

�� சிலர் நீ கொன்ற என் தந்தையை திரும்ப கொடு என்றனர். அனுமன், அரக்கர்கள் பின் சென்றால் இராவணனை காண முடியும் என நினைத்து அமைதியாக வந்தான். அனுமனுடன் இந்திரஜித் தலைமையில் அரக்கர்கள் அரண்மனையை அடைந்தனர். இராவணனுக்கு அனுமன் கட்டுண்ட செய்தி முன்பே தெரிவிக்கப்பட்டது. உடனே இராவணன், அரக்கர்களிடம் அவனை என் முன் கொண்டு வந்து நிறுத்துங்கள் என ஆணையிட்டான். அனுமனை இராவணன் முன்பு நேருக்குநேர் நிறுத்தி வைத்தனர். இராவணனை பார்த்த அனுமனுக்கு பிரம்மாஸ்திரத்தை அறுத்தெறிந்து இவனை இப்பொழுதே கொல்கிறேன் என எண்ணினான். பிறகு பிரம்மாஸ்திரத்தை அறுத்தெறிவது தவறு என்பதை நினைத்து அமைதியானான். இவனோடு நான் போரிட்டால் சீதையின் நிலைமையை நான் எப்படி இராமனிடம் சொல்வேன் என நினைத்தான். ஆதலால் இராவணன் முன்பு ஒரு தூதனாக சந்திப்பது தான் சிறந்தது என நினைத்தான்.

அனுமன் இராவணனுக்கு அறிவுரை கூறுதல்!

�� இராவணனின் சபைக்கு கட்டிக் கொண்டு வரப்பட்ட அனுமனை இந்திரஜித் அறிமுகப்படுத்தினான். அனுமனை பார்த்து, குரங்கின் உருவில் இருக்கும் இவ்வீரன் சிவபெருமானை போலவும், விஷ்ணுவை போலவும் வலிமை கொண்டவன் எனக் கூறினான். இராவணன் அனுமனை பார்த்து, நீ யார்? எதற்காக இங்கு வந்துள்ளாய்? உன்னை இங்கு அனுப்பியவர் யார்? எனக் கேட்டான். அனுமன், நான் வில் வீரத்தில் சிறந்தவனான இராமனின் தூதுவன். இராமன், வேதங்களை நன்கு கற்றவன். அறிவில் சிறந்து விளங்குபவன். அறத்தை வளர்ப்பவன். தர்மநெறியில் விளங்குபவன். அத்தகைய இராமனின் தூதன் நான். இராமனின் மனைவி சீதையை தேடி வாலியின் சகோதரனான சுக்ரீவனின் கட்டளைப்படி வாலியின் மகன் அங்கதன் தலைமையில் வந்துள்ளேன். அவனுடைய தூதனாக மற்றும் தனியாக இங்கே வந்துள்ளேன் என்றான்.

�� வாலியின் பெயரைக் கேட்ட இராவணன், பலமாக சிரித்தான். வாலியின் மகன் அங்கதனின் தூதனா நீ? வாலி நலமாக உள்ளானா? எனக் கேட்டான். அனுமன் இராவணனை பார்த்து கேலியாக சிரித்தான். பிறகு, அரக்கனே! வாலி இவ்வுலகை விட்டு வானுலகம் சென்று விட்டான். அவனின் உயிரை இராமனின் பாணம் பதம் பார்த்தது. இப்போது வாலியின் தம்பியான சுக்ரீவன் அரசனாக உள்ளான் எனக் கூறினான். உடனே இராவணன் அனுமனிடம், வாலியை இராமன் எதற்காக கொன்றான் என சொல் என்றான். சீதையைத் தேடி இராமன் வந்தபோது, சுக்ரீவனின் நட்புக் கிடைத்தது. சுக்ரீவனின் துயரை போக்கும் பொருட்டு இராமன் வாலியை கொன்று சுக்ரீவனுக்கு முடி சூட்டினான் என்றான். இராவணன், உன் குலத்து தலைவனை கொன்ற இராமனிடம் அடிமையாக இருக்கின்றீர்கள். தன் சொந்த அண்ணனை இராமனை விட்டு கொன்ற சுக்ரீவன் எனக்கு தூது அனுப்பியுள்ளானா எனக் கேட்டான்.

�� நீ இங்கு தூதுவனாக வந்துள்ளதால் உன்னை கொல்லாமல் இருக்கின்றேன். உண்மையைச் சொல் என்றான் இராவணன். அனுமன் இராவணனிடம், நான் உனக்கு அறிவுரையை கூறுகிறேன் கேள் என்றான். நான் உன்னை காண வேண்டும் என்பதற்காக தான் அசோக வனத்தையும், உன் அரக்கர்களையும் அழித்தேன். ஒருவனுக்கு ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஓர் அரசனாகிய நீ ஒழுக்கத்தை கடைப்பிடிக்காமல் இருக்கிறாய். பிறரின் மனைவியை விரும்புபவனுக்கு பழியும், பாவமும் வந்து சேரும்.

https://telegram.me/aedahamlibrary

உனக்கோ பல மனைவிமார்கள் இருக்க நீ மற்றவர் மனைவியை விரும்புவது நியாயமா? ஒருவனுக்கு பெண்ணாசையும், பொன்னாசையும் இருந்தால் அது அவனுக்கு அழிவைத் தேடி தரும். நீ சீதையை இராமனிடம் ஒப்படைத்துவிட்டால் இராமன் உன்மீது சிறிதேனும் கருணை காட்ட வாய்ப்புள்ளது எனக் கூறினான்.

�� இராவணன் இதனைக் கேட்டு பெரும் கோபங்கொண்டான். உடனே குரங்காகிய நீ! எனக்கு அறிவுரை சொல்வதா! உன்னை இப்பொழுதே எமலோகத்திற்கு அனுப்புகிறேன் என்றான். தன் ஏவலாட்களுக்கு இக்குரங்கை உடனே கொல்லுங்கள் என ஆணையிட்டான். உடனே அரக்கர்கள் அனுமனை சூழ்ந்துக் கொண்டனர். அப்போது அரசவையில் இருந்த இராவணனின் தம்பி விபீஷணன் எழுந்து 'நில்லுங்கள்' என்றான். விபீஷணன் இராவணனிடம் அண்ணா! உன் கோபம் உலக நீதிக்கு ஏற்றது அல்ல. உன் தவத்தின் பலனாய் இந்திரன் முதலிய தேவர்கள் உனக்கு பணிவிடை செய்கிறார்கள். இவன் ஒரு தூதுவன் என்று சொல்லியும் இவனைக் கொல்வது நம் குலத்திற்கு பாவமாகும். இத்தூதுவனை கொல்லாதே என தடுத்து நிறுத்தினான்.

அனுமன் இலங்கைக்கு தீ வைத்தல்!

�� இராவணன் விபீஷணனிடம், தம்பி! நல்லது செய்தாய். இல்லையென்றால் இக்குரங்கை கொன்று பாவம் செய்திருப்பேன் என்றான். ஆனால் இந்த வானரம் குற்றம் செய்துள்ளது. அதற்கு தண்டனை தர வேண்டும் என நினைத்தான். அதனால் இக்குரங்கின் வாலில் தீ மூட்டி, இலங்கை நகரை சுற்றி வந்து பிறகு இந்நகரை விட்டு விரட்டியடியுங்கள் என்றான். அப்போது இந்திரஜித், இவன் பிரம்மாஸ்திரத்தால் பிணைக்கப்பட்டுள்ளான். அப்படி இருக்க இவன் மீது தீயிடக் கூடாது என்றான். உடனே அரக்கர்களிடம் இவனை கனமான கயிற்றை கொண்டு கட்டுங்கள் என சொல்லி விட்டு தன்னால் பிணைக்கப்பட்ட பிரம்மாஸ்திரத்தை அவிழ்த்துவிட்டான். அரக்கர்கள் அனுமனை கனமான கயிற்றை கொண்டு கட்டினார்கள். பிறகு அரக்கர்கள் இலங்கையில் அனைத்து கயிற்றையும் கொண்டு வந்து அனுமனின் வாலில் சுற்றினார்கள்.

�� பிறகு அனுமனை பார்த்து இப்பொழுது உன் வீரம் என்ன ஆயிற்று என கேலி செய்தனர். சிலர் அரக்கிகள் ஓடிப்போய் நடந்தவற்றை சீதையிடம் கூறினர். சீதை இதைக் கேட்டு மிகவும் வருந்தினாள். உடனே அவள், அக்னி தேவனே! இவ்வரக்கர்கள் அனுமனுக்கு இழைக்கும் கொடுமையைப் பார்! நான் கற்புடைய பெண் என்றால் அக்னியே! நீ அனுமனை சுடக் கூடாது என்றாள். சீதையின் துன்பத்தைக் கண்டு அக்னி தேவனும் பயந்தான். அங்கு அரக்கர்கள் அனுமனின் வாலில் தீயை மூட்டினர். ஆனால் அத்தீ அனுமனை சுடவில்லை. அனுமனுக்கு ஜில்லென்று இருந்தது, அப்போது அனுமன், அன்னை சீதை தான் நம்மை நெருப்பு சுடக் கூடாது என அக்னி தேவனை வேண்டியிருப்பாள் என நினைத்தான். பிறகு அனுமன் சீதை இருந்த திசையை பார்த்து தொழுதான். அரக்கர்கள் அனுமனை கயிற்றில் கட்டிக் கொண்டு இலங்கை முழுவதும் சுற்றினர். அப்பொழுது அனுமன் சரியான நேரம் பார்த்து வான் வெளியில் பறந்தான்.

�� அரக்கர்கள் செய்வதறியாது அக்கயிற்றில் தொங்கினர். அனுமன் இராமனை நினைத்து, வீடுகள், மாளிகைகள், தெருக்கள் என அனைத்து இடங்களிலும் தீயை வைத்தான். அப்பொழுது இலங்கை நகரம் தீயின் ஒளியால் பிரகாசமாக எரிந்தது. நெருப்பின் புகையால் இலங்கை நகரம்

இருண்டு காணப்பட்டது. சில அரக்கர்கள் நெருப்பிற்கு பயந்து கடலில் குதித்தனர். தீயினால் இலங்கை நகரம் அழிந்தது. இலங்கை தீயில் எரிவதை கண்ட இராவணன், இதற்கு யார் காரணம்? எனக் கேட்டான். அங்கு உயிர் பிழைத்து வந்த அரக்கர்கள், குரங்கின் வாலில் நாம் இட்ட தீ தான். இலங்கை நகரம் எரிவதற்கு காரணம் என்றனர். கோபங்கொண்ட இராவணன், இலங்கை அழிவதற்கு காரணமாய் இருந்த அக்குரங்கை பிடித்து வாருங்கள் என கட்டளையிட்டான். அரக்கர்கள் குரங்கை பிடிக்கச் சென்றார்கள்.

�� இதை கவனித்த அனுமன், தன் பக்கத்தில் இருந்த மரத்தைப் பிடிங்கி அரக்கர்கள் மீது எறிந்தான். இதனால் அரக்கர்கள் மாண்டு போனார்கள். சில அரக்கர்கள் பயந்து ஒளிந்து கொண்டனர். பிறகு அனுமன் தன் வாலில் எரிந்து கொண்டிருக்கும் தீயை கடலில் தோய்த்து அணைத்தான். அப்போது அந்த இடத்தில் இருந்த சிலர், அனுமன் இட்ட தீ இலங்கை முழுவதும் எரிந்தது. ஆனால் அசோக வனத்திற்கு மட்டும் தீ பரவவில்லை என்றனர். இதைக் கேட்டு அனுமன், மகிழ்ந்தான். நல்ல வேளை அன்னை உள்ள இடத்திற்கு தீ பரவவில்லை என நினைத்தான். உடனே அனுமன், சீதையை காண அசோக வனத்திற்கு சென்றான். அனுமனை பார்த்த சீதை மகிழ்ந்தாள். பிறகு சீதை அனுமனின் வீரதீர செயல்களை பாராட்டினாள். அனுமன் சீதையிடம் ஆசி பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

அனுமன் மகேந்திர மலையை அடைதல்!

�� அனுமன் சீதையிடம் ஆசி பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு வடதிசை நோக்கிச் சென்றான். அவ்வாறு அனுமன் செல்லும்போது சமுத்திர ராஜன் வேண்டுகோளுக்கிணங்க தன் மீது ஓய்வெடுத்து செல்லும்படி சொன்ன மைந்நாகம் மலையின் மீது வந்து நின்றான். அங்கு அம்மலையின் மீது சிறிது நேரம் ஓய்வெடுத்தான். அப்பொழுது இலங்கையில் நடந்தவற்றையெல்லாம் அம்மலையிடம் கூறினான். பிறகு தன்னை எதிர்பார்த்து அங்கதனும் மற்ற வானர வீரர்களும் காத்து கொண்டிருப்பார்கள் எனக் கூறி விட்டு அம்மலைக்கு விடைகொடுத்து வானில் பறந்தான். அனுமன் விரைந்து சென்று மகேந்திர மலையை அடைந்தான். அனுமனின் வரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த வானர வீரர்கள் அனுமனை கண்டு மிக்க மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். சிலர் அனுமனை தொழுதனர். சிலர் அனுமனை தூக்கி ஆரவாரம் செய்தனர். சிலர் அனுமனை கட்டி தழுவிக் கொண்டனர். சிலர் ஆடி பாடி மகிழ்ந்தார்கள்.

�� வானரங்கள் அனுமனை பார்த்து! அனுமனே! உன் வீரதீர செயல்களின் காரணமாய் ஏற்பட்ட புண்களும், உன் முகத்தின் பொழிவும் நீ சீதையை பார்த்துவிட்டாய் என்பதை காட்டுகிறது என்றனர். பிறகு வானரங்கள், உனக்காக காய்களும், கனிகளும், கிழங்குகளும் சேகரித்து வைத்துள்ளோம். இவற்றை உண்டு சிறிது நேரம் இளைப்பாறு என்றனர். பிறகு அனுமன் அங்கதனிடம் சென்று அவனை வணங்கினான். ஜாம்பவானின் காலில் விழுந்து வணங்கினான். பிறகு அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்தனர். அனுமன் அனைவரிடமும் நான் சீதையை கண்டுவிட்டேன். சீதையின் வாழ்த்துக்களையும் பெற்றேன் என்றான். உடனே வானரங்கள் அனுமனிடம், நீ இங்கிருந்து சென்றது முதல் அங்கிருந்து இங்கு வந்தது வரை நடந்தவற்றை எல்லாம் கூறு என்றனர். அனுமன், சீதையின் கற்பு திறனையும், அவர் இராமரின் நினைவாக இருப்பதையும், தன் அடையாளமாக சீதை கொடுத்த சூடாமணி பற்றியும் கூறினான்.

�� பிறகு அங்கு அரக்கர்களிடம் போர் புரிந்ததையும், இலங்கைக்கு தீ மூட்டியதையும் கூறினான். பிறகு வானரங்கள், அனுமனே! நீ போர் புரிந்ததற்கு அடையாளமாய் உனக்கு ஏற்பட்ட புண்களே காண்பிக்கிறது. அவர்களிடம் நீ வெற்றி பெற்று தான் இங்கு வந்துள்ளாய் என்றனர்.

https://telegram.me/aedahamlibrary

அங்கதன் அனுமனிடம், நீ மிகவும் துணிவுடன் இக்காரியத்தை செய்து உள்ளாய். உன் பலத்துக்கும், வலிமைக்கும் நிகரானவர் எவரும் இல்லை என்பதை நிரூபித்து விட்டாய். இன்று உன்னால் வானர குலம் புகழ் பெற்றுள்ளது என பாராட்டினான். பிறகு அனுமன், அன்னை சீதை, நான் இன்னும் ஒரு மாத காலம் தான் உயிருடன் இருப்பேன். அதற்குள் இராமர் வந்து என்னை காப்பாற்றி செல்ல வேண்டும் என்று கூறினார் என்றான். உடனே வானரங்கள், இனியும் நாம் தாமதிக்கக் கூடாது. உடனே இராமரிடம் சென்று சீதையை கண்ட செய்தியைக் கூற வேண்டும் என்றனர்.

�� அங்கதன் அனுமனிடம், அனுமனே! நாங்கள் உயிரை விட தயாராக இருந்தோம். நீ தான் தக்க சமயத்தில் இலங்கை சென்று சீதையை கண்டு எங்கள் உயிரையும் காப்பாற்றி உள்ளாய் என்றான். ஆதலால் நீ விரைந்து சென்று, இராமரிடம் நடந்த விஷயங்களை எல்லாம் கூறு என்று அனுப்பி வைத்தான். பிறகு அங்கதன் தலைமையில் வானர வீரர்கள் இராமரை நோக்கிச் சென்றனர். அவர்கள் போகும் வழியில் மதுவனத்தை கண்டனர். அம்மதுவனம் முதலில் வாலியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. வாலி இறந்த பின் அம்மதுவனம் சுக்ரீவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனை ததிமுகன் என்னும் வானர வீரன் தன் ஏவலாட்களுடன் காவல் காத்து கொண்டிருந்தான். வானரங்கள் மிகுந்த பசியுடன் இருந்ததால், அவர்கள் அங்கதனிடம், நாங்கள் மிகுந்த பசியுடன் உள்ளோம். தாங்கள் இந்த மதுவனத்தில் உள்ள மதுவை அருந்த அனுமதி தர வேண்டும் என்றனர்.

அனுமன் இராமரை சந்தித்தல்!

�� வானரங்கள் மிகுந்த பசியுடன் இருந்ததால், அவர்கள் அங்கதனிடம், நாங்கள் மிகுந்த பசியுடன் உள்ளோம் தாங்கள் இந்த மதுவனத்தில் உள்ள மதுவை அருந்த அனுமதி தர வேண்டும் என்றனர். அங்கதனும் அவர்களுக்கு அனுமதி அளித்தான். வானர வீரர்கள் மதுவனத்தில் ஆடியும் பாடியும் மகிழ்ந்தார்கள். இப்படி இவர்கள் மதுவை அருந்த மதுவின் மயக்கம் இவர்களுக்கு அதிகரித்துக் கொண்டே போனது. இதனால் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு மதுவனத்தை நாசம் செய்தனர். இவர்களை தடுப்பதற்காக ததிமுகனின் வானர வீரர்கள் சென்றனர். ஆனால் வானர வீரர்கள் இவர்களையும் அடித்து துன்புறுத்தினர். காவல் புரிந்த வானர வீரர்கள் ததிமுகனிடன் சென்று முறையிட்டனர். உடனே ததிமுகன் அங்கதனிடம் போருக்குச் சென்றான். அங்கதனோ அவனை அடித்து உதைத்தான். மிகவும் அடிப்பட்ட ததிமுகன் அரசன் சுக்ரீவனிடம் சென்றான்.

�� ரிசியமுக பர்வத்தில் இராமர் சீதையை நினைத்து மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். சீதையை தேடிச் சென்ற வானர வீரர்கள் எல்லோரும் திரும்பி வந்துவிட்டனர். ஆனால் தென் திசை நோக்கிச் சென்ற வானர வீரர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. அவர்கள் நிச்சயம் சீதையை தேடி கண்டுபிடித்துவிட்டு வருவார்கள் என இராமருக்கு ஆறுதல் சொன்னான் சுக்ரீவன். இராமர், தென் திசைக்கு சென்ற வானர வீரர்களுக்கு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் சீதையை காணாமல் மாண்டு போனார்களோ? இல்லை இன்னமும் சீதையை தேடி அலைந்துக் கொண்டு இருக்கிறார்களா? சீதைக்கு ஏதேனும் விபத்து ஏற்பட்டு இருக்குமோ? இல்லை அவர்களுக்கு என்ன தான் ஆகி இருக்கும் எனக் கூறி இராமர் மிகவும் வருந்தினார்.

�� அப்போது ததிமுகன் அவ்விடத்திற்கு வந்து அங்கதன் தலைமையில் வந்த வானர வீரர்கள் செய்த அட்டூழியங்களையும், அங்கதனால் ஏற்பட்ட துன்பத்தை பற்றியும் கூறினான். இதைக் கேட்டு சுக்ரீவன் மகிழ்ந்தான். அப்படியென்றால் வானர வீரர்கள் நிச்சயம் சீதையை தேடி கண்டுபிடித்து இருப்பார்கள். அதனால் தான் மதுவனத்தை நாசம் செய்து இருக்கிறார்கள் என நினைத்தான். சுக்ரீவன் ததிமுகனை பார்த்து, ததிமுகனே! மதுவனத்தின் இளவரசனை நீ எதிர்க்கலாமா? நீ இளவரசன் அங்கதனிடம் சென்று சரணடைவாயாக எனக் கூறினான்.

பிறகு சுக்ரீவன் இராமனிடம், பெருமானே! தாங்கள் வருந்த வேண்டாம். வானர வீரர்கள் சீதையை கண்ட மகிழ்ச்சியில் மதுவனத்தை நாசம் செய்து இருக்கிறார்கள் என்று கூறினான். இவ்வாறு சுக்ரீவன் கூறிக் கொண்டு இருக்கையில், தென் திசையில் இருந்து அனுமன், அவர்கள் முன் வந்து நின்றான்.

�� அனுமன் தென் திசை நோக்கி சீதை இருக்கும் இடத்தை பார்த்து தொழுது வணங்கினான். இராமர் சிறிது நேரம் அனுமனையே உற்று நோக்கினார். அனுமன் முகத்தில் தெரிந்த பிரகாசமே சீதையை கண்டுவிட்டேன் என்ற செய்தியை கூறியது. பிறகு அனுமன் இராமனிடம், நான் கண்டுவிட்டேன்! நான் கண்டுவிட்டேன்! நான் அன்னை சீதை இருக்கும் இடத்தை கண்டுவிட்டேன். பெருமானே! தாங்கள் இனி கவலை கொள்ள வேண்டாம் என்றான். பெருமானே! தசரத மகாராஜாவின் பெருமைக்குரியவளும், ஜனக மகாராஜாவின் மகள் என்ற தகுதிக்குரியவளும், தங்களின் மனைவியுமான அன்னை சீதையை நான் கண்டுவிட்டேன் எனக் கூறினான். இதைக் கேட்ட இராமனின் முகம் பிரகாசமானது. பிறகு அனுமன், பெருமானே! அன்னை தங்களின் நினைவாகவே உள்ளார். தன் கற்புக்கு சிறிது கலங்கமற்றவளாய் உள்ளார். தங்களின் பெயரையே உச்சரித்துக் கொண்டு உள்ளார். தங்கள் வருகையை எதிர்பார்த்து காத்துக் கொண்டு உள்ளார் என்றான்.

அனுமன் சூடாமணியை இராமரிடம் கொடுத்தல்!

�� அனுமன் இராமனிடம், பெருமானே! அன்னை, கடலுக்கு நடுவில் இருக்கும் இலங்கை என்னும் நகரத்தில், அழகிய சோலைகள் நிறைந்த அசோக வனம் என்னும் இடத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டுள்ளார். இராவணன், ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாமல் அவளை தொட்டால் அவனின் தலை வெடித்து விடும். இது பிரம்மன் அவனுக்கு கொடுத்த சாபமாகும். இச்சாபத்திற்கு அஞ்சி அவன் அன்னை சீதையை தீண்டாமல் சிறை வைத்திருக்கிறான் என்றான். இராமர் அனுமனிடம், நீ சீதையை எவ்வாறு கண்டாய்? எனக் கூறு என்றார். அனுமன், நாங்கள் அன்னை சீதையை தென் திசை முழுவதும் தேடினோம். ஆனால் எங்களால் எங்கேயும் அன்னையை தேடி கண்டுபிடிக்க முடியாமல் கடைசியில் மகேந்திர மலையை அடைந்தோம். அங்கு ஜடாயுவின் சகோதரனான சம்பாதி வந்து, எங்களுக்கு சீதை இருக்கும் இருப்பிடத்தைக் கூறினான்.


�� பிறகு நான் சீதையை தேடி இலங்கை சென்றேன். அங்கு மாட மாளிகைகளிலும், வனத்திலும், எல்லா அரண்மனையிலும் தேடினேன். எங்கு தேடியும் கிடைக்காத சீதை கடைசியில் அசோக வனத்தில் இருப்பதை கண்டேன். அங்கு சீதை மிகவும் துன்பப்பட்டு அரக்கியர்கள் நடுவே வீற்றிருந்தார். அப்போது இராவணன் அங்கு வந்தான். அவன் சீதையை தன் அன்புக்கு இணங்கும்படி வேண்டினான். ஆனால் சீதை கடுஞ்சொற்களால் அவனை பேசினார். என் மனதில் இராமரை தவிர வேறு எவருக்கும் இடமில்லை எனக் கூறினார். இராவணன் சென்ற பிறகு அன்னை மிகவும் துன்பப்பட்டார். அச்சமயத்தில் நான் அரக்கர்களை தூக்க நிலைக்கு ஆழ்த்திவிட்டு, அன்னை முன்பு தோன்றினேன். பிறகு நான் தங்களின் பெயரை சொன்னவுடன் அன்னை மிகவும் மகிழ்ந்தார். பிறகு தங்களின் அடையாளமாக கொடுத்த கணையாழியை அன்னையிடம் கொடுத்தேன்.

�� கணையாழியை பார்த்த அன்னை, மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பிறகு அன்னை என்னிடம், இராமர் ஏன் இன்னும் என்னை தேடி வரவில்லை. நான் அவரின் வரவை எதிர்ப்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன் என்றார். இராவணன் அவனின் ஆசைக்கு இணங்க எனக்கு ஒரு வருட காலம் அவகாசம் கொடுத்து உள்ளான். அதற்கு இன்னும் ஒரு மாதம் தான் உள்ளது. அதற்குள் இராமர் வந்து என்னை மீட்டுச் செல்ல வேண்டும். இல்லையேல் என் உயிரை நான் மாய்த்துக்

கொள்வேன் என்றார். பிறகு அன்னை அவரின் அடையாளமாக, இந்த சூடாமணியை தங்களிடம் கொடுக்கச் சொல்லி கொடுத்தார் என்றான். பிறகு அனுமன் சீதை கொடுத்த சூடாமணியை இராமரிடம் கொடுத்தான். சூடாமணியை பார்த்த இராமரின் கண்களில் கண்ணீர் பொங்கியது.

�� பிறகு இராமர் சூடாமணியை மார்போடு அணைத்துக் கொண்டார். சீதையை நினைத்து மிகவும் வருந்தினார். அப்போது அங்கதன் முதலிய வானர வீரர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் இராமரை தொழுது வணங்கினர். இராமன் அனுமனை பார்த்து, எவராலும் செய்ய முடியாத காரியத்தை நீ செய்துள்ளாய். கடலை கடப்பது என்பது மிகவும் எளிதான விஷயம் அல்ல. ஆனால் எவராலும் நுழைய முடியாத இலங்கைக்கு சென்று இராவணனின் காவலில் இருக்கும் சீதையை கண்டுபிடித்து வந்துள்ளாய் எனப் பாராட்டினார். அப்போது சுக்ரீவன், இனியும் நாம் நேரத்தை வீணடிக்கக்கூடாது. சீதை இருக்கும் இடத்தை கண்டுபிடித்தாகிவிட்டது. நாம் புறப்படுவோம் என வானர சேனைகளுக்கு கட்டளையிட்டான். பிறகு அனைவரும் தென் திசை நோக்கி பயணம் செய்தனர்.

யுத்த காண்டம்



இராவணனின் ஆலோசனைக் கூட்டம்!

�� அனைவரும் மகேந்திர மலையை அடைந்தனர். அப்பொழுது இரவாகிவிட்டதால் அன்றைய பொழுதை மகேந்திர மலையில் கழித்தனர். இலங்கையில் அனுமன் சேதத்தை ஏற்படுத்தி சென்றுவிட்டான். இராவணன் ஏவலாட்களுக்கு இலங்கையை முன்பு விட பன்மடங்கு அழகாக்கும் படி ஆணையிட்டான். பிறகு அரக்கர்கள் பொன்னாலும், தங்கத்தாலும், நவமணிகளாலும் இலங்கையை முன்பை விட அழகாக்கினர். இராவணன் இவற்றை கண்டு அவர்களுக்கு பரிசுகளை

அளித்தான். இராவணன் ஓர் ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான். அக்கூட்டம் அனுமனால் இலங்கைக்கு ஏற்பட்ட அழிவு பற்றிய ஆலோசனைக் கூட்டமாகும். அக்கூட்டத்திற்கு தனக்கு நெருக்கமானவர்களை தவிர வேறு யாரையும் அவன் அனுமதிக்கவில்லை. அக்கூட்டத்திற்கு பலத்த காவல் ஏற்பாடு செய்திருந்தான். இராவணன் தன் அனுமதியின்றி எவரும் உள்ளே வரக்கூடாது எனக் கட்டளையிட்டான்.

�� ஆலோசனை கூட்டத்தில் இராவணன், ஒரு குரங்கு என் வீரத்தையும், என் ஆற்றலையும், என் பெருமையையும் அழித்துவிட்டு சென்றுவிட்டது. இதைக் காட்டிலும் பெரிய அவமானம் வேறு என்ன வேண்டும்? இலங்கை நகரை எரித்துவிட்டு சென்றுள்ளது. இலங்கை நகரம் பெரும் அழிவைக் கண்டுள்ளது. எனக்கும் பெரும் அவமானத்தை ஏற்படுத்திவிட்டு அக்குரங்கு சென்றுவிட்டது. இவ்வளவு ஏற்பட்ட பின் நான் மட்டும் சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறேன் என புலம்பினான். அனுமன் இலங்கைக்கு வைத்த தீ இன்னும் அணையக்கூட இல்லை. ஆனால் நாம் சுகமாகத் தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அந்த அனுமன் இலங்கைக்கு ஏற்படுத்திவிட்டு சென்ற அழிவினால், நம் படைகள், நம் உறவினர்கள் என அனைவரையும் இழந்துள்ளோம். இது என்னை மிகவும் காயப்படுத்திவிட்டது. ஆனால் அக்குரங்கை நாம் கொல்லாமல் விட்டுவிட்டோம் என்பது மிகவும் வருத்தத்தை தருகிறது எனக் கூறி மிகவும் வருந்தினான்.

�� இதனைக் கேட்ட படைத்தலைவன் எழுந்து, அரசே! நான் முன்பே சொல்லி இருந்தேன். சீதையை கவர்ந்து வருவது மட்டும் ஒரு வீரனுக்கு அழகல்ல. நான் சொன்னதை அப்பொழுது நீங்கள் கேட்கவில்லை. கரனையும் நம் அரக்கர்களையும் கொன்று, சூர்ப்பனகையின் மூக்கையும் அறுத்த அந்த இராம இலட்சுமணரை அன்றே கொன்றிருக்க வேண்டும். அப்பொழுது விட்டுட்டு இன்று வருந்துவது ஒரு பயனும் இல்லை. நாம் பகைவரை எதிர்க்காமல் இங்கு இன்பத்தை அனுபவித்து கொண்டிருப்பதில் என்ன பயன்? இப்படி இருந்தால் குரங்கு மட்டுமல்ல சிறு கொசுவும் நம்மை எதிர்க்கும் என்றான். இவன் பேசிய பிறகு துன்முகன், மகாபார்சுவன், பிசாசன், சூரியசத்ரு, வேள்வியின் பகைஞன், தூமிராட்சன் முதலான அரக்க வீரர்களும் எழுந்து பேசினார்கள். அரசே! எலிகளை கண்டு புலிகள் பயம் கொள்ளுமா? எங்களுக்கு அனுமதி தாருங்கள். நாங்கள் அந்த மனிதர்களையும், குரங்குகளையும் கொன்று தின்று வருகிறோம் என்றனர்.

�� அப்பொழுது இராவணனின் தம்பி கும்பகர்ணன் எழுந்து, நீங்கள்

என்ன செய்ய வேண்டும் என்பதை தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் எனக் கூறி அவர்களை அமர வைத்தான். பிறகு கும்பகர்ணன் இராவணனிடம் சென்று, உன் தம்பியாகிய நான் உனக்கு நல்லதை மட்டும் தான் சொல்வேன். நீ உன்னை உலகம் போற்ற வேண்டும் என நினைக்கிறாய். அவமானம் நடந்து விட்டது எனக் கூறுகிறாய். உன் மீது ஆசை கொண்ட மனைவிமார்கள் பலர் இருக்கையில் இராம இலட்சுமணர் இல்லாத நேரத்தில் நீ சீதையை கவர்ந்து வந்துள்ளாய். இது நியாயமா? நீ என்று சீதையை கவர்ந்து வந்து இங்கு சிறை வைத்தாயோ அன்றே அரக்கர்களின் புகழ் அழிந்து விட்டது. தீய செயல்களை செய்துவிட்டு புகழ் கிடைக்கவில்லை என்று புலம்புவதில் ஒரு பயனும் இல்லை. நம் அரக்க குலத்திற்கு அழிவைத் தேடித்தரும் செயலை நீ செய்துள்ளாய். இராமர் தன் ஒரு அம்பினால் கரன் முதலிய பதினாயிரம் அரக்கர்களை கொன்றுள்ளான்.

கும்பகர்ணனின் ஆலோசனை!

�� கும்பகர்ணன், அரசே! சீதையை இராம இலட்சுமணரிடம் ஒப்படைத்து நல்லது செய்வாயாக! இல்லையேல் இராமன் நிச்சயம் நம்மை வெல்வான். அப்படி இல்லையேல் இதற்கு மற்றொரு வழியும் உண்டு. இராமனுக்கு முன்பு நாம் நம் அரக்க படைகளை அழைத்துக் கொண்டு இராமனிடம் போர் புரிந்து இராம இலட்சுமரையும், அவர்களுடன் இருக்கும் வானர படைகளையும் அழித்து விடலாம். இது தான் சரியான வழி என்றான். இப்படி கும்பகர்ணன் பேசியதை கேட்டு கோபங்கொண்ட இராவணன், அவன் கடைசியாக கூறிய ஆலோசனையை மட்டும் ஏற்றுக் கொண்டான். தம்பி கும்பகர்ணா! நீ நல்லது சொன்னாய். நாம் உடனே போருக்கு புறப்படுவோம். பகைவர் அனைவரையும் அழித்துவிட்டு திரும்புவோம். நம் படைகள் அனைவரையும் போருக்கு தயாராகும்படி கூறினான். அப்போது இந்திரஜித் எழுந்து, அரசே! புழுக்களை கொல்வதற்கு தாங்கள் செல்வதா? எனக்கு அனுமதி கொடுங்கள். நான் சென்று அவர்கள் அனைவரையும் அழித்துவிட்டு வருகிறேன் என்றான்.

�� அப்போது இராவணனின் தம்பியான விபீஷணன் எழுந்து! மகனே, இந்திரஜித்! நீ சிறுபிள்ளைத்தனமாக பேசுகிறாய். நீ இன்னும் அரச நீதிகளை நன்கு உணரவில்லை. அனுபவம் உடையவர்கள் முடிவு செய்வதை நீ முடிவு செய்யலாமா? என்றான். விபீஷணன் இராவணனை பார்த்து, அண்ணா! எனக்கு தாய், தந்தை, அண்ணன், கடவுள் எல்லாம் நீங்கள் தான். உனக்கு ஆலோசனை சொல்லக்கூடியவர் நான் இல்லை என்றாலும், இவர்கள் கூறிய ஆலோசனை அனைத்தும் தங்களுக்கு தீமை அளிக்கக்கூடியவை. ஆதலால் நான் சொல்வதை கோபப்படாமல் கேட்க வேண்டும். இலங்கையை ஒரு வானரம் தான் எரித்தது என தாங்கள் நினைப்பது தவறு. சீதையின் கற்பின் திறன் தான் இலங்கை நகரை எரித்துள்ளது. தாங்கள் அதனை நன்கு உணர வேண்டும். இதை நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஒருவனின் பெருமை இழப்பதற்கு காரணம் பெண்ணாகத் தான் இருக்கக் கூடும்.

�� அண்ணா! குரங்குகள் என்று நீ அலட்சியம் செய்வது தவறு. குரங்காகிய வாலியினால் நீ அடைந்த துன்பங்களை நினைத்துப் பார். அவர்கள் மனிதர்கள் தான் என அலட்சியம் செய்கிறீர்கள் தானே? கார்த்தவீர்யார்ஜுனன் உன்னை சிறை வைத்ததை மறந்து விட்டாயா? கார்த்தவீர்யார்ஜுனனை கொன்ற பரசுராமனை இராமன் வென்றதையும் நீ

மறந்து விட்டாயா? இராம இலட்சுமணரை பகைப்பது உனக்கு தீங்கை விளைவிக்கும். உன் புகழும், உன் குலமும் அழிவதற்கு முன் நீ சீதையை இராம இலட்சுமணரிடம் ஒப்படைத்து விடு. அவ்வாறு செய்வது தான் உனக்கு நன்மை என்றான். இதைக் கேட்ட இராவணன், கோபத்தில் குலுங்க குலுங்க சிரித்தான். பிறகு இராவணன், என் வலிமையைப் பற்றி நீ அறிந்திருந்தும் அந்த மனிதர்கள் என்னை வெல்வார்கள் எனக் கூறுகிறாய். நீ அவர்களை பார்த்து பயப்படுகிறாயா? இல்லை அவர்கள் மீது அன்பு காட்டுகிறாயா? என்றான்.



�� இராவணன், வாலியை வலிமைமிக்கவன் எனக் கூறினாய். ஆனால்

அவனிடம் போர் புரியும் எதிரியின் வலிமையை பாதி பெற்றவன் என்பதை மறந்து விட்டாயா? அவனிடம் யார் போர் புரிந்தாலும் அவன் அவர்களின் வலிமையை பாதி பெற்று விடுவான். இராமனும் வாலியை மறைந்து இருந்து தான் கொன்றான் என்பதை நீ மறந்து விட்டாயா? நீ மட்டும் தான் அந்த மனிதர்களுக்காக மனமிறங்கி பேசிக் கொண்டிருக்கிறாய். உன் பேச்சை கேட்பதில் ஒரு பயனும் இல்லை. ஆதலால் நான் போருக்கு செல்வது நிச்சயம். படைகளே போருக்கு செல்ல தயாராகுங்கள் என்றான். விபீஷணன் மறுபடியும் இராவணனிடம், அண்ணா! நான் சொல்வதை கேளுங்கள். ஒப்பற்ற திருமால் தான் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரக்கர்களாகிய நம்மை அழிக்க அவதாரம் எடுத்து உள்ளான். ஆதலால் தாங்கள் போருக்கு செல்ல வேண்டாம் என்று இராவணனிடம் கெஞ்சிக் கேட்டான்.

விபீஷணன் கூறும் இரண்யனின் கதை!

�� விபீஷணன் கூறியதை கேட்ட இராவணன் மிகவும் கோபங்கொண்டான். விபீஷணிடம், நீ அந்த இராமனை திருமாலின் அவதாரம் எனக் கூறுகிறாய். நான் இந்திரனை சிறையில் அடைத்தவன். தேவர்களை ஓட ஓட விரட்டினேன் என்பதை மறந்துவிட்டு பேசுகிறாய். உனக்கு என்னுடன் போருக்கு வருவது பயமாக இருக்கிறது என்றால் நீ இங்கேயே இரு என்று சொல்லி விபீஷணனை பார்த்து ஏளனமாக சிரித்தான். இதை பார்த்த விபீஷணன், அண்ணா! இந்த கோபத்தை குறைத்துக் கொள். திருமாலுடன் போரிட்டு மாண்டவர் பலர் உண்டு. அவற்றுள் ஒருவன் தான் இரண்யன் என்பவன். இரண்யன் உன்னைக் காட்டிலும் பல மடங்கு வலிமை உடையவன். காசிப முனிவருக்கும், திதி என்பவளுக்கும் பிறந்தவன் தான் இரண்யன். அவனின் தம்பி இரண்யாட்சன். இவன் மக்களுக்கு பெரும் துன்பங்களை செய்ததால் திருமால் வராக அவதாரம் எடுத்து அவனைக் கொன்றார். இதனால் கோபங்கொண்ட இரண்யன் திருமால் மீது கோபங்கொண்டான்.

�� இரண்யன் கடுமையான தவம் இருந்து பிரம்மனிடம் வரன் கேட்டான். தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், ஐம்பெரும் பூதங்கள், படைக்கலன்கள், பகல் நேரத்தில், இரவு நேரத்தில், வீட்டுக்கு உள் அல்லது வெளியில் தனக்கு இறப்பு என்பது வரக்கூடாது என வரம் பெற்றான். தான் பெற்ற இவ்வரத்தால் இவன் மக்கள் அனைவரையும் துன்புறுத்தினான். உலகத்தில் உள்ள அனைவரையும் தன்னை கடவுளாக வணங்கும் படி கட்டளையிட்டான். அனைவரும் பயந்து இரண்யனையே கடவுளாக வணங்கினர். அப்போது தேவேந்திரன் இரண்யனைப் பழிவாங்க நினைத்து, இரண்யனின் மனைவி கருவுற்றிருந்தபோது அவளைச் சிலகாலம் ஆசிரமத்தில் வைத்து, நாரதர் மூலம் மகாவிஷ்ணுவின் மகிமைகளை அறிய வைத்தான். இதை அவள் வயிற்றிலிருந்த குழந்தையும் கேட்டு, மகாவிஷ்ணுவின் பக்தனாகியது. அந்தக் குழந்தைதான் பிரகலாதன்.

�� அனைவரும் இரண்யனையே கடவுளாக வணங்கினார்கள். ஆனால், இரண்யனின் மகன் பிரகலாதன் மகாவிஷ்ணுவையே எப்போதும் போற்றி வணங்கினான். அதைப் பொறுக்க முடியாத இரண்யன், தன் மகன் என்றும் பார்க்காமல் ஆயுதங்களைக் கொண்டு கொல்ல முயன்றான். தீயில்

தள்ளிவிட்டும், கடலுக்குள் தள்ளிவிட்டும், நச்சுப் பாம்புகளை கடிக்க விட்டும் எத்தனையோ கொடுமைகளை செய்தான். ஆனால், எல்லா ஆபத்துகளிலிருந்தும் மகாவிஷ்ணு பிரகலாதனைக் காப்பாற்றினார். 'தன்னை எல்லாத் துன்பங்களிலிருந்தும் காப்பவர் ஹரி என்று அழைக்கப்படுகின்ற மகாவிஷ்ணுவேதான்' என்று பிரகலாதன் கூறினான். அதைக் கேட்ட இரண்யன், 'அந்த ஹரி எங்கே இருக்கிறான்? ' என்று கேட்டான். அதற்கு பிரகலாதன், 'எங்கும் நிறைந்துள்ள இறைவன் இந்தத் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் ' என்று ஒரு தூணைக் காட்டினான்.

�� இரண்யன் ஆவேசத்துடன், தன் கையிலிருந்த கதாயுதத்தால் அந்தத் தூணை அடித்தான். அப்போது, ஸ்ரீமந் நாராயணனாகிய மகாவிஷ்ணு, சிங்க முகமும், மனித உடலும் கொண்ட நரசிம்ம அவதாரத்தில், தூணைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டார். அவரைத் தாக்கப் பாய்ந்தான் இரண்யன். நரசிம்மர் தன் நகங்களால் அவனது வயிற்றைக் கிழித்து, குடல்களை உருவி, மாலையாக அணிந்து கொண்டார். பூமியிலும், ஆகாயத்திலும் அவன் உடல் படாமல், தமது மடியில் வைத்துக் கொன்றார். அந்த நேரம் இரவுமின்றி, பகலுமின்றி மாலை வேளையாக இருந்தது. மகாவிஷ்ணுவின் பயங்கரமான நரசிம்ம உருவத்தைக் கண்டு, தேவர்கள் எல்லோரும் அருகில் வரப் பயந்து, தூரத்திலிருந்தபடியே வணங்கினார்கள். பக்தன் பிரகலாதன் அவர் அருகில் சென்று இனிய பாடல்களைப் பாடி வணங்கினான். அப்போது, ஸ்ரீநரசிம்மர் தமது கோபம் தணிந்து, அனைவருக்கும் அருள் புரிந்து மறைந்தார்.

விபீஷணன் இராமரை காண செல்லுதல்!

�� கதையை சொல்லி முடித்த விபீஷணன் இராவணனை பார்த்து, அண்ணா! இக்கதையில் வரும் நரசிம்மர் தான் திருமால். ஆதலால் அவரை பகைத்து அழிவை தேடிக் கொள்ளாதே என்றான். ஆனால் இராவணன் விபீஷணன் கூறியதை எதையும் மனதில் கொள்ளவில்லை. இதைக் கேட்டு இராவணன் மிகவும் கோபங்கொண்டான். இராவணன், விபீஷணா! இக்கதையில் வரும் பிரகலாதனும் நீயும் ஒன்று தான். அவன் தன் தந்தையை கொன்று செல்வத்தை அடைந்தான். அதேபோல் நீ என்னை கொன்று இச்செல்வத்தை அடையலாம் என நினைக்கிறாய். அதனால்தான் அந்த இராம இலட்சுமணர் மேல் உனக்கு பாசம் பொங்கி வருகிறது. இதற்கு மேல் நீ இராம இலட்சுமணரை புகழ்ந்து பேசினால் உன்னை கொன்று விடுவேன் என விபீஷணன் மீது சீறினான். அது மட்டுமில்லை எனக்கு இராமனிடம் சீதையை திரும்பி அனுப்பும் எண்ணமும் இல்லை. ஆதலால் நீ இங்கு இருந்து சென்று விடு.

�� நீ என் தம்பி என்பதால் உன்னை கொல்லாமல் விடுகிறேன். இனியும் நீ எனக்கு உபதேசம் சொல்வதை நிறுத்திக் கொள். என் கண்முன் நிற்காதே இங்கிருந்து சென்று விடு. இல்லையேல் உன்னை கொன்று விடுவேன் என்றான். விபீஷணன், இராவணா! நான் சொல்வதைக் கேள். நான் உனக்கு சொன்ன அறிவுரைகளை நீ உணரவில்லை. உனக்கு அழிவு காலம் வந்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடாதே. நான் ஏதேனும் தவறாக சொல்லியிருந்தால் என் தவறை மன்னித்துக் கொள் எனச் சொல்லிவிட்டு வான் வெளியில் பறந்தான். விபீஷணனுடன் அனலன், அனிலன், அரன், சம்பாதி ஆகிய நான்கு அமைச்சர்களும் உடன் சென்றனர். அண்ணன் இராவணன், நீ இங்கிருந்து போய்விடு. இல்லையேல் உன்னை கொன்று விடுவேன் என்று அச்சுறுத்தியதால் இலங்கையை விட்டுச் சென்று கொண்டிருந்தான். இனி என்ன செய்வதென்று தெரியாத விபீஷணன் இராமனிடம் தஞ்சமடைய புறப்பட்டனர்.

�� இப்படி விபீஷணன் சென்று கொண்டிருக்கும் போது மகேந்திர மலையில் வானரங்கள் அக்கரையில் தங்கியிருப்பதை பார்த்தான். பிறகு தன் அமைச்சர்களோடு இனி என்ன செய்யலாம் என ஆலோசித்தான். அவர்கள் அனைவரும் இராமரிடம் சென்று சரணடையலாம் என்றனர்.

பிறகு வீபிஷணனும் அவனுடைய அமைச்சர்களும் மகேந்திர மலையை அடைந்தனர். அங்கு இராமர் சீதையின் நினைவில் வாடிக் கொண்டிருந்தார். சீதையை நான் எவ்வாறு காண்பேன். இப்பெருங்கடலை நாம் எவ்வாறு கடக்க போகிறோம் என நினைத்து புலம்பிக் கொண்டிருந்தார். இலட்சுமணர் இராமருக்கு ஆறுதல் கூறினார். விபீஷணன், இப்பொழுது இரவு நேரமாகி விட்டதால் நாம் இச்சோலையில் தங்கி விட்டு, விடிந்ததும் இராமரை காண செல்லலாம் என்றான்.

�� பொழுது விடிந்தது. இராம, இலட்சுமணன், சுக்ரீவன் மற்றும் அனுமன் முதலிய வானர வீரர்கள் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். இராகவா! இராமா! எனக் கூறி கொண்டு இராமரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வானர வீரர்கள், விபீஷணனையும் அவனுடன் வரும் அமைச்சர்களையும் பார்த்தவுடன், அரக்கர்கள் இங்கே வந்துவிட்டார்கள். இவர்களை கொல்லுங்கள் எனக் கூச்சலிட்டுக் கொண்டு அவர்களை நோக்கி ஓடினர். சில வானர வீரர்கள் இவன் இராவணனாகத் தான் இருக்கக்கூடும் என கூறினர். சில வானர வீரர்கள் இராவணனுக்கு பத்து தலைகளும், இருபது கைகளும் இருக்கும். ஆனால் இவனுக்கு இரண்டு கைகள் தானே உள்ளது எனக் கூறினர். சில வானர வீரர்கள், இவர்களை பிடியுங்கள். இராமரிடம் கொண்டு சொல்வோம் என்றனர். சிலர் எச்சரிக்கையாக இருங்கள் இவர்கள் வானில் பறந்து சென்று விடுவார்கள் என்றனர்.

விபீஷணன் இராமரிடம் சரணடைதல்!

�� அனுமன் வானர வீரர்களின் கூச்சலைக் கேட்டு துமிந்தன், மயிந்தன் என்னும் இரு வீரர்களை அழைத்து, அங்கே! என்ன நடக்கிறது என அறிந்து கொண்டு வரும்படி கூறினான். பிறகு துமிந்தன், மயிந்தன் சென்று கூட்டமாய் நின்று கொண்டிருந்த வானர வீரர்களையெல்லாம் விலக்கிக் கொண்டு வந்திருப்பது யார் எனப் பார்த்தனர். அவர்கள் விபீஷணனின் அருகில் வந்து நன்றாக உற்று கவனித்தனர். பிறகு இவர்களை பார்த்தால் ஞானமும், அறநெறியும் உடையவர்கள் என்பதை தெரிந்து கொண்டனர். பிறகு விபீஷணனை பார்த்து, நீங்கள் யார்? எதற்காக இங்கு வந்துள்ளீர்கள்? எனக் கேட்டனர். விபீஷணன், நான் இராவணனின் தம்பி. நாங்கள் ரகு குலத்தில் பிறந்த இராமனின் திருவடியில் சரணடைய வந்துள்ளோம்.

�� நான் பிரம்மனின் பேரனான விபீஷணன் வந்துள்ளதாக இராமனிடம் சென்று கூறுங்கள் என்றான். நான் இராவணனிடம் அவன் செய்த தவறுகளை சுட்டிக்காட்டி திருத்திக் கொள்ளுமாறு அறிவுரை கூறினேன். ஆனால் அவன் என் மீது கோபங்கொண்டு, உயிர் பிழைத்து இங்கிருந்து ஓடி விடு. இல்லையேல் உன்னை கொன்று விடுவேன் எனக் கூறினான். ஆதலால் நாங்கள் இராமனிடம் சரணடைய வந்துள்ளோம் என்றான். பிறகு துமிந்தன், மயிந்தன் இராமனிடன் சென்று நடந்தவற்றை கூறினார்கள். விபீஷணன் தங்களிடன் சரணடைய வந்துள்ளான். அவர்கள் மிகுந்த கவலையுடன் காணப்படுகிறார்கள். இராவணன் அவர்களை விரட்டியடித்தாக கூறினார்கள். நாங்கள் அவர்களிடம் தங்களின் அனுமதியைப் பெற்று வருவதாக கூறிவிட்டு வந்துள்ளோம்.

�� அவர்களை இங்கே வர அனுமதிப்பதா? இல்லை இங்கு இருந்து அவர்களை விரட்டியடிப்பதா? தாங்கள் உத்தரவு அளித்தால் அதன்படி நடப்போம் என்றனர். இவர்கள் சொல்வதைக் கேட்ட இராமர், எந்த ஒரு முடிவும் எடுப்பதற்கு முன் மற்றவர்களிடம் ஆலோசிப்பது தான் சிறந்தது என எண்ணினார். இராமர் சுக்ரீவன் பார்த்து, சுக்ரீவா! விபீஷணன் அடைக்கலம் வேண்டி இங்கு வந்துள்ளான். அவனுக்கு அடைக்கலம் தரலாமா? இல்லை அவனை நிராகரித்து விடலாமா? எனக் கேட்டான். சுக்ரீவன், பெருமானே! விபீஷணன் நல்லவன் இல்லை. அவன்

இராவணனை பகைத்துக் கொண்டு நம்மை காட்டிக் கொடுக்கத் தான் இங்கு வந்துள்ளான். அவன் நம்மிடம் வஞ்சனை செய்ய தான் இங்கு வந்துள்ளான் என்றான்.

�� ஜாம்பவான், பெருமானே! பகைவர்களை நம்முடன் சேர்த்துக் கொள்ளுதல் கூடாது. இராவணன் அன்னை சீதையை யாரும் இல்லா நேரம் பார்த்து கவர்ந்து சென்றுள்ளான். இவனோ இராவணனின் தம்பி இவனை எப்படி நாம் நம்புவது? இவனை நாம் நிராகரிப்பது தான் சிறந்தது என்றான். இராமர், படைத்தலைவன் நீளனை பார்த்து உனது கருத்தை கூறுவாயாக என்றார். ஐயனே! அரக்கர்கள் மாய வேலைகள் செய்வதில் வல்லவர்கள். அரக்கர்களை நாம் ஒரு போதும் நம்பக் கூடாது. ஆதலால் நாம் விபீஷணனை நம்பக் கூடாது என்றான். அங்கதன், ஐயனே! தாங்கள் அனைத்தும் அறிந்தவர். அரக்கர்கள் தீய செயல்கள் செய்வதில் வல்லவர்கள். ஆதலால் நாம் அவர்களை நம்பக் கூடாது என்றான். இதேபோன்று மற்ற வானர வீரர்களும், விபீஷணனுக்கு தாங்கள் அடைக்கலம் தரக்கூடாது எனக் கூறினர்.

அனுமன் விபீஷணனை பற்றிக் கூறுதல்!

�� இராமர் அனுமனை நோக்கி, உனது கருத்தை கூறுவாயாக எனக் கேட்டார். அனுமன் இராமரை வணங்கி, எனது கருத்துப்படி விபீஷணனை தீயவன் என நான் கருதவில்லை. இங்கு உள்ள அனைவரும் விபீஷணனை நம்ப வேண்டாம் எனக் கூறினார்கள். இராவணன் அழிவது நிச்சயம் என்பதை உணர்ந்து தான் விபீஷணன் தங்களை அடைக்கலம் தேடி வந்துள்ளான். நம்மிடம் அடைக்கலம் என்று தேடி வருபவர்கள் நமக்கு தீங்கு செய்வார்களா? நான் இராவணனின் அரசவையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது, இராவணன் இவனை கொல்லுங்கள் என ஆணையிட்டான். அப்போது விபீஷணன், தூதர்களை கொல்வது பாவச் செயலாகும். இது நம் குலத்திற்கு இழிவாகும் எனக் கூறினான். நான் இலங்கையில் இரவு நேரத்தில் சீதையை தேடிக் கொண்டு போகும்போது விபீஷணனின் மாளிகைக்குச் சென்றேன். அரக்கர்கள் பலர் மாளிகையில் மது பாட்டில்கள் நிரம்பிக் கிடந்தன. ஆனால் விபீஷணனின் மாளிகையில் பூஜைக்குரிய பொருட்கள் நிரம்பிக் கிடந்தன. விபீஷணன் அரக்கர் குலத்தில் பிறந்திருந்தாலும் அவன் நற்குணத்தில் சிறந்தவன்.

�� அன்னை சீதை அங்கு பாதுகாப்பாக இருக்கிறார் என்றால் அதற்கு விபீஷணனின் மகள் திரிசடை தான் காரணம். தந்தையை போல திரிசடையும் நற்குணமுடையவள். அதனால் தான் அவள் அன்னைக்கு உறுதுணையாக உள்ளாள். இராவணன் தங்களால் அழியக் கூடியவன் என்பதை நன்றாக அறிந்து தான் தங்களை சரணடைய வந்துள்ளான். பகைவனிடம் இருந்து பிரிந்து வந்துள்ள விபீஷணனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பிறர் நம்மை ஏளனமாக அல்லவா நினைப்பார்கள். விபீஷணனை நாம் ஏற்றுக் கொள்வதன் மூலம் அரக்கர்களின் மாய வேலைகள் பற்றி நாம் தெரிந்துக் கொள்ளலாம். அனுமன் சொன்னதை கேட்ட இராமர், நல்லது சொன்னாய் என அனுமனை பாராட்டினார். பிறகு இராமர் அனைவரையும் பார்த்து, அனுமன் சொல்வது தான் சரி. விபீஷணன் நம்மை நோக்கி வந்த காலமும் நமக்கு ஏற்ற காலம் தான். நம்மிடம் அடைக்கலம் தேடி வருபவர்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

�� இந்த தருணத்தில் சில வரலாற்றைக் கூறுகிறேன். சிபிச் சக்ரவர்த்தியின் புகழ் தேவலோகத்தை எட்டியது. தேவேந்திரன் சிபியைச் சோதித்துப் பார்க்க அக்னி பகவானை அழைத்துக்கொண்டு பூமிக்கு

வந்தான். இந்திரன் ஒரு கழுகு வடிவத்திலும், அக்னி ஒரு புறா வடிவத்திலும் வந்து சேர்ந்தார்கள். புறாவைத் துரத்திக்கொண்டு கழுகு பறந்து வந்து சிபிச் சக்ரவர்த்தியின் அரண்மனையில் விழுந்தது. அந்த புறாவை கவ்வி கொண்டு போக முயன்றது கழுகு. இதைப் பார்த்த சிபி அதைத் தடுத்தான். கழுகு, அரசனே! அந்தப் புறா என்னுடைய பசியைத் தீர்க்கவேண்டிய இரையாகும். புறாவைக் கீழே விடு என்றது. அதற்கு சிபி கழுகிடம், உனக்கு என்ன வேண்டுமோ கேள். அதை நான் உனக்குத் தருகிறேன். ஆனால் புறாவை விட்டுவிடு என்று கூறினார்.

�� அரசே! புறாவின் எடையளவு மாமிசம் எனக்கு வேண்டும். அது மனித மாமிசமாக இருந்தாலும் பரவாயில்லை என்றது கழுகு. அதற்கு ஒப்புக் கொண்ட சிபி, உனக்குத் தேவையானது புறாவின் எடையளவு மாமிசம் தானே! அதை நான் என் உடலிலிருந்தே வெட்டித் தருகிறேன் என்று கழுகிடம் கூறினார். ஒரு தராசின் ஒரு தட்டில் சிபி அந்தப் புறாவை வைத்து மறு தட்டில் தன் உடலிலிருந்து சிறு பகுதியைச் செதுக்கி எடுத்து வைத்தான். புறா அமர்ந்த தட்டு இறங்கவில்லை. எவ்வளவு வெட்டி வைத்தாலும் புறாவின் தட்டுக்குச் சமமாக முடியவில்லை. கடைசியில் சிபி கழுகைப் பார்த்து, நானே தட்டில் ஏறி அமர்ந்து கொள்கிறேன் என்று கூறிவிட்டுத் தட்டில் ஏறி அமர்ந்தான். உடனே புறா இருந்த தட்டு சமநிலையில் இறங்கிவிட்டது. உடனே கழுகு இந்திரனாகவும், புறா அக்னி தேவனாகவும் மாறினார்கள். உன்னுடைய கருணையையும் கொடைத் தன்மையையும் புரிந்துகொண்டோம் என்று வாழ்த்தி மறைந்தார்கள்.

�� இராமர், உங்களுக்கு நான் மற்றொரு வரலாற்றையும் கூறுகிறேன். ஒரு வேடன் காட்டில் வேட்டையாடச் சென்றான். அக்காட்டில் ஆண் புறாவும், பெண் புறாவும் அன்புடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் ஆண் புறாவுக்கு உடல் நலம் சரி இல்லாமல் போனது. ஆதலால் பெண் புறா நான் தனியாக சென்று இரைக் கொண்டு வருகிறேன் என்றது. ஆண் புறா, நீ இரையை தேடி வெகு தூரம் செல்லாமல் சீக்கரம் வந்து விடு என்று கூறி அனுப்பியது. வேடன் மரத்தடியில் பொரிகளை போட்டு வலையை விரித்து வைத்திருந்தான். இதை அறியாத பெண் புறா இரையை எடுக்கப் போய் வலையில் மாட்டிக் கொண்டது. பிறகு அவ்வேடன் பெண் புறாவை தன் கூட்டில் அடைத்துக் கொண்டு, விலங்குகளை வேட்டையாடச் சென்றான். இரவு சூழ்ந்தது. இடியும், மின்னலுமாக மழை பெய்ய தொடங்கியது. வேடன் குளிரும், பசியும் தாங்க முடியாமல் ஆண் புறா இருக்கும் மரத்தடிக்கு வந்தான். பசியால் வேடன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

�� ஆண் புறா வெகு நேரம் ஆகியும் பெண் புறாவை காணாததால் மிகவும் வருத்தத்தில் இருந்தது. ஆண்புறா மரத்தின் கிளையில் அமர்ந்து கொண்டு வேடனின் கூண்டில் அடைபட்டிருந்த பெண் புறாவைக் பார்த்து ஒலி எழுப்பியது. அதற்குப் பெண் புறா நான் இங்கு சிறைப்பட்டு விட்டேன். இவ்வேடன் என்னை ஏமாற்றி வலை வைத்து என்னை பிடித்துக் கொண்டான். நம் வீட்டை நோக்கி வந்து விட்ட இந்த வேடன் குளிரால் நடுங்குகிறான். இவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வாயாக என்று கூறியது. பிறகு ஆண்புறா, உன்னை இப்பிறப்பில் காண முடியாமல் போய் விடுமோ? என எண்ணினேன். ஆனால் கடவுளின் கருணையால் உன்னை பார்த்து விட்டேன் என்றது. பிறகு ஆண் புறா, வேடனின் குளிரைப் போக்க, உலர்ந்த சுள்ளிகளைப் போட்டு தீமூட்டியது. பின் வேடன் பசியால் மிகவும் தவித்தான்.

�� உடனே ஆண் புறா, வேடனைப் பார்த்து, வேடனே இந்த ஆலமரமும் நானும், உன் கூண்டில் அகப்பட்டிருக்கும் என் மனைவியும் வாழும் இடமாகும். எங்கள் இல்லம் தேடி வந்த நீ பசியோடு இருக்கக் கூடாது. ஆதலால் உன் பசி தணிய நீ என்னையே உண்டுக்கொள் என்று தீயில் விழுந்து மாண்டுபோனது. இதைப்பார்த்த வேடன், புறாவின் அன்பைக் கண்டு மெய்சிலிர்த்தான். இந்த புறாவுக்கு இருக்கும் நற்குணம்

நமக்கு இல்லையே என நினைத்து மிகவும் வருந்தினான். இனிமேல் நான் வேட்டையாட மாட்டேன் எனக் கூறிவிட்டு கூண்டில் இருக்கும் புறாவை விடுவித்தான். பெண் புறா, வேடனை பார்த்து, என் கணவனை இழந்து ஒரு போதும் என்னால் உயிர் வாழ முடியாது. உன் பசியை நீங்கிக் கொள்ள என்னையும் உண்டுக் கொள் என கூறி தீயில் விழுந்தது. வேடன் இப்புறாக்களின் அன்பைக் கண்டு அதிசயித்தான்.

�� பிறகு இராமர், தேவர்கள் பாற்கடலை கடைந்தப் போது அதில் ஆல கால விஷம் தோன்றியது. ஆலகால விஷத்தின் கடுமை தாங்க முடியாமல் தேவர்களும், அசுரர்களும் சிவபெருமானிடம் முறையிட்டு வேண்ட சிவனும் அந்த விஷத்தை அப்படியே எடுத்து உண்டார். விஷம் முழுமையாக இறைவனின் வயிற்றில் இறங்கினால் எங்கே இறைவனிற்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விடுமோ என அஞ்சிய அன்னை பார்வதிதேவி இறைவனின் கண்டத்தை அழுத்த விஷமானது கழுத்திலேயே தங்கி விட்டது. அன்று முதல் இறைவனும் திருநீலகண்டர் என்று அழைக்கப்பட்டார். இதை நாம் மறக்கலாமா? அது மட்டுமின்றி இராவணன் சீதையை கவர்ந்து சென்றபோது, சீதையின் அலறலைக் கேட்டு ஜடாயு இராவணனிடம் போரிட்டு, சிவன் வாளினால் தன் உயிரை மாய்த்தார். அத்தகைய ஜடாயுவின் கருணை திறத்தை நாம் மறக்கலாமா? விபீஷணனுக்கு அடைக்கலம் தருவதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் எதுவாக இருந்தாலும் அவனை நாம் ஏற்றுக் கொள்வது தான் நம் கடமை என்றார் இராமர்.

விபீஷணன் முடிசூட்டுதல்!...

�� இராமர், விபீஷணனுக்கு ஏன் அடைக்கலம் தர வேண்டும் என்பதற்கு உங்களுக்கு போதுமான விளக்கம் தந்துவிட்டேன் என்றார். பிறகு இராமர் சுக்ரீவனை அழைத்து, சுக்ரீவா! நீ சென்று வீபிஷணனை என்னிடம் அழைத்து வா என்றார். சுக்ரீவன் விபீஷணன் இருக்கும் இடத்திற்கு சென்றான். சுக்ரீவன் விபீஷணனை கட்டித் தழுவிக் கொண்டான். பிறகு சுக்ரீவன் மகிழ்ச்சியோடு இராமர் உன்னை அழைத்து வர என்னை பணித்துள்ளார் எனக் கூறினான். இதைக் கேட்ட விபீஷணன், இராமர் இருக்கும் இடத்தைப் பார்த்து தொழுதான். பிறகு விபீஷணன், சீதையை கவர்ந்து சென்ற இராவணனின் தம்பி என தெரிந்தும் எனக்கு அடைக்கலம் கொடுக்க சம்மதித்தாரா? சிவபெருமான் நஞ்சை உண்டு நீலகண்டனாக மாறி பெருமை அடைந்தார். அதேபோல் இன்று இராமர் என் மீது காட்டிய கருணையால் பெருமை அடைந்தேன் என்றான்.

�� பிறகு சுக்ரீவன் விபீஷணனை அழைத்துக் கொண்டு இராமர் இருக்கும் இருப்பிடத்திற்கு சென்றான். அங்கு விபீஷணன் இராமரை பார்த்து பரவசமடைந்து இராமரின் காலில் விழுந்து வணங்கினான். இராமர் விபீஷணனை இருக்கையில் அமரக் கூறினார். விபீஷணன், இராவணன் என்னை வெறுத்து ஒதுக்கியதும் நன்மை தான். அதனால் தேவர்கள் எவருக்கும் கிடைக்காத தங்களின் திருவடி எனக்கு கிடைத்தது என்றான். பிறகு இராமர் விபீஷணனிடம், விபீஷணா! இன்று முதல் நீ எனக்கு தம்பி ஆவாய். தசரத சக்ரவர்த்திக்கு நான்கு புதல்வர்கள். குகனுடன் ஐந்து புதல்வரானார்கள். சுக்ரீவனுடன் ஆறு புதல்வரானார்கள். இன்று உன்னுடன் ஏழு புதல்வர்கள். இன்று முதல் எனக்கு ஏழு சகோதரர்கள். எனது பெயர் இவ்வுலகில் வாழும் நீ கடல் சூழ்ந்த இலங்கை நகரை ஆட்சி புரிவாயாக எனக் கூறி அருளினார்.

�� இராமர் கூறியதைக் கேட்ட விபீஷணன், இராமரை போற்றி வணங்கினான். பிறகு இராமர் தன் தம்பி இலட்சுமணரை அழைத்து, இலங்கையின் அரசனாக விபீஷணனுக்கு முடிசூட்ட பணித்தார். விபீஷணன் இராமரிடம், இராவணனின் தம்பியாகிய என் பாவங்கள் நீங்க, தங்களின் பாதுகைகளால் எனக்கு முடிசூட்டுவாயாக எனக் கேட்டான். விபீஷணன் கேட்டுக் கொண்டபடி, இராமனின் பாதுகைகளால் விபீஷணனுக்கு முடிசூட்டப்பட்டது. பிறகு விபீஷணன் பாதுகைகளை

தலையில் வைத்துக் கொண்டு இராமரை மகிழ்ச்சியோடு வலம் வந்தான். இதைப் பார்த்த அனைவரும் மகிழ்ச்சி கடலில் திளைத்தனர். பிறகு இலட்சுமணன் விபீஷணனை அழைத்துக் கொண்டு தன் படைகள் தங்கியிருக்கும் இடங்களை காண்பிக்கச் சென்றான்.

�� அன்றிரவு வந்தது. இராமர் சீதையை நினைத்து மிகவும் வருந்திக் கொண்டு இருந்தார். இதைப் பார்த்த சுக்ரீவன் இராமரிடம், நாம் செய்ய வேண்டிய செயல்கள் நிறைய இருக்க தாங்கள் ஏன் வருந்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றான். பிறகு இராமர் விபீஷணனை அழைத்து வரச் சொன்னார். இராமர் விபீஷணனை அமர வைத்து, இலங்கை நகரின் அரக்கர்கள், அதன் காவல்கள் பற்றி சொல்லுமாறு கேட்டார். விபீஷணன், ஆதிஷேஷனுடன் நடந்த பல பரீட்சையின் போது மேருகிரி மலையில் இருந்து சிதறடித்த மலை நகரமே இலங்கை நகரமாகும். இலங்கை நகரின் நான்கு வாயில்களிலும் கோடிக்கணக்கான அரக்கர்கள் காவல் புரிகின்றனர். மதிலின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் ஆயிரம் கோடி பேர் உறக்கமின்றி காவல் புரிந்து வருகின்றனர். இலங்கை அரண்மனையின் வாயிலை கண் இமைக்காமல் அரக்கர்கள் அறுபத்திநான்கு கோடி பேர் காவல் புரிகின்றனர் என்றான்.

விபீஷணன் இராவணனைப் பற்றி கூறுதல்!

�� விபீஷணன், இராவணனின் படைகளின் எண்ணிக்கை ஆயிரம். இராவணனுடன் இருக்கும் அரக்கர்கள் பலம் பொருந்தியவர்கள். அங்கிருக்கும் மிகவும் பலம் பொருந்திய வீரர்களை பற்றி கூறுகிறேன். முதலில் இராவணன் மற்றும் அவனின் சகோதரர்களை பற்றி கூறுகிறேன் என்றான்.

�� இராவணன், பிரம்மனும், சிவனும் இவனுக்கு அரிய பெரிய வரங்களை அளித்திருக்கின்றனர். குபேரனை தோற்கடித்து அவனுடைய நகரத்தைக் கைப்பற்றியவன். வருணனை வென்றவன். இவன் மலைகள் போல வலிமையை உடையவன். கும்பகர்ணன் இராவணனின் தம்பி. இவன் தேவர்களை ஓட ஓட விரட்டிய பெரும் வீரன் ஆவான். இவன் இந்திரனின் ஐராவதத்தின் கொம்புகளையே தன் ஆயுதமாகக் கொண்டு தேவர்களை அழித்தவன். இவன் தன் வாழ்நாளில் பெரும்பகுதி தூக்கத்தில் ஆழ்ந்திருப்பவன். மற்ற நாட்களில் இவன் உண்ணும் உணவும் மலையளவு இருக்கும். இந்திரஜித், இராவணனின் மூத்த மகன். இவன் சூரிய சந்திரரை சிறையில் அடைத்தவன். இந்திரனை தோற்கடித்து போரில் வென்றவன். அதிகாயன் இராவணனின் இரண்டாவது மகன். இவன் பிரம்மன் கொடுத்த வில்லை உடையவன். இவன் இந்திரஜித்துக்குத் தம்பி. இவர்கள் இராவணனுடைய பெருமை மிக்கப் புதல்வர்கள்.

�� கும்பன் ஆயிரம் யானைகளுக்கும், குதிரைகளுக்கும் இணையான வலிமையும், வீரமும் உடையவன். சூரியனின் வெப்பத்தைக் காட்டிலும் மிகவும் கொடிய வீரன் ஆவான். அடுத்தது அகம்பன் இவன் தவமிருந்து போர் புரிபவன். இவன் நரசிம்ம மூர்த்தியைப் போன்றவன். நிகும்பன் மலைகளைக் காட்டிலும் வலிமை உடையவன். மகோதரன் என்பவன் வஞ்சனையும் மற்றும் மாயையும் செய்து போர் புரிபவன். பகைஞன் என்பவன் மலைவாழ் வீரன் ஆவான். இவன் பெரும்படைக்குத் தலைவன். இவன் தேவர்களை பலமுறை போரில் தோற்கடித்தவன். சூரியன் பகைஞன் என்னும் மற்றொருவன் அனைவரையும் வெல்லக்கூடிய வலிமையுடையவன். பெரும்பக்கன் என்பவனை முனிவர்களும் நேராக பார்க்க பயப்படுவார்கள். வச்சிரதந்தன் என்பவன் எட்டு கோடி சேனைக்கு அதிபதி ஆவான். பலரும் இவனிடம் போரிட அஞ்சுவார்கள்.

https://telegram.me/aedahamlibrary

�� பிசாசன் என்பவன் பகைவரைக் கண்டு அஞ்சாதவன். இவன் பத்து கோடி சேனைகளுக்கு தலைவன் ஆவான். துன்முகன் என்பவன் பதினான்கு கோடி காலாட்படைக்குத் தளபதி. பூமியையும் தகர்த்து எறியும் ஆற்றல் உடையவன். விரூபாட்கன் என்பவன் வாட்போரில் வல்லவன். தூமாட்சன் என்பவன் மாண்ட வீரர்களின் உடலைத் திண்பவன். தேவர்களையும் தோற்கடிக்கும் வல்லமை உடையவன். போர்மத்தன், வயமத்தன் ஆகிய இவ்விருவரும் மிகவும் வலிமை படைத்தவர்கள். கடல் போன்று இருக்கும் படைகளுக்கு இவர்கள் அதிபர்கள். பிரகஸ்தன் என்பவன் இராவணனுக்கு போர்த்தொழிலில் துணை புரிபவன். இந்த பிரகஸ்தன் இராவணனின் படைத்தளபதி ஆவான். இந்திரனின் ஐராவதம் என்னும் யானை உள்ளிட்ட அனைத்துப் படைகளையும் அஞ்சி ஓடச் செய்யும் வல்லமை உடையவன். இவ்வளவு பெரும்படை உடைய இராவணனை தங்களை தவிர வேறு எவராலும் அழிக்க முடியாது என்றான்.

�� பிறகு விபீஷணன், இராமா! அனுமன் இலங்கைக்கு வந்த போது ஆற்றிய வீர தீரச் செயல்களை பற்றி கூறுகிறேன் என்றான். அசோகவனத்தில் ஏராளமான அரக்கர்கள் அனுமன் கையால் மாண்டனர். அனுமன் இட்ட தீயினால் இலங்கை மாநகரமே எரிந்து சாம்பலானது. கிங்கரர் எனும் அரக்க போர் வீரர்களை அனுமன் தனித்து நின்று கொன்று குவித்தான். ஜம்புமாலி எனும் வலிமை வாய்ந்த அரக்கனும் அவனுடைய படைகளையும் மாபெரும் வீரர்களான பஞ்ச சேனாதிபதிகளைக் கொன்றான். இராவணனின் இளைய மகனான அக்ஷயகுமாரனை கொன்றான். இராவணனை தடுமாற வைத்தது அக்ஷயகுமாரனின் மரணம் தான். அனுமனால் தாக்கப்பட்டு இலங்கையில் இறந்த அரக்கர்கள் எண்ணில் அடங்காதவை. இப்பொழுது எரிந்து போன இலங்கை நகரை இராவணன் புதுப்பித்து விட்டான் என்றான்.

இராமரின் கோபம்!...

�� விபீஷணன், அனுமனின் வீரச் செயல்களையும், வலிமையையும் கண்டு நான் அடைக்கலம் புகவேண்டியது தங்களிடம்தான் என்பதை உணர்ந்து இங்கு வந்தேன் என்றான். இதைக் கேட்ட இராமர், அனுமனை கருணையோடும், அன்போடும் பார்த்து, வலிமைமிக்க வீரனே! விபீஷணன் சொல்வதிலிருந்து நீ பாதி இலங்கை நகரை அழித்துவிட்டு வந்துள்ளாய் என்பது தெரிகிறது. நீ இலங்கை நகரை தீயிக்கு இரையாக்கிவிட்டு வந்துள்ளாய். என் வில்லின் திறமையை உலகம் அறிய வேண்டும் என்று தான் சீதை அங்கேயே விட்டு வந்துள்ளாய். இதற்கு பரிசாக உனக்கு நான் செய்ய வேண்டும் என்று தெரியவில்லை? பிரம்மதேவரின் ஆட்சி காலம் முடிந்தபின் பிரம்மராக ஆட்சி புரிவாய் என்று பிரம்மபதத்தை பரிசாக வழங்கினார். இராமர் கூறியதைக் கேட்ட அனுமன், இராமரின் திருவடியில் விழுந்து வணங்கி, புகழின் நாணத்தால் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து நின்றான். இதைப் பார்த்த சுக்ரீவன் மற்றும் மற்ற வானர வீரர்கள் மகிழ்ச்சி கடலில் திளைத்தனர்.


�� பிறகு இராமர், இப்பெருங்கடலை வானரங்களுடன் கடந்து இலங்கை செல்வதற்கு ஏதேனும் வழி உள்ளதா? என யோசித்துக் கொண்டு கடலுக்கு அருகில் வந்து நின்றார். இராமர் விபீஷணனை பார்த்து இக்கடலை கடப்பதற்கு ஏதேனும் வழி உள்ளதா எனக் கேட்டார். விபீஷணன், பெருமானே! வருணனை வேண்டிக் கேட்டால் நிச்சயம் ஏதாவது வழி கிடைக்கும் என்றான். பிறகு இராமர், கடலுக்கு அருகில் சென்று, தர்ப்பைப் புற்களை அடுக்கி அதன்மேல் நின்று கொண்டு, ஏழு நாட்கள் வருண ஜபம் செய்தார். ஏழு நாட்கள் வருண ஜபம் செய்தும் வருணன் வந்து தோன்றவில்லை. இதனால் இராமர் பெருங்கோபம் கொண்டார். உடனே இராமர் தன் கோதண்டத்தை வளைத்து நாணை பூட்டிய அம்பில் தீயை மூட்டி கடலை நோக்கி எய்தினார். இந்த தீயினால் கடலில் இருந்த மீன்கள் முதலிய விலங்குகள் மிகுந்த துன்பத்திற்கு ஆளாயின. இதைப் பார்த்துக் கொண்டிருந்த இலட்சுமணன் முதலிய வானர வீரர்கள் இனி என்ன நடக்குமோ என அச்சத்தில் இருந்தனர்.

�� அப்போதும் வருணன் அங்கு வந்து தோன்றவில்லை. இதனால் இராமரின் கோபம் இன்னும் அதிகமானது. இராமர் பிரம்மாஸ்திரத்தை நாணில் மூட்டி கடலை நோக்கி எய்த ஆயத்தமானார். இதனைப் பார்த்து உலகமே நடுங்கியது. தேவர்கள் முதலானோர் மிகவும் வருந்தினர். அப்போது வருணன் கடல் வழியே வந்து இராமரின் திருவடியில் விழுந்து

வணங்கி, அடியேன்! செய்த பிழையை மன்னித்தருள வேண்டும் என வேண்டினார். இராமர் கோபம் தணிந்து, நான் இவ்வளவு நேரம் பணிந்து வேண்டியும் வராததற்கு காரணம் என்ன? என்று கேட்டார். வருணம், பெருமானே! கடலில் மீன்களுக்கிடையே போர் நடந்து கொண்டிருந்தது. நான் அவர்களை சமாதானம் செய்து கொண்டிருந்தேன். அதனால் தான் தங்களின் அழைப்பை நான் கவனிக்க மறந்துவிட்டேன். ஆதலால் பெருமானே! இந்த சிறியேன் செய்த பிழையை மன்னித்தருள வேண்டும் என வேண்டினார்.

�� இராமர் இதனைக் கேட்டு, வருணனே நான் உன்னை மன்னித்து விடுகிறேன். நான் இப்பொழுது நாணில் பூட்டிய பிரம்மாஸ்திரத்தை ஏதாவது இலக்கில் செலுத்த வேண்டும். எதன் மீது பிரம்மாஸ்திரத்தை செலுத்தலாம் எனக் கூறு என்றார். வருணன், பெருமானே! மருகாந்தாரம் என்னும் தீவில் வாழும் நூறு கோடி அரக்கர்கள் உலக மக்களுக்கு அழிவு செய்து வருகிறார்கள். ஆதலால் இந்த பிரம்மாஸ்திரத்தை மருகாந்தாரம் தீவில் ஏவி அங்கு வாழும் அரக்கர்களை வதம் செய்யுங்கள் என்றார். உடனே இராமர், மருகாந்தாரம் தீவை பார்த்து பிரம்மாஸ்திரத்தை எய்தினார். அத்தீவு கணப்பொழுதில் அழிந்துவிட்டது. பிறகு இராமர் வருணனை பார்த்து, நாங்கள் அனைவரும் கடலை கடந்துச் செல்ல வழி உண்டாக்கி தர வேண்டும் எனக் கேட்டார்.

இலங்கை செல்ல அணை கட்டுதல்!...



�� வருணன், பெருமானே! தாங்கள் கடல் தாண்டிச் செல்ல, கடலை வற்றச் செய்வதற்கு நான் காரணமாக இருக்கக் கூடாது. தாங்கள் செல்வதற்கு கடல் நீரை திடம் ஆக்கினாலும் கடலில் உள்ள உயிரினங்கள் துன்பப்படும். இதற்கு வேறொரு வழியும் உண்டு. என் மீது அணைக்கட்டினால் தாங்கள் அனைவரும் கடல் தாண்டிச் செல்லலாம். அணையில் தாங்கள் இடும் குன்றுகளையும், பாறைகளையும், மலைகளையும் மூழ்கிவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். இராமர், வருணனை பார்த்து, நல்லதொரு யோசனை சொன்னாய் என்று வருணனை பாராட்டினார். பிறகு வானர சேனைகளை அழைத்து, குன்றுகளை கொண்டு வந்து கடலில் மேல் அணைக் கட்டுங்கள் என பணித்தார். இராமர், சுக்ரீவனிடமும், விபீஷணனிடமும், அணைக் கட்டுவதற்கான வேலையை முன்னின்று யாரை செய்யச் சொல்வது என

ஆலோசனை நடத்தினார்.

�� அவர்கள் நளன் தான் அணைக்கட்ட தகுதியானவன் என தீர்மானித்து நளனை அழைத்து வரச் சொன்னார்கள். நளன் அங்கு வந்து சேர்த்தான். இராமர், நளனிடம் நீ அணையை திறம்பட கட்டி முடிக்க வேண்டும் என்றார். நளன் இராமரிடம், நான் அணையை திறம்பட கட்டி முடிக்கிறேன் எனக் கூறினான். அணையைக் கட்ட வானரங்கள் மலைகளும், குன்றுகளும் கொண்டு வர ஆரம்பித்தனர். சில வாரங்கள் மலைகளையும், பாறைகளையும் கால்களில் உருட்டிக் கொண்டும், சில வானரங்கள் கைகளால் சுமந்து கொண்டும் வந்தனர். அனுமன் ஒரே நேரத்தில் பல மலைகளும், குன்றுகளும், பாறைகளும் கொண்டு வந்து சேர்த்தான். வானரங்கள் மலைகளும், குன்றுகளும், பாறைகளும் கொண்டு வந்து கொடுக்க நளன் அதை தன் இடக்கையால் வாங்கி அணைக் கட்டினான். அனுமன் கொண்டு வந்து கொடுக்கும் மலைகளையும், குன்றுகளையும் நளன் தன் இடக்கையால் வாங்கி அணைக் கட்டினான்.

�� அமைச்சராக இருக்கும் என்னை மதிக்காமல் இடக்கையால் வாங்கி அணை கட்டுகிறானே என நளன் மீது கோபம் கொண்டான் அனுமன். உடனே அனுமன் தானே அணைக்கட்ட மலைகளை கடலில் சேர்த்தான். ஆனால் அம்மலைகள் கடலில் மூழ்கிவிட்டன. இதை தொலைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த இராமர், அனுமனை பார்த்து தொழிலில் பெரியவர், சிறியவர் என்று பார்க்கக் கூடாது. அதனால் நீ மலைகளை நளன் மூலமாகவே அணையில் சேர்ப்பாயாக என்றார். இதை பார்த்து கொண்டிருந்த இலட்சுமணர் இராமரிடம், அண்ணா! நளன் கையால் சேர்க்கின்ற மலைகளும் குன்றுகளும் நீரில் மூழ்காமல் மிதக்கின்றன. ஆனால் அனுமன் சேர்த்த பாறைகள் நீரில் மூழ்கிவிட்டன. அதற்கான காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு இராமர் தம்பி இலட்சுமணா, சூர்ய கிரகணம் நடக்கும் கிரகண காலத்தில் தெய்வத்தினை, குறித்து ஜபம் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் மடங்கு பலன் உண்டாகும்.

�� அதைவிட தண்ணீரில் மூழ்கி மந்திர ஜபம் செய்தால் ஒன்றுக்கு லட்சமாக, மடங்கு பலன் அதிகமாகும். ஒருமுறை மாதவேந்திரர் என்ற மகரிஷி , கானகத்தில் சூர்ய கிரகணம் அன்று நீரில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நளன் குட்டி வானரமாக இருந்தது. குரங்குகளுக்குச் சேட்டை செய்வது என்பது பிடித்தமான ஒன்று. அப்படி குரங்குகள், நீரில் தவம் செய்து கொண்டிருந்த முனிவரை பார்த்தனர். உடனே வானரங்கள் முனிவர் மீது கற்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தது. முனிவர் தவத்தை விட்டு எழுந்து வந்து குரங்குகளை

விரட்டி விட்டு மீண்டும் நீரில் மூழ்கி தவம் செய்தார். முனிவர் பலமுறை நளன் என்ற அந்த குட்டிக் குரங்கை விரட்டியும், குட்டிக் குரங்கு கல்லை எறிந்து கொண்டே தான் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

�� ஜபம் செய்யும் பொழுது கோபம் கொண்டு சாபம் விட்டால் ஜபசக்தி குறைந்து விடும். அதனால் முனிவர் குரங்குக்கு சாபம் கொடுக்காமல், இக்குரங்கு எரியும் கற்கள் தண்ணீருக்குள் மூழ்காமல் மிதக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு தண்ணீருக்குள் ஜபம் செய்ய தொடங்கினார். நளன் என்னும் குரங்கு தான் எறியும் கற்கள் மூழ்காமல் மிதப்பதினால் விளையாட்டில் ஆர்வம் இல்லாமல், அங்கிருந்து சென்று விட்டது. அந்த சாபத்தின் நன்மையால் தான், நளன் இடுகிற கற்கள் தண்ணீரில் மூழ்காமல் மிதக்கின்றன என்றார் ராமர். இவ்வாறு வானரங்கள் இரவு பகலாக வேலை செய்து ஐந்து நாட்களில் அணையைக் கட்டி முடித்தனர். அணை கட்டி முடிக்கப்பட்ட செய்தியை அறிந்ததும் இராமர் அவர்களை கட்டி தழுவி பாராட்டினார். கட்டி முடித்த அணையின் அழகைக் கண்டு இராமர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

�� அதற்கு பரிசாக நளனை கௌரவிக்கும் விதமாக வருண பகவான் தனக்கு முன் கொடுத்த நவரத்தின மாலையை நளனுக்குப் பரிசாக வழங்கினார். பிறகு அனைவரும் அங்கிருந்து இலங்கை நோக்கி செல்ல ஆயத்தமாகினர். வானரங்கள் பயணத்திற்கு தேவையான உணவு பொருட்களை சேகரித்து கொண்டனர். வானர சேனைகள் அணிவகுத்து புறப்பட்டன. சுக்ரீவனின் விருப்பப்படி அனுமன் இராமரையும், அங்கதன் இலட்சுமணரையும் தூக்கிக் கொண்டு சென்றான். இராமரும், வானர வீரர்களும் இலங்கை தீவை அடைந்தார்கள். அங்கு அவர்கள் ஒரு குன்றின் அடிவாரத்தில் தங்கினார்கள். சுக்ரீவனின் கட்டளைப்படி நளனும், நீலனும் தங்குவதற்கான பர்ணசாலையை அமைத்தனர். அன்றிரவு இராமர் சீதையை நினைத்து மிகவும் வருந்திக் கொண்டு இருந்தார்.

�� அப்பொழுது இராவணனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் சுகன், சாரணன் என்னும் இரண்டு அரக்கர்கள் இவர்களை அறிந்து கொள்ளும் வகையில் வானர உருவம் கொண்டு அங்கு வந்தனர். இவர்களை அடையாளம் கண்டுகொண்ட விபீஷணன், இவர்களை அடித்து, உதைத்து கயிற்றால் கட்டிக்கொண்டு இராமர் முன் நிறுத்தினான். இராமர், இவர்கள் வானரங்கள் என நினைத்து விபீஷணனை பார்த்து, தம்பி விபீஷணா! இவர்கள் என்ன தவறு செய்தார்கள்? இவர்களை ஏன் கயிற்றால் கட்டிக்கொண்டு வந்துள்ளாய்? என வினவினார். விபீஷணன், பெருமானே! இவர்கள் வானரங்கள் இல்லை. இராவணனால் ஏவப்பட்ட

அரக்கர் குலத்தைச் சார்ந்த ஒற்றர்கள். இவர்கள் பெயர் சுகன், சாரணன். இவர்கள் நம்மை ஆராய்ந்து பார்க்க வந்துள்ளார்கள். உடனே அந்த ஒற்றர்கள், பெருமானே! நாங்கள் ஒன்றும் அரக்கர் குலத்தைச் சார்ந்த ஒற்றர்கள் இல்லை.

�� தங்கள் முன் நிற்கும் இந்த விபீஷணன் கபட நாடகமாடி தங்களை போரில் தோற்கடிக்க திட்டமிட்டுள்ளான். நாங்கள் உண்மையில் வானர வீரர்கள் என்று நாடகமாடினார்கள். விபீஷணன், இவர்களின் இந்த நாடகத்தை நிறுத்த ஒரு மந்திரத்தை உச்சரித்தான். பிறகு அவர்கள் சுய உருவத்தில் (அரக்க) தோன்றினார்கள். இவர்கள் இராவணனின் ஒற்றர்கள் என்பது உறுதியாகிவிட்டது என்றான் விபீஷணன். தன் சுய உருவத்தை பெற்ற அரக்கர்கள் இராமரை பார்த்து நடுங்கினார்கள். இராமர் அவர்களிடம், என்னை பார்த்து நீங்கள் அஞ்ச வேண்டாம். நீங்கள் இங்கு வருவதற்கான காரணம் என்ன என்று சொல்லுங்கள் என்றார். ஒற்றர்கள் இராமரை பார்த்து, வீரனே! சீதையை யாரும் இல்லாத நேரத்தில் கவர்ந்து வந்த இராவணனுக்கு அழிவு வந்துவிட்டது என்பதை உணராமல் தங்களை பற்றி வஞ்சனை செய்து ஒற்று பார்க்க அனுப்பினான் என்றார்கள்.

இராவணனின் மந்திர ஆலோசனை!...

�� இராமர் ஒற்றர்களை பார்த்து, ஒற்றர்களே! நான் சொல்வதை இராவணனிடம் சென்று சொல்லுங்கள். நான் இலங்கை நகர ஆட்சி பொறுப்பையும், வற்றாத செல்வத்தையும் விபீஷணனுக்கு வழங்கிவிட்டேன். அது மட்டுமின்றி கடல் நடுவில் இருக்கும் இலங்கைக்கு பாலம் கட்டிதான் நாங்கள் வந்துள்ளோம் என்பதையும், என்னுடன் ஒப்பற்ற வலிமை வாய்ந்த வீரர்களும் உடன் வந்துள்ளதாகவும் சென்று கூறுவாயாக. எங்களின் கடல் போன்ற வானர படை வீரர்கள் பற்றியும் சொல்வாயாக என்று கூறிவிட்டு அங்கிருந்து செல்வதற்கு வழிவகுத்து கொடுத்தார். அங்கு இராவணனின் அரண்மனையில் மந்திர ஆலோசனை கூடியது. அங்கு இராவணனின் பாட்டன் மாலியவான், இராவணனுக்கு அறிவுரை கூறினார். மாலியவான், இராமன் வீரத்தில் சிறந்தவன். இப்பொழுது அவர்கள் கடலில் அணைக்கட்டி இங்கு போர் புரிய வந்துவிட்டார்கள். ஆதலால் சீதையை கவர்ந்து வந்த நீ இராமனிடம் சென்று ஒப்படைத்து விடு. அது தான் உனக்கு நலம் என்றான்.

�� இதைக் கேட்ட இராவணன் பாட்டன் மீது கோபங்கொண்டு, தங்கள் ஆலோசனைக்கு மிக்க நன்றி. தங்களுக்கு இவ்வளவு பயம் இருந்தால் விபீஷணனுடன் சென்று சேர்ந்துக் கொள்ளுங்கள். என் கோபத்திற்கு ஆளாகாதீர்கள் என்றான். இதற்கு மாலியவான், உனக்கு நன்மை சொல்வதில் ஒரு பயனும் இல்லை. நல்ல விஷயங்கள் சில நேரத்தில் கசக்கத் தான் செய்யும் என்றான். ஆலோசனை கூட்டத்தில் இருந்தவர்களும் இராவணனின் பாட்டன் சொல்லிற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அப்பொழுது இராவணன் அனுப்பிய ஒற்றர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இராவணனை பார்த்து வணங்கினார்கள். இராவணன் ஒற்றர்களிடம், ஒற்றர்களே! நீங்கள் அங்கு சென்று இராம இலட்சுமணரின் திறமை, வானர வீரர்களின் படை வலிமையும் திறமையும், அங்கு விபீஷணன் இருக்கும் நிலையை பற்றியும் நீங்கள் கண்டதை கூறுங்கள் என்றான்.

�� பிறகு ஒற்றர்கள், அரசே! இராமன் கடலின் மேல் அணைக்கட்டி இங்கு வந்து சேர்ந்துவிட்டான். வானரங்களின் படைகளின் அளவை எங்களால் காண இயலவில்லை. பிறகு நாங்கள் வானரங்கள் உருவம் மாறி சென்றதை விபீஷணன் கண்டுபிடித்து விட்டான். பிறகு அவன் எங்களை இராமன் முன் நிறுத்தினான். இராமன் முன் நாங்கள் ஒற்றர்கள்

இல்லை என கூறினோம். ஆனால் விபீஷணன் நாங்கள் தங்களின் ஒற்றர்கள் தான் என்பதை நிரூபித்து விட்டான். இதை அறிந்த இராமர் தங்களிடம் சொல்லச் சொல்லி ஒரு செய்தியை அனுப்பியுள்ளான். இராமன், விபீஷணனை இலங்கையின் அரசனாக முடிசூட்டிவிட்டதாகவும், தன்னிடம் வலிமை வாய்ந்த வீரர்கள் உள்ளதாகவும் கூறினான். ஒற்றர்கள் கூறியதை கேட்ட இராவணன், ஆலோசனை கூட்டத்தை தொடர்ந்தான். இனி நாம் என்ன செய்யலாம் என அவையில் இருந்தவர்களிடம் ஆலோசனை கேட்டான்.

�� அப்போது படைத்தலைவன் எழுந்து, அரசே! இப்பொழுது நாம் சீதையை அவர்களிடம் ஒப்படைத்தால் நாம் அவர்களை கண்டு பயப்படுகிறோம் என எண்ணுவார்கள். மிகுந்த பலம் கொண்ட நம் படைகளை அழிக்க பல வருடங்கள் ஆகும் அவர்களுக்கு. அவர்களிடம் சமாதானம் பேச சென்றால் விபீஷணன் அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டான். ஆனால் நாம் விரைவில் படையெடுத்து அவர்களிடம் போர் புரிய சென்றால், நம் படைகளைக் கண்டு வானரங்கள் பயந்து ஓடி விடுவார்கள் என்றான். படைத்தலைவனின் யோசனையைக் கேட்ட இராவணன், சீதையின் காரணமாகத்தான் அவர்கள் என்னுடன் போர் புரிய வருகிறார்கள் என்றால், அதற்காக நான் சிறிதும் பின்வாங்க மாட்டேன். என் கையிலுள்ள அம்புகள் உலகம் அனைத்தையும் வென்ற புகழுடையவை. போர் என்றதும் எதிரியின் மார்பில் புகுந்து செல்லும் வலிமையுடையது. இந்த குரங்குகளிடம் நான் தோற்றுபோவேனா? என்றான் ஆவேசத்துடன்.

இராவணனின் தந்திர வேலை!...

�� இராவணன், மஹோதரன் என்பவனை அழைத்து, வேறு நல்ல ஒற்றர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அந்த ஒற்றர்களிடம் இராமனின் திட்டம், எங்கே, எப்போது, எந்த இடத்தில் இருந்து அவர்கள் தாக்கப் போகின்றார்கள்? மற்றும் இராம, இலட்சுமணனின் சாப்பாட்டு முறைகள், அவர்கள் செய்யும் ஆலோசனைகள் அனைத்தையும் அறிந்து வந்து சொல்லுமாறு பணித்தான். இராவணன் கூறியவாறே ஒற்றர்கள் மாறுவேடத்தில் இராமனின் இருப்பிடத்திற்கு சென்றனர். ஆனால் விபீஷணன் இந்த ஒற்றர்களையும் அடையாளம் கண்டு கொண்டான். உடனே விபீஷணன் இவர்களை, இராமர் முன் கொண்டுச் சென்று நிறுத்தினான். ஆனால் இராமர் இவர்களை விடுவிக்குமாறு கட்டளையிட்டார். ஆனால் வானரர்கள் இவர்களை விடாமல் துன்புறுத்தினர்.

�� ஒருவழியாக இவர்களிடமிருந்து தப்பித்த ஒற்றர்கள் இராவணனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர். மன்னரே! தாங்கள் சீதையை ஒப்படைத்து விடுங்கள், இல்லையெனில் நிச்சயம் யுத்தம் நடைபெறும் என்றார்கள். இதைக் கேட்ட இராவணன், சீதையை அவர்களிடம் அனுப்புவது என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றான். பிறகு அரண்மனைக்குள் சென்று மந்திர, தந்திரங்களில் தேர்ந்தவன் ஆன வித்யுத்ஜிஹ்வா என்பவனை அழைத்தான். அவனிடம் இராமனின் தலையைப் போல் ஒரு தலையை உருவாக்கிக் கொண்டு வர பணித்தான். அதனுடன் சிறந்த வில்லும், அம்புகளும் கூடவே கொண்டுவர பணித்தான். இராவணனின் கட்டளைப்படி வித்யுத்ஜிஹ்வா அவற்றை உருவாக்கி கொடுத்தான். இராவணன், வித்யுத்ஜிஹ்வா தன் கட்டளைப்படி செய்த இராமனின் தலை, வில் மற்றும் அம்புகளுக்காக பரிசளித்தான்.

�� பிறகு இராவணன் அவற்றை எடுத்துக் கொண்டு சீதை இருக்கும் அசோகவனத்தை நோக்கிச் சென்றான். தந்திரத்தால் சீதையின் மனதைக் கவரவேண்டும் என நினைத்து இராவணன் சீதையிடம் சென்று, ஏ, சீதா! நான் எவ்வளவோ சொல்லியும், இராமனின் நினைவாகவே இருந்த உனக்கு ஒரு துக்கச் செய்தியை சொல்கிறேன் கேள் என்றான். இராமனை நான் கொன்று விட்டேன். எந்த இராமனை நம்பி, நீ என்னை நிராகரித்தாயோ அந்த இராமன் யுத்தத்தில் கொல்லப் பட்டான்.

இனியாவது நீ என்னை ஏற்றுக் கொள். இதை தவிர உனக்கு வேறு வழி எதுவும் இல்லை என்றான். பிறகு இராவணன் இந்த யுத்தத்தை நேரில் பார்த்த வித்யுத்ஜிஹ்வாவை இங்கே வரச் சொல். போரில் கொல்லப்பட்ட இராமனின் குருதி வாய்ந்த தலையையும் கொண்டுவரச் சொல் என பணித்தான். வித்யுத்ஜிஹ்வா, இராவணன் சொன்னதை போல் கையில் வில், அம்புகளுடனும், அவனால் செய்யப்பட்ட போலி இராமர் தலையுடனும் அங்கே வந்து சேர்ந்தான்.

�� இராவணன், சீதையிடம், சீதா! வில்லைப் பார்த்தாயா? இது இராமனின் வில். மற்றும் இந்த தலையை பார்த்து தெரிந்துக் கொள் இராமன் இறந்து விட்டான். இனி நீ என் ஆசைக்கு இணங்குவதே நன்று எனக் கூறி விட்டு அங்கிருந்து சென்றான். சீதை, இராவணன் சொன்ன வார்த்தைகளை நம்பி, துக்கம் தாங்க முடியாமல் கதறி அழுதாள். என் கணவர் இல்லாத உலகத்தில் நானும் இருக்க மாட்டேன். என்னையும் கொன்று விடுங்கள் என கதறி அழுதாள். அப்பொழுது விபீஷணனின் மனைவி அங்கு, சீதா இதெல்லாம் இராவணனின் மாய செயல். இதை நீ நம்பாதே. நான் இராவணனின் மந்திர ஆலோசனை கூட்டத்திற்கு சென்று அங்கு என்ன நடக்கிறது என்பதை தெரிந்துவிட்டு வருகிறேன். அதுவரை நீ தைரியமாக இரு எனக் கூறிவிட்டுச் சென்றாள்.

சுக்ரீவன் இராவணன் மீது பாய்ந்து செல்லுதல்!...

��அன்றிரவு பொழுது கலைந்து சூரியன் உதித்தது. இராவணன் இராமனுடன் வந்திருக்கும் வானர படைகளின் அளவை கண்டறிய விரும்பினான். ஆதலால் அவன் இரம்பை, ஊர்வசி மற்றும் ஒற்றர்களுடன் கோபுரத்தின் மீது ஏறி நின்று வானர படையை நோக்கினான். வானர படையின் அளவைக் கண்டு போர் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தான். தூரத்தில் இராமர் நிற்பதையும் கண்டு மனதில் கோபங்கொண்டான். உடனே அங்கு ஒற்றனாகச் சென்ற சாரனை அழைத்து அதோ அங்கு கரிய நிறத்தில் நிற்பவன் தான் இராமன் என்பது தெரிகிறது. அருகில் நிற்கும் மற்றவர்கள் எல்லாம் யார்? என்பதை எனக்குச் சொல் என்றான். சாரன் இராமனுக்கு அருகில் நிற்கிறானே அவன் தான் இலட்சுமணன். தங்கள் தங்கை சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தவன். இவன் இராமனை இரவும் பகலும் கண் இமைக்காமல் காவல் புரிகிறான். அவன் பக்கத்தில் இருப்பவன் தான் சுக்ரீவன். வாலியின் சகோதரன். போரில் வாலியை தோற்கடித்தவன்.

�� அவன் அருகில் நிற்பவன் தான் அங்கதன். வாலியின் புதல்வன். வாலியை போலவும் மிகவும் வலிமை படைத்தவன். அங்கு மிகவும் பலசாலியாக இருக்கிறான் அல்லவா? அவன் தான் அனுமன். இலங்கைக்கு வந்து அரக்கர்களை கொன்று, நகரை தீமூட்டியவன். அனுமன் அருகில் நிற்பவன் தான் நீலன். இவன் பிறர் வியக்கும் அளவுக்கு ஆற்றல் மிக்கவன். இவனை காட்டிலும் சிறிது மாறுபட்டு இருப்பவன் தான் நளன். இவன் தான் இராமர் முதலிய வானரங்கள் கடலை கடந்து வருவதற்கு ஐந்து நாட்களில் கடலின் மேல் அணைக்கட்டியவன். அங்கு கரடி போல நிற்கிறான் அல்லவா? அவன் தான் கரடி இனத் தலைவன் ஜாம்பவான். அனைத்தையும் தன் அறிவால் உணரக்கூடிய ஆற்றலைப் பெற்றவன். உலகங்களை அழிக்கும் அளவிற்கு வலிமை உடையவன். இப்படி சாரன் வானர வீரர்களைப் பற்றி இராவணனிடம் கூறினான். பிறகு அவன் இந்த வானர படைகளின் ஆரம்பமும், எல்லையும் தெரியவில்லை என்றான்.

�� சாரன் கூறியதைக்கேட்ட இராவணன் கோபத்துடன் சிரித்தான். இராவணன் சாரனிடம் பேசிக் கொண்டிருப்பதை தூரத்தில் இருந்த விபீஷணன் பார்த்தான். உடனே விபீஷணன் இராமரிடன் சென்று, பெருமானே! அதோ! அரண்மனையின் மேல் கோபுரத்தில் நின்றுக்

கொண்டிருக்கிறான் அல்லவா? அவன் தான் இராவணன் என்றான். அவன் பக்கத்தில் இருப்பவர்கள் தேவலோகத்து பெண்களான இரம்பை, ஊர்வசி என்றான். இராவணனை பார்த்த சுக்ரீவன் இராவணன் மீது கோபங்கொண்டு வானத்தில் பாய்ந்து சென்று கோபுரத்தில் நின்று கொண்டிருந்த இராவணன் மீது பாய்ந்தான்.

எதிர்ப்பாராமல் இப்படி சுக்ரீவன் இராவணன் மேல் விழுந்ததை பார்த்த தேவலோகத்து பெண்கள் பயந்து அங்கிருந்து ஓடினர். இராவணன் சுக்ரீவனைப் பார்த்து எதற்காக இங்கு வந்தாய்? என்றான். அரக்கனே! உன்னை அழிக்க தான் இங்கு வந்துள்ளேன் என கூறி இராவணன் மீது பாய்ந்தான்.

�� சுக்ரீவனுக்கும் இராவணனுக்கும் இடையே கடும் போர் நிகழ்ந்தது. சுக்ரீவனால் தாக்கப்பட்ட இராவணன் வலியால் கத்தினான். பொறுமையிழந்த இராவணன் சுக்ரீவனை இரத்தம் சிந்தும் அளவிற்கு தாக்கினான். பலமாக உதைத்தான். இருவரும் கடுமையாக சண்டையிட்டார்கள். அங்கு இராமர், சுக்ரீவன் தனிமையில் நின்று போர் புரிவதை கண்டு மிகவும் வருந்தினார். சுக்ரீவா! நான் உன்னை இழந்து சீதையை மீட்டுச் செல்வது வெற்றியாகாது. பலம் பொருந்திய இராவணனை வெல்வது என்பது எளிதானது அல்ல. ஆதலால் நீ நிதானத்தை கடைப்பிடித்து இங்கு வந்துவிடு என மனதில் நினைத்துக் கொண்டு வருந்தினார். அப்பொழுது சுக்ரீவன், இராவணனின் ஒளி மிகுந்த கிரீடத்திலிருந்து மணிகளை பறித்துக் கொண்டு அங்கு வந்து நின்றான். சுக்ரீவனை கண்ட இராமர் நிம்மதியடைந்தார். பிறகு சுக்ரீவனை தழுவிக் கொண்டார்.

வானரங்கள் இலங்கையை சுற்றி வளைத்தல்!...


�� இராமர் சுக்ரீவனிடம், தம்பி சுக்ரீவா! பலம் பொருந்திய இராவணனிடம் நீ தனியாகச் சென்று போரிடலாமா? ஒருவேளை அவனால் உன் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருந்தால் நான் என்ன செய்வேன் எனக் கூறி வருந்தினார். பிறகு சுக்ரீவன், எனக்கு எம்பிராட்டி சீதையை கவர்ந்து சென்ற இராவணனை பார்த்தவுடன் அவனின் தலையை கொய்து வரச் சென்றேன். ஆனால் என்னால் இராவணனின் தலையை கொய்துவிட்டு வராமல் அவனின் மகுடத்தில் உள்ள மணிகளை கொண்டு வந்துள்ளேன் என்றான். இதனால் என்னுடைய செயல் சிறப்படையாதாகது எனக் கூறி வருந்தினான். இதைக் கேட்ட விபீஷணன், சுக்ரீவா, நீ வருந்தாதே! நீ செய்த செயல் மிகவும் அரிதானது. இராவணனின் மணிகளை பறிப்பது என்பது எளிதான செயல் அல்ல. நீ அவனின் உயிருக்கு மேலான மணிகளை அல்லவா கொண்டு வந்துள்ளாய். இதைக் காட்டிலும் வீரச் செயல் வேறு எதுவும் இல்லை என்றான். இராமரும் சுக்ரீவனின் செயலை வியந்து பாராட்டினார்.

�� அங்கு இலங்கையின் அரண்மனையில், இராவணன் தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் வருந்திக் கொண்டு இருந்தான். ஒரு குரங்கு தன்னை இவ்வளவு அவமானப்படுத்தியதை நினைத்து மனதில் புழுங்கினான். சுக்ரீவனால் ஏற்பட்ட அவமானம் அவன் மனதில் திரும்ப திரும்ப தோன்றியது. இதனால் தலைக்குனிந்த இராவணன் யாரிடமும் ஒன்றும் பேசாமல் தன் மாளிகைக்குச் சென்று படுத்துக் கொண்டான். அப்போது ஒரு வாயிற்காவலன் வந்து ஒற்றன் சார்த்தூலன் தங்களை காண வந்திருப்பதாகச் சொன்னான். இராவணன் அவனை உள்ளே வரச் சொல்லி அனுப்பினான். ஒற்றன் உள்ளே வந்து இராவணனை வணங்கினான். இராவணன் அவனைப்பார்த்து நீ கொண்டு வந்த செய்தியை கூறு என்றான். மன்னா! வானரப் படைகள் நம் நகரின் எல்லா வாயிலிலும் அணிவகுத்து நிற்கின்றனர்.

�� அனுமன் தலைமையில் பதினேழு வெள்ளம் (கோடிக்கணக்கான) சேனைகள், தயார் நிலையில் இலங்கையின் மேற்குப் புற வாயிலில் நிற்கின்றன. இலங்கையின் தெற்கு வாயிலில், வாலியின் மைந்தனான அங்கதன் பதினேழு வெள்ளம் (கோடிக்கணக்கான) வானரப் படையுடன் போருக்குத் தயாராக படைகளை அணிவகுத்து நிற்கிறான். கிழக்கு வாயிலில், நீலன் எனும் படைத்தலைவன் அதே பதினேழு வெள்ளம்

(கோடிக்கணக்கான) சேனையிலும், படையோடு தயார் நிலையில் நிற்கிறான். வானரப் படைகளுக்குத் தேவையான உணவுகளை கொண்டு வந்து கொடுப்பதற்கு இரண்டு வெள்ளம் (கோடிக்கணக்கான) சேனையிலும், சேனையை பல திசைகளுக்கும் அனுப்பியுள்ளார்கள். இராமன், தங்கள் தம்பியான விபீஷணனை போரின் தன்மையை அறிய அடிக்கடி இலங்கை நகரின் எல்லா வாயில்களுக்கும் சென்று கண்காணிக்கும்படி நியமித்துள்ளான்.

�� இராமனும் அவனின் தம்பி இலட்சுமணனும் இலங்கை நகரின் வடக்கு வாயிலில் போரைத் தொடங்குவதற்கு ஆயத்தமாக நிற்கிறார்கள் என்று அந்த ஒற்றன், இராமனின் போர்முனை ஏற்பாடுகள் பற்றி கூறினான். இதைக் கேட்டு இராவணனின் கண்கள் சிவந்தது. இவர்கள் அனைவரையும் நான் அடியோடு ஒழிக்கிறேன் எனக் கூறினான். பிறகு இராவணன் மந்திர ஆலோசனைக் கூட்டத்திற்கு சென்று அங்கு அனைவரையும் வரும்படி கட்டளையிட்டான். அனைவரும் மந்திர ஆலோசனை கூட்டத்திற்கு வந்தனர். இராவணன் அவர்களிடம், நம் நகரத்தின் நான்கு புறங்களிலும் வானர படைகள் ஆயத்தமாக நிற்கின்றன. இனி நாம் செய்ய வேண்டியது என்ன? என்பதை பற்றி கூறுங்கள் என்றான். அப்பொழுது நிகும்பன் என்னும் அரக்கன் எழுந்து நின்று, நம் நகரை சூழ்ந்துக் கொண்ட கேவலம் இந்த வானரப் படைகளுக்காக நாம் வருந்தலாமா? இவர்களை காட்டிலும் நம்மிடம் ஆயிரம் ஆயிரம் சேனைகள் நம்மிடம் உள்ளது என்றான்.



https://telegram.me/aedahamlibrary

இராவணனின் படைகள்!...

�� மந்திர ஆலோசனையில் நடந்தவற்றை விபீஷணனின் மனைவி கேட்டுக் கொண்டு சீதையிடம் சென்று கூறினாள். சீதா! இராமனை வெல்ல இவ்வுலகில் எவரும் இல்லை. இராவணன் உன்னிடம் நாடகமாடி உள்ளான். இலங்கை நகரத்தின் போர் முழக்கங்கள் உனக்கு கேட்கிறதா! இல்லையா!. இராமன் போருக்கு ஆயத்தமாக இலங்கை நகரின் வாயிலில் நின்றுக் கொண்டு இருக்கிறான். அதனால் நீ கவலைக் கொள்ள வேண்டாம் எனக் கூறினாள். இராவணன் மந்திர ஆலோசனையில், இராவணனின் மாமனான மாலி எழுந்து, இராவணா! காம உணர்வு துன்பத்தைத்தான் தரும் என்பதை புரிந்துக் கொள்.

�� இலங்கைக்குள் புகுந்து நம் அரக்கர்களை அழித்து, நம் நகரை தீ வைத்த அனுமனின் கையில் என்ன ஆயுதம் தான் இருந்தது? சுக்ரீவன் உன்னுடன் போரிட்டு உன் கிரீடத்தில் இருந்த மணிகளைப் பறித்துச் சென்றபோது அவன் கையில் இருந்த ஆயுதம் தான் என்ன? உனக்கு இதிலிருந்து தப்பிக்க ஒரு வழி தான் உள்ளது. நீ சீதையை இராமனிடம் ஒப்படைத்துவிட்டு அவனிடம் சரணடைவது தான் நல்லது என்றான். மாலி சொன்னதை கேட்டு இராவணன் கடுங்கோபம் கொண்டான். இராவணன் மாலியிடம், என் வலிமை என்ன என்பது தெரியாமல் நீ பேசுகிறாய். நீ எனக்கு நல்ல வழியைக் காட்டவில்லை, பெரும் அழிவைத்தான் காட்டுகிறாய். நீ இதுபோன்ற அறிவுரைகள் கூறுவதாக இருந்தால், நீ பேசாமல் இருப்பது தான் நல்லது என்றான் கோபத்துடன்.

�� பிறகு இராவணன் தன் படைபலம் கொண்ட சேனைக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தான். இலங்கையின் கிழக்குதிசை வாயிலுக்கு படைத்தலைவனுடன் இருநூறு வெள்ளம் ஆயுதம் தாங்கிய அரக்கர் படையை அனுப்பி, அங்கு தயார் நிலையில் நிற்கும் வானரப் படை தளபதி நீலனோடு போரிடுவதற்கு அனுப்பி வைத்தான். இராவணன் தனது மகன் மகோதரனை அழைத்து, இருநூறு வெள்ளம் படையுடன் சென்று, தென் திசை வாயிலில் தயாராக இருக்கும் அங்கதனுடன் போரிடத் தயாராகுமாறு அனுப்பினான்.

�� பிறகு இராவணன் இந்திரஜித்தை அழைத்து, மகனே! நீ இருநூறு வெள்ளம் சேனையுடன் மேற்கு வாயிலுக்குச் சென்று அங்கு போருக்குத் தயார் நிலையில் நிற்கும், நம் நகருக்கு பேரழிவை செய்த அந்த அனுமனிடம் போர் புரிய தயாராக இரு என்றான். அடுத்து இராவணன்

விரூபாட்சா! நீ நம் சேனைகளோடும், அமைச்சர்களோடும், இலங்கை நகரத்தின் காவல் பொறுப்பை ஏற்றுக்கொள் என்றான். நான் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என இருநூறு வெள்ளம் படைகளுடன் வடக்கு வாயிலுக்குச் சென்று அந்த இராமனோடும், இலட்சுமணனோடும் போரிடத் தயாராக இருப்பேன் என்று நகரின் பாதுகாப்பையும், படைகளின் அணிவகுப்பையும் நிர்ணயித்தான்.

நான்கு புறங்களில் நிற்கும் இராம இலட்சுமணர் மற்றும் வானர படைகள், இராவணனின் உத்தரவின்படி நிற்கும் அரக்கர் படைகள் பற்றி சிறு தொகுப்பு :

இராம இலட்சுமணர் வானர படைகள் :

மேற்கு திசை - அனுமன் - பதினேழு வெள்ளம் வானர படை

கிழக்கு திசை - நீலன் - பதினேழு வெள்ளம் வானர படை

தெற்கு திசை - அங்கதன் - பதினேழு வெள்ளம் வானர படை

வடக்கு திசை - இராம இலட்சுமணர் - பதினேழு வெள்ளம் வானர படை

விபீஷணன் - அரக்கர்களை கண்காணிக்கும் பணி

இராவணனின் படை :

மேற்கு திசை - இந்திரஜித் - இருநூறு வெள்ளம் அரக்க சேனை

கிழக்கு திசை - படைத்தலைவன் - இருநூறு வெள்ளம் அரக்க சேனை

தெற்கு திசை - மகோதரன் - இருநூறு வெள்ளம் அரக்க சேனை

வடக்கு திசை - இராவணன் - இருநூறு வெள்ளம் அரக்க சேனை

விரூபாட்சன் - நகர காவல் பொறுப்பு

அங்கதன் தூது செல்லுதல்...!

�� அன்றைய பொழுது கழிந்து, சூரியன் தன் ஒளிகளை வீசிக் கொண்டிருந்தது. வடக்கு வாயிலுக்கு வெளியே இராமர் தனது பதினேழு வெள்ளம் படையுடன் போருக்கு ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார். இராமர், இராவணனுக்காக தன் கோதண்டத்தை ஏந்தி போருக்குத் தயார் நிலையில் இருந்தார். இராவணன் வடக்கு வாயில் வழியாக போருக்கு வருவான் என வெகுநேரம் எதிர்பார்த்து இராமர் காத்து கொண்டிருந்தார். வெகுநேரம் ஆகியும் இராவணன் போருக்கு வருவதுபோல் தெரியவில்லை. இதற்கு மேல் காத்திருப்பதில் ஒரு பயனும் இல்லை என்று நினைத்த இராமர், விபீஷணனை அழைத்து, இதற்கு மேல் நாம் என்ன செய்ய வேண்டும் என ஆலோசனை தொடங்கினார். இராமர், சிறை வைத்திருக்கும் சீதையை விடுவிக்குமாறும், அப்படி இல்லையென்றால் போருக்கு வருவமாறும் நாம் ஒரு தூதுவனை அனுப்பலாம் என்றார்.

�� இராமரின் ஆலோசனையை கேட்ட விபீஷணன், இது தான் சரியான செயல் என்றான். சுக்ரீவன், நாம் மிகவும் வலிமை வாய்ந்த வீரனை அனுப்பவது தான் சிறந்தது என்றான். இதைக் கேட்ட இலட்சுமணன், அண்ணா! இராவணனின் மேல் இரக்கம் காட்டி தூது அனுப்புவது சரிதானா? நாம் இப்பொழுது இராவணனை அழிப்பதை விட்டுவிட்டு அவனுக்கு தூது அனுப்புவதா? அந்த இராவணன், தேவர்கள் முதற்கொண்டு அனைவரையும் துன்புறுத்தியவன். அன்னை சீதையையும் கவர்ந்துச் சென்று சிறையில் வைத்தவன். அவன் நம் தந்தை போன்ற ஜடாயுவை கொன்றவன். இவ்வளவு செய்த இராவணனின் மீது கருணை காட்டி அவனுக்கு தூது அனுப்புவது சரி தானா? எனக் கேட்டான். இராமர் இலட்சுமணனிடம், தம்பி. இலட்சுமணா! நீ சொல்வது முற்றிலும் உண்மை தான். அரக்கர்கள் அழிவது நிச்சயம். ஆனால் நம் தர்ம நெறிப்படி தூது அனுப்புவது தான் பெருந்தன்மையைக் குறிக்கும் என்றார்.

�� பிறகு இலட்சுமணன் தூது அனுப்புவதற்கு சம்மதித்தான். பிறகு அனைவரிடமும் யாரை தூது அனுப்புவது என ஆலோசித்தார். இராமர், நாம் மறுபடியும் அனுமனை அனுப்பினால் நம்மிடம் சிறந்த வீரர்கள் எவரும் இல்லை என அவன் நினைத்துக் கொள்வான். அனுமனை தவிர சிறந்த வலிமைமிக்க வீரர் உள்ளார்களா? என யோசித்தார். உடனே இராமனின் நினைவுக்கு வந்தது வாலியின் மைந்தன் அங்கதன் தான். இராமர் அனைவரிடமும் நாம் அங்கதனை தூது அனுப்பலாம் என்றார். அனைவரும் இதற்கு சம்மதித்தனர். அங்கதனை வரச் சொல்லி செய்தி

அனுப்பினர். அங்கதனும் உடனே அங்கு வந்துச் சேர்ந்தான். அங்கதன் இராமரை நோக்கி பணிந்து வணங்கினான். பிறகு இராமர் அங்கதனிடம், அங்கதா! நீ தூதுவனாக இராவணனிடம் சென்று நான் சொல்லும் இரண்டு விஷயங்களை கூறி அதற்கு அவன் கூறும் பதிலை எனக்கு வந்து சொல்வாயாக என்றார். இராமர் சொன்னதை கேட்ட அங்கதன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

�� அங்கதன் இராமரிடம், ஐயனே! தாங்கள் என்னை தூதுவனாக தேர்வு செய்ததை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் இராவணனிடம் என்ன செய்தியை சொல்ல வேண்டும்? என்பதை என்னிடம் கூறுங்கள் என்றான். இராமர், அங்கதா! நீ இராவணனின் இருப்பிடத்திற்குச் சென்று சீதையை என்னிடம் ஒப்படைத்துவிட்டால் நான் அவனை விட்டுவிடுகிறேன். அப்படி இல்லையென்றால் போரில் அவனின் பத்து தலைகளையும் சிதைத்துவிடுவேன். இவற்றில் சரியான வழியை தேர்ந்தெடுக்கும்படி கூறுவாயாக. இதற்கு அவன் கூறும் பதிலை என்னிடம் வந்து கூறுவாயாக எனக் கூறி அங்கதனுக்கு விடை கொடுத்தார். அங்கதன், இராமர் தன்னை தூதுவனாக தேர்ந்தெடுத்ததை நினைத்து மிகவும் பெருமைப்பட்டு அங்கிருந்து விரைந்துச் சென்றான்.

இராவணனும் அங்கதனும்...!

�� அங்கதன் இராவணனுடைய மணிமண்டபத்தை அடைந்தான். அங்கதனை பார்த்த அரக்கர்கள் அனுமன் தான் திரும்பி வந்துவிட்டான் என நினைத்து பயந்து ஓடினார்கள். இராவணனை பார்த்த அங்கதன், இவனை நம்மால் வெல்ல முடியுமா? இவனை இராமரை தவிர வேறு எவராலும் கொல்ல முடியாது என நினைத்துக் கொண்டான். பிறகு அங்கதன் இராவணன் முன்பு நின்றான். அங்கதனை பார்த்த இராவணன், மகோதரனிடம், மகோதரா! இந்த வானரம் நம் இலங்கை நகரை அழித்த வானரமா? எனக் கேட்டான். மகோதரன், அரசே! இந்த வானரம் இளம் வானரமாக இருக்கிறது. ஆதலால் இந்த வானரம் நம் இலங்கை நகரை அழித்த வானரம் இல்லை என்றான். பிறகு இராவணன் அங்கதனை பார்த்து, யார் நீ? எதற்காக இங்கு வந்தாய்? உன்னைக் கொன்று தின்பதற்கு முன் உண்மையைச் சொல் என்றான்.

�� இதைக் கேட்டு அங்கதன் பலமாகச் சிரித்தான். அனைத்திற்கும் தலைவனான, அனைத்துலகையும் வழி நடத்தும் ஸ்ரீஇராமன் அனுப்பிய தூதன் நான். அவர் உன்னிடம் சொல்லச் சொல்லி சில செய்திகளை கூறி அனுப்பிள்ளார். அதை உன்னிடம் சொல்லவே தூதனாக இங்கு வந்தேன் என்றான். இராவணன், வானரமே! உன் தலைவன் என்ன சிவபெருமானா? இல்லை திருமாலா? இல்லை பிரம்ம தேவனா? ஒரு வானரப்படையை கூட்டிக்கொண்டு கடலை தாண்டி வந்த இராமன் தானே உன் தலைவன். இராமன் உலகை ஆள்பவனா? எனக் கூறி கேலியாகச் சிரித்தான். வானரமே! அந்த சிவன் கூட இலங்கைக்குள் தைரியமாக நுழைய முடியாதபோது, கேவலம் ஒரு மனிதனுக்காக நீ தூதுவனாக வந்திருக்கிறாய். முதலில் நீ யார்? உன் பெயர் என்னவென்று கூறு என்று ஆணவத்தோடு கேட்டான்.

�� அங்கதன், தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அவர்கள் சோர்ந்து போன நிலையில், அவர்களுக்காக ஒருவனாகவே கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுத்த இந்திரன் மைந்தன் வாலியின் புதல்வன் நான். என் பெயர் அங்கதன் என்றான். வாலியின் பெயரைக் கேட்ட இராவணன், அடே! நீ வாலியின் புதல்வனா? நான் வாலியின் நண்பன் ஆவேன். உன் தந்தையை கொன்ற இராமனின் பின் நீ செல்லலாமா? இது உன் பெருமைக்கு இழிவல்லவா? நீ உற்ற நேரத்தில்

தான் இங்கு வந்துள்ளாய். உன்னை நான் மகனாக பெற்றேன். அந்த மானிடர்கள் எப்படியும் ஒழிந்து விடுவார்கள். உன்னை நான் கிஷ;கிந்தைக்கு அரசனாக முடி சூட்டுகிறேன் என்றான். இராவணன் சொன்னதை கேட்ட அங்கதன், அவனைப் பார்த்து கேவலமாகச் சிரித்தான்.

�� நீ எனக்கு முடிசூட்டுகிறாயா? இங்கு உள்ள அனைவரும் அழிவது நிச்சயம் என்பதை மறந்து விடாதே. உன் தம்பி விபீஷணன், இராமரிடம் சரணடைந்ததை மறந்து விட்டாயா? இராமர், விபீஷணனை இலங்கையின் அரசனாக முடிசூட்டிவிட்டார். நீ வஞ்சனையாக பேசி என்னை உன் பக்கம் சாய்க்கலாம் என நினைக்காதே. அது ஒரு போதும் நடக்காது. தூதுவனாக வந்தவன் அரச பதவி ஏற்றுக் கொள்வது எவ்வளவு பெரிய துரோகம். அத்தகைய துரோகத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன் எனக் கூறி நகைத்தான். அங்கதன் கூறியதைக் கேட்டு இராவணன் கடுங்கோபம் கொண்டான். உடனே இராவணன் இவனை கொல்ல முனைந்தான். ஒரு வானரத்தை தன் கையால் கொல்வதா? என நினைத்து கோபத்தை அடக்கிக் கொண்டான். இராவணன் அங்கதனிடம், நீ இங்கு எதற்காக வந்தாய்? என்பதைச் சொல் என்றான்.

முதல் நாள் போர்!...

�� இராமர் என்னிடம், போருக்கு பயந்து அரண்மனையில் பதுங்கி கொண்டிருக்கும் உன்னிடம், அன்னை சீதையை இராமரிடம் ஒப்படைத்து விடு அப்படி இல்லையென்றால் போரில் அழிவது நிச்சயம் என இராமர் உன்னிடம் அன்பு காட்டும் பொருட்டு கூறினார் என்றான். மேலும் அங்கதன், உலகின் எட்டு திசைகளையும் போரில் வென்ற பெரு வீரன் என்ற பெயர் பெற்ற நீ, உன் நகரத்தை மாற்றார் சேனை வளைத்துக் கொண்டபோது போருக்குச் செல்லாமல், பயந்துகொண்டு உன் அரண்மனைக்குள் புகுந்து கொண்டால் உனக்கு பழியைத் தவிர வேறு என்ன கிடைக்கும் என்றான். இராவணனே, பெண்ணாசையால் அழிந்தவர் பலர். ஆசைக்கு அடிமையாகாதே. உன்னால் அரக்கர் குலம் அழிய போகிறது என்பதை மறந்து விடாதே. நீ இந்த இரண்டில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றான். அங்கதன் கூறியதைக் கேட்ட இராவணன், பெரும் கோபங்கொண்டான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன.

�� உடனே இராவணன், இவனை பிடித்து கொல்லுங்கள் என கட்டளையிட்டான். அங்கதனை கொல்ல அரக்கர்கள் பாய்ந்தனர். அங்கதன் அந்த அரக்கர்களை தூக்கிக் கொண்டு வான் வெளியில் பறந்தான். அங்கதன் வான்வெளியில் போகும்போது அந்த அரக்கர்களை அடித்து கொன்று வீசினான். பிறகு அங்கதன் இலங்கை மக்களிடம், இராமர் போருக்கு வந்து விட்டார் என அறிவித்துவிட்டு அங்கிருந்து இராமர் இருப்பிடத்தை அடைந்தான். அங்கதன் இராமரின் திருவடியில் விழுந்து வணங்கினான். இராமர் அங்கதனிடம், இராவணனைப் பார்த்துப் பேசினாயா? அவன் அதற்கு என்ன சொன்னான் என்று கேட்டார். அங்கதன், அங்கு நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் இராமரிடம் கூறினான். பிறகு அங்கதன் இராமரிடம், இவ்வளவு நடந்த போதிலும் அவன் தன் ஆசையை விட்டபாடில்லை என்றான்.

�� அங்கதன் சொன்னதை கேட்ட அனைவரும், இனி நடக்கப் போவது பெரும் போர் தான், சமாதானம் அல்ல என்பதை அறிந்துக் கொண்டனர். முதல் நாள் போர் தொடங்கியது. வானர சேனைகள் போருக்கு புறப்பட்டன. இராமர், இலங்கை நகரைச் சுற்றியுள்ள அகழிகள் (பாதுகாப்புக்காக அரண்மனை அல்லது கோட்டையைச் சுற்றி அமைக்கப்படும், நீர் நிரம்பிய கொடும்பள்ளம்), முன்பு கடலில் அணைக்

கட்டியது போல, மரங்களையும், பாறைகளையும் கொண்டு வந்து போட்டு இந்த அகழியை மூடிவிடுங்கள் என்று வானரப் படைக்கு ஆணையிட்டார். இராமரின் ஆணைப்படி வானர வீரர்கள் இலங்கை நகரத்தின் நான்கு புறத்திலுமுள்ள அகழிகளைத் தூர்த்தனர். வானரப் படைகள் அகழியைத் தூர்த்தபின், கோட்டை மதிலின் உச்சிக்கு ஏறிச்சென்று போருக்கு ஆரவாரம் செய்தனர். வானர வீரர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தினால் கோட்டை மதிற்சுவர்கள் தரையில் அழுந்தின.

�� அப்பொழுது இலங்கை நகரத்துக்குள் அரக்கர் படையும் போருக்கு எழுந்தன. முரசுகள் முழங்கின. இரு படைகளும் ஒன்றுக்கொன்று நேரெதிராக நின்று மோதத் தொடங்கின. வானரப் படைவீரர்கள் மரங்களையும், கற்களையும், தத்தம் பற்களையும் ஆயுதமாகக் கொண்டு போர் புரிந்தனர். அரக்கர்கள் வில், அம்பு, வேல் கொண்டு போர் செய்தனர். போர் இரண்டு புறத்திலும் மிகக் கடுமையாக நடந்தது. வானர வீரர்கள் வீசிய கற்களையும், மரங்களையும் அரக்கர்கள் தங்கள் ஆயுதங்களை கொண்டு பொடி பொடியாக்கினர். போர் நடந்த இடம் இரத்த வெள்ளமாகக் காட்சி அளித்தது. வானர வீரர்கள் அவர்களது பற்களாலும், கைகளாலும் அடித்து அரக்கர்களைக் கொன்றனர். அரக்கர்கள் வீசிய அம்புகளாலும், வேலாலும், வில்லாலும் பல்லாயிர வானர வீரர்கள் மாண்டு போயினர். இலங்கை நகரத்தின் மதில்கள் இரத்தத்தால் சிவந்து காணப்பட்டன.

வானர படைகளும், அரக்க படைகளும்!...

�� யானைப் படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை எழுந்தபோது புழுதிப் படலம் வானுயர எழுந்தது. அரக்கர் படைகளின் பெரும் பலத்துக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் வானர சேனைகள் பயந்து ஓடின. இதைப் பார்த்த சுக்ரீவன் கடும் கோபமடைந்தான். உடனே சுக்ரீவன் தன் பக்கத்தில் இருந்த ஓர் பெரிய கடம்ப மரத்தை வேரோடு பிடுங்கி போர் செய்தான். மரத்தால் அரக்கர்களின் படைகளை சம்ஹாரம் செய்தான். அரக்கர்கள் தோல்வி முகத்தில் இருப்பதைப் பார்த்த வச்சிரமுட்டி என்னும் கொடிய அரக்கன், கண்களில் தீப்பொறி பறக்க அங்கு வந்துச் சேர்ந்தான். வச்சிரமுட்டி செய்த போரில் வானரங்கள் பலர் மாண்டனர். தன் படை வீரர்கள் மாண்டு போவதை கண்டு கடும் கோபம் கொண்ட சுக்ரீவன் அந்த வச்சிரமுட்டி மீது பாய்ந்தான். அவனது வில்லையும், அம்புறாத் துணியையும் அறுத்து எறிந்து விட்டு ஆலகால விஷம் போல் போரிட்டு வச்சிரமுட்டியையும் கொன்றான்.

�� வச்சிரமுட்டி இறந்தபின் அரக்கர்களின் படை நிலை கலைந்து ஓடத் தொடங்கியது. இதனை கண்டு வானரர்கள் ஆரவாரம் செய்தனர். இலங்கையில் கிழக்கு வாயிலில், சூலம், வாள், வேல், வாளி முதலான ஆயுதங்களால் வானர வீரர்களைக் கொன்றனர். வானர வீரர்கள் வீசிய குன்றுகளாலும், மரங்களாலும் அரக்கர்கள் பலர் மாண்டனர். அப்போது வானரப் படை தளபதி நீலன் ஓர் பெரிய கடம்ப மரத்தைப் பிடுங்கி அரக்கர் படை மீது வீசினான். அரக்கர்களின் தேர்களும், குதிரைகளும், அரக்க வீரர்களும் இதனால் மாண்டு வீழ்ந்தனர். அப்பொழுது நீலனை எதிர்க்க கும்பானு என்னும் அரக்கன் வந்துச் சேர்ந்தான். மற்றொரு பக்கத்தில் இடும்பன் என்னும் கரடிப்படை வீரன் கும்பானுவை எதிர்த்துத் போரிட வந்தான். இருவருக்கும் இடையே கடும் போர் நடந்தது. நீண்ட நேர போருக்கு பின், அரக்கனை இடும்பன் தன் கைகளால் அடித்தும், வாயால் கடித்தும் அவனைக் கொன்றான்.

�� சுமாலியின் மகன் பிரஹஸ்தன், அரக்கர் படைகள் தோற்பதைக் கண்டு போர் புரியத் தொடங்கினான். இதனைப் பார்த்த வானரப் படைத்தலைவன் நீலன் ஒரு பெரிய மரத்தை எடுத்து வீசினான். பிரஹஸ்தன் விட்ட அம்புகளால் அம்மரம் பொடிப்பொடியாகி கீழே விழுந்தது. நீலன், மரங்களைப் பிடுங்கி வீசி பிரஹஸ்தனின் தேர், வில், கொடி முதலியனவற்றை அறுத்தெறிந்தான். பிறகு பிரஹஸ்தன் தரையில் இறங்கி நேருக்கு நேர் போர் புரியத் தொடங்கினான். நீலன் பிரஹஸ்தனை

தன் பலத்தால் தூக்கி எறிந்தான். பிரஹஸ்தனும் நீலனை பயங்கரமாக அடித்தான். இதனால் நீலன் கீழே விழுந்தான். கோபங்கொண்ட நீலன் பிரஹஸ்தனை மார்பில் பலமாக ஓங்கி அடித்தான். பிறகு நீலன் விடாமல் பிரஹஸ்தனை தோளிலும், மார்பிலும், நெற்றியிலும் மாறி மாறி குத்தினான். வலி தாங்க முடியாமல் பிரஹஸ்தன் அந்த இடத்திலேயே விழுந்து இறந்தான். இதைப் பார்த்த அரக்கர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி ஒளிந்தனர்.

�� தெற்கு வாயிலில் அங்கதன், சுபாரிசன் என்னும் அரக்கனுடன் போரிட்டான். அங்கதனுடைய பலமான தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாமல், சுபாரிசன் போரில் மாண்டு போனான். சுபாரிசன் மாண்டு போனதை அறிந்து அரக்கர் படைகள் அங்கிருந்து ஓடி ஒளிந்தனர். மேற்கு வாயிலில் அனுமன், துன்முகன் என்னும் அரக்கனையும் அவனது இருநூறு வெள்ள சேனைகளையும் எதிர்த்துப் போர் புரிந்துக் கொண்டிருந்தான். அனுமனின் கைகளால் ஏராளமான அரக்கர்கள் மாண்டனர். அனுமன், துன்முகனுடன் கடுமையாக போரிட்டு அவனைக் கொன்றான். இவ்வாறு நான்கு வாயில்களில் போர் நடந்தது. தூதுவர்கள், நான்கு வாயில்களிலும் நடந்த போரைப் பற்றி இராவணனிடம் சென்று செய்தியை கூறினர். அவர்கள், கிழக்கு வாயிலில் பிரஹஸ்தன், தெற்கு திசையில் சுபாரிசன், வடக்கு வாயிலில் வச்சிரமுட்டி, மேற்கு வாயிலில் துன்முகன் மாண்டச் செய்தியை இராவணனிடம் கூறினார்கள்.

இராவணன் போருக்கு செல்லுதல்!...

�� தூதர்கள் சொன்ன செய்தியைக் கேட்டு, இராவணனின் முகம் தீ போல் சிவந்தது. இராவணன், பிரஹஸ்தனைக் கொன்றவன் யார்? என கோபத்துடன் கேட்டான். அதற்கு தூதர்கள் பிரஹஸ்தனை கொன்றது, வானர படைத்தலைவன் நீலன் என்றார்கள். இந்திரனையும் வென்ற பிரஹஸ்தன் மிகுந்த பலம் கொண்டவன். இவ்வளவு பலம் கொண்ட பிரஹஸ்தனை, கேவலம் ஒரு குரங்கு கொன்றுவிட்டதா! என மனதில் நினைத்து புலம்பினான். கோபம் இராவணனின் தலைக்கேறியது. உடனே அவன் போருக்கு தயாராகி, ஆயிரம் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறினான். இத்தேர், இந்திரன் போரில் தோற்றபோது இராவணனுக்குக் கொடுத்த தேர். அதிரும்படி ஒலி எழுப்பும் தேர். இத்தேர் விண்ணுலகுக்கும் சென்று வரும் வலிமை பெற்றது. இராவணன் தான் வணங்கும் ருத்ரனை மனதால் வணங்கி, தன் வில்லை கையில் எடுத்து அதில் நாணைப் பூட்டி ஒலி எழுப்பினான்.

�� பிறகு அவன் தன்மார்பில் கவசத்தை அணிந்துக் கொண்டு தும்பைப்பூவை மாலையாக கழுத்தில் அணிந்துக் கொண்டான். இராவணன் போருக்கு தேவையான ஆயுதங்களை எடுத்துக் கொண்டான். ஏவலர்கள் இராவணனின் தலைக்குமேல் வெண்கொற்ற குடையை பிடித்துக் கொண்டனர். முரசுகள் முழங்கின. இதனைப் பார்த்து தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். இராவணனின் தேரில் வீணைக்கொடி பறந்தது. இராவணன் முதல் நாள் போருக்கு புறப்பட்டான். இராவணனின் கண்களில் தீப்பொறி பறக்க அவன் போர்க்களத்திற்கு வந்துச் சேர்ந்தான். இராவணன், கோபத்தோடும், படைகளோடும் போருக்குப் வந்தச் செய்தியை ஒற்றர்கள் இராமனிடம் ஓடிச் சென்று தெரிவித்தனர். இராமர், போர்க்கோலம் பூண்டு, தன் கோதண்டத்தையும், வில்லையும், அம்புறாத் துணியையும் கட்டிக் கொண்டு, தும்பை மாலை சூடிக் கொண்டு புறப்பட்டார். இலட்சுமணனும், இராமனோடு போர்க்கோலம் பூண்டு இராவணனை போரில் சந்திக்க புறப்பட்டான்.

�� எதிரெதிராக அரக்கர் சேனையும், வானர சேனையும் போருக்குத் தயாராக நின்றனர். போர் தொடங்கியது. அரக்கர் சேனையும், வானர சேனையும் மிகக் கடுமையான போரில் ஈடுபட்டனர். இதற்கு காரணம் வானர படைகளுக்கு இராமர் தலைமை வகித்துப் போரிடுவதும், அரக்கர் படைக்கு இராவணன் தலைமை வகித்துப் போரிடுவது தான் இந்த கடுமையான போருக்கு காரணம். போரில் வானர வீரர்கள் மிகக் கடுமையாகப் போர் புரிந்தனர். ஒரு புறம் வானர படை வீரர்கள் மற்றொரு

புறம் அரக்க படை வீரர்கள் கடுமையாக போர் புரிந்தனர். போரில் மாண்டவர்கள் பலர். இதனால் அந்த இடம் இரத்த பூமியாக தென்பட்டது. காணும் இடமெல்லாம் பிணங்களாக தெரிந்தன. இராவணன் தன் வில்லில் நாணை பூட்டி அம்புகளை எய்த தொடங்கினான். அப்போது சுக்ரீவன் அங்கு வந்து இராவணனை தடுத்து நிறுத்தி போர் புரிய தொடங்கினான். இருவருக்கும் இடையில் மிகக் கடுமையாக போர் நடந்தது. இராவணனின் பலமான தாக்குதலை தாக்கு பிடிக்காமல் சுக்ரீவன் மயங்கி கீழே விழுந்தான்.

�� இதைப் பார்த்த அனுமன் அங்கு வந்தான். இராவணா! பலம் இருந்தால் என்னிடம் வந்து போரிடு என்றான். பிறகு அனுமன் தன் பக்கத்தில் இருந்த பெரிய மரம் ஒன்றை பிடுங்கி இராவணன் மீது வீசினான். இராவணன் அம்மரத்தின் மீது ஓர் அம்பை ஏவி அதை தூள் தூளாக்கினான். அனுமன் மறுபடியும் ஒரு மலையை பிடுங்கி இராவணனை நோக்கி எறிந்தான். ஆனால் இராவணன் அதை தடுக்கும் முன்பு மரம் அவனது தோளை தாக்கியது. இதனால் பெருங்கோபம் அடைந்த இராவணன் அம்புகளை அனுமன் மீது எய்தினான். இராவணன் எய்திய அம்புகள் அனுமனின் உடலை துளைத்தது. ஆனால் அனுமன் அதை பொருட்படுத்தாமல் போர் புரிந்தான். அனுமன் மறுபடியும் ஒரு மரத்தை பிடுங்கி இராவணனை நோக்கி எறிந்தான். ஆனால் அந்த மரம் இராவணனின் தேரோட்டியின்மேல் விழுந்து பல அரக்கர்களை கொன்றது. உடனே வேறொரு தேரோட்டி தேரில் ஏறி தேரைச் செலுத்தினான். இராவணன் ஆயிரமாயிரம் அம்புகளை வானர படைகள் மீது எய்தினான். இதனால் பல வானரங்கள் மாண்டனர்.

இராவணன் அனுமனுடன் சண்டையிடுதல்!...

❈ இராவணனின் அம்புகளுக்கு வானர வீரர்கள் பலர் இரையாயினர். இராவணனது வில் திறமையை கண்ட இலட்சுமணன் இவனை என் அம்புகளுக்கு இரையாக்குவேன் என விரைந்து வந்தான். அங்கு வந்த இலட்சுமணன் தன் வில்லின் நாணை இழுத்து ஒலி எழுப்பினான். அங்கு அனுமனின் உடலில் பல அம்புகள் துளைத்து கீழே வீழ்ந்து கிடைப்பதை கண்டான். உடனே இலட்சுமணன் அம்புகளை ஏவி பல அரக்கர்களை அழித்தான். அரக்கர் படைகளும் இலட்சுமணனை சூழ்ந்து தாக்கத் தொடங்கினர். அரக்கர்கள் இவன் இராவணனை நெருங்கி விடக்கூடாது என்று உறுதி கொண்டு இலட்சுமணனை எதிர்த்து போரிட்டனர். அரக்கர்கள் வீசிய அம்புகளை இலட்சுமணன் தகர்த்து எறிந்தான். கட்டுக்கடங்காத அம்புகள் இலட்சுமணனின் உடலில் நுழைந்தது. இலட்சுமணன் தனித்து நின்று அரக்கர்களை அழிப்பதைக் கண்ட இராவணன் கடுங்கோபம் கொண்டு தேரை செலுத்தி இலட்சுமணனின் அருகில் வந்தான்.

❈ தன் முன் வந்து நின்ற இராவணனை பார்த்த இலட்சுமணனுக்கு கோபம் அதிகமானது. இலட்சுமணன் இராவணனை பார்த்து, அன்னை சீதையை காவல் புரிந்த என்னை வஞ்சனையால் கவர்ந்துச் சென்ற நீ என்னிடமிருந்து தப்பிச் செல்ல முடியாது என்றான். பிறகு இலட்சுமணன் அம்புகளை இராவணன் மீது எய்தினான். இராவணனும் இலட்சுமணன் மீது அம்புகளை எய்தினான். தன் அம்புகளால் இலட்சுமணன், இராவணனை செயல் இழக்கும் படி செய்தான். இராவணன் இலட்சுமணனின் அம்புறாத் துணியை அறுத்தெறிந்தான். அப்பொழுது அனுமன் எழுந்து, இராவணா! இப்பொழுது நாம் முஷ;டி யுத்தம் புரிவோம் என்றான். பிறகு அனுமன் தனது விஸ்வரூபத்தை எடுத்து நின்றான். அனுமன் இராவணனை பார்த்து, இராவணா! வா! என்னை எதிர்த்து சண்டையிடு என்றான். இராவணனும் துணிச்சலோடு சண்டைக்கு எதிர்த்து நின்றான்.

❈ அனுமன் இராவணனிடம், நான் குத்தும் ஒரு குத்துக்கு உன்னால் தாக்கு பிடிக்க முடியுமா? ஒரு குரங்கின் வலிமையை நீ பார்த்திருக்க மாட்டாய். இன்று நீ காண்பாய் என்றான். பிறகு அனுமன், இராவணா! உன் மார்பில் நான் ஒரு குத்து குத்துவேன். நீ பிழைத்துக் கொண்டால் என் மார்பில் குத்து, நான் பிழைத்துக் கொண்டால் இனி உனக்கும் எனக்கும் போர் புரிய நிலைமையில்லை என்றான். இராவணன் அனுமனின் வீர வசனங்களை

கேட்டு, அனுமனே உன் வீரத்திற்கு நிகர் எவரும் இல்லை. நான் உன் முஷ;டி யுத்தத்திற்கு சம்மதிக்கிறேன். அனுமனே ஒரு மாவீரனோடு போரிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இனி நான் போர் புரிய தேவையில்லை. வா! என்னை வந்து குத்து என மார்பைக் காட்டி நின்றான். அனுமன் இராவணனிடம், நான் உன் வீரத்தை பாராட்டுகிறேன் என்றான்.

❄ பிறகு அனுமன் ஆராவாரம் செய்து தன் கண்களை அகல விரித்து தன் கையின் ஐந்து விரல்களை பலமாக மடக்கி இராவணனின் கவசம் அணிந்த உடல் சிதறும்படி இராவணனின் மார்பில் ஓங்கி குத்தினான். அனுமன் குத்தினால் மலைகள் பெயர்ந்து விழுந்தன. இதனைப் பார்த்த அரக்கர்கள் மூர்ச்சித்து கீழே விழுந்தார்கள். மலைகள், பாறைகள், மரங்கள் எல்லாம் நிலைகுழைந்து போயின. இதைப்பார்த்த தேவர்கள் நடுங்கி போனார்கள். வானர வீரர்களும் நிலைகுழைந்து போனார்கள். அனுமனின் குத்தினால் இராவணனுக்கு உயிர் போய் உயிர் வந்தது. அவனது கண்களிலிருந்து தீ வெளிப்பட்டது. நிலை தடுமாறினான். பிறகு தன் உணர்வை பெற்ற இராவணன் அனுமனிடம், உனக்கு நிகர் எவரும் இல்லை. இதுவரை நான் அடையாத துன்பத்தை எனக்கு காட்டி விட்டாய். எனக்கு நிகரான வலிமை உன்னிடம் இருக்கிறது. நீ சிறந்த வீரன் என்பதையும் அறிந்துக் கொண்டேன். இப்பொழுது நான் உன் மார்பில் குத்துகிறேன் என்றான்.

இலட்சுமணனின் போர் திறமை!...

❄ இராவணன் அனுமனிடம், இப்பொழுது நான் உன் மார்பில் குத்துகிறேன். என் குத்தினால் நீ மாண்டு போவாய். அப்படி இல்லாமல் நீ பிழைத்துக் கொண்டால் உனக்கு அழிவில்லை. உன்னால் என்னை கொல்ல முடியவில்லை. என்னால் உன்னை கொல்ல முடியவில்லை என்றால் உனக்கும் எனக்கும் போரில்லை எனக் கூறினான். பிறகு அனுமன் தன் மார்பை காட்டி இராவணன் முன் நின்றான். இராவணன், கண்களில் தீப்பொறி பறக்க, பற்களை கடித்து, விரல்களை பலமாக மடித்து அனுமனின் மார்பில் ஓங்கி குத்தினான். மேரு மலைபோல் நின்ற அனுமன் இராவணனின் பலமான அடியால் சற்று நிலை தடுமாறினான். அனுமன் நிலை தடுமாறியதை பார்த்த தேவர்கள் மிகவும் வருந்தினர். போர் தொடர்ந்து நடந்துக் கொண்டு இருந்தது. வானர படைகள் கற்களையும், மலைகளையும், பாறைகளையும் எடுத்து அரக்கர்கள் மீது வீசினர். இதனைப் பார்த்த இராவணன் அவற்றை தன் அம்புகளுக்கு இரையாக்கினான். இராவணன், வானர வீரர்களை கொன்று குவிந்த வண்ணம் இருந்தான்.

❄ இராவணனால் வானர வீரர்கள் பலர் மாண்டனர். இராவணனின் அம்பு வானர படைத்தலைவன் நீலனின் உடலில் துளைத்தது. இதனால் நீலன் மயங்கி வீழ்ந்தான். ஜாம்பவானும் இராவணனின் ஆயுதத்தால் அடிப்பட்டு கீழே விழுந்தான். இதைப் பார்த்த இலட்சுமணன் தன் வில்லை எடுத்து இராவணனின் அம்புகளை தகர்த்து எறிந்தான். இலட்சுமணன் ஓர் வில்லினால் இராவணனின் கை வில்லை அறுத்தெறிந்தான். இலட்சுமணனின் வீரத்தையும், போர் திறமையும் கண்டு இராவணன் இலட்சுமணனை புகழ்ந்தான். உன் போர் வலிமை சிறப்பாக உள்ளது. அம்பு தொடுக்கும் உன் கையின் விவேகமும், நீ எதிர்த்து நிற்கும் உன் தைரியமும் மிகச் சிறந்தது. நீ மற்றவர்களை காட்டிலும் ஒப்பற்றவன் என்றான். பிறகு இராவணன், இலட்சுமணா! உன் அண்ணன் இராமனும், இந்திரனை வென்ற இந்திரஜித் மற்றும் என்னை காட்டிலும் உனக்கு நிகர் சிறந்த வீரர் இவ்வுலகில் இல்லை என்றான்.

❄ பிறகு இலட்சுமணன் இராவணனை பார்த்து அம்புகளை ஏவினான். இராவணன் இவனை வெல்லுதல் என்பது மிக எளிதான விஷயம் அல்ல என நினைத்து, பிரம்மன் கொடுத்த ஒளிமிக்க வேலை எடுத்து இலட்சுமணன் மீது வீசினான். அந்த வேல் இலட்சுமணனின் அம்புகளை தகர்த்தெறிந்து இலட்சுமணன் மேல் பாய்ந்தது. இலட்சுமணன் மயங்கி

கீழே விழுந்தான். இலட்சுமணன் மயங்கி விழுந்ததை பார்த்த வானர வீரர்கள் பயந்து ஓடினர். அரக்கர்கள் ஆரவாரம் செய்தனர். இலட்சுமணன் மயங்கி கீழே விழுந்ததை பார்த்த இராவணன் அருகில் சென்று இலட்சுமணனை தூக்க முயன்றான். வெள்ளிமலையை அள்ளி எடுத்த இராவணனால் இலட்சுமணனை தூக்க முடியவில்லை. தன் இருபது கரங்களாலும் தூக்க முயற்சித்தும் இராவணனால் தூக்க முடியவில்லை. இலட்சுமணை சிறிதும் கூட இராவணனால் அசைக்க முடியவில்லை. இலட்சுமணனை தூக்க முடியாமல் இராவணன் பெருமூச்சுவிட்டான்.

❄ இதனைப் பார்த்த அனுமன் இலட்சுமணனை தூக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றான். இராவணனால் தூக்க முடியாத இலட்சுமணனை அனுமன் எளிதாக தூக்கிச் சென்றதை பார்த்து அரக்கர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அனுமன் இலட்சுமணனை தூக்கிச் சென்றது, ஒரு தாய் தன் குழந்தையை தூக்கிச் செல்வது போல் இருந்தது. மயக்கம் தெளிந்த இலட்சுமணன் அனுமனை அழைத்துக் கொண்டு இராமர் இருக்கும் இடத்திற்குச் சென்றனர். இராமர், இராவணனுடன் போர் புரிய ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார். இராவணன் தன் தேரை செலுத்திக் கொண்டு இராமருக்கு எதிரே வந்து நின்றான். போர் புரிய இராவணன் தேரில் வந்து நின்றதும், அனுமன், இராமர் தரையில் நின்று போர் புரிவதா! என நினைத்து வருந்தினான். பிறகு அனுமன் இராமரிடம், பெருமானே! தாங்கள் என் தோளின் மேல் ஏறி போர் புரியுமாறு வேண்டினான். இராமரும் அனுமனின் வேண்டுகோளை ஏற்று போர் புரிய தொடங்கினார்.

முதல் போர் முடிவு!...

❄ இராமர் மற்றும் இராவணனின் யுத்தத்தைக் காண்பதற்கு பிரம்மன் முதலான தேவர்கள் வானத்தில் வந்து இராமர் வெற்றி பெற வாழ்த்தினார்கள். இராமர் இராவணனுடன் போர் புரிய ஆயத்தமாகி, தன் வலிமையான கோதண்டத்தின் நாணை இழுத்து ஓர் பேரொலி எழுப்பினார். இராவணன் வில்லை வளைத்து கணக்கற்ற அம்புகளை ஒரே நேரத்தில் தொடுத்தான். இராவணன் எய்த அம்புகளை துண்டுகளாக்கி, ஐந்து கொடிய கணைகளை இராமர் விடுத்தார். இந்த கணைகள் பல அரக்கர்களை ஒழித்தது. இராமர், இராவணனுக்கும் இடையில் கடும்போர் நடந்தது. இராமரின் கோதண்டத்தில் இருந்து வந்த அம்புகள் அரக்கர்களின் தலைகளை அறுத்தும் பல்லாயிர அரக்கர்களையும் வீழ்த்தியது. இராமரை சுமந்து கொண்டிருக்கும் அனுமன் தன் கைகளாலும், கால்களாலும் அரக்கர்களை கொன்று வீழ்த்தினான். எந்த திசையைப் பார்த்தாலும் அரக்கர்களின் பிணங்கள் குவிந்த வண்ணமாக கிடந்தன.

❄ யானைகளும், குதிரைகளும் என அனைத்தும் இராமரின் அம்புகளுக்கு இரையாயின. கடைசியில் இராவணன் மட்டும் தனித்து நின்றான். தன் அரக்கர் படைகள் பிணங்களாக குவிந்து கிடப்பதை பார்த்த இராவணன் கடும்கோபம் கொண்டான். உடனே அவன் இராமரை நோக்கி அம்பு எய்தினான். இராமர் அந்த அம்பை உடைத்து தூள் தூளாக்கிவிட்டு மற்றொரு அம்பை இராவணனை நோக்கி எய்தினார். இந்த அம்பு இராவணனின் வில்லை அறுத்தது. இராமர் மறுபடியும் ஒரு அம்பை ஏவி இராவணனின் தேரை அறுத்து ஒடித்தார். ஆனால் இராவணனுக்கு புதிது புதியதாக தேர்கள் வந்து கொண்டிருந்தன. இராமர் புதியதாக வந்த அனைத்து தேர்களையும் அறுத்து ஒடித்தார். இராமர் மற்றொரு வில்லை ஏவி இராவணனின் தலையில் அலங்கரித்து கொண்டிருக்கும் பத்து மணி மகுடங்களையும் கீழே வீழ்த்தினார்.

❄ அப்பொழுது இராவணன் சந்திரன் இல்லாத நிலவு போலவும், சூரியன் இல்லாத பகல் போலவும் காட்சியளித்தான். இராவணன் போர்கருவிகள், தன் வில், தேர், அரக்கர் படைகள் எதுவும் இல்லாமல் தன் கால் விரலால் நிலத்தை களைத்துக் கொண்டு, தலை குனிந்து நின்றான். இதனைப் பார்த்து கொண்டிருந்த தேவர்கள், "தர்மத்தை அழித்த பாவிகளின் நிலைமை இது தான்" என்றனர். இராமர் தன் எதிரில் தலைகுனிந்து நிற்கும் இராவணனை பார்த்து இரக்கம் கொண்டு, இராவணா! இப்பொழுது உன்னிடம் எதுவும்

இல்லாமல் வெறும் கையுடன் இருக்கிறாய். இப்பொழுது உன்னை கொல்வது நன்றல்ல. இப்பொழுது தெரிந்துக் கொள்.

❄ தர்மத்தால் மட்டுமே போர்களில் வெல்ல முடியுமே தவிர, வலிமையால் அல்ல. நான் உன்னை அரக்கர்களை கொன்றதை போல கொன்றிருப்பேன். ஆனால் தனித்து நிற்கும் உன்னை நிலையை பார்த்து உன்னை கொல்லாமல் விட்டுவிடுகிறேன். அரக்கனே! இங்கிருந்து ஓடிபோய் உன் நகரத்திற்குள் ஒளிந்துக் கொள் என்றார். உனக்கு நான் மறுபடியும் ஒரு வாய்ப்பளிக்கிறேன். சீதையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு, வீபிஷணனை இலங்கையின் அரசனாக முடிசூட்டிவிடு. உன்னை நான் மன்னித்து உயிருடன் விடுகிறேன். அப்படி இல்லையென்றால் என்னை எதிர்த்து போர் புரியும் ஆற்றல் உன்னிடம் இருந்தால் உன் சேனைகளை திரட்டி என்னை எதிர்த்து போரிடு என்றார். இப்பொழுது நீ இங்கிருந்து செல். உன் மனைவி உன்னை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருப்பாள். நாளை உன் படைகளை திரட்டி கொண்டு இங்கு வா என்றார்.

இராவணனின் கவலை!...

�� தோல்வி என்பதை அறியாத இராவணன் இன்று தன் வீரத்திற்கு இழுக்கு நேர்ந்துவிட்டதை நினைத்து இராவணனால் ஒன்றும் பேச முடியவில்லை. இன்று ஒரு மனிதன் தன்னை "இன்று போய் நாளை வா" என்று சொல்லும் அளவிற்கு தன் நிலைமை தாழ்ந்து போனதை நினைத்து ஏளனமாக சிரித்தான். பிறகு இராவணன் நிலத்தை பார்த்தவாறே தன் அரண்மனையை நோக்கிச் சென்றான்.

முதல் போர் முடிவு பெற்றது.

�� இறுதியாக இராவணனிடம் இருந்தது வீரம் மட்டும் தான். இராவணன் போரில் தன் பெருமைகளை இழந்துவிட்டு, இராமர் கொடுத்த உயிர் பிச்சையை மட்டும் வைத்துக் கொண்டு அரண்மனை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இராவணன் இலங்கைக்குள் நுழையும் போது சூரியன் மறைய தொடங்கியது. இராவணன் இலங்கையில் நுழையும் போது அவன் எத்திசையும், யாரையும் பார்க்கவில்லை. தலையை குனிந்தவாறு அரண்மனை நோக்கி சென்று கொண்டிருந்தான். அரண்மனையில் இராவணன் வரும்போது இருக்கும் பரபரப்பு அன்று அங்கு தென்படவில்லை. அங்கு இராவணனின் மனைவிமார்களும், உறவினர்களும், சேனைத்தலைவர்களும் நின்று கொண்டிருக்க அவன் யாரையும் பார்க்காமல் நேராக தன் அறைக்குச் சென்று போரில் எவ்வாறு வெல்வது என்பதைப் பற்றி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான்.

�� இராவணன் மெய்க்காப்பாளனை அழைத்து தூதர்கள் நால்வரை அழைத்து வரும்படி சொன்னான். உடனே தூதர்கள் நால்வரும் அங்கு வந்துச் சேர்ந்தார்கள். அவர்கள் மனகதி, வாயுவேகன், மருத்தன், மாமேகன் என்பவர்கள். இராவணன் அவர்களிடம் நான்கு திசைகளுக்கும் சென்று அரக்கர்களை ஒன்று திரட்டி வரும்படி கூறினான். பின் இராவணன் யாரையும் பார்க்க விருப்பமின்றி தன் படுக்கைக்குச் சென்றான். சீதையை மட்டும் மனதில் நினைத்துக் கொண்டிருந்த இராவணனுக்கு இப்பொழுது கவலை தொற்றிக் கொண்டது. கவலையால் இராவணனுக்கு தூக்கம் வரவில்லை. நான் பெற்ற தோல்வியைக் கண்டு தேவர்கள் சிரிப்பார்கள். என் பகைவர்களும், மண்ணுலகத்தில் உள்ளோரும் சிரிப்பார்கள்.

�� அது மட்டுமின்றி அழகும், அன்பும், மென்மையும் உடைய சீதை என்னைப் பார்த்து சிரிப்பாளே என நினைத்து கவலை கொண்டான்.

இராவணன் தூக்கம் வராமல் தன் படுக்கையில் இருந்து எழுந்து அரசவைக்குச் சென்று தன் அரியணையில் அமர்ந்தான். இராவணன் கவலையுடன் இருப்பதைக் கண்டு இராவணனின் பாட்டன் மாலியவான், எழுந்து அன்புடன் கேட்டார். பேரப்பிள்ளையே! உன் முகம் ஏன் இவ்வளவு வாடி இருக்கின்றது. உன் துன்பத்திற்கான காரணம் என்னவென்று கேட்டார். இராவணன், பல வெற்றிகளை கண்ட நான் இன்று ஒரு மனிதனிடம் தோற்றுவிட்டேன். இராமன் என் சேனைகள் அனைத்தையும் அழித்து விட்டான். இந்திரன், சிவன், திருமால் ஆகிய மூவரையும் வென்ற பேராற்றல் உடைய நான், இராமனிடம் இன்று தோற்றுவிட்டேன்.

�� நான் திக் விஜயம் செய்தபோது இந்திரன், திருமால், பிரம்மன், ஈசன் என அனைவரையும் வென்று விட்டேன். ஆனால் இன்று ஒரு மனிதனான இராமனை என்னால் வெல்ல முடியவில்லை என்பதை நினைத்து வருந்துகிறேன். இராமன் வீரம் நிறைந்தவன். அவன் என்னுடன் போர் புரியும்போது கோபமோ, பரபரப்போ தெரியவில்லை. மிகவும் நுணுக்கமாக போர் புரிந்தான். இன்று அவன் மிகுந்த கோபத்துடன் போர் புரிந்திருந்தால் நான் இன்று தங்கள் முன் பேசி கொண்டிருக்கமாட்டேன். இராமனின் போரின் வீரத்தை நான் என்னவென்று சொல்வது? இராமனின் பாணங்கள் அனைத்தும் எரிக்கும் வல்லமை உடையது. இராமரிடம் தன் பெருமைகள் அனைத்தையும் இழந்துவிட்டு, இங்கு வந்துள்ளேன் என மிகவும் வருத்தத்துடன் கூறினான்.

கும்பகர்ணனை எழுப்புதல்!...

�� இராவணன் சொன்னதைக் கேட்ட மாலியவான், பேரனே! நீ போருக்கு செல்வதற்கு முன், நான் இராமனின் திறமையைப் பற்றி கூறினேன். ஆனால் நீ அதை அலட்சியம் செய்துவிட்டாய். உன் தம்பி விபீஷணன் கூறியவற்றையும் நீ கேட்கவில்லை. மாற்றான் மனைவியை விரும்பினால், நெருப்பில் விழுந்த புழுவின் நிலைமை தான் கிடைக்கும். கற்பில் சிறந்தவளாய் விளங்கும் சீதையை விரும்புவது தவறானது. ஆதலால் நீ சீதையை இராமனிடம் ஒப்படைத்துவிட்டு இராமனின் கருணையை பெறுவாயாக. இதனால் உன் அசுர குலமும் தழைக்கும் என்றார். அப்பொழுது அரசவையின் முதலமைச்சர் மகோதரன் அங்கு வந்தான். அவன் மாய வேலை செய்வதில் வல்லவன். மகோதரன் இராவணனிடம், அரசே! ஒருவன் மனதில் அச்சம் வந்துவிட்டால் அது அவனை அழித்துவிடும். உன் ஆற்றலுக்கு நிகரானவர் இவ்வுலகில் எவரும் இல்லை.

�� அனைத்தையும் வென்றவன் நீ என்பதை புரிந்துக் கொள். இன்று வெல்பவர் நாளை தோற்பார். இன்று தோற்றவர் நாளை வெல்வார். இதுவே உலக நியதி. ஆதலால் நீ உன் பாட்டன் சொல்லைக் கேட்டு சீதையை இராமனிடம் ஒப்படைத்துவிடாதே. இவ்வாறு செய்தால் தேவர்கள் உன்னை பார்த்து சிரிப்பார்கள். இவ்வாறு நீ வருந்திக் கொண்டு இருந்தால் அந்த வானரங்கள் நம்மை எளிதாக அழித்துவிடுவார்கள். இன்று நீ தோற்றிருக்கலாம். நாளை நீ நிச்சயம் வெற்றி பெறுவாய் என்பதை மனதில் கொள்! என இராவணனை ஊக்கப்படுத்தினான். பிறகு மகோதரன், உன் தம்பி கும்பகர்ணனை அனுப்பலாம் என்றான். மகோதரனின் சொல்லைக் கேட்ட இராவணன், மனம் தேறினான். உடனே தன் ஏவலாட்களை அனுப்பி கும்பகர்ணனை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். ஏவலர்கள் கும்பகர்ணனின் மாளிகையை அடைந்தனர். அங்கு கும்பகர்ணன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

�� ஏவலர்கள் கும்பகர்ணனை எழுப்ப முயன்றனர். எவ்வளவு முயன்றும் கும்பகர்ணனை அவர்களால் எழுப்ப முடியவில்லை. பிறகு அவர்கள் இரும்புத் தூணால் அவன் தலையிலும் செவியிலும் மோதினார்கள். அதற்கும் அவன் செவி சாய்க்காமல் தூங்கிக் கொண்டிருந்தான். பிறகு கிங்கரர்கள் வந்து இரும்பு உலக்கையினால் கும்பகர்ணனை இடித்து எழுப்ப முயன்றனர். இவர்கள் எவ்வளவு முயன்றும் கும்பகர்ணனை எழுப்ப முடியவில்லை. பிறகு கிங்கரர்கள் இராவணனிடம் சென்று கும்பகர்ணனை எவ்வளவு முயன்றும் உறக்கத்தில்

இருந்து எழுப்ப முடியவில்லை என்றனர். இராவணன், யானைகளை விட்டு மிதிக்கச் செய்து எழுப்புங்கள் என்றான். அவ்வாறே யானைகளை விட்டு மிதிக்கச் செய்து கும்பகர்ணனை எழுப்ப முயன்றனர். அப்படியும் கும்பகர்ணன் எழுந்தபாடில்லை. மறுபடியும் கிங்கரர்கள் இராவணனிடம் சென்று யானைகள் மிதித்தும் கும்பகர்ணன் எழவில்லை என்றனர்.

�� இராவணன், ஆயிரம் மல்லர்களை அழைத்து வந்து கும்பகர்ணனை எழுப்பச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டான். மல்லர்கள் அங்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் உறங்கி கொண்டிருக்கும் கும்பகர்ணனை பார்த்து பயந்து நடுங்கினார்கள். அவர்கள் கும்பகர்ணனை அடித்து எழுப்ப பயந்து அவன் காதருகில் சங்கு, தாரை போன்ற ஊது கருவிகளை கொண்டு பெரும் ஓசை எழுப்பினர். இதற்கும் கும்பகர்ணன் சிறிதும் அசைவு கொடுக்கவில்லை. பிறகு கிங்கரர்கள், படைகலன்களில் தேர்ச்சிப் பெற்ற வீரர்களை அழைத்துவந்து கொம்பு, வலிமையுடைய தண்டு, சம்மட்டி, ஈட்டி போன்றவற்றைக் கொண்டு கும்பகர்ணனின் மார்பிலும், தலையிலும், தாடையிலும், மூட்டுகளிலும் அடித்தனர். அவர்கள் எவ்வளவு அடித்தும் கும்பகர்ணன் எழுந்தபாடில்லை. அவர்கள் தான் அடித்து அடித்து சோர்ந்து போனார்கள்.

கும்பகர்ணனின் அறிவுரை!...

�� மறுபடியும் கிங்கரர்கள் இராவணனிடம் சென்று, கும்பகர்ணன் எழவில்லை என்றனர். இராவணன் குதிரை படைகளை கும்பகர்ணன் மீது ஓடவிட்டு எழுப்புங்கள் எனக் கட்டளையிட்டான். அவ்வாறே கிங்கரர்களும் செய்தனர். ஆனால் இதுவும் பயனற்று போனது. குதிரை படைகள் கும்பகர்ணன் மீது சென்றது அவனுக்கு தாலாட்டுவது போல் இருந்தது. இதனால் அவன் ஆழ்ந்த தூக்கத்திற்குச் சென்றான். இவ்வளவு முயற்சி செய்தும் கும்பகர்ணன் எழுந்தபாடில்லை என இராவணனிடம் சென்று கூறினர். இதற்கு மேல் என்ன செய்வதென்று ஆலோசனைக் கேட்டனர். இராவணன் அவர்களிடம், வாள், சூலம், உலக்கை இவற்றைக் கொண்டு தாக்கியாவது கும்பகர்ணனை எழுப்புங்கள் என்றான். பிறகு ஆயிரம் வீரர்கள் கும்பகர்ணனின் கன்னங்களில் வாள், சூலம், உலக்கை கொண்டு தாக்கினர். அப்பொழுது கும்பகர்ணன் ஓர் பூதம் போல் எழுந்து அமர்ந்தான்.

�� தூக்கத்தில் இருந்து எழுந்த கும்பகர்ணனால் பசியை தாங்க முடியவில்லை. உடனே அவன் உணவு எங்கே? என்றான். உடனே சமைக்கப்பட்ட உணவுகள் வண்டி வண்டியாக கொண்டு வரப்பட்டது. பிறகு நூற்றுக்கணக்கான குடங்களில் கொண்டு வரப்பட்ட கள் அனைத்தையும் குடித்தான். இவ்வளவு சாப்பிட்ட பிறகும் கும்பகர்ணனுக்கு பசி இன்னும் அதிகமானது. பசி அடங்காததால் ஆயிரத்து இருநூறு எருமை கடாக்களை தின்ற பிறகு அவன் சிறிது பசியாறினான். பிறகு அவன் உறங்கச் சென்றான். அப்போது கிங்கரர்கள் பயந்து சென்று உன் அண்ணன் இராவணன் அழைத்ததாக அவன் காதில் சென்று கூறினார்கள். பிறகு அவன் ஒரு நெடுமலையை போல் எழுந்துச் சென்றான். கும்பகர்ணன் அரசவை சென்றடைந்ததும், இராவணனின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். இராவணன், கும்பகர்ணனை தன் தோளோடு தழுவிக் கொண்டான்.

�� அங்கு கும்பகர்ணன் தனக்கு விசாலமாக இருக்கும் ஓர் அரியணையில் அமர்ந்தான். பிறகு இராவணன், கும்பகர்ணனுக்கு நல்ல உடைகளையும், விசேஷமான ஆபரணங்களையும் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தான். சந்தனக் குழம்பைக் கொண்டு வரச் செய்து, அதையும் அவன் உடலெங்கும் பூசிக்கொள்ளச் செய்தான். அவன் மார்பில் கவசத்தை அணிவித்து, நெற்றியில் வீர பட்டத்தைக் கட்டி போருக்குத் தயார் செய்தான். இதையெல்லாம் பார்த்த கும்பகர்ணன் இராவணனிடம், "எனக்குச் சிறப்பு செய்வதெல்லாம் எதற்காக" என்றான்.

அதற்கு இராவணன், இரண்டு மானிடர்கள், எழுபது வெள்ளம் வானர சேனையோடு இங்கு வந்துள்ளனர். அவர்கள் இலங்கையை சூழ்ந்து போரிட்டு, என்னையும் வென்று விட்டார்கள். ஆதலால் நீ சென்று அவர்களை உன் பசிக்கு இரையாக்கிக் கொள் என்றான். இதைக் கேட்டதும் கும்பகர்ணன் திடுக்கிட்டான்.

�� அண்ணா! போர் வந்துவிட்டதா! கற்புடைய சீதையின் துயரம் இன்னமும் தீரவில்லையோ? தேவலோகத்திலும், மண்ணுலகத்திலும் வளர்ந்த நமது புகழ் அழிந்து போனதோ? நாம் அனைவருமே அழியப் போகும் காலம் வந்து விட்டதோ? ஒருவனுக்கு நிலம் காரணமாகவும், பதவி காரணமாகவும் போர் வரும். ஆனால் உனக்கு ஒரு பெண்ணின் காரணமாக போர் வந்துவிட்டது. ஆனால் இன்று உனக்கு சீதையினால் அழிவு நேர்ந்து விட்டதே! அன்று அரசவை ஆலோசனையின் போது நானும், விபீஷணனும், பாட்டன் மாலியவானும் சீதையை விடுவிக்குமாறு சொன்ன அறிவுரைகளை நீ கேட்கவில்லை. விதியின் செயலை நாம் என்ன செய்வது? நம் குலத்தின் பண்பு அழிந்துவிட்டது. நம் உறவினர்களும், சேனைகளும், நம் குலமும் அழிய வழிவகுத்து விட்டாய். உன் நிலைமையை நினைத்தால் என் உள்ளம் பதறுகிறது. இனி நம் அசுர குலம் வாழுமோ! வாழாதோ! என்பது தெரியவில்லை என்றான்.

கும்பகர்ணன் போருக்குச் செல்ல விடைபெறுதல்!...

�� கும்பகர்ணன், அண்ணா! முன்பு நீ தர்மத்தைக் கடைப்பிடித்ததால் வலிமையும், செல்வமும் உனக்குப் புகழைத் தந்தன. ஆனால் எப்போது நீ தர்மத்தை மீறினாயோ, அப்போதே உன் அழிவைத் நீ தேடிக் கொண்டு விட்டாய். இனி உன்னை எவராலும் காப்பாற்ற முடியாது. இராம இலட்சுமணரின் வாக்கில் சத்தியமும், குணத்தில் நல்லொழுக்கமும் நிறைந்துள்ளது. ஆனால் நமக்கு நெஞ்சில் வஞ்சகமும், வாக்கில் பொய்யும், செயலில் பாவமும் நிறைந்திருக்கின்றது. இவ்வாறு இருக்கையில் நமக்கு எப்படி வெற்றி உண்டாகும். நான் உனக்கு கடைசியாக ஒன்று சொல்கிறேன். கடலை கடந்து வந்த வானரங்களும் இன்னும் துணையாக இராம இலட்சுமணருக்கு இருக்கின்றனர். சீதை அசோக வனத்தில் பெரும் துன்பத்தில் உள்ளாள். வாலியின் மார்பைத் துளைத்த பாணமும் இன்னும் இராமனின் அம்புறா துணியில் உள்ளது.

�� ஆகவே, நீ சீதையை இராமரிடம் சென்று ஒப்படைத்துவிட்டு விபீஷணனுடன் சேர்ந்து வாழ்வதே நலம். அதுவே உனக்கும், நம் குலத்துக்கும் நல்லது. இல்லையென்றால் நம் அரக்க குலம் அழிவது நிச்சயம் என்றான். கும்பகர்ணனின் அறிவுரையைக் கேட்டு கொதித்து எழுந்த இராவணன், காலினால் நிலத்தை ஓங்கி மிதித்தான். கும்பகர்ணா! எனக்கு அறிவுரை சொல்ல நான் உன்னை இங்கு அழைக்கவில்லை. நீ எனக்கு அறிவுரை கூற அவசியமும் இல்லை. நான் ஆயிரம் பேருக்கு அறிவுரை கூறுபவன். நான் கல்லாத கலையும் இல்லை, நான் வெல்லாத போரும் இல்லை. வெள்ளிமலையை அள்ளி எடுத்த தோள்களை உடைய என்னை அந்த மனிதர்கள் அசைக்க முடியாது. அந்த குரங்குகளை போல் அந்த மனிதர்களை வணங்கி விபீஷணனுடன் சேர்ந்துக் கொள். அது தான் உனக்கு பொருந்தும். உன் வீரம் பயனற்று போனது.

�� நீ போருக்கு தகுதி இல்லாதவனாக ஆகிவிட்டாய். போ! இன்னும் மாமிசங்களும், கள்ளும் மீதம் உள்ளது. அதை உண்டு விட்டு போய் உறங்கு. என் பகைவரை எப்படி அழிப்பது என்பது எனக்கு தெரியும். நீ இங்கிருந்து செல் என்றான். பிறகு இராவணன் தன் ஏவலாட்களை அழைத்து, என் தேரையும், ஆயுதங்களையும் கொண்டு வருக. நானே போருக்குச் சென்று அனைவரையும் ஒழிப்பேன் என எழுந்தான். அப்பொழுது கும்பகர்ணன் இராவணனை பணிந்து வணங்கி, அண்ணா! என்னை பொறுத்தருள வேண்டும். நீ போருக்குச் செல்ல வேண்டாம். அடியேன் போருக்குச் செல்கிறேன். ஆனால் நான் திரும்பி வருவேன்

https://telegram.me/aedahamlibrary

என்பதை என்னால் சொல்ல இயலாது. நான் போரில் இறந்துவிட்டால் நீ சீதையை இராமனிடம் ஒப்படைப்பது தான் நலம். என்னை வென்றவர் தங்களையும் வெல்வர். உன் அரக்க படைகள் அழிவதும் நிச்சயம்.

�� உன் மகன் இந்திரஜித் போருக்குச் சென்றால், அவன் இலட்சுமணனின் வில்லினால் அழிவது நிச்சயம். பிறகு உனக்கு ஏற்படும் முடிவை அறிந்துக் கொண்டு அதற்கேற்ப முயற்சி செய். நான் கடைசியாக உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் இதுநாள் வரைக்கும் ஏதேனும் தவறு செய்திருந்தால் அவற்றை பொறுத்தருள வேண்டும். இனி நான் தங்கள் முன் நின்று கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை என கண்ணீர் மல்க இராவணனை ஏற இறங்க பார்த்துவிட்டு, மனம் நொந்து போருக்கு புறப்பட்டான். அண்ணா! நான் விடைப்பெற்று கொள்கிறேன் எனக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். இராவணனின் கண்களில் கண்ணீர் நிரம்ப அசையாது கும்பகர்ணனை பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு கூடியிருந்த அனைவரும் துன்பத்தில் ஆழ்ந்தனர்.

கும்பகர்ணனும் விபீஷணனும்!..

��கும்பகர்ணனுக்கு துணையாக ஏராளமான படைகளை இராவணன் அனுப்பி வைத்தான். கும்பகர்ணன் சேனைகள் புடைசூழ வானமும், வையகமும் நடுங்க தேரில் ஏறி போருக்குச் சென்றான். சூலம், வேல், வில், சக்கரம் முதலிய ஆயுதங்களை சுமந்துக் கொண்டு சேனைகள் அவன் பின் தொடர்ந்துச் சென்றன. பெரிய மலை போல் தேரில் வரும் கும்பகர்ணனை, இராமர் பார்த்து இவன் யார்? என விபீஷணனிடம் கேட்டார். பெருமானே! இவன் காற்றைவிட விரைந்து செல்லும் கால்களையுடையவன். இவன் தான் தவறாகக் கேட்டுவிட்ட ஒரு வரத்தினால் எப்போதும் உறங்கிக் கொண்டே இருப்பவன். சிவபெருமான் இவனுக்கு அளித்த சூலப்படை இவனிடம் இருக்கிறது. அந்தச் சூலாயுதத்தைக் கொண்டு இவன் போரில் தேவர்களை ஓட வைத்தவன். இவனின் பெயர் கும்பகர்ணன். இராவணனுக்கு இளைவன், எனக்கு மூத்தவன்.

�� கும்பகர்ணன், இராவணனிடம் சீதையை கவர்ந்து வந்தது தவறு என கூறியும் அதை இராவணன் கேட்கவில்லை. இவன் சூலத்தை எடுத்தால் அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் உடையவன். விபீஷணன் இப்படி கூறியதைக் கேட்ட சுக்ரீவன், இராமரிடம், கும்பகர்ணன் பேராற்றல் உடையவன். நற்குணத்தில் சிறந்தவன். இவனை கொல்வதால் நமக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது. இவனை கொல்லாமல் நம்முடன் சேர்த்துக் கொண்டால், விபீஷணன் தன் அண்ணனை இழக்க மாட்டான் என்றான். இராமரும் சுக்ரீவனின் யோசனையைக் கேட்டு, இதை கும்பகர்ணனிடம் சொல்வது யார்? எனக் கேட்டார். உடனே விபீஷணன், தாங்கள் அனுமதி தந்தால் நானே சென்று கும்பகர்ணனிடம் சென்று பேசுகிறேன் என்றான். இராமர் விபீஷணனிடம், விபீஷணா! நீ கும்பகர்ணனிடம் சென்று, அவன் விரும்பினால் நம்முடன் வந்து சேர்ந்துக் கொள்ளச் சொல் என்றார்.

�� உடனே விபீஷணன் அங்கிருந்து புறப்பட்டு வானர சேனைகளை கடந்து கும்பகர்ணன் இருக்குமிடம் சென்றான். விபீஷணன் கும்பகர்ணனின் காலில் விழுந்து வணங்கினான். கும்பகர்ணன் விபீஷணனை தழுவிக் கொண்டான். கும்பகர்ணன் நீ ஏன் இங்கு வந்தாய்? நீ உத்தமன், நற்குணத்தில் சிறந்தவன். நம்மில் ஒருவனாவது உயிர் பிழைத்துக் கொண்டாய் என மகிழ்ந்திருந்தேன். தம்பி! விபீஷணா! நீ இங்கு வருவதற்கான காரணம் என்ன? உன்னால் நம் குலம் அழியாத

புண்ணியமும், புகழும் பெற்றது என நினைத்திருந்தேன். இராமன் உன்னை கைவிட மாட்டான். இராமனிடம் நீ இருக்கும் வரையில் உனக்கு இறப்பு இல்லை. அப்படி இருக்கையில் அவர்களை விட்டு நீ ஏன் இங்கு வந்தாய்? தீவினைகள் அனைத்தும் நீங்கப் பெற்று, மெய்ஞானத்தை பெற்ற விபீஷணா! தவங்களைச் செய்து ஒழுக்கம், தர்மம் இவற்றை கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறாய்.

�� பிரம்மதேவன் உனக்கு அழிவு இல்லாத ஆயுளைக் கொடுத்திருக்கிறான். தம்பி விபீஷணா! உனக்கு அரக்க குலத்தின் குணங்கள் இன்னும் போகவில்லையா? நாங்கள் போரில் மாண்டு இறந்தால், நீ உயிருடன் இருந்தால் தானே எங்களுக்கு ஈமச் சடங்குகள் செய்ய முடியும். நீ இல்லையென்றால் எங்களுக்கு யார் இதைச் செய்வது? விபீஷணா! அங்கே பார்! போருக்கு தயாராக இராமரும், இலட்சுமணனும் உள்ளனர். எப்படி இருந்தாலும் அவர்கள் எங்கள் உயிரை பறிக்க போகிறார்கள். ஆதலால் நீ சென்று இராமனிடம் சேர்ந்துக் கொள். இராமர் போரில் வென்ற பிறகு, சீதை இராமனிடம் சேர்ந்த பிறகு, அவர்களின் முன்னிலையில் இலங்கையின் ஒப்பற்ற அரசனாக வேண்டும். அதனால் இப்பொழுது நீ இராமனிடன் சென்றுவிடு என்றான்.

விபீஷணன் கும்பகர்ணனின் பாசம்!...

�� கும்பகர்ணன் சொன்னதைக் கேட்ட விபீஷணன், அண்ணா! நான் தங்களிடம் சேர்ந்துக் கொள்ள வரவில்லை. தங்களிடம் வேறு செய்தியை சொல்ல வந்துள்ளேன் என்றான். கும்பகர்ணன், அப்படியென்றால் நீ கொண்டு வந்த செய்தியைக் கூறு என்றான். அண்ணா! கருணையே வடிவான இராமர், தங்களை அவர்களுடன் சேர்ந்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். தாங்கள் அறவழியில் நடப்பீர்கள் என்றால் இராமருடன் வந்து சேர்ந்துக் கொள்ளுங்கள். இதுவே என்னுடைய விருப்பம் ஆகும். நீங்கள் இராமருடன் சேர்ந்துக் கொண்டால் நாம் நம் குலத்தை சிறப்புடன் ஆட்சி செய்யலாம். இராமர், தங்கள் மீது கொண்ட இரக்கத்தாலும், என் மீது கொண்ட அன்பாலும் உங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பியுள்ளார். நீங்கள் என்னுடன் வருவது எனது விருப்பமும் ஆகும் என்றான்.

�� வீபீஷணன் கூறியதைக் கேட்டு, கும்பகர்ணன் கண்ணீர் தழும்ப விபீஷணனை தழுவிக் கொண்டான். விபீஷணா! உலக வாழ்க்கை நீரின் மேல் எழுதியதற்கு சமமாகும். என்னை நெடுங்காலம் வளர்த்த அண்ணனுக்காக உயிர் கொடுப்பது தான் என் கடமை. தன் கடமையை மறப்பவன் அறிவற்றவன். கடமை மட்டுமே உடைமை. என் துன்பத்தை நீ நீக்க வேண்டும் என நினைத்தால், நீ விரைந்துச் சென்று இராமனிடம் சேர்ந்துவிடு. பிரம்மன் உனக்கு எண்ணிலடங்கா வரத்தினை அளித்துள்ளார். அதனால் நீ சிரஞ்ஜீவியாக வாழப் போகிறவன். நீ அறவழியில் நடக்கும் இராமனிடம் இருப்பது தான் நியாயம். எனக்கு மரணமே புகழுக்குரியதாகும். இதுவரை எனக்கு உண்ண உணவும் அளித்து என்னை சுமந்த அண்ணனுக்கு உயிரை தருவது தான் சிறந்தது. இது என்னுடைய கடமையும் ஆகும்.

�� நான் போரில் அனுமன், அங்கதன், சுக்ரீவன், நீலன் முதலிய வானர வீரர்களை வென்று என் ஆற்றலை இந்த உலகிற்கு காட்டுவேன். வானரங்களின் உயிரை துறப்பேன். நீ தாமதிக்காமல் இராம இலட்சுமணரிடம் சேர்ந்துக் கொள். நமக்குள் இனி எந்த பேச்சுவார்த்தையும் வேண்டாம். நாங்கள் இறந்த பிறகு, எங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நீ செய்வாயாக. இன்று நம் உறவு முடிந்து விட்டது. இனி நாம் இருவரும் சந்திக்கவும் வாய்ப்பில்லை. ஆதலால் நீ இங்கிருந்துச் செல் என்றான். பிறகு இருவரும் கண்ணீர் தழும்ப தழுவிக் கொண்டனர். கும்பகர்ணன், விபீஷணனுக்கு விடைக்கொடுத்து

அங்கிருந்து சென்றான். வீபீஷணன் அகமும், முகமும் மிகவும் வாடிப் போனது. இனியும் கும்பகர்ணனிடம் பேசுவதில் எந்த பயனும் இல்லை என நினைத்து அங்கிருந்து சென்றான். போகும் வழியில் நான் கும்பகர்ணனை எப்போது பார்க்கப் போகிறேன் என நினைத்து கும்பகர்ணனை திரும்ப திரும்ப பார்த்துக் கொண்டுச் சென்றான்.

�� கும்பகர்ணனும் தன் தம்பி விபீஷணனை பாசத்தோடு பார்த்தான். பிறகு இருவரும் அவரவர் வழியில் சென்றனர். விபீஷணன் இராமர் இருப்பிடத்தை அடைந்தான். அங்கு நடந்ததை அனைத்தையும் இராமரிடம் கூறினான், விபீஷணன். இராமர் விபீஷணனிடம், விபீஷணா! உன் முன்னால் உன் அண்ணன் கும்பகர்ணனை நான் எவ்வாறு கொல்ல முடியும்? அதற்காக தான் அவனை இங்கு அழைத்து வரச் சொன்னேன். ஆனால் கும்பகர்ணன் என் அழைப்பை மறுத்துவிட்டான். இனி என்னால் என்ன செய்ய முடியும். எல்லாம் விதியின் கையில் தான் உள்ளது என்றார். இப்படி இராமர் பேசிக் கொண்டிருக்கும் போது அரக்கப் படைகள், வானரப் படைகளை சூழ்ந்துக் கொண்டது. போர்க்களத்தில் பெரும் ஆரவாரம் உண்டானது.

கும்பகர்ணனின் போர்!...

�� போர் தொடங்கியது. அரக்க சேனைகளும், வானர சேனைகளும் எதிர்த்துப் போர் புரிந்தன. வானர வீரர்கள் கற்களையும், மலைகளையும், பாறைகளையும் அரக்கர்கள் மீது எறிந்தனர். அரக்கர்கள் வில், வேல், சூலம் முதலிய ஆயுதங்களை வானரங்கள் மீது எறிந்தனர். அரக்கர்களின் வில்லில் இருந்து வெளிவந்த அம்பு பல வானரங்களை கொன்றது. பதிலுக்கு வானரங்களும் மலை, பாறை, கல், மரம் முதலியவற்றை தூக்கி எறிந்தனர். இப்படி போர் மிக கடுமையாக நடந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்து கொண்டிருந்த தேவர்கள் திகைத்து நின்றனர். அப்பொழுது கும்பகர்ணன் போர்களத்திற்கு வந்தான். அவனிடம் பல வானரங்கள் அகப்பட்டனர். வானரங்கள் மலைகளை தூக்கி கும்பகர்ணன் மீது எறிந்தனர். ஆனால் அதை அவன் தூள் தூளாக்கினான்.

�� கும்பகர்ணன் தன்னிடம் அகப்பட்ட வானரங்களை வானத்தில் தூக்கி எறிந்தும், சில வானரங்களை வாயில் போட்டு உமிழ்ந்தும், சில வானரங்களை தன் கால்களால் மிதித்தும் கொன்றான். கும்பகர்ணன் இப்படி வானரங்களை கொன்று குவிப்பதை பார்த்த தேவர்கள் பயந்து ஓடினர். அப்போது நீலன், கும்பகர்ணன் மீது பெரும் மலையை தூக்கி எறிந்தான். கும்பகர்ணன் அதை தன் சூலத்தால் பொடி பொடியாக்கினான். பிறகு நீலன், கும்பகர்ணனின் தேரில் ஏறி அதிலிருந்த ஆயுதங்களை தூக்கி எறிந்தான். நீலன் எந்த ஆயுதங்களும் இல்லாமல் போர் புரிந்ததால், கும்பகர்ணனும் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தவில்லை. நீலன் கும்பகர்ணனை என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான்.

�� அப்போது கும்பகர்ணன், நீலனை தன் கையால் ஒரு தட்டு தட்டினான். இதனால் நீலன் மயங்கி கீழே விழுந்தான். இதைப் பார்த்த அங்கதன், கும்பகர்ணன் மீது ஓர் மலையை தூக்கி வீசினான். கும்பகர்ணன் அந்த மலையை தன் கைகளால் தூள் தூளாக்கினான். பிறகு அவன் அங்கதன் மீது ஓர் அம்பை ஏவினான். அங்கதன் அந்த அம்பை தன் கைகளால் பிடித்து கும்பகர்ணன் மீது எறிய ஓடி வந்தான். அப்போது கும்பகர்ணன், அங்கதனை பார்த்து, வானரமே! நீ யார்? வாலியின் மகனா? இல்லை சுக்ரீவனா? இல்லை இலங்கைக்கு தீ வைத்த அனுமனா? என்றான். அங்கதன், அரக்கப்படை தலைவனே! உன் அண்ணனான இராவணனை தன் வாலில் கட்டி, இரத்தம் சிந்த எட்டு திசைகளிலும் தாவி போர் புரிந்த வாலியின் மகன் நான். என் பெயர் அங்கதன்.



�� என் தந்தையை போலவே நானும் உன்னை என் வாலில் கட்டி இராமரின் பாதங்களில் வீழ்த்துவேன் என்றான். அப்போது கும்பகர்ணன், நீ சொல்வது சரிதான். உன் தந்தையை தன் ஓர் கணையால் வீழ்த்திய இராமனுக்கு நீ செய்ய வேண்டிய தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது என நகைத்தான். அப்போது அங்கதன், மலைகளை தூக்கி கும்பகர்ணன் மீது வீசினான். அம்மலை கும்பகர்ணன் மீது பட்டு பொடியானது. கும்பகர்ணன், தன் சூலாயுதத்தை அங்கதன் மீது வீசினான். அங்கதன் அந்த சூலாயுதத்தை தன் கைகளால் பிடித்து கும்பகர்ணன் மீது திருப்பி எறிந்தான். கும்பகர்ணன் அந்த சூலாயுதத்தை பொடி பொடியாக்கிவிட்டு அங்கதன் மார்பில் ஓங்கி குத்தினான். இதனால் அங்கதன் அந்த இடத்தில் மயங்கி விழுந்தான்.

கும்பகர்ணனின் போர் திறன்!...

�� அங்கதன் மயங்கி கீழே விழுந்ததை பார்த்த அனுமன் அங்கே ஓடி வந்தான். ஓர் பெரிய மலையை தூக்கி கும்பகர்ணனை நோக்கி வீசினான். கும்பகர்ணன் அம்மலையை தன் கையால் பிடித்து திரும்ப அனுமன் மீது வீசினான். அப்போது வானர வீரர்கள், அங்கதனை அங்கிருந்து தூக்கிச் சென்றனர். அனுமன் மறுபடியும் ஓர் மலையை தூக்கி, அரக்கனே! இந்த மலையை நான் உன் மேல் எறிவேன். இந்த மலையை உன்னால் தவிர்க்க முடியுமானால் நீ மிகவும் வலிமைமிக்கவன். உன் வலிமையை அனைவரும் போற்றுவர். அப்படி இல்லாமல் இந்த மலையால் தாக்கப்பட்டால் நீ என்னிடம் தோற்றவன் ஆவாய் பிறகு உனக்கும் எனக்கும் போர் இல்லை. நான் இங்கிருந்து சென்றுவிடுவேன் என்றான். கும்பகர்ணன் இதைக் கேட்டு, நான் உன் வலிமைக்கு குறைந்தவன் இல்லை எனக் கூறி சம்மதித்தான்.

�� பிறகு அனுமன் அந்த மலையை கும்பகர்ணன் மீது தூக்கி எறிந்தான். கும்பகர்ணன் அந்த மலையை தூள் தூளாக்கினான். இதனைப் பார்த்த அனுமன், இவன் மிகவும் வலிமை படைத்தவன். இவனை இராமரை தவிர வேறு எவராலும் கொல்ல முடியாது என நினைத்து அங்கிருந்துச் சென்றான். அப்பொழுது இலட்சுமணன் அங்கு வந்து போர் புரிவதற்கான அடையாளமான தன் நாணை இழுத்து பெரும் ஓசையை எழுப்பினான். பிறகு அங்கு ஆயிரமாயிரம் அம்புகளை ஏவி அரக்கப் படைகளை கொன்று குவித்தான். இலட்சுமணனின் கரவேகத்தை கண்டு கும்பகர்ணன் வியந்தான். பிறகு கும்பகர்ணன், இலட்சுமணன் முன்வந்து நின்றான். கும்பகர்ணன் தேரின் மீது ஏறி நின்று போர் புரிந்தான். இதனைப் பார்த்த அனுமன், இலட்சுமணனை தன் தோளில் ஏறி நின்று போர் புரியச் செய்தான்.

�� கும்பகர்ணன் இலட்சுமணனை பார்த்து, இலட்சுமணா! நீயோ! இராமனின் தம்பி, நானோ இராவணனின் தம்பி. நம் இருவரின் போரை காண தேவர்கள் முதலானோர் இங்கு வந்துள்ளனர். சூர்ப்பனகையின் மூக்கை அறுத்த உன்னை, இன்று அடியோடு ஒழிப்பேன் என்றான். இலட்சுமணன், அரக்கனே! வீரர்கள் சொல்லால் பெருமை பேச மாட்டார்கள். வில்லால் தான் பேசுவார்கள். உன்னைப் போல் வீண் பேச்சு பேச நான் விரும்பவில்லை. நான் என் வில்லினால் பேசுவேன் என்றான். இலட்சுமணனுக்கும், கும்பகர்ணனுக்கும் மிக கடுமையாக போர் நடந்தது. கும்பகர்ணன் விடுத்த அம்புகளை எல்லாம், இலட்சுமணன் அடித்து ஒழித்தான். பிறகு இலட்சுமணன் தன் வில்லைக் கொண்டு,

கும்பகர்ணனின் தேர் முதலியவற்றை ஒழித்தான். கும்பகர்ணன் மீதும் அம்புகளை ஏவி தாக்கினான். இதனால் கும்பகர்ணன் கடும்கோபம் கொண்டான்.

�� இப்பொழுதே உன்னை கொல்கிறேன் எனக் கூறி இலட்சுமணன் மீது கூர்மையான சூலாயுதத்தை வீசினான். இலட்சுமணன் அந்த சூலாயுத்தை ஒழித்தான். இலட்சுமணன், கும்பகர்ணன் தரையில் நின்று போர் புரிவதைக் கண்டு, மனமிரங்கி, அனுமனின் தோளில் இருந்து இறங்கி போர் புரிந்தான். அப்பொழுது இராவணன், கும்பகர்ணனுக்கு துணையாக அரக்க சேனைகளை அனுப்பி வைத்தான். புதியதாக ஓர் அரக்க படைகள் வருவதைக் கண்ட வானரங்கள் அங்கிருந்து ஓடினர். பிறகு கும்பகர்ணன், சுக்ரீவனிடம் போர் புரிய தொடங்கினான். அப்போது கும்பகர்ணன், சுக்ரீவன் மீது ஓர் கூர்மையான சூலாயுதத்தை எறிந்தான். சூலாயுதம் வந்த வேகத்தைப் பார்த்த அங்கிருந்தவர்கள் இறந்தான்! இறந்தான்! எனக் கத்தினார்கள். இதனைப் பார்த்த அனுமன், மின்னலை போல் வேகமாகச் சென்று அச்சூலாயுத்ததை பிடித்து ஒடித்தான். இதைப் பார்த்த கும்பகர்ணன், அனுமனின் வலிமையை பாராட்டினான்.

கும்பகர்ணன் சுக்ரீவனை தூக்கி செல்லுதல்!...

�� அனுமனின் வலிமையைக் கண்ட கும்பகர்ணன், நீ என்னுடன் போர் புரிய வா என்று அழைத்தான். அதற்கு அனுமன், நான் உன்னுடன் போர் செய்ய மாட்டேன் என முடிவு செய்த பிறகு உன்னுடன் போர் செய்வது தவறு எனக் கூறிவிட்டு அங்கிருந்துச் சென்றான். அப்பொழுது சுக்ரீவன், கும்பகர்ணனை தன் கைகளால் தாக்க தொடங்கினான். மிகவும் பலம் கொண்டு சுக்ரீவன் அவனைத் தாக்கினான். கும்பகர்ணன் அவனை பார்த்து, உன் வலிமை மிகவும் சிறந்தது. ஆனால் இன்று நான் உன்னை அழித்து விடுகிறேன் என்றான். பிறகு இருவரும் எதிரும்புதிருமாக மாறி மாறி சண்டையிட்டனர். இருவருக்கும் இடையில் கடும்போர் நிகழ்ந்தது. இருவரும் வெகுநேரம் சோர்வடையாமல் சண்டையிட்டனர். கும்பகர்ணனின் அடியை சுக்ரீவனால் தாங்க முடியவில்லை. இதனால் அவன் மயங்கி கீழே விழுந்தான்.

�� மயங்கிய சுக்ரீவனை, கும்பகர்ணன் தன் தோளில் தூக்கிக் கொண்டு நகருக்குள் சென்றான். அப்பொழுது சுக்ரீவன் எந்த உணர்வின்றி மயங்கி இருந்தான். அங்கிருந்த வானரங்கள், தங்கள் அரசன் கும்பகர்ணனின் கையில் அகப்பட்டு செல்வதைப் பார்த்து மிகவும் புலம்பி அழுதனர். இதைப் பார்த்த அரக்கர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். கும்பகர்ணன் சுக்ரீவனை தூக்கிச் செல்வதை பார்த்த அனுமன், இவனிடம் நான் சண்டையிட மாட்டேன் என சத்தியம் செய்துவிட்டேனே என நினைத்து என்ன செய்வதென்று தெரியாமல் கும்பகர்ணனை பின் தொடர்ந்து சென்றான். வானரங்கள் ஓடிச் சென்று இராமரிடம், எங்கள் அரசன் சுக்ரீவனை கும்பகர்ணன் தூக்கி கொண்டு செல்கிறான். இனி எங்களுக்கு யார் துணை எனக் கூறி அழுதார்கள். இதைக் கேட்ட இராமர், நெருப்பு போல் கண்கள் சிவக்க எழுந்தார்.

�� தன் வில் மற்றும் அம்பை கையில் எடுத்துக் கொண்டு கணப்பொழுதில் இலங்கை நகர் வாயிலை அடைந்தார். இராமர், சுக்ரீவனை இலங்கை நகருக்குள் கொண்டு சென்று விட்டால் பெரும் ஆபத்து ஏற்படும் என நினைத்து, கோட்டையின் வாயில்கள் அனைத்தையும் தன் அம்புகளை ஏவி அடைத்தார். அந்த அம்புகளை கடந்து இலங்கை நகருக்குள் செல்ல கும்பகர்ணனால் முடியவில்லை. பிறகு மிதிலை கடந்து போக நினைத்த அவனுக்கு அங்கும் அம்புகள் அவனை தடுத்தது. பிறகு அவன் இலங்கை நகருக்கு திரும்ப முடியாமல் திரும்பினான். திரும்பும்போது இராமர் அவனை எதிர்த்து நிற்பதை

கண்டான். இராமா! உனக்காக தான் நான் காத்துக் கொண்டு இருந்தேன். வலிமையுடையவர் செய்யும் போரில், நான் உன் தம்பி இலட்சுமணனுடனும் போர் செய்யவில்லை, அனுமனுடனும் போர் செய்யவில்லை, சுக்ரீவனிடமும் போர் செய்யவில்லை.

�� ஏனென்றால் இவர்கள் யாரும் எனக்கு நிகரானவர்கள் இல்லை. உனக்காக தான் நான் காத்து கொண்டிருந்தேன். இந்த சுக்ரீவனை நீ காப்பாய் என்றால் நிச்சயம் நீ சீதையை மீட்பாய் என்றான். கும்பகர்ணன் பேசியதைக் கேட்டு இராமர் புன்னகைத்தார். பிறகு இராமர், சுக்ரீவனை தூக்கி கொண்டு வந்த உன்னையும், மலை போல் உள்ள உன் தோளையும் நான் சாய்க்கவில்லை என்றால் உனக்கு தோற்றவன் ஆவேன் என்று கூறிவிட்டு கும்பகர்ணனின் நெற்றியை குறி வைத்து அம்புகளை எய்தினார். பிறகு கும்பகர்ணனின் நெற்றியில் இருந்து இரத்தம் ஆறு போல் வலிந்தது. அந்த இரத்தம் சுக்ரீவனின் முகத்தில் பட்டு, மயக்கம் தெளிந்து எழுந்தான். அப்பொழுது கும்பகர்ணன் மயங்கி ஒரு மலை விழுவது போல் கீழே விழுந்தான்.

இராமர் கும்பகர்ணன் மீது கருணை காட்டுதல்!...

�� இராமரின் அம்பினால், கும்பகர்ணன் ஒரு மலை விழுவது போல் மயங்கி கீழே விழுந்தான். கும்பகர்ணனின் இரத்தம் சுக்ரீவனின் மேல் பட்டு அவன் மயக்கம் தெளிந்தான். அப்போது சுக்ரீவன் மயக்கம் தெளிந்ததை கண்டு இராமர் மகிழ்ந்தார். அங்கு கும்பகர்ணன் அம்பு பட்டு மயங்கி விழுந்திருப்பதைக் கண்ட சுக்ரீவன், இராமர் தான் இவ்வாறு செய்திருப்பார் என நினைத்தான். உடனே சுக்ரீவன் இராமர் எங்கே இருக்கிறார் என சுற்றியும் பார்த்தான். பிறகு இராமரைக் கண்டு மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவன் கும்பகர்ணனின் மீது பாய்ந்து (சுக்ரீவன் இராவணனிடம் கிரீடத்தில் இருந்து மணிகளை பறித்து வந்தது போல்) காதையும், மூக்கையும் கடித்து அதைக் எடுத்துக் கொண்டு சென்றான். கும்பகர்ணனின் காதையும், மூக்கையும் நம் அரசர் சுக்ரீவன் கடித்து விட்டதை வானரங்கள் ஒருவருக்கொருவர் சொல்லி மகிழ்ந்தனர்.

�� சிறிது நேரம் கழித்து கும்பகர்ணன் மயக்கம் தெளிந்தான். அப்போது தான் பிடித்து வைத்திருந்த சுக்ரீவன் தப்பி ஓடியதையும், தன் மூக்கையும், காதையும் கடித்து கொண்டு சென்றதை அறிந்து மிகவும் வருந்தினான். இதனால் கடுங்கோபம் கொண்ட கும்பகர்ணன் தன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அவர்களை கொல்வேன் எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து எழுந்தான். தன் கையில் இருந்த வாள் மற்றும் கேடகம் கொண்டு வீசி வீசி போர் புரிந்தான். இதனால் பல வானரங்கள் மாண்டு விழுந்தனர். அப்போது ஜாம்பவான் இராமரிடம் சென்று, பெருமானே! இந்த கும்பகர்ணனை சீக்கிரம் கொல்லுங்கள். இல்லையெனில் நம் வானர படைகளை இவன் அழித்து விடுவான் என வேண்டினான். பிறகு இராமர் கும்பகர்ணனுடன் வந்த சேனைகள் அனைத்தையும் விரைந்து அழித்தார்.

�� இராமர் கும்பகர்ணன் கையில் இருந்த கேடகத்தை தன் அம்பை ஏவி அதை உடைத்தெறிந்தார். அப்போது கும்பகர்ணன் தன் கையில் இருந்த வாளைக் கொண்டு போர் புரிந்தான். பிறகு இராமர், கும்பகர்ணனை நோக்கி ஒவ்வொரு அம்பாக கணப்பொழுதில் செலுத்தினார். ஆனால் கும்பகர்ணன் இதையெல்லாம் தன் கையால் தடுத்து நிறுத்தினான். பிறகு மற்றொரு அம்பை ஏவி கும்பகர்ணனின் கையில் இருந்த வாளை உடைத்தெறிந்தார். தன் வாளை இராமன் உடைத்ததைக் கண்டு மற்றொரு வாளை கும்பகர்ணன் கையில் எடுத்துக் கொண்டு இராமரை தாக்க தொடங்கினான். அப்பொழுது இராமர் ஒவ்வொரு அம்பாக ஏவி கும்பகர்ணனிடம் இருந்த வாள், கேடகம், கவசம், சூலாயுதம் என அனைத்தையும் அறுத்தெறிந்தார்.

https://telegram.me/aedahamlibrary

�� அப்பொழுது இராவணன் கும்பகர்ணனுக்கு உதவியாக ஒரு சூலப்படையை அனுப்பினான். பிறகு கும்பகர்ணன் அந்த சூலப்படையைக் கொண்டு போர் புரிய தொடங்கினான். ஆனால் இராமர் அந்த படைகள் அனைத்தையும் தன் வில்லுக்கு இரையாக்கினார். கடைசியில் கும்பகர்ணன் மட்டும் தனியாக வெறுங்கையுடன் நின்றான். அப்பொழுது இராமர் கும்பகர்ணனை பார்த்து, பெரும் சேனைகளுடன் போர் புரிய வந்த நீ இப்பொழுது எல்லாம் இழந்து நிற்கின்றாய். நீ பண்பில் சிறந்த, நீதிநெறியில் உயர்ந்த விபீஷணனின் சகோதரன் என்பதால் உன்மேல் கருணை காட்டுகிறேன். நீ இலங்கை நகருக்குச் சென்று நாளை திரும்பி வந்து போர் செய்கிறாயா? அல்லது இப்பொழுது என்னுடன் போரிட்டு மடிகிறாயா? உனது விருப்பம் எதுவோ அதன்படி செய் என்றார்.

கும்பகர்ணனின் வரம்!...

�� கும்பகர்ணன் இராமரிடம், இராமா! என்னால் சூர்ப்பனகை போல் மூக்கறுக்கப்பட்டு உயிருடன் வாழ முடியாது. நான் இராவணனின் தவறை தடுக்க எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் என்னால் அதை தடுக்க முடியவில்லை. இன்று நான் உன் முன்னால் மூக்கும், காதும் அறுக்கப்பட்டு உன் முன் தலைகுனிந்து நிற்கிறேன். இந்த நிலைமையில் என்னால் இலங்கை நகருக்கு சென்று உயிர் வாழ முடியாது. நான் வீரப்போர் புரிந்து உயிர் விடுவேனே தவிர நான் திரும்பி செல்ல மாட்டேன் என கூறிவிட்டு தன் பக்கத்தில் இருந்த மலை போன்ற பாறையை எடுத்து இராமரை நோக்கி வீசினான். இராமர் அதை தன் அம்பால் தூள்தூளாக்கினார். பிறகு கும்பகர்ணன் விடாமல் ஒவ்வொரு மலையாக எடுத்து இராமர் மீது வீசினான். இராமர் அதையெல்லாம் தன் அம்பிற்கு இரையாக்கினார். இவ்வாறு கும்பகர்ணனுக்கும், இராமருக்கும் இடையே கடும்போர் நிகழ்ந்தது. இராமர் ஓர் அம்பை கும்பகர்ணனை நோக்கி ஏவினார்.

�� ஆனால் அந்த அம்பு கும்பகர்ணன் அணிந்திருந்த சிவபெருமான் கொடுத்த கவசத்தைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்ல முடியவில்லை. இதனால் இராமர், சிவபெருமான் அருளிய பாசுபதாஸ்திரத்தை எடுத்து, கும்பகர்ணன் மேல் ஏவி, அவனது கவசத்தை உடைத்தார். பிறகு இராமர் மற்றொரு அம்பை ஏவி கும்பகர்ணனின் வலக்கரத்தை அறுத்தெறிந்தார். ஆனால் கும்பகர்ணன் மற்றொரு கையால் வானரங்களை அடித்து வீழ்த்தினான். இதைப் பார்த்த தேவர்கள், இராமரிடம், இராமா! அவனின் மற்றொரு கையையும் அறுப்பாயாக எனக் கேட்டுக் கொண்டனர். பிறகு இராமர் மற்றொரு அம்பை செலுத்தி கும்பகர்ணனின் மற்றொரு கையையும் அறுத்தெறிந்தார். கும்பகர்ணன், என் கைகள் போனால் என்ன, என் கால்கள் உள்ளது. அதைக் கொண்டு போர் புரிவேன் எனக் கூறி வானரங்களிடம் போர் புரிந்தான். இதைப் பார்த்த இராமர், ஓர் அம்பை ஏவி கும்பகர்ணன் காலை அறுத்தெறிந்தார்.

�� ஆனால் கும்பகர்ணன் தன் மற்றொரு காலைக் கொண்டு போர் புரிய தொடங்கினான். பிறகு இராமர், கும்பகர்ணனின் மற்றொரு காலையும் ஓர் அம்பை ஏவி அறுத்தெறிந்தார். தன் கை, கால்கள் இழந்த கும்பகர்ணன் தன் வாயைக் கொண்டு ஊதி ஊதி போர் புரிந்தான். இராமர் கும்பகர்ணனின் தீர்க்கமான போரைக் கண்டு அதிசயத்து நின்றார். வெகு நேரம் கும்பகர்ணனால் ஊதி ஊதி போர் புரிய முடியவில்லை. பிறகு

கும்பகர்ணன் இராமரை நினைத்து, காலவரம்பின்றி வாழ வேண்டிய நான் இராவணனின் பெண்ணாசையால் இன்று வீழ போகிறேன். இராமனின் வில்லின் ஆற்றலுக்கு முன் ஆயிரம் இராவணன் வந்தாலும் இராமனுக்கு இணையாக முடியாது என நினைத்தான். பிறகு கும்பகர்ணன் இராமரிடம், இராமா! நீ சிபிச்சக்ரவர்த்தி போல் அபயம் என்று வருபவரை காக்கும் பண்புடையவன். விபீஷணன் அரக்க குலத்தில் பிறந்திருந்தாலும், உன்னை நம்பி அடைக்கலம் தேடி வந்தான். என் தம்பி விபீஷணன் நற்குணசீலன், நீதிநெறி தவறாதவன். அவனை காப்பது உன்னுடைய கடமை.

�� இராவணன், தம்பி என்று பாராமலும் விபீஷணனை கொல்ல வருவான், நீ அவனிடமிருந்து விபீஷணை காப்பாற்று. உன் தம்பிகளில் ஒருவர் அல்லது நீயோ யாரேனும் வீபீஷணனை விட்டு பிரியாமல் அவனை காக்க வேண்டும். இராமா! அனைத்தும் அறிந்த பரம்பொருளே! நான் இறுதியாக உன்னிடம் ஒரு வரம் கேட்க வேண்டும். அதை நீ எனக்கு மறுக்காமல் தர வேண்டும் என்றான். இராமர், கும்பகர்ணா! நீ உன் வரத்தை கேள் என்றார். கும்பகர்ணன், இராமா! இந்த யுத்தத்தை தேவர்கள் முதலானோர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். என்னை கை, கால்கள் இல்லாத முண்டம் என யாரும் ஏளனம் செய்யாத வண்ணம் என் கழுத்தை துண்டித்து யாருக்கும் எட்டாத தூரத்தில், கண்காணாமல் கடலில் போட்டு விடு. என் முண்டம் ஒருவர் கண்ணிற்கும் பட வேண்டாம். இந்த வரத்தை நீ எனக்கு அருள வேண்டும் என்றான். பிறகு இராமர், தன் அம்பினால் கும்பகர்ணனின் தலையை துண்டித்து, அது கடலில் மூழ்கும் படி செய்தார். கும்பகர்ணனின் தலை கடலில் மூழ்கியது.

இராவணனின் மந்திர சூழ்ச்சி!...

�� இராமர், கும்பகர்ணனை கடலில் வீசியதைப் பார்த்து வானரங்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். இதைப் பார்த்த அரக்கர்கள் அங்கிருந்து இலங்கை நகரை நோக்கி ஓடினர். இலங்கை நகரில் இராவணன் மந்திர ஆலோசனை மண்டபத்திற்கு வந்தான். அங்கு அவன் இனி சீதையை நான் எவ்வாறு அடைவது? சீதையை கவர்ந்து வந்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டது. இன்னும் நான் அவளை அடைந்த பாடில்லை. இனி என்ன செய்தால் நான் அவளை எளிதாக அடைய முடியும் என ஆழமாக யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மாய வேலையில் வல்லவனான மகோதரன் அங்கு வந்தான். அவன் இராவணனை வணங்கி நின்றான். பிறகு அவன் இராவணனிடம், அரசே! தங்கள் முகம் ஏன் இவ்வளவு வாடி இருக்கின்றது? தாங்கள் எதையோ நினைத்து சிந்தனையில் மூழ்கி இருக்கிறீர்கள் போல் தெரிகிறதே? தங்களின் முக வாட்டத்திற்கான காரணம் என்ன? என்று கேட்டான்.

�� இராவணன், மகோதரனே! நீ மந்திரத்திலும், தந்திரத்திலும் மிகச் சிறந்தவன். நான் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறேன். அழகில் ஒப்பற்றவளாய் இருக்கும் சீதையை அடைந்தால் மட்டுமே எனக்கு மகிழ்ச்சி கிடைக்கும். என்ன செய்தால் அவளை எளிதாக அடைய முடியும். மந்திரத்திலும், தந்திரத்திலும் வல்லவனாக இருக்கும் உன்னிடம் ஏதேனும் யோசனை இருந்தால் என்னிடம் கூறு என்றான். மகோதரன், அரசே! பெண்களுக்கு தாய் வீட்டின் மீது பாசம் அதிகம். தாய் தந்தையரின் மேல் அதிக பாசம் வைத்திருப்பார்கள். ஒரு சமயம், தட்ச பிரஜாபதியின் மகளாக, தாட்சாயணியாக அவதாரம் கொண்டு ஈசனை மணந்தாள். பின்னர் தட்சன் தான் நடத்திய யாகத்தில் ஈசனை அழைக்காததால் ஈசன் அங்கு செல்லாமல் இருந்தாலும் இறைவனின் ஆணையை மீறி தாட்சாயணி தட்சனின் யாகத்திற்கு சென்றாள். இது போல் பெண்களுக்கு தாய் வீட்டிற்கு செல்வதில் அதிக பிரியமுண்டு.

�� பெண்கள், தாய் தந்தையின் மேல் அதிக கவனம் செலுத்துவார்கள். இதை மையமாக கொண்டு, மாய வேலையில் வல்லவனாக இருக்கும் மருத்தனை, மிதிலாபுரியை ஆளும் சீதையின் தந்தை ஜனகனாக உருமாறி வரச் செய்து, உன்னை அடையாறு சீதையை வற்புறுத்தி கூறச் சொல்லலாம். தந்தையின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து அல்லது தந்தைக்கு தன்னால் எந்த இடரும் வரக்கூடாது என எண்ணி சீதை மனம் மாறுவாள். தங்களையும் நேசிப்பாள். இதைக் கேட்ட இராவணன்,

மகிழ்ச்சியில் துள்ளி குதித்தான். மகோதரா! என்னே! உன் அறிவு திறமை என பாராட்டினான். இந்த மந்திர சூழ்ச்சியில் எப்படியேனும் நான் சீதையை அடைவேன் என்றான். மகோதரா, நான் அசோக வனத்திற்கு சென்று சீதையுடன் உரையாடிக் கொண்டு இருக்கிறேன். அப்பொழுது நீ மருத்தனை ஜனகனாக மாறச் சொல்லி, அவனுடன் அங்கு வா என கூறிவிட்டு அவனை தழுவிக் கொண்டான். அசோக வனத்தில் சீதை, இராவணனின் பெருந்துயரத்திற்கு நடுவில் வேதனையுடன் இராமனை நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

�� அப்பொழுது இராவணன் பெண்கள் புடைசூழ, சீதையின் முன் வந்து நின்றான். சீதையின் முன் கைகூப்பி வணங்கி, பெண்ணே! அழகின் வடிவமே! உன்னால் நான் தினம் தினம் வருந்திக் கொண்டு இருக்கிறேன். உன் மீது கொண்ட ஆசையால் நான் அவதிப்பட்டு கொண்டிருக்கிறேன். நீ எப்போது என் மீது இரக்கம் காட்ட போகின்றாய். பெண்களுக்கு எப்போதும் இளகிய மனம் உண்டு. நீ என் மேல் ஏன் இரக்கம் காட்ட மறுக்கின்றாய்? உனக்கு என் மேல் என்ன கோபம்? நீ என்னை ஏற்றுக் கொண்டால், உன்னை அரசியாக்கி நான் உனக்கு சேவை புரிந்து என் வாழ்நாளை கழிப்பேன். அரண்மனையில் உள்ள பெண்கள் அனைவரும் உனக்கு சேவை புரிவார்கள். நீ மகாராணி போல் இங்கு வாழலாம். நீ இப்போதாவது என் மீது கருணை காட்டு என தரையில் விழுந்து வணங்கினான்.

மாய ஜனகனும், சீதையும்!...

�� இராவணனின் சொற்களை கேட்ட சீதை நெருப்பு போல் கொதித்தாள். அரக்கனே! கொடியவனே! பாதகனே! ஒரு சிங்கத்தை விரும்பும் நான், ஒரு நாய்குட்டியை விரும்புவேனா? இனியும் இது போன்ற ஆசை இருந்தால் அதை நீ மறந்து விடு. பெண்ணாசையால் அழிந்து விடாதே. உனக்கு அழிவு காலம் நெருங்கி கொண்டு இருக்கிறது. துஷ்டனே! இங்கே நின்று கொண்டு மதிகெட்டு பேசாதே. இங்கே இருந்து சென்று விடு என்று கடிந்து பேசினாள். சீதை இப்படி பேசியதைக் கேட்டு இராவணன் அமைதியாக இருந்தான். பெண்ணே! இராவணனாகிய என்னை மூடனாக நினைக்காதே. நீ என் ஆசைக்கு இணங்கவில்லை என்றால் நீ பிறந்த நகரையும், புகுந்த நகரையும் பொடிபொடியாக்குவேன். என்னை யார் என்று நினைத்தாய்? நான் வெள்ளி மலையை அள்ளியெடுத்தவன். நான் இந்த மூன்று உலகங்களையும் வென்றவன். நான் மிதிலாபுரிக்கும், அயோத்திக்கும் அரக்கர்களை அனுப்பியுள்ளேன்.

�� அயோத்தியில் பரதன், சத்ருக்கனையும், மிதிலையில் உன் தந்தை ஜனகனையும் கட்டி கொண்டு வருமாறு ஏவலாட்களை அனுப்பியுள்ளேன் என்றான். அப்பொழுது, மகோதரன் மாய ஜனகனாக மாறிய மருத்தனை கை, கால்களை கட்டி இழுத்துக் கொண்டு வந்தான். சீதை வருவது தன் தந்தை என நினைத்து, தந்தையின் இந்த நிலையைக் கண்டு மிகவும் வருந்தினாள். என்ன செய்வதென்று தெரியாமல் தந்தையை பார்த்து அழுதாள். கடவுளே! என் தந்தைக்கு இந்த துயரம் வந்ததே. இனி நான் என்ன செய்வேன். என்னை பெண்ணாக பெற்றதற்கு தாங்கள் இன்று பெருந்துயரம் அடைந்தீரே. என்னை பெற்ற பாவத்திற்காகவா! உங்களுக்கு இந்த தண்டனை. ஆயிரமாயிரம் வறியவர்களுக்கு உதவி செய்வீரே. இன்று நமக்கு உதவ யாரும் இல்லையே! தரும மூர்த்தியாகிய உங்களுக்கு துன்பம் நேர்ந்ததே. இனி நான் என்ன செய்வேன். என்னை சிறை மீட்டுச் செல்ல இன்னும் என் கணவர் வரவில்லையே! எப்படி உங்களை சிறை மீட்பேன்.

�� ஒரு பெண்ணாகிய நான் உங்களை எப்படி சிறை மீட்பேன் என பலவாறு புலம்பி அழுதாள். அப்பொழுது இராவணன் சீதையிடம், பெண்ணே! நீ கவலைப்படாதே. நீ என்னை ஏற்றுக் கொள். நான் உன் தந்தையை இலங்கையின் அரசனாக முடி சூட்டுகிறேன். நீயும் நானும் இங்கு மகிழ்ச்சியாக வாழலாம். உன்னை பெற்றெடுத்த தாய் தந்தையரை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். இதற்காக நீ என்னை ஏற்றுக்கொள்ள தான் வேண்டும் என்றான். சீதை, ஒரு சிங்கத்தை விரும்பும் நான், ஒரு

நாய்குட்டியுடன் வாழ்வேனா? என் கணவனின் அம்பிற்கு நீ அழிவது நிச்சயம். போர்க்களத்தில் நீ இராமனின் அம்புப்பட்டு வீழ்ந்து கிடப்பாய் என்றாள் கோபத்துடன். இராவணன் இதைக்கேட்டு கடுங்கோபம் கொண்டான். அப்பொழுது மகோதரன் இராவணனை பார்த்து, அரசே! தாங்கள் சீதையிடம் கோபம் கொள்ள வேண்டாம்.

இராவணனின் கோபம்!...

�� மகோதரன் இராவணனை பார்த்து, அரசே! தாங்கள் சீதையிடம் கோபம் கொள்ள வேண்டாம். சீதையின் தந்தையாகிய ஜனகன் கூறினால் நிச்சயம் அவள் கேட்பாள். பிறகு மாய ஜனகன் சீதையை பார்த்து, மகளே! என் செல்லமே! நீ அழாதே. நீ இந்த இராவணனை அடைந்தால், நிச்சயம் உன் துன்பம் தீரும். உன்னால் பிற உயிர்கள் அழிவது நல்ல செயலா? உன்னால் நான் இன்று இறக்கும் தருவாயில் உள்ளேன். ஆதலால் நீ இராவணனை ஏற்றுக் கொள். இதனால் உன் துன்பமும் நீங்கும். எங்கள் துன்பமும் நீங்கும் என்றான். இதைக் கேட்ட சீதை பெரும் கோபம் கொண்டாள். இப்படி பேசுகின்ற நீ என் தந்தையா? இது மிதிலையின் அரசன் ஜனகர் பேசும் வார்த்தையா? தண்ணீர் பனிக்கட்டியாக மாறினாலும், மேருமலை கடலில் மிதந்தாலும், சீதை ஒரு போதும் இந்த இராவணனை ஏற்க மாட்டாள். விஷம் போன்ற இந்த வார்த்தைகளை பேசி தாங்கள் உங்கள் பெருமையை இழந்து விடாதீர்கள் என்றாள் சீற்றத்துடன்.

�� அப்பொழுது இராவணனின் தூதன் ஒருவன் அங்கு வந்து, இராவணனின் காதில் போரில் உன் தம்பி கும்பகர்ணன் மாண்டு விட்டான் என்றும். இதனால் தேவர்களும், வானரங்களும் அங்கு பெரும் ஆரவாரம் செய்து கொண்டு இருக்கின்றனர் என்றும் கூறினான். கும்பகர்ணன் போரில் இறந்துவிட்ட செய்தியை அறிந்த இராவணன், மயங்கி விழுந்தான். மயக்கம் தெளிந்த அவன் இந்திரனை வென்ற என் அருமை தம்பியே! ஆயிரம் யானைகள் வந்தாலும் எதிர்த்து நிற்கும் வலிமை உடையவனே! உன் பிரிவை நான் எவ்வாறு தாங்குவேன். உன்னை நம்பி இருந்த என்னை இப்படி நட்டாற்றில் விட்டு சென்று விட்டாயே! அந்த இராமன் இறந்து விட்டான் என்னும் செய்தியை கேட்டு மகிழ வேண்டிய நான், நீ இறந்து விட்டாய் என்னும் செய்தியை கேட்கும் நிலைமை வந்துவிட்டதே! பொன்னையும், பொருளையும் இழந்தால் மீட்டு விடலாம். உன்னை எப்படி மீட்பது?

�� இனி அந்த வானரங்கள் உயிர் வாழ்வார்களே. என் தம்பியை கொன்ற அந்த இராமனையும் அவனுடன் இருக்கும் அந்த வானரங்களையும் உயிருடன் விடமாட்டேன் எனக் கூறி கோபங்கொண்டான். அப்போது அங்கு வந்த அமைச்சர்கள் இராவணனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். சீதை கும்பகர்ணன் மாண்டச் செய்தியை அறிந்து மகிழ்ந்தாள். போகும் போது மகோதரன், மாய ஜனகனை பார்த்து இவனை சிறையில் அடையுங்கள் என்றான். அப்போது சீதை தந்தையை பார்த்த வண்ணம் வருந்திக் கொண்டு இருந்தாள். அப்போது திரிசடை சீதையிடம், தாயே நீ வருந்த வேண்டாம். இங்கு உன் தந்தை போல் வந்தது, மாய வேலையில் வல்லவனான மருத்தன். நீ இதனை நினைத்து கவலைப்பட வேண்டாம் என ஆறுதல் கூறினாள். இராவணன் கோபத்துடன் ஆலோசனை மண்டபத்தை அடைந்தான்.

அதிகாயன் போருக்கு செல்லுதல்!

�� இராவணன் கோபத்துடன் ஆலோசனை மண்டபத்தை அடைந்தான். அங்கு நின்று கொண்டிருந்த அமைச்சர்களை பார்த்து, நீங்கள் எல்லாம் வீரர்களா? இல்லை கோழைகளா? உங்கள் உடம்பில் வீர இரத்தம் ஓடுகிறதா? இல்லை கழுநீர் ஓடுகிறதா? நான் இன்று என் அருமை தம்பியை இழந்துவிட்டேன். ஆனால் நீங்கள் இங்கு கல் போல் அசையாமல் நின்று கொண்டு இருக்கிறீர்கள். பகைவர்களை அழித்து வெற்றியுடன் திரும்புவோம் என வீர வசனம் பேசி கொண்டு சென்றீர்கள். நீங்கள் என் தம்பிக்கு துணையாக இருந்து அவனை காப்பாற்றவும் இல்லை, போரில் வெற்றி பெறவும் இல்லை. இனி போரில் வெற்றி பெற முடியும் என்றால் மட்டுமே போருக்குச் செல்லுங்கள். அப்படி இல்லையென்றால் யாரும் எங்கும் செல்ல வேண்டாம். என்னிடம் சொல்லுங்கள் நானே போருக்குச் செல்கிறேன் என அமைச்சர்களை மிக கடுமையாக பேசினான். இராவணன் சொன்னதைக் கேட்டு இராவணனின் மகன் அதிகாயன் எரிமலை போல் பொங்கி எழுந்தான்.

அதிகாயன்

�� அதிகாயன், இராவணன், தான்யமாலினி தம்பதிகளின் மகனாவான். மலை போன்ற பெரிய உருவம் கொண்டவன். பிரம்மாவை நோக்கி தவமிருந்து கவசம், தங்க ரதம் முதலிய பல வரங்களை பெற்றவன். அறநெறியை உணர்ந்தவன். வீரத்தில் சிறந்தவன். ஆலோசனைகள் சொல்லுவதில் வல்லவன், வேதங்களை முழுமையாகக் கற்றறிந்தவன்.

எதிரிப்படைகளைத் துண்டிப்பதில் சிறந்தவன். இவன் இந்திரனின் வஜ்ராயுதத்தையே அடக்கியவன்.

�� தந்தையே! தாங்கள் தம்பியை இழந்து தவிப்பது போல் அந்த இராமனின் தம்பி இலட்சுமணனை கொன்று அவனுக்கு உங்களின் வலியை கொடுப்பேன். நான் போருக்கு செல்கிறேன். தாங்கள் போருக்கு தனியாக செல்ல சொன்னாலும் சரி, சேனைகளை அழைத்து கொண்டு செல்ல சொன்னாலும் சரி. நான் அவ்வாறே செய்கிறேன். தாங்கள் எனக்கு விடை கொடுங்கள் என்றான். அதிகாயன் சொன்னதைக் கேட்ட இராவணன், அவனுக்கு பெரும் சேனையை அனுப்பி வைத்தான். சிறந்த வீரர்களான கும்பன், நிகும்பன், அகம்பன் ஆகியோரையும் அதிகாயன் தேருக்கு முன்பாகவும், பின்பாகவும் செல்லும்படி ஆணையிட்டு அனுப்பினான். அதிகாயன் இராவணனிடம் இருந்து விடைப்பெற்று, கவசத்தை அணிந்து கொண்டு கையில் வில்லையும், உடைவாளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். கோடிக்கணக்கில் யானைப்படையும், தேர்ப்படையும் உடன் சென்றது.

�� அதிகாயன் போர்களத்திற்கு வந்தடைந்தான். அங்கு இராமனால் ஏற்பட்ட அரக்க சேனைகளின் அழிவைக் கண்டு வருந்தினான். கும்பகர்ணனின் உடல் முண்டமாக கிடப்பதை கண்டு துடிதுடித்தான். இதை காணவா நான் இங்கு வந்தேன் என புலம்பி அழுதான். பிறகு அவன் கோபங்கொண்டு எழுந்தான். கும்பகர்ணனை கொன்ற இராமனின் தம்பி இலட்சுமணனை கொன்று, இராமனுக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்துவேன். அப்பொழுது தான் என் மனம் சாந்தமடையும் என்றான். இலட்சுமணனை என்னுடன் போர் புரிய வருமாறு மயிடன் என்னும் அரக்கனை தூது சொல்ல அனுப்பினான். மயிடன், இராமர் இருக்கும் இருப்பிடத்தை அடைந்தான். அவனை பார்த்த வானரங்கள், அவனை துன்புறுத்தினர். இராமர் அவர்களை தடுத்து நிறுத்தி தூதுவர்களாக வந்தவர்களை துன்புறுத்தக் கூடாது என தடுத்து நிறுத்தினார்.

மயிடனின் தூது!...

�� இராமர் மயிடனை பார்த்து, இங்கு எதற்காக வந்தாய்? எனக் கேட்டார். அதற்கு அவன், நான் இராவணனின் மகனான அதிகாயன் அனுப்பிய தூதுவன். அதிகாயன், தங்கள் தம்பி இலட்சுமணனிடம் போர் புரிய அழைப்பு விடுத்திருக்கிறார் என கூறினான். இராமர், தூதுவனே! என் தம்பியை வெல்ல இந்த உலகில் எவரும் இல்லை. போர்க்களத்தில் அவனின் வலிமையை காண்பீர்கள் எனக் கூறி அனுப்பினார். பிறகு இராமர், இலட்சுமணன் ஒருவனே அதிகாயனை தனித்து நின்று போரிட்டு அழிப்பான். இலட்சுமணனை சாதரணமாக எண்ணி விடாதீர்கள். என்னைக் காட்டிலும் இலட்சுமணன் சிறந்த வீரன் என அங்கிருந்தவர்களிடம் கூறினார். அப்பொழுது விபீஷணன், இராமா, அதிகாயன் பிரம்ம தேவனிடம் தவம் செய்து எவராலும் அழிக்க முடியாத வரத்தினை பெற்றுள்ளான்.

�� அதனால் இலட்சுமணனுடன் நாம் அனைவரும் செல்வது நலம் என்றான். இராமர், விபீஷணா! நீ இலட்சுமணனுடன் சென்று, அவனின் போர் வேகத்தையும், கர வேகத்தையும் காண்பாயாக எனக் கூறி இராமர் அனுப்பி வைத்தார். பிறகு இலட்சுமணனும், விபீஷணனும், இராமரை தொழுது அங்கிருந்து போர்க்களத்திற்கு சென்றனர். அங்கு அரக்க படைகளும், வானர படைகளும் பெரும் ஆரவாரத்துடன் மோதிக் கொண்டனர். அரக்கப் படைகளின் தாக்குதலை தாக்கு பிடிக்காமல் வானர படைகள் நிலை தடுமாறின. இலட்சுமணன் தன்னை நோக்கி வந்த அரக்கர்களை, தன் அம்பிற்கு இரையாக்கினார். இதைப் பார்த்த தாருகன் என்னும் அரக்கன், தேர் மீது நின்றுக் கொண்டு இலட்சுமணன் மீது அம்புகளை ஏவினான். இலட்சுமணன் அந்த அம்புகளை தகர்த்தெறிந்தார்.

�� பிறகு இலட்சுமணன் அம்பினை ஏவி தாருகனின் தலையினை துண்டாக்கினார். தாருகன் இறந்ததை கண்ட மற்ற அரக்கர்கள், இலட்சுமணனை தாக்க ஓடி வந்தனர். இலட்சுமணன் அவர்கள் அனைவரையும் நொடியில் வீழ்த்தினார். அப்பொழுது இராவணன், அதிகாயனுக்கு துணையாக யானைப்படைகளை அனுப்பி வைத்தான். அங்கு வந்த யானைப்படைகளை இலட்சுமணன் தன் அம்பினால் வீழ்த்தினார். இலட்சுமணனின் கரவேகத்தை எவராலும் பார்க்க முடியவில்லை. மற்றொரு புறம் அனுமன் யானைப்படைகளை வீழ்த்திக்

கொண்டு இருந்தான். அனுமன், யானைகளை கைகளால் அடித்தும், காலால் மிதித்தும், கடலில் ஏறிந்தும், தரையில் தேய்த்தும் கொன்றான்.

�� இதனைப் பார்த்து கோபங்கொண்ட தேவாந்தகன் எனும் அரக்கன் அனுமனைத் தாக்க வந்தான். அனுமனின் தாக்குதலை தாக்கு பிடிக்காமல் அவன் மாண்டான். இதைப் பார்த்து மிகவும் கோபங்கொண்ட அதிகாயன், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றான். அப்பொழுது அனுமன் உன்னுடன் திரிசரனையும் அழைத்து வா என்று கூறிக் கொண்டிருக்கும் போது அரக்கன் ஒருவன் தேரில் வந்து அனுமன் மீது பாய்ந்தான். அனுமன், அந்த அரக்கனை தேரில் இருந்து தள்ளி, தேரை அவன் மீது ஏற்றிக் கொன்றான். அனுமனின் போர் திறமையை கண்டு அதிகாயன் அதிசயித்தான்.

இலட்சுமணன் - அதிகாயன்!...

�� அனுமனின் போர் திறமையை கண்டு அதிகாயன் அதிசயித்தான். பிறகு அவன் நான் அனுமனுடனா போர் புரிய வந்தேன் என நினைத்துக் கொண்டு இலட்சுமணன் இருக்கும் இடத்திற்கு தேரை செலுத்தினான். இலட்சுமணனும், அதிகாயனும் போர் புரிய தொடங்கினர். அதிகாயன் தேரில் நின்று போர் புரிந்ததால், அங்கதன் இலட்சுமணனை தன் தோளின் மீது ஏறி போர் புரியுமாறு கேட்டுக் கொண்டான். அதிகாயன், இலட்சுமணன் இருவருக்கும் கடும்போர் நடந்தது. இலட்சுமணன் அம்புகளை ஏவி அதிகாயனின் தேரையும், தேர் பாகனையும் வீழ்த்தினார். பிறகு அதிகாயன் மேல் பல அம்புகளை ஏவினார். இலட்சுமணனின் அம்புகளை எதிர்த்து நின்று எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் நிற்கும் அதிகாயனைக் கண்டு வானர வீரர்கள் திகைத்து நின்றனர். தேவர்களும், யட்சர்களும், ரிஷ**p** முனிவர்களும் இந்த அதிசயச் சண்டையைக் காண விண்ணில் கூடி நின்றனர்.

�� இலட்சுமணன் அதிகாயனை வீழ்த்தும் வழி தேடித் திகைத்து நின்றார். அப்போது வாயுதேவன் இலட்சுமணன் அருகில் வந்து, அதிகாயனை பிரம்மாஸ்திரத்தால் மட்டுமே வீழ்த்த முடியும். வேறு எந்த ஆயுதங்களாலும் வீழ்த்த முடியாது எனக் கூறிவிட்டு சென்று விட்டார். உடனே இலட்சுமணன் பிரம்மாஸ்திரத்தை வரவழைத்து, பூமி அதிரும்படி அதனை அதிகாயன் மேல் செலுத்தினார். அதிகாயன் பிரம்மாஸ்திரத்தை வீழ்த்த ஏவிய அஸ்திரங்கள் பலனற்றுப் போயின. அந்த அஸ்திரம் அதிகாயனின் தலையை துண்டித்து வானவழியாகச் சென்றது. இதனை பார்த்த வானர வீரர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். தேவர்களும் இதனைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். பிறகு இலட்சுமணன் அங்கதனின் தோளில் இருந்து கீழே இறங்கினார். இலட்சுமணின் இத்தகைய ஆற்றலைக் கண்ட விபீஷணன், இந்திரஜித் அழிவது உறுதி என நினைத்துக் கொண்டான். அதிகாயன் மாண்டதை கண்ட நராந்தகன், இலட்சுமணனுடன் போரிட விரைந்து வந்தான்.

�� அங்கதன் அவனை தடுத்தி நிறுத்தி, தான் வைத்திருந்த வாளால் வெட்டிக் கொன்றான். போர்மத்தன் எனும் அரக்கன் நீலனோடு கடுமையாக வெகுநேரம் போரிட்டு மாண்டான். வயமந்தன் எனும் அரக்கனுடன், இடபன் எனும் வானர வீரன் போரிட்டு மாண்டான். கும்பனையும், அவனின் படைகளையும் சுக்ரீவன் தனித்து நின்று போரிட்டுக் கொன்றான். நிகும்பன் என்னும் அரக்கன் அனுமனிடம் போர்

புரிந்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கதன் சூலாயுதம் ஒன்றை எடுத்து அனுமனை நோக்கி தூக்கி எறிந்தான். அனுமன் அதை தன் கையில் பிடித்து, நிகும்பன் மீது செலுத்தினான். நிகும்பன் அந்த இடத்திலேயே மாண்டான். அதிகாயன் மாண்டச் செய்தி இராவணனுக்கு தெரிவிக்கப்பட்டது. அங்கு நடந்தவற்றை தூதர்கள் இராவணனிடம் கூறினர். இராவணன் இதைக் கேட்டு மிக கோபம் கொண்டான். இருப்பினும் தன் மகன் அதிகாயன் இறந்துவிட்டான் என்னும் செய்தியை அறிந்து வருந்தினான்.

�� இராவணனின் மனைவியும், அதிகாயனின் தாயுமான தான்யமாலினி தன் மகன் இறந்து விட்டான் என்னும் செய்தியை அறிந்து, ஓடி வந்து இராவணின் காலில் விழுந்து கதறி அழுதாள். என் மகன் எங்கே? என் மகன் மாண்ட பிறகு நான் உயிர் வாழ்வதில் என்ன பயன்? இனி நான் எப்பொழுது அவன் முகத்தை காண்பேன்? என் மகன் மாண்டதற்கு நீ தான் காரணம்? நீ பிறர் மனைவியின் மேல் ஆசைப்பட்டதால் இன்று என் மகனுக்கு இந்த நிலைமை. நீ மாற்றான் மனைவியை விரும்பி உன் அறிவை இழந்துவிட்டாய். உன் தம்பி விபீஷணன், கும்பகர்ணன் சொன்ன அறிவுரை நீ கேட்கவில்லை. உன் பாட்டனாகிய மாலியவான் சொன்ன அறிவுரையும் கேட்கவில்லை. உன் பெண்ணாசையால் இந்த அரக்க குலமே அழியப் போகிறது எனக் கூறி புலம்பி அழுதாள். பிறகு தான்யமாலினியை தேவலோக பெண்களான ரம்பை, ஊர்வசி, மேனகை போன்றோர் தேற்றி அழைத்துச் சென்றனர்.

இந்திரஜித் போருக்கு செல்லுதல்!...

�� இலங்கை நகரம் பெரும் சோகமயமாக காட்சி அளித்தது. இலங்கையில் எப்போதும் ஆடலும், பாடலும், நாத ஓசைகளும் ஒலித்துக் கொண்டிருக்கும். ஆனால் இன்று நகர் முழுவதும் அழுகுரல் மட்டுமே ஒலித்துக் கொண்டு இருந்தது. இலங்கையில் தங்கள் கணவர்களை இழந்த அரக்கர்கள் தலையை விரித்து ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்தனர். தங்கள் மார்பிலும், தலையிலும் அடித்துக் கொண்டனர். இந்த அழுகொலியைக் கேட்டு இந்திரஜித் திடுக்கிட்டான். ஏன் இந்த அழுகுரல்? என்ன நிகழ்ந்தது? இராவணன், இராமனிடம் தோற்றுவிட்டானா? இல்லை அந்த அனுமன் இலங்கை நகரை பெயர்த்து எடுத்துவிட்டானா? இந்த அழுகுரலுக்கான காரணம் என்ன? என்று தன் பக்கத்தில் இருந்தவர்களிடம் கேட்டான். அவர்கள் இந்திரஜித்திடம் சொல்ல அஞ்சி நடுங்கினார்கள். பிறகு அவர்கள் பயந்துக் கொண்டு, அசுர குலத்தின் வேந்தனே! உம் தம்பிகளான அதிகாயன், நிகும்பன், கும்பன் முதலியவர்களை இலட்சுமணன் அழித்து விட்டான் என்றனர்.

�� இதைக் கேட்ட இந்திரஜித் பெரும்கோபம் கொண்டான், இருப்பினும் தம்பிகளை இழந்துவிட்ட அவன் மிகவும் வருந்தினான். உடனே அவன் இராவணனின் மாளிகைக்கு விரைந்து வந்தான். அங்கு துயரத்தில் இருக்கும் இராவணனை பார்த்து வணங்கினான். பிறகு அவன் தந்தையே! ஏன் இலங்கை நகரம் முழுவதும் அழுகுரலாக கேட்கின்றது? இங்கு என்ன நேர்ந்தது எனக் கேட்டான். இராவணன், மகனே! இந்திரஜித், உன் தம்பிகளான அதிகாயன், நிகும்பன், கும்பன் போரில் மாண்டு விட்டனர் எனக் கூறினான். இதைக்கேட்டு இந்திரஜித் மிகவும் கோபங்கொண்டான். தந்தையே! தாங்கள் அறிவை இழந்து விட்டீர்களா? போருக்கு ஒவ்வொருவராக அனுப்பி தாங்கள் அனைவரையும் இழந்துவிட்டீர்கள். தாங்கள் இவர்களை அனுப்பியதற்கு பதில் என்னை அனுப்பி இருந்தால் நான் போரில் வெற்றி பெற்றிருப்பேன். அன்று தூதனாக வந்த அந்த அனுமனையும் கொல்லாமல் விட்டுவிட்டாய்.

�� அந்த இராமன் இருக்கும் இடம் தெரிந்தும் அவனை கொல்லாமல் இருக்கின்றாய். இனியும் தாங்கள் அறிவற்றவனாக முடிவு செய்யாமல், இலங்கை நகரை காப்பாற்றுங்கள். என் தம்பிகளை கொன்ற அந்த இலட்சுமணனை நான் கொல்வேன். இல்லையென்றால் நான் இலங்கை நகருக்குள் நுழைய மாட்டான். இப்பொழுதே நான் போருக்குச் செல்கிறேன் என்றான். இராவணன், மகனே! நீ சொன்ன இந்த

வார்த்தைகள் எனக்கு ஆறுதலாக இருக்கிறது என்றான். பிறகு இந்திரஜித் இராவணனை வணங்கிவிட்டு, போருக்கு செல்ல ஆயத்தமானான். தன் படைகளை திரட்டிக் கொண்டு, வில்லை கையில் ஏந்திக் கொண்டு போருக்குச் செல்ல தந்தையிடம் விடைபெற்றான். இராவணனை இந்திரஜித்தை மார்புடன் தழுவிக் கொண்டு, வெற்றியுடன் திரும்புவாயாக எனக் கூறி வழியனுப்பினான். இந்திரஜித்துடன் சென்ற படைகள் எண்ணில் அடங்காதவை.

இந்திரஜித் - இராமரின் நிகும்பலா யாகம்!...

�� இராவணன் போரில் தன் மகன், தம்பி உள்பட பலரை இழந்தான். இருந்தாலும் அவன் பின்வாங்காமல் தன் மகன் இந்திரஜித்தை போருக்கு அனுப்பி வைத்தான். ஆனாலும் ஏனோ இராவணனின் மனம் பயந்தது. தன் மகனையும் இழந்து விடுவோமோ என்று மனம் கலங்கினான். போரில் பல உயிர்களை இழந்து, இப்போது தன் மகனையே பலி கொடுக்க அனுப்புகிறோமே என்று அஞ்சினான் இராவணன். இராவணன், போரில் தன் மகன் இந்திரஜித்தை இழந்து விடக் கூடாது. அதே சமயம் இராமனையும் வீழ்த்த வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என யோசித்தான். தன் மகன் இந்திரஜித், ஸ்ரீPபிரத்தியங்கிரா தேவி பக்தன் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது.

�� உடனே இந்திரஜித்திடம், நீ ஸ்ரீPபிரத்தியங்கிரா தேவியின் பக்தன். ஆகவே நீ போரில் வெற்றி பெற, எட்டுத்திசைகளில் மயான பூமியை தோன்றுவித்து, ஸ்ரீPபிரத்தியங்கிரா தேவிக்கு நிகும்பலா யாகம் செய்தால் உன்னை யாராலும் வீழ்த்த முடியாது என்றான் இராவணன். தன் தந்தை இராவணன் ஆலோசனைப்படி பிரம்மாண்டமான நிகும்பலா யாகம் செய்தான் இந்திரஜித். அனுமன் இராவணனின் திட்டத்தையும், இந்திரஜித்தின் நிகும்பலா யாகத்தையும் அறிந்து கொண்டான். உடனே அனுமன் இராமரிடம் விரைந்து வந்தான். தங்களை வீழ்த்த இந்திரஜித் நிகும்பலா யாகம் செய்து ஸ்ரீPபிரத்தியங்கிரா தேவியை தனக்கு உதவி செய்ய அழைக்கிறான் என்றான் அனுமன். இதை கேட்ட இராமர், அனுமனே! நீ கவலை கொள்ள வேண்டாம். தேவி பிரத்தியங்கிரா, எப்போதும் நல்லமுறையில் நடப்பவர்களுக்குதான் துணையாக இருப்பாள்.

�� நேற்றுவரையில் இந்திரஜித் நல்லமுறையில் ஸ்ரீPபிரத்தியங்கிரா தேவியின் பக்தனாக இருந்து வந்தான். அதனால் அவனுக்கு தேவி துணையாக இருந்தாள். ஆனால் இன்றோ அவன் தவறான செயலுக்கு

தேவியை துணைக்கு அழைக்கிறான். நிச்சயமாக அவன் ஸ்ரீபிரத்தியங்கிரா தேவியின் அருளை பெற மாட்டான் என்று கூறினார். பிறகு இராமர், ஸ்ரீ**P**பிரத்தியங்கிரா தேவியை மனதால் வணங்கி நல்ல எண்ணத்தோடு பூஜை செய்தார். இராமர் மற்றும் இந்திரஜித் இருவரும் ஸ்ரீ**P**பிரத்தியங்கிரா தேவியின் பக்தர்கள். இருவரும் தேவியின் அருளுக்காக கடுமையாக பூஜை செய்தனர். இவர்களில் யாருக்கு ஸ்ரீ**P**பிரத்தியங்கிரா தேவி துணையிருந்து உதவி செய்வாள்**?** என்று தேவலோகமே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது**.**

�� ஸ்ரீ**P**பிரத்தியங்கிரா தேவி இந்திரஜித்தின் முன் தோன்றினாள். இந்திரஜித், நீ மிகச் சிறந்த என்னுடைய பக்தன். உன் தந்தை இராவணனின் தீய எண்ணத்துக்கு நீ துணை போகலாமா? தீய எண்ணத்துக்காக நீ எவ்வளவு நிகும்பலா யாகம் செய்தாலும் நான் உனக்கு துணையாக இருக்கமாட்டேன். இருந்தாலும் நீ என் தீவிர பக்தனாக இருப்பதால் உலகம் இருக்கும்வரை உன் புகழ் இருக்கும். நீ யாகம் செய்த இந்த இடமும் உன் புகழ் பேசும் என்று ஆசி வழங்கினாள் தேவி. பிறகு ஸ்ரீ**P**பிரத்தியங்கிரா தேவி இராமர் முன் தோன்றி**,** உன் பூஜைக்கான எண்ணம் மிகவும் சிறந்தது**.** இந்த போரில் நீ வெற்றி பெறுவாய்**.** நான் உனக்கு துணையாக இருப்பேன் எனக் கூறி மறைந்தாள்**.**

https://telegram.me/aedahamlibrary

இந்திரஜித் போர்!...

�� இந்திரஜித் தேரில் ஏறிக் கொண்டு தேவர்களையெல்லாம் வென்ற வில்லை கையில் ஏந்திக் கொண்டு போருக்கு புறப்பட்டான். அவனுடன் அரக்க சேனைகள் புடைசூழ பின் தொடர்ந்து வந்தன. போர்க்களத்தில் இலட்சுமணன் அதிகாயனைக் கொன்று விட்டு, அடுத்து இராவணன் அல்லது இந்திரஜித் தன் படைகளோடு வருவார்கள் என எதிர்நோக்கி காத்து கொண்டு தயாராக நின்று கொண்டிருந்தான். இந்திரஜித், இலட்சுமணனின் எதிரே வந்து நின்றான். இந்திரஜித், என் தம்பிகளான அதிகாயன், நிகும்பன், கும்பனை கொன்ற இலட்சுமணனை இன்று போரில் கொல்லாமல் நான் நகர் திரும்ப மாட்டேன். இலட்சுமணனின் இரத்தத்தை நான் பூமி தேவிக்கு பருக கொடுப்பேன். நான் அவனை வெல்லவில்லையென்றால் தேவர்களும், விண்ணுலகத்துவரும் என்னை இகழ்வார்கள் என கோபத்துடன் கூறினான்.

�� இலட்சுமணன், இந்திரஜித்தை பார்த்து இவன் யார்? என விபீஷணனிடம் கேட்டான். இலட்சுமணா! இவன் இராவணனின் மகன். மிகவும் வலிமை படைத்தவன். மாய வேலைகள் செய்வதில் வல்லவன். இந்திரனை வென்றவன். இவனிடம் தாங்கள் தனியாக போர் புரிய வேண்டாம். அனுமன், ஜாம்பவான், சுக்ரீவன், அங்கதன், நீலன் ஆகியோர் உன்னுடன் இருக்கட்டும் என வணங்கி கூறினான். இலட்சுமணன், நீ கூறியது நன்று எனக் கூறிவிட்டு போருக்கு தயாரானான். இலட்சுமணனுக்கு துணையாக அனுமன் அங்கு வந்து சேர்ந்தான். சுக்ரீவன் தன் பெரிய சேனைகளை அழைத்துக் கொண்டு இலட்சுமணனுக்கு முன் வந்து நின்றான். அங்கதனும் இலட்சுமணனுக்கு துணையாக அங்கு வந்து நின்றான்.

�� இந்தப் போரைக் காண தேவர்கள் வானத்தில் வந்து தோன்றினர். இரு படைகளும் எதிரெதிரே மோதிக் கொண்டன. வானரங்கள் அரக்கர்களின் மீது குன்றுகளை தூக்கி எறிந்தனர். அரக்கர்களும், வானரங்களின் மீது வாள், சூலாயுதம் முதலியவற்றை கொண்டு தாக்கினர். போர்க்களத்தில் எங்கு பார்த்தாலும் இரத்த பூமியாக காட்சி அளித்தது. ஒரு புறத்தில் அங்கதன் மிக கடுமையாக போர் புரிந்து கொண்டிருந்தான். மற்றொரு புறம் நீலன், இடபன், ஜாம்பவான், மயிந்தவன் முதலானவர்கள் போர் புரிந்து கொண்டிருந்தனர். இந்திரஜித் தனியாக நின்று போர் புரிந்து கொண்டிருந்தான். அப்போது சுக்ரீவன் முதலிய வானர வீரர்கள் இந்திரஜித்தை எதிர்த்து போர் புரிய தொடங்கினர். அப்பொழுது

இந்திரஜித் அனுமனை பார்த்து, அடேய்! அனுமனே! நில்லடா! என் தம்பிகளை கொன்ற உன்னை, நினைத்துக் கொண்டு தான் நான் போருக்கு வந்தேன்.

�� வானரங்களாகிய நீங்கள் குன்றுகளையும், பாறைகளையும் தூக்கி எறிந்தால் நீங்கள் வெற்றி பெற முடியுமா என்ன? நான் போருக்கு வராததால் நீ உன் ஆண்மை பெரிதென கூறிக் கொண்டிருக்கிறாய். நீ எறியும் இந்த மலைகளும், பாறைகளுமா? என்னை கொல்ல போகிறது. நான் இப்பொழுது போருக்கு வந்துவிட்டேன். இனி உங்களால் என்னை கொல்ல முடியாது. உங்கள் அனைவரின் உயிரையும் நான் எடுப்பேன் என்றான். இதைக் கேட்ட அனுமன் இந்திரஜித்தை பார்த்து, போர் புரிபவர்கள் தங்களை பெருமையாக கூற மாட்டார்கள். வீரத்தில் நீ மட்டும் தான் சிறந்தவன் என பெருமை கொள்ளாதே என்றான்.

வானரங்கள் இந்திரஜித்துடன் போரிடுதல்!...

�� அனுமன் இந்திரஜித்தை பார்த்து, போர் புரிபவர்கள் தங்களை பெருமையாக கூற மாட்டார்கள். வீரத்தில் நீ மட்டும் தான் சிறந்தவன் என பெருமை கொள்ளாதே. எங்களிடமும் வலிமை வாய்ந்த வீரர்கள் உள்ளார்கள் என்பதை மறந்து விடாதே. அவர்களுடன் உன்னை ஒப்பிட்டால் அவர்களை காட்டிலும் நீ சிறியவன் ஆவாய். எங்களிடமும் வில்லில் சிறந்த வீரர்கள் உள்ளனர். நீ வேண்டுமென்றால் இந்திரனை வென்றவனாக இருக்கலாம். ஆனால் நாங்கள் உன்னிடம் தோல்வி பெற வரவில்லை, வெற்றி பெறவே வந்துள்ளோம். வீரர்கள் வாயால் பேசுவது சிறப்பல்ல, கையால் பேசுங்க என்றான். பிறகு அனுமன் இந்திரஜித்தை பார்த்து, நீ யாருடன் போர் புரிய வந்தாய்? எங்களுடனா? இல்லை இலட்சுமணனுடனா? இல்லை இராவணனை அழிக்க வந்திருக்கும் இராமனுடனா? என்றான்.

�� இந்திரஜித், என் தம்பி அதிகாயனை கொன்ற இலட்சுமணனின் உயிரை எடுக்க தான் வந்துள்ளேன். நான் விண்ணுலகத்தவரையும், மண்ணுலகத்தவரையும் தனியாக நின்று அழிக்கும் ஆற்றல் படைத்தவன் என்றான். பிறகு அனுமன் இந்திரஜித்தை நோக்கி ஒரு பாறையை தூக்கி எறிந்தான். ஆனால் அந்த பாறை இந்திரஜித் மேல் பட்டு துள்தூளானது. நீலனும் இந்திரஜித்தை நோக்கி மலைகளை எறிந்து கொண்டு இருந்தான். ஆனால் இந்திரஜித் அதை தன் அம்புகளால் தூள்தூளாக்கினான். பிறகு அங்கதன் வந்து போர் புரிய தொடங்கினான். ஆனால் அவனை இந்திரஜித்தின் பாணங்கள் வீழ்த்தியது. வானரங்கள் இந்திரஜித்தின் மீது பாறைகளை தூக்கி போட்டு களைத்து போயினர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இலட்சுமணன், விபீஷணா! நீ சொன்னது சரி தான். நம் படைகள் அழிந்துக் கொண்டிருக்கிறது.

�� அங்கே பார்! நம் படைகள் வீழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் முதலில் படைகளை அனுப்பியது தவறு. நானே சென்று அவனிடம் போர் புரிந்திருக்க வேண்டும் என்றான். விபீஷணன், இலட்சுமணா! முன்பு தேவர்களும் இப்படித்தான் இவனிடம் தோற்றனர். இவனிடம் கவனமாக போர் புரிய வேண்டும். ஏனென்றால் இவன் மாய வேலை செய்வதில் வல்லவன் என்றான். பிறகு இலட்சுமணன், இந்திரஜித்தை எதிர்த்து போரிட அவன் முன் சென்று நின்றான். அப்பொழுது இந்திரஜித், சாரன் என்னும் ஒற்றனை பார்த்து இவன் யார் எனக் கேட்டான். சாரன், இவன் தான் இராமனின் தம்பி இலட்சுமணன். தங்கள் தம்பிகளை கொன்றவன்

என்றான். இதைப் கேட்ட அங்கிருந்த அரக்கர்கள் இலட்சுமணனை தாக்க ஓடி வந்தனர்.

�� இலட்சுமணன், அவர்கள் அனைவரையும் தன் அம்புகளுக்கு இரையாக்கினார். இலட்சுமணனின் வில் வேகத்தையும், கரவேகத்தையும் கண்டு இந்திரஜித் வியப்படைந்தான். இலட்சுமணனை பார்த்து, இவன் சிறந்த வில் வீரன் எனப் புகழ்ந்தான். அங்கு யானைப்படைகள், குதிரைப்படைகள் என அனைத்தையும் இலட்சுமணன் அம்பை ஏவி அழித்துக் கொண்டிருந்தான். இலட்சுமணனின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் அரக்கர்கள் மாண்டனர். இதைப் பார்த்த இந்திரஜித் தன் படைகள் அழிவதைக் கண்டு கோபங்கொண்டான். உடனே அவன் தேரில் நின்று இட்சுமணனுடன் போர் புரிய தொடங்கினான். இதைப் பார்த்த அனுமன், இலட்சுமணனை தன் தோளில் ஏறிக் கொண்டு போர் புரியுமாறு வேண்டினான். இலட்சுமணன் அனுமனின் தோளில் இருந்துக் கொண்டே அரக்க சேனைகளை அழித்தார்.

இந்திரஜித்தின் நாகபாசம்!...

�� இலட்சுமணன் அனுமனின் தோளில் இருந்துக் கொண்டே அரக்க சேனைகளை அழித்தார். இந்திரஜித் இலட்சுமணனை நோக்கி ஆயிரம் ஆயிரம் பாணங்களை ஏவினான். இலட்சுமணன் அந்த பாணங்களை எல்லாம் தகர்த்தெறிந்தார். இலட்சுமணன், இந்திரஜித்தை நோக்கி ஆயிரமாயிரம் பாணங்களை ஏவினான். இந்திரஜித் அவற்றை தூள்தூளாக்கினான். இருவரும் ஏவும் பாணங்கள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்டு தூளாகின. பிறகு இலட்சுமணன் ஒரு பாணத்தை ஏவி இந்திரஜித்தின் கவசத்தை அறுத்தெறிந்தார். அனுமன், இந்திரஜித்தின் தேரை காலால் உதைத்து உடைத்தான். பிறகு இலட்சுமணன் ஓர் அம்பை ஏவி இந்திரஜித்தின் வில்லை உடைத்தார். மறுபடியும் இலட்சுமணன் ஓர் பாணத்தை இந்திரஜித்தின் மீது ஏவினார். அந்த அம்பு இந்திரஜித்தின் மார்பில் துளைத்தது.

�� அவன் மார்பில் இரத்தம் வலிந்துக் கொண்டிருந்தது. அப்பொழுது இந்திரஜித்துக்கு உதவ துமிராட்சசனும், மகாபாரிசுவனும் வந்தனர். அவர்கள் இலட்சுமணனை நோக்கி எதிர்க்க தொடங்கினர். இலட்சுமணன் அவர்களை தன் அம்புகளுக்கு இரையாக்கினார். இலட்சுமணனின் வில் திறமையைக் கண்டு இந்திரஜித் பாராட்டினான். பிறகு இந்திரஜித் போர் புரிய மற்றொரு தேரில் ஏறினான். இலட்சுமணன் தன் அம்பை ஏவி அத்தேரை ஒடித்தார். இவ்வாறு இந்திரஜித் ஏறும் தேரை இலட்சுமணன் அழித்த வண்ணம் இருந்தார். இலட்சுமணரின் இந்த போரை கண்டு தேவர்கள் அதிசயித்தனர். பகல் பொழுது மறைய தொடங்கி இருள் சூழ்ந்தது. இந்திரஜித் வானத்தில் போய் மறைந்தான். வானர வீரர்கள் இந்திரஜித் பயந்து ஓடி பயந்து விட்டான் என மகிழ்ந்தனர்.

�� தேவர்கள், மாயத்தில் வல்லவனான இந்திரஜித் என்ன செய்வானோ என பயந்துக் கொண்டு இருந்தனர். இந்திரஜித் மேக மண்டலத்தில் போய் நின்று கொண்டான். தான் பெற்ற தவத்தின் பலனாக, அவன் மிகச்சிறிய உருவம் எடுத்துக் கொண்டான். இங்கு இலட்சுமணன், அனுமனின் தோளில் இருந்து இறங்கி இளைப்பாறிக் கொண்டிருந்தார். அப்போது இந்திரஜித் நாகபாசம் (பாம்புருவான ஒரு படைக்கலம்) என்னும் அஸ்திரத்தை மந்திரம் சொல்லி கையில் எடுத்தான். அங்கு இலட்சுமணனும், வானர வீரர்களும் இந்திரஜித் பயந்து ஓடிவிட்டான் நினைத்து மகிழ்ச்சியாக இருந்தனர். அந்த நேரம் பார்த்து இந்திரஜித் நாகபாசத்தை இலட்சுமணன் மீது ஏவினான். உலகமே எதிர்த்தாலும்,

எதிர்த்து போர் புரியும் இலட்சுமணன், தன் மீது நாகபாசம் ஏவியது இந்திரஜித் என்பதை தெரியாமல் ஒடுங்கி விழுந்தார்.

�� அப்போது அனுமன், இதைச் செய்தவனை பிடிப்பேன் என எழுந்தபோது நாகபாசம் அனுமனையும் கட்டிப் போட்டது. இவர்கள் மட்டுமில்லாமல் அங்கிருந்த வானர வீரர்கள் அனைவரையும் நாகபாசம் கட்டிப்போட்டது. நாகபாசத்தால் கட்டுண்ட வானர வீரர்கள் எழ முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் கீழே விழுந்தனர். என்ன செய்வதென்று தெரியாமல் அவர்கள் புலம்பி இருந்தனர். இலட்சுமணன் நாகபாசத்தால் கட்டுண்டதைக் கண்டு அனுமனும், மற்ற வானர வீரர்களும் வருந்தினார்கள். அங்கு அங்கதன், சுக்ரீவன் முதலானோர் நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்தனர். நாகபாசத்தை எப்படி அழிப்பது என்பது இலட்சுமணருக்கு தெரியும். இருப்பினும் இலட்சுமணன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடப்பதைக் கண்டு வருந்தினர்.

இராமர் இலட்சுமணரை நினைத்து வருந்துதல்!...

�� இந்திரஜித், நான் இங்கு வந்த வேலையை முடித்து விட்டேன். என் உடல் சோர்வை நீக்கி விட்டு நாளை மறுபடியும் வருவேன் எனக் கூறிவிட்டு அங்கிருந்து அரண்மனைக்குச் சென்றான். இராவணனிடம் சென்று, தந்தையே! வணக்கம். நான் இராமனை தவிர மற்ற அனைவரையும் நாகபாசத்தை ஏவி கொன்று விட்டேன். திரும்பவும் நாளைச் சென்று இராமனை கொல்வேன் என்றான். இதனைக் கேட்டு இராவணன் மகிழ்ந்தான். பிறகு இந்திரஜித் நான் மறுபடியும் செல்ல வேண்டியுள்ளதால் நான் என் மாளிகைக்கு சென்று ஓய்வு எடுத்து கொள்கிறேன் எனக் கூறி விட்டு அங்கிருந்துச் சென்றான். அங்கு இலட்சுமணன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடப்பதைப் பார்த்து விபீஷணன் வருந்திக் கொண்டு இருந்தான். அப்போது அங்கு அனலன் என்னும் வானர வீரன் விபீஷணனுக்கு ஆறுதல் கூறினான்.

�� பிறகு அனலன் அங்கிருந்து ஓடிச் சென்று இராமரிடம், இலட்சுமணன் நாகபாசத்தால் கட்டுண்டு அசைவில்லாமல் இருக்கிறார் எனக் கூறினான். இதைக் கேட்டு இராமர் ஆழ்ந்த துயரம் அடைந்தார். அவரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. உடனே இராமர் போர்க்களத்திற்கு விரைந்து சென்றார். இருளில் சூழ்ந்திருந்த போர்க்களத்தை ஒரு அக்னி கணையை ஏவினார். அந்த இடத்திலிருந்த இருள் நீங்கி சூரிய வெளிச்சம் போல் ஒளி பரவியது. இராமர், அங்கு நாகபாசத்தால் வீழ்ந்து கிடக்கும் இலட்சுமணரை பார்த்தார். இலட்சுமணரை அன்போடு தன் மார்பில் தழுவிக் கொண்டார். இலட்சுமணனின் நிலையைக் கண்டு வருந்தினார். தம் தம்பியின் கை, கால்கள் அசைவின்றி இருப்பதைக் கண்டு வருந்தினார். இனி இலட்சுமணன் உயிர் பிழைக்க மாட்டான் என நினைத்து அழுதார்.

�� இராமர் விபீஷணனை அழைத்து, விபீஷணா! இந்த கணையை தொடுத்தவர் யார்? என்றார். இலட்சுமணன் நீ ஏன் எச்சரிக்கவில்லை எனக் கேட்டார். விபீஷணன், பெருமானே! இலட்சுமணர் இந்திரஜித்தை வீழ்த்துவான் என நினைத்து இருந்தேன். ஆனால் அந்த இந்திரஜித் இலட்சுமணரின் போர்த்திறத்தால் தோற்று ஓடிப்போய் மறைந்திருந்து நாகபாசத்தை ஏவுவான் என யாரும் எதிர்ப்பார்க்கவில்லை. இங்கு நாகபாசத்தால் யாரும் உயிர் விடவில்லை. இவர்கள் அனைவரும் நாகபாசத்தால் கட்டுண்டு இருக்கிறார்கள் என்றான். இராமர், இந்த அஸ்திரத்தில் இருந்து விடுபட ஏதேனும் வழி இருந்தால் கூறு என்றார்.

நாகபாசத்தை, உலகைப் படைத்த பிரம்மன் வேள்வியில் உண்டாக்கினார். பிறகு அதை சிவன் வேண்டி பெற்றுக் கொண்டார்.

�� சிவபெருமான், இந்திரஜித்தின் தவத்தை பாராட்டி அந்த அஸ்திரத்தை இந்திரஜித்திற்கு கொடுத்தார். இந்த நாகபாசம் இந்திரனின் தோள்களை கட்டியது. இந்த அஸ்திரத்தை ஏவிய இந்திரஜித் வந்தால் மட்டுமே நாகபாசத்தை விடுவிக்க முடியும். இல்லையென்றால் இது இவர்களின் வாழ்நாள் வரையிலும் பிணைந்திருக்கும் என்றான். இதைக் கேட்டு இராமர் கோபங்கொண்டு எழுந்தார். நான் இலங்கை நகரை அழிப்பேன் என எழுந்தார். விபீஷணா! நான் என் தம்பியை இழந்த பின்பு, எனக்கு பெருமை இருந்து என்ன பயன்? என் தம்பியைக் காட்டிலும் எனக்கு எதுவும் முக்கியம் இல்லை என்றார். பிறகு இராமர், ஒருவன் செய்த தீமைக்காக மட்டும் உலகை அழிப்பது முறையல்ல என நினைத்துக் கொண்டு மனதை தேற்றினார்.

கருட பகவான் நாகபாசத்தை விடுவித்தல்!...

�� இராமர், ஒருவன் செய்த தீமைக்காக மட்டும் உலகை அழிப்பது முறையல்ல என நினைத்துக் கொண்டு மனதை தேற்றினார். அப்பொழுது கருட பகவான், வானத்தில் இருந்தப்படி அந்த இடத்தை வட்டமிட்டார். வானத்தில் இருந்தப்படியே இராமரை தொழுதார். பரம்பொருளே! உலக நாயகனே! உலகங்களை காக்கும் தேவனே! கருணை வடிவானவரே! மற்றவர்களின் துன்பங்களை நீக்குபவரே! இராமா! அருட்பொருஞ் ஜோதியே! கருணைக் கடலே! எனப் போற்றி வணங்கினார். இப்படி வானத்தில் வட்டமிட்டு பறந்துக் கொண்டிருந்த கருட பகவான், தன் சிறகுகளை அகல விரித்துக் கொண்டு இராமர் முன் வந்து நின்றான். கருட பகவானுடைய நிழல் பட்டவுடன் இலட்சுமணன் முதலானவர்களை கட்டியிருந்த நாகபாசம் விடுபட்டு விட்டது.

�� கருட பகவானின் நிழல் பட்டு மாண்ட அரக்கர்கள் எழவில்லை. கருட பகவானின் வரவு தீயவர்களுக்கு நல்லது செய்யவில்லை. அதுமட்டுமின்றி கருட பகவானின் நிழல் பட்டு வானரங்கள் மீண்டும் உயிர்பெற்று, போரில் ஏற்பட்ட காயங்களும், புண்களும் ஆறி புத்துயிர் பெற்றது போல் இராம்!... இராம்!... என இராமரின் ஜெபத்தை சொல்லிக் கொண்டு எழுந்தனர். நாகபாசம் விடுபட்டு நீங்கிய இலட்சுமணனை, இராமர் மார்போடு தழுவிக் கொண்டார். பிறகு கருடனை பார்த்து, ஐயா தாங்கள் யார்? நாங்கள் செய்த தவப்பயனால் தான் தாங்கள் இங்கு வந்துள்ளீர்கள். தாங்கள் வந்ததால் தான் நாகபாசத்தால் கட்டுண்டவர்கள் விடுபட்டுள்ளனர். தாங்கள் எங்களுக்கு செய்த உதவிக்கு நாங்கள் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்பது தெரியவில்லை. தங்களை நாங்கள் இதற்கு முன் பார்த்ததும் இல்லை. தங்களை பற்றியும் கேட்டதில்லை.

�� அன்பனே! தாங்கள் கைம்மாறு எதிர்பாராமல் எங்களுக்கு உதவி செய்து உள்ளீர்கள். இதற்கு நாங்கள் கோடான கோடி நன்றிகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். எங்களின் அன்பை தங்களுக்கு தருகிறோம். இவர்கள் மீண்டும் உயிர் பெறுவார்களா? என நினைத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் தாங்கள் எவ்வித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் எங்களுக்கு உதவி செய்து உள்ளீர்கள் என்றார். இதைக் கேட்ட கருட பகவான், இராமரின் திருவடிகளை தொழுது வணங்கி, உங்கள்

திருவடிக்கு கோடி வணக்கங்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து பறந்து சென்றான். பிறகு அனுமன் இராமரிடம், பெருமானே! இலட்சுமணர் இறந்து விட்டார் எனவும், நாம் அனைவரும் இறந்து விட்டோம் எனவும் அன்னை சீதை நினைத்து வருந்திக் கொண்டு இருப்பார். அது மட்டுமின்றி அங்கு அரக்கர்கள் மகிழ்ச்சியில் இருப்பார்கள்.

�� ஆதலால், நாம் உயிர் பிழைத்துவிட்டோம் என்பதை இலங்கையில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ள நாம் ஆரவாரம் செய்வோம் என்றான். இராமர், அனுமனின் யோசனைக்கு உடன்பட்டு சம்மதித்தார். பிறகு வானரங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உலகமே அதிரும் வண்ணம் ஆரவாரம் செய்தனர். இலங்கையில் இருவர் மட்டும் தூங்காமல் இருந்தனர். ஒருவன் இராவணன். இராவணன் சீதையை நினைத்துக் கொண்டு தூங்காமல் இருந்தான். மற்றொருவர் சீதை. சீதை இராமனையே நினைத்துக் கொண்டு தூங்காமல் இருந்தாள். இந்த ஆரவாரம் இலங்கை நகர் முற்றிலும் கேட்டது. இராவணன் இந்த ஆரவாரத்தைக் கேட்டு திடுக்கிட்டான். இது என்ன மாயம்? வானரங்களின் ஆரவாரம் செவிகளை பிளக்கிறதே! இலட்சுமணன் வில்லின் நாணொலியின் சத்தமும் கேட்கிறதே! அனுமனின் ஆரவாரமும் கேட்கிறதே! அப்படியென்றால் இவர்கள் அனைவரும் நாகபாசத்தில் இருந்து விடுப்பட்டு விட்டார்கள் என்பதை உணர்ந்தான்.


வானரப் படைகளும் அரக்கப் படைகளும்!...

�� இராவணன் வானரங்களின் ஆரவாரத்தைக் கேட்டு இந்திரஜித்தின் மாளிகைக்கு விரைந்துச் சென்றான். அங்கு இந்திரஜித் போரினால் ஏற்பட்ட களைப்பால் மிகவும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். இராவணன், இந்திரஜித்தை எழுப்பினான். இந்திரஜித், தந்தையே! தாங்கள் ஏன் இவ்வளவு அவசரமாக என்னை எழுப்பினீர்கள் என்றான். இராவணன், மகனே! நீ நாகபாசத்தால் கொன்று விட்டேன் எனக் கூறியவர்கள், ஆரவாரம் செய்து கொண்டிருக்கும் ஓசை உனக்கு கேட்கவில்லையா? எனக் கேட்டான். இதைக் கேட்ட இந்திரஜித், இது எப்படி சாத்தியமாகும்? நாகபாசத்தால் கட்டுண்டவர்கள் எவ்வாறு மீள முடியும்? என்றான். அப்பொழுது தூதுவன் ஒருவன் அங்கு வந்தான். அரசே! நாகபாசத்தால் கட்டுண்டவர்களை பார்த்த இராமர், கோபங்கொண்டு நாகபாசத்தை ஏவியவனை கொல்வேன் என முனைந்தான்.

�� அப்பொழுது கருட பகவான், வானத்தில் இருந்து பறந்து வந்து தன் சிறகுகளை அகல விரிந்து நாகபாசத்தால் கட்டுண்டவர்களையும், போர்களத்தில் மாண்ட வானரங்களையும் காப்பாற்றி விட்டான் எனக் கூறினான். இதைக் கேட்ட இராவணன், என்னுடன் தோல்வி அடைந்த அந்த கருடனுக்கு இவ்வளவு ஆற்றலா? எனக் கோபம் கொண்டான். பிறகு இந்திரஜித்திடம், மகனே! நீ உடனே போர்களத்திற்குச் சென்று பிரம்மாஸ்திரத்தை ஏவி அவர்களை கொன்று விட்டு திரும்புவாயாக என்றான். இந்திரஜித், தந்தையே! நான் இன்று ஓய்வு எடுத்துக் கொண்டு நாளை போரில் நிச்சயம் அவர்களை வீழ்த்தி, உங்களுக்கு மன ஆறுதலை கொடுப்பேன் என்றான். இராவணன், இதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து வந்தான். இராவணன் தன் மாளிகைக்கு வந்தடைந்தான். அப்பொழுது படைத்தலைவர்கள் அங்கு வந்தனர்.

�� அவர்கள், அரச பெருமானே! தாங்கள் எங்களை போருக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம். அப்பொழுது அவர்களில் ஒருவன், அரசே! மாபக்கனும், புகைக்கண்ணனும் போரில் அவர்களை பார்த்து ஓடி வந்தவர்கள் எனக் கூறினான். இதைக் கேட்டு இராவணன் அவர்கள் மேல் பெருங்கோபம் கொண்டான். போரில் எதிரிகளை கண்டு பயந்து ஓடி வந்த நீங்கள் எல்லாம் வீரர்களா? இவர்களின் மூக்கை அறுத்தெறியுங்கள் என்றான். அப்பொழுது மாலி என்னும் வீரன் இராவணனை வணங்கி,

அரசே! ஒருவனுக்கு வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வரும். வெற்றியும், தோல்வியும் யாருக்கும் நிரந்தரம் அல்ல. உங்கள் தம்பிமார்களும் போரில் தோற்றவர்கள் தான். அதனால் தோற்றவர்களின் மூக்கை அறுப்பது நியாயமாகாது என்றான்.



�� இதைக்கேட்டு இராவணன் கோபம் தணிந்து அவர்களை மன்னித்து, போருக்கு அவர்களுடன் பத்து கோடி வெள்ள சேனைகளை உடன் அனுப்பி வைத்தான். பிறகு படைத்தலைவர்களும், அரக்கப்படைகளும் கையில் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு போருக்கு புறப்பட்டனர். போருக்கு வரும் படைத்தலைவர்களின் ஆற்றலைப் பற்றி விபீஷணன், இராமரிடன் எடுத்துக் கூறினான். அரக்கப்படைகளும், வானரப்படைகளும் பெரும் ஆரவாரத்தோடு போர் புரியத் தொடங்கினர்.

இரு படைகளின் போர் மிகவும் கடுமையாக நடந்தது. புகைக்கண்ணன் அனுமனுடன் போர் புரிந்து மாண்டான். மாபக்கன், அங்கதனுடன் போர் புரிந்து மாண்டான். மாபெரும் வீரனான் மாலி, வானர படைத்தலைவன் நீலனுடன் போர் புரிந்து மாண்டான்.

மகரக்கண்ணனின் போர்...!

போரில் வேள்விப்பகைஞன், இலட்சுமணனுடன் போர் புரிந்து மாண்டான். வச்சிரப்பல்லன் அனுமனின் கையால் மாண்டான். இலட்சுமணன், பிசாசன் என்னும் வீரனையும் கொன்றான். இராமர் ஆறு கோடி சேனைகளை அழித்தார். இலட்சுமணன், நான்கு கோடி சேனைகளை அழித்தார். போரில் படைத்தலைவர்கள் மாண்டச் செய்தியை தூதர்கள் இராவணனிடம் சென்று கூறினர். இதைக் கேட்டு இராவணன் மிகவும் கோபங்கொண்டான். இராவணன் தம்பி கரன். இவனின் மகன் மகரக்கண்ணன். ஒருமுறை காட்டில் இராமரும், இலட்சுமணரும் இருந்தபோது சூர்ப்பனகை அவர்களிடம் தவறாக நடக்க முற்பட்டாள். அப்பொழுது கோபங்கொண்ட இலட்சுமணன் சூர்ப்பனகையின் காதையும், மூக்கையும் அறுத்தான். உடனே தன் அண்ணன் இராவணனிடம் சென்று முறையிட்டாள்.

�� அப்பொழுது இராமரிடம் போர் புரிய சென்றவர்களுள் ஒருவன் தான் கரன். காட்டில் போர் புரியும் போது கரன் இராமரால் மாண்டான். மகரக்கண்ணன் இராவணனை தொழுது, பிதாவே! என் தந்தையை கொன்ற இராமனை நான் கொன்று என் பழியை தீர்த்துக் கொள்கிறேன். தாங்கள் என்னை போருக்கு அனுப்பி வையுங்கள். நான் இப்போரில் தங்களுக்கு வெற்றியை தேடித் தருவேன். நான் போருக்குச் செல்ல தாங்கள் விடை தாருங்கள் என்றான். இராவணன் அவனை அன்போடு தழுவி, மகனே! உன் வீரம் மேருமலையை விடச் சிறந்தது. நீ போரில் இராமனையும், இலட்சுமணனையும் கொன்று வெற்றி மாலை சூடி திரும்புவாயாக எனக் கூறி விடைக் கொடுத்தான். பிறகு இராவணன், ஐந்து கோடி சேனைகளை உடன் அனுப்பி வைத்தான்.

�� மகரக்கண்ணன், சேனைகள் புடைசூழ, முரசொலிகள் முழங்க போர்களத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு இராமரை பார்த்து கோபங்கொண்டு, இராகவா! நீ என் தந்தையைக் கொன்று அரக்க குலத்திற்கு பழியை தேடி தந்து உள்ளாய். அதே போல் நான் உன்னையும், உன் தம்பியையும் கொன்று என் பழியை தீர்த்து கொள்ள போகிறேன் என்றான். பிறகு தன் மாய உருவினால் நெருப்பு மழை சிந்தியும், புயல்காற்று வீசியும், வானத்தில் இடி விழச் செய்தும் தன் உருவத்தினை மறைத்து பல மகரகண்ணன்கள் இருப்பது போல் தோற்றமளித்து போர் புரிந்தான். இவ்வாறு அவன் தன் உருவினை மாற்றி மாற்றி போர் புரிந்துக் கொண்டிருந்தான். இராமர் அவனை நோக்கி அம்புகளை ஏவினார்.

https://telegram.me/aedahamlibrary

�� அதில் ஓர் அம்பு பட்டு அவன் உடம்பில் இருந்து இரத்தம் வலிந்தது. இதைப் பார்த்த இராமர், இரத்தம் சிந்தும் உருவமே மகரக்கண்ணனின் உண்மையான உருவம் என்பதைக் கண்டு கொண்டார். பிற உருவங்களில் இரத்தம் இல்லாததைக் கண்டார். மகரக்கண்ணனை தவிர மற்றவைகள் எல்லாம் மாயம் என்பதை உணர்ந்த இராமர், ஒரு தெய்வீக கணையை அவன் மீது ஏவினார். இதனால் அவனின் வலிமை குறைந்து அவன் மாண்டான். அரக்க தூதர்கள் இராவணனிடம் சென்று மகரக்கண்ணன் இராமனால் மாண்டான் என்னும் செய்தியைக் கூறினார்கள். இதைக்கேட்டு இராவணன் துன்பக்கடலில் ஆழ்ந்தான். இலங்கையில் அரக்கியர்கள் தங்கள் கணவர்கள் போரில் மாண்டதை அறிந்து கதறி அழுதுக் கொண்டிருந்தனர்.

இந்திரஜித் இலட்சுமணன் மீது பிரம்மாஸ்திரத்தை ஏவுதல்...!

�� இராவணன் இந்திரஜித்தை அழைத்து, மகனே! படைத்தலைவர்களும், கரன் மகனான மகரக்கண்ணனும் போரில் மாண்டனர். இப்போரில் உன்னைத் தவிர வேறு எவராலும் வெல்ல முடியாது. உனக்கு நிகரான மாவீரர்கள் இந்த உலகில் இல்லை. அந்த இராம, இலட்சுமணனை உன்னைத் தவிர வேறு எவராலும் வெல்ல முடியாது. நீ போருக்கு சென்று வெற்றியுடன் திரும்பி வா! எனக் கூறி விடை கொடுத்தான். இந்திரஜித் தன் தந்தையை வணங்கி போருக்கு புறப்பட்டான். இந்திரஜித், ஆயிரம் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, அசுர சேனைகள் புடைசூழ போர்க்களத்திற்கு வந்துச் சேர்ந்தான். அவனை பார்த்த வானர வீரர்கள் சிலர் பயத்தில் ஓடி ஒளிந்தனர். இராமர் வானர வீரர்களுக்கு பயம் நீங்க ஆறுதல் கூறினார். இராமர், அனுமனின் தோளிலும், இலட்சுமணன் அங்கதன் தோளிலும் ஏறி போர் புரிய தொடங்கினர்.

�� இராமரும், இலட்சுமணரும் தங்கள் கர வேகத்தையும், வில்வேகத்தையும் கொண்டு போர் புரிந்து கொண்டு இருந்தனர். இராம இலட்சுமணனின் வில் திறமையைக் கண்டு இந்திரஜித் வியந்து நின்றான். இராம இலட்சுமணனின் போர் திறமையைக் கண்டு அரக்க சேனைகள் பயந்து ஓடின. இந்திரஜித் நான் தனியாகவே போர் புரிந்து கொள்கிறேன் எனக் கூறி போர் புரிந்தான். அப்பொழுது இராமர் அவனின் தேரை உடைத்தெறிந்தார். இலட்சுமணனும், இந்திரஜித்தும் கடுமையாக போர் புரிந்தனர். அப்பொழுது இந்திரஜித் தன் மாய திறமையால் வானத்தில் போய் மறைந்தான். இலட்சுமணன் இராமரை பார்த்து, அண்ணா! நான் இப்பொழுது இவன் மேல் பிரம்மாஸ்திரத்தை ஏவ போகிறேன் என்றான்.

�� இராமர், தம்பி இலட்சுமணா! நீ பிரம்மாஸ்திரத்தை பயன்படுத்தினால் ஒரு நொடியில் உலகமே அழிந்துவிடும். அதனால் நீ பிரம்மாஸ்திரத்தை பயன்படுத்த வேண்டாம் என தடுத்து நிறுத்தினார். போரில் தோற்று மாய வேலை செய்து மறைந்த இந்திரஜித் யாரும் அறியாமல் இலங்கை நகரை அடைந்தான். இந்திரஜித்தை காணாததால், அவன் பயந்து ஓடி விட்டான் என நினைத்து இராம இலட்சுமணன்

உள்ளிட்ட வானரப்படைகள் இளைப்பாறினர். இராமர், வானரப் படைகளுக்கு உணவு பொருட்களை கொண்டு வருமாறு விபீஷணனை அனுப்பினார். இராமர், தன் படைக்கலன்களுக்கு பூஜை செய்ய தனியாகச் சென்று விட்டார். இலட்சுமணன் மற்றும் மற்ற வானர வீரர்கள் மட்டுமே போர்க்களத்தில் இருந்தனர். இந்திரஜித் அரண்மனைக்கு சென்று இராவணனிடம் தான் மறைந்து நின்று பிரம்மாஸ்திரத்தை விடுவது என முடிவு செய்தான்.

�� அதற்கு மகோதரனை முதலில் சென்று போர் புரியுமாறு கூறினான். அவன் மாய போர் செய்து கொண்டிருக்கையில் நான் பிரம்மாஸ்திரத்தை செலுத்தி விடுவேன் எனக் கூறினான். (மாயப் போர் என்பது ஒருவரை ஒருவர் பார்க்காமல் போர் புரிவது.) மகோதரன் போர்க்களத்தில் மாய போர் புரிந்தான். அவன் ஆங்காங்கே நின்று போர் புரிந்தான். இதை கவனித்த இலட்சுமணன், பாசுபதாஸ்திரத்தை ஏவினார். இதில் அரக்க சேனையும், அவர்களது மாயமும் எரிந்து போனது. மாய விலகிய மகோதரன் அவ்விடத்தை விட்டு ஓடினான். அப்போது இந்திரஜித் யாரும் அறியாத வண்ணம் மறைந்து இருந்து பிரம்மாஸ்திரத்திற்கான மந்திரத்தை சொல்லிக் கொண்டு இருந்தான்.

இராமரின் துயரம்!...

�� மறுபடியும் மகோதரன், இந்திரன் போல் உருவம் கொண்டு ஐராவரத்தின் மீது ஏறிக் கொண்டு வானரங்களுக்கு எதிராக போர் செய்து கொண்டு இருந்தான். ஆனால் இலட்சுமணனுக்கு இந்திரன் போல் வந்திருப்பது மாய வேலையில் வல்லவனான மகோதரன் என்பது தெரியவில்லை. இதைப் பார்த்த இலட்சுமணன் அனுமனிடம், நாம் இந்திரன் முதலிய தேவர்களை காக்கும் பொருட்டு தான் இராவணனுடன் போர் செய்து கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கையில் இந்திரன் முதலியவர்கள் நம்மீது போர் செய்ய என்ன காரணம் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தை பிரயோகம் செய்து இலட்சுமணன் மீது ஏவினான். அனுமன், பிரம்மாஸ்திரத்தை ஏவியவனை நான் கொல்வேன் எனத் துணிந்தான். ஆனால் அனுமன் பிரம்மாஸ்திரத்தின் தாக்கத்தால் மயங்கி கீழே விழுந்தான்.

�� பிரம்மாஸ்திரத்தால் இலட்சுமணன், சுக்ரீவன், அங்கதன் முதலிய வானர வீரர்கள் உயிர் நீத்தனர். நளன் முதலிய வானரப் படைகளும் பிரம்மாஸ்திரத்தால் உயிர் நீத்தனர். அங்கிருந்த வானர வீரர்கள் அனைவருமே வீழ்ந்தனர். பிறகு இந்திரஜித் வெற்றி முழக்கமிட்டு அரண்மனைக்குச் சென்றான். இராவணனிடம் சென்று, தந்தையே! பிரம்மாஸ்திரத்தால் இராமனை தவிர மற்ற அனைவரும் உயிர் நீத்தனர் என்றான். இதைக்கேட்டு இராவணன் மகிழ்ச்சியடைந்தான். ஆனால் இராமன் சாகவில்லை என்பதை நினைத்து வருந்தினான். அதற்கு இந்திரஜித், இராமன் போர்க்களத்தை விட்டு வெகுதூரம் சென்றதால் அவனை பிரம்மாஸ்திரம் தாக்கவில்லை எனக் கூறினான். இருந்தாலும் இராமனின் படைகள் அழிந்ததை நினைத்து மகிழ்ச்சியடைந்தான். பிறகு இராவணன், இந்திரஜித்துக்கும், மகோதரனுக்கும் விடைகொடுத்து அவரவர் மாளிகைக்குச் சென்று ஓய்வெடுக்குமாறு கூறினான்.

�� இராமர் தன் படைகலன்களின் பூஜையை முடித்துவிட்டு திரும்பி வந்தார். வரும் வழியில் பிரம்மாஸ்திரத்தால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பவர்களை பார்த்தார். இதைப் பார்த்த இராமர் தன் படைகள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு வருந்தினார். சுக்ரீவனைப் பார்த்து அன்பு தம்பியே! நட்பின் திலகமே! எனக்கு துணையாக வந்த நீ வீழ்ந்து கிடக்கிறாயே எனக்

கூறி புலம்பி அழுதார். அனுமனை பார்த்த இராமர், வலிமையில் சிறந்தவனே! சீதைக்கு உயிர் கொடுத்த சேவைமிக்க பண்புடையவனே! தேவர்கள் உனக்கு சாகா வரம் கொடுத்தார்களே. அந்த வரம் பொய்யாகுமா? நான் கனவிலும் உனக்கு இப்படி ஒரு நிலைமை வரும் என நினைக்கவில்லையே எனக் கூறி புலம்பி அழுதார். இராமர் தன் தம்பி இலட்சுமணன் பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இலட்சுமணனை மார்போடு தழுவிக் கொண்டார்.

�� தம்பி! எனக்கு தாயும் நீ! எனக்கு தந்தையும் நீ தான். எவ்வாறு நீ என்னை விட்டு பிரிந்துச் சென்றாய். என் ஆருயிர் தம்பியே! கானகத்தில் இந்த 14 வருடம் எனக்கு காய், கனிகள் கொடுத்து நீ உண்ணாமல் இருந்தாய். எனக்கு தூக்கத்தை கொடுத்து நீ தூங்காமல் இருந்தாய். இந்த வனவாசத்தில் நீ எனக்கு துணையாக இருந்து சேவை புரிந்தாயே. இனி எனக்கு துணையாக யார் இருப்பார்கள். நீ என்னைவிட்டு பிரிந்த பின் நான் மட்டும் வாழ்ந்து என்ன பயன்? தம்பி! நீ எனக்காக உன் மனைவியை விட்டு, அரண்மனையை விட்டு, உன் உணர்வையும், தூக்கத்தையும் விட்டு எனக்காக பணி செய்தாயே! நீ இல்லாமல் எனக்கு இந்த புகழ் எதுவும் வேண்டாம். இனி நானும் உயிர் வாழ மாட்டேன் என பலவாறு கூறி புலம்பி அழுதார். தன் மனச்சுமையையும், துக்கத்தையும் தாங்காமல் இராமர் மயங்கி விழுந்தார்.

சீதையின் துயரம்...!

�� இராமரின் துயரத்தைக் கண்டு தேவர்கள் முதலானோர் அழுதனர். இதை அறிந்த அரக்க தூதர்கள் இராவணனிடம் ஓடிச் சென்று வானரப் படையோடு இலட்சுமணன் மாண்டான். இலட்சுமணனின் பிரிவை தாங்க முடியாமல் இராமன் மாண்டான். இதனால் தங்களின் பகை தீர்ந்தது எனக் கூறினார்கள். பிரம்மாஸ்திரத்தால் இராம இலட்சுமணன் உட்பட வானர வீரர்கள் மாண்டதை அறிந்து இராவணன் மகிழ்ச்சி அடைந்தான். இந்த மகிழ்ச்சியை விழாவாக கொண்டாட நினைத்தான். உடனே மருத்தன் என்னும் அரக்கனை அழைத்து, நீ உடனே போர்களத்திற்குச் சென்று, போரில் மாண்ட அரக்கர்களை அனைவரையும் ஒன்று விடாமல் கடலில் எடுத்து வீசி விடு. இந்த வேலையை உன்னைத் தவிர வேறு யாரும் செய்யக்கூடாது. இது உன்னை தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது.

�� அப்படி யாருக்கேனும் தெரிந்தால் உன் தலையை சீவி விடுவேன் எனக் கட்டளையிட்டு அனுப்பினான். (இதற்கான காரணம் என்னவென்றால் அரக்கர்களின் பிணங்கள் போர் களத்தில் இருந்தால், பார்ப்பவர்கள் இராவணனின் அரக்கர்கள் தான் போரில் அதிகம் மாண்டவர்கள் என்பது தெரிய வரும் அதனால் தான்.) இராவணனின் கட்டளைப்படி மருத்தன், போர்களத்திற்குச் சென்று அரக்கர்களின் பிணங்களை கடலில் போட்டுவிட்டான். இப்பொழுது போர்களத்தில் வானர வீரர்கள் மட்டும் வீழ்ந்துக் கிடந்தனர். இராவணன், சீதையை போர்களத்திற்குச் அழைத்துச் சென்று, போரில் அரக்கர்கள் யாரும் மாளவில்லை என்பதை தெரியப்படுத்த நினைத்தான். உடனே இராவணன், சீதையை அழைத்துச் சென்று இராம இலட்சுமணனுக்கு நேர்ந்த கதியை காட்டுங்கள் என கட்டளையிட்டான்.

�� இதனால் சீதை, இராம இலட்சுமணர் மாண்டு விட்டனர் என நினைத்து தன்னை ஏற்றுக் கொள்வாள் என நினைத்தான். அரக்கியர்கள் சீதையை ஒரு புஷ்;பரக விமானத்தில் ஏற்றி ராம இலட்சுமணனின் நிலையை காட்டினர். சீதை, இராம இலட்சுமணரின் நிலையைக் கண்டு கதறி அழுதாள். என் பெருமானே! இராவணாதி அரக்கர்களை கொன்று தண்டகவனத்தில் வாழும் முனிவர்களுக்கு அனுகூலம் புரிவதாக கூறினீர்களே! தங்களின் இந்த நிலைமைக்கு நான் தானே காரணம். நான் அந்த மாய மான் மேல் ஆசைப்படாமல் இருந்திருந்தால் தங்களுக்கு இந்த நிலைமை நேர்ந்திருக்காது. நான் தங்களை மானின் பின் அனுப்பியது என்

தவறு. இனி நான் என்ன செய்வேன். எனக்கு துணையாக இனி யார் இருப்பார்கள். எம்பெருமானே தயவுகூர்ந்து எழுங்கள் என கதறி அழுதாள்.

�� சீதை இலட்சுமணனை பார்த்து, இளையவனே! வலிமையானவனே! என் அண்ணன் இராமனுக்கு துணையாக இருப்பேன் எனக் கூறினாயே! நான் அன்று உன்னை இகழ்ந்து பேசியதற்கு பதிலாக தான் இன்று இங்கு சிறைப்பட்டு கொண்டிருக்கிறேன். நீ மாய மான் எனக் கூறியும் நான் அதைக் கேட்காமல் உன் அண்ணனை சென்று தேடி வருமாறு கூறியது என் தவறு என்பதை உணர்ந்துவிட்டேன். நீ அன்று என்னுடன் இருந்திருந்தால் தங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது. இரவும் பகலும் பாராமல் கண்விழித்து காவல் புரிவாயே. நான் செய்த தவறால் தங்களுக்கு இந்நிலைமை நேர்ந்துவிட்டதே. நான் மதியை இழந்ததால் தான் இராவணனின் சிறையில் அகப்பட்டு விட்டேன். இனி என்னை காக்க யார் இருக்கிறார்கள் என கூறிக் கதறி அழுதாள்.

சீதைக்கு திரிசடை கூறும் ஆறுதல்!

�� சீதை, பெருமானே! தங்களுக்கு என்னால் தான் இந்த துன்பம் நேர்ந்ததே. கண் இமைக்காமல் என்னை காத்த இலட்சுமணா! அண்ணன் இறக்கும் முன் நான் என் உயிரை விடுவேன் என உன் அன்னை சுமித்திரையிடம் கூறினாயே. அதுபோல் இன்று செய்து விட்டாயே. கடலை கடந்து வந்து என்னைக் கண்டு சென்ற அனுமனே! உனக்கு இந்நிலைமை நேர்ந்துவிட்டதே எனக் கூறி கதறி அழுதாள். பெருமானே! நான் தீராப் பழிக்கு ஆளாகிவிட்டேன். இனி என்னை காக்க யார் இருக்கிறார்கள் எனக் கூறிக் கொண்டு கீழே விழ முயன்றாள். அப்பொழுது திரிசடை சீதையை தடுத்தாள். பிறகு சீதையை அன்போடு தழுவிக் கொண்டாள். அம்மா சீதை! இதெல்லாம் மாயை. மாய மானை அனுப்பியதும், உன் தந்தை போல் மாய ஜனகரை உன் முன் கொண்டு வந்து நிறுத்தியதும் அரக்கர்கள் செய்த மாய வேலை என்பதை நினைவில் கொள்வாயாக.

�� அங்கு வீழ்ந்து இருக்கும் உன் கணவனை பார்! இராமனின் உடலில் அம்பு பட்ட இடமும் தெரியவில்லை. இரத்த காயங்களும் தெரியவில்லை. அதுமட்டுமில்லாமல் இங்கு ஒரு அரக்கர்கள் கூட தென்படவில்லை. இது எல்லாம் அரக்கர்களின் மாய செயல் என்பதை உணர்வாயாக. நான் கண்ட கனவு பொய்யாகாது. உனக்கு நேர்ந்த நல்ல நிமித்தங்களையும் நினைத்துப் பார். நிச்சயம் தர்மம் தலைத்தோங்கும். பாவச்செயல்கள் செய்யும் அரக்கர்களின் நிலைமை நிச்சயம் ஒரு முடிவுக்கு வரும். நீ அழாதே என ஆறுதல் கூறினாள். பிறகு திரிசடை, சீதா! முன்பு நாகப்பாசத்தால் கட்டுண்டவர்கள் விடுபட்டு ஆரவாரம் செய்த ஒலி உனக்கு கேட்டது அல்லவா? நிச்சயம் இவர்கள் திரும்பி வருவார்கள். இராமர் இறந்திருந்தால் இந்த ஏழு உலகங்களும் அழித்திருக்கும்.

�� நீ சிரஞ்சீவியாக இருக்க வேண்டும் என அனுமனுக்கு கொடுத்த வரம் பொய்யாகாது. உன் கற்பின் திறனுக்கும் அழிவு வராது. பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்து கிடப்பவர்கள் நிச்சயம் உயிர் பெறுவார்கள். நீ உன் மனதை தெளிவுப்படுத்திக்கொள் என ஆறுதல் கூறினாள். சீதை, திரிசடை தாயே! இதுவரை தாங்கள் சொன்ன எதுவும் பொய்யாகவில்லை. தக்க சமயத்தில் தாங்கள் எனக்கு அறிவுரை கூறியுள்ளீர்கள். தாங்கள் கூறிய வார்த்தைகளை தெய்வமாக நினைத்து, நான் உயிர் வாழ்ந்து

கொண்டிருக்கிறேன் என்றாள். நிச்சயம் எம்பெருமான் என்னை வந்து காப்பார் எனக் கூறினாள். பிறகு அரக்கியர்கள் புஷ்;பக விமானத்தை மீண்டும் அசோக வனத்திற்கே கொண்டு சென்று சீதையைக் காவலில் வைத்தனர்.

�� இராமரின் கட்டளைப்படி உணவு சேகரிக்க சென்ற விபீஷணன் போர்க்களத்திற்கு வந்தான். போர்க்களத்தில் பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்து கிடக்கும் வானர வீரங்களை கண்டு அதிர்ச்சி அடைந்தான். அங்கதன், சுக்ரீவன் முதலான வானர வீரர்கள் வீழ்ந்துக் கிடப்பதைக் கண்டு மிகவும் கவலை அடைந்தான். பிறகு விபீஷணன், இராமன் மயங்கி கிடப்பதைக் கண்டு அவனது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் குழம்பி இருந்தான். விபீஷணன், இராமரை உற்றுப் பார்த்தபோது இராமரின் உடலில் எந்த அம்பும் துளைக்கவில்லை என்பதைக் கண்டுகொண்டான்.

ஜாம்பவான் சஞ்சீவி மலைக்கு செல்ல வழிகாட்டுதல்!...

�� விபீஷணன் பிரம்மாஸ்திரத்தால் மாளாதவர் எவரேனும் உள்ளார்களா எனச் சுற்றியும் பார்த்தான். உடனே அவனின் கண்களில் அனுமன் தென்பட்டான். அனுமன் அருகில் சென்று, அவன் மேல் பட்டிருந்த அம்புகளை தூக்கி எறிந்தான். பிறகு தண்ணீரைக் கொண்டு அனுமனின் முகத்தில் தெளித்தான். அனுமன் இராம இராம என சொல்லிக் கொண்டு எழுந்தான். விபீஷணனை பார்த்த அனுமன் மகிழ்ச்சியில் கட்டி தழுவிக் கொண்டான். பிறகு அனுமன், விபீஷணா! இராமர் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? எனக் கேட்டான். விபீஷணன், இலட்சுமணனின் நிலைமையை கண்ட இராமர் அழுது தோய்ந்து மயக்கத்தில் உள்ளார் எனக் கூறினான். பிறகு இருவரும் இராம இலட்சுமணரும் மற்றும் மற்ற வானர வீரர்களும் இந்த இடர்ப்பாட்டில் இருந்து மீள்வதற்கு ஏதேனும் வழி உள்ளதா என யோசித்தனர்.

�� அனுமனுக்கு உடனே ஜாம்பவான் ஞாபகம் வந்தது. உடனே விபீஷணனிடம் ஜாம்பவான் எங்கே? அவனுக்கு இறப்பு என்பது கிடையாது. அவன் நமக்கு ஏதேனும் நல்ல வழியை காட்டுவான் என்றான். பிறகு இருவரும் ஜாம்பவானை தேடினர். ஜாம்பவான், உடலெங்கும் அம்புகள் துளைத்ததால் மிகுந்த துன்பத்துடனும், சோர்வைடைந்த உணர்விலும், கண்கள் மங்கிய நிலையில் மயக்கத்தில் இருந்த ஜாம்பவானை கண்டனர். தன்னை நோக்கி யாரோ வருவதை உணர்ந்த ஜாம்பவான், வருவது யார்? என்னை காக்க வந்த இராமனா? இல்லை இலட்சுமணனா? அல்லது அனுமனா? இல்லை விபீஷணனா? என எண்ணினான். ஜாம்பவானை பார்த்த விபீஷணன் மகிழ்ச்சியில் கண்டுவிட்டேன்! கண்டுவிட்டேன்! எனக் கத்தினான்.

�� குரலைக் கேட்டு வந்திருப்பது விபீஷணன் என்பதை அறிந்து கொண்டான், ஜாம்பவான். பிறகு அருகில் இருப்பவன் யார்? என்பதை அறியாமல், நீங்கள் யார்? எனக் கேட்டான். அனுமன், நான் அடியேன் அனுமன் வந்திருக்கிறேன் என்றான். இதைக்கேட்ட ஜாம்பவான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். நாம் இறக்கவில்லை, பிழைத்துக் கொண்டோம் என மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தான். பிறகு ஜாம்பவான் இராம இலட்சுமணர், வானரங்களின் நிலைமை கேட்டு அறிந்துக் கொண்டான். இதைக் கேட்ட ஜாம்பவான், இவர்கள் அனைவரும் பிழைக்க வைக்க அனுமன் ஒருவனால் மட்டுமே முடியும் என்றான்.

https://telegram.me/aedahamlibrary

அனுமனே! நீ உடனே சஞ்சீவி மலைக்குச் சென்று சாவா மருந்தைக் கொண்டு வந்தால் இங்கு உள்ள அனைவரும் பிழைத்து எழுவார்கள். அங்கு பல அதிசய மூலிகைகள் இருக்கின்றன.

�� இறந்தவர்களை உயிர் பிழைக்க செய்யும் மருந்து, உடல் பல துண்டுகளாகப் பிளவுபட்டுப் போயிருந்தால் அதனை ஒட்ட வைக்கும் மருந்து, உடலில் பாய்ந்த ஆயுதங்களை வெளியே எடுக்கும் மருந்து, சிதைந்து போன உருவத்தை மீண்டும் பழையபடியே பெறுவதற்கான மருந்து என்று தனித்தனியாக உள்ளது. அங்கு சென்று அந்த மருந்துகளை கொண்டுவா. தாமதம் செய்தால் பெரிய இழப்பு ஏற்படும். அம்மலைக்கு போகும் வழியை நான் உனக்கு கூறுகிறேன் என்றான். தென் கடலுக்கு ஒன்பதனாயிரம் தொலைவில் இமயமலை இருக்கின்றது. இமயத்துக்கு அப்பால் ஒன்பதனாயிரம் தொலைவில் ஏமகூட மலை இருக்கிறது. அம்மலைக்கு அப்பால் ஒன்பதனாயிரம் தூரத்தில் நிடதமலை இருக்கின்றது. அதற்கு அப்பால் ஒன்பதனாயிரம் தொலைவில் மேரு மலை இருக்கிறது. மேரு மலைக்கு அப்பால் ஒன்பதனாயிரம் தூரத்தில் நீலகிரி இருக்கின்றது. நீலகிரிக்கு அப்பால் நாலாயிரம் தூரத்தை கடந்தால் மருந்துமலை இருக்கின்றது.

அனுமன் சஞ்சீவி மலையை அடைதல்!

�� ஜாம்பவான், அனுமனே! உடனே வேகமாக சென்றுச் சூரியன் உதிப்பதற்கு முன் மருந்து மலையைக் கொண்டு வர வேண்டும் என்று அனுமனிடம் வேண்டிக் கூறினான். உடனே அனுமன் தன் பெரிய உருவத்தை எடுத்து, நிலத்தில் காலை ஊன்றி வானுயர பறந்தான். (வேகமாக பறப்பதில் அனுமனுக்கு நிகர் எவரும் இல்லை. இருப்பினும் தான் பறந்த வேகத்தை பார்த்து அனுமனுக்கே ஆச்சரியம்தான். தன்னால் இவ்வளவு விரைவாக பறக்க முடியுமா என்று? தான் வணங்கி வழிபடும் இராமரின், உடன்பிறப்பு அல்லவா அங்கு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறது. அதை அனுமனின் அங்கங்களும் உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் பறப்பதில் இவ்வளவு வேகம்). அனுமன், ஜாம்பவான் கூறிய வழியில் சென்று இமயமலையை அடைந்தான். அங்கே கயிலை மலையில் உமை அம்மையுடன் சிவனைக் கண்டு கண்ணுதற்குரிய கடவுளாக, எண்ணுதற்கரிய புண்ணியமென்று வணங்கி அவரது அருளைப் பெற்றான்.

�� பிறகு ஏம கூட மலையையும், நிடத மலையையும் கடந்துச் சென்றான். இவற்றையெல்லாம் கடந்து மேரு மலையை அடைந்தான். அங்கு பிரம்மதேவனையும், இலட்சுமி தேவியுடன் வீற்றிருக்கின்ற விஷ;ணு மூர்த்தியைக் கண்டு வியந்து பயபக்தியுடன் பணிந்தார். ஆயிரம் ஆதித்தர்கள் ஒருங்கே உதித்தது போன்ற பேரொளிப் பிழம்பாக விளங்கும் சதாசிவ மூர்த்தியையும் மனோன்மணி அம்மையையும் கண்டு பிறவியின் பேறாக எண்ணி, ஆறாகக் கண்ணீர் வடித்து அஞ்சலி செய்தான். பிறகு இந்திரபகவானை வணங்கி தொழுதான். எண்திசைக் காவலரைக் கண்டு கைகூப்பினார். இவர்களின் ஆசியைப் பெற்ற அனுமன், உத்தர குரு என்ற புண்ணிய பூமியை அடைந்தான். அங்கே ஆதித்தனைக் கண்டார்.

�� அங்கு இளமை மாறாது உயிரும் உடலும்போல ஒன்றுபட்டு வாழ்கின்ற புண்ணிய ஆத்மாக்களைக் கண்டான். பிறகு அங்கிருந்து நீலகிரி மலையை அடைந்து, அதற்கடுத்துள்ள சஞ்சீவி மலை என்னும் மருந்து மலையை அடைந்தான். அதனைக் காக்கின்ற தெய்வங்கள், அனுமனை பார்த்து, நீ யார்? நீ இங்கு வந்ததற்கான காரணம் என்ன? எனக் கேட்டன. அனுமன், தெய்வங்களே! நான் வாயு குமாரன், அனுமன். நான் இராமரின் தூதன். போரில் மாண்ட இராம பக்தர்களை உயிர்ப்பிக்க மருந்து கொண்டு செல்ல வந்தேன் என்று கூறினான். அத்தெய்வங்கள், நீ

வேண்டிய மருந்துகளை கொண்டு சென்று, மீண்டும் இங்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று கூறி மறைந்தன. அதன் பிறகு, திருமாலின் சக்கரத்தாழ்வார் வந்து காட்சி தந்து கருணை காட்டி மறைந்தார். பிறகு அனுமன், ஜாம்பவான் கூறிய மருந்துகளைப் பிரித்தெடுப்பது அரிதான செயல் என எண்ணினான்.

�� ஜாம்பவான் கூறிய மருந்தின் விவரம் :

சஞ்சீவ கரணி - இறந்தவர்களை உயிர் பிழைக்க செய்யும் மருந்து

சந்தான கரணி - உடல் பல துண்டுகளாகப் பிளவு பட்டுப் போயிருந்தால் அதனை ஒட்ட வைக்கும் மருந்து

சல்லிய கரணி - உடலில் பாய்ந்த படைக்கருவிகளை வெளியே எடுக்கும் மருந்து

சமனி கரணி - சிதைந்து போன உருவத்தை மீண்டும் பழையபடியே பெறுவதற்கான மருந்து

�� அனுமன், இங்கேயே நின்றுக் கொண்டு மருந்து பற்றி யோசித்துக் கொண்டிருந்தால் கால தாமதம் ஆகிவிடும் என நினைத்தான். பிறகு அனுமன் சஞ்ஜீவி மலையை வேரோடு பெயர்த்து எடுத்துத் தன் ஒரு கையில் வைத்துக் கொண்டு வான வழியில் இலங்கை நோக்கிப் புறப்பட்டான்.

அனுமன் சஞ்சீவி மலையை கொண்டு வருதல்!

�� அனுமன் சஞ்சீவி மலையை தேடிச் சென்ற பிறகு ஜாம்பவானும், விபீஷணனும் இராமரை காண விரைந்து வந்தனர். இருவரும் இராமரின் நிலைமையைக் கண்டு வருந்தினர். பிறகு இவர்கள் இராமரின் திருவடிகளை தொட்டு வணங்கினர். இதனால் இராமர் உணர்ச்சி பெற்று கண்களை மெதுவாக விழித்தார். இராமர், தன் முன் கண்ணீருடன் நிற்கும் விபீஷணனையும், ஜாம்பவானையும் பார்த்தார். இராமர் விபீஷணனை பார்த்து, விபீஷணா! நீ உணவு கொண்டுவர சென்றதால் நீ பிரம்மாஸ்திரத்தில் இருந்து தப்பித்தாய். ஜாம்பவானை பார்த்து, நீ சாகா வரம் பெற்றதால் உயிர் பிழைத்தாய் என்றார். பிறகு இராமர், இலட்சுமணனின் நிலையையும், நம் வானரப்படையின் நிலையையும் பார்த்தாயா? இதற்கு மேல் நான் இராவணனை வெல்வதில் என்ன பயன்? என் தம்பியை இழந்த பின் நான் வெற்றி காண்பதில் என்ன பயன் இருக்கிறது.

�� இலட்சுமணன், இந்திரஜித் மீது பிரம்மாஸ்திரத்தை ஏவுகிறேன் எனக் கூறினான். ஆனால் நான் பிரம்மாஸ்திரத்தை ஏவ வேண்டாம் எனக் கூறி விட்டுச் சென்றேனே. அந்த பிரம்மாஸ்திரத்தால் என் தம்பிக்கு ஆபத்து வரும் என நான் நினைக்கவில்லை. நான் என் தம்பியின் பக்கத்தில் இருந்திருந்தால் பிரம்மாஸ்திரத்தில் இருந்து காப்பாற்றியிருப்பேன். என் தம்பியை இழந்த பின் நான் உயிர் வாழ்வதில் என்ன பயன்? நான் என் உயிரை துறப்பது தான் உத்தமம் என்றார். இதைக் கேட்ட ஜாம்பவான், பெருமானே! தங்களிடம் நான் ஒன்று சொல்ல வேண்டும். உலகை காத்தருளும் நீங்கள் இவ்வாறு பேசுதல் கூடாது. இந்த நேரத்தில் தாங்கள் மனம் தளராமல் தைரியமுடன் செயல்பட வேண்டும். நான் அனுமனிடம் வடக்கே சஞ்சீவி மலைக்குச் சென்று இறந்தவர்களை உயிர்பிக்கும் மருந்தை கொண்டு வரச் சொல்லிருக்கிறேன்.

�� அனுமன் இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வந்து விடுவான் தாங்கள் கவலைக் கொள்ள வேண்டாம் என்றான். இப்படி ஜாம்பவான் சொல்லிக் கொண்டு இருக்கும் போது அனுமன், வடக்கிலிருந்து கடும் வேகத்துடன் வந்துக் கொண்டு இருந்தான். இந்த வேகத்தினால் பூமியே நடுநடுங்கிப் போனது. அனுமனை கண்ட ஜாம்பவான், அனுமன் வந்துவிட்டான்! அனுமன் வந்துவிட்டான்! என மகிழ்ச்சியில் கத்தினான். அனுமன் ஒரு பறவை வருவது போல் வந்து மெதுவாக நிலத்தில் இறங்கினான். ஆனால் சஞ்சீவி மலை அரக்கர்கள் உள்ள இடத்திற்கு வர மறுத்ததால், அனுமன்

மலையை வானத்தில் நிற்க வைத்து விட்டு வந்தான். சஞ்சீவி மலையின் காற்று வந்து பட்டதால், பிரம்மாஸ்த்திரத்தால் வீழ்ந்தவர்கள் புத்துயிர் பெற்று எழுவது போல் பெரும் வலிமையுடன் எழுந்தனர்.



�� (ஆனால் இராவணனின் கட்டளைப்படி அரக்கர்கள் கடலில் வீசப்பட்டதால் அவர்கள் உயிர் பெற்று எழ வாய்ப்பில்லாமல் போனது.) இராமர், உயிர் பெற்று எழுந்த இலட்சுமணனை ஆனந்த கண்ணீருடன் அன்போடு தழுவிக் கொண்டார். பிறகு இராம இலட்சுமணர், அனுமனை

பார்த்து, அனுமனே! தசரத குமாரர்களான நாங்கள் மாண்டு இருப்போம். இப்பொழுது உன்னால் திரும்பவும் உயிர் பெற்று எழுந்துள்ளோம். எங்களுக்கு உயிர் கொடுத்த மாவீரனே! உன் புகழ் என்றென்றும் வாழ்க என வாழ்த்தினர். அனுமன் ஒன்றும் பேசாமல் அடக்கத்தோடு இராமரை வணங்கினான

�� வானரங்கள் அனுமனை சூழ்ந்துக் கொண்டு வாழ்த்தினர். அனைவரும் உயிர்ப்பெற்று எழுந்தவுடன் ஜாம்பவான் அனுமனிடம், சஞ்சீவி மலையை சிறிதும் தாமதிக்காமல் அதை எடுத்த இடத்திலேயே கொண்டு போய் வைத்துவிட்டு வா எனக் கூறினான். அனுமன், சஞ்சீவி மலையை இருந்த இடத்தில் வைக்க சென்றான். இந்திரஜித் ஏவிய பிரம்மாஸ்திரம் இராமர் முன் வந்து தோன்றியது. என்னை வில்லில் பூட்டி செலுத்திய பின் நான் கொல்லுவது என்பது உறுதி என்ற உண்மையை நீ நிலை நிறுத்திவிட்டாய் எனக் கூறிவிட்டு இராமரை சரணடைந்தது. இராவணனின் அரண்மனையில், இந்திரஜித் தன் பிரம்மாஸ்திரத்தால் இராம இலட்சுமணன் உள்ளிட்ட வானரங்கள் வீழ்ந்ததை வெற்றி விழாவாகக் கொண்டாடிக் கொண்டு இருந்தனர். அரக்கர்களும், அரக்கியர்களும் மது அருந்தி ஆட்டம் பாட்டம் என மகிழ்ச்சியாக கொண்டாடினர். அங்கு வானர வீரர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். வானரங்களின் ஆரவாரங்களை கேட்டு இராவணன் திடுக்கிட்டான். அப்பொழுது இராவணனின் தூதர்கள் அங்கு வந்தனர்.

�� அரசே! அனுமன் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்ததால் பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்தவர்கள் புத்துயிர் பெற்று எழுந்து ஆரவாரம் செய்துக் கொண்டு இருக்கின்றனர் என்றார்கள். இதைக்கேட்ட இராவணனின் மகிழ்ச்சி நிரம்பிய உள்ளம் சோகத்தால் வாடியது. உடனே இராவணன் மந்திர ஆலோசனைக்கு விரைந்துச் சென்றான். அங்கு இந்திரஜித், மாலியவான், மகோதரன் உள்ளிட்ட மற்ற மந்திர தலைவர்கள் அங்கு வந்துச் சேர்ந்தனர். இராவணன், இராம இலட்சுமணர் மற்றும் வானர வீரர்கள் உயிர் பிழைத்ததைக் கூறினான். அப்போது மாலியவான், இராவணா! நீ அவசரப்பட்டு அரக்கர்களின் பிணங்களை கடலில் போட்டு விட்டாய். அப்படி செய்யாமல் இருந்தால் அனுமன் கொண்டு வந்த சஞ்சீவி மலையால் அவர்களும் உயிர் பிழைத்திருப்பார்கள். சஞ்சீவி மலையை தூக்கிய அனுமன் இந்த இலங்கை நகரை தூக்கி கடலில் எறிந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. நீ உன் பிடிவாதத்தைக் கொண்டு உன் மதியை இழந்து விடாதே.

�� நீ சீதையை கொண்டு போய் இராமனிடம் ஒப்படைத்து விட்டு, இராமனை சரணடைந்தால் இலங்கையில் மீதமுள்ள அரக்கர்களும் உயிர் வாழ்வார்கள் என்றான். இதைக் கேட்டு இராவணன், மிகுந்த கோபங்கொண்டு தங்களின் அறிவுரைகளுக்கு நன்று எனக் கூறி அமர

வைத்தான். இலங்கையில் அரக்கர்கள் அனைவரும் அழிந்தாலும், நான் ஒருவனே தனித்து நின்று போர் புரிவேன். போர் புரிவதற்கு யாருக்கேனும் பயம் இருந்தால் ஓடி விடுங்கள். அது மகனாக இருந்தாலும் சரி. என் எதிரிகளை அழிக்கும் ஆற்றல் என்னிடம் உள்ளது. எனக்கு துணையாக யாரும் வர வேண்டாம். நானே அவர்களை அழிப்பேன் எனக் கூறினான். அப்பொழுது இந்திரஜித் தந்தையை வணங்கி, தந்தையே! நான் அனைவரையும் கொல்லுமாறு பிரம்மாஸ்திரத்தை ஏவினேன். ஆனால் அதிலிருந்து இராமன் தப்பித்து விட்டான். இதிலிருந்து விபீஷணன் கூறியவாறு இராமன் பரம்பொருள் என்பதை தாங்கள் உணர வேண்டும் என்றான்.

மாய சீதை...!

�� இராவணன் கோபங்கொண்டு, என் ஆற்றலை நீ அறியவில்லை. நாளை நானே போருக்குச் சென்று அவர்களை கொல்லுவேன் என்றான். இதைக்கேட்ட இந்திரஜித், தந்தையே! தாங்கள் என்னை மன்னித்தருள வேண்டும். நாளை நான் போருக்குச் செல்கிறேன். அதற்கு முன் நான் இராம இலட்சுமணனை வெல்ல நிகும்பலா யாகம் செய்ய வேண்டும். இதற்கும் ஒரு தடை உள்ளது. நான் நிகும்பலா யாகம் செய்வதை விபீஷணன் இராம இலட்சுமணனிடம் சொல்லாமல் இருக்க வேண்டும். இதனை தடுக்க நாம், மாய சீதையை கொன்றுவிட்டு பிறகு அயோத்திக்கு செல்வது போல் பாசாங்கு காட்ட வேண்டும். அதன்பின் நான் நிகும்பலா யாகத்தை செய்து முடிப்பேன் என்றான். இந்திரஜித்தின் யோசனையை ஏற்று இராவணன் இதற்கு சம்மதம் தெரிவித்தான்.

�� இந்திரஜித்தின் யோசனைப்படி, அனுமன் சஞ்சீவி மலையை வைத்துவிட்டு வான மார்க்கமாக வந்துக் கொண்டிருக்கும்போது இந்திரஜித் ஓர் அரக்கனை மாய சீதையாக மாற்றி அனுமன் முன்தோன்றினான். இந்திரஜித் மாய சீதையின் கூந்தலை கையில் பிடித்துக் கொண்டு, ஒரு வாளை கையில் வைத்திருந்தான். இந்திரஜித் அனுமனை பார்த்து, அடேய், வானரமே! இத்தனை விளைவுகளும் இந்த சீதையினால் தான் நிகழ்ந்தது. அதனால் இவளை நான் கொல்லப் போகிறேன். அது மட்டுமல்லாமல் நான் அயோத்திக்குச் சென்று பரதன், சத்ருக்கனையும் கொல்லப் போகிறேன் என்றான். அனுமன், அவனிடம் பணிவாக, பெண்ணை கொல்வது என்பது பாவச் செயலாகும். இதனால் உனக்கு பாவங்கள் தான் அதிகரிக்கும். அறநெறியை அழித்து பாவத்தை தேடிக் கொள்ளாதே என தடுத்தான்.

�� ஆனால் இந்திரஜித் அனுமனின் சொல்லைக் கேட்காமல் மாய சீதையை அனுமன் கண் முன் தன் வாளால் வெட்டிவிட்டு, நான் அயோத்திக்குச் சென்று பரதன், சத்ருக்கனையும் கொல்லப் போகிறேன் எனக் கூறி அயோத்திக்குச் செல்வதை போல் நிகும்பலா யாகம் செய்யும் இடத்திற்குச் சென்றான். அனுமன் நிஜமாகவே சீதை இறந்த விட்டதாக நினைத்து புலம்பி அழுதான். பிறகு அனுமன், விரைந்துச் சென்று இராமரிடம் சீதை இறந்தச் செய்தியையும், இந்திரஜித் அயோத்தி சென்றிருப்பதையும் கூறினான். இதைக் கேட்ட இராமர், அசைவற்று இருந்தார். வானரங்கள் எல்லாம் புலம்பி அழுதனர். இராமரின் நிலைமையை பார்த்த இலட்சுமணன், அண்ணா! தாங்கள் இவ்வாறு வருந்துவது அறிவுடைமையாகாது. நாம் இந்த மூவுலகங்களையும் அழிக்க வேண்டும் என்றான்.

�� அப்பொழுது விபீஷணன் இராமரை பணிந்து, பெருமானே! இது எல்லாம் அரக்கர்களின் மாய வேலையாகத் தான் இருக்க வேண்டும். உங்களை திசை திருப்பிவிட்டு, இந்திரஜித் நிகும்பலா யாகம் செய்யச் சென்றிருப்பான். அந்த யாகத்தை அவன் திறம்பட செய்துவிட்டால் அவனை வெல்ல எவராலும் முடியாது. தாங்கள் கவலை கொள்ளாமல் இருங்கள். நான் வண்டு போல் சிறு உருவம் எடுத்து அன்னை சீதை எவ்வாறு இருக்கிறார் என்பதை பார்த்துவிட்டு வருகிறேன் என்றான். பிறகு விபீஷணன் சிறு வண்டு போல் உருவம் எடுத்து, அசோக வனத்திற்குச் சென்றான். அங்கு சீதை நலமுடன் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். உடனே விபீஷணன் அங்கிருந்து விரைந்து வந்து இராமரிடம், அன்னை சீதை நலமுடன் இருக்கிறார் எனக் கூறினான்.

இலட்சுமணன் - இந்திரஜித் போர்...!

�� போரைக் காண்பதற்காக விண்ணுலகத்தவர் வானில் வந்து தோன்றினர். அப்பொழுது இந்திரஜித் விபீஷணனிடம், நீ அரக்க குலத்தையே கெடுக்க வந்தாயா? சிறிது கூட உனக்கு வம்ச ரத்தம் ஓடவில்லையா? நம் விரோதியே கதி என்று இருக்கின்றாய். உனக்கென்ன மூளை மழுங்கிவிட்டதா? இன்று உன் யோசனையால் தான் இந்த யாகம் தடைப்பட்டு விட்டது என்றான். விபீஷணன், நான் அரக்க குணம் கொண்டவனல்ல. நேர்மையை விரும்புபவன். அதனால்தான் இவர்களோடு நட்பு கொண்டேன். நட்பு நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தது. பிறர் பொருளைக் கவர்ந்தவன் என்றுமே வாழ்க்கையில் உயரமாட்டான். நீ இராவணனுக்காக போர் புரிகிறாய். அதனால் நீயும் அழிய வேண்டியவன் தான் என்றான். இதைக்கேட்டு இந்திரஜித் மிகவும் கோபம் கொண்டான்.

�� இலட்சுமணனை பார்த்து, நான் உன்னையும், உன் அண்ணனையும் நினைவிழக்கச் செய்தேனே. அதை நீ மறந்துவிட்டு இப்பொழுது என் கையால் இறக்கவா வந்திருக்கின்றாய்? எனக் கேட்டான். இலட்சுமணன், வீரனே! இனி என்னை கொல்வது என்பது முடியாத காரியம். அதனால் என்னிடம் வீண்பேச்சு பேசாதே. மறைந்து தாக்குவது தான் வீரனின் பலமா? என்னுடன் வந்து நேருக்கு நேர் போர் புரிந்து வென்றுக்காட்டு எனக் கூறினார். இருவருக்கும் போர் ஆரம்பமானது. இவர்களுக்கிடையில் நீண்ட நேரம் போர் நடந்தது. இந்திரஜித்தால் இலட்சுமணனின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. விபீஷணன், வானரர்களே, அரக்கர்களை அழியுங்கள். இராவணனுக்கு இந்த இந்திரஜித் ஒருவனே மாவீரன். இவனைக் இலட்சுமணன் கொன்று விடுவார்.

�� நாம் இலட்சுமணனுக்கு உதவி புரியும் வகையில் அரக்கர்களை அழிப்போம் என கூறினான். வானர வீரர்கள், அரக்கர்களை கொன்று வீழ்த்தினர். இலட்சுமணன் இந்திரஜித்தின் தேர்ப்பாகனைக் கொன்றான். அதனால் இந்திரஜித் தானே தேரை ஓட்டிக் கொண்டு போர் புரிந்தான். வானர வீரர்கள் இந்திரஜித்தின் தேரைத் ஒடித்தெறிந்தனர். பிறகு இந்திரஜித் தரையில் நின்றுக் போர் புரிந்தான். இலட்சுமணனின் தாக்குதலை தாக்கு பிடிக்க முடியாமல் இந்திரஜித் சக்தி வாய்ந்த

படைக்கலன்களை ஏவ ஆரம்பித்தான். இந்திரஜித் இலட்சுமணன் மீது வாயுப்படையை ஏவினான். இலட்சுமணன் தன்னிடமிருந்த அக்னிப் படையை ஏவி அதை அணைத்தார். இந்திரஜித் வருணாஸ்திரத்தை இலட்சுமணன் மீது ஏவினான். இலட்சுமணன் தன்னிடமிருந்த வருணாஸ்திரத்தால் அதனைத் தூள்தூளாக்கினார்.

�� இந்திரஜித் ஏவும் படைக்கலனைக் அதே படைக்கலனைக் கொண்டு அழித்தார். வெகு நேரம் போர் புரிந்ததால் இந்திரஜித் சோர்வை உணர்ந்தான். அதனால் அவன் இலட்சுமணனை வீழ்த்த வேண்டும் என்பதற்காக பிரம்மாஸ்திரத்தை இலட்சுமணன் மீது ஏவினான். இதைப் பார்த்த தேவர்கள் இலட்சுமணன் வீழ்வது உறுதி என நினைத்து வருந்திக் கொண்டு இருந்தனர். உடனே இலட்சுமணன் தன்னிடமிருந்த சக்தி வாய்ந்த பிரம்மாஸ்த்திரத்தை நாணில் பூட்டி, இந்திரஜித் தொடுத்த படைக்கலனை மட்டும் அழிப்பாயாக. இந்திரஜித்தின் உயிரையும் ஏனைய உலகங்களையும் அழிக்காதே எனக் கூறி ஏவினான். அதேபோல் இலட்சுமணன் ஏவிய பிரம்மாஸ்த்திரம், இந்திரஜித்தின் படைக்கலனை மட்டும் அழித்தது. இதைக் கண்டு தேவர்கள் இலட்சுமணனை பாராட்டினர்.

இந்திரஜித் இலட்சுமணனால் அழிதல்!...

�� இலட்சுமணன், படைக்கலன்கள் அழித்ததை பார்த்து தேவர்கள் பாராட்டினர். ஆனால் இந்திரஜித் இதைக் கண்டு திகைத்து நின்றான். பிறகு இந்திரஜித் இலட்சுமணனை பார்த்து, இலட்சுமணா! இப்பொழுது நான் விடும் அஸ்திரத்தால் நிச்சயம் நீ மாண்டொழிவாய். உன்னால் இதிலிருந்து தப்பிக்க முடியாது எனக் கூறி விட்டு மிகச்சிறந்த அஸ்திரமான நாராயணஸ்திரத்தை ஏவினான். இலட்சுமணனும், அதே அஸ்திரத்தைக் கொண்டு அதை தூள்தூளாக்கினார். இதைப் பார்த்த இந்திரஜித் மிகவும் கோபங்கொண்டு இதற்கெல்லாம் விபீஷணன் தான் காரணம். அதனால் அவனை கொல்ல ஓர் அஸ்திரத்தை ஏவினான். அந்த அம்பு விபீஷணனை நோக்கி வரும்போது, இலட்சுமணன் அதையும் உடைத்தெறிந்தார். பிறகு இந்திரஜித் அங்கிருந்து மறைந்து அரண்மனையில் வீற்றிருக்கும் இராவணன் முன் தோன்றினான்.

�� இந்திரஜித் இராவணனை பார்த்து, உன் தம்பி விபீஷணனால் இன்று என் யாகம் தடைப்பட்டு போனது. பிறகு அங்கு நடந்த போரை பற்றிக் கூறினான். இலட்சுமணனின் வில்வேகத்தையும், போர்திறமையும் பற்றிக் கூறினான். அதனால் நீ சீதையை மறந்து விடு. இதுவே உனக்கு நன்மை. அவர்களும் போரை நிறுத்திக் கொள்வார்கள் எனக் கூறினான். இராவணன் கோபத்துடன், நான் சீதையை அவர்களிடம் ஒப்படைப்பதற்கு பதில், அவர்கள் முன் என் உயிரைத் துறப்பது மேல். உனக்கு போருக்குச் செல்ல பயமாக இருந்தால் என்னிடம் சொல், நானே போருக்குச் செல்கிறேன் எனக் கூறினான். பிறகு இந்திரஜித் இராவணனிடம், தந்தையே! தாங்கள் கோபம் கொள்ள வேண்டாம். நானே போருக்கு செல்கிறேன் என்றான். இந்திரஜித் இராவணனிடம் இருந்து விடைப்பெற்று போர் நடக்கும் இடத்திற்குச் சென்றான்.

�� அங்கு இலட்சுமணனுக்கும் இந்திரஜித்துக்கும் கடும்போர் நடந்தது. இலட்சுமணன், ஒரு அம்பை ஏவி இந்திரஜித்தின் தேரை உடைத்தெறிந்தார். பிறகு இந்திரஜித் கையில் வாளை ஏந்திக் கொண்டு வானத்தில் சென்று மறைய முற்பட்டான். அப்போது இலட்சுமணன், அம்பை எய்தி இந்திரஜித்தின் வாளோடு கையை வெட்டினான். தன் கையை இழந்த நிலையில் இந்திரஜித் இலட்சுமணனை நோக்கி, ஒரு சூலாயுத்தை வீசினான். இலட்சுமணன் அதையும் உடைத்தெறிந்தார். பிறகு

இலட்சுமணன் வேதங்களைத் தெளிந்து கூறும் கடவுளும், அந்தணர்கள் வணங்கும் கடவுளும் இராமனே என்பது உண்மை என்றால், இந்திரஜித்தைக் கொல் என்று ஓர் கடிய பாணத்தை ஏவினான். அப்பாணம் இந்திரஜித்தின் தலையை சீவிக் கொண்டு விழுந்தது.

�� மாவீரனும், மந்திர வேலையில் வல்லவனான இந்திரஜித் அந்த இடத்திலேயே தன் உயிரை விட்டான். இதைக்கண்டு விபீஷணன் ஆர்ப்பரித்தான். வானரர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். தேவர்கள் இலட்சுமணனை வாழ்த்தி பூமாரி பொழிந்தனர். பிறகு அங்கதன், இந்திரஜித்தின் தலையை கையில் ஏந்திக் கொண்டு, அனுமன் இலட்சுமணனை தோளில் ஏற்றிக் கொண்டு இராமரிடம் இச்செய்தியைக் கூறச் சென்றனர். இதைக் கேட்டு இராமர், இலட்சுமணனைத் தழுவிக்கொண்டு, இராவணனுக்கு இனி யார் இருக்கிறார்கள்? அவனின் முடிவு காலம் வந்து விட்டது எனக்கூறி தன் மகிழ்ச்சியை காட்டினார். பிறகு இராமர் இலட்சுமணனிடம், தம்பி இலட்சுமணா! இந்த வெற்றிக்கு நீயும் காரணம் இல்லை, நானும் காரணம் இல்லை. இதற்கு காரணம் விபீஷணன் தான் எனக் கூறி விபீஷணனை பாராட்டினார். பிறகு அனைவரும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

இராவணன் சீதையின் மேல் கோபம் கொள்ளுதல்!

�� இந்திரஜித் மாண்டச் செய்தியை இராவணனிடம் கூறினால் நம்மை கொன்று விடுவானோ என அஞ்சி தூதர்கள் சொல்ல பயந்தனர். தேவர்களும், அரக்கர்களும் பயந்து ஓடி ஒளிந்தனர். கடைசியில் அரக்கன் ஒருவன் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு இராவணனிடம் செல்லச் சென்றான். அவன் இராவணன் முன் கை கால்கள் நடுங்க நின்றான். அசுர குலத்தின் வேந்தனே! இளவரசர் இந்திரஜித் போரில் இலட்சுமணனால் மாண்டார் எனக் கூறினான். இதைக்கேட்டு இராவணன் கோபங்கொண்டு அவன் தலையை வெட்டி வீசினான். இந்திரனையே வென்ற இந்திரஜித்தை இலட்சுமணன் கொன்றுவிட்டான் என்பதை நினைத்து மிகவும் கோபங்கொண்டான். உடனே இராவணன் போர்க்களத்திற்குச் சென்று இந்திரஜித்தின் உடலைக் கண்டு கதறி அழுதான்.

�� என் செல்வமே! எனக்கு முன் நீ மாண்டாயே! உன் ஆற்றல் மேரு மலையை போன்றது. நீ எனக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை, நான் உனக்கு செய்யும் படி விதி செய்துவிட்டதே. நீ இறந்த செய்தியை அறிந்து இந்திரன் முதலான தேவர்கள் மகிழ்ந்திருப்பார்களே! நீ இன்றி இனி நான் என்ன செய்யப் போகிறேன் என தலையில் அடித்துக் கொண்டு மிகவும் புலம்பி கதறி அழுதான். அப்போது அவன், இந்திரஜித் வில்லோடு அறுப்பட்ட கையைக் கண்டு ஆறாத் துயரம் அடைந்தான். இராவணன், இந்திரஜித்தை அரண்மனைக்குச் கொண்டு சென்று பஞ்சு மெத்தையில் படுக்க வைத்து அழுதான். இந்திரஜித் இறந்த செய்தி மண்டோதரிக்கு தெரிவிக்கப்பட்டது. இதைக்கேட்டு மகனே! மகனே! என அலறிக் கொண்டு இந்திரஜித் காலடியில் வந்து வீழ்ந்தாள்.

�� என் அன்பு செல்வமே! என் ஆருயிரே! இனி உன்னை நான் என்று காண்பேன்! எவரும் வெல்ல முடியாத வலிமை உன்னிடம் இருந்ததே! நீ சிறு வயதில் அரண்மனைக்கு சிங்க குரளைக் கொண்டு அவற்றிற்கு சினமூட்டி விளையாடி மகிழ்வாயே. அது போன்ற காட்சியே இனிமேல் நான் எப்போது காணப் போகிறேன். உனக்கு நேர்ந்த இந்த நிலைமை தானே, நாளை உன் தந்தைக்கும் உண்டாகும் எனக் கூறி புலம்பி அழுதாள். இந்திஜித்தின் மனைவிமார்களும், இந்திரஜித்தைக் கண்டு கதறி அழுதனர். இலங்கையில் உள்ள அரக்கர்கள் அனைவரும் இந்திரஜித் மாண்ட

செய்தியை அறிந்து கதறி அழுதனர். இராவணன் இவற்றை எல்லாம் கண்டு மிகவும் கோபம் கொண்டான். உடனே அவன் இவ்வளவு துன்பத்திற்கும் காரணம் சீதை தான். நான் இப்பொழுதே சீதையை வெட்டி வீழ்த்துகிறேன் எனக் கூறிக் வாளை உருவிக் கொண்டு அசோக வனத்தை நோக்கிச் சென்றான்.

�� இராவணனை தடுக்க மந்திரிமார்களும், இராவணனின் மனைவிமார்களும் எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் போயிற்று. அப்போது மகோதரன் இராவணனை தடுத்து, அரசே! சற்று பொறுமையாக இருங்கள். அவரப்பட்டு அந்நியாய செயலை செய்து விடாதீர்கள். ஒரு பெண்ணை கொல்வது வீரனுக்கு அழகல்ல. அவ்வாறு தாங்கள் கொன்றாலும் தேவர்கள் முதலானோர் தங்களை பார்த்து கைக்கொட்டி சிரிப்பார்கள். நீங்கள் சீதையை அடைவது தான் நல்லது. தங்களுக்கு கோபமும், ஆத்திரமும் வந்தால் அதை இராம இலட்சுமணன் மேல் காட்டுங்கள். சீதையை கொன்றுவிட்டு நாளை போரில் இராமனையும், இலட்சுமணனையும் வெல்வதில் என்ன பயன் உள்ளது? அதனால் தாங்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என ஆறுதல் கூறினான்.

அசுரப்படைகளை கண்டு வானரங்கள் பயப்படுதல்!

�� மகோதரன் கூறியதைக் கேட்டு இராவணன் திரும்பிச் சென்றான். இராவணன் தன் ஏவலாட்களிடம் உலகில் உள்ள அரக்கர்கள் அனைவரும் இங்கு வர வேண்டும் என கட்டளையிட்டான். இராவணனின் கட்டளைப்படி உலகில் உள்ள அரக்கர்கள் இலங்கையை வந்தடைந்தனர். இராவணனின் தூதர்கள், இராவணனுக்கு படைகளை அறிமுகம் செய்தனர். இவர்கள் சாகத் தீவினர், இவர்கள் குசைத் தீவினர் என அங்கு வந்த ஆயிரம் ஆயிரம் படைகளை அறிமுகம் செய்தான். இவர்கள் அனைவரும் மேரு மலையை தூள்தூளாக்குவர். இவர்களால் முடியாத செயல் என்பது எதுவும் கிடையாது என்றனர். பிறகு இராவணன் அங்கிருந்துச் சென்று அரண்மனையின் கோபுரத்தின் மேல் நின்று அரக்கர்களின் எண்ணிக்கையை பார்த்தான்.


�� அதன் பின் இராவணன் படைத்தலைவர்களை அழைத்து, இப்போர் ஏற்பட்டதற்கான காரணத்தை விவரமாக கூறினான். அவனுக்கு சீதை மீது ஏற்பட்ட காதலை பற்றியும் கூறினான். அதற்கு அப்படைத்தலைவர்கள், மனிதர்களிடமும், வானரங்களிடமும் போரிடவா எங்களை அழைத்தீர்கள் என்றனர். அப்பொழுது வன்னி என்னும் தலைவன். அந்த மனிதர்கள் யார்? உங்களை காட்டிலும் அவர்கள் வலிமையானவர்களா? எனக் கேட்டான். அப்போது மாலியவான் அவர்களிடம், அவர்கள் வானரங்கள் என்று அலட்சியம் செய்யாதீர்கள். அவர்களில் ஒருவன் இங்கு வந்து அசோக வனத்தை அழித்து, இலங்கை நகரையும் தீமூட்டிவிட்டு சென்றுவிட்டான். அது மட்டுமின்றி பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்தவர்களை சிறு பொழுதில் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து அவர்களை உயிர்பித்துவிட்டான்.

�� இராமன் திருபாற்கடலை கடைந்த வாலியைக் கொன்றவன் என்றான். இதிலிருந்து ஒரே வழி சீதையை விடுவிப்பது தான் என்றான். ஆனால் அதற்கு வன்னி என்பவன், அரசனின் தம்பிமார்களும், மகன்களும் மாண்டபின் சீதையை விடுவிப்பது தவறு. எதிரிகளை வென்று காண்பிப்பது தான் சிறந்தது என்றான். பிறகு அவன் இராவணனைப் பார்த்து, வேந்தனே! இவ்வளவு நடந்த போதிலும் தாங்கள் ஏன் போருக்குச் செல்லவில்லை எனக் கேட்டேன். அதற்கு இராவணன் முதல் நாள் போரில் தோற்றதைக் கூறாமல், எனக்கு மனிதர்கள் மீதும், குரங்குகள்

மீதும் போர் செய்ய கேவலமாக இருந்தது என்றான். பிறகு படைத் தலைவர்கள், நாங்கள் செல்கிறோம். இன்றுடன் போர் முடிந்துவிட்டது என எண்ணிக் கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு சென்றனர்.

�� போருக்குச் செல்ல படைகள் தாயாராயின. அந்தப் படைகள் மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை. இவற்றில் மூலப்படையே தொன்மையானது என அவர்கள் நாங்களே செல்கிறோம் எனக் கூறிவிட்டுச் சென்றனர். மூலப்படையைக் கண்ட வானரங்கள் பயந்து ஓடி ஒளிந்தனர். நீலனும், அங்கதனும் வானரங்களை தடுத்து நிறுத்தி யாரும் பயப்பட வேண்டாம் எனக் கூறினர். அதற்கு வானரங்கள், அங்கே பாருங்கள்! அங்கு வருபவர்கள் எல்லாம் அசுர சேனைகள். உலகத்தை அழிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். இவர்களுடன் போர் புரிய ஆயிரம் இராமர் வந்தாலும், இலட்சுமணன் வந்தாலும் முடியாது. நாம் உயிர் வாழ்வதற்கு மலைகளும், குகைகளும் உள்ளது. பசியாற காய், கனிகள் இருக்கிறது எங்களுக்கு அது போதும் என நடுநடுங்கக் கூறினார்கள்.

இராமர் அசுரப்படையுடன் போரிடுதல்!



�� அங்கதன், ஜாம்பவானை பார்த்து! மதிநலம் மிக்கவரே! தாங்கள் இவர்களை கண்டு அஞ்சலாமா? நம்முடன் இருப்பவர் மனிதன் என்று எண்ணுகிறீர்களா? உலகத்தை ஆளும் பரம்பொருளே மனிதனாக வந்திருக்கிறார் அல்லவா? நம்மை காக்க இராமரின் கோதண்டம் இருக்கிறது. அவர் நிச்சயம் இந்த அசுர சேனைகளை வென்று காட்டுவார். அதனால் பயம் கொள்ள வேண்டாம் என ஆறுதல் கூறி அழைத்து வந்தனர். விபீஷணன் இராமரிடம், பெருமானே! இந்த படைகள் மூலப்படைகள். இவர்கள் இராவணனின் கட்டளையால் இங்கு வந்துள்ளார்கள். இவர்கள் உலகத்தையே வெல்லும் அளவிற்கு ஆற்றல் படைத்தவர்கள் என்றான். பிறகு இராமர் இலட்சுமணனிடம், தம்பி இலட்சுமணா! நான் இந்த மூலப்படைகளை எதிர்த்து போரிட்டு அழிக்கிறேன்.

�� நீ வானரங்களுக்கும், வீபிஷணனுக்கும் துணையாக இரு எனக் கூறிவிட்டு தன் கோதண்டத்தை கையில் எடுத்துக் கொண்டு போருக்குச் சென்றார். இராமர் போருக்கு செல்வதை பார்த்த தேவர்கள், இராமர் ஒருவரால் இந்த அசுர சேனைகளை அழிப்பது கடினம். இராமர்

நற்குணத்தில் சிறந்தவர். சிறந்த வில்லாளன். ஆனால் அரக்கர்களோ அதர்மம் செய்பவர்கள். அதர்மத்தை காட்டிலும் தர்மம் தான் வெல்லும். இப்போரில் அறம் தான் செல்லும் எனக் கூறி இராமர் போரில் வெற்றி பெற வாழ்த்தினார்கள். இராமர், தன் வில்லின் நாணோசையை எழுப்பி அரக்கர்கள் முன் நின்றார். அரக்கர்கள் இராமரைக் கண்டு, இந்த சிறு மனிதனா நம்மை எதிர்த்து போர் புரிய போகிறான். மலை போல் பலம் கொண்ட நம்மை இந்த எறும்பு கடிக்க முடியுமா? என ஏளனம் செய்தனர். இவனை அழிக்க ஒரு நொடி போதும் என இராமர் மீது பாணங்களை ஏவினர்.

�� இராமர் அப்பாணங்களை தடுத்து, கோதண்டத்தில் ஆயிரம் பாணங்களை தொடுத்து அரக்கர்களை அழித்தார். இராமரின் கரவேகம் மின்னலை போல் இருந்தது. நொடி பொழுதில் ஆயிரம் ஆயிரம் பாணங்களை தொடுத்து கடைசியில் இலட்சம் பாணங்கள் அரக்கர்களை அழித்தது. இவ்வாறு நொடியில் அரக்கர்களை கொன்று வீழ்த்தினார். இராமர் ஒருவரே பல்லாயிர இராமனாக இருப்பது போன்ற தோற்றம் அரக்கர்களுக்கு ஏற்பட்டது. போர்க்களத்தில் ஒவ்வொரு அரக்கனுடனும் இராமர் போரிடுவது போன்ற தோற்றம் அரக்கர்களை நிலை தடுமாற வைத்தது. இராமனின் கைவில்லின் மணி ஒலிக்கும் போதெல்லாம் அரக்கர்கள் கூட்டம் கூட்டமாக இறந்து வீழ்ந்தனர்.

இராமருடைய கோதண்டத்தில் இருக்கும் பதினாறு தங்க மணிகளும், பதினாறு கவந்த மணிகளும் :

�� இராமருடைய கோதண்டத்தில் பதினாறு தங்க மணிகளும், பதினாறு கவந்த மணிகளும் மொத்தம் முப்பத்திரண்டு மணிகள் தொங்க விட்டிருந்தது. ஆயிரம் யானைகள், பதினாயிரம் தேர் ஒரு கோடி குதிரைகள், ஆயிரம் சேனை வீரர்கள் இறந்தால் இராமருடைய வில்லில் உள்ள கவந்த மணி ஒரு முறை ஒலிக்கும். அந்தக் கவந்த மணி ஆயிரம் முறை ஒலித்தால் பெரிய தங்கமணி பெரிய சத்ததோடு கணீரென்று ஒலிக்கும். போரில் இராமருடைய கோதண்டத்தில் உள்ள முப்பத்திரண்டு மணிகளும் இடைவிடாமல் ஏழரை நாழிகை ஒலித்தது. அப்படியென்றால் அசுர சேனைகள் மாண்ட எண்ணிக்கையை எவ்வாறு எண்ண முடியும். இராமருடைய சக்தி வாய்ந்த போரை நாம் இந்த மூலப்படை மூலம் அறியலாம்.

இலட்சுமணன் - இராவணன் போர்!

�� இராவணன் ஒளிவீசும் தேரில் ஏறி, தேவர்களை வென்ற வில்லை கையில் ஏந்திக் கொண்டு, யானைப்படைகளும், குதிரைப்படைகளும், காலாட்படைகளும் புடைசூழ வானர வீரர்களை கொல்ல போர்களத்திற்கு வந்தான். அங்கு தன் அரக்கப்படைகள் அழிவதை அறிந்து மிகவும் கோபங்கொண்டான். வானர வீரர்களும், அரக்கப்படைகளும் பெரும் ஆரவாரத்துடன் போர் புரிந்தனர். இராவணன் கோபங்கொண்டு இலட்சுமணனுடன் எதிர்த்து போரிட்டான். இராவணன் ஏவும் அஸ்திரங்களை இலட்சுமணன் எளிதாக உடைத்தெறிந்தார். இதைப்பார்த்த இராவணன், இலட்சுமணனை சாதரணமான அஸ்திரங்களை கொண்டு வீழ்த்த முடியாது என்பதை எண்ணி, தெய்வப் படைகலன்களை கொண்டு வீழ்த்த நினைத்தான். அதனால் இராவணன் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட மோகாஸ்திரத்தை இலட்சுமணன் மீது ஏவினான்.

�� இதைப் பார்த்த விபீஷணன் அந்தக் கணையை முறியடிக்க, இலட்சுமணனை நாராணயஸ்திரத்தை பிரயோகம் செய்யும்படி கூறினான். அதன்படி இலட்சுமணனும் நாராயணயஸ்திரத்தை பிரயோகம் செய்து மோகாஸ்திரத்தை வீழ்த்தினான். இதைக் கண்ட இராவணன், விபீஷணன் மீது கோபங்கொண்டு அவனை வீழ்த்த நினைத்தான். அதனால் அவன் மண்டோதரியின் தந்தை மயன், மண்டோதரியின் திருமணத்தின் போது சூலாயுதத்தை இராவணனுக்கு கொடுத்தான். அந்த சூலாயுதம், யாரைக் நோக்கி பிரயோகம் செய்தாலும் அது அவர்களை கொன்றுவிட்டு திரும்ப வரும். விபீஷணனை கொல்ல இராவணன் மயன் கொடுத்த சூலாயுதத்தை அவன் மீது பிரயோகம் செய்தான். இதைப்பார்த்த விபீஷணன் இன்று நிச்சயம் இந்த சூலாயுதம் என்னை வீழ்த்தப் போகிறது எனக் கூறினான்.

�� இலட்சுமணன் சூலாயுதத்தை தடுக்க பல கணைகளை ஏவினான். அவை அனைத்தும் பயனற்று போனது. தங்களிடம் அடைக்கலம் புகுந்த விபீஷணனை காக்க எண்ணி இலட்சுமணன், அந்த கணையை தான் வாங்கிக் கொள்ள விபீஷணன் முன் வந்து நின்றான். இலட்சுமணனுக்கு முன் அங்கதன் வந்து நின்றான். அங்கதனுக்கு முன் சுக்ரீவன் வந்து நின்றான். சுக்ரீவனுக்கு முன் அனுமன் வந்து நின்றான். இப்படி அந்த கணையை வாங்க மாறிமாறி நின்றுக் கொண்டிருந்தனர். சூலாயுதம்

நெருங்கி வரும் நேரத்தில் இலட்சுமணன் முன் நின்று அதை தன் மார்பில் வாங்கிக் கொண்டான். அந்த சூலாயுதம் இலட்சுமணனின் மார்பில் பட்டு அவரது உயிரை பறித்துச் சென்றது. இலட்சுமணன் நிலத்தில் வீழ்ந்தார்.

�� இலட்சுமணன் வீழ்ந்ததை பார்த்து கோபம் கொண்ட விபீஷணன், இராவணனின் தேரையும், குதிரைகளையும் உடைத்தெறிந்தார். இராவணன், இலட்சுமணன் இறந்து விட்டான். போர் முற்று பெற்றுவிட்டது என நினைத்து அரண்மனைக்கு திரும்பினான். இலட்சுமணனின் அருகில் சென்று விபீஷணன் கதறி அழுதான். அப்பொழுது ஜாம்பவான், அனுமனிடம், அனுமனே! நீ உடனே சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து இலட்சுமணனை காப்பாயாக எனக் கூறினான். அனுமனும், உடனே வடக்கே சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து இலட்சுமணனுக்கு உயிர்ப்பித்தான். உயிர் பெற்ற இலட்சுமணன் எழுந்ததும், விபீஷணன் நலமாக இருக்கிறானா? எனக் கேட்டார். பிறகு அனுமனை கட்டி தழுவிக் கொண்டார்.

இராவணனின் மகிழ்ச்சி...!

�� அனைவரும், இராமரிடம் பெருமானே! அடைக்கலம் புகுந்தவரை காக்கும் பொருட்டு இலட்சுமணன் உயிர் தியாகம் செய்து உயிர்ப் பெற்றுள்ளார் எனக் கூறினர். இதைக் கேட்டு இராமர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். இலட்சுமணனின் புகழ் ஓங்கி நிற்கும் எனக் கூறி வாழ்த்தினார். பிறகு இராமரும், இலட்சுமணரும் ஓய்வு பெற சென்றுவிட்டனர். வானரங்கள் இந்த மூலப்படையை இராமர் எவ்வாறு அழித்திருப்பார் என்பதை போர்க்களத்திற்கு சென்று பார்த்தனர். அங்கு அரக்கர்களின் பல சேனைகள் வீழ்ந்துக் கிடப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். பிறகு இராமரை நினைத்து துதித்து போற்றினர். இராவணன், நான் இலட்சுமணனை கொன்று விட்டேன். அங்கு மூலப்படைகள் இராமனை கொன்று இருப்பார்கள் என நினைத்து அளவற்ற மகிழ்ச்சியில் இருந்தான்.

�� அதனால் அவன் தனக்காக போர் செய்த படைத்தலைவர்களுக்கு விருந்து வைக்க ஏற்பாடு செய்ய நினைத்தான். உடனே ஏவலாட்களை அழைத்து, விருந்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என கட்டளையிட்டான். இராவணனின் கட்டளைக்கிணங்க ஏவலர்கள் சுவையான பண்டங்களும், இனிப்பு வகைகளும், வகை வகையான குளிர் பானங்களும் நிரப்பி வைத்தனர். அரண்மனையில் ஆடலும், பாடலும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அப்போது தூதர்கள் அங்கு வந்து, அரசே! தாங்கள் அனுப்பிய மூலப்படைகளை இராமர் அழித்து விட்டார் எனக் கூறினர். இதைக்கேட்டு இராவணன் திடுக்கிட்டான். ஒரு மனிதன் மூலப்படையை தனியாக நின்று அழித்து விட்டானா? இது ஆச்சர்யமாக இருக்கிறதே! அப்படி இருப்பினும் நான் இலட்சுமணனை கொன்றுவிட்டேன்.

�� இராமன், இலட்சுமணன் மாண்டச் செய்தியை அறிந்து அவனும் வீழ்வான் என நினைத்து மகிழ்ந்தான். அப்போது மற்றொரு தூதர்கள் அங்கு வந்து, அரசே! தாங்கள் வீழ்த்திவிட்டு வந்த இலட்சுமணன் உயிர் பெற்றான். அனுமன் சஞ்சீவி மலையைக் கொண்டு உயிர்ப்பித்து விட்டான் எனக் கூறினர். இதைக் கேட்டு இராவணன் அதிர்ச்சி அடைந்தான். மிகவும் கோபம் கொண்டான். உடனே அவன் கோபுரத்தின் மேல் நின்று மூலப்படையை அழிந்ததை பார்த்தான். இனி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான். இராவணன் மந்திர ஆலோசனை

மண்டபத்திற்கு சென்றான். அங்கு இராவணனின் பாட்டன் மாலியவான் இராவணனை பார்த்து, இராவணா! இப்பொழுதாவது நான் சொல்வதைக் கேள்.

�� சீதையை இராமனிடம் கொண்டுச் சென்று ஒப்படைத்துவிடு. இது தான் உனக்கு நலம். உன்னால் இந்த அரக்க குலம் அழியும் படி செய்து விடாதே. இப்பொழுதாவது விபீஷணன் கூறியதை நினைத்துப் பார். அந்த பரம்பொருளே! மண்ணுலகில் இராமனாக அவதரித்துள்ளான். இனியும் அதர்ம செயலை செய்யாதே என அறிவுரைக் கூறினான். இதைக்கேட்டு இராவணன் மாலியவான் மீது கோபம் கொண்டான். பிறகு மகோதரனிடம், மகோதரா! இன்னும் எஞ்சியிருக்கும் அரக்க சேனை படைகளை தயாராக இருக்கும்படி கட்டளையிட்டான். இராவணனின் கட்டளைப்படி அரக்கப் படைகள் போருக்கு தயாராக இருந்தன. இராவணன் நீராடி சிவபூஜை செய்தான். பிறகு தன்னிடமிருந்த விலையுயர்ந்த பொருட்கள், ஆடை ஆபரணங்கள் எல்லாவற்றையும் தான தர்மம் செய்தான்.

சிவபெருமானின் கட்டளை...!

�� இராவணன், இரத்தின கவசம் கட்டி, அம்புறாத் துணியை தோளில் கட்டி, வில்லை கையில் ஏந்திக் கொண்டு சூரியனைப் போல் ஒளி வீசும் தேரில், காற்றை விட வேகமாகச் செல்லும் குதிரைகளை பூட்டி, அதில் போருக்கு தேவையான வாள், சூலம் முதலிய ஆயுதங்களை வைத்து, அத்தேருக்கு மலர்களால் பூஜித்து வழிபாடு செய்தான். இராவணனுடைய பத்து தலைகளும் ரத்தினங்களால் அழகுப்பட்டிருந்தன. இராவணன், கணவனை நினைத்து இன்று சீதை அழ வேண்டும். அப்படி இல்லையென்றால் மண்டோதரி அழ வேண்டும். இவ்விரண்டில் ஒன்று இன்று நடந்தே ஆகும் எனக் கூறிவிட்டு சிங்கத்தை போல் தேரில் ஏறி போர்களத்திற்குச் சென்றான். இராவணனுடைய கோபத்தைக் கண்டு தேவர்கள் இன்று என்ன நிகழப் போகிறதோ என கதிகலங்கி இருந்தனர்.

�� இராவணன் போருக்கு வருவதைக் கண்ட விபீஷணன் இராமரிடம் சென்று இராவணன் போருக்கு வந்துக் கொண்டிருக்கிறான் எனக் கூறினான். இதைக்கேட்டு வானரங்கள் பயத்தால் நடுநடுங்கிப் போயினர். இராமர் வானரங்களிடம் கருணையுடன், வீரர்களே! தாங்கள் பயப்பட வேண்டாம். இன்று இராவணனின் வதம் நிகழும். நீங்கள் அனைவரும் துன்பத்தில் இருந்து மீள்வீர்கள் எனக் கூறிவிட்டு போர்க்களம் பூண்டார். விண்ணுலகத்தில் சிவபெருமான் தேவர்களை அழைத்து, இன்று இந்தப் போர் முடிந்துவிடும். இராவணன் இன்று மாள்வான். அதனால் இராமருக்கு, இந்திரனின் தேரை காட்டிலும் நிகரில்லாத வெற்றி பொருந்திய தேரை இராமருக்கு அனுப்புங்கள் என பணித்தார். இந்திரன் உடனே ஒரு தேரை தயார் செய்தார்.

�� அத்தேரை தேவர்கள் அனைவரும் வணங்கி, இப்போரில் வெற்றியை காண்பாயாக எனக் கூறி வாழ்த்தினர். அத்தேரை இந்திரனின் தேர்பாகனான மாதலியிடம் கொடுத்து இராமருக்கு அனுப்பினர். அத்தேர் இராமரின் முன்வந்து நின்றது. இராமர் அத்தேரை கண்டு திகைத்து நின்றார். இராமர், அத்தேரை பார்த்து இது அரக்கர்களின் மாய வேலையாக இருக்குமோ? என நினைத்தார். இராமர், மாதலியை பார்த்து, நீ யார்? உன் பெயர் என்ன? எனக் கேட்டார். மாதலி, இராமரை வணங்கி, என் பெயர் மாதலி. நான் இந்திரனின் தேர்ப்பாகன். சிவபெருமானும், பிரம்ம தேவனும் கட்டளையிட, இந்திரனால் அனுப்பப்பட்ட தேர் இது.

அத்தேரின் தேர்பாகன் நான் என்றான். பிறகு அத்தேரில் பூட்டியிருந்த குதிரைகள், மாதலி கூறிய அனைத்தும் உண்மையே என வேத மொழிகளால் உறுதி செய்தன.

�� பிறகு விபீஷணன் அங்கு வந்து, அத்தேரை உற்று நோக்கினான். இராமர், இலட்சுமணன், அனுமன், விபீஷணனை பார்த்து இதில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் உள்ளதா? எனக் கேட்டார். அவர்கள் பெருமானே! இதில் சந்தேகப்பட ஒன்றும் இல்லை. இது இந்திரன் அனுப்பிய தேர் தான் என்றனர். பிறகு இராமர் அத்தேரில் ஏறி அமர்ந்தார். தேவர்கள் வாழ்த்து மழை பொழிய, இராமர் போருக்கு புறப்பட்டுச் சென்றார். அத்தேர் இராவணன் முன் வந்து நின்றது. இராவணனும் தேரை விரைந்து செலுத்தி இராமர் முன் வந்து நின்றான். இராமரின் தேர், தேவர்கள் அனைவரும் சேர்ந்து கொடுத்தது என்பதை அறிந்து மிகவும் கோபங்கொண்டான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன. இராமரும், இராவணனும் போர் புரிய எதிரெதிரே நின்று கொண்டிருந்தனர்.

இராமர் - இராவணன் போர்...!

�� இராமரும், இராவணனும் போர் புரிய எதிரெதிரே நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது இராவணனின் மந்திர ஆலோசனையின் அமைச்சரான மகோதரன் இராமரை நோக்கி அம்புகளை ஏவினான். இராமர், அந்த அம்புகளை தன் அம்புகளால் தகர்த்தெறிந்தார். பிறகு மகோதரனின் படைகள் இராமரை தாக்க ஓடி வந்தன. இராமர் அந்த அரக்க படைகளை அம்பு மழை பொழிந்து அழித்தார். இப்பொழுது மகோதரன் மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தான். இராமர், மகோதரனை நோக்கி ஒரு கணையை ஏவினார். அந்த கணை மகோதரனின் தலையை துண்டித்துச் சென்றது. மகோதரன் அந்த இடத்திலேயே மாண்டொழிந்தான். மகோதரனின் மரணத்தை கண்டு இராவணன் கடுங்கோபம் கொண்டான். அவன் கண்கள் கோபத்தால் சிவந்தது. இராவணனுடைய படைகள் இராமரை சூழ்ந்து ஓடி வந்தன. இராமர் அம்புகளால் அரக்கர்களை அழித்து கொண்டு இருந்தார்.

�� அப்பொழுது இராவணனுக்கு சில தீய நிமித்தங்கள் ஏற்பட்டன. இராவணின் இடது கண்ணும், இடது தோளும் துடித்தன. இராவணன் கழுத்தில் இருந்த மாலை அழுகி நாற்றம் வீசியது. இருப்பினும் இராவணன் இந்த மனிதனா? என்னை வெல்லப் போகிறான். நான் வெள்ளி மலையை அள்ளி எடுத்தவன். இந்திரனை வென்றவன் என்று கூறினான். இராவணன், இந்த இராமனை நான் புழுவை நசுக்குவது போல் நசுக்கி கொல்வேன் என கர்ஜனை செய்தான். உடனே இராவணன், இராமரை நோக்கி ஆயிரமாயிரம் அம்புகளை ஏவினான். அந்த அம்புகள் இராமர் இருந்த இடத்தையே மறைத்துவிட்டது. இதைப்பார்த்து வானரங்கள் அஞ்சி நடுங்கினர். விண்ணுலகத்தவரும் இதைக் கண்டு அஞ்சி நடுங்கினர். இராவணன் தன் தேரை விண்ணிலும், மண்ணிலும் சுழன்று சுழன்று சுத்தினான்.

�� அதேப் போல் மாதலியும், இராவணன் செல்லும் இடமெல்லாம் அவன் முன் தேரை நிறுத்தி நிலை தடுமாற வைத்தான். இராவணன் அர்த்த சந்திர பாணத்தை ஏவி, இராமரின் தேரில் இருந்த கொடியை அறுத்தெறிந்தான். உடனே இராவணன், இராமரின் தேரில் இருந்த கொடி அறுத்தெறிந்ததைக் கண்டு மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தான். இதைப்பார்த்த கருட பகவான், இராமரின் தேரில் கொடியாக வந்து

நின்றார். பிறகு இராமர் ஒரு சிறந்த கணையை ஏவி இராவணனின் தேரில் இருந்த வீணைக்கொடியை அறுத்தெறிந்தார். இதைப் பார்த்து கோபங்கொண்ட இராவணன், இராமர் மீது தாமதப் படையை ஏவினான். தாமதப்படை புயல், மழை, நெருப்பு என மாறி மாறி சுழன்றுக் கொண்டு இராமரை நோக்கி வந்தது. இராமர், தெய்வப் படைக்கலன்களில் சிறந்த அஸ்திரமான சிவாஸ்திரத்தை தாமதப் படை மீது ஏவினார்.

�� தாமதப் படை சிதறி வெள;வேறு திசையில் போய் விழுந்தது. பிறகு இராவணன், இராமரை நோக்கி அசுராஸ்திரத்தை ஏவினான். அந்த அஸ்திரம் கோடிக்கணக்கான அஸ்திரங்களாக பிரிந்து நெருப்பு பொறியாக இராமரை நோக்கி வந்துக் கொண்டிருந்தது. இராமர் அசுராஸ்திரத்தை, அக்னி கணையால் நொடிப்பொழுதில் பொடியாக்கினார். இராவணன் மறுபடியும், மண்டோதரியின் தந்தையுமான, இராவணனின் மாமன் மயன் கொடுத்த ஒரு சிறந்த அஸ்திரத்தை இராமர் மீது ஏவினான். இராமர், அந்த அஸ்திரத்தை காந்தர்வக் கணையைக் கொண்டு பொடிப்பொடியாக்கினார்.

இராவணனின் சூலாயுதம்...!

�� இராவணன், இந்த இராமனை சாதாரண அஸ்திரத்தை கொண்டு வீழ்த்த முடியாது. நான் மிகச் சிறந்த அஸ்திரத்தை ஏவி இராமனைக் கொல்லுவேன் என்றான். பிறகு இராவணன், மாயாஸ்திரத்தை எடுத்து அதனை மலர்களால் அர்ச்சனை செய்து, பிறகு சிவபெருமானை வழிபட்டு இராமர் மீது ஏவினான். அந்த அஸ்திரம் மறைந்த அரக்கர்களை அதாவது இந்திரஜித், கும்பகர்ணன், அட்சய குமாரன், அதிகாயன், மூலப்படை முதலிய அரக்கர்கள் எழுந்து ஆரவாரம் செய்வது போல் இருந்தது. இந்த அஸ்திரத்தை பார்த்து தேவர்கள், வானரங்கள் அஞ்சி நடுங்கினர். இராமர், இந்த அஸ்திரத்தை பெரியதாக பொருட்படுத்தாமல் ஞானாயஸ்திரத்தை ஏவினார். இதனால் மாயாஸ்திரம் இருந்த இடம் தெரியாமல் பொடியானது. மறுபடியும் இராவணன் மிகவும் பலம் பொருந்திய சூலாயுதத்தை இராமர் மீது ஏவினான். அந்த சூலாயுதம் இராமரை கொல்ல வந்துக் கொண்டிருந்தது. இராமர், அந்த அஸ்திரத்தை பொடியாக்க பல கணைகளை ஏவினார்.

�� ஆனால் அவை எல்லாமே சூலாயுதத்துக்கு முன்னால் பயனற்று போனது. சூலாயுதம் இராமரின் மார்பை நோக்கி வந்துக் கொண்டிருந்தது. இதைப் பார்த்து வானரங்கள் திகைத்து நின்றனர். தேவர்கள் இனி இராமர் உயிர் பிழைப்பது கடினம் என கண்கலங்கி நின்றனர். பரம்பொருளான இராமர் "ம்" என்ற ஓங்கார ஒலியை எழுப்பினார். இந்த ஓங்காரத்தால் சூலாயுதம் பொடி பொடியாகி இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இதைப்பார்த்த இராவணனும் ஆச்சர்யம் அடைந்தான். சக்தி வாய்ந்த சூலாயுதம் ஒரு சாதாரண மனிதனால் அழிந்துவிட்டதை நினைத்து அதிர்ச்சி அடைந்தான்.


�� இவன் என்ன சிவபெருமானா? அப்படி இருந்தால் இவனுக்கு மூன்று கண்களும், நீலமேகம் போன்ற நிறமுடைய மேனியும் இருக்க வேண்டும். அதனால் இவன் சிவன் இல்லை.

�� சிவன் இல்லையென்றால் பிரம்மதேவனா? பிரம்ம தேவனாக இருந்தால் நான்கு முகங்களும், எட்டு கண்களும் இருக்க வேண்டும் அல்லவா? அதனால் இவன் பிரம்மதேவன் இல்லை.

�� பிரம்மதேவன் இல்லையென்றால் இவன் திருமாலா? திருமாலாக இருந்தால் இவன் கையில் சங்கு சக்கரம் இருக்க வேண்டும் அல்லவா? அதனால் இவன் திருமாலும் இல்லை.

�� நான் பலகாலம் தவமிருந்து முயன்று பெற்ற வரங்களையெல்லாம் அழித்து விட்டான். இவன் தெய்வப்பிறவியாக இல்லாதபோது தவம் செய்யும் முனிவனாக இருப்பானா? அப்படி இவன் தவமுனிவனாக இருந்தால் இந்த இளம் வயதில் இவ்வளவு வலிமைகள் பெற இயலாதே. இந்த உலகத்தையே அழிக்கக்கூடிய இந்த சூலாயுதத்தை ஓங்காரம் ஓசையை கொண்டு அழித்து விட்டான். அப்படியென்றால் விபீஷணன் கூறியது உண்மை தானோ? இவன் பரம்பொருளே தான். விபீஷணன் கூறியவற்றை நான் இப்பொழுது உணர்கிறேன். இவன் யாராக இருந்தால் எனக்கென்ன? அந்த பரம்பொருளாக இருந்தால் தான் எனக்கென்ன? இவனை வெல்லாமல் நான் பின் வாங்க மாட்டேன் என எண்ணினான். பிறகு இராவணன் அரக்கர்கள் நிரம்பிய நிருதிப் படையை ஏவினான். இராமர், நிருதிப் படையை கருடப் படையை கொண்டு அழித்தார். பிறகு இராமர் ஒரு சிறந்த கணையை இராவணன் மீது ஏவினார். அந்தக் கணை இராவணன் கழுத்தை அறுத்துச் சென்றது.

இராவணனை வீழ்த்தும் இராமர்...!



�� நிருதிப் படையை அழித்த இராமர் ஒரு சிறந்த கணையை இராவணன் மீது ஏவினார். அந்தக் கணை இராவணன் கழுத்தை அறுத்துச் சென்றது. இதைப் பார்த்த தேவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் துள்ளி குதித்தனர். ஆனால் அந்த தலை விழுவதற்குள் வேறொரு தலை இராவணனுக்கு முளைத்தது. பிறகு இராமர் மற்றொரு சிறந்த கணையை ஏவினார். அந்த கணை இராவணனின் கரங்களை அறுத்துச் சென்றது. அதேபோல், இராவணனின் கரங்கள் நிலத்தில் விழுவதற்குள் வேறு கைகள் முளைத்தது. இராவணன், மாதலியை நோக்கி ஒரு கணையை ஏவினான். அக்கணையால் மாதலி உடலில் இருந்து இரத்தம் கசிந்தது. இராமர், இராவணனின் பஞ்சமுகப் படையை ஆயிரமாயிரம் கணைகளை ஏவி அழித்தார். இராமரின் இப்போரைப் பார்த்து இராவணன் நிலைதடுமாறினான். இதனால் அவன் வலிமையும் குறைந்தது. பிறகு இராமர், இராவணனை நோக்கி அம்புகளை தொடுத்தார்.

�� அக்கணைகள் இராவணனின் கவசத்துக்குள் நுழைந்து, அவன் உடலில் துளைத்து வெளியே வந்தது. இராவணனின் உடலில் இரத்தம்

ஆறு போல் வலிந்தது. சிறிது நேரத்தில் இராவணன் மயங்கி விழுந்தான். இதைப் பார்த்த இராவணனின் தேர்ப்பாகன் தேரை வேறு வழியில் திருப்பிச் சென்றான். இதைப் பார்த்த மாதலி இராமரிடம், பெருமானே! இராவணனை உடனே விரைந்து கொல்லுங்கள். அவனுக்கு மயக்கம் தெளிந்துவிட்டால் அவனை கொல்வது அரிதாகும் என்றான். இராமர் மாதலியிடம், தேர்ப்பாகனே! மயக்கத்தில் இருக்கும் பகைவரை கொல்வது பாவச் செயல் ஆகும். இது ஆண் மகனுக்குரிய ஒரு வீரம் அல்ல எனக் கூறினார். இதைக்கேட்டு விண்ணுலகத்தவர் மகிழ்ந்தனர். சிறிது நேரத்தில் இராவணன் மயக்கம் தெளிந்து எழுந்தான். தேர் போர்க்களத்தை விட்டு வந்திருப்பதைப் பார்த்து, தேர்ப்பாகனிடம், அடேய், மூடனே! என் வீரத்திற்கு இழுக்கு தேடி கொடுத்துவிட்டாய்.

�� தேவர்கள் என்னைப் பார்த்து சிரிப்பார்களே. நீ எனக்கு அவமானத்தை தேடி தந்துவிட்டாய். இனி உன்னை கொல்வது தான் சரி என்று தேர்ப்பாகனை கொல்லச் சென்றான். அப்பொழுது தேர்ப்பாகன் இராவணனை வணங்கி, அரசே! தாங்கள் வலிமை குறைந்து மயங்கி விழுந்ததால், தங்களை காக்கும் பொருட்டு நான் தேரை திருப்பி செலுத்தி வந்தேன். தங்கள் உயிரை காக்கவே நான் இவ்வாறு செய்தேன். இல்லையேல் தாங்கள் மாண்டிருப்பீர்கள் என்றான். இதைக் கேட்ட பின் இராவணனின் கோபம் தணிந்தது. பிறகு இராவணன் அங்கிருந்து போர்களத்தை அடைந்தான். இராமருக்கும், இராவணனுக்கும் இடையே கடும்போர் நடந்தது. இராவணன் இராமரை நோக்கி, சீறிக் கொண்டு இலட்சம் கணைகளை ஏவினான்.

�� இராமர் அக்கணைகளை எல்லாம் தகர்த்து எறிந்தார். பிறகு இராவணன் அங்கிருந்து மேகத்தின் நடுவே நின்று போர் புரிந்தான். இராமரின் தேரும் மேகத்தின் நடுவே சென்று இராவணனின் முன் நின்றது. இராமர் இராவணனை நோக்கி பல கணைகளை ஏவினார். அக்கணைகள் இராவணனின் உடலில் பல இடங்களில் துளைத்து வெளியே வந்தது. பிறகு இராவணன் அங்கிருந்து கீழே வந்தான். இராமரும் கீழ் இறங்கினார். இராவணன் தன்னிடம் இருந்த வாள், வேல், சூலாயுதம் முதலிய அஸ்திரங்களை இராமர் மீது ஏவினான். இராமர், இராவணனிடமிருந்த அஸ்திரங்கள் அனைத்தையும் துகளாக்கினார்.

இராவணனின் மரணம்...! விபீஷணனின் துயரம்...!

�� இராமர், கடைசியில் மந்திரங்கள் கூறி பிரம்மாஸ்திரத்தை எடுத்தார். அக்கணையை இராவணன் நோக்கி ஏவினார். இந்த தெய்வீக கணை இராவணனின் மார்பை துளைத்து, அவனின் உயிரை பறித்து, புனித கங்கையில் நீராடி, இராமரின் அம்புறாத் துணியை வந்தடைந்தது. இராவணன் அந்த இடத்திலே மாண்டு கீழே விழுந்தான். இராவணன் பெற்ற வரம், அவன் செய்த தவம், பிரம்மனிடம் இருந்து பெற்ற சாகாவரம், சிவபிரானிடம் இருந்து பெற்ற மூன்றரைக் கோடி ஆயுள் முதலியவை அக்கணையால் அழிந்தது. இராவணனின் கோபம், அவன் மனதில் இருந்த வஞ்சனை செய்யும் எண்ணங்களும், அவனின் வலிமையும் ஒழிந்து அவனின் முகம் பொலிவுடன் காணப்பட்டது. பிறகு இராமர் தேரை விட்டு கீழிறங்கி, மாதலியை வாழ்த்தி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

�� வானரங்கள், விபீஷணன் முதலியவர்கள் அங்கு வந்து இராவணனின் உடலைக் கண்டனர். விபீஷணன், இராவணன் மாண்டு கிடப்பதை கண்டு வருந்தினான். பிறகு இராமர், இராவணனை கருணைக் கண்களால் உற்று நோக்கினார். இராவணனின் முதுகில் இருக்கும் புண்களை பார்த்தார். இந்த புண்கள் போரில் ஏற்பட்ட காயங்களாக இருக்குமோ என நினைத்து ஐயமுற்றார். உடனே இராமர் விபீஷணனை அழைத்து, தம்பி விபீஷணா! உன் தமையனின் முதுகில் புண்கள் இருக்கின்றனவே? இப்புண்களுடன் நான் இராவணனைக் கொன்றது வெற்றியாகாது. இதனால் என் வீரமும் குன்றியது என வருந்திக் கூறினார். விபீஷணன், அண்ணலே! என் தமையன் இராவணன் உடலில் இருப்பது புண்கள் அல்ல, வடுக்கள் தான். ஒருமுறை என் அண்ணன் இராவணன் திக்விஜயம் செய்தபோது யானைகளோடு போர் புரிந்தான்.

�� அப்போது யானைகளின் தந்தங்கள், தமையனின் முதுகில் ஆழமாய் குத்தியது. அதை தான் தாங்கள் வடுக்களாக பார்த்து உள்ளீர்கள். இது போரினால் ஏற்பட்ட புண்கள் அல்ல என்றான். இதைக்கேட்ட பின் இராமர் சாந்தமடைந்தார். விபீஷணன், இராவணனை பார்த்து மிகவும் துயரம் அடைந்தான். விபீஷணனின் கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது. இராவணன் மேல் விழுந்து கதறி அழுதான். அண்ணா! என்னை

விட்டு பிரிந்தாயே! எமன் உன்னை பரமலோகத்திற்கு அழைத்து சென்று விட்டானே! நான் சொன்ன அறிவுரைகளை அன்றே கேட்டிருந்தால் இன்று உனக்கு இக்கதி நேர்ந்திருக்காதே! உன்னால் கவர்ந்து வரப்பட்ட சீதை இராமரிடம் ஒப்படைத்துவிடு. சிறை வைக்காதே எனக் கூறினேனே. என் சொல்லை நீ கேட்கவில்லை.

�� சீதையின் தவம், கற்பு நெறி, அவளின் நஞ்சுப் பார்வை இன்று உன்னை கொன்றுவிட்டது. பிறரின் மனைவியை விரும்புவது பெரும் பாவமாகும். உன் பெண்ணாசையால் உன் உயிரையே தொலைத்து விட்டாயே. காமம் என்ற ஆசை உன்னை மட்டுமின்றி அசுர குலத்தையே அழித்து விட்டதே. சூர்ப்பனகை, சீதையின் அழகை பற்றி உன்னிடம் கூறி உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டாளே. இனி உன்னை நான் எப்பிறவியில் காணப் போகிறேன். அண்ணா! உனக்கு துணையாக எவரும் இன்றி பரிதாபமாக இறந்து கிடக்கும் உன் நிலையைக் கண்டால் என் நெஞ்சம் நெருப்பு போல் சுடுகிறதே எனக் கூறி புலம்பி அழுதான். ஜாம்பவான் விபீஷணனின் இந்த நிலைமையைக் கண்டு அவனின் கண்ணீரை துடைத்து ஆறுதல் கூறினான்.

மண்டோதரியின் துயரம்...!

�� ஜாம்பவான் விபீஷணனின் இந்த நிலைமையைக் கண்டு அவனின் கண்ணீரை துடைத்து ஆறுதல் கூறினான். மதிநலம் படைத்தவரே! தாங்கள் இவ்வாறு புலம்பி அழுவது அறிவுடைமையாகாது. இவ்வுலகில் விதியை வென்றவர் யார்? விதி இராவணனை வேரோடு அழித்துவிட்டது. நீ அழுவதால் ஒன்றும் நடைபெற போவதில்லை. ஆதலால் நீ உன் தமையனுக்கு செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை செய்வாயாக எனக் கூறினான். இராவணன் இறந்தச் செய்தி மண்டோதரிக்கு தெரிவிக்கப்பட்டது. இதைக்கேட்டு மண்டோதரி கதறிக் கொண்டு ஒடி வந்தாள். வருகின்ற அவசரத்தில் அவள் கூந்தல் அவிழ்ந்து விழுந்தது. கரிய நீண்ட கூந்தல் அவள் பாதத்தை தொடும் அளவிற்கு கீழே விழுந்தது. மண்டோதரியுடன் ஏனைய மனைவிமார்களும், அரக்கியர்களும் உடன் வந்தனர்.

�� போர்க்களத்தில் இறந்து கிடக்கும் இராவணன் மேல் விழுந்து புலம்பி அழுதாள். என் ஆருயிரே! பஞ்சணையில் காண வேண்டிய உங்களை இன்று உதிரங்கள்(இரத்தம்) நிறைந்திருக்கும் போர்க்களத்தில் காண நேரிட்டதே. உங்களின் வலிமை மிகுந்த தவம் மற்றும் நீங்கள் பெற்ற வரம் ஒரு சாதாரண மனிதனின் அம்பால் வீழ்த்த முடியுமா? உங்களை இராமனின் பாணம் வீழ்த்தி விட்டதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் கணவனை யாராலும் வீழ்த்த முடியாது என்று எண்ணியிருந்தேனே. சீதையின் பேரழகும், சீதையின் கற்பும், அவள் மேல் கொண்ட காதலும், சூர்ப்பனகை இழந்த மூக்கும், தசரதன் போ என்று இராமனிடம் சொன்ன சொல்லும் எல்லாம் சேர்த்து இந்திரனின் தவத்திற்கு துணை போய் உங்களை கொன்று விட்டதே.

�� இராமனுடன் பகை கொள்ள வேண்டாம். சீதையை சிறைப் பிடித்து வந்தது தவறு என்றும், சீதையைக் கவர்ந்து வந்தது அறத்துக்குப் புறம்பானது எனவும் சீதையை இராமனிடம் சேர்த்துவிடுங்கள் என்று எத்தனை முறை சொல்லியிருப்பேன்! நான் சொன்ன சொல்லை நீங்கள் கேட்கவில்லை. நல்லது செய்தவனுக்கு நல்லதே நடக்கும். தீமை செய்பவனுக்கு தீமையே நடக்கும். உன்னுடன் பிறந்த சகோதரன் நன்மை செய்தான். அதனால் இன்று அவன் நலமுடன் இருக்கிறான். தாங்களோ தீமை செய்தீர்கள். அதனால் தான் இன்று இறந்து கிடக்கிறீர்கள். சீதையின்

https://telegram.me/aedahamlibrary

அழகில் வீழ்ந்த நீங்கள், உயிர் பெற்று வருவது என்பது இயலாத ஒன்று. பதிவிரதையின் கண்ணீரானது, பூமியில் விழுந்தால், ஏதேனும் ஒன்று நடந்தே தீரும். அதுதான் தங்களை இன்று பழிவாங்கியது! பெண்ணாசை என்பது அழிவில் தான் முடியும்.

�� தங்களை இழந்த பின் இனி நான் உயிருடன் இருந்து என்ன செய்யப்போகிறேன் என கூறிக்கொண்டு இராவணனின் மார்பில் விழுந்தாள். அப்பொழுது மண்டோதரி பெருமூச்சுவிட்டாள். அத்துடன் மண்டோதரியின் உயிரும் பிரிந்தது. இதனைப் பார்த்து அனைவரும் மண்டோதரி கற்புக்கரசி எனப் போற்றி வாழ்த்தினர். பிறகு விபீஷணன், இராவணனையும், மண்டோதரியையும் ஒன்றாக வைத்து பன்னீரால் குளிர்வித்து, மலர் மாலை சூட்டி, சந்தனம் முதலிய வாசனை கட்டைகளை அடுக்கி அவர்களுக்கு தீமூட்டி இறுதி சடங்குகளை செய்தான். விபீஷணன், இராவணனின் ஈமச்சடங்குகளை செய்து முடித்த பின் இராமரிடம் சென்றான்.

விபீஷணனின் பட்டாபிஷேகம்...!

�� விபீஷணன், இராவணனின் ஈமச்சடங்குகளை செய்து முடித்த பின் இராமரிடம் சென்றான். இராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் பூண்டு வந்து இருப்பதால் அவர் இலங்கை நகருக்குள் செல்வது என்பது ஏற்றதல்ல. இராமர் இலட்சுமணனிடம், தம்பி இலட்சுமணா! நீ விபீஷணன், சுக்ரீவன், அனுமன் முதலிய வானர வீரர்களை அழைத்து இலங்கை நகருக்குச் சென்று, விபீஷணனுக்கு வேதமுறைகள்படி இலங்கையின் அரசனாக முடிசூட்டி பட்டாபிஷேகம் செய்துவிட்டு வருவாயாக என கட்டளையிட்டார். பிறகு இலட்சுமணன், விபீஷணன், சுக்ரீவன், அனுமன் முதலிய வானர வீரர்கள் புடைசூழ இலங்கை நகருக்குச் சென்று இலங்கை நகரை அலங்கரித்தனர். தேவர்கள், முனிவர்கள் விபீஷணனின் முடிசூட்டு விழாவில் கலந்துக் கொண்டனர்.

�� புண்ணிய தீர்த்தங்கள் கொண்டு வரச் செய்து, வேள்வியில் தீ மூட்ட, முனிவர்கள் மந்திரங்கள் சொல்ல, விபீஷணனை அரியணையில் அமர வைத்து, வேத கோஷங்கள் முழங்க, மங்கள ஸ்னானம் செய்வித்து, புத்தாடைகள் அணிந்து, அபிஷேகம் செய்து அனைவரின் முன்னிலையிலும் இலட்சுமணர் விபீஷணனுக்கு இலங்கையின் அரசனாக முடிசூட்டினார். இலங்கையின் அரசனாக முடிசூட்டிக் கொண்ட விபீஷணன், இலட்சுமணனை வணங்கினான். தேவர்களும், முனிவர்களும் விபீஷணனை வாழ்த்தினர். விபீஷணனின் மனைவி சரமை, விபீஷணனின் மகள் திரிசடை பட்டாபிஷேகத்தை பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். அரம்பியர்கள் நடனம் ஆட, அரண்மனையில் இசைக்கச்சேரி நடைப்பெற்றது. விபீஷணன் வறியவர்களுக்கு பொன்னும், பொருளும் வழங்கினான். இலங்கை நகரமே விழாக்கோலம் பூண்டது.

�� பிறகு விபீஷணன் இராமரிடம் ஆசிப் பெற போர்க்களத்திற்கு வந்தடைந்தான். விபீஷணன் இராமரின் திருவடியில் விழுந்து ஆசி பெற்றான். இராமர் விபீஷணனை அன்போடு தழுவிக் கொண்டார். பிறகு இராமர், விபீஷணா! அரசப் பதவியை ஏற்றுக் கொண்ட நீ என்றும் ஏழை மக்களுக்கு உறுதுணையாக தொண்டு செய்ய வேண்டும். உனது ஆட்சியில் அறத்தை நிலை நாட்ட வேண்டும். நான் தான் அரசன் என்று சிறிதும்கூட மனதளவில் ஆணவம் கொள்ளக் கூடாது. மக்கள் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உனது நாட்டை கண்ணும் கருத்துமாக

அறநெறியுடன், நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிய வேண்டும் என வாழ்த்தினார். பிறகு இராமர் அனுமனிடம், அன்பனே! நீ சீதையிடம் சென்று இராவணனின் வதத்தை கூறுவாயாக எனக் கூறினார்.

�� அனுமன் இராமரிடம் இருந்து விடைபெற்று, மிகவும் மகிழ்ச்சியுடன் அசோகவனத்திற்கு சென்று சீதையின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். பிறகு அனுமன், அன்னையே! நான் தங்களுக்கு ஒரு சுபச் செய்தியை கொண்டு வந்துள்ளேன். ஸ்ரீ இராம மூர்த்தி அவர்களின் இராம பாணத்தால் இராவணன் மாண்டான், அது மட்டுமில்லாமல் இப்பொழுது விபீஷணனுக்கு முடிசூட்டு விழா நடைப்பெற்று முடிந்தது எனக் கூறினான். இச்செய்தியைக் கேட்டு சீதை அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். மகிழ்ச்சியில் சீதை என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றாள். அனுமன் சீதையைப் பார்த்து, அன்னையே! தாங்கள் இந்த சுபச்செய்தியை கேட்டு ஒன்றும் பேசாமல் இருப்பது ஏன்? எனக் கேட்டான். சீதை, மாருதியே! அளவுக்கடந்த மகிழ்ச்சியினால் என்ன சொல்வதென்று தெரியவில்லை என்றாள்.

அனுமன் கேட்கும் வரம்...!

��சீதை அனுமனிடம், மாருதியே! நீ எனக்கு செய்த உதவிக்கு, நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் என்று தெரியவில்லை. அன்று என் உயிரை மாய்த்து கொள்ளும் தருவாயில் இருந்த எனக்கு, நீ கொண்டு வந்த கணையாழி என் உயிரை காப்பாற்றியது. இன்று நீ சொன்ன சுபச் செய்தி என் மனதை குளிர வைத்தது. இந்த மூன்று உலகத்தையும் உனக்கு காணிக்கையாக கொடுத்தாலும் நீ செய்த உதவிக்கு ஈடாகாது. ஏனென்றால் உலகங்கள் அழியக்கூடியது. உன்னை என் தலையில் வைத்து தொழுவதே சிறந்தது. மாருதியே! உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள். அவ்வரத்தை நான் உனக்கு தருவேன் என சீதை கூறினாள். அனுமன் சீதையிடம், அன்னையே! நான் திருமணம் ஆகாத பிரம்மச்சாரி. எனக்கு வேண்டுவது உலகத்தில் இல்லை. தாங்கள் எனக்கு வரம் தருகிறேன் என்று கூறியுள்ளீர்கள்.

அன்னையே! தங்களை பத்து மாதங்கள் கத்தியும், கோடாரியும் காட்டி தங்களைப் பயமுறுத்திய இந்த அரக்கிகளை நான் கொல்வேன். தாங்கள் இந்த வரத்தை எனக்கு அருள வேண்டும் எனக் கேட்டான். இதைக்கேட்ட அரக்கியர்கள் அனைவரும் பயத்தில் சீதையை சரணடைந்தனர். சீதை, அரக்கியர்களுக்கு அபயம் அளித்தார். பிறகு சீதை, அனுமனிடம், மாருதியே! இந்த அரக்கியர்கள் எனக்கு தீங்கு செய்யவில்லை. நான் செய்த தவறினால் இந்த துன்பம் ஏற்பட்டது. எனக்கு இத்தனை நாட்கள் ஏற்பட்ட துன்பத்திற்கு இந்த பெண்கள் காரணம் அல்ல. இராவணனின் ஏவலினால் தான் இவர்கள் எனக்கு துன்பத்தை தந்தார்கள். நான் எம்பெருமானுக்கு துணையாக இக்கானகத்திற்கு வந்தேன். கானகம் வந்த நான், ஒரு மானின் மேல் ஆசைப்பட்டது என் தவறு

. நான் அந்த மானை வேண்டும் என்று கேட்காமல் இருந்திருந்தால் இத்தனை துன்பங்கள் நேர்ந்திருக்காது. பதினான்கு ஆண்டுகள் உண்ணாமலும், உறங்காமலும் எம்பெருமானை காவல் புரிந்த இலட்சுமணனின் மனதை புண்படும்படி பேசினேன். நான் அவ்வாறு பேசாமல் இருந்திருந்தால் இத்துன்பம் நேராமல் இருந்திருக்கும். எங்களை பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுப்ப காரணமாய் இருந்த கூனியை விடவா இவர்கள் கொடியவர்கள். நயவஞ்சகம் செய்து வனவாசம் அனுப்பிய கூனியை, நான் நினைத்தால் அக்கூனி அன்றே

மடிந்திருப்பாள். கூனி செய்த குற்றத்தை பொறுத்த என்னால் இவர்கள் செய்த துன்பங்களை பொறுக்க வேண்டும் அல்லவா? அதனால் நீ இவர்களின் மேல் கருணை காட்டி விட்டுவிடுவாயாக எனக் கூறினார்.

இதைக்கேட்ட பின் அனுமன், அன்னையே நான் தங்களின் வார்த்தைகளுக்கு உட்பட்டு இந்த அரக்க பெண்கள் மேல் கருணை காட்டுகிறேன் எனக் கூறிவிட்டு சீதையிடம் ஆசிப்பெற்று அங்கிருந்து விடைப்பெற்று சென்றான். பிறகு அனுமன் இராமரிடம் வந்து, பெருமானே! தாங்கள் இராவணனை வதம் செய்த செய்தியை நான் அன்னை சீதையிடம் கூறினேன். அவர் அதைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார் எனக் கூறினான். அதன் பின் இராமர் விபீ‘ணனை பார்த்து, தம்பி விபீ‘ணா! பணிப்பெண்களிடம் சீதைக்கு தேவையான ஆடை ஆபரணங்களை கொடுத்து சீதையை அலங்கரித்து அழைத்து வரச் சொல் எனக் கட்டளையிட்டார். விபீ‘ணன் இராமரிடம் இருந்து விடைப்பெற்று அசோகவனம் நோக்கிச் சென்றான்.

சீதையை அழைத்து வரச் செல்லும் விபீஷணன்!

�� விபீஷணன் இராமரிடம் இருந்து விடைப்பெற்று அசோகவனம் நோக்கிச் சென்றான். விபீஷணன் அசோக வனத்தில் இருக்கும் சீதையை வணங்கி, சீதையின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். அப்பொழுது அருகில் இருந்த திரிசடை சீதையிடம், அம்மா சீதை! இவர் தான் என் தந்தை என அறிமுகம் செய்து வைத்தாள். விபீஷணன் சீதையிடம்! தாயே! எம்பெருமான் இராம சந்திர மூர்த்தி தங்களை காண விரும்புகின்றார். தேவர்களும் தங்களை தொழுவதற்காக எதிர்ப்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். அதனால் ஸ்ரீராமர் தங்களுக்கு ஆடை ஆபரணங்கள் கொடுத்து அலங்கரித்து அழைத்து வரச் சொல்லி கட்டளையிட்டுள்ளார் எனக் கூறினான். இதைக்கேட்ட சீதை விபீஷணனிடம், அன்பனே! நான் ஆடை ஆபரணங்கள் இன்றி தவ கோலத்திலேயே வர விரும்புகிறேன்.


நான் இத்தனை நாட்கள் உண்ணாமலும், உறங்காமலும், தவ செய்த கோலத்தை அவர்கள் காண வேண்டாமா? அதனால் நான் தவக் கோலத்திலேயே வருகிறேன் எனக் கூறினாள். விபீஷணன், அன்னையே! இது எம்பெருமான் ஸ்ரீராமனின் கட்டளை. இதை எவ்வாறு மீறுவது? எனக் கேட்டான். பிறகு சீதை, இது எம்பெருமானின் கட்டளை என்பதால் சரி என சம்மதித்தாள். அதன் பின் விபீஷணன் சீதையை அலங்கரித்து வரச் சொல்லி தேவ மாதர்களுக்கு கட்டளையிட்டு அங்கிருந்துச் சென்றான். பிறகு இரம்பை, ஊர்வசி, மேனகை முதலிய தேவ மாதர்கள் சீதையை நறுமண நீரால் குளிர்வித்து, நறுமண தைலங்கள் பூசி, ஆடை ஆபரணங்களால் அழகாய் அலங்கரித்தனர். அதன் பின் சீதையை பல்லக்கில் ஏற்றி இராமர் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

சீதையை பார்க்க தேவர்களும் முனிவர்களும் அங்கு வந்த கூடினர். வானர வீரர்கள் சீதையைப் பார்த்து பணிந்து நின்றனர். சீதை இராமரை பார்த்து தரிசித்தாள். சீதை பல்லக்கில் இருந்து இறங்கி இராமரை வணங்கி, கண்களில் கண்ணீர் தழும்ப அவரின் திருவடியில் விழுந்து வணங்கினாள். இராமரும் சீதையை கருணைக்கொண்டு அன்பாக நோக்கினார். ஆனால் சீதையை நோக்கிய மறு நிமிடத்தில் இராமரின் முகத்தில் கருணையும் தென்படவில்லை, அன்பும் தென்படவில்லை. இராமரைப் பொருத்தவரை அவருக்கு சீதை மேல் பரிபுசிரணமான நம்பிக்கை உண்டு என்றாலும்,

மாற்றானின் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்றதொரு சந்தேகம் அவருக்கு வரவே, அவர் சீதையை மறுபடியும் மனைவியாக ஏற்றுக்கொள்வதில் ஒரு மனத்தடை ஏற்பட்டது. அதனால் இராமரின் கண்களில் கோபம் சீற்றமாய் நிறைந்திருந்தது.

இராமர் சீதையைப் பார்த்து, ஜானகி! நீ நலமாக இருக்கின்றாயா? நான் உன்னை அரக்கர்களின் சிறையில் இருந்து மீட்கவே இவ்வளவு பெரிய யுத்தத்தை செய்தேன். உன்னை மீட்பதற்காக நான் கடலில் அணை கட்டினேன். ரகு குலத்தில் பிறந்த நான், என் மனைவியை அரக்கர்கள் கவர்ந்து சென்றார்கள் என்னும் பழியை தீர்க்கும் பொருட்டே இத்தகைய மிகப்பெரிய யுத்தத்தை வெற்றிகரமாக முடித்தேன். ஜானகி! நீ இராவணனின் சிறையில் நெடுநாள் இருந்திருக்கிறாய். உனக்கு அங்கு நல்ல உணவுகள் கிடைத்திருக்குமே? அரக்கிகளுடன் சேர்த்து மாமிசம் உண்டாயா? மது அருந்தினாயா? நீதி தவறிய அரக்கனின் நகரில் அவனுக்கு அடங்கி நீ உயிர் வாழ்ந்து இருக்கிறாய்.

சீதை தீக்குளித்தல்...!



��இராமர், கற்புடைய பெண்கள் கணவனை பிரிந்த மறுகணமே உயிரை மாய்த்துக் கொள்வார்கள். ஆனால் நீயோ பெண் குலத்திற்கே இழிவை உண்டாக்கியுள்ளாய். நீ புழுவைப் போல் மண்ணிலிருந்து தோன்றியவள் தானே? அதனால் தான் உன்னிடத்தில் நற்குணம் இல்லை. நீ என் கண்முன் நிற்காதே. இங்கிருந்து சென்றுவிடு என மிக கோபமாக கூறினார். இராமர் பேசிய கடுஞ்சொற்கள், எம்பெருமான் தனக்கு தரும் தண்டனை என்பதை சீதை உணர்ந்தாள். இராமரின் கடுஞ்சொற்களை கேட்டு அனுமன் கதறி அழுதான். வானர வீரர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் உருக்குலைத்து போய் கதறி அழுதார்கள். தேவர்களும், முனிவர்களும்

இராமரின் கடுஞ்சொற்களைக் கேட்டு துடிதுடித்தனர்.

சீதையின் கண்களில் கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. சீதை இராமரை பார்த்து, எம்பெருமானே அனுமன் அசோகவனம் வந்து, என்னைப் பிரிந்த தங்களின் நிலையையும், பகைவனை வென்று விரைவில் என்னை மீட்பீர்கள் என கூறிச் சென்றதனால், நான் இதுநாள் வரையிலும் தங்களுக்காக காத்துக் கொண்டிருந்தேன். தங்களின் பேரன்பினை எனக்கு எடுத்துரைத்த அனுமன், தங்களை பிரிந்து நான் வருந்தும் என் நிலைமையையும் தங்களிடம் உள்ளவாறு சொல்லியிருக்க வேண்டுமே? நான் தங்கள் மேல் கொண்ட அன்பினால், ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தேன். தங்களை காண இத்தனை நாள் நற்குணங்களுடன் தவம் செய்து கொண்டிருந்தேன். நான் தங்களை தரிசித்து விட்டேன். தங்களுக்கு என் வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன் எனக் கூறினாள்.

அதன் பின் இராமரின் அருகில் இருக்கும் இலட்சுமணனைப் பார்த்து, இலட்சுமணா! எம்பெருமான் என்னை தவறாக கூறிவிட்டார். இனியும் நான் உயிர் வாழ விரும்பவில்லை. நான் தீக்குளிக்க தீ வார்த்திக் கொடு எனக் கேட்டாள். அன்று உன்னை நான் வாயினால் சுட்டேன். இன்று தீயினால் சுடப் போகிறேன் என்றாள். இலட்சுமணன் கண்களில் கண்ணீர் நிரம்ப இராமரை பார்த்தார். இராமர் கண்களால் கட்டளையிட்டார். அதன் பின் இலட்சுமணன் பெருந்தீயை வளர்த்தினார். சீதை, அக்னி குண்டத்தையும், இராமரையும் வலம் வந்தாள். பின் இராமரை பார்த்து, எம்பெருமானே! எனக்கு வேண்டுவது தங்களின் திருவருள் மட்டுமே. தாங்கள் என் கற்பின் நிலையறியாமல் பேசிவிட்டீர்கள். இனி நான் உயிர் வாழ விரும்பவில்லை எனக் கூறி விட்டு அக்னி குண்டம் அருகில் சென்றாள். இதைப் பார்த்த அத்தனை உயிர்களும் கதறி அழுதனர்.

இதை வானத்தில் இருந்து பார்த்த இந்திராணி! இத்தகைய கொடுமையை பார்க்க நான் என்ன பாவம் செய்தேன் என்று தெரியவில்லையே! எனக் கதறி அழுதாள். சீதை அக்னி குண்டம் அருகில் சென்று, அக்னி தேவா! உலகில் சிவபெருமானும், பிரம்மாவும், திருமாலும் பெண்களின் நிலைமையை அறியமாட்டார்கள். நீ தான் எனக்கு சாட்சி. உலகில் உள்ள அனைவரும் திருமணத்தின் போது அக்னியை சாட்சியாக வலம் வந்து திருமணம் செய்து கொள்கிறார்கள். நான் உடலாலும், மனதாலும் ஏதேனும் குற்றம் செய்திருந்தாள் என்னை உன் தீயினால்

சுட்டெரிப்பாயாக எனக் கூறி இராமர வணங்கி, கைகூப்பிய கரங்களுடன் தீயில் பாய்ந்தாள்.

அக்னிதேவன் இராமர் முன் தோன்றுதல்...!

��சீதையின் கற்பு கனலால் தீ சுடசுடவென சுடப்பட்டது. சீதையின் கற்பு என்னும் வெப்பம் தாங்கமுடியாமல் அக்னிதேவன் சீதையுடன் வெளியே வந்தான். அக்னிதேவன் இராமரை பார்த்து, பெருமானே! நான் என்ன தவறு செய்தேன். என்னை ஏன் கற்பு என்னும் நெருப்பால் சுட வைத்தீர்கள். சீதையின் கற்பு தீ என் வலிமையை அழித்துவிட்டது என்றான். சீதை, தீயினில் விழுவதற்கு முன் எவ்வாறு இருந்தாலோ அப்படியே இருந்தாள். இராமரின் கடுஞ்சொற்களை கேட்டு சீதையின் முகத்தில் ஏற்பட்ட வியர்வைகளும் அப்படியே இருந்தன. சீதை சூடியிருந்த பூக்களும் வாடாமல் அப்படியே இருந்தது. இராமர் அக்னிதேவனை பார்த்து, நீ யார்? யார் சொல்லி நீ சீதையை சுடாதபடி காப்பாற்றினாய் எனக் கேட்டார். அக்னிதேவன், இராமா! நான் தான் அக்னிதேவன். சீதையின் கற்பு தீ என்னை சுட்டெரித்துவிட்டது. அதனால் தான் நான் தங்களை சரணடைந்துள்ளேன்.

இவள் கோபம் கொண்டாள், இந்த உலகமே அழிந்துவிடும். சீதை கற்பு நெறி தவறாதவள். ஆதலால் தாங்கள் சீதையை ஏற்று கொள்ள வேண்டும் என்றார். அப்பொழுது சிவபெருமான், தோன்றி இராமரிடம், எம்பெருமானே! சீதை கற்பின் தெய்வம். இவள் கோபங்கொண்டால் இந்த உலகமே அழிந்துவிடும். அதனால் நீ நெருப்புடன் விளையாடாதே. சீதையை ஏற்றுக்கொள் எனக் கூறினர். இராமர் அதன்பின் சீதையை ஏற்றுக் கொண்டார். பிறகு இராமர் சீதையை கருணையுடன், அன்பாக பார்த்தார். இதைப்பார்த்த தேவர்களும், வானர வீரர்களும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். அதன்பின் சிவபெருமான் வைகுந்தப் பதவியை அடைந்த தசரதனிடம் சென்று, இராமனை பிரிந்து தான் அடைந்த துன்பத்தை இராமனை சந்தித்துப் போக்கி கொள்ளுமாறு கூறினார்.

சிவபெருமானுடைய கட்டளைப்படி, தேவர்கள் புடை சூழ விண்ணுலகத்தில் வாழ்ந்த தசரதரை வானுலக விமானத்தில் ஏற்றி அழைத்து வந்தனர். தந்தையை கண்ட இராமர் மகிழ்ச்சி பொங்க அவரின் திருவடியில் விழுந்து வணங்கினார். இராமரை கண்ட தசரதர், இன்பக் கடலில் திழைத்து, ஆனந்த கண்ணீர் அவரின் கண்களில் ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது. பிறகு இராமரை அன்போடு தழுவிக் கொண்டார். அதன் பின் சீதை, தசரதரின் திருவடியில் விழுந்து ஆசி

பெற்றார். தசரதர் இராமரிடம், மகனே! நான் உனக்கு தந்தையாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். முன்பு மண்ணுலகத்தில் இருந்த போது நான் வணங்கிய தேவர்கள், இப்பொழுது என்னை வணங்குகிறார்கள். எனக்கு பிரம்மனுக்கு சமமான ஒப்பற்ற பெருமை உண்டாகியிருக்கின்றது என்றார்.

இராமர் தந்தையிடம் கேட்கும் வரம்!

�� தசரதர் இராமரை, மகனே! உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேள். முன்பு கைகேயிக்கு கொடுத்த வரத்தினால் தான் இத்தனை துன்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இராமர், தந்தையே! தங்களை தரிசித்ததே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கின்றது. அதனால் எனக்கு எந்த வரமும் வேண்டாம் என்றார். தசரதர், இராமா! நான் உனக்கு வரம் கொடுக்க விரும்புகின்றேன். அதனால் நீ ஏதேனும் ஒரு வரத்தைக் கேள் என்றார். இராமர், தந்தை தசரதர் கொடுக்கும் வரம் தனக்கு பயன்படாமல் பிறருக்கு பயன்படும் வகையில் இருக்க வேண்டும். தந்தை கொடுக்கும் வரம் அவர் ஒருவரே கொடுப்பதாக இருக்க வேண்டும் என நினைத்தார். அப்பொழுது இராமருக்கு நினைவு வந்தது அன்னை கைகேயும், தம்பி பரதனும் தான். தான் கானகத்திற்கு செல்லுமாறு அன்னை சொல்லியதும், தந்தை, கைகேயி இனி எனக்கு மனைவி இல்லை, பரதன் எனக்கு மகனும் இல்லை என்று சொன்னது இராமரின் நினைவுக்கு வந்தது.

இராமர் தசரதரிடம், தந்தையே! தாங்கள் அன்னை கைகேயியையும், தம்பி பரதனையும் மன்னித்தருள வேண்டும் என்றார். மகனே! கைகேயி என்னிடம் கேட்ட வரம் கூர்மையான கத்தி போல் என் மார்பில் குத்தியது. அந்த வலி என் மார்பை விட்டு அகலாமல் இருந்தது. இப்பொழுது நான் உன்னை தழுவிக் கொண்டதால் அவ்வலி மறைந்துவிட்டது. இராமா! நான் பரதனை மகனாக ஏற்றுக் கொள்கிறேன். உன்னை கானகத்திற்கு அனுப்ப காரணமாய் இருந்த கைகேயியை நான் மன்னிக்க மாட்டேன் என்றார். இதைக்கேட்ட இராமர், தந்தையே! நான் அயோத்தியில் பிறந்தது கோசலை நாட்டை ஆள்வதற்கு அல்ல. தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் துன்பத்தை தரும் இராவணாதி அரக்கர்களை கொல்லும் பொருட்டே நான் இராமனாக அவதாரம் எடுத்தேன். இப்படி இருக்கையில் நான் அயோத்தியின் அரசனாக முடிசூட வேண்டும் என்று நினைத்தது என் தவறு.

https://telegram.me/aedahamlibrary

இதில் அன்னையின் தவறு என்ன உள்ளது. அதனால் தாங்கள் அன்னையை மன்னித்தருள வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதைக்கேட்ட தசரதர், இராவணாதி அரக்கர்களின் அழிவுக்கு காரணமாக இருந்தது கைகேயியின் செயல் தான் என்பதை புரிந்து கைகேயியை மன்னிதருளினார். பிறகு தசரதர், இராமருக்கும், இலட்சுமணனுக்கும் விடைக் கொடுத்து வானுலகம் சென்றார். அதன் பின் தேவர்கள் இராமரை பார்த்து, பெருமானே! தங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர். இராமர் தேவர்களிடம், போர்களத்தில் மாண்ட வானரங்கள் அனைவரும் புத்துயிர் பெற்று எழ வேண்டும். வானரங்கள் வாழும் கானகத்தில், நீர் வளமும், நில வளமும், பழங்கள், காய்கனிகள் வற்றாது இருக்க அருள் செய்ய வேண்டும் என்று கேட்டார். தேவர்களும் இராமர் கேட்டபடியே வரத்தை அருளினர்.

போர்களத்தில் மாண்ட வானரங்கள் அனைவரும் புத்துயிர் பெற்று எழுந்தனர். இதைப் பார்த்த மற்ற வானரங்கள் மகிழ்ச்சியில் ஆடிபாடினர். அப்பொழுது சிவபெருமானும், பிரம்ம தேவனும் தோன்றி, இராமருடைய பதினான்கு ஆண்டு வனவாசம் இன்றுடன் முடிவடைகிறது. ஆதலால் தாங்கள் அயோத்திக்கு விரைந்துச் செல்லுங்கள். தங்கள் வரவை நோக்கி பரதன் எதிர்நோக்கி காத்து கொண்டிருக்கிறான். தாங்கள் குறிப்பிட்ட நேரத்தில் போகவில்லையென்றால் பரதன் அக்னியில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்வான். ஆதலால் காலம் தாழ்த்தாமல் அயோத்திக்குச் செல்லுங்கள் என்று கூறி இராமரை வாழ்த்திவிட்டு சென்றனர்.

அயோத்திக்குச் செல்லும் இராமர்...!

���� இராமர் விபீஷணனை பார்த்து, தம்பி விபீஷணா! இன்றுடன் என் பதினான்கு ஆண்டு வனவாசம் முடிந்துவிட்டது. நான் இன்று அயோத்தி செல்ல வேண்டும். என் வரவைக் காணாமல் பரதன் நிச்சயமாக இறந்து போவான். நான் உடனே அயோத்திக்குச் செல்ல ஏதேனும் வாகனம் உள்ளதா? எனக் கேட்டார். விபீஷணன், எம்பெருமானே! இராவணன் தன் தமையனான குபேரனிடம் இருந்து பறித்த புஷ்பக விமானம் உள்ளது. அதன் வேகமானது, வாயு வேகத்தை விட அதிகம் என்று சொல்லலாம். நாம் அனைவரும் புஷ்பக விமானத்தில் செல்லலாம் என்றான். இராமர், அன்பர்களே! நீங்கள் அனைவரும் உங்கள் இருப்பிடத்திற்கு சென்று, உங்களின் உறவினர்களை சந்தித்து உங்களின் நலத்தை கூறுங்கள். என் பதினான்கு ஆண்டு வனவாச காலம் முடிந்துவிட்டதால், நான் இன்றே அயோத்திக்குச் செல்ல வேண்டும் என்றார்.

�� அதன்பின் விபீஷணன் மற்றும் வானர வீரர்கள், இராமரிடம் பெருமானே! நாங்கள் எல்லோரும் தங்களின் பட்டாபிஷேகம் காண விரும்புகிறோம். அதற்கு தாங்கள் அனுமதி தர வேண்டும் என வேண்டினர். இராமர், அனைவரும் அவ்வண்ணமே அயோத்திக்கு வாருங்கள் எனக் கூறினார். பிறகு இராமர் புஷ்பக விமானத்தை கொண்டு வரும்படி கூறினார். இராமர், இலட்சுமணர் மற்றும் சீதை மூவரும் புஷ்பக விமானத்தில் ஏறினர். இராமர், விபீஷணனை பார்த்து, தம்பி விபீஷணா! உன் மக்களுக்கு நல்லாட்சி புரிந்து, நீதிநெறி விளங்க, தர்மத்தை நிலை நிறுத்துவாயாக என வாழ்த்தி ஆசி கூறினார். பிறகு சுக்ரீவனைப் பார்த்து, சுக்ரீவா! உன் உதவியால் தான், நான் இராவணனை கொன்றேன். நீயும், உன் வானரப்படைகளும் கிஷ்கிந்தைக்கு சென்று எல்லா நலன்களையும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக எனக் கூறினார்.

�� அதன் பின், அங்கதன், அனுமன், நீலன், ஜாம்பவானை அழைத்து நீங்கள் அனைவரும் எல்லாவித நன்மைகளையும் பெற்று, மகிழ்ச்சியுடன் வாழ்வீர்களாக எனக் கூறினார். இராமரை பிரிய முடியாமல் அங்குள்ள அனைவரும் கண்கலங்கி நின்றனர். பிறகு அனைவரும் இராமரின் திருவடிகளில் விழுந்து வணங்கி, நாங்கள் அனைவரும் தங்களோடு அயோத்திக்கு வந்து, தங்களின் பட்டாபிஷேகத்தை கண்டு களித்து, அதன்

பின் நாங்கள் கிஷ்கிந்தை செல்கிறோம் என வேண்டினர். இராமர் அவர்களின் அன்பை மெச்சி, நீங்கள் யாரும் கவலை கொள்ள வேண்டாம். உங்களின் மனக்கருத்தை தெரிந்துக் கொள்ளவே இவ்வாறு செய்தேன். நீங்கள் அனைவரும் அயோத்திக்கு வாருங்கள்.

�� நாம் அனைவரும் ஒன்றாக செல்லலாம் என்றார். பிறகு சுக்ரீவன், அங்கதன், அனுமன் முதலிய அனைவரும் மனித உருவம் கொண்டு புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டனர். பிறகு விபீஷணன் இராமரிடம், நாங்களும் தங்களுடன் வந்து பட்டாபிஷேகத்தை கண்டுகளிக்க விரும்புகிறோம் என்றனர். இராமர் சம்மதம் தெரிவிக்க விபீஷணனும் அவனின் மனைவி மக்களுடன் புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டனர். இராமர், சீதைக்கு இலங்கையை சுற்றி காண்பிக்க விரும்பினார். அதனால் புஷ்பக விமானத்தை இலங்கையை சுற்றி செல்லுமாறு வேண்டினார். இராமரின் வேண்டுகோளுக்கிணங்க புஷ்பக விமானமும் இலங்கையை ஒரு வலம் வந்து சென்றது.

இராமர் சீதைக்கு காண்பிக்கும் இடங்கள்...!

��இராமரின் வேண்டுகோளுக்கிணங்க புஷ்பக விமானமும் இலங்கையை ஒரு வலம் வந்து சென்றது. புஷ்பக விமான இலங்கை நகரின் கிழக்கு நோக்கி பறக்க தொடங்கியது. இராமர் சீதையிடம், சீதா! இதோ இந்த இடத்தில் வானர படைத்தலைவன் நீலன், பிரகஸ்தன் என்னும் அரக்கனை தன் கைகளால் கொன்றான் என்றார். விமானம் தெற்கு நோக்கி பறக்க தொடங்கியது. இராமர், இதோ இடத்தில் தான் அனுமன், துன்மிகன் என்னும் அரக்கனை கொன்றான் என்றார். அதன் பின் விமானம் மேற்கு நோக்கி பறக்க தொடங்கியது. இராமர், சீதா! இதோ இந்த இடத்தில் தான், இலட்சுமணன், மிக வலிமையான, மாயையில் வல்லவான இந்திரஜித்தை கொன்றான் என்றார். விமானம் வடக்கு நோக்கி பறக்க தொடங்கியது.

இராமர், சீதா! இதோ இந்த இடத்தில் தான் நான் இராவணனை பிரம்மாஸ்திரத்தைக் கொண்டு கொன்றேன் என்றார். அதன்பின் விமானம் கடல் மேல் பறந்துச் சென்றது. இராமர் சீதையிடம், சீதா! இதோ இந்த பாலத்தை வானர வீரர்கள் ஐந்து நாட்களில் கட்டிமுடித்தனர் என பாலத்தை காட்டி மகிழ்ந்தார். இங்கு வந்து தீர்த்தங்களில் மூழ்கிச் செல்பவர்கள் அனைத்துப் பாவங்களும் நீங்கி நற்கதி அடைவர். இந்த சேதுவில் நீராடுபவர்கள், எத்தகைய பாவங்களைச் செய்திருந்தாலும், இந்த கடலில் மூழ்கினால் தேவர் தொழும் பெருமை பெற்றவர் ஆவார்கள் என்றார். அதன்பின் சீதையிடம், வருணன் தன்னிடம் சரணடைந்த இடத்தையும் காட்டினார். பிறகு விமானம் கடலைக் கடந்து, வடக்கு நோக்கி பொதிகை மலை மேல் சென்றது.

இராமர் சீதையிடம், சீதா! இந்த மலை அகத்திய முனிவர் வாழும் சிறப்புமிகுந்த மலை என்றார். அதன் பின் விமானம் திருமாலிருஞ்சோலைமலை, திருவேங்கடமலை மேல் பறக்கும்போது, இந்த மலையில் முழுமுதற்கடவுளான திருமால் எழுந்தருளும் மலைகளாகும் என்றார். விமானம் ருசியமுக பருவத்தை நெருங்கும் போதும், சீதை இராமரிடம், பெருமானே! தாங்கள் முதன் முதலில் அனுமனை எங்கு பார்த்தீர்கள் எனக் கேட்டாள். இராமர், இதோ இந்த ருசியமுக பருவத்தில் தான் சந்தித்தேன் என்றார். விமானம் ருசியமுக

பருவத்தை தாண்டிகிஷ்கிந்தை நோக்கி பறந்துச் சென்றது. இராமர் சீதையிடம், சீதா! இதுகிஷ்கிந்தை. இங்கு தான் நான் வாலியை வதம் செய்தேன். சூரிய குமாரரான சுக்ரீவன் நீதிநெறி தவறாது ஆட்சி செய்யும்கிஷ்கிந்தை இது தான் என்றார்.

சீதை இராமரிடம், பெருமானே! பெண்களின் துணையின்றி நான் மட்டும் அயோத்தி நகருக்கு செல்வது சிறப்பல்ல. அதனால் இந்நகரத்தில் வாழும் வானரப் பெண்களை நம்முடன் அழைத்துச் செல்லலாம் என்றார். இராமர் சரி என்று சம்மதிக்கவே, புஷ்பக விமானம்கிஷ்கிந்தையில் இறங்கியது. சுக்ரீவனின் கட்டளைப்படி, அனுமன் விரைந்துச் சென்று வானரப் பெண்களை அழைத்து வந்தான். வானரப் பெண்கள் அனைவரும் மனித உருவங்கொண்டு புஷ்பக விமானத்தில் ஏறினர். வானர பெண்கள் சீதைக்காக சில பரிசுப் பொருட்களை கொண்டு வந்து கொடுத்தனர். சீதை அப்பரிசு பொருட்களை ஏற்று அவர்களை வாழ்த்தினார். பிறகு அங்கிருந்து விமானம் வானில் பறந்தது. விமானம் கோதாவரி ஆற்றில் மேல் பறந்துச் சென்றது.

நந்தி கிராமத்திற்கு செல்லும் அனுமன்...!

���� இராமர், முன்பு கோதாவரி ஆற்றின் பக்கத்தில் தங்கிருந்த இடத்தை காண்பித்து, இந்த இடத்தில் நாம் இருவரும் பிரிந்து மிகுந்த துன்பத்திற்கு உள்ளானோம் எனக் கூறினார். அதன்பின் விமானம் தண்டக வனத்தின் மேல் சென்றது. இராமர் சீதையிடம், இந்த இடம் பல முனிவர்கள் யாகம் செய்து பலன் பெற்ற இடம் என்றார். அதற்குள் விமானம் சித்ரகூட மலை மேல் சென்றது. அங்கு பரத்வாஜ முனிவர், இராமர் இங்கு இறங்க வேண்டும் என மனமுருக வேண்டிக் கொண்டார். பரத்வாஜ முனிவர் வேண்டுகோளின்படி இராமர் சித்ரகூட மலையில் இறங்கினார். இராமர் பரத்வாஜ முனிவரிடம் சென்று அவரை வணங்கினார். பரத்வாஜ முனிவர் இராமரை அன்புடன் ஆசிர்வதித்தார். அதன் பின் இலட்சுமணரும், சீதையும் பரத்வாஜ முனிவரின் திருவடியில் விழுந்து ஆசியை பெற்றனர்.

�� பரத்வாஜ முனிவர் இராமரை பார்த்து, இராமா! நீ என்னை விட்டு பிரிந்த பின்பு நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நான் இங்கிருந்தே கண்டு மகிழ்ந்தேன். தாங்கள் இன்று உணவருந்தி எங்களுடன் தங்க வேண்டும் என்றார். பரதன் அங்கு உயிர் துறக்கும் நிலையில் இருக்கும்போது, இராமர், பரத்வாஜ முனிவரிடம், உணவருந்த ஒப்புக் கொண்டார். பரத்வாஜ முனிவர் இராமரிடம், இராமா! தம்பி பரதன்! தன் உடலை வருத்திக் கொண்டு, மனதில் கலக்கத்தை கொண்டு, தினமும் காய், கனிகளை உண்டு, உன் பாதுகைகளுக்கு முப்பொழுதும் மலர்களால் அர்ச்சித்து வருகிறான். இன்றுடன் உன் வனவாசம் முடிவடைவதால் உன் வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறான் என்றார். இராமர் இதைக் கேட்டு மிகவும் துயரம் அடைந்தார். இராமர், பரத்வாஜ முனிவரின் உபசரிப்பை ஏற்றார்.

�� தனக்கு உதவிய அனுமனை கௌரவிக்கும் வகையில், தனக்கு உணவு பரிமாறிய இலையின் நடுவில் ஒரு கோடு போட்டார். ஒரு பக்கத்திலிருந்த உணவை அவரை உண்ணும்படி கூறினார். பிறகு இராமர் அனுமனிடம், அனுமனே! நீ விரைந்துச் சென்று என் கணையாழியை பரதனிடம் காண்பித்து அண்ணன் வந்து கொண்டிருக்கிறார் என்று தெரிவிப்பாயாக எனக் கூறினார். பிறகு இராமர் தன் கணையாழியை அனுமனிடம் கொடுத்தார். அதன் பின் அனுமன் இராமரிடன் இருந்து

https://telegram.me/aedahamlibrary

விடைப்பெற்று வான்வெளி நோக்கிச் பறந்தான். வான்வெளியில் அனுமன் மிக வேகமாக பறந்துச் சென்றான். பரதர், அயோத்தி மாநகரையும், அரண்மனையையும் துறந்து அயோத்திக்கு அருகிலுள்ள நந்திக் கிராமத்தில் உள்ள ஒரு மண்டபத்தில் இராமரின் பாதுகைகளை வைத்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

�� இராமரின் பாதுகைகளை காலை, மதியம், இரவு என முப்பொழுதும் மலர்களை கொண்டு அர்ச்சனை செய்து, வழிபாடு செய்து கொண்டிருந்தார். இன்றும் இராமரின் பாதுகைகளுக்கு பூஜை செய்து மலர்களால் அர்ச்சித்து வழிபாடு செய்தான். அப்பொழுது பரதன், அண்ணன் இராமர் அயோத்திக்கு திரும்பி வரும் நாளை பற்றி சிந்தித்தான். உடனே ஜோதிடர்களை வரவழைத்து இராமர் திரும்பி வரும் நாள் என்று எனக் கேட்டார். ஜோதிடர்கள், இராமரின் பதினான்கு ஆண்டு வனவாச காலம் இன்றுடன் முடிவடைகிறது என்றனர். இதைக் கேட்டு பரதர் மகிழ்ச்சி அடைந்தார். பரதர் இராமரை நோக்கி எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்.

கௌசலை பரதனை காண ஓடி வருதல்...!

�� இராமர் குறித்த காலத்திற்குள் வர கால தாமதமானதால் பரதர், அண்ணன் இராமரை இன்னும் காணவில்லையே! அவருக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்துவிட்டதோ! என எண்ணினார். இல்லை பகைவர்களால் ஏதேனும் துன்பம் நேர்ந்ததோ! ஆனால் அண்ணனுடன் இலட்சுமணன் இருக்கிறாரே அதனால் அவருக்கு ஏதும் நேராது மன அமைதி அடைந்தார். இல்லை பரதனே அயோத்தியை ஆளட்டும் என நினைத்து வராமல் இருக்கிறாரோ! அண்ணன் இராமர் வரவில்லையெனில் நான் உயிர் வாழ மாட்டேன். இனி நான் உயிர் வாழ்வது சிறந்தது அல்ல. நான் உயிர் துறக்க வேண்டும் என எண்ணி பரதர் உயிர் விடத் துணிந்தார். அதன்பின் தன் ஏவலாட்களை அழைத்து சத்துருக்கனை அழைத்து வர கட்டளையிட்டார். அவ்வாறே சத்ருக்கனும் அங்கு வந்து பரதரை பணிந்து நின்றான்.

�� பிறகு பரதன் சத்ருக்கனை பார்த்து, தம்பி! பதினான்கு ஆண்டு வனவாச காலம் முடிந்த பின்பும் அண்ணன் இராமர் குறிப்பிட்டப்படி நாடு திரும்பவில்லை. அதனால் நான் உயிர் திறக்க போகிறேன். நீ எனக்கு தீ வார்த்திக் கொடு எனக் கேட்டார். சத்ருக்கன், பரதர் இவ்வாறு கூறியதைக் கேட்டு துடிதுடித்து போனான். சத்ருக்கனின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அண்ணா! தாங்கள் இல்லா இவ்வுலகில் நான் மட்டும் இருந்து என்ன பயன்? நானும் தங்களுடன் வருகிறேன். இருவரும் ஒன்றாக உயிரைத் துறப்போம். நீங்கள் இல்லாத இவ்வுலகில் இந்த இராஜ்ஜியம் மட்டும் எனக்கெதற்கு? தாங்கள் தீயில் விழுந்தால் நானும் தீயில் விழுந்து மாள்வேன் எனக் கூறி அழுதான்.

�� பரதன், தம்பி சத்ருக்கனா! நீ இவ்வாறு சொல்லுதல் கூடாது. எனக்காக நீ உயிர் வாழ வேண்டும். என் பொருட்டு தான் இராமர் வனவாசம் சென்றுள்ளார். வனவாச காலம் முடிந்த பின்பும் இராமர் இன்னும் நாடு திரும்பவில்லை. நான் அயோத்தியை ஆட்சி புரிவதால், தம்பி பரதனே ஆட்சி புரியட்டும் என இராமர் வராமல் இருக்கிறாரா? என்பது தெரியவில்லை. நான் இறந்துவிட்டால் அயோத்தியை ஆட்சி புரிய எவரும் இருக்க மாட்டார்கள். அப்பொழுது இராமர் அரசு புரிய இங்கு வந்து ஆக வேண்டும். அதனால் தான், நான் என் உயிரை விட துணிந்துள்ளேன் எனக் கூறினான். என் செயலை நீ புரிந்துக் கொள்ள

வேண்டும். அதனால் நீ எனக்கு தீ மூட்டி கொடு. இது என் கட்டளை எனக் கூறினான். பரதன் இவ்வாறு கூறியதால் சத்ருக்கனால் எதுவும் செய்ய முடியவில்லை. கண்களில் கண்ணீர் தழும்ப பரதரின் கட்டளைப்படி தீமூட்டினான்.

�� பரதன் தீயில் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் செய்தி அயோத்தி முழுவதும் பரவியது. மக்கள் அனைவரும் பரதனை காண ஓடி வந்தனர். இச்செய்தி கௌசலைக்கு தெரிவிக்கப்பட்டது. கௌசலை கண்களில் கண்ணீர் தழும்ப பரதனை காண நந்தி கிராமத்திற்கு ஓடி வந்தாள். பரதனை பற்றி கதறி அழுதாள். என் அன்பு மகனே! என்ன காரியம் செய்ய துணிந்துள்ளாய். இராமன் இன்று வரவில்லையென்றால் நாளை வருவான். இராமன் இங்கு வந்து உன்னைப் பற்றி கேட்டால் நாங்கள் என்ன சொல்வது. இச்செய்தியை அறிந்து இராமனும் மாள மாட்டானா? நீ இராமன் மேல் வைத்த அன்புக்கும், உன் பண்புகளுக்கும் ஆயிரம் இராமர்கள் வந்தாலும் உனக்கு ஈடாகா மாட்டார்கள். உன்னைப் போல் ஒருவன் இவ்வுலகில் பிறக்கப் போவதில்லை. உன் அன்பு மேரு மலையைக் காட்டிலும் மிகப் பெரியது. நீ உன் உயிரை தீயிக்கு இரையாக்கி விடாதே எனக் கூறி புலம்பி அழுதாள்.

�� பரதன், அன்னையே! அண்ணன் இராமர், பதினான்கு ஆண்டு வனவாசம் முடிந்த பின்பு திரும்பி வருவேன் என உறுதியளித்தார். அப்பொழுது நான் தாங்கள் பதினான்கு ஆண்டு முடிந்து வரவில்லையென்றால் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என சபதம் செய்துக் கொண்டேன். இன்று அண்ணன் இராமரின் பதினான்கு ஆண்டு வனவாசம் காலம் முடிந்துவிட்டது. ஆனால் அவர் இன்னும் இங்கு வரவில்லை. அதனால் நான் ஏற்றுக்கொண்ட சபதத்தின்படி உயிர் விடுவேன். தந்தை, என் தாய்க்கு செய்து கொடுத்த சத்தியத்தை காப்பாற்றும் பொருட்டு சத்தியத்திற்காக உயிரைவிட்டவர். அதுபோல் நானும் என் சபதத்திற்காக உயிரை விடுவேன் என்றான். பரதன் கூறிய சொற்களை கேட்டு கௌசலை துடிதுடித்து போனாள்.

�� கௌசலை, பரதனை எவ்வளவோ தடுக்க முயற்சி செய்தும், அத்தனையும் தோல்வியில் முடிந்தன. பரதன் தீயில் இறங்குவதில் உறுதியாக இருந்தான். பரதன், அக்னிக்கு அருகில் சென்று பூஜையை செய்தான். அக்னிக்கு தன் உயிரை காணிக்கையாக கொடுக்க முன்னே வந்தான். அப்பொழுது அனுமன் பரதன் இருக்கும் நந்தி கிராமத்தை

அடைந்தான். அனுமன், பரதன் தீயில் இறங்க முன் வந்திருப்பதை கண்டு இவர் தான் பரதர் என்பதை உகித்துக் கொண்டான். அனுமன், இராமர் வந்துவிட்டார், ஸ்ரீ இராம சந்திர மூர்த்து வந்துவிட்டார் எனக் கூறிக் கொண்டு வேகமாக வந்து இறங்கி பரதனை தடுத்தான். அனுமன் வந்து இறங்கிய வேகத்தில் அக்னித்தீயும் அணைந்தது. பரதரே! ஸ்ரீ இராமசந்திர மூர்த்தி வந்துவிட்டார். இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வந்துவிடுவார். பரத்வாஜ முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் உபசரிப்பை ஏற்றுக் கொண்டு ஆசிரமத்தில் தங்கியிருக்கின்றார்.

�� பிறகு அனுமன், பரதரே! தாங்கள் என்ன காரியம் செய்ய துணிந்துள்ளீர்கள். தாங்கள் உயிர் விட்ட செய்தியை அறிந்து இராமர் மட்டும் மகிழ்ச்சியாக உயிர் வாழ்வாராக என நினைத்தீர்களா? நிச்சயம் இல்லை. அவரும் தங்களுடன் உயிரை மாய்த்துக் கொள்வார். தாங்கள் அவசரப்பட்டு இச்செயலை செய்வது சரியானது அல்ல. ஸ்ரீராமர் பதினான்கு ஆண்டு வனவாசம் முடிந்து அயோத்திக்கு வருவதற்கு இன்னும் நாற்பது நாழிகை பொழுது மீதம் இருக்கிறது. அதற்குள் இராமர் இங்கு வந்துவிடுவார். தாங்கள் யாரும் வருந்த வேண்டாம். நான் செல்வது அனைத்தும் உண்மை. பரதரே! ஸ்ரீராமர் அவர்கள் அவரின் அடையாளமாக இந்த கணையாழியை தங்களிடம் காண்பிக்க சொன்னார் எனக் கூறிவிட்டு இராமர் கொடுத்த கணையாழியை பரதரிடம் காண்பித்தான்.

�� பரதன், அக்கணையாழியை பார்த்து இது என் அண்ணல் இராமரின் கணையாழி தான் எனக் கூறி அக்கணையாழியை வாங்கி கண்ணீரால் அபிஷேகம் செய்தார். பிறகு அக்கணையாழியை அனைவரிடமும் காண்பித்து மகிழ்ச்சி அடைந்தார். அனைவரும் இராமரின் கணையாழியை பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். பிறகு பரதன் அனுமனை பார்த்து, ஐயனே! எங்களுக்கு உயிரினும் மேலான இத்தகையை இன்பச் செய்தியை கூறிய தாங்கள் யார்? என்று எங்களிடம் கூறவில்லையே! நீங்கள் வந்த வேகத்தில் அக்னித்தீயும் அணைந்துவிட்டது. அப்படியென்றால் நீங்கள் மும்மூர்த்திகளில் ஒருவரா? எனக் கேட்டான்.

குகனை சந்திக்கும் இராமர்...!

�� �� அனுமன், பரதரிடம் பெருமானே! நான் வாயுக்குமாரன் குரங்கினத்தைச் சேர்ந்தவன். வாயு பகவானுக்கும், அஞ்சனா தேவிக்கும் பிறந்தவன். அதன்பின் அனுமன் தன் விஸ்வரூபத்தை காண்பித்தான். அனுமனின் இந்த உருவத்தைக் கண்டு சத்ருக்கனும் மற்றவர்களும் அஞ்சி நடுங்கினார்கள். பிறகு அனுமன் அவர்களை பார்த்து, இது தான் என் உண்மையான உருவம் என்றான். அங்கு இருந்தவர்கள் பயப்படுவதைப் பார்த்த அனுமன் தன் உருவத்தை சிறியதாக மாற்றிக் கொண்டான். அதன் பின் பரதன், அனுமனே! அண்ணல் வந்துவிட்டார் என்னும் சுபச்செய்தியை கூறியதால் உனக்கு பல பரிசுகளை தர விரும்புகின்றேன். பிறகு பரதன், அனுமனுக்கு விலையுயர்ந்த பொன்னும், பொருளும், இரத்தமணிகளும் பரிசாக கொடுத்து மகிழ்ந்தான்.

�� பரதன் தம்பியிடம்! தம்பி சத்ருக்கனா! அண்ணல் இராமர் வந்திவிட்ட செய்தியை முரசறைந்து அறிவிக்கச் சொல். அயோத்தியையும் அலங்கரிக்கச் சொல் எனக் கட்டளையிட்டார். சத்ருக்கன் இச்செய்தியை சுமந்திரரிடம் கூறினான். சுமந்திரர் இச்செய்தியை முரசறைந்து அறிவிக்கும்படி வள்ளுவனிடம் கூறினான். பரதனின் கட்டளைப்படி நாடு முழுவதும் இராமரின் வருகையை முரசறைந்து அறிவிக்கப்பட்டது. இதை அறிந்த மக்கள் அனைவரும் மகிழ்ச்சி கடலில் திளைத்தனர். அவரவர் வீடுகளில் மாவிலை தோரணம் கட்டி அலங்கரித்தனர். அயோத்தி நகரமே மகிழ்ச்சி கடலில் திளைத்தது. பரதன் அனுமனிடம், நாங்களும் உன்னுடன் வந்து அண்ணலை வரவேற்க விரும்புகிறோம் என்றான். பரதனின் தவிப்பை அறிந்த அனுமன் சம்மதித்தான்.

�� அயோத்தி மக்களும், முனிவர்களும், இராமரின் அன்னை கௌசலை உட்பட்ட மூன்று தாய்மார்களும், சத்ருக்கனையும் இராமரை அழைத்து வரச் செல்ல தயாராக இருந்தனர். பரதன், இராமரின் பாதுகைகளை தன் தலையில் வைத்துக் கொண்டு இராமரை எதிர்நோக்கி அழைத்து வர புடைசூழச் சென்றான். போகும் வழியில் பரதன் அனுமனிடம், நீ அண்ணல் இராமரை முதலில் எங்கு சந்தித்தாய் என்பதை விரிவாக கூறு எனக் கேட்டான். அனுமன், நான் எம்பெருமான் இராமரை

ருசியமுக பருவத்தில் சந்தித்தேன் என்றான். அதன் பின் அனுமன், வாலியின் வதத்தையும், இராவணனனின் வதத்தையும், விபீஷணனுக்கு பட்டாபிஷேகத்தை செய்ததையும் அதம்பின் அங்கிருந்து புஷ்பக விமானத்தில் வந்து பரத்வாஜ முனிவரின் வேண்டுகோளுகிணங்க அங்கு தங்கியிருந்ததை பற்றியும் விரிவாக கூறினான்.

�� அப்பொழுது சூரியன் எழ தொடங்கினான். அங்கு பரத்வாஜ முனிவர் ஆசிரமத்தில், இராமர் பரத்வாஜ முனிவரின் உபசரிப்பை ஏற்று மகிழ்ச்சியுடன் இருந்தார். பிறகு இராமர் பரத்வாஜ முனிவரிடம் இருந்து விடைப்பெற்று அங்கிருந்து புஷ்பக விமானத்தில் சென்றனர். புஷ்பக விமானம் கங்கை கரையை அடைந்தது. இராமர், கங்கை கரையில் இறங்கி குகனை சந்தித்தார். குகன், ஸ்ரீராமரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். இராமர், குகனை தன் மார்புடன் அன்பாக தழுவிக் கொண்டார். இராமர் குகனை பார்த்து, தம்பி! நீ எவ்வாறு இருக்கின்றாய். உன் சுற்றமும் அனைவரும் நலமாக இருக்கிறார்களா? எனக் கேட்டார். குகன், எம்பெருமானே! தங்களின் அருளால் நாங்கள் எந்தவிதக் குறையின்றி மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்றான். ஆனால் இலட்சுமணரை போல் எங்களால் உங்களுக்கு துணையாக இருந்து சேவை செய்ய முடியவில்லை என்ற குறை தான் உள்ளது என்றான். இதைக் கேட்டு இராமர், எனக்கு இலட்சுமணனும், நீயும் வேறுவேறு அல்ல எனக் கூறி குகனை சமாதானம் செய்தார். குகன் இதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். பிறகு குகன் சீதையிடமும், இலட்சுமணனிடமும் ஆசிப் பெற்றான். பிறகு இராமர், குகனை, சுக்ரீவன், அங்கதன் முதலானவர்களுக்கு அறிமுகம் செய்தார். இராமர், இவன் பெயர் குகன். வேடர்களின் தலைவன். நற்குணத்தில் சிறந்தவன் என்றார். பிறகு சுக்ரீவனும், விபீஷணனும் குகனை அன்போடு தழுவிக் கொண்டனர்.

��அதன் பின் இராமர் குகனிடம் இருந்து விடைப்பெற்று அயோத்தியை நோக்கி புஷ்பக விமானத்தில் பறந்தனர். இராமர், விமானத்தில் இருந்து விபீஷணன், சுக்ரீவன், அங்கதன் முதலானவர்களுக்கு கண்ணுக்கு எட்டிய அயோத்தி நகரை காண்பித்து, அதோ அயோத்தி நகரம் தெரிகிறது பாருங்கள் என்றார். அனுமன், புஷ்பக விமானத்தை பார்த்தார். உடனே பரதரிடம், பரதரே அதோ! பாருங்கள் அண்ணல் இராமர், இலட்சுமணர், சீதை வரும் புஷ்பக விமானம் என்றார். பரதர், அந்த விமானத்தை பார்த்து வணங்கினார். இராமரை பார்த்த அயோத்தி மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். அனுமன், உடனே பறந்துச் சென்று இராமர் முன் வணங்கி நின்றான். அனுமன் இராமரிடம், எம்பெருமானே! தங்களின் கட்டளைப்படி நான் நந்தி கிராமத்திற்குச் சென்று, தங்களின் வருகையை காணாமல் தீக்குளிக்க முயன்ற பரதரை

தடுத்து நிறுத்தினேன்.

��தங்களின் வருகையை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். இதை அறிந்து அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். பரதர், உடனே அயோத்தி நகரை அலங்கரிக்குமாறு கட்டளை அருளினார் என்றான். இராமர் அனுமனை பார்த்து, அனுமனே! எனக்கு துன்பம் நேரும்போது தக்க சமயத்தில் நீ எனக்கு உதவி செய்துள்ளாய். நீ என்றும் மகிழ்ச்சி உடன் வாழ்வாயாக எனக் கூறி வாழ்த்தினார். அனுமன் இராமரிடம், பரதரும், சுற்றமும் தங்களை எதிர்நோக்கி அழைத்து வர என்னுடன் வந்துள்ளார்கள் எனக் கூறி பரதர் மற்றும் சுற்றத்தாரை காண்பித்தான். இராமர், பரதரை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். உடனே இராமர் புஷ்பக விமானத்தை தரையில் இறங்கும்படி வேண்டினார். புஷ்பக விமானம் தரையில் இறங்கியது.

இராமரின் வருகை - அயோத்தியின் மகிழ்ச்சி...!

�� இராமர், புஷ்பக விமானத்தில் இருந்து இறங்க முற்பட்டார். உடனே பரதர், தான் தலையில் வைத்திருந்த பாதுகைகளை இராமரின் திருவடிக்கு கொண்டு சேர்த்தார். இராமர், பரதரின் பாசத்தை நினைத்து மகிழ்ச்சி அடைந்தார். பிறகு இராமர் பரதரை அன்போடு தழுவிக் கொண்டார். அதன் பின் குல குருவான வசிஷ்டரை பார்த்து இராமர் வணங்கினார். வசிஷ்டரின் கண்களில் கண்ணீர் பெருக இராமரை வாழ்த்தி, தழுவிக் கொண்டார். சத்ருக்கன், இராம இலட்சுமணரை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தான். இராம இலட்சுமணர், சத்ருக்கனை அன்போடு தழுவிக் கொண்டனர். சத்ருக்கன் ஆனந்த கண்ணீர் வடித்தான். பிறகு இராமரின் தாய்மார்கள் இராமர் சீதை மற்றும் இலட்சுமணனை பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். கௌசலை, இராமரைப் பார்த்து, இராமா! உன்னை நான் இத்தனை காலம் பார்க்காமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

�� இன்று உன்னை கண்டு நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன் என்றாள். இராமரும், தன் தாய் கௌசலையை அன்போடு பார்த்தார். பிறகு இராமர், சீதை மற்றும் இலட்சுமணர் கௌசலையின் திருவடிகளில் விழுந்து ஆசியைப் பெற்றுக் கொண்டனர். அப்பொழுது சுமித்திரை, இராமா! நீ வந்துவிட்டாயே! இனி எனக்கு கவலைவில்லை. உன்னை காணாமல் நாங்கள் மிகவும் துன்பம் அடைந்தோம் எனக் கூறி அன்போடு தழுவிக் கொண்டார். அதன்பின் இலட்சுமணனை பார்த்து, இலட்சுமணா!

என் அருமை மகனே! நீ எவ்வாறு இருக்கின்றாய்? எனக் கூறி அன்போடு தழுவிக் கொண்டாள். இலட்சுமணனும் தன் தாய் சுமித்திரையைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான். அதன்பின் இராமர், சீதை மற்றும் இலட்சுமணர் சுமித்தரையின் திருவடிகளில் விழுந்து ஆசியைப் பெற்றுக் கொண்டனர்.

�� அப்பொழுது இராமர் தன் தாய் கைகேயியை தேடினார். கைகேயி, ஒரமாக நின்றுக் கொண்டு இருந்தாள். இதைப் பார்த்த இராமர், கைகேயிடம் ஓடிச் சென்று திருவடிகளில் விழுந்து வணங்கினார். கைகேயின் கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது. பிறகு இராமர் கைகேயிடம், அம்மா! தாங்கள் ஏன் ஓரமாக நின்று கொண்டு உள்ளீர்கள் எனக் கேட்டார். கைகேயி, என் அன்பு மகனே! நான் உனக்கு செய்த செயல் தான் நான் ஓரமாக நிற்பதற்கு காரணம் என்றாள். இராமர், அம்மா! தாங்கள் இவ்வாறு பேசுதல் கூடாது. என்னை அன்போடு வளர்த்தவர் நீங்கள். தங்களால் தான் எனக்கு இந்த பதினான்கு வருட வனவாச காலத்தில், பல முனிவர்களின் ஆசிகளையும், பல ரிஷிகளின் சாப விமோச்சனைத்தையும், பலரது நட்புகளையும் பெற்று தந்தது.

�� அது மட்டுமல்லாமல் பல அரக்கர்களின் பாவச் செயல்களும் அழிந்து போனது. இது எல்லாம் தங்களால் தான் நடந்தது. இதை நினைத்து தாங்கள் வருந்துதல் கூடாது என்றார். இராமரின் இந்த பணிவான சொற்களை கேட்டப்பின் கைகேயி இராமரை அன்போடு ஆசிர்வதித்தாள். இதைப் பார்த்து அயோத்தி மக்கள் மகிழ்ச்சி கடலில் திளைத்தனர். அதன்பின் இலட்சுமணரும், சீதையும் கைகேயின் திருவடிகளில் விழுந்து ஆசியைப் பெற்றுக் கொண்டானர். பிறகு சுமந்திரர் முதலான அமைச்சர்கள் இராமரை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். அயோத்தி மக்களும் இராமரைக் கண்டு தரிசித்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.


�� அதன் பிறகு இராமர், சுக்ரீவன், அங்கதன் மற்றும் விபீஷணன் முதலானவர்களை தன் தாய்மார்களுக்கும், பரதன் மற்றும் சத்ருக்கனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின் இராவணாதி அரக்கர்களால் ஏற்பட்ட துன்பங்களையும் எடுத்துக் கூறினார். இதைக்கேட்டு அவர்கள் மிகவும் கவலை அடைந்தனர். இராமரால் இராவணாதி அரக்கர்கள அழிந்ததை நினைத்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அதன் பிறகு அனைவரும் அயோத்தி செல்ல முற்பட்டனர். இராமர், நாம் அனைவரும் இந்த புஷ்பக விமானத்தில் பரதன் தங்கிருந்த நந்தி கிரமத்திற்கு சென்று அதன்பின் அயோத்தி செல்லலாம் என்றார். இராமரின் சொற்படியே

அனைவரும் புஷ்பக விமானத்தில் நந்தி கிராமத்திற்கு புறப்பட்டனர்.

�� சிறிது நேரத்தில் அனைவரும் நந்தி கிராமத்தை அடைந்தனர். இராமர் சீதையை காண்பதற்காக அயோத்தி மக்கள் கூட்டமாக கூடியிருந்தனர். புஷ்பக விமானம் நந்தி கிராமத்தில் இறங்கியது. இராமருக்காக அங்கு வெண் குதிரைகளால் பூட்டப்பட்ட பொன்னால் ஆன சிறந்த தேர் காத்துக் கொண்டிருந்தது. நந்திகிராமத்தை அடைந்த இராமர் தம்பிகளுடன் சடாமுடி போக்கி, வன வாச கோலத்தை நீங்கி சரயு நதியிலே நீராடினர். பிறகு இராமரை அழகாக ஒப்பனை செய்தனர். பிறகு இராமர் அயோத்திக்குச் செல்ல, வெண் குதிரைகள் பூட்டப்பட்ட அழகிய தேரிலே ஏறினார்.

�� இலட்சுமணர், இராமருக்கு குடை பிடித்தார், சத்ருக்கன், இராமருக்கு வெண்சாமரம் வீசினார். பரதர், அத்தேருக்கு சாரதியாக இருந்து தேரை செலுத்தினார். விபீஷணன் மற்றும் சுக்ரீவன் இருவரும் தேரின் இருபுறமும் யானைகள் மீது சென்றனர். அங்கதனும், அனுமனும் அத்தேருக்கு முன்னும் பின்னும் சென்றனர். பொன்னாலான தேரில் சீதை சென்றாள். மனித உருவம் கொண்ட வானர பெண்கள் சீதையுடன் குதிரைகளின் மேலும், பல்லக்கிலும் அமர்ந்துச் சென்றனர். சிறிது தேரிலேயே அனைவரும் அயோத்தி நகரை அடைந்தனர்.

இராமரின் பட்டாபிஷேகம்...!



�� அயோத்தி மக்கள் அனைவரும் தாயை பிரிந்த குழந்தை போல் இராமரை கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அனைவரும் அரண்மனை அடைந்தனர். இராமர் பரதனிடம், தம்பி! அனுமன், சுக்ரீவன், விபீஷணனுக்கு தேவையான வசதிகளைக் செய்துக் கொடுத்து அரண்மனையை சுற்றி காண்பிப்பாயாக என்றார். பிறகு பரதன் அவர்களுக்கு அரண்மனையை சுற்றி காண்பித்தான். அப்போது சுக்ரீவன் பரதனிடம், பரதரே! முடிசூட்டும் விழாவிற்கு ஏன் தாமதமாகிறது எனக்

கேட்டான். பரதன், ஐயனே! பட்டாபிஷேகத்திற்காக நாடு முழுவதும் உள்ள புண்ணிய தீர்த்தங்களை கொண்டு வர தான் தாமதத்திற்கு காரணம் என்றான். உடனே சுக்ரீவன், அனுமனை நோக்கினான். சுக்ரீவனின் நோக்கத்தை அறிந்த அனுமன் புண்ணிய தீர்த்தங்களை கொண்டு வர புறப்பட்டான்.

�� அதன் பிறகு பரதன், வசிஷ்ட முனிவரிடம் சென்று, குருவே! அண்ணல் இராமருக்கு விரைவில் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும். ஆதலால் பட்டாபிஷேகம் செய்ய உகந்த நாளை தாங்கள் கணிந்து கூறுங்கள் என்றான். வசிஷ்ட முனிவர், நல்ல நாட்களை கணித்து பார்த்து, பரதரே! நாளையே நாம் இராமருக்கான முடிசூட்டும் விழாவை வைத்துக் கொள்வோம் என்றார். இதைக் கேட்டு பரதர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். இச்செய்தி தாய்மார்களுக்கும், அனுமன், சுக்ரீவன், விபீஷணனுக்கு தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்டு அனைவரும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இச்செய்தி நாட்டு மக்கள் அனைவருக்கும் முரசறைந்து அறிவிக்கப்பட்டது. மக்கள் இச்செய்தியைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இராமருக்கு பட்டாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவாக நடக்க தொடங்கியது.

�� ஸ்ரீராமருக்கு நாளை முடிசூட்டும் விழா என்ற செய்தியை ஓலை மூலம் மன்னர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் அனுப்பப்பட்டது. குகனுக்கும் இராமரின் முடிசூட்டும் விழாவிற்கு வரும்படி அழைப்பு விடப்பட்டிருந்தது. அயோத்தி மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளை அலங்கரித்தனர். மறுநாள் பட்டாபிஷேகத்திற்கான மண்டபத்தை பொன்னாலும், மலர்களாலும் அலங்கரித்தனர். அப்பொழுது அனுமன், பல நாடுகளிலிருந்து புண்ணிய தீர்த்தங்களை கொண்டு வந்தான்.

�� இராமரின் பட்டாபிஷேகத்தை காண பல நாட்டிலிருந்து மன்னர்களும், சிற்றரசர்களும் குவிந்த வண்ணம் இருந்தனர். குகனும் இராமரின் பட்டாபிஷேகத்தை காண வந்து சேர்ந்தான். பட்டாபிஷேகத்திற்கு தேவையான பொருட்கள் எல்லாம் அமைச்சர் சுமந்திரர் தலைமையில் கொண்டு வரப்பட்டது. வசிஷ்டர் முதலான முனிவர்கள் வேள்விகளை ஆரம்பித்தனர். இராமரும் சீதையும் அரியணையில் அமர்திருக்க, பரதன் வெண்கொற்ற குடையை பிடித்தான். இலட்சுமணனும், சத்ருக்கனும் இருப்புறங்களில் நின்றுக் கொண்டு வெண்சாமரை வீசினர்.

இராமரின் பட்டாபிஷேகம் - அயோத்தி மக்கள் மகிழ்ச்சி!

�� அயோத்தி மக்கள் அனைவரும் தங்களுக்கே முடிசூட்டு விழா என்பது போல் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். வசிஷ்டர் முதலான முனிவர்கள் வேதங்கள் ஓதினர். அனுமன் இராமரின் பக்கத்தில் பணிவாக நின்று கொண்டிருந்தான். கொண்டு வரப்பட்ட புண்ணிய தீர்த்தங்களால் இராமருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. அபிஷேக நீர் இராமரின் தலை முதல் பாதம் வரை தொட்டுச் சென்றது. அதேபோல் அபிஷேக நீர் அனுமனின் தலையில் பட்டு அனுமனை கௌரவிப்பது போல் இருந்தது. இதைப் பார்த்த அனைவரும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். கௌசலை, சுமித்திரை, கைகேயி கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

�� வசிஷ்டர் முதலான முனிவர்கள் மந்திரங்கள் பாடி வாழ்த்த, திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் குலத்து முன்னோர்கள் மகுடத்தை எடுத்துக் கொடுக்க, அதனை வாங்கி வசிஷ்ட முனிவர் ஸ்ரீராமருக்கு சூட்டினார். சுபமுகூர்த்த நன்னாளில், முனிவர்கள் வேதங்கள் ஓத இராமரின் பட்டாபிஷேகம் இனிதாக நடைப்பெற்றது. அப்பொழுது இராமர், திருமால் போல் அனைவருக்கும் காட்சி அளித்தார். தன் பட்டாபிஷேகம் முடிந்த பின் இராமர், பரதனுக்கு இளவரசர் பட்டம் சூட்டி தனது ஆட்சியை நீதிநெறி தவறாமல் செங்கோலுடன் ஆட்சி புரியுமாறு கட்டளையிட்டார். இதைப் பார்த்து முனிவர்களும், தேவர்களும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து மலர்மழை தூவினர். பட்டாபிஷேகம் முடிந்த பிறகு இராமர் ஏழை, எளியவர்களுக்கு பொன், பொருள், ஆடை, அணிகலன் கொடுத்து மகிழ்ந்தார்.

�� அதன் பின் இராமர் தனக்கு துணை நின்றவர்களுக்கு பரிசளிக்க விரும்பினார். முதலில் இராமர் சுக்ரீவனை அழைத்து, தன் தந்தை தசரதர் இந்திரனிடம் இருந்து வென்ற இரத்தின கடகத்துடன் யானைகளையும், குதிரைகளையும் பரிசாக கொடுத்து, கிரீடம் அணிவித்து தன் நன்றியை தெரிவித்தார். சுக்ரீவன் இராமரின் கைகளை பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான். அங்கதனை அழைத்து, இந்திரன் கொடுத்த மணிக்கடகத்தையும், விலை மதிப்பற்ற முத்தாரங்களையும், குதிரைகளையும், யானைகளையும் பரிசாக கொடுத்தார். பிறகு விபீஷணனை அழைத்து, தேவர்கள் கொடுத்த இரத்தின கடகத்தையும்,

பொன்னும் பொருளும் பரிசாக கொடுத்து வாழ்த்தினார். அதன் பிறகு நீலன், ஜாம்பவான் முதலிய வானர படைத் தலைவர்களுக்கு இரத்தின மாலைகளையும், யானைகளும், குதிரைகளும், பொன்னும் பொருளும் பரிசாக கொடுத்தார்.

�� பிறகு இராமர் அனுமனை அழைத்து, அனுமனே! நீ எனக்கு தக்க சமயத்தில் உதவி செய்துள்ளாய். உனக்கு ஆயிரமாயிரம் பொருட்கள் பரிசாக கொடுத்தாலும் ஈடாகாது. உன்னுடைய வலிமையும், தியாக உதவியும் மேன்மையானது. உனக்கு என்ன பரிசு கொடுப்பது என்று தெரியவில்லை. அதனால் என்னையே உனக்கு கொடுக்கிறேன் எனக் கூறி அனுமனை அன்போடு தழுவிக் கொண்டார். இதைப் பார்த்த அங்கிருந்தவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

அனுமனின் வரம்...! இராமரின் ஆட்சி...!

�� இராமர் தன் கழுத்தில் இருந்த முத்துமாலையை எடுத்து, சீதா! என் பரிசளிப்பு முடிந்துவிட்டது. இந்த முத்துமாலையை நீ விரும்பியவருக்கு பரிசாக அளிக்கலாம் எனக் கூறி சீதையின் கையில் கொடுத்தார். முத்துமாலையை கையில் வாங்கிய சீதை முதலில் பார்த்தது அனுமனை தான். அனுமனை பார்த்து, சுந்தரா! என அன்போடு அழைத்தாள். அனுமன் சீதையின் அருகில் வந்து நின்றான். சீதை, முத்துமாலையை அனுமனின் கழுத்தில் அணிவித்தாள். எனக்கு தக்க சமயத்தில் உதவி செய்த உனக்கு என் பரிசு என்றாள். இராமர், சீதா! நீ நான் நினைத்ததை தான் செய்துள்ளாய். பிறகு இராமர் அனுமனை பார்த்து, அனுமனே! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் என்றார்.

�� அனுமன், பெருமானே! நான் வேண்டுவதை தாங்கள் தவறாமல் கொடுக்க வேண்டும் எனக் கூறிவிட்டு, நான் உங்களின் அடிமையாக இருக்க வேண்டும். என்னை வேண்டுபவர்களுக்கு முதலில் உங்கள் நாமமே நினைவுக்கு வர வேண்டும் எனக் கேட்டான். பிறகு இராமர் புன்னகைத்து விட்டு, உனக்கு அவ்வரமே தருகிறேன் எனக் கூறினார். அனுமனின் இவ்வரத்தை கேட்டு மக்கள் அனைவரும் ஆர்ப்பரித்தனர். இராமரின் முடிசூட்டும் விழா அறுபது நாள் கோலாகலமாக நடந்தது. குகன், சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், அனுமன் முதலியவர்கள் இராமரின் பட்டாபிஷேகத்தை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

�� இராமர், குகன், சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், அனுமன் முதலியவர்களை அழைத்து, அரசன் இல்லாத நாடு வெறுமையாகிவிடும். ஆதலால் தாங்கள் அவரவர் இருப்பிடத்திற்கு சென்று, உங்களது நாட்டை மேன்மையுடன் நல்லாட்சி புரியுங்கள் என்று கூறி விடை கொடுத்தார். இராமரிடம், விடைபெற்ற அவர்கள் இராமரையும், சீதையும். தம்பியர்களையும், வசிஷ்ட முனிவரையும், தாய்மார்களையும் வணங்கி விடை பெற்றனர். அனைவரும் புஷ்பக விமானத்தில் ஏறி, குகன் சிருங்கிபேரத்திலும், சுக்ரீவன் கிஷ்கிந்தையிலும் இறங்கினார்கள். பிறகு விபீஷணன் இலங்கைக்குச் சென்றான். அனைவரும் இராமரின் திருநாமத்தை சொல்லிக் கொண்டு நல்லாட்சி புரிந்தனர்.

�� இராமர், தன் தம்பிகளுடன் அயோத்தியை நீதி நெறியுடன், அரசாட்சி புரிந்தார். இராமரின் அருளால் மண்ணுலகம் செழித்து

விளங்கியது.

முற்றும் ....

நன்றி வாசகர்களே

இந்த இராமாயண காவியத்தை தரவிறக்கம் செய்தமைக்கு நான் உம்மை தலைவணங்குகிறேன்.தயவு செய்து இந்த புத்தகம் தொடர்பான உங்களுடைய அனுபவத்தை **RATING ��������������** செய்வதோடு உங்களுடைய கருத்துக்களை **COMMENT** செய்யவும்

மேலும் எங்களுடைய புத்தகங்களை பெற்றுக்கொள்ள **AMAZON SEARCH** இல்

JUDE O' JUSTIN என்று **SEARCH** செய்வவும்

https://telegram.me/aedahamlibrary

நன்றி

ஜெய் ஸ்ரீராம்................